# தாய்வீடு

அனைத்துலகப் பெண்கள் நாள்

"உன் ஆளுமை இழந்த
எம் வெற்றுத் தடங்களின்
கொடுந்துயர் ஆற்ற முயன்று
தோற்றுப் போகிறது
உயிரிழந்த காற்று..."



# பன்முக ஆளுமை கருணா வின்சென்ற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

LIFEPLAN INVESTMENTS
Ahilan Balachandran, CFP, CLU, CHS, EPC
Founder and CEO
905-294-PLAN (7526)
www.lifeplaninvestments.ca
416-894-2009
How can we help you plan your future?
. Tax and Estate Planning
. Wealth Management
. Financial Planning
. Retirement Planning
. Personal Insurance
. Business Insurance
Download Free MyLifePlan APP

Your Trusted Realtor
Buying Selling Leasing Investing
RE/ON Homes Realty Inc. Brokerage
FREE HOME EVALUATION
Justin William
Broker of Record/ Owner
416.803.7344
www.reon.ca

Dr. Rajkumar Arulthasan
Forestbrook Pet Hospital
3-1105 Finch Ave, Pickering, ON L1V 1J7
Phone: 905-831-1118
Fax: 905-831-4119
info@forestbrookpethospital.com
www.forestbrookpethospital.com

BUY / SELL / INVEST
Please Contact
RAVI PARAMU
Broker
Dir : 416-262-4176
Bus : 416-298-3200
rparamu1558@gmail.com
HomeLife Today Realty Ltd., Brokerage

YOGA CLASSES SCHEDULES AS FOLLOWS
யோக அமர்தம்
FOR ADULT RICHMOND HILL — MONDAY AND WEDNESDAY 6:30 PM TO 8:00 PM
FOR CHILDREN RICHMOND HILL — MONDAY AND WEDNESDAY 5:00 PM TO 6:00 PM
FOR ADULT AJAX — THURSDAY AND FRIDAY 6:00 PM TO 7:30
FOR ADULT NORTH YORK — SATURDAY 8:00 AM TO 9:30
OSHAWA — SUNDAY AND WEDNESDAY
Please Contact at
416 729 3419
further more information.

Vaheesan Jeyaveerasingam
Sales Representative
Re/Max Ace Realty Inc. Brokerage
3-1286 Kennedy Road, Scarborough, Ontario. M1P2L5
Dir:416-276-9999
Bus:416-270-1111 | Fax:416-270-7000
www.vaheesanrealtor.com.
Email:gvaheesan@hotmail.com

SRI NADARAJASUNDARAM
Sales Representative
416-276-6666
RE/MAX ACE REALTY INC. BROKERAGE
1286 Kennedy Rd, Unit 3 Toronto, ON, M1P 2L5

LIFEPLAN INVESTMENTS
WHERE IS YOUR MONEY GOING?
WE CAN HELP
PLAN. BUILD. PROTECT
Meena Visvalingam, EPC
Chief Operating Officer (COO)
www.lifeplaninvestments.ca

விசேட சலுகை விலையில்
UNLIMITED INTERNET
TV - HOME PHONE
SMART HOME MONITORING
416.908.8845
ROGERS

உடனடி வேலை வாய்ப்பு!
Toronto தொழிற்சாலையில்
காலை, மாலை, இரவு நேர வேலை வாய்ப்புகள்
Shinol inc.
போக்குவரத்து வசதிகள் வழங்கப்படும்
தொடர்புகளுக்கு - 416-286-6375

ஆயுள் காப்புறுதி
Need insurance? Call me for a free quote
SUPER VISA | RRSP | RESP | CRITICAL ILLNESS
LIFE | NON - MEDICAL | DISABILITY | TRAVEL
100 YEAR TERM | 40 YEAR TERM
SIVA MAILVAGANAM
Insurance & Investment Broker
416.230.2991
rajahsai9@gmail.com

Uthayan Alex Sivasambu
B.Sc. (Hons), M.B.A
Broker
Ottawa: 613.276.SALE (7253)
Toronto: 416.659.SELL (7355)
COLDWELL BANKER
alex-sivasambu@coldwellbanker.ca,
www.sivasamburealty.com

"It's your Journey. I am Here to Help."
Ragu Mahesu
Cell 416-450-6833
Home Life Top Star Realty Inc. Brokerage

உலகின் முன்னணி காணி, வீடு விற்பனை நிறுவனமான RE/MAX முதல் தடவையாக யாழ் மண்ணில்
RE/MAX NORTH REALTY
077 566 0000
www.remaxnorth.lk
info@remaxnorth.lk
83 Kannathiddy Road, Jaffna
LATHAN VARATHARAJAH
Broker Owner
+94 76 493 3331
+1 416 230 7007
lathan@remaxnorth.lk

Criminal Summary Offences
Provincial offences / Traffic Tickets
Landlord & Tenant Matters
Immigration & Refugee Matters
Anjeline J Thisairajah
B.A(Hons), M.Sc., Ph.D.
Paralegal, Advocate,
Commissioner of Oaths, Interpreter & Translator
T: 647-291-1357

Commercial, Residential & Investment
வீடு, வாங்க, விற்க நம்பிக்கையுடன் நாடுங்கள்
1% Cash Back For Buyer
I WILL PAY YOUR HOME INSPECTIONS AND LAWYER FEE
1% Listing Commission
Reliable, Experienced full-time realtor, Serving Buyer and Seller all over the GTA, First time home buyer, Investment and Preconstruction.
VIRGE CHANDRASEKHARA
SALES REP
ROYAL LEPAGE ignite
795, Milner Ave #D2, Toronto, ON M1B 3C3
Office : 416.282.3333 / Fax : 416.272.3333
647-628-4958
• virge88@gmail.com • virgehomes.com

www.inayam.net
தமிழ் நிகழ்வுகளின் சங்கமம்
முற்றிலும் இலவசம்
inayam


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்வீடு

அனைத்துலகப் பெண்கள் நாள்

THAIVEEDU | MARCH | 2019 | மார்ச் | HOME & LIVING | One Dollar | www.thaiveedu.com | info@thaiveedu.com

ISSN 2369-3657


## பன்முக ஆளுமை கருணா வின்சென்ற்




NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS
10 Milner Business Court, Suite 210
Toronto, ON M1B 3C6
416.321.1100 | info@navawilson.law
416.321.1107 | www.navawilson.law

RAMAN HOME COMFORT INC
HEATING
Quality Products, Certified Technicians, Reliable Service & Reasonable Prices
SAVE $2000 WHEN PURCHASING A NEW HIGH-EFFICIENCY FURNACE
LENNOX
Raman Chelliah
Sales Person
647-893-4414
Tel: 416-332-2989
Email: info@ramanhomecomfort.com
Scarborough : C105-6055 Steeles Ave. East, Scarborough, ON M1X0A7

15 years of Success
500+ Agents
Selva Vettyvel
Broker of Record
HomeLife/Future Realty Inc., Brokerage
416.568.4301
VettyvelLaw
Rishani Vettyvel
Real Estate Law
416.261.1544

AEREN Thiyagarajah BEng
Realtor
aeren.realtor@gmail.com
Dir: 647-888 3500
DILEEP Thangavel
Realtor
dileep.realtor@gmail.com
Dir: 416-666 2300
BUS: 905 201 9977 | FAX: 905 201 9229
HomeLife/ Future Realty Inc., Brokerage
Independently Owned And Operated
205 - 7 Eastvale Drive, Markham, ON L3S 4N8

BonaFide Mortgage Solutions Inc.
Suren Nathan AMP
Mortgage Broker
License# M08004479
Brokerage Lic# 10216
Dir. 416-436-1111
Office. 416-548-7475 Fax: 416-548-7496
suren@bonafidemortgage.ca, 7 Eastvale Drive,Unit 203, Markham, ON, L3S 4N8

ALL YOUR REAL ESTATE & MORTGAGE NEEDS
வீடு என்பது தொடுவானம் அல்ல
கலங்கரை விளக்கு....
Thana Yoganathan
416.418.5749
HOMELIFE LANDMARK REALTY INC.BROKERAGE OFFICE: 905-305-1600

வீடு வியாபார நிலையம்
வாங்க விற்க
HomeLife Today Realty Ltd., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto, ON, M1P 4S6
Bus: 416-298-3200, Fax: 416-298-3440,
E-mail: kuna@kunahomes.ca
*Independently Owned and Operated.
Kuna Nagalingam
Sales Representative
Sujatha Kunasegar
Sales Representative
416.402.4545

J&L JURIANSZ & LI
VITHU RAMACHANDRAN
BARRISTER & SOLICITOR
Litigation, Real Estate, Employment
Family, Estate, Corporate
Tel: 416-505-3350 | Email: vithu@julianszli.com
Address: 1100 - 5700 Yonge St., Toronto ON

Ahilan Thanabalasingham
Sales Representative
416.617.1767
RE/MAX Royal Properties Realty Ltd., Brokerage
Office: 905.471.0002
7595 Markham Road, Unit 19 Markham, ON L3S 0B6

UTHAYAN SIVARAJAH
416.301.5555
SUGAN SIVARAJAH 416.830.9999
RAJ SIVARAJAH 416.843.3333
SIVAKUMAR SIVARAJAH 416.453.7777
PYRAMIDGROUP


• வீடு • வாழ்வியல் • சமூகம் • இலக்கியம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்ணை நிகர்த்த என் கருணா...



**- டிலிப்குமார் -**

அந்தக் கணங்களை என்னால் மொழி கொண்டு எழுத முடியாது.

அனைத்து அசைவிலும் என்னோடு இணைந் திருந்தவனைத் தேடிச்சென்ற ஒரு பொழு தில், அதைச் சற்றும் எதிர்பாராத மனநி லையில், தனியொருவனாக அவனை அவ் விடத்தில் உயிரற்ற நிலையில் கண்டபோது, நான் நொருங்கிச்சிதைந்த அந்தக் கணங் களை மொழிகொண்டு என்னால் விபரிக்க முடியாது.

அந்தளவுக்குத் தாக்கத்தை ஏற்படுத்தும் இடர்களையும் நான் சந்தித்திருக்கவில்லை. அன்று என்னை ஆற்றுப்படுத்துவதற்கு குரலெடுத்து அழுவதைத் தவிர வேறு வழி தெரியவில்லை.

அகவுணர்வுகள் இப்போதும் அவனோடு பேசிக்கொண்டிருக்கின்றன. புறவுணர்வுகளோ நடந்ததை நம்பாமல் அவனைத் தேடிக் கொண்டிருக்கின்றன.

என்னுலகில் ஒளிவிட்டெறித்த சூரியன் பட்டப்பகலிலேயே காணாமற்போனான். திசைகள் அழிந்த காரிருளில் தனித்துவிடப் பட்டவனாக என்னை உணர்கின்றேன்.

கடந்த பன்னிரெண்டு ஆண்டுகளில், என் சமூகம் சார்ந்த புறச்செயற்பாடுகள் அனைத் திலும் கருணா என்னோடு இரண்டறக் கலந் திருந்தான். ஒரு ஆசானாக, அறிவுரைஞ னாக, வழிகாட்டியாக, நண்பனாக... கரு ணாவை நான் கண்ட பரிமாணங்கள் பல.

எண்ணிலடங்காத் தேவைகளும் அவற்றுக் கான தேடல்களும் எமக்கிருந்தன. எதையும் நான் தேடியதாக எனக்கு ஞாபகம் இல்லை. எப்போதும் எதையாவது எமக்காகத் தேடு பவனாகவே கருணா இருந்தான். கடை-சிக்கணம் வரை தேடிக்கொண்டேயிருந்தான். சாவு உட்பட.

அவனுக்குள்ளிருந்த அற்புதங்களை ஏறக் குறைய முழுமையாக அறிந்திருந்தவன் நானாகத்தான் இருப்பேன். மட்டுப்படுத் தப்பட்ட எல்லைகளைக் கொண்ட தாய்வீடு சார்ந்த செயற்பாடுகள் வழியே அதியுச்ச அளவுக்கு அவன் தன்னை வெளிப்படுத் தினான். அவனுடைய ஆற்றல்களோடு ஒப்பிட்டால் தாய்வீடு சிறிய களமே. கருணா வியாபித்திருக்க வேண்டிய களங்கள் வேறாகவே இருந்திருக்கவேண்டும்.

அரங்கநிகழ்வுகளில் நான் ஒரு நடிகனா கவும் கருணா ஒரு அரங்கத் தொழில்நுட் பவாளனாகவும்தான் அக்காலங்களில் அறி முகமானோம். அவ்வேளையிலேயே கருணா கொண்டிருந்த ஆற்றல்களின் ஆழஅக லங்களை நான் உணர்ந்தவனாக இருந் தேன்.

2007ல் தாய்வீடு இதழை நான் முழுமை யாகப் பொறுப்பெடுத்து நடத்தவேண்டிய சூழல். பல்துறை ஆற்றல்களை ஒருங்கி ணைத்து மாதம்தோறும் இதழை வெளியிட வேண்டிய கடுஞ்சுமைகளாலான பணி. என்னால் இதழைக் கொண்டு நடத்தமுடியும் என்ற அசட்டுத் துணிவு என்னிடம் இருந் தாலும் உள்ளூரத் தயக்கங்கள் இல்லாமல் இல்லை.

அவ்வேளையில் கருணாவையும் அணுகி னேன். நிறையக் கனவு காண்பவன் கருணா. எப்படியெல்லாம் சாதிக்க வேண்டும் என அடிக்கடி கூறிக்கொண்டிருப்பவன். ஒரு இதழ் எப்படி அமைய வேண்டும்? எவற் றையெல்லாம் கொண்டிருக்க வேண்டும்? என்ற கனவுகளைச் சுமந்து திரிபவன்.

என் தேவைகளில் அவன் மகிழ்ச்சியானான். என் தேவைகளும் அவன் கனவுகளும் ஒரு புள்ளியில் சந்தித்தன.

எனக்கு நன்றாக நினைவிருக்கின்றது. இந்த உரையாடல்கள் நடைபெற்றுக்கொண்டி ருந்த நாட்களில் ஒருநாள் Toronto star, The Global and Mail போன்ற மைய ஊடக இதழ்களை எடுத்து வைத்துக்கொண்டு என்னை அழைத்தான். ஒரு நல்ல இதழ் தொடங்க வேண்டுமாக இருந்தால், எங்கள் ஒப்பீடு உயர்ந்த இதழ்களோடானதாக இருக்கவேண்டும். அந்த இதழ்களில் தன் மைகளே எம் இதழுக்கு அளவீடாக இருக்க வேண்டும் என்றான். அந்த இதழ்களை வைத்துக்கொண்டு ஏதோவெல்லாம் பேசி னான். பேசியதில் பாதி எனக்கு விளங்க வேயில்லை.



தாய்வீடு இதழுக்கான வடிவமைப்பை சிறு கச் சிறுகச்செதுக்கினான். ஒவ்வொரு பக் கத்தையும் கட்டுரைகளுக்கு ஏற்ப வடிவ மைத்தான். அவ்வேளை அவன் ஒரு விட யத்தைச் சொன்னான். அந்தப்பொழுதில் அது எனக்குப் பேரிடியாக இருந்தது.

மாதந்தோறும் என்னால் உங்கள் இதழை வடிமைக்க முடியாது. அது உங்களுக்குக் கட்டுப்படியாகாது. அடுத்த மாதத்திலி ருந்து நீங்கள்தான் இதழை வடிவமைக்க வேண்டும். வடிவமைப்புச் சட்டகங்களை நான் உருவாக்கித்தந்துவிடுவேன். என்றான்.

'எனக்கு விளங்கவில்லை. எனக்கும் கணி னிக்கும் எட்டாப் பொருத்தம். அதெல்லாம் சரிவராது' என்றேன்.

'சரிவரும். நாலு மாதத்துக்குள் நான் உங் களை மாற்றிக் காட்டுவேன்' என்றான்.

நடந்தது. மூன்றாவது மாதத்திலிருந்து இன்றுவரை பெரும்பாலான பக்கங்களை நானே வடிவமைத்து வருகின்றேன். சிறப் புப் பக்கங்களையும் சிக்கல்கள் ஏற்படும் போது வேண்டிய தீர்வுகளையும் தருபவ-னாகக் கருணா இருந்தான்.

கருணாவின் கைவண்ணத்தில், மற்றுமொரு பரிமாணத்தில் தாய்வீடு இதழ் வெளி-வரத் தொடங்கியபின், இவ்விதழுக்கென எழுதவல்ல தரமான கட்டுரையாளர்களைத் தேடவேண்டியிருந்தது. எழுதவல்லவர்களைத் தூண்டித்தூண்டி எழுத வைக்க வேண்டி யிருந்தது. கருணா பலரோடு தொடர்பு கொண்டு கட்டுரைகளைப் பெற்றுத்தந்தான். புதிதாக எழுதத்தொடங்கிய பலருக்கு கட் டுரை எவ்வாறு எழுதவேண்டும் என்பதை யும் கற்பித்தான். கட்டுரை எழுதுவோருக்கு வேண்டிய தகவல்களையும் குறைவில்லாது வழங்கிக் கொண்டிருப்பான்.

ஆண்டுதோறும் தாய்வீடு இதழ் நடத்தும் ஒன்றுகூடல்களை நீங்கள் அறிவீர்கள். தாய்வீடு சார்ந்த எழுத்தாளர்களை மட் டுமே அழைத்துக் கலந்துரையாடும் நிகழ்வு அது. ஆண்டுதோறும் இந்த நிகழ்ச்சியை வடிவமைத்து நடைமுறைப்படுத்தியவன் கருணாவே. எழுத்தாளர்களை மேம்படுத் துவதும் ஊடகங்களின் பணி என அடிக் கடி கூறுபவன் கருணா.

அச்சு இதழ்களில் படங்கள் குறிப்பிட்ட இடத்தை பெறவேண்டும் என்பது அச்சூடக விதி. அவற்றுக்குள் அழகாக ஓவியங்க ளைப் புகுத்தி அழகு பார்த்தவன் கருணா. ஓவியம் பற்றிய தொடர் கட்டுரைகளையும் எழுதியவன்.

இன்று தமிழுலகு அறிந்த அனைத்து ஓவியர்களும் தாய்வீடு இதழோடு இணைந் துள்ளனர். ஓவியர்களான மருது, ஆசை இராசையா, ராஜா, ஜீவா போன்ற அனை வரும் கருணாவல் அழைத்து வரப்பட்டவர் களே.

தாய்வீடு இதழ் அவ்வப்போது சிறப்பிதழ் களாக வெளிவருவதுண்டு. அத்தனை சிறப் பிதழ்களுக்குப் பின்னாலும் கருணாவின் உழைப்பு இருந்தது.

தாய்வீடு தொடர்பில் கருணாவின் தொடர் புகள் உலகெங்கும் பரவியிருந்தன. உல கெங்கும் பரந்துவாழும் துறைசான்ற ஆளு மைகளைத் தாய்வீட்டோடு இணைத்து வந்திருக்கின்றான்.

தாய்வீடு, அரங்கியல் விழா என்ற மற்று மொரு தளத்தில் காலடி எடுத்து வைத்த போது அதிலும் எல்லாமாகி நின்றவன் கருணா. தொடக்கத்தில் இது இதழ் வெளி யீட்டோடு பெருஞ்சுமையாகி விடுமோ என்ற தயக்கம் இருந்தாலும் பின்னர் களமிறங்கி தன் ஆற்றல்களால் அனைத்து விழாக்க ளையும் அழகுபடுத்தினான்.

கடந்த ஐந்து அரங்கியல் விழாக்களிலும் பங்குகொண்ட அத்தனை கலைஞர்களும் கருணாவை எளிதில் மறந்துவிடமுடியாது. ஒவ்வொருவருடனும் அவர்கள் துறைசார்ந்து நெருங்கிப் பணியாற்றும் வல்லமை கரு ணாவுக்கு இருந்தது. கூத்து, நாடகம், ஆடல் எனப் பல கலைவடிவங்களை எழுதுவோ ருக்கும் இயக்குவோருக்கும் அதை மேன் மைப்படுத்தும் நோக்கில் அறிவுரை கூற வல்லவனாகக் கருணா இருந்தான்.

கலையரங்கில் உள்ள தொழில் நுட்பங் களை நுணுக்கமாக ஆய்ந்து அவை யாவற்றையும் கலை வெளிப்பாட்டில் எப் படிப் பயன்படுத்தலாம் என்பதில் கருணா தொட்ட உச்சத்தைத் தமிழ் சமூகத்துக்குள் எவரும் தொடவில்லை என்பதே என் கருத்து.

நவீனத்துவ உத்திகள் மீது பெருங்காதல் கொண்டவன் கருணா. அனைத்துலகத் தரத்தை நோக்கியதாக எம் இதழியல், கலை வெளிப்பாட்டு இயக்கம் இருக்க வேண்டும் எனக்கருதி அதற்காகவே உழைத் தவன் கருணா.

அனைத்துலக சமூகத்தில் தாய்வீடு இத ழுக்கென இன்றிருக்கும் மதிப்பை உரு வாக்குவதில் கருணா கொண்டிருந்த பங்கு மிகப் பெரியது.

மேற்குறிப்பிட்ட அனைத்துக்கும் அப்பால், சிறந்த நண்பனாக, என் வலம், இடமாக நடமாடித் திரிந்தவன் கருணா. பெரும்பா லும் எமக்கிடையே எந்த ஒளிவு மறைவு களும் இருந்ததில்லை. சிலவேளைகளில் கருத்துமோதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. குரலை உயர்த்திப் பேசியும் முரண்பட்டி ருக்கின்றோம். மறுநாள் ஏதுமறியாதவரைப் போல் இருவரும் பேசிக்கொள்வோம். இவ் வாறான உறவுகள் அபூர்வமாகவே நமக் குக் கிடைக்கும்.

எனக்கு வலிக்கக் கூடாது என கருணா மேற்கொண்ட நடத்தைகள் பல. எனக்கு வலிகள் ஏற்பட்டபோதெல்லாம் அதை ஆற்றுப்படுத்தவென, கருணா முயன்ற பொழுதுகள் அதனிலும் பல.

நான் இழந்து நிற்கின்றேன்.

மொழி விபரிக்கும் பொருளுக்கு அப்பாற் பட்டு வியாபித்து நிற்கின்றது என் இழப்பு. கருணா என்ற ஒற்றை மையத்தைச்சுற்றியே என் தேவைகளும் தீர்வுகளும் குவிந்திருந் தன.

சூனியமாகிவிட்ட மையப்புள்ளியைச் சுற்றி, சுத்திரக்கிணற்று மாடுகளென வலம் வரு கின்றன என் தேடல்கள்.

அவன் ஊன்றிச் சென்ற நம்பிக்கையே இன்னமும் மிஞ்சி இருக்கின்றது.

அவன் உருவாக்கிய வழிகளும் கண்ட கனவுகளும் எம்மை வழிநடத்திச் செல்லும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்திக்கொள்ள நாம் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம்.

'ஒற்றைத் தடங்களில் உன்னால் நடக்க முடியும்' என்ற நம்பிக்கையை அவனே எனக்குள் விதைத்துச் செல்கின்றான்.

ஆதரவாய், ஆறுதலாய் எமை நோக்கி நீளும் அத்தனை விரல்களுக்கும் எம் நன்றி!

■ ■ ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உற்சாகம் தான் கருணா



- ட்ராட்ஸ்கி மருது -

அன்பிற்கினிய நண்பர் கருணா எனது வாழ்வில் மிகக் குறைந்த நாட்களே உட னிருந்தார். ஆனால் வாழ்வெல்லாம் உடன் இருந்தவர் போலவும் இருப்பவராகவும் இருக்கிறார் என்பது தான் உண்மை.

அவரை தாய்வீடு டிலிப் மூலம் தான் நான் அறிந்தேன். தொடர்ந்து டிலிப் என்னிடம் பேசி வருகிறபோதும் ஆரம்பத்தில் எனக் குக் கிடைத்த இதழ்களின் மூலமும் நான் அறிய முடிந்த ஓவியங்களின் வழியிலும் அதன் வடிவமைப்பு நிலை பற்றியும் டிலிப் அவர்களிடம் பேசிய போது கரு ணாவைப் பற்றிக் கூறி எனக்கு அவரை அறியப்படுத்தி என்னோடு பேசவைத்தார். அன்றிலிருந்து அந்த உணர்ச்சிப்பெருக்கு மிகுந்த குரலை நான் வாரம் ஓரிரு முறை கேட்டுக்கொண்டே இருக்கிறேன். உள்ளார்த் தமாகத் தேடுகிற அயராத குழந்தையின் வியப்பு நிலையிலேயே எப்போதும் ஆர் வம் கொப்பளிக்கும் உரையாடல் தான் அவர் உரையாடல். என்னை அவரில் பிர திபலிக்கக் கண்டேன்.

மாற்கு மாஸ்டரின் 70களின் முயற்சிகள் அனைத்தையும் நான் ஓவியக் கல்லூரி இறுதி ஆண்டுகளில் கேட்டும் சிலவற்றைப் பார்த்துமிருக்கிறேன். இன்று 40 ஆண்டுக ளில் ஈழத்திலும் புலம்பெயர்ந்தும் இருக் கிற ஓவியர்கள் வழி அவர் சிறப்பை அவர் வளர்த்து ஆளாக்கிய ஓவியர்கள் மூலம் கேட்டு வியந்துபோவேன். உண்மையில் இங்கு எங்கள் ஆசிரியர் சிற்பி தனபால் எப்படி எங்களுக்கெல்லாம் ஆதர்சமாக இருந்தாரோ அதுபோல மாற்கு மாஸ்டர் இருந்திருப்பதை அவர் மாணவர்கள் வியந்து அவரைப் பேசும் போது உணர்ந்திருக்கி றேன்.

மாற்கு மாஸ்டரைப் பற்றியும், உடன் கற் றவர்கள் பற்றியும் அதே காலகட்டத்துச் சென்னை ஓவியர்கள் பற்றியும் கருணா மிக ஆழமாகப் பேசியதைக் கேட்டிருக்கி றேன்.

நான் இரண்டு ஆண்டுகளுக்கு முன் கனடா வந்த போது நான் வந்து இறங்கிய நி- மிடம் கொண்டு டிலிப்புடன் கருணாவும் நான் இந்தியா திரும்பும் வரை அருகிலேயே இருந்தார்.

உரையாடலோடு வாழ்வைக் கொண்டாடு கிற அற்புதமான கலைஞனாக ஒவ்வொரு நிமிடமும் கருணா என் அருகில் இருந்தார். அந்தக் கணங்கள் எனது நட்பு நிலையில் மிகக் கொண்டாட்டமான கணங்கள்.

கருணாவுடனான பேச்சு கலாபூர்வமாக அதிலும் ஓவியம் என்று மட்டுமில்லாமல்



அவருக்கு இருந்த புகைப்படக் கலை, டிஜிட்டல் ஓவியம் மீது இருந்த வேகம் மிக்க வெறிமிக்க காதலும் அவர் பேச்சில் நிரம் பியபடியே இருக்கும்.

நண்பர்கள் ஒழுங்கு செய்திருந்த நிகழ்ச் சிகளை முடித்துக் கொண்டு கனடாவில் இருக்கும் அருங்காட்சியகங்களை எனக்கு காட்டுவதில் அளவில்லாத காதலோடு ஈடு பட்டார். ஒருமுறை மொன்றியாலுக்கு உறை யும் பனியில் 6 மணிநேரம் பயணித்துச் சென்று விடுதியில் தங்கிய போது நான் சோர்ந்து விட்டது குறித்து வருந்தி நின்ற வர், நான் அருங்காட்சியகத்திற்குள் நுழைந் ததிலிருந்து எனக்கு ஏற்பட்ட புத்துணர்ச்சி கண்டு அவர் புத்துணர்வு பெற்றார். எப் படிப்பட்ட உள்ளம் அவருக்கு!

அவருடைய பங்களிப்பை, குறிப்பாகத் தாய்வீட்டுக்கான பங்களிப்பை நண்பர்கள் மூலம் அறிந்தபோது அவருக்கிருந்த பல் துறையிலும் இயங்கும் ஆர்வமும் ஆற்ற லும் கண்டு வியந்தேன்.

புலம்பெயர்ந்து இருக்க வேண்டிய சூழல் அவரைப் பல்வேறு துறைகளில் இயங்க வைத்திருப்பதுடன் அவரைத் தேர்ச்சிபெற்ற கலைஞனாக மாற்றியிருக்கிறது.

டிஜிட்டல் புரட்சியுடனேயே சேர்ந்து காலத் தோடு வளர்ந்து வந்த கலைஞன் கருணா. ஓவியம். கணினி வரைகலை, புகைப்படம், டிஜிட்டல் ஓவியம் என்று இயங்கிக்கொண்டே இருந்த கலைஞனாக அவர் விட்டுச்சென்ற படைப்புகள் மூலமும் தீராத வேட்கை- யோடு இயங்கியவர் என்றும் வருங்காலத் தில் வளரும் கலைஞர்களால் கருணா அறியப்படுவார்.

எனக்கு கனடாவை நினைக்கும் போது எனது அனைத்து நண்பர்கள் நடுவில் அவர் இல்லையே என்று அறியும் போது நான் கனடா வந்து இறங்கிய அன்று மாலையே தாய்வீடு டிலிப் வீட்டில் அவ ரது பிறந்தநாள் நிகழ்ச்சி முதல் நாளாக அவரை சந்தித்திருந்த என்னை அவர் கட்டியணைத்த புகைப்படம்(அவர் மறைந்த செய்தி என்னைப் பல வழிகளில் வந்து சேரும் போது) நண்பர் கவிஞர் சேரன் அனுப்பியிருந்தார் அப்புகைப்படம் என்னை உடைந்து போகச் செய்துவிட்டது. உடன் கருணா, சேரனின் செல்லநாயோடு உட் கார்ந்திருக்கும் படமும் வந்தது. அப்பட மும் ஒரு அழியாத கலைஞனை எனக்கும் இவ்வுலகிற்கும் சொல்லும். ஆனாலும் அனைத்து நண்பர்களும் சொன்ன வார்த்தை தான் நினைவில் இருக்கிறது.

என்ன அவசரம்
கருணா!



trotskymarudu@thaiveedu.com

# கருணா என்னும் ஒரு கலைஞனின் மரணம்...

கருணா அண்ணனை நான் நேரில் கண் டதில்லை.

ஆனால் அவரோடு நிறைய உரையாடி யிருக்கிறேன்.

எங்களின் உரையாடல் ஓர் ஓவியத்தைப் பற்றியதாகவோ ஒளியமைப்பைப் பற்றிய தாகவோ நடனம் அல்லது கூத்துப் பற்றி யதாகவோ தான் பெரும்பாலும் இருக்கும்.

நாம் நம் வாழ்நாளில் பல மனிதர்களை, பல கலைஞர்களைச் சந்தித்திருப்போம். அவர்களில் மிகச்சிலரே நமது சிந்தனை யோடு கூட வருபவர்களாக, நமது செயற் பாடுகளைப் புரிந்து கொள்பவர்களாக, நமது படைப்புகளோடு அவர்களும் பய ணிப்பவர்களாக இருக்கின்றனர்.

அந்த வகையில் கருணா அண்ணன் எனது கலைப்பயணத்தில் ஆத்மார்த்தமான கருத் துக்களையும் பங்களிப்பினையும் தந்த ஒரு மனிதர்.

இத்தனைக்கும் எமது தொடர்பு முகநூலில் மட்டுமே இருந்திருக்கிறது. அவரது தொலை பேசி எண் கூட என்னிடம் இல்லை. சில மனிதர்கள் தூரமிருந்தாலும் வாழ்வோடு அருகிலிருப்பவர்களாகி விடுகிறார்கள்.

எனது ‘கறுத்த பெண்’ கவிதை நூலுக்கு கேட்டவுடனேயே முகப்பு ஓவியம் வரைந்து தந்தார். கேட்காமலேயே பறை அரங்கிற் குத்தமது பாணியில் வடிவமைப்புச் செய்து கொடுத்தார். எனது புத்தர் கவிதைகளுக்கு தனது கைத்தொலைபேசியிலேயே குட்டிக் குட்டிப் படங்கள் வரைந்து அனுப்புவார். அந்தப் படங்கள் இப்போது எனது கவி தைகளுக்கு மேலும் நெருக்கமாகிவிட்ட தாக உணர்கிறேன்.

அவருடைய மனதில் கலை பற்றியும் நமது கலைஞர்கள் பற்றியும் ஒரு வகைத் தீராத ஏக்கம் இருந்துகொண்டே இருந்ததை நான் அறிவேன்.

‘எப்படியாவது நமது கலைஞர்களை ஒரு படி உயரக் கொண்டு செல்லவேண்டும்’, ‘இன்னும் மேலதிகமாகச் சிந்திக்க வைக்க வேண்டும்’ என்பவை அவர் மனத்துள் எப் போதும் ஓடிக்கொண்டிருந்த விடயங்கள்.

பல நிகழ்வுகளை அனுப்பி அவைகளைப் பற்றி கருத்துக்களைச் சொல்லியே ஆக வேண்டும் என்று சொல்லும்வரை கேட்டுக் கொண்டே இருப்பார். இந்தக் கருத்துக்க ளைப் பிற நடனக் கலைஞர்களோடும் பகிர்ந்து கொள்வார்.

முகநூலில் நட்பாக இருக்கும் ஒருவரின் மரணம் எனக்கு இத்தனை மன அழுத் தத்தை ஏற்படுத்தும் என்று நான் எண்ணி யதே இல்லை.

கருணா அண்ணனின் இழப்பு தூர இருக்கும் ஒரு முகநூல் நட்பாக இருக்கும் எனக்கே இத்தனை மனஅழுத்தத்தை தருகிறதென் றால் அவர் அருகில் இருக்கும் மனிதர்க ளுடைய மனநிலை எப்படி இருக்கும்? அவருடைய மரணத்தை மனம் இன்னும் ஏற்றுக்கொள்ளவேயில்லை.

அவருடைய சிறு வயதுப் படம் ஒன்று எனக்கு மிக்கப் பிரியம் தருவதாய் இருந் தது.
அவ்வப்போது எனது புத்தாக்க விதைகளுக் குக் கைபேசியிலேயே படம் வரைந்து அனுப் பும் அன்பையும், ஒரு படைப்பைப் பற்றி உரையாடும் ஒரு உயிரையும் இழந்து விட்டேன். இது எத்தனை பெரிய இழப்பு என்பதைச் சிலராலேயே உணர்ந்துகொள்ள முடியும்.

அவருடன் பேசிய உரையாடல்களை மீண் டும் முகநூலில் மீளப் படித்துப் பார்க்கி றேன். ஆசைகளும், எதிர்பார்ப்புகளும் நிறைந்தது தானே வாழ்வு? முடிந்தவரை அவருடை கலைக்கனவுகளின் தொடர்ச்சி யாகவும் நீட்சியாகவும் வண்ணந் தீட்டும் என் மனத்தை தக்கவைத்துக் கொள்ள வேண்டும்.

சில நேசங்கள் ஆழ வேரூன்றி விடுகின்றன.

அண்ணனின் அன்பு அப்படியான ஒன்று!

உண்மையான கலைஞனின் மரணம் நமக்குப் பேரிழப்பு.

கருணா அண்ணனின் ஆத்மா மீண்டும் ஒரு பிறவி
காணவேண்டும்.



- கவிதா லட்சுமி -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவேந்தல்



பல்துறை ஆளுமை

## ஓவியர்
## கருணா வின்சென்ற்

மார்ச் 23, 2019
சனிக்கிழமை
பி.ப. 4:30

**Armadale Community Centre,**
**2401 Denison St, Markham ON**

தொடர்புகளுக்கு: 416 857 6406 • 416 832 0929 • 416 731 1752

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருணா ஒரு தகவல் களஞ்சியம்

**- மணி வேலுப்பிள்ளை -**

அமரர் கருணா அவர்களை 1991ம் ஆண்டு அவருடைய வேலைத்தலத்தில் நான் முதன்முதல் சந்திக்க நேர்ந்தது. எனது மொழிபெயர்ப்பு ஒன்றை வரைபடத்தில்



இடுவதற்கு அவரை நாடும்படி வேறொரு நண்பர் எனக்கு யோசனை கூறியிருந்தார். எனினும் எமது தொடர்பு நீடிக்கவில்லை.

ஏறத்தாழ இரு தசாப்தங்கள் கழித்து மார்க்கம்-நகெட் சந்தியில் உள்ள திம் ஹோர்ட்டன் சிற்றுண்டியகத்தில் கருணாவையும் டிலிப்குமாரையும் நான் அன்றாடம் காண நேர்ந்தது. எனக்கும் அவர்களுக்கும் செல்வம் அருளானந்தம் பொது நண்பர். செல்வம் ஊடாகவே மீண்டும் கருணாவுடன் எனக்குத் தொடர்பேற்பட்டது. இதில் வேடிக்கை என்னவென்றால், நானும் கருணாவும் ஒரே ஊரவர்கள்!

இப்பொழுது மீண்டும் அவருடன் பழகப் பழக அவரது சிறப்புக்கள் அடுத்தடுத்துப் புலப்பட்டன. கருணா ஒரு தகவல் களஞ்சியம், கணினி விற்பன்னர், வரைகலை வல்லுநர், நவீன ஓவியர், அரங்க நெறியாளுநர், நிழற்பட நிபுணர்... என்னை வியக்க வைத்த இன்னொரு சிறப்பு: எந்த ஓர் ஆங்கிலச் சொல்லாயினும் அதற்கு நிகரான தமிழ்ச்சொல்லைக் கண்டறிவதில் அவர் தளரா வேட்கை கொண்டவர். உண்மையில் இதுவே அவரையும் என்னையும் கட்டிப்போட்டது. ஆங்கிலக் கலைச்சொற்களின் பொருளைத் தேர்ந்து தெளிவதற்கு கருணாவின் உதவியை நான் திரும்பத் திரும்ப நாடினேன். இன்று மேன்மேலும் அவரது துணை எனக்குத் தேவைப்படும் சூழ்நிலையில் அவரை இழக்க நேர்ந்தமை ஓர் அவப்பேறே.

தனது உடல்நலக் குறைவைக் கருத்தில் கொண்டு தனது எதிர்கால வாழ்வு தொடர்பான பிரதிக்கினை ஒன்றை அவர் மேற்கொண்டிருந்தார். அவர் விரும்பியோ விரும்பாமலோ அவரது பிரதிக்கினை அவரைத் தனிமைக்கு இட்டுச் சென்றது. எனினும் பல்வேறு தரப்புகளுக்கும் அமைப்புகளுக்கும் பணிகளுக்கும் பற்பல வழிகளில் வலுவூட்டி, துணைநின்று, கைகொடுத்தவர் கருணா. ஆதலால் அன்னாரின் மறைவு உறவுகளையும் குழுமங்களையும் துறைகளையும் நாடுகளையும் கடந்து எதிரொலித்த வண்ணம் உள்ளது.

அமரர் கருணா அவர்களின் ஆத்மா சாந்தியடையும் வண்ணம் ஏற்பாடு செய்யப்படும் நிகழ்வுகளில் கலந்துகொள்ள இயலாமைக்கு வருந்துகிறேன். அதேவேளை அவரை இழந்து வருந்தும் குடும்பத்தவர்களின் துயரை இத்தால் நானும் பகிர்ந்து கொள்கிறேன்.



mani.velupillai@thaiveedu.com

Publisher & Editor : P.J. Dilipkumar
பதிப்பாளர், ஆசிரியர் : பி.ஜெ. டிலிப்குமார்

ஆலோசகர் குழு : அருண்மொழிவர்மன், சேரன், துஷி ஞானப்பிரகாசம், ஞானம் லெம்பட், கந்தசாமி கங்காதரன், கருணா, பொன்னையா விவேகானந்தன், ரவிச்சந்திரிகா.

ஓவியங்கள் : ஆசை இராசையா (இலங்கை), டிராட்ஸ்கி மருது (இந்தியா), ஜீவா (இந்தியா), கருணா (கனடா), K. கிருஷ்ணராஜா (இங்கிலாந்து), ரமணி (இலங்கை), செந்தில் (இந்தியா), சௌந்தர் (இங்கிலாந்து), ரஷ்மி (இங்கிலாந்து).

புகைப்படங்கள் : கருணா, K. கிருஷ்ணராஜா (இங்கிலாந்து), துசியந்தன் துரைரத்தினம்.

தட்டச்சு : ஜீவா, சாம் டானியல்.

ஒப்புநோக்கல் : கௌரி, கந்தசாமி கங்காதரன்.

வரைகலை ஆலோசனை : கருணா (டிஜி வரைகலை அமையம்).

பொது உறவுத் தொடர்பு : குமணன் தம்பிஐயா

ரொறன்ரோ விநியோகம் : இராமநாதன் ரூபன், சசி, மெய்யழகன்.

மொன்றியால் தொடர்பு : சுகுமாரன் சின்னையா.

ஒட்டாவா தொடர்பு : அலெக்ஸ் சிவசம்பு: 1-613 -276-7253

அஞ்சல் முகவரி : Editor
P.O.Box #63581
Woodside Square
1571 Sandhurst Cir.
Toronto, ON. M1V 1V0

Tel : 416-646-3422, 416-857-6406
Fax : 416-849-0594
Web : www.thaiveedu.com
E-mail : info@thaiveedu.com

Printed on recycled paper

## வீட்டினுள்ளே வருபவை...

### பல்துறை ஆளுமை ஓவியர் கருணா வின்சென்ற்


| | |
|---|---|
| டிலிப்குமார் | 1 |
| டிராட்ஸ்கி மருது | 1 |
| கவிதா லட்சுமி | 1 |
| மணி வேலுப்பிள்ளை | 3 |
| அருண்மொழிவர்மன் | 4 |
| சேரன் | 5 |
| அஸ்மா பேகம் | 5 |
| கே. கிருஷ்ணராஜா | 6 |
| மு. நித்தியானந்தன் | 6 |
| கந்தசாமி கங்காதரன் | 7 |
| ராஜா மகேந்திரன் | 7 |
| செல்வம் அருளானந்தம் | 8 |
| அ. ராமசாமி | 9 |
| களப்பூரான் தங்கா | 10 |
| றெஜி மனுவேல்பிள்ளை | 11 |
| ராஜ்மோகன் செல்லையா | 11 |
| எஸ்.கே. விக்னேஸ்வரன் | 12 |
| ந. இரவீந்திரன் | 13 |
| கந்தையா ஸ்ரீகணேசன் | 14 |
| ஞானம் லேம்பட் | 15 |
| மு.பி. பாலசுப்பிரமணியன் | 15 |
| ஜீவா | 16 |
| அனார் | 16 |
| கருணா கோபாலபிள்ளை | 17 |
| பரமகுலராணி | 17 |
| நிமால் நாகராசா | 17 |
| தாமரை | 18 |
| ஆயணி விவேகானந்தன் | 18 |
| தமிழருவி குலராஜசிங்கம் | 18 |
| அருவி இரவீந்திரன் | 18 |
| கார்த்திகேசு விஜயசுகந்தன் | 19 |
| ஹரி ஆனந்தசங்கரி | 20 |
| Sharry Aiken | 21 |
| Dishaly Ilamaran | 21 |
| Neethan Shan | 21 |
| கருணா | 22 |
| அ. கந்தசாமி | 23 |
| ரதன் | 24 |
| பா.அ. ஜயகரன் | 25 |
| மனவெளி கலையாற்றுக் குழு | 25 |
| பார்வதி கந்தசாமி | 25 |
| குரு அரவிந்தன் | 26 |
| திருமுருகவேந்தன் | 26 |
| கார்த்திகா பார்த்திபன் | 27 |
| எஸ்.எம். வரதராஜன் | 28 |
| க. சிவமணி | 29 |
| தமிழ்நதி | 30 |
| பிரியதர்சன் | 31 |
| கனடா உலகத்தமிழர் பத்திரிகை | 32 |
| ஞானதாஸ் காசிநாதர் | 33 |
| கதி. செல்வக்குமார் | 34 |
| கார்த்திகா ஞானச்சந்திரன் | 35 |
| Jennifer Dilipkumar | 35 |
| ரஷ்மி | 36 |
| தீவகம் இராசலிங்கம் | 36 |
| ஓவியர் அமரதாஸ் | 37 |
| அருட்தந்தை ஜெயக்குமார் அடிகளார் | 38 |
| நேத்ரா ரொட்ரிகோ | 38 |
| பொன்னையா விவேகானந்தன் | 39 |

சமன்கோலைப் பார்த்துக்கொண்டேயிருக்கும் தமிழர்கள் 43
அ. கணபதிப்பிள்ளை

உயிர்ச்சத்து B9: Folic Acid 44
ரவிச்சந்திரிகா

துளிர் காலமும் மிதிவண்டியும் 47
செந்தூரன் புனிதவேல்

முகநூல் நட்பெல்லாம் நட்பல்ல 48
க. நவம்

செல்போன்களின் மறுபக்கம் 51
எஸ். பத்மநாதன்

வசந்தகால வீட்டுப் பராமரிப்பு (Spring - Home Maintenance) 52
வேலா சுப்ரமணியம்

நிலாவில் தரை இறங்கிய சாங்-இ- 4 54
குரு அரவிந்தன்

மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை 57
முருகேசு பாக்கியநாதன்

கோழிப் பொறியல் மன்னன் 63
குமார் புனிதவேல்

ஊடகவியலாளர் படுகொலைகளும் நீதி விசாரணையும் 64
அதிரதன்

ஏமாந்ததும் ஏமாற்றியதும் 67
சோக்கல்லோ சண்முகநாதன்

தாய் மண் காப்போம் - அன்பு நெறி 72
ந. அரியரெத்தினம்

ஜாக்டோ ஜியோ ஆசிரியர்கள், அரச ஊழியர்களின் பணிப் புறக்கணிப்பு 77
றொனி ராஜன்

தவறுகளால் உரம் பெறுதல் 83
P. விக்னேஸ்வரன்

வாழ்புலத் தமிழரின் எதிர்கால இருப்பில் கலைகளின் முதன்மைத்துவம் 86
பொன்னையா விவேகானந்தன்

இலங்கையின் தொழிற்சங்க எழுச்சி 89
ந. இரவீந்திரன்

பெரியாரின் பெண் ஏன் அடிமையானாள்? 93
மைதிலி தயாநிதி

திருக்குறளிற் பெண்கள் பற்றிய கருத்துநிலை நோக்கு 94
விமலா பாலசுந்தரம்

இரண்டு நண்பர்கள் 96
கீ டி மாப்பாசான்

நான் என்ன செய்கிறேன்? 103
அ. முத்துலிங்கம்

சோழர்கால இலக்கியம்: சமய மரபுசார் இலக்கிய ஆக்கங்கள் 107
நா. சுப்பிரமணியன்

கார்ட்டூன் மொழியும், குறியீடுகளும் 109
எஸ். தர்மதாஸ்

இம்மனுவேல் 113
செல்வம் அருளானந்தம்

ஒரு கிராமம் நகரமாகிறது 117
நெடுந்தீவு மகேஷ்


பெயர் தோற்றாத கட்டுரைகளுக்கு ஆசிரியரே பொறுப்பு.
ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியோரே பொறுப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வை உன்னதத் தருணங்களின் தொகுப்பாக்கியவன்!



- அருண்மொழிவர்மன் -

ஏற்றங்களும் இறக்கங்களும் சேர்க்கைகளும் பிரிவுகளும் இழப்புக்களும் நிறைந்தது தான் வாழ்க்கை என்பது மீள மீள நினைவூட்டப்பட்டாலும் இந்த இரவில் இருந்து திரும்பிப்பார்க்கின்றபோது இறந்துபோன நண்பர்களின் பிரிவுகளும் அவர்களுடன் சேர்ந்த களித்த, கழித்த தருணங்களின் தடங்களுமே நினைவெல்லாம் தளும்பிக் கிடக்கின்றது. வாழ்வில் தவிர்க்கவே முடியாத யதார்த்தம் மரணம் என்றபோதும் நெஞ்சார்ந்து கூடிப் பழகினவர்களின் மரணந்தரும் வலிகூட மரணத்திற்கொப்பானது. கருணா அண்ணையுடன் நான் நெருக்கமாகப் பழகியது மிகக் குறுகிய காலமே என்றாலும் அந்தத் தாக்கங்கள் இருந்தே தீரும்.

கருணா அண்ணையை நான் நெருக்கமாகச் சந்தித்த முதற்சந்தர்ப்பம் சுமதி ரூபன் வீட்டில் நிகழ்ந்த சந்திப்பொன்றில்தான். நிறைய நண்பர்கள் சந்தித்துக்கொண்ட அன்றைய பொழுதில் வரவேற்பறையில் இருந்த எல்லாக் கதிரைகளும் நிரம்பி விட நிலத்தில் விரிக்கப்பட்ட கம்பளம் ஒன்றிலும் சில நண்பர்கள் இருந்தனர். கருணா அண்ணை அந்தக் கம்பளத்தில் மஃப்ளர் ஒன்றினைத் தலையைச் சுற்றி உறுமால் போலக் கட்டிக்கொண்டு தொடர்ச்சியாக வெவ்வேறு விடயங்களைப் பற்றிச் சுவாரசியமாகப்பேசிக்கொண்டிருந்தார். அதுவரை ஓவியரென்று மட்டுமே அறிந்து கொண்ட கருணா அண்ணையை, வாசிப்பு, அரசியல், இலக்கியம், வரலாறு என்று பல்வேறு துறைசார்ந்த விரிவும் ஆழமும் நிறைந்த அறிவார்ந்த ஆளுமையாக அறிந்துகொள்ளும் சந்தர்ப்பம் அன்றமைந்தது. கிட்டத்தட்ட அன்றைய சந்திப்பின் மையப்புள்ளி போன்றே அவரை நண்பர்கள் நடத்தினர். அவர்கள் அனைவருக்கும் கருணா அண்ணையுடன் நீண்டகால நெருக்கமான பரிச்சயமும் நட்பும் இருந்தது. அந்த நட்பு வழியே அத்தகைய ஓர் உரிமையையும் ஆளுமையையும் அவர் அவர்களிடத்தில் பதியவைத்திருந்தார். பின்னாட்களில் அவருடன் நெருக்கமாகப்பழகிய பல சந்தர்ப்பங்களிலும் தான் இருக்கின்ற எல்லா அவைகளிலும் தானே மையமாக விளங்குகின்ற, அங்கே நிகழுகின்ற அனைத்தையும் ஆளுமைமிக்க இசை நடத்துனர் ஒருவர் இசை நிகழ்வொன்றில் கலைஞர்களைக் கையாள்வதைப்போல தன் கட்டுப்பாட்டிலேயே வைத்திருக்கின்ற ஒருவராகவே கருணா அண்ணை விளங்குவதை நான் அவதானித்திருக்கின்றேன்.

அவருடன் நெருக்கமாகப் பழகுவதற்கான வாய்ப்பு 2014ல் இடம்பெற்ற தாய்வீட்டின் முதலாவது அரங்கியல் நிகழ்வின் மூலமாகக்கிடைத்தது. ஓர் இக்கட்டான நிலைமையில் நிகழ்வு நடப்பதற்கு இரண்டு நாட்கள் மட்டும் இருக்கக்கூடிய நிலையில் அந்த அரங்கியல் நிகழ்வில் நாடகம் ஒன்றை நெறியாள்கை செய்து நடித்த ராஜா அண்ணை (ஓவியர் கிருஷ்ணராஜா) கேட்டுக்கொண்டதன்படி ஒளி நிர்வாகம் செய்வதற்கு உடன்பட்டிருந்தேன். கருணா அண்ணை வீட்டிற்கு நான் சென்ற முதற் தடவையும் அதே, நவீன நாடகச் செயற்பாடுகளிலோ அல்லது ஒளி நிர்வாகத்திலோ எந்த முன்னனுபவமும் எனக்கு இல்லை என்று நான் சொன்னபோது, “நீங்கள் என்னென்ன செய்யவேண்டும் என்று சொல்லித்தருவேன், நீங்கள் அதைச் செய்தால் சரி. ஏதாவது பிரச்சனை என்றால் மைக்கில் கதைக்கலாம். இது உங்களுக்குச் சின்னப்பிரச்சனை, யோசிக்காதையுங்கோ” என்று மிகுந்த நம்பிக்கையுடன் கருணா அண்ணை சொல்லியிருந்தார். கருணா அண்ணையுடன் தொடர்ந்தும் நெருக்கமாகவும் பழகுவதற்கான தொடக்கமாக அந்த நிகழ்வு அமைந்தது.

தான் எடுத்துக்கொண்ட எந்த விடயத்தையும் நுண்ணுணர்வுடனும் அர்ப்பணிப்புடனும் செய்வது கருணா அண்ணையின் இயல்பு. அத்துடன் புதிய தொழிநுட்பங்களையும் புதிய சாத்தியங்களையும் அயர்விலா ஆர்வத்துடன் தேடித்தேடி அறிந்துகொள்வதுடன் அரங்க அமைப்பு, ஒளி, ஒலி நிர்வாகம் போன்றவற்றில் தொழிநுட்பத்தின் எல்லாச்சாத்தியங்களையும் பயன்படுத்த வேண்டும் என்பதே அவரது உறுதியான நிலைப்பாடாக இருந்தது. கூத்து போன்ற கலைவடிவங்களை நவீனமயமாக்குவது என்பதன் அங்கமாகவே அவர் கூத்து நிகழ்வுகளின் அரங்க நிர்மாணத்திற்கு மரபான அரங்க அமைப்பு அம்சங்களை விட்டு விலகி ஒளிச் சேர்க்கைகள் (Graphic Effects) மூலமாக பின்னணி சேர்ப்பதைச் செய்தார். தொழிநுட்பங்களில் தங்கியிருக்கின்றபோது தொழிநுட்பச் சிக்கலால்



ஏற்படக்கூடிய பாதகங்களையும் அவர் அறிந்திருந்தார். தாய்வீட்டின் அரங்கியல் நிகழ்வின் முதல் இரண்டு சந்தர்ப்பங்களிலும் தொழிநுட்பக் கோளாறுகளால் சில தடங்கல்கள் ஏற்பட்டபோது வந்த சில விமர்சனங்கள் - அவை தொழிநுட்பக் கோளாறுகளின் சாத்தியங்கள் பற்றிய புரிதலே இல்லாமல் வந்தன என்பதால் அவருக்குச் சினமூட்டியதும் அவரைப் பாதித்ததும் உண்மை. ஆயினும் அவர் தொழிநுட்பத்தினைத் தொடர்ந்து பிரயோகிப்பது என்பதில் இருந்து சிறிதும் பின்வாங்கவில்லை. அவருடன் பேசிக்கொண்டிருந்தபோது நான் கூட பல தடவைகளில் இந்தப்பிரச்சனைகளைச் சுட்டிக்காட்டி ஏன் நாம் நவீன தொழிநுட்பங்களை அதிகம் கையாளாமால் மரபான வடிவங்களை நோக்கிப்போகக்கூடாது என்று கேட்டிருந்தேன். சர்வதேச ரீதியில் நடந்த நிகழ்வுகளில் கூட தொழிநுட்பம் எப்படிக் காலை வாரிவிட்டது என்று பல்வேறு சந்தர்ப்பங்களையும் கூறி, அதற்காகவெல்லாம் நாம் பின்வாங்கி விடக்கூடாது என்பார். ஆனால் தொழிநுட்பங்களைக் கையாள்வதில் மிக நவீனமான மனிதராகவும் மரபின் ஆழங்கள் தெரிந்தவராகவும் ஒருங்கே இருந்தார். தொன்மங்களையும் புராணங்களையும் மரபுகளையும் தேடிக் காதலுடன் பயணித்தவர் கருணா அண்ணை.

வாழ்வைக் கொண்டாடுதல் என்பது வாழ்வின் ஒவ்வோர் கணத்தையும் ஒவ்வோர் அம்சத்தையும் அழகுணர்வோடு உள்ளுணர்ந்து ரசித்து அதை அழகூட்டி வாழ்தல். அந்தப் பண்பு கருணா அண்ணையிடம் இருந்தது. அவரது ஆழ்ந்தகன்று தேடும் குணம் அவரது வாழ்வையும் இரசனை பூர்வமானதாக்கியதுடன் அவரைச் சுற்றி இருப்போருக்கும் அவரிடமிருந்தும் மெல்லத்தொற்றிக்கொண்டது. மதுக்கிண்ணத்தில் எந்த மட்டம் வரை வைனை வார்க்க வேண்டும் என்பதிலிருந்து எந்த மதுவை எந்தவிதமான குவளையில் எந்தவிதத்தில் வார்க்கவேண்டும் என்பதில் இருந்து, உணவகங்களில் உணவுண்ணும்போது கடைப்பிடிக்கவேண்டிய முறைகளைச் கடைப்பிடிப்பதில் இருந்து என்று பல்வேறு விடயங்களைத் திரும்பத் திரும்பச் சொல்வது அவரது வழக்கம். வாழ்வை உன்னதமான தருணங்களின் தொகுப்பாக்கவேண்டும் என்பதற்கான அவரது முயற்சிகளாகவே இப்போது அவற்றையெல்லாம் புரிந்துகொள்ள முடிகின்றது.

கருணா அண்ணையுடன் உணவகங்களுக்குச்செல்வது என்பது மிகவும் அருமையான அனுபவம். ஒவ்வொரு நாட்டு உணவுகள் குறித்தும் அவற்றின் வரலாறு குறித்தும் விளக்கமாக அறிந்துவைத்திருப்பார். அவருடன் பழகத் தொடங்கிய ஆரம்ப நாட்களில் இந்த இந்த இடங்களுக்குப் போக போகின்றோம் என்று தெரிந்துகொண்டு அவை பற்றித் தேடி இவர் திட்டமிட்டே செயற்படுகின்றாரோ என்று கூட நான் நினைத்தது உண்டு. ஆனால் பழகப் பழக அவரது ஞானமும் அறிவும் வெறும் தகவல்திரட்டுகளால் நிறைந்தது அல்ல, அவர் முழுக்க முழுக்க வரலாற்றுப் பிரக்ஞையான மனிதர் என்பதை உணர்ந்து கொள்ள முடிந்தது. ஒருமுறை அவருடன் போய்க் கொண்டிருக்கின்றபோது அப்போதுதான் டிம் ஹோர்ட்டன்ஸ் அறிமுகம் செய்திருந்த Dark Roast என்ற வகைக் கோப்பி பற்றிய பேச்சுத்தொடங்கி இயல்பாக அது வெவ்வேறு விதமாக கோப்பிகளின் பெயர்க் காரணம், டிம் ஹோர்ட்டன்ஸின் கதை என்று தொடங்கி கனடாவில் இருந்த தற்போதும் இருக்கின்ற பல்வேறு கோப்பிக் கடைகளின் வரலாறு என்று மிக நீண்டதோர் பேச்சாக மாறியது. கருணா அண்ணையுடனான பேச்சுகள் ஒருபோதும் கொசுறுச் செய்திகளால் நிறைந்ததாக இராது, ஓர் ஆய்வாளருக்கு இருக்கக் கூடிய வரலாற்றுப்பார்வையுடனான பேச்சாகவே அவை அமையும். மேலே சொன்ன கோப்பிக் கடைகள் பற்றிய உரையாடலின் பின்னர், இவ்வளவு விடயங்களைத் தெரிந்து வைத்திருக்கின்றீர்களே என்று ஆச்சரியமாக இருக்கின்றது என்று சொன்னபோது ஒவ்வொரு நாளும் நாங்கள் பாவிக்கின்ற சின்னச் சின்னப்பொருட்கள் குறித்தும் நாங்கள் போய்வருகின்ற தெருக்கள், இடங்கள் குறித்தும் தேடத்தொடங்கினாலே நிறைய விடயங்கள் தெரியவந்துவிடும் என்று கூறிச் சில கணம் மௌனமாக இருந்து விட்டு, உங்கள மாதிரியாட்கள் அதைக் கட்டாயம் செய்யவேண்டும் என்று அழுத்தமாகச் சொன்னார். கலை, இலக்கிய, சமூகச் செயற்பாடுகளில் ஈடுபடும்போது வரலாற்று நோக்கும் மரபுரிமை பற்றிய புரிதலும் இருக்கவேண்டியதன் அவசியத்தினைப்பற்றி பகுபதம் அமைப்பில் நாம் உரையாடி பொது நிகழ்வுகளை மரபுரிமை இடங்களில் ஒருங்கிணைத்து அந்தச் சந்திப்புகளின்போது அந்த இடங்களின் வரலாற்றினைப்பற்றியும் உரையாடுவது என்ற முடிவுக்கு வந்திருந்தோம். எமது உள்ளக உரையாடல் ஒன்றினை Bellamy / Lawrence சந்திப்புக்கு அருகாமையில் உள்ள இரொக்குவா இனத்தவர்களின் நினைவுக்கல் உள்ள இடத்தில் ஒருங்கிணைத்திருந்தோம். இதுபற்றிக் கருணா அண்ணையிடம் கூறியபோது உற்சாகமடைந்து அது நல்லதோர் முயற்சி என்று பாராட்டியதுடன் ரொறன்றோவில் உள்ள அத்தகைய மரபுரிமை இடங்கள் குறித்தும் மிக நீண்டநேரம் உரையாடிக்கொண்டிருந்தார். மரபுரிமை, ஆவணப்படுத்தல் என்று அடிக்கடி நான் பேசியும் செயற்பட்டும் வருவதை அவர் பிரக்ஞைபூர்வமாகச் செய்பவராக இருந்திருக்கிறார்.

கருணா அண்ணையின் மரணத்துக்குப்பிறகு அவர் பற்றிய நினைவுகள் அந்தாதி போல ஒன்றன் தொடர்ச்சி மற்றொன்றாகத் தொடர்ந்துகொண்டே இருக்கின்றன. சில நேரங்களில் கருணா அண்ணை போன் பண்ணும்போது தூங்கப்போய் இருப்பேன், கருணா அண்ணை நான் தூங்கப் போய் விட்டேன் என்று சொன்னாலும் ஒருக்கா கொம்பியூட்டரை ஓன் பண்ணுங்கோ என்று சொல்வார், அதற்குப் பிறகு எனக்குச் சொல்வதற்காக எனக்குத் தேவையான பலவற்றை அவர் வைத்திருப்பார். பல சந்தர்ப்பங்களில் அது குறித்து எரிச்சலடைந்திருக்கின்றேன், இப்போது யோசித்துப் பார்க்கின்றபோது கருணா அண்ணையைப் புரிந்துகொள்ள நான் ஏன் ஒரு போதும் முயலவில்லை என்றே தோன்றுகின்றது.



arunmozhivarman@thaiveedu.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உறைந்த அருவி

சேரன்

பல்லாயிரம் ஆண்டுகளாகக் கோபத்தைத்
தேக்கி வைத்திருக்கும் விதைநிலத்தின் மீது
எஞ்சியிருக்கும் மரங்கள்
தமது துயரப் பாடல்களை ரகசியமாக மீட்டுகிறபோது
பனி விழுகிறது

மலர் சொரிவது போல
எலும்புகளை நொறுக்குவது போல
ஏவுகணைகளைப் போல
யாரையும் கேட்காமல்
யார்க்காகவும் இல்லாமல்
விழும் பனி. தூவிப்பனி.
காற்று அடித்துச் செல்லும் பனி
நேர் கோட்டில் செல்ல மறுக்கிறது

வாழ்க்கையை நேர்கோட்டில் வரைய முடியாது
என்பது வெறும் தத்துவம் அல்ல
அந்த முயற்சியில் தோற்றுப்போனவர்களின்
குரலின் திரட்சியாக
அவலப் பாடல்களைச் சாவீட்டில் பாடுகிறது சமூகம்.
அவையும் காற்றில் அழிவன.

ஆனால்
அந்தத் தோல்வியைக் கொண்டாடுகிறான் கலைஞன். கவிஞன்.
அவனுக்கு மற்றவர் சூட்டும் மணிமுடியில் எழுதி இருப்பவை:
குழப்பவாதி. விசரன். கலகம் செய்பவன்.
ஒற்றைப் போக்கன். பிச்சி.
மயிர் நீட்டி வாழ்வோன். மதுவன். அல்லது
மழித்தலைக் கொண்டாடும் மௌன மாற்றன்.

அந்தக் கலைஞனின் ஓவியத்துள் நானும்
என் கவிதையுள் அவனும்
கூடு விட்டுக் கூடு பாய்ந்த காலங்கள்
எப்போதுமே அகற்றப்பட முடியாத உறைபனிப் பாளங்கள்.

இந்த நகரத்தில்
இரவைக் காதலிப்பவர்களாக இருந்தோம்.
அலையும் பாணர்களாக இருந்தோம்.
எப்போதுமே வரைய முடியாத
ஒரு நேர்கோடு இருக்கிறது.
அதனை நமது வண்ணங்களும் வார்த்தைகளும்
கண்டடையட்டும்.



# தூரிகைகளுக்குக் கைகள் இல்லை

அஸ்மா பேகம்

நிறங்களின் அழகையை
ஆழம் நிறைந்த புன்னகையை
உன் தூரிகைகள் கரைத்திருக்கின்றன

அமைதியின் பரிமாணங்கள்
உணர்ச்சிகளோடு
இரவுகளையும் பகல்களையும்
ஒரு தூரிகையில்
குழைத்ததாக வேண்டும்

உன்னால் வரையப்பட்ட
வட்டங்களின் மொழிகள்
கோடுகளின் ஆசைகள்
புள்ளிகளின் அபிநயங்கள்
அரூபத்தின் மௌன வார்த்தைகள்
எல்லாமே
நிறங்களில் மூழ்கியிருக்கின்றன

இயற்கையும் நிழல்களும் புரட்டாத
பக்கங்களில்
நீ
தனிமையை வரைந்துகொண்டிருந்தாய்

ஒரு நீலப் பட்டாம்பூச்சியின் இறப்பாக
மௌனத்தின் தீராத நிலைப்பை
விட்டுச்செல்கின்றாய்

சுவரொட்டியிலும்
சொறன்ரோவிலும் உன்னுடைய கனவுகளை விற்பவர்
இனி யாருமிலர்

உனது பயணங்கள், உணவு மேசை
இசை, தூக்கம், நண்பர்கள்
எல்லா எதிரொலிகளையும்
வரலாறு திருப்பித் தருகிறது
அது ஒருநாளும்
ஓவியங்களைப் புதைப்பதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருணா: ஈடுபாடு - அர்ப்பணிப்பு - செயற்றிறன்




- கே. கிருஷ்ணராஜா -

மரணம் என்பது நிச்சயமானதுதான், ஆனாலும் அந்த மரணம் நாம் நேசிக்கும் ஒருவரைப் பற்றிக் கொள்ளும் போது நெஞ்சம் இடிந்து நிலை குலைந்துதான் போகிறோம். என் துயரங்களை வார்த்தைகளால் முழுமையாக வெளிப்படுத்த முடியாத நிலையில் இப்போதெல்லாம் அது அழுகையாகவே தொடர்கிறது.....என் அன்புக்குரிய நண்பனே! கருணாவே! என் உயிருள்ளவரை உன் நினைவு என்னுடன் தொடரும்.

90களின் ஆரம்ப நாட்களில் வெளிவந்த சிறுசஞ்சிகை ஒன்றில் பிரசுரமான ஓவியமொன்றின் அடியில், எனது குரு மாற்கு மாஸ்டரின் கையொப்பம்போல் கருணா என்றிருந்தது. இவரும் மாற்கு மாஸ்டரின் மாணவனாக இருப்பாரோ என்கிற தேடல் என்னுள் எழுந்தது. விசாரித்து அறிந்ததில் மாற்கு மாஸ்டரின் மாணவன் நீ என அறிந்த போது, உன்னைச்சந்திக்க ஆவல் கொண்டேன். கனடா வந்த சமயம் நான் உன்னைத்தேடி வந்தேன். உன்னைச் சந்தித்த அந்த நாள் இன்னும் என் நினைவில்.... முதல் சந்திப்பே முன்பின் தெரிந்திராத உனக்குள்ளும் எனக்குள்ளும் ஒரு வித பிடிமானத்தினை, நெருக்கத்தினை ஏற்படுத்தியதை இன்று வரை என்னால் மறக்க முடியவில்லை, உண்மையில் சொன்னால் இருவருக்கும் இடையே ஒரு காதல் இருந்தது. அந்தக் காதல் உன் மரணம் வரை தொடர்ந்தது.

வாழ்வின் பெரும்பாலான நேரத்தினைத் தனிமையில் கழித்தவன் கருணா. தனிமைதான் தனது சுமைகளை இறக்கி வைக்கத் தோதான இருள்வெளி என நம்பியவன் அவன். வாழ்வை அதன் வழியே அவன் அமைத்துக் கொண்டான். அந்த இருளை சற்று விலக்கிப் பார்க்க அவன் திறந்த சாளரங்கள்தான் அவனது கலை ஈடுபாடும் அறிவியல் தேடல்களும். இடைவிடாத கலை உழைப்பும் நாளாந்த அதீத களைப்பும் கருணாவின் உயிரைக் குடித்து விட்டது என்று சொல்வதுதான் மிகப் பொருத்தம்.

ஓவியன், ஒளிப்படக் கலைஞன், அரங்க ஒளி ஒலி அமைப்பாளன், நூல் வடிவமைப்பாளன், நவீன கணினித் தொழில் நுட்பத்தினையும், புகைப்படத் தொழில் நுட்ப நவீன மாற்றங்களையும் தமிழ்ச் சூழலுக்கு அறிமுகப்படுத்தியவன். நவீன தொழில் நுட்ப வளர்ச்சிகளை அந்தந்தக் கால கட்டத்திற்குள் தேடித்தேடிக் கற்று நமக்குள் கொண்டுவந்து சேர்த்தவன். அனைத்தையும் ஒரு பரிசோதனை முயற்சியாக மேற்கொள்வான். இசையை, நடனத்தை இரசிக்கத் தெரிந்தவன், நட்பு உறவுகள்



மீது ஆழ்ந்த அன்பை தரக் கூடியவன், நண்பர்களையும் சூழலையும் மகிழ்ச்சி ததும்ப வைத்திருப்பதில் மிக அக்கறை காட்டக்கூடியவன் என கருணாவைப் பற்றிச் சொல்லிக்கொண்டே போகலாம்.

எங்களின் சமூகத்தில் ஓவியக்கலை தொடர்பான ஈடுபாடும் இரசனையும் இல்லையே என்ற ஏக்கம் அவனுள் தொடர்ந்து வந்தது. இது அவனைப் பற்றித் தொடர்ந்து வந்த துயரங்களில் ஒன்று. இதுபற்றி அடிக்கடி கருணா என்னுடன் உரையாடுவான். "மேடை அரங்க ஒளி ஒலி, பின்னணி வர்ணக் கலவை, நாடக மாந்தர்களின் உடைகளுடன் ஒத்திசைய, தனது ஓவிய ஈடுபாடுதான் அடித்தளம்" என்பான். தனது அனைத்து கலை ஈடுபாட்டுக்குமான தொடக்கப் புள்ளி மாற்கு மாஸ்டரே என்பான். எனக்கும் அவர்தான் ஆசான் என்பதுதான் நமக்குள் இருந்த தனிப்பட்ட நேசத்திற்கு அடிப்படையான ஈடுபாடு என்பதை நான றிவேன்.

தன்னைப் புரிந்து கொள்ள, ஒரே கலைத் தளத்தில் வேலை செய்யும் உன்னால்தான் முடியும் என்று நீ அடிக்கடி சொல்வாய். நாம் மணித்தியாலக் கணக்காய் எவ்வளவு பேசி இருப்போம். அரங்கியல் விழாவில் உனது ஒலி, ஒளி நிர்வாகத்தைப் பார்த்து நான் அசந்துபோனேன். இவையெல்லாம் ஒருவகை ஆக்கப்படைப்புகள்தான். அதை ஈடுபாட்டோடும், அர்ப்பணிப்போடும் செயலாற்றுவதாலேதான் நேர்த்தியாகவும் நிறைவாகவும் இருந்தது. நான் அவனைப் பாராட்டியதை திரும்பத்திரும்ப என் வாயால் கேட்க ஆசைப்படுவான். அதை ஒரு கலையாகவே கருணா செய்தான், கனடா அரங்கியல் நாடக விழாஅரங்குகளும், நடன நிகழ்வுகளும் அதற்குச் சாட்சி.

எனது கனடாப் பயணம் எப்பொழுதும் மகிழ்வாவதும் ஆர்வம் தருவதும் அவனாலேதான். கருணாவுடன் குடிக்கலாம், கதைக்கலாம் பகிடிவிடலாம், பாடலாம், பயணம் செய்யலாம் என்பது எனக்குப் பெருத்த ஆர்வத்தினை தரக்கூடியது. அதனால் எனது இரண்டாவது புகலிட நாடு கனடா என்றானது.

இப்போ?

கருணா இல்லாத கனடாவை, இனி என்னால் எப்படி நினைத்துப் பார்க்க முடியும்?. உன் அன்பும் நேசமும் மிக்க நினைவுகள் எம்முடனேயே இருக்கும், நாமும் பயணிப்போம் மரணிக்கும்
வரை...



krishnarajah.k@thaiveedu.com

# கருணா: கரைந்துபோய்விட்ட நிழல் உரு

- மு. நித்தியானந்தன் -

ககனவெளியில் கரைந்துபோய்விட்ட நிழல் உரு.

காலநதியின் பேரோட்டத்தில் சின்னக்குமிழ்.

புள்ளி, கோடு, கோலம் எதுவும் இல்லை.

தொடக்கம், இறுதி, ஆதி, அனந்தம்: யார் கண்டது?

கருணா -
நீரில் கரையும் வண்ணமாய், அவன் எங்கள் நெஞ்சில் கலந்துவிட்டவன்.

இன்று எங்கள் சிந்தையில் அவன் ஒரு நினைவு. அரூப உரு.

இனிய இசை போன்ற அவன் சிரிப்பு-

மனசிலிருந்து எழும் அவன் பேச்சு, வான வெளியில் கண்ணுக்குத்தெரியாத சின்னப் பறவையின் சிறகசைப்பு போல.

கருணாவின் இறுதி வழியனுப்புதலில், அவனது உடலை மூடியிருந்த பெட்டியின் மீது ஓவியர் ராஜா கண்ணீருடன் ரோஜா மலரை வைத்து அஞ்சலி செய்தபோது, காணொளியில் அதைப்பார்த்துக்கொண்டிருந்த என் கண்களும் கலங்கின. ராஜாவின் பாக்கியம் அது.

முப்பத்தைந்தாயிரம் ஆண்டுகளுக்கு முன் குகைமனிதன் தீட்டிவைத்த மிருகங்களின் துல்லியக்கோடுகளில்-

ஜொகானீஸ் பேமியர் என்ற டச்சு ஓவியன் வரைந்த பால்காரியின் அழகை வார்த்திருக்கும் அழகில்.

பிரெஞ்சு சைத்திரீகன் வில்லியம் பூகுரு தீட்டிய பிஞ்சுக்குழந்தைகளின், காந்தர்வக்கன்னிகளின் ஒளி வீசும் ஓவியங்களில்.

லியனார்தோ டாவின்சி தீட்டிய 'இறுதி இரவு உணவு' விருந்தோவியத்தில் எளிமையையும் ஏசுவையும் மையப்படுத்தும் மாந்திரீகத்தில்.

சிந்தை இழந்து போன ஓவிய ரசிகன் இவன்.

'தாய்வீடு' இதழ்களில் இவன் எழுதிய ஓவியக்குறிப்புகள், நம் மண்ணில் எழுந்த ஓவிய விமர்சகனின் ரசனைத்தெறிப்புகள்!

கனடாவின் கலை இலக்கிய விகசிப்புகளில் எல்லாம் அவன் முகம் தெரிந்தது.

தான் எடுத்துக்கொண்டுவிட்ட ஓவியம் சார்ந்த வேலைப்பாடெனில், ராஜாவைப் போல இரவுக்கும் பகலுக்கும் பேதம் தெரியாமல் உழைப்பைச்சிந்திய கலைஞன்.

நாங்கள் கனடா வந்திருந்தபோது, என் பிஞ்சுக்குழந்தைகளை நயாகரா நீர்வீழ்ச்சியில், சி.என்.கோபுரத்தில் கருணா எடுத்துத்தள்ளிய நிழற்படங்களை, இப்போது திரும்பிப்பார்க்கையில் கண்களில் நீர் மல்குகிறது.

என்ன நேசம் இது?

ஒரு சௌகரியத்தைத் தரும் அவனது இருப்பு.

வாழ்க்கையை ரசிப்பவன் நண்பர்களுக்கு நெஞ்சில் சிம்மாசனம் தருபவன். இன ஒற்றுமைக்காக ஓசை இல்லாமல் வேலை பார்த்தவன். ஓவியனாகவே - கலைஞனாகவே வாழ்ந்து முடித்தவன். மாமனிதனாக உயர்ந்தவன்.

கருணாவோடு பழகக் கிடைத்த தருணங்கள், நாட்கள் விரல்விட்டு எண்ணி விடக்கூடியவைதான். அதனாலென்ன?

என் நெஞ்சமெல்லாம் வியாபித்து - நினைவு ஓடையில் புன்னகைத்து நிற்கிறானே, இதற்குப்பெயர் என்ன?



nithiyananthan.m@thaiveedu.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்ன அவசரம் மச்சான்?



**- கந்தசாமி கங்காதரன் -**

இயூஜின் கருணாகரன் என் பள்ளித்தோழன். கரவெட்டி - திரு இருதயக் கல்லூரியின் தொடக்க நிலைப்பள்ளியான R.C (Roman Catholic) பள்ளிக்கூடத்தில் முதலாம் வகுப்பில் அறிமுகமானான் கருணா. அவனுடைய அன்னை ரெஜினா ரீச்சர் தான் எங்கள் ஆசிரியை. 3 மாதத்திலேயே தந்தையின் பணி நிமித்தம் பலாலியில் வாழ்ந்து தெல்லிப்பளை - யூனியன் கல்லூரியில் படித்துவிட்டு 4 ஆண்டு கழித்து மீண்டும் வந்து சேர்ந்தால், இலகுவில் அடையாளம் கண்டு கொண்ட முகங்கள் சிலவே. அவற்றுள் கருணாவின் முகமும் ஒன்று. இரண்டு தவணைகள் அங்கு. தொடர்ந்து 6ம் வகுப்புக்கு ஹாட்லிக் கல்லூரி போனோம். வெவ்வேறு பிரிவுகளில் இருந்தாலும் தனியார் கல்வி நிலையங்கள் Modern இலும் சயன்ஸ் சென்ரறிலும் ஒரே பிரிவிலேயே இருந்தோம். எல்லோரும் ஹாட்லியில் செல்வகுமார் - மதியழகனின் சித்திரக் கதைக்குக் கருணா படம் வரைந்ததை நினைவு கூருகின்றனர். கருணாவிடம் நான் இரசிக்கும் இன்னொரு விடயமும் அப்போதே இருந்தது. மைப்பேனாவால் எழுதும் கருணாவின் எழுத்துகள் ஒன்றையொன்று அளவில் மிஞ்சுவதில்லை. மிகவும் அழகான உறுப்பெழுத்து என்பதற்கு உதாரணம் அவன் எழுத்து.

நெல்லியடி - இலக்சுமி திரையரங்கில் 1981 மட்டில் Charlie Chaplin Film Festival ஒன்று நடந்தது. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு படம். கருணா தந்தையார் வின்சென்ற் மாஸ்ரருடன் வந்திருந்தான். நான் ஓர் உறவினனுடன். ஒரு படம் மட்டுமே பார்த்தேன். கருணா சில படங்களைப் பார்த்திருப்பான். பள்ளிக்கூடத்தில் கதைப் புத்தகங்களைக் கொண்டு வந்து பரிமாற்றம் செய்வதில் கருணாவும் ஒருவன். பல தடவைகள் கருணாவோடு நானும் கதைப்புத்தகங்கள் பரிமாற்றம் செய்திருக்கிறேன். வாசிப்புப் போலவே திரைப்படங்களும் எங்கள் இருவருக்கும் பொதுவான ஈடுபாடாக இருந்தது. Airport '75, Airport '77, கொட்டி வலிகய (சிங்களம்) என்று நானும் கருணாவும் இன்னும் சில நண்பர்களும் இலக்சுமியில் பார்த்த படங்கள் பல. கனடாவிலும் பல நல்ல திரைப்படங்களை நான் பார்த்தமைக்கும் சிலவற்றுக்கு விமர்சனம் எழுதியமைக்கும் கூடக் கருணாவே காரணன்.

ஈழத்தமிழர்களுக்கு விதிக்கப்பட்ட அலைந்துழல்வில் அகப்பட்டு கருணா 1991 இலும் நான் நாடுகாண் பயணங்கள் மேற்கொண்டு 2004 இலும் கனடா வந்து சேர்ந்தோம். எங்கள் நட்பும் தொடர்ந்தது. அவனது டொன்மில்ஸ் அலுவலகத்தில் இரவு ஒரு மணி தாண்டியும் இருந்து கலை, திரை, ஓவியம், இசை பலதையும் அசைபோட்டு வீடு வருவோம்.

நான் கனடியத் தமிழ் வானொலியில் பணியாற்றத் தொடங்கியதில் பெருமகிழ்வடைந்த அவன், என் நிகழ்ச்சிகளைத் தவறாது கேட்டு நேருக்கு நேர் எவ்வி



தமான தயவு தாட்சண்யமுமின்றிக் குறை நிறைகளைச் சொல்லுவான்.

'திருப்பிறப்பன்று ஒலிபரப்ப ஏதாவது பாடல் வேண்டும் மச்சான்' என்றால் 20 - 25 நிமிடத்துக்குள்ளாக சில பாடல்கள் என் மின்னஞ்சலில் இருக்கும். மேலும் உதவியாயிருக்கக் கூடிய பல இணையத்தள இணைப்புகளும்.

ஒரு தடவை தமிழகத்து Super Singer Junior இறுதிச் சுற்றில் பங்கேற்ற இளம் பாடகர்கள் ஐவர் திடீரென வந்திறங்க, CMR வானொலியில் ஒரு திடீர் நேர்காணல். முடித்த கையோடு 'Excellent interview Machan, This is professionalism' என்றொரு குறுஞ்செய்தி அவனிடமிருந்து. அதன் பிறகு சில நாள்கள் பலருக்கும் அந்த நேர்காணலைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தான்.

தாய்வீட்டில் நான் எழுதும் கட்டுரைகளுக்கும் ஓர் அக்கறை மிகுந்த ஆலோசகனாயும், கட்டுரை வெளியான பின் கண்டிப்பான விமர்சகனாயும் இருந்தான்.

A Gun & A Ring படத்தின் இயக்குநர் லெனின், படம் வெளிவரமுன்பே அவனுக்குக் காட்டியிருந்தார். பின்னர் என்னைச் சந்தித்தபோது எழுந்துநின்று கைதட்டி அருகே இருந்த நண்பர்களுக்கும் விபரத்தைச் சொல்லி என்னைத் தழுவி என் நடிப்பைப் பாராட்டிய இனிய தோழன் அவன். கருணா பாராட்டிய பின்னர்தான், 'ஓ! நடித்திருக்கிறேன்' என்ற நம்பிக்கை எனக்குள் வந்தது.

இளையோரோ பெரியவர்களோ யாராயினும் உரிய இடத்தில் பாராட்டி அவர்களை ஊக்குவிப்பதில் அவன் வள்ளல்.

முகத்துக்காகப் புகழ்வதோ வேண்டுமென்றே இகழ்வதோ அவனிடம் இருந்ததில்லை.

அவனுக்கு இருந்த பெரும் ஆதங்கம், தமிழர் வீடுகளில் தமிழர் வாழ்வையும் வரலாற்றையும் பண்பாட்டையும் வெளிப்படுத்தும் ஓவியங்கள், கலைப் படைப்புகள் இருக்கவேண்டும் என்பதே. தன் ஓவியங்கள் தான் இருக்கவேண்டுமென்றும் அவன் ஆசைப்பட்டதில்லை. 'யாரோ பெயர் தெரியாத ஓவியர் எதையோ வரைந்து வைத்திருக்க. அது என்னவென்றே தெரியாமல் வாங்கிக் கொண்டு வந்து வீட்டில் தொங்கவிடுவதில் என்ன பெருமை?' என்பான்.

என் பிறந்த நாளைத் தன் பிறந்தநாள் போலப் பார்த்துப் பார்த்துச் செய்து என்னை வியப்பிலும் மகிழ்விலும் ஆழ்த்திய என் 44 ஆண்டுகால நண்பன் சடுதியாக எல்லோரையும் தாங்கொணாத் துயரில் ஆழ்த்தி விட்டுப் போய்விட்டான்.

*நல்ல நண்பன் வேண்டும் என்று அந்த மரணமும் நினைக்கிறதா?*

நா. முத்துக்குமார் எழுதிய இந்த 'நண்பன்' படப் பாடல் வரிகளைச் சில ஆண்டுகளுக்கு முன் கேட்டபோது அதன் ஆழமும் வீரியமும் விளங்கவில்லை. ஆனால், அண்மையில் கருணாவுக்காக இந்த வரிகளைச் செல்வகுமார் நினைவூட்டிய போதுதான் அதன் ஆழமும் வீரியமும் புரிந்து சொல்லில் வடிக்கமுடியா மனவேதனையையும் வெறுமையையும் உணர்கிறேன்.

நித்திய இளைப்பாற்றினை அடைவாய் நண்பா!



gangatharan.k@thaiveedu.com

# எமது நினைவில் டிஜி கருணா

கருணாவினதும் 'விளம்பரம்' பத்திரிகை மற்றும் 'உலகத் தமிழோசையினதும் 20 ஆண்டுகளுக்கும் மேலான தொடர்பு இன்று நிழலாக மாறியது. கனவா நினைவா என்று கூடத் தெரியவில்லை. அவ்வாறான ஓர் அதிர்ச்சி. விளம்பரம் பத்திரிகையின் பாதையில் ஏறக்குறைய 30 வருட தொடர்ச்சியில் எழுத்தாளர், கவிஞர், ஓவியர், தொழில்நுட்ப உதவியாளர், எழுத்து வடிவமைப்பாளர் எனப் பலரை காலத்துடன் தவற விட்டு வருகிறோம். இதன் தொடர்ச்சியாக டிஜி கருணா என அழைக்கப்படும் Eugine Karunaharan Vincent என்ற மற்றுமொரு நண்பனை இன்று இழந்துவிட்டோம். பல வகையிலும் பல்வேறு தளங்களிலும் சிறந்த ஆளுமை கொண்ட கருணாவின் மறைவு தமிழ் உலகின் முக்கியமாகத் தமிழர் உலகில் பெரும் இழப்பாகக் கருதுகிறோம். இவரின் இழப்பை நிரப்புவது என்பது இலகுவாகாது என்பதே எமது எண்ணம்.

2002 இலிருந்த 2005 வரை உலகத் தமிழோசை என்ற கனடிய தமிழ் சஞ்சிகையின் வடிவமைப்பு, எழுத்தமைப்பு, உருவமைப்பு, கலை அமைப்பு, புகைப்படம், தொழில்நுட்பம் யாவற்றிற்கும் பொறுப்பாக இருந்தவர் இவரே. இதுவரை கனடாவில் மட்டுமல்ல வட அமெரிக்காவிலே தமிழில் வெளிவந்த சிறந்த சஞ்சிகையாகத் தமிழ் இலக்கிய உலகில் மதிக்கப்படுவது இச்சஞ்சிகையே. இதற்குரிய அளப்பரிய பெருமை கருணாவையே சேரும். கனடிய இலக்கியத்தமிழ் உலகம் இருக்கும் வரை இவர் நினைவு கூரப்படுவர் என்பதில் இருவேறு கருத்துக்கள் இருக்க முடியாது.

விளம்பரம் பத்திரிகையின் விளம்பரம் 'Logo' வை காலத்திற்குக் காலம் சிறப்பாக மிக அழகாக வடிவமைத்துத் தந்தவரும் இவரே. விளம்பரம் தலைப்பின் அடையாளம் இவரை என்றும் நினைவூட்டும். எம்முடன் ஆரம்பத்தில் தொழில் புரிந்த பலரிற்குத் தொழில்நுட்ப அறிவை வழங்கிய ஆசானும் கருணாவே. விளம்பரம் பத்திரிகையின் 25வது ஆண்டு சிறப்பு நூலான 'அடுத்த காலடி' இன் அட்டையை வடிவமைத்த வரும் கருணாவே. அத்துடன் மே 24 2015 அன்று எமது 25வது ஆண்டு நிகழ்வை அவருடைய நண்பருடன் இணைந்து புகைப்படம் எடுத்துதவியரும் இவரே.

வருடா வருடம் விளம்பரம் பத்திரிகையின் ஒன்றுகூடலில் சமூகமளித்து எல்லோரையும் மகிழ்ச்சிப்படுத்தி தானும் மகிழ்ச்சியாக இருந்து வந்தார். தவிர்க்க முடியாத சில காரணங்களால் இவ்வருடம் (2019 ஜனவரி 05) நடைபெற்ற சந்திப்பில் மட்டும் அவரால் எம்முடன் இணைந்து கொள்ள முடியாமல் போயிற்று. இயற்கையின் நியதியோ தெரியவில்லை. இவரின் வருகையின் தொடர்ச்சி இவ்வருடத்துடன் நிலையாகவே நிறுத்தப்பட்டு விட்டது.

அவரது நினைவுகள் விளம்பரம் பத்திரிகையுடனும் எங்களுடனும் என்றும் தொடரும். இதுவே இயற்கை எமக்குத் தரும் பாடம்.

அவரின் ஆத்மா அமைதியடையட்டும்.



**- ராஜா மகேந்திரன் -**
விளம்பரம் பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அழுத விழி காயவில்லை அழுத மொழி கேட்கவில்லை

‘வாழ்க்கையின் ஒரு பகுதிதான் மரணம்... மரணத்தின் ஒரு பகுதிதான் வாழ்க்கை’ இதை கூட்டங்களில் இலகுவாகப் பேசி விட்டு வரலாம். ஆனால் அது முகத்துக்கு நேரே முட்டும்போது தடுமாறிச்சரிகின்றோம்.

நண்பன் கருணாவைப் பற்றி எழுதித் தாருங்கள் என்று ‘தாய்வீடு’ கேட்கின்ற போது எனக்கு எதை எழுதுவது என்று தெரியவில்லை. கருணாவோடு சேர்ந்து வேலை செய்த கூத்தொன்றில் எங்கள் கலைஞர்கள் பாடிய ‘அழுத விழி’ பாட்டுத்தான் ஞாபகத்திற்கு வருகின்றது. என் இலக்கியப் பாதையில் மாத்திரமல்ல, குடும்ப உறவிலும் ஒரு ‘தம்பி’ போல் இருந்தான் கருணா. என்னுடைய பெண் மக்கள் இன்னும் அழுது முடியவில்லை. இப்பிரிவுத்துயர் அள்ள அள்ளக் குறையாத பனி போல் குவிந்து கொண்டிருக்கின்றது.

நானும் எழுதி ஏதாவது தாய்வீட்டில் வர வேண்டும் என்ற என் நண்பர்களில் விருப்பத்திற்காகச் சின்னச்சின்னக் குறிப்பாகச் சிலவற்றை நினைவு கூருகின்றேன்.

எப்போது எங்கே முதலில் கருணாவைக் கண்டேன் என்ற ஞாபகம் சரியாக இல்லை. ‘எஞ்சியிருப்பவை கரித்துண்டுகளாயினும் எழுதியே முடிப்போம்’ என்று செழியன் சொல்லச் சொல்ல கருணா எழுதிக் கொடுத்த அந்த இரவாய் இருக்கலாம்.

அதன்பின் ஒருதடவை அவனைத் தனிப்பட சந்திக்க வேண்டியதொரு தேவை ஏற்பட்டது. அடிகளார் மரியசேவியரின் ‘கலை முகம்’ கனடாச் சிறப்பிதழை நான்தான் செய்ய வேண்டும் என்று கேட்டபோது நண்பர் குமரனிடம் கருணாவின் தொலைபேசி இலக்கத்தை வாங்கி, அவனுடன் பேசிவிட்டு, அவன் இருந்த வீட்டுக்குச் சென்றேன்.

அன்று தொடங்கிய நட்பு அவன் இல்லாமல் போகும்வரை இரண்டொரு வருடங்களைத் தவிர்த்து தொடர்ந்து ஒவ்வொரு நாளும் தொலைபேசியில் பேசுவோம். இரண்டு மூன்று நாள்கள் நேரில் சந்திக்காவிட்டால் பெரும் அலுப்புக்கொடுப்பான்.

ரிம் ஹோட்டனில் சந்தித்துவிட்டு, வீட்டுக்கு வந்தபின், இரவு படுக்கமுன் திரும்பவும் தொலைபேசியில் அழைப்பான் கருணா.

‘கருணா எடுக்கிறார் போல... இப்பதானே கோப்பிக்கடையில் அவரோடை இருந்து திட்டு வந்த நீங்கள்..கதையள் முடியேல்லைப் போல...’ என மனைவி பேசிப்பேசிச் சிரிப்பார்.

அவனைச் சந்திக்கத் தொடங்கிய அந்த நாட்களில், அவன் பேச்சுகளில் ஓவியர் மாற்கு அடிக்கடி வருவார். ஒரு நாள் நான் கேட்டேன் ‘நாங்கள் எல்லாம் அவரை அறியத் தவறிவிட்டோம் அவர் பற்றி ‘காலம்’ ஒரு சிறப்பிதழ் செய்தால் என்ன?” கருணா மிகச் சந்தோசமானான். அவனே எல்லா பொறுப்புக்களையும் ஏற்றுக்கொள்ள, இலக்கிய உலகம் பாராட்டும் வண்ணம் ‘காலம் - 13’ வெளிவந்தது. அதற்குரிய செலவை நான் தருவதாகச் சொன்னபோது கருணா மனம் வருந்தினான். எனக்கு அப்போ மணித்தியாலத்திற்கு 6 டொலர் சம்பளம். என் தலைக்கு மிஞ்சிய வேலைதான். ‘அண்ணை உங்களை கஸ்ரப்படுத்திப் போட்டேன்’ என்றான். ‘இல்லை கருணா இவ்விதழ் எனக்கொரு மைல்கல். உன்னால் தான் இப்படி அழகாக வந்தது” என்றேன். அடுத்த இதழ் சுந்தர ராம சுவாமி சிறப்பிதழ். மிகுந்த ஈடுபாட்டுடன் அழகாகச் செய்து தந்தான்.

அவனுக்கான நன்றிக்கடனாக, என் புத்தகக் கண்காட்சியின் போது அவனுடைய சில ஓவியங்களையும் காட்சிப்படுத்தினேன். விரல்விட்டு எண்ணக்கூடியவர்களே வந்து பார்வையிட்டார்கள். அண்டைக்குத்தான் ஒரு நண்பர் பகிடிவிட்டார். ‘இண்டைக்கு மாவீரர் நாள். அதனால சனம் இரண்டாய்ப் பிரிஞ்சு போச்சு.. அல்லாட்டில் சனத்தை அடக்கேலாமல் போயிருக்கும்” எண்டார். இதை நீண்ட நாட்களாய்ச் சொல்லிச் சிரித்துக் கொண்டிருந்தோம்.




தாயகம் பத்திரிகையில் அவ்வப்போது எழுதியது, விளம்பரம் பத்திரிகையில் சில குறிப்புகள் எழுதியதைத் தவிர்த்துப்பார்த்தால் நான் இங்கு பெரிய எழுத்தாளன் அல்லன். தாய்வீடு பத்திரிகை தொடங்கப்பட்டு, கருணாவும் அதில் ஓராளாகி, சில காலத்திற்குப் பின்னர், ‘பாரிசில நடந்த கதைகள் கனக்க எனக்குச் சொல்லியிருக்கிறியள். அதை எழுதுங்கோவன்” என கருணா அடிக்கடி வற்புறுத்துவான். நான், ஓம்...ஓம்...என்று சொல்லித்தவிர்த்து வந்தேன். ஒவ்வொரு நாளும் சந்திச்சு பேசுகிற நண்பன் கருணா. அவனிடமிருந்து கன காலத்துக்குத் தப்பியிருக்க முடியவில்லை. குடைச்சல் தாங்க முடியாமல், ‘ஒரு கல்யாணமும் ஒரு வீடியோவும்’ என்ற தலைப்பில் ஒரு சம்பவத்தை எழுதிக்கொடுத்தேன்.

கருணாவுக்கு அது பிடித்துக் கொண்டது. அதைக் காட்டிக் கொள்ளாமல் “வீடியோ குழப்பிய கல்யாணம்’ என்ற தலைப்பில் அதை இன்னும் நல்லா எழுதித் தாங்கோ” என்றான்.

தொடர்ந்து நான் 25 அத்தியாயங்கள் எழுதினேன். அவ்வளவையும் என்னிடமிருந்து வாங்குவதற்கு கருணா தந்த அலுப்பு சொல்லி மாளாது. இதனால் என்னோடு கோபித்தும் இருக்கிறான். டிலிப்குமாரும் கருணாவும் படம் வரைந்த ஓவியர்களும் இல்லாவிட்டால் ‘எழுதித்தீராப் பக்கங்கள்’ என்ற அனுபவக்குறிப்பு ஒரு நூலாக வெளிவந்திருக்காது. ஐம்பதுக்கு மேற்பட்ட விமர்சனங்களும் பாராட்டுகளும் கிடைத்திருக்காது.

**- செல்வம் அருளானந்தம் -**

தாய்வீடு அரங்கியல் விழா தொடங்கிய போது டிலிப்குமாருக்கு எமது மரபுக்கலையான கூத்தைத் தொடர்ந்து அரங்கேற்ற வேண்டும் எனத் தீரா ஆசை. கூத்துக்காரரை இணைக்கும் பொறுப்பு என்மீது சுமத்தப்பட்டது.

கருணாவும் எம்மோடு ஒரு கூத்துக்காரனாய் இணைவான் என நான் மட்டுமல்ல, யாரும் நினைத்திருக்கவில்லை. நடைபெற்ற நான்கு கூத்திலும் கருணா ஏற்றிருந்த பாத்திரம் மிகப்பெரியது. ஒளியாலும் ஒலியாலும் ஒளிப்படக் காட்சிகளாலும் நவீன அரங்கியல் நுட்பங்களோடு கூத்தைப் பிணைத்து, கூத்துக்கலையை மற்றுமொரு தளத்துக்கு நகர்த்தியவன் கருணா.

இவைகள் பற்றித்தொடர்ந்து எழுத வேண்டும். ஆனால் இப்போது எழுதுகின்ற மன நிலை என்னிடம் இல்லை.

கருணாவிடம் உள்ள தனிப்பெருஞ் சிறப்பு புறம் பேசத்தெரியாமை. விடுப்புப் பிடுங்கும் வல்லாண்மை மிக்க எவராலும் கருணாவிடமிருந்து எந்த விடுப்பையும் பிடுங்க முடியாது. எம்மைப் பற்றிப் பிறரிடமும் பிறரைப் பற்றி எம்மிடமும் குறையறிவித்துப் பேசியதில்லை.

என்னைப் பகைவனாக் கருதும் பலரிடமும் கருணாவுக்கு நட்பு உண்டு. அவர்கள் என் மீதான ஆசுகவிதைகளை கருணாவைக் காணும்போது அள்ளி வீசியிருப்பார்கள். ஆனால் கருணா ஒருபோதும் அவற்றை எனக்குக் கூறியதில்லை.

‘முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்.. மூர்த்தி அவன் இருக்கும் வண்ணம் கேட்டாள்...’

என்பதைப் போல, கருணா எந்த ஊர் என்று அறியவே 3 ஆண்டுகள் சென்றன.

‘பேய் கருணா..... நீ எங்களை ஏமாத்திப் போட்டாய்..வாழ்க்கையென்ற ஓடிக் கொண்டிருக்கும் பஸ்சிலையிருந்து திடீரென்று எங்கடா பாய்ஞ்சு போனாய்..?”

நான் கண்ட நாள்முதலாய் நண்பர்களால் சூழப்பட்டு வாழ்க்கையை கொண்டாடிக் கொண்டிருப்பாய். படுக்கையைத் தவிர, நீ தனியே இருந்ததில்லை.

அந்த வெள்ளிக்கிழமை சபிக்கப்பட வேண்டும். யேசுவை காட்டிக் கொடுத்த அந்தக் கள்ள வியாழனில் நீ வாழ்வைப் பிரிந்திருக்கலாம்.

நான் கார் ஓடிக்கொண்டிருந்தபோது நண்பர் விவேகானந்தனின் ‘கருணா போயிட்டான்” என்ற குரல் கேட்டு நின்றேன்.. நின்றேன்..நெடும்மரம்போல நின்றேன். இன்று வரை அந்தக்குரல் மாத்திரமே ஒலிக்கிறது. அவன் மீண்டுமொரு தடவை எனக்கு தொலைபேசி எடுக்க மாட்டானா? என்னோடு பேசமாட்டானா? என ஏங்குகின்றது மனம்.

இலக்கியத்தில் பிரியமுள்ளவன் கருணா. என்னளவில் கருணா ஒரு முக்கிய இலக்கிய ஆளுமை என்று சொல்வேன். ஓவியம், புகைப்படம் எடுத்தல், ஒளி - ஒலி வடிவமைப்பு, வரைகலை, கணினி பற்றிய பேரறிவு... இவற்றெல்லாவற்றையும் விட கருணா பெரிய வாசகன். வாசித்தவைகளை உள்வாங்கிக் கொண்டு, வாய்ப்பு ஏற்படும் போதெல்லாம் அவற்றை வெளிப்படுத்தும் ஆற்றல் மிக்கவன்.

அவன் வரைகலையை ஒரு தொழில் நிறுவனமாகத் தொடங்கிய போது, ஆக்கங்களைத் தட்டச்சுசெய்தல் வேறு, பக்க வடிவமைப்பு வேறு, நூலை அச்சிடுவது வேறு என்பதைப் பெரும்பாலான தமிழர்கள் அறிந்திருக்கவில்லை.

இத்துறைகளில் வல்லாண்மை மிக்கவனாக இருந்த கருணா இந்தச்சமூகத்துக்குள்தான் இயங்கினான். குறிப்பிட்ட ஒரு வட்டத்தைத் தவிர, கருணாவின் ஆற்றல்களை எங்கள் சமூகம் முழுமையாகப் பயன்படுத்தத்தவறியிருக்கின்றது

கூர்மதியும் நுண்ணுணர்வும் நல்நோக்கும் கொண்ட பெரும் கலைஞனைச் சமூகம் இழந்திருக்கின்றது. ஆத்மார்த்தமான நண்பனை நான் இழந்திருக்கின்றேன். தன் ஆருயிர் நண்பன் பாரியைப்பார்த்து பெருங்கவி கபிலர், ‘நீரிலும் இனியவனே’ என்பார். கருணாவையும் அப்படியே அழைக்கத் தோன்றுகின்றது.

எழுதி முடிக்க முடியாத பெருங்கதை இவன். சொல்லுக்குள் சுருக்க முடியாத வெள்ளத்தனையன். காலம் வழி வகுத்தால் பின்பொரு பொழுதில் இவனோடான அனுவங்களைத் தொகுக்கலாம்.

மாணிக்கவாசகரின் திருவாசகம் ஒன்றை எழுதி இக்கட்டுரையை முடிக்கின்றேன்.

*நோக்கரிய நோக்கே*
*நுணுக்கரிய நுண் உணர்வே*
*போக்கும் வரவும்*
*புணர்வும் இலாப் புண்ணியனே*
*காக்கும் என் காவலனே*
*காண்பரிய பேரொளியே*
*ஆற்றின்ப வெள்ளமே*
*அத்தா மிக்காய் நின்ற*
*தோற்றச் சுடர் ஒளியாய்ச்*
*சொல்லாத நுண் உணர்வாய்*



*selvam.a@thaiveedu.com*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கருணா வின்சென்ற்: காண்பியக் கலையின் ஆழம்

- பேராசிரியர் அ. ராமசாமி -

எனக்கு நண்பர்களின் எண்ணிக்கை குறைவு.

உறவுகள், சொந்த ஊர், உடன் பயின்றோர், பணியிடம் என்ற வகைப்பாட்டின் அடிப்படையில் என்னைத் தொடர்ந்துவரும் நட்புகள் குறைவு. நான் தொடர்பு கொண்டிருக்கும் நண்பர்களின் எண்ணிக்கை அதிகம் இல்லையென்றே கூடச் சொல்லி விடலாம்.

அதே நேரத்தில் நான் இயங்கும் கலை இலக்கியம் சார்ந்த நட்புகளின் எண்ணிக்கை கணிசமானது. தொடர்ச்சியாக அவர்களின் பிரதிகளை வாசிப்பதின் வழியாகவும் அவை குறித்துப் பேசுவதின் வழியாகவும் அவர்களின் நட்பைத்தொடர்ந்து கொண்டிருக்கிறேன். கவிதை வாசிப்பு சார்ந்து எனது நீண்ட நாள் நட்பு கவி சேரன். என் வயதொத்த கவி சேரனின் கவிதைகளைத் தொடர்ச்சியாக வாசித்து வருபவன். அவர் வழியாக அறிமுகமாகி தனது காமிராவின் வழியாகவும் ஓவியங்கள் வழியாகவும் எனக்குள் நண்பராகி விட்டவர் கருணா வின்சென்ற்.

ஒரு மாத இடைவெளியில் இருவரும் கனடாவின் ரொறன்ரோவில் சந்தித்துக்கொண்டோம். அந்தச் சந்திப்பு உருவாக்கித் தந்த புரிதல் திரும்பவும் கனடாவிற்குச் செல்ல வேண்டும், கருணாவின் ஓவியங்களையும் படங்களையும் குறித்து அவரோடு தனியாகவும் பார்வையாளர்கள் முன்னாலும் பேசிக் களிக்கவேண்டும் என்ற எண்ணத்தைத் தந்துகொண்டே இருக்கிறது.

இன்னொரு தடவை நான் கனடாவிற்குப் போகக்கூடும். கருணாவின் காட்சி உருவாக்கங்களான ஓவியங்கள் குறித்தும் படங்கள் குறித்தும் பார்வையாளர்கள் முன்னால் பேசிவிட முடியும். ஆனால் தனியாக அவரோடு தனியாக ஒரு மதுக் கூடத்தில் அல்லது பெருஞ்சாலையின் மரத்தடியில் நின்று விவாதிக்கமுடியாது. அவரைக் கட்டித் தழுவிக் கொண்டு ஒரு படம் பிடித்துக்கொள்ள முடியாது. கனடா போனபோது இந்த அனுபவங்களை எனக்குத் தந்த கருணா இப்போது இல்லை என்பதை நினைக்கும்போது அவரோடு ரொறன்ரோ நகரில் சுற்றித்திரிந்த சில நாட்கள் நினைவில் ஓடிக்கொண்டே இருக்கின்றன.

கனடா என்னும் தேசத்திற்குச் செல்ல வேண்டும் என்ற நினைப்பைத் திருப்பத் திருப்ப உண்டாக்கியவர் கவி சேரனே. நான் போலந்தில் இருந்த 2011- 2013 காலத்தில் அங்கிருந்து கனடா செல்லும் முயற்சிகள், விசா வாங்கும் சிக்கல்கள் காரணமாக சாத்தியப்படவில்லை. தொடர்ச்சியான அழைப்பு காரணமாக 2016 மே மாதம் அது சாத்தியமானது. அங்கிருக்கும் யோர்க் பல்கலையில் ஈழ நாவல்கள் குறித்து விரிவான கட்டுரையொன்றை வாசிக்கும்பொருட்டு என்பதாகப் பயணத் திட்டத்தை ஏற்படுத்திக்கொண்டு கனடாவிற்கும் அங்கிருந்து அமெரிக்காவில் பாஸ்டன் நகரில் வசிக்கும் மகனிடமும் போவது என்பதாகத் திட்டமிட்டுப் போயிருந்தபோதுதான் கருணாவைச் சந்தித்தேன்.

அரைமணி நேரம் தாமதமாகவே கருத்தரங்கம் நடக்கும் அரங்கில் நுழைய நேர்ந்தது. தாமதமாக வரும் என்னைக் கை பிடித்து அழைத்துப் போன முதல் கரம் கருணாவின் கரம். சேரன் அவரிடம் சொல்லியிருப்பதாகச் சொல்லி என்னை அருகழைத்து உட்காரவைத்துக் கொண்டார். அதுவரை அவர் பெயர்கூட எனக்குத் தெரியாது. அந்த முதல் பயணத்தில் அவர் எடுத்துத் தந்த படங்கள் மட்டுமே என்னிடம் இருந்தன. அவர் முகமும் பதிந்திருந்தது. ஆனால் ஒரு மாத இடைவெளியில் திரும்பவும் போனபோது கருணாவின் காமிராவும் நட்பும் பேச்சும் கண்களின் சாத்தியங்களைப் பற்றிய அவரது பார்வையும் அப்படியே என்னிடம் ஒட்டிக்கொண்டது.

கலைகளைப் பற்றிய பேச்சுகளில் ஓவியத்தையும் சிற்பத்தையும் நுண்கலை என்ற



வகைப்பாட்டில் வைத்துப் பேசுவதையே கேட்டிருக்கிறேன். அப்படிப் பேசுபவர்கள் நுண்கலைப் பொருட்களை ஒரு விரிவான தளத்திற்கு அறிமுகப்படுத்தும்போது 'காண்பியக்கலை' என்ற விரித்துப் பேசுவதை விரும்புகிறார்கள். ஒரு புகைப்படம் அல்லது நிழற்படம் அதன் தயாரிப்பு சார்ந்து எப்போதும் ஒரு தொழிலாகவே இருக்கிறது, இருந்தது என்பது எண்ணமாக இருந்தது. அந்த எண்ணத்தை எப்போதாவது ஓரிருவர் அசைத்துப்பார்ப்பார்கள். அப்படி அசைத்துப் பார்த்ததின் பின்னணியில் இருந்தது என்ன என்று நினைத்துப் பார்த்தால், அவர்கள் தேடிப்பிடித்துக்காட்டிய பொருளாக அல்லது இயற்கைக் காட்சியாக, அல்லது அலையும் கூந்தலோடு சிரிப்பை மறைக்க முயலும் ஒரு பெண்ணாக இருக்கும்.

காட்சிகளையும் பொருட்களையும் நபர்களையும் பதிவுசெய்யும் காமிரா என்னும் கருவியைக் கையாள்வதில் பெரிதும் இருப்பது தொழில்நுட்பம் சார்ந்த அறிவு என்று மட்டுமே என்ற நம்பிக்கை எனக்கு இப்போதும் உண்டு. அந்தக் காமிராவே நகரும் ஒன்றாக - சலனப்படக்கருவியாக மாறும்போது அதற்கெனத் தனித்துவமான மொழியை உருவாக்கிக் கொள்கிறது. அந்த மொழிக்கு இயற்கை மொழியையொத்த அலகுகளும் வரையறைகளும் நேரடி அர்த்தங்களும் மறைமுக அர்த்தங்களும் உண்டாகிவிடும். சலனப்படக்கருவிக்கான மொழியையொத்த படைப்பாக்க மொழிக்கூறுகளை நிலைப்படக்கருவி யைக் கையாள்பவர்களும் உருவாக்குவதுண்டு என்பதை அந்தச்சந்திப்பில் கருணா உருவாக்கினார்.

புகைப்படம் எடுப்பது அது ஒரு தொழில் பலபேருக்கு. சிலபேருக்கு அது ஒரு பொழுதுபோக்கு. ஆனால் மிகச்சிலபேருக்குக் கலையாகவும் இருக்கிறது என்ற நம்பிக்கை அப்போது உருவாகிடக் காரணமாகிவிட்டார். முதல் சந்திப்பு மே முதல் வாரத்தில் நடந்தது. சேரன் வழியாக அவரது பெயர் காதிற்குள் நுழைந்தது. அது மனதில் நிற்கவில்லை. காரணம் அவரது கையிலிருந்த காமிரா. அதிகப்படியான எடையுடன் பிறந்த குழந்தையைக் கையாள்வதுபோல் அதைக்கவனமாகக் கையாண்டபடி இருந்தார். அப்போது அவர் எடுத்த படங்களை உடனடியாகப் பார்க்கவில்லை. இரண்டாவது தடவையாகத் திரும்பவும் ரொறன்ரோவுக்குப் போனபோது ஒருநாள் முழுவதும் நான் அவரோடுதான் இருந்தேன். அப்பொழுதும் அவரது படங்களைப் பற்றியோ, அவர் காமிராவைக் கையாள்வதின் நுட்பங்கள் பற்றியோ அதிகம் பேசிக் கொள்ளவில்லை. பேசிக்கொண்டதெல்லாம் சாப்பாடு, மது, நட்பு, ஊர் சுற்றல். அவரோடு இன்னொரு நண்பரும் இருந்தார். தாய்வீடு பத்திரிகையின் ஆசிரியர் டிலிப் குமார். அவரது பேச்சுகள் ரொறன்ரோவில் அகதியாக இருப்பதன் பாடுகள் பற்றியதாக இருந்தன.

மாலையில் புத்தகவெளியீட்டு விழாவிற்கு மூவரும் போனோம். கருணா தனது எடை கூடிய குழந்தையை விளையாட அனுமதித்தார். விளையாடிய பிள்ளை பிடித்து வைத்த பொம்மைப்படங்கள் எதனையும் இரண்டு நாட்களுக்குக் கண்ணில் காட்டவில்லை. நான் அமெரிக்கா திரும்பிய பின் அனுப்பிவைத்தார். தமிழ்நதியின் 'பார்த்தீனியம்' நாவலின் வெளியீட்டு விழாவில் எடுக்கப்பட்ட படங்கள் மொத்தமாக இப்போதும் என்னிடம் இருக்கின்றன. அந்தப் படங்களில் இருக்கும் மனிதர்கள் நேரில் பார்த்தபோது இப்படியானதொரு அழகிலும் உணர்வு வெளிப்பாட்டிலும் இருந்தார்களா? என்ற சந்தேகம் திரும்பத்திரும்ப எழும்பிக்கொண்டே இருக்கிறது. ஆனால் கருணா இருந்ததைத்தான் பிடித்திருக்கிறார். ஒரு நூல் வெளியீடு மற்றும் விமரிசன அரங்கு என்னும் சுவாரசியமில்லாத - ஒரு புகைப்படக்காரருக்குச் சுவாரசியம் தராத வெளியில் எடுக்கப்பட்ட படங்கள். இந்தப்படங்களுக்குள் மனிதர்களின் சுவாரசியமான கணத்தைக் கச்சிதமாகப் பிடித்துக்காட்டும் எத்தனிப்பு அந்தப்படங்களில் வெளிப்பட்டது. அவை உண்டாக்கிய உணர்வில் உடனடியாக ஒரு வேண்டுகோளை அனுப்பினேன்.

கூட்டங்கள், நிகழ்ச்சிகள் என உள்ளரங்கப் படங்கள் தவிர வெளியில் எடுத்த படங்களை அனுப்பமுடியுமா எனக்கேட்டேன். ஒரு தொகையாக அனுப்பிவைத்தார். அந்தப் படங்களைப் பார்த்த பின்பு பெரிய தவறொன்றைச் செய்துவிட்டதாகத் தோன்றியது. அவரோடு இருந்த நேரங்களில் புகைப்படம் எப்படிக் கலையாக மாறுகிறது என்பதைப் பற்றியே பேசியிருக்க வேண்டும். அதன் மூலம் கலையின் பரிமாணங்களை விவாதித்திருக்க முடியும் என்று தோன்றியது.

கலைகளைப் பற்றிய சொல்லாடல்களைத் தொடங்குவதற்கு அடிப்படையாகத் தெரிந்திருக்கவேண்டியன நாம் பேசவிரும்பும் கலையின் எந்திரவியல் கூறுகள். அவை எவ்வாறு இணைகின்றன, இணைந்து பொருளாக (matter) மாறுகின்றன என்று தெரிந்துகொண்டால், அந்தப் பொருள் உருவாக்கத்தின் எந்திரவியல் கூறுகளோடு இணையும் படைப்பாக்கக் கூறுகள் எப்படிக்கலையை உருவாக்குகின்றன என்று பேசத்தொடங்கிவிடலாம். இந்தச் சொல்லாடல் முறைமை தெரியாமல், நேரடியாகப் படைப்பாக்கக் கூறுகளைக் கூடச் சொல்லாமல், கலையின் விளைவுகளைப் பேசுவதே தமிழில் கலை பற்றிய பேச்சாக - திறனாய்வாக இருக்கிறது.

கலையின் அடிப்படையான வேலை உருவாக்குவது. புதிதாக உருவாக்குவது. ஒன்றுபோல இல்லாமல், ஒவ்வொன்றையும் ஒவ்வொன்றாக உருவாக்குவது. மனிதர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொருவராகப் படைக்கப்பட்டிருக்கிறார்கள். அப்படிப் படைத்தவர் யார் என்ற ரகசியம் தெரியாததால் இறை அல்லது கடவுள் என நம்புகிறது உலகம். புகைப்படத்தைக் கலையாக நினைப்பவர்கள் எதையும் உருவாக்குவதில்லை. இருப்பதைப் பிடிக்கிறார்கள். இருப்பதைப் பிடிப்பதில் என்ன படைப்பாக்கம் இருக்கமுடியும்? உருவாக்கத்திற்குத் தேவை தேர்வு. கலைப்படைப்பை உருவாக்கத் தேவையான அடிப்படைப் பொருட்களை எந்திரத்தனமாக இணைத்தாலும் தேர்வு(selection) செய்வதன் மூலமும் நுட்பங்களை உருவாக்குவதன் மூலமும் கலையாக மாறுகிறது. புகைப்படத்திலும் ஒரு தேர்வு இருக்கிறது. இருப்பதைப் பிடிப்பதில் எப்படி இருக்கும்போது பிடிப்பது என்பதில் அந்தத் தேர்வு வெளிப்படுகிறது. பிடிப்பதற்கான கணப்பொழுதைக் கவனமாகக்கண்டுபிடிப்பதில் தான் கலையின் நிகழ்வினையைக் காட்ட முடியும். இயற்கைப் பொருளொன்று இருப்பதில் வெளிப்படும் உணர்வைப் பிடிக்கிறபோது அது கவிதையின் வெளிப்பாடாக மாறிவிடும். இருப்பது அசைந்துகொண்டிருந்தது என நம்பச்செய்யும்போது நடனத்தின் வெளிப்பாட்டைக் காட்டிவிடமுடியும். இருப்பது உரையாடுகிறது என உணர்த்தும்போது நாடகத்தின் பகுதியாக ஆகிவிடும். இருக்கும் பொருளுக்குள் என்னென்னவோ ரகசியங்கள் பொதிந்துகிடக்கின்றன என்று ஆச்சரியத்தை உண்டாக்குகிற நிலையில் கலையின் கலவைத்தன்மையைக் காட்டி விட முடியும். இப்படியெல்லாம் கருணாவோடு பேச நினைத்தேன்.

தொடர்ச்சியாக அவரது முகநூல் பக்கங்களைப் பார்த்துவிடுவேன். ஓவியங்களும் படங்களும் பதிவேற்றப்படும் வண்ண உலகம் அது. இரண்டிலும் படத்தின் ஒளி அளவும் உருவாக்கப்படும் நிழலின் பரவலும் அதனால் உண்டாகும் வண்ணக் கலவையும் தரும் காட்சி இன்பம் சொல்லிப்புரிய வைக்க இயலாதவை. பார்த்து இரசிக்கவேண்டியவை. காமிராவில் கலையின் அர்த்தத்தை உருவாக்கும் வித்தகம் உருவாவதை அவரோடு இருந்த நேரத்தில் கவனிக்கவே செய்தேன். நான் பார்த்தவரை கருணா ஒரு சோம்பல் பூனை. சோம்பல் பூனை உடல் முறித்து முன் கால்களை நீட்டி எழுவதுபோலக் கைகள் உயரும் போது, கருணாவின் வட்ட முகத்தை முற்றிலும் மறைத்துவிடுகிறது. தேவை யான அளவுக்கட்டுப்பாட்டுக் கண்ணாடிகள் - லென்சுகள்- பொருத்திக்கொண்ட காமிரா அவருடையது. எப்போது எடுப்பார்? எப்போது தவிர்ப்பார்? என்பதெல்லாம் அவர் விருப்பம். தனது காமிராக் கண்கொண்டு ஒருவரை அல்லது ஒரு பொருளைக் கவ்விக்கொள்ள அந்தப் பூனை எப்போது வாயைத் திறக்கும் என்று தீர்மானமாகச் சொல்லமுடியாது. வாயைத் திறந்து கவ்வித்தந்த படங்களை அவ்வப்போது பார்த்துக்கொண்டே இருக்கிறேன். அவை புகைப்படக்காரர்கள் பற்றிய எனது நம்பிக்கையைக் கலைத்துப் போட்டுவிட்டன. அவர் இப்போது இல்லை என்ற உண்மை படங்களின் உறைவுபோல
உறைய மறுக்கின்றது.



ramasamy.a@thaiveedu.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவன் வண்ணங்களும் என் வரிகளும்



**- களப்பூரான் தங்கா -**

பதினெட்டு வருடங்களின் முன், மார்கழியில் ஒரு நாள் சக்கரவர்த்தி வீட்டில் கருணாவுடன் அறிமுகமாகின்றேன். எல்லோரும் சொல்வதுபோல் அன்றிலிருந்து தொடரவில்லை எம் நட்பு. எட்டு வருடங்களாக என்னைக் கணக்கே எடுக்கவில்லை சீமான். ஒரு கலைஞனாய் அவனை அணுகி ஆர்ப்பரிக்க முனைந்த ஒவ்வொரு முயற்சியும் தோல்வியாய் அமைந்தது. விட்டு விட்டேன் ஏன் இந்த வீண் முயற்சி.

இரண்டாயிரத்திப் பத்தில் சேரன் வீட்டில் ஒரு குட்டி விருந்து. சிங்கனும் வந்திருந்தார். சினம் தீர்க்க நாள் கிட்டியது. விஸ்கி சூடாக்க சூடாக்க எங்கள் விவாதம் தொடர்ந்தது. ஓவியத்தில், புகைப்படத்தில், ஒன்றானோம். நாடகமும், கூத்தும் நாக்குகளில் விளையாடின. மட்டக்களப்பு வடமோடியையும் தென்மோடியையும், மரபு மாறா அதன் மணத்தையும் பூசிவிட்டேன் அவன் மேனியெங்கும். அன்றுதான் அவன் வண்ணங்களும் என் வரிகளும் மாலையாகத் தொடுக்கத் தொடங்கின.

அரங்கியல் ஓர் அடித்தளமாய் அமைந்தது எங்கள் உறவுக்கும், உணர்வுகளுக்கும் தீனி போட. கூத்துப் பயிற்சிகளில் என் ஆர்வமும் அவன் ஈடுபாடும் மேலும் இறுக்க இறுக்க நள்ளிரவுத் தொலைபேசிகள் அலறத் தொடங்கின.

தொழில்நுட்பம் பூசவந்த தொழிலாளியாய் அல்ல. அவன் உரையாடல்களில் - இயக்குநராய், நடிகனாய், இசைஞனாய், வாத்தியக்காரனாய், வண்ணக்காரனாய், ஒளிக்காரனாய் ஒட்டுமொத்த மேடையையும் கட்டி ஆளும் கதாநாயகனாய்க் காட்சியுறு்றான். சர்க்கரை தேடித் திரிந்தவனுக்குக் கூடவே தேனும் கிடைத்துபோல் உணர்வுகளில் ஒழுகினான். மேலும் ஒன்றானோம் களரிகளில்.

நிகழ்த்துகலையின் நேர்த்தியில் மிகக் கண்டிப்பானவனாகச் செயற்பட்டான். மேடையின் ஒவ்வொரு அங்குலமும் கதை சொல்ல வேண்டும். கவிதை, கட்டுரை, சிறுகதை, நாவல் போன்றவற்றை மீண்டும் மீண்டும் திருத்தி ஓர் இறுதிப் படைப்பை உருவாக்கலாம். ஓவியம் ஒருதரம் வரைவதுபோல், நிகழ்வும் ஒரு தரம் மாத்திரமே என்பான்.

தொடர்ந்தது பயணம். வரலாறு உள்வாங்கிய தலை சிறந்த ஓவியங்களின் கண்காட்சி ரொறன்ரோ கலைக் கூடத்தில் நடைபெற்றது. ஒருநாள் முழுவதும் கொட்டினான் ஓவியத்தின் வரலாற்றை, வகைகளை, தூரிகைகளின் நுட்பங்களை, நிறங்களின் பிரிகைகளை, படைபாளிகளின் பாணிகளை, வாசிப்பு முறைமைகளை. வான் கோவும் மைக்கல் அஞ்சலோவும், பிக்காசோவும் லாவஞ்சியும் எங்களுடன் அன்றைய நாள் முழுவதும் திரிந்தார்கள். ஓவியத்தில், ஒருவருட டிப்ளோமா முடித்த அறிவு கிடைத்தது.

ஓர் உணர்வினைச் சொல்லும் ஓவியத்துக்குள்ளும் பல உணர்வுகளைக் கொட்டும் வண்ணங்களுக்குள்ளும் உட்செல்வது, இலக்கியங்களுடன் பயணிப்பது போன்றதாகும். எல்லாச் சந்தர்ப்பங்களிலும் வாசகனின் சிந்தனை ஓட்டத்திற்குச் சுதந்திரம் உண்டு. இருந்தும் ஓவியங்களைப் பார்ப்பதற்கு மேலாக வாசிக்கும் பரிச்சயம் ஏற்பட ஏற்பட ஓவியனின் பயணம் நம்மால் உணரப்படும். ஓவியவாசிப்பனுபவம் ஆழமாகி இரசனையுடன் கலக்க, ஓவியனின் பயணம் புரியத்தொடங்கும். அவன் வார்த்தைகள் என் நரம்புகளால் ஈர்க்கப்பட்டன.

நள்ளிரவு உரையாடல்கள் சவால்களாய் மாறத் தொடங்கின. தன் கையடக்கத் தொலைபேசியில் ஓவியம் வரையும் ஒரு புதிய மென்பொருளை இறக்கிவிட்டு, எளிமையான கோடுகளையும் நிறங்களையும் கொழுவி அனுப்பத் தொடங்கினார் மாப்பிள்ளை. ஐந்தே நிமிடத்தில் அவருக்கு பதில் வேண்டும் கவிதையாக. நானும் இயன்றளவு வாசித்து எழுதத் தொடங்கினேன் என் வரிகளை. அதிகாலைவரை நீடிக்கும் ஆயிரம் கதைகளும் களங்களும். என்னுடன் உரையாடிய ஒவ்வோர் இரவும், தான் ஒரு கூட்டத்துடன் இருந்து கும்மாளம் அடித்ததுபோல் உணர்ந்ததாய்ச் சொல்வான்.

அப்பப்போ அவன் அனுப்பிய சித்திரங்



களுக்கு நான் அப்பிய வரிகளில் 'நெம்புகோல்', 'கட்டுமரம்' இரண்டினையும் மெச்சினான்.

### கட்டுமரம்

வலி சுமந்த மனத்திரை
தோள் கனக்கும் கடினம்
காவுதற்கு நாதியில்ல
கனவுகளில் பயணம்
உந்தியேனும் இழுப்பதற்கு.

உறவிருந்தும்
தனி வெளியில் பறப்பதற்கு
ஒரு சோடிச் சக்கரங்கள் போதுமென்று
புறச் சிறையின் கதவுடைப்பு.
மழை நூலில் மிதந்துவரும்
மேகத்தின் பாதைகளில்
நம்பிக்கை.

காற்றோடு மல்லுக் கட்டு
ஒவ்வோர் உந்துதலும்
உணர்வொழுகி அகம் நனைத்து
நதிமூலம் தேடிவரும் காட்டாறு
கடல் சேர.

நடை தூரம் பாராது
புயல் வீசும் தேசத்திலே
கொண்டல் அசைவுகளாய்
போர் வீசும் திசையெங்கு மோடி
திரவியங்கள் தேடிய கட்டுமரம்
உடையாது கரைசேரும்
ஒரு நாளில்
அதன் பாட்டில்.

ஆயிரம் அன்புகள் அடுத்தாற்போல் இருந்தாலும் தனிமை ஒரு பெரும் விலங்கு. நம்மை அறியாமலேயே மெல்ல மெல்ல நம்மை விழுங்கிக் கொண்டிருக்கும். ஐந்து வருடங்களாய் பூட்டப்பட்ட அறையுள் விழுங்கப்பட்டு, அக்கொடிய மிருகத்தின் நகங்களாலும், பற்களாலும் குதறப்பட்டு கக்கப்பட்ட அனுபவம் எனக்குள் இன்னமும் குமுறிக் கொண்டே இருப்பதால், அவனுடன் உரையாடுவது என் மனப் புண்களுக்கு தைலமாய்த் தடவியது.

'நெம்புகோல்' அவனையும் என்னையும் அழைத்துச் சென்றது, வாழ்வின் ஆரம்ப நாள்களுக்கு. இந்த ஓவியத்தின் உணர்வுகளுக்கு இன்று வரையும் ஏங்குபவன் நான். அவனோ, அதை அணு அணுவாய் அனுபவித்தவன். அனுபவ நிறங்களும் ஏக்க வரிகளும் கலந்ததுதான் இந்த இணைப்பு.

### நெம்புகோல்

தளர் நடையில்
சிறுகுருவி தடுமாறும் பறப்பதற்கு
சிறகணைத்து நடை பயிற்றி
மிதக்கவிடும் பெரும்புலவன்.

ஆழி
மேலுயர்ந்து மோதிடினும்
துகள் உரியா நெஞ்சுறையும்
கடும் பாறை
ஈரம் நிறைந்து.

கண்கள்
சிறு நெருஞ்சி முள் பொறுக்கும்
சேயின்
கால்நகரும் திசைகளிலே.
கைகள் தலை கோதும்
துயர் இடுக்கில்
மனஞ் சரியும் வேளையிலே.
மெய்நீரை அறிந்தூட்டும் அன்னம்
கன்றுகளின் காட்டில்
பொய்மழை கொட்டுகையில்.

உள்ளத்து மேகங்களில் மின்சாரம்
ஒவ்வோர் கணப்பொழுதும்
நெம்பி
எனை நானே
முந்தித் தள்ளுதற்கு.

அவன் அழைத்த அந்த வண்ண இரவுகள் இனி இருளாகத்தான் விரியும். ஓவியங்களை அனுப்பிவிட்டு, 'தல, அனுப்பியிருக்கின்றேன். போட்டுத் தாக்குங்கோ', என்ற செய்திகளும் வெற்றிடமாய்த்தொடரும். கவிவரிகள் காணப் பதில் கேட்கும் தொலைபேசி ஊமையாய் உறையும்.

தாய்வீடு அவனின்றித் தனித்தே திரியும். நாளெடுக்கும் உடைந்த செல்வத்தார் மீண்டுவர. பொன்னையா அவன் அழைப்பு இலக்கத்தை அழிப்பாரா வைத்திருப்பாரா? கருணாவுக்கு ஒரு கை நட்புவாத நோயால் இழுத்துவிடும். சில நாட்களுக்கு, சேகர் தொலைந்து விடுவார். சேரன் வீட்டு நாய்க்குட்டி அவன் ஓவியத்தையும், சேரனின் முகத்தையும் மாறி மாறிப் பார்க்கும். சக்கரவர்த்தி ஓசோவின் பக்கங்களைப் புரட்டுகின்றார். கருணாவின் கணினி இனி தானாய் வரையத் தொடங்கும்.

கருணா எனும் நட்பு
வண்ணங்கள் சிதற
கண்ணெல்லாம் கனக்கின்றது
உன் கைவிரல்கள் உதறிய
ஒவ்வொரு துளியும்
கலைகளாய்க் கொட்டினவே.

கண்ணீரல்ல
உன் கதைகள்தான் வருகின்றது
எம் கண்கள் முன்னே.
நெஞ்சகலா நினைவுகளை
நிலம் முழுதும் விதைத்துவிட்டு
நீண்டுவிட்டாய்
அறுவடையில் நனைகின்றோம்
அணு அணுவாய்.

எதுவெல்லாம்
உன் நிறம் அப்ப நினைத்தனவோ
அதுவெல்லாம்
இருண்டே கிடக்கும் இனி.
அன்றையநாள் மேடைகளில்
உன் பங்களிப்பை எண்ணி எண்ணி
அரங்காடல் அழுகின்றது.

தேடுகின்றது தேடகம்
உன் அட்டைச் சித்திரங்களை
பார்த்திட, பகிர்ந்திட,
நினைவிடை தோய்ந்திட.

இன்றைய அரங்கியல் விழாவில்
பல நிறங்களுடன் நீ நின்றாய்
நிழலாக, தூணாக,
நெடு உயரப் பனையின் வேராக.
இனி
அங்கு நிறங்கள் வரும்
அதில் நீ இருக்கமாட்டாய்.

சிலரே உன் சினேகிதம்
சிலரே உன் முரணும்
இன்று பலரோ முன் வரிசையில்
உன் பக்கங்களைப் புரட்டுதற்கு.

ஆண்டுகளைக் கடந்தும்
அப்பிக்கொண்டு திரியும்
உன் ஒளிக் கலப்பும் நிறப் பிரிவும்
எம் நினைவுகளில்
நிழலாடி
கனவுகளில் களமாடி.

தனி அறையில் கிடந்து
அன்று தவித்துப் பிரிகையிலே
யாரையடா நினைத்தழுதாய்
உன் தாயினையா ?
தமக் கையினையா ?
உன் மனக் களத்தில் உரம் புதைத்த
மார்க் மாஸ்டர் அவர்களையா?
தினம் தாங்கிப் பிடித்த உன்
தோள் கொடுக்கும் தோழர்களையா?

பாவி எமைத் தவிக்கவிட்டுப்
பாய்ந்தாயடா
உன் நிறக் கலவைச் சட்டியிலே
இன்று
நிழல் படமாய், சித்திரமாய்
நீள் சுவரில் தொங்குதற்கு.

நண்பா,
பழகிய நாட்கள் சிறிதே
நம் பயணமோ பெரிது
இன்று நீ முந்தி
நாளை
நான் பிந்தி.



thanga@thaiveedu.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டப் பகலின் நெட்டைக் கனவோன்



- றெஜி மனுவல்பிள்ளை -

வத்திக்கான் நகரத்தின் புனித இராயப்பர் பேராலயத்திலுள்ள, பெரும் சிற்பி மைக்கல் ஆஞ்சலோவின், பியாதா (Pieta) சிற்பத்தை நேரில் பார்த்த அனுபவம் பற்றிக் கருணா விபரிக்கும் போது அகலத்திறந்த விழிகளோடு அவரைப் பார்த்துக் கொண்டிருந்தேன். வியாகுல மாதாவின் மடியில் கிடந்த யேசுவின் உடலின் பாரம் தன் மனதை அழுத்தியதாகவும், மாதாவின் உடையில் இருந்த மடிப்புகளின் இயல்புத் தன்மையில் மனம் சிக்குண்டதையும், இயேசுவின் உடலில் இருந்த உறைந்து போன நாளங்களின் வலைப்பின்னலில் தன் மனம் உறைந்து போனதையும் சொல்லிக்கொண்டே இருந்தார். இது தான் கருணா. உலகெங்கிலும் உள்ள சிறந்த கலைப்படைப்புகளில் தன் மனதைப் பறிகொடுத்து அவற்றினூடு பயணிப்பதும் அவை உருவாகிய பின்னணியையும் படைப்பாளிகளின் வாழ்க்கை வரலாறுகளையும் தேடுவதில் தீராத் தாகம் கொண்டவர்.

ஓவியங்களில் மட்டுமன்றி சிற்பம், சினிமா, இலக்கியம், அரசியல், வரலாறு என இவரது தேடல் பரந்துபட்டது. இந்த தேடல்களுக்கான விதையை தன்னுள் இட்டவர் தன் ஓவிய ஆசான் அ.மார்கு அவர்கள் என அடிக்கடி கூறுவார். இந்தத் தேடல்களின் தரிசனத்தில் அவர் பெற்ற அனுபவங்களும் அறிதல்களுமே அவரை ஒரு சிறந்த படைப்பாளியாக மாற்றியது. தனக்குத் தெரியாதவற்றை எவரிடம் இருந்தும் கற்றுக் கொள்ளும் மாணவ மனநிலை இறுதிவரை அவரிடம் இருந்தது. இதுவே அவர் ஓவியத்திலும் வரைகலையிலும் சிற்றிதழ்கள், பத்திரிகைகள், விளம்பரங்கள் வடிவமைப்பதிலும் பெரும் ஆளுமை செலுத்தப் பெரும் பலமாக இருந்தன.

தன் தேடல் அனுபவங்களை மற்றவர்களோடு பகிர்ந்துகொள்வதில் பெரும் ஆர்வம் காட்டினார். தாய்வீடு பத்திரிகையில் ஓவியங்கள் பற்றி அவர் எழுதிய கட்டுரைகளும், AGO போன்ற ஓவியக் கண் காட்சிக்கூடங்களுக்கு அவருடன் சென்ற பயணங்களும் என்னுள் ஓவியங்கள், சிற்பங்கள் மீதான பெரும் காதலை ஏற்படுத்தியது. அதன் உந்துதலால் பாரிசில் உள்ள லூவர் (Louvre ), மியூசி டோசே (Musee d'orsay), ஜேர்மனி, முன்ஸ்ரர் நகரில் உள்ள பிக்காசோ (Picasso) காட்சியகம் என்பவற்றிலுள்ள உலகப் புகழ்பெற்ற ஓவியங்களையும் சிற்பங்களையும் காணும் வாய்ப்பு ஏற்பட்டது.



தாய்வீடு அரங்கியல் விழாவில் ஒலி, ஒளி அமைப்பில் கருணாவின் ஆளுமை அளப்பரியது. கூத்துக்களின் ஒலி, ஒளி அமைப்புகளில் காட்சிகளின் உணர்வுகளுக்கு ஏற்ற வண்ணங்களைத் தெரிவு செய்யவதில் கருணா அதீத திறமை கொண்டிருந்தார். கூத்துக் கலையை அடுத்ததளத்துக்கு எடுத்துச் செல்வதில் அவரது தொழில்நுட்பப் பங்களிப்பு பெரும் உந்துதலாக அமைந்தது. கூத்து, நாடகம், ஓவியம், சினிமா என்பவற்றில் ஈழத்தமிழினம் உலகத் தரத்தை எட்ட வேண்டும் என்பதில் பல திட்டங்களையும், கனவுகளையும் எம்மோடு பகிர்ந்துகொண்டவர். அந்தப் பாதையில் பயணிப்பதற்கான திறமையும் தேடலும் அர்ப்பணிப்பும் கொண்ட அவரின் இழப்பு தமிழ்க்கலையுலகத்திற்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

அண்மையில் ஒரு நாள், கனடாவில் பல் கலைக்கழகம் ஒன்றில் சினிமா, வரைகலை, ஓவியம் பயிலும் 20 வயது மாணவர் ஒருவர், தான் கருணாவின் படைப்புகள் பற்றியும் அவரின் கலை ஆளுமை பற்றியும் அறிந்ததாகவும், அவரை நேரில் காண விரும்புவதாகவும் என்னிடம் கேட்டுக்கொண்டார். நான் கருணாவைச் சந்திப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்தித் தருவதாக உறுதியளித்தேன். மறுநாள் கருணா மறைந்த செய்தியை முகநூலில் அறிந்த அந்த மாணவர்; தன் அதிர்ச்சியை என்னோடு பகிர்ந்துகொண்டார்.

தம் வேர்களைத் தேடும் அடுத்த தலைமுறை கருணாவின் படைப்புகளினூடாக அவற்றைக் கண்டடையும் என்ற எண்ணம் என்னுள் உதித்தது.

வண்ணங்களில் எப்போதும் எம்மோடு வாழ்ந்து கொண்டிருக்கும் கருணாவின் கனவுகளைக் கைவசப்படுத்துவதே நாம் அவருக்குச் செய்யும் அஞ்சலியாகும்.



regi.m@thaiveedu.com

# முடிவுறாத இன்மை!

- ராஜ்மோகன் செல்லையா -

ஒரு காலத்தை நாம் கடந்து செல்கையில் எம்மிடம் தொடர்பில் இருக்கும் பல மனிதர்கள் எங்கள் மனங்களில் அழகிய பூக்களை விதைத்துச் செல்வார்கள். ஆனால், சில மனிதர்கள் எங்களிடம் ஒரு நெருக்கமான பிணைப்பை ஏற்படுத்தி அப்படியே உயிரோடு ஒன்றித்துப்போய்விடுவார்கள். அவர்களிடம் இருந்து விலகியிருக்கவோ அல்லது விலத்தியிருக்கவோ முடியாதவாறு ஏதோவொரு பிணைப்பு எம்மை இழுத்து வைத்துக்கொண்டேயிருக்கும். இப்படியான ஒரு பிணைப்பில் நீண்ட காலமாக என்னுடன் இணைந்து, கடந்த மாதம் திடீரென மறைந்துபோன கலைஞர் கருணாவுடனான உறவு ஓர் அனுபவ பாடமாகியதோடு மட்டுமல்லாது வாழ்க்கையின் சோகமாகவும் அமைந்துபோய்விட்டது.

கருணா ஒரு காந்த சக்தி கொண்ட மனிதர். அவர்பால் இழுத்து நிற்கும் மனிதர்களின் பட்டியலையும், அவர்கள் சொல்லும் செய்திகளையும் அடையாளப்படுத்த முனைந்தால், ஆயிரம் கோடி பக்கங்கள் தேவைப்படும். உயர்வுகளும் தாழ்வுகளும் இணைந்து நிற்கும் பல துறைகளில் தனது ஆளுமையை முழுமையாக வெளிப்படுத்தி, மேலான ஒரு வாழ்க்கை வாழ்ந்து, இயற்கையுடன் இணைந்துவிட்டமை எமக்குப் பெரும் இழப்பாகிவிட்டது.

1995 கடைசிப் பகுதியில், ரோஜா சஞ்சிகையின் ஆசிரியர் வி. எல். ஆனந்தின் மூலம் எனக்கு அறிமுகமாகியவர்தான் கருணா என்ற மனசுக்கு பிடித்த நண்பர். கனிவான குரல், தெளிவான பேச்சு, பரந்துபட்ட சிந்தனை, தேடும் இயல்பு, நகைச்சுவைப் பண்பு போன்ற பல விடயங்கள் அவரைச் சந்தித்த முதல் நாளே எமக்கிடையிலான அன்னியோன்னியத்தை ஏற்படுத்திவிட்டிருந்தது. ரோஜா சஞ்சிகையில் ஓவியராகவும் படப்பிடிப்பாளராகவும், வித்தியாசமான ஆக்கங்கள் தரும் எழுத்தாளராகவும் நல்ல விமர்சகராகவும் சிறந்த வரைகலை வடிவமைப்பாளராகவும் தன்னை நன்கு வெளிகொண்டுவந்த கருணாவுடன் சேர்ந்து கடமையாற்றிய காலங்கள் வாழ்க்கையில் மறக்கமுடியாத பொற்காலங்கள் எனலாம். கருணாவுடன் சேர்ந்து 'ஒப்பரேசன் ரொறன்ரோ' 'எழுதியவர் மிஸ்டர் லிபரேசன்' என்று ரொறன்ரோ நகரின் அதிரடி 'றவுண்டப்புக்களை' நடத்தி, பலரது பகைகளுக்கு ஆளாகி எதிர்கொண்ட அனுபவங்கள் என்றும் நிலைத்திருக்கக் கூடியவை. நவீன ஓவியம், படப்பிடிப்பு, நாடகம், விமர்சனக் கூட்டம், புத்தக வடிவமைப்புபோன்ற பல துறைகளில் அவருடன் பயணித்த பொழுதுகள் அவரது மரணத்தை ஏற்க மறுத்து நிற்கின்றன.

கனடாவின் ஆரம்பகால தமிழ் பதிப்புத் துறையில் பல புதிய பரிமாணங்களை பா.அ.ஜயகரனுடன் சேர்ந்து தமிழ் எழுத்துலகுக்கு அறிமுகப்படுத்திய அக்காலங்களில்தான், பதிப்புத்துறை பெருவளர்ச்சி கண்டது. கவிஞர் சேரன், திருமாவளவன், செழியன், பாபு போன்ற பல நண்பர்களுடன் கவிஞர் சக்கரவர்த்தியின் வீடு ஒவ்வொரு வார இறுதியிலும் களைகட்டிவிடும். படப்பிடிப்பில் முழு அக்கறைகொண்ட கருணாவுடன், மில்ரன் பகுதியில் உள்ள காடு, மலை, தோட்டம், துரவு என்று அலைந்து திரிந்து எடுத்த படங்கள் பல சோகங்களைப் பாடி நிற்கின்றன. ஒரு வெள்ளிக்கிழமை மாலை என்னை அழைத்து 'வெளிக்கிட்டு வாரும் டவுண்றவுண் செல்வோம்' என்றார். குதுகலமாக எனது சிவப்பு நிற அக்குறா காரில் அவரை ஏற்றிய பின்னர் இறங்கச்சொன்ன இடம் சேர்ச் அன்ட் குயின் வீதிச் சந்திப்பு. காரில் இறங்கிய பின் கமராக் கடைக்குள் நுழைந்தார். ஒரு நிக்கொன் மனுவல் கமராவை எடுத்து மேசையில் வைத்தார். கடைக்காரரிடம் எனது பெயரில் பில் போடச்சொன்னார். 'நானா பணம் செலுத்த வேண்டும்' என்று வியந்தபோது 'உமது கமராவுக்கு நீர் தானே பணம் கொடுக்க வேண்டும்' என்றவர் எனது சம்பளம் அன்றுதான் வந்திருக்கும் என்பதை நன்றாகவே புரிந்து வைத்திருந்தார். அன்றில் இருந்து அவரிடம் பழகி, தொடங்கியதுதான் எனது பொழுது போக்கு படப்பிடிப்பும் அதில் கிடைக்கும் சிறு நிம்மதியும்.

எல்லோரையும் போலவே கருணாவின் வாழ்க்கையிலும் எவ்வளவோ மேடுபள்ளங்கள் குவிந்துகிடந்தன. ஆனால், வாழ்க்கையுடன் சார்ந்துவரும் வருத்தங்கள் எதனையும் மனதில் தக்கவைத்துக் கொள்ளும் குணத்தை இவரிடம் கண்டுகொள்ள முடிவதில்லை. தன்னுடன் பழகும் ஒவ்வொருவரது மனதிலும், தான் கண்ட நிறைவுகளை மட்டும் பேசுவதே இவருடைய அணுகுமுறையாக அமைந்திருந்தது. இதுவே இவருக்கும் உலகுக்குமிடையிலான தொடர்பு நிலையாகவும் இருந்தது.

ஒரு காலத்தில் இப்படித்தான் எனக்கும் கருணாவிற்குமான உறவுகள் தொடர்ந்து கொண்டுவந்தன. எனது திருமணத்திற்குப் படப்பிடிப்பாளராக மட்டும் வராமல், திருமணத்தை வழமையான சினிமா பாடல்கள் அற்ற மெல்லிய இசையுடன் புதுவிதமாக நடத்தி முடித்த கருணா இன்று இல்லை! ஆனால், நான் இருக்கின்றேன்! முன்னரெல்லாம் தூக்கம் தொலையும் இரவுகளில் கருணாவும், நானும் விடியும்வரை பேசிக்கொண்டிருப்போம். இப்போதும் கருணா பற்றிய நினைவுகளாலும், அவரது இல்லாமையினாலும் என் தூக்கம் தொலைகின்றது. கருணாவோடு பேச விரும்பினாலும் மறுமுனையில் கருணா இல்லை என்றாகிவிட்டது. கருணாவுடன் சேர்ந்து வேலை செய்யவென பலவிடயங்கள் காத்துக்கிடக்கின்றன. காலத்தை நான் தான் வெல்ல மறுத்துவிட்டேன்.

“நாடக மேடைகள் யாவும் உனது உயிர் துடிப்போடு வாழ்வது தெரிகின்றது. உன் ஓவியங்கள் உயிர் கொண்டு நடமாடுவது புலனாகின்றது. உன் பிராணன் பிரிந்து போகவில்லை. அது தனித்தன்மையுடனும், உயிர்ப்போடும் வாழ்ந்து உன் இருத்தலை நிலைநிறுத்துகின்றமை தெரிகின்றது”



*rajmohan@thaiveedu.com*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருணா இல்லாத கனடா



- எஸ்.கே. விக்னேஸ்வரன் -

எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. கருணாவைப்பற்றி, அவர் ஒரு மிகச்சிறந்த ஓவியர் என்று முதன்முதலாகக் கேள்விப்பட்டது 2000ம் ஆண்டு டிசம்பர் மாதம். வத்தளையில் நாங்கள் புதிதாகக் கட்டிக் குடிபுகுந்திருந்த வீட்டுக்கு அப்போது தான் முதன் முதலாக் கனடாவிலிருந்து வந்திருந்தார் கவிஞர் சேரன். 'உங்கள் வீட்டு வரவேற்பறையில் அலங்கரிக்கவென அங்கிருந்து கொண்டுவந்தது' என்று கூறி சட்டகமிடப்பட்டுப் பொதிசெய்யப்பட்ட ஓவியம் ஒன்றை என்னிடம் கையளித்தார். ஆச்சரியமும் ஆர்வமும் பொங்க அதைத் திறந்து பார்த்த நான் அடக்கமுடியாத ஆவலுடன் 'அழகான ஓவியம்... யாருடைய ஓவியம் இது' என்று கேட்டேன். 'உங்களுக்கு அவரைப்பற்றி முன்பே சொல்லியிருக்கிறேன். கனடாவில் வசிக்கும் என்னுடைய அன்புக்குரிய நண்பர் கருணாவின் ஓவியம் இது' என்று அவர் சொல்லும் போதே எனக்கு ஞாபகம் வந்துவிட்டது. சரிநிகர் பத்திரிகை தொடங்கியபோது, அதற்குரிய சரிநிகர் என்ற தலைப்பை சேரன் தான் எழுதியிருந்தார். பின்னர் எமக்கு அதை ஓஃப் செற் அச்சு வசதிக்கேற்ற விதத்தில் டிஜிற்றல் வடிவில் கனடாவில் தனது நண்பர் ஒருவர் மூலம் செப்பனிட்டுத் தந்தபோது அதை செய்தவர் கருணா என்று சொல்லியிருந்தார். ஆனாலும் அவர் ஒரு ஓவியர் என்பதை நான் அறிந்திருக்கவில்லை. அசையும் நீரின் அடியிலிருந்து வருவதுபோல் தோன்றும் மெல்லிய வெளிர் நீலமும் மென்சிவப்பும் கலந்த நிறங்களிலாலான கோலங்களைக் கொண்டதாக இருந்த அந்த ஓவியத்துக்கு எந்தத்தலைப்பும் இடப்பட்டிருக்கவில்லை. அது வெளிப்படுத்தும் அர்த்தம் என்ன என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஓவியர் அதற்கு இட்ட பெயர் 'வாழ்க்கை' (Life) என்று சேரன் தெரிவித்தபோதும் எனக்கு அதைப் புரிந்து கொள்ள முடியவில்லை, ஆயினும் அழகாக இருக்கிறது என்று சொல்லிக்கொண்டு அதை எமது வரவேற்பறையில் தொங்க விட்டேன். சேரன் நகைச்சுவையாக 'வாழ்க்கை'யைப் புரிந்து கொள்வது ஒன்றும் அவ்வளவு இலேசான விடயமல்லவே விக்கி'' என்று சொன்னது இப்போதும் ஞாபகத்தில் இருக்கிறது.

எமது வீட்டுக்கு புதிதாக வரும் ஒவ்வொருவரும் அந்த ஓவியத்தின் முன்னால் சில கணங்கள் நின்று பார்த்துவிட்டு 'நல்லாயிருக்கு, என்ன இது' என்று கேட்பதும் அவர்களுக்கு 'வாழ்க்கை' என்று சொல்வதும், அவர்கள் புரியாமல் விழிக்கும்போது. நானும் சேரன் சொன்னது போலவே வாழ்க்கையைப் 'புரிந்துகொள்வது அவ்வளவு இலகுவானதல்ல' என்று சொல்வதும் பின்னாளில் அடிக்கடி நடக்கும் விடயங்களாகிப் போய்விட்டன. அப்போதெல்லாம் முகம்தெரியாத கருணா பின்னர் நமக்கெல்லாம் தெரிந்த ஒருவராகிவிட்டார். பின்னர் அவர்பற்றிப் பல விடயங்களை கனடா வருவதற்கு முன்பாகவே சேரன் மூலமாக நான் தெரிந்து வைத்திருந்தேன்.

2013 ஜூனில் கனடாவுக்குப் புலம்பெயர்ந்து வந்து சேரனது இல்லத்தில் இறங்கிய இரண்டொரு நாட்களில் ஏற்கனவே கனடாவுக்குப் புலம்பெயர்ந்திருந்த எனது வேறும் சில நண்பர்களுடன் கருணாவும் எங்களைச் சந்திக்கவென்று அங்கு வந்திருந்தார். கருணாவுக்கு சேரன் என்னை அறிமுகம் செய்து வைத்த அந்த நேரத்திலிருந்து, ஏற்கனவே நீண்டகாலம் பழகிய ஒரு நண்பரைப் போல இயல்பாகவே என்னுடன் உரையாடத் தொடங்கிவிட்டார். சரிநிகர் எழுத்து, எமது வீட்டில் தொங்கும் அந்த ஓவியம் என்பவை தொடர்பாக ஆரம்பித்த அந்த அன்றைய உரையாடல் நிகழ்ந்த ஒருசில மணி நேரத்துக்குள்ளேயே, அவர் வெறுமனே ஒரு வரைகலை நிபுணரோ அல்லது ஓவியரோ மட்டுமல்ல, பல்வேறு பரிமாணங்களைக் கொண்ட ஒரு ஆழமான பல்துறைக் கலைஞர் என்ற மனப்பதிவை என்னிடம் ஏற்படுத்தி விட்டிருந்தார். இலக்கியக்கூட்டங்கள், நண்பர்களுடனான சந்திப்புக்கள் என்பவற்றின் போதெல்லாம் பின்னர் தொடர்ச்சியாகச் சந்திக்கும் வாய்ப்புக்கள் கிடைத்தன. அப்படிக்கிடைக்காத நேரங்களில் தொலைபேசியில் உரையாடும் வாய்ப்புக்கள் கிடைத்தன. அப்போதெல்



லாம் அவர் 'இந்தக் காலம் உங்களுக்கு நிறைய நேரமிருக்கிறது. பிறகு வேலை வீடு என்று நீங்கள் பிஸியாகிவிடுவீர்கள். கனடாவில் பார்க்க நிறைய இடங்கள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் பார்க்கத் தவறிவிடாதீர்கள். அதிலும் நீங்கள் கட்டாயம் பார்க்க வேண்டியவை' என்று சொல்லி பல இடங்கள் பற்றிக்குறிப்பிடுவார். ஒரு சாதாரண உல்லாசப் பயணிக்கு இடம் காட்டுவது போலல்லாமல், கனடாவின் அடையாளங்களை, அவற்றின் வரலாற்று முக்கியத்துவத்தை, கலை பண்பாடு சார்ந்த அவற்றின் தனித்துவங்களை என்று ஒவ்வொரு சந்திப்பின் போதும் அவருடன் பேச எனக்கு நிறைய விடயங்கள் இருக்கும்,.

பிறகு நாம் ஸ்காபரோவில் வசிப்பதற்காக வந்தபின் அவர் எங்களது இல்லத்துக்கு அடிக்கடி வந்துபோகும் ஒரு நெருக்கமான குடும்ப நண்பராக மாறிவிட்டிருந்தார். ஒரு தொலைபேசி அழைப்பிலேயே, நாட்டுக்குப்புதிதாக வந்தவர்கள் என்ற முறையில் வீட்டுக்கு தேவையான பொருட்களை வாங்குதல் போன்ற சின்னச்சின்ன தேவைகள் முதல் வேலை தேடுதல் வரை எமக்கு ஏற்படும் எல்லாவிதமான தேவைகளுக்கும் எங்களுக்கு முன்பே தெரிந்த பல நண்பர்கள் முன்வந்து உதவியது போல கருணாவும் தனக்கு முடிந்த அளவுக்கு உதவுபவராக இருந்தார். அதைவிடவும் முக்கியமாக, கனடியப்பத்திரிகைகள் சஞ்சிகைகள், அவை ஒவ்வொன்றினதும் பலம், பலவீனம் பிற ஊடகங்கள், கனேடிய அரசியல், கனேடிய பூர்வகுடிகள் தொடர்பான வரலாறு, இங்குள்ள படைப்பாளிகள் என்று ஒவ்வொரு விடயம் தொடர்பாகவும் உரையாடவும், கற்றுக் கொள்ளவும், தளராமல் ஆலோசனையும் வழிகாட்டலும் செய்யும் ஒருவராக கருணா அளவுக்கு எனக்கு உதவியவர்கள் வேறுயாரும் இல்லை என்று சொல்லவேண்டும்.

ஸ்காபரோவுக்கு நாம் வந்தபின்னான மூன்று ஆண்டுகள் எங்கள் வீட்டில் கருணா இல்லாத ஒரு நண்பர்கள் சந்திப்போ அல்லது ஒரு இராவிருந்தோ நடந்ததில்லை எனலாம். அப்போதெல்லாம் அவருடனான சந்திப்புக்கள் மிகவும் ஆர்வமும் மகிழ்ச்சியும் அனுபவங்களைப்பகிர்ந்து கொள்ளும் திருப்தியும் அளிப்பவையாக இருந்தன. தாய்வீடு இதழில் நான் எழுதத் தொடங்கியபின் தாய்வீடு சம்பந்தமாகவும் அதன் எழுத்துக்கள் சம்பந்தமாகவும், எங்களுக்குள் தொடர்ச்சியான உரையாடல்களும் விவாதங்களும் நடக்கும். தாய்வீடு பத்திரிகையின் வடிவமைப்பு, அதில் வரும் உள்ளடக்கங்கள், அதன் தலைப்புக்கட்டுரை, நேர்காணல்கள் என்று ஒவ்வொரு விடயம் தொடர்பாகவும் அவர் தமது தெரிவுகள் பற்றிய தெளிவுடன் இருந்தார். என்னுடைய பார்வையில் அதில் இன்னமும் சேர்க்கப்பட வேண்டிய விடயங்கள் என்று நான் சொல்பவை பற்றி தொடர்ச்சியாக அவர் விவாதிப்பார். ஆயினும் நான் குறிப்பிடும் பல விடயங்களுக்குரிய பத்திரிகையாகவல்ல தாம் தாய்வீடு பத்திரிகையை கொண்டுவர விரும்புவது என்பதில் அவர் தெளிவாக இருந்தார். நேர்த்தியாக, தகவற் பிழை அற்றதாக, பெருமளவான வாசகர்களைச் சென்றடையக் கூடியதாக விடயங்கள் எழுதப்பட வேண்டும் என்பதில் அவர் மிகவும் கறாராக இருப்பார். மாற்றுக் கருத்துக்களை உதாசீனம் செய்யாது கேட்கும் அதே வேளை தான் என்ன செய்கிறேன் என்பதில் அவர் தெளிவாகவும் இருக்கிறார் என்பது எனக்கு அவரில் பிடித்த ஒரு முக்கியமான பண்பு.

வசதியான வார இறுதி நாட்களிலெல்லாம் எங்கள் வீட்டில் நாம் சந்தித்துக் கொள்வோம் அப்படிச்சந்தித்த ஒரு நாள் நிழற்படக் கலை தொடர்பான உரையாடல் ஒன்று ஆரம்பமானதைத் தொடர்ந்து அவர் தனது தொலைபேசியில் சேமித்து வைத்திருந்த தனது புகைப்படங்களை எங்களுக்கு காட்டத் தொடங்கினார். கிட்டத்தட்ட நிழற்படம் எடுத்தல் பற்றிய ஒரு சுவையான விளக்கமளித்தலாக அமைந்த அந்த உரையாடல் நடந்த அன்றுதான், உண்மையில் அந்தக் கலையின் பின் இவ்வளவு விடயங்கள் இருக்கின்றன என்பதை நான் தெரிந்துகொண்டேன். நிழற்படம் எடுப்பதில் ஆர்வமுள்ள எனது மகள்மார் இருவரும் ஆர்வமுடன் அவர் சொல்லும் ஒவ்வொன்றையும் கேட்டுக்கொண்டிருந்தனர். அந்த நாள் நள்ளிரவின் பின் அவர் விடைபெறும் போது அடுத்தவாரம் எங்கள் வீட்டில் எங்களை வைத்து ஒரு 'ஃபோட்டோ சூட்' செய்ய வருவேன், தயாராக இருங்கள் என்று சொல்லிவிட்டுச் சென்றார். ஆனால் அவர் செல்லும் போது நானும் அவரும் இருந்த 'சந்தோசமான' நிலை காரணமாக, அந்த 'ஃபோட்டொ சூட்' நடக்குமென்று எங்கள் வீட்டில் யாரும் - அடுத்தவாரம் சொன்னபடி தான் வரப்போவதாக கருணா அறிவிக்கும் வரை - நம்பியிருக்கவில்லை. சொன்னபடி அவர் தனது அனைத்துக் கருவிகளுடனும் வந்து சேர்ந்தபோது தான், உண்மையிலேயே அது ஒரு பெரிய வேலை தான் என்பது எனக்குப் புரிந்தது. அந்தப் 'படப்பிடிப்பு' முடிந்து சென்று இரண்டொரு நாட்களில் எங்கள் ஒவ்வொருவரதும் ஒவ்வொரு படப் பிரதியை எங்களுக்கு அனுப்பியிருந்தார், அருமையான படங்கள். ஆனால் மீதிப்படங்களை அவர் அனுப்பவில்லை. ஏன் அனுப்பவில்லை என்று கேட்ட போது, என்ன அவசரம் ஆறுதலாக செய்து தருகிறேன் என்றார். அதற்கான பணம் பற்றியும் நான் கேட்டேன். அதற்கு கருணா சொன்ன பதில்: 'இது நான் கேட்டு எடுத்தது. உங்கள் வீட்டில் படம் எடுக்க வேண்டிய சந்தர்ப்பம் வரும்தானே, அப்போது அதைப்பற்றிக் கதைப்போம்'.

இன்னொரு சிலநாட் கழித்து நான் படங்கள் பற்றிக் கேட்டபோது, 'படங்களை என்ன நான் செத்ததுக்குப் பிறகு போட வைச்சிருக்கிறியளோ' என்று கிண்டலாகக் கேட்டேன். கருணா, ஓம் அதுக்கும் என்னட்டை படம் இருக்கு. எடுத்திட்டன். உங்களை மட்டுமல்ல நிறையப் பேற்றை வச்சிருக்கிறன். ஆனால் மற்றப் படங்களை தாறன் கொஞ்சம் இப்ப பிஸி அதுதான். என்று சொன்னார். மெல்லிய சிரிப்புடன்.

காலச்சுவடு வெளியீடாக வெளிவந்த ஔவையின் 'எதை நினைந்தழுவதும் சாத்தியமில்லை' கவிதைத் தொகுப்புக்கான அட்டைப்படமாக உங்களது படம்தான் வரவேணும் என்று சொன்னபோது சந்தோசமாக அதை வடிவமைத்துத் தந்தார். பின்னர் மார்க்கத்தில் நடைபெற்ற அவரது ஓவியக் கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்த ஓவியங்களில் அந்த அட்டைக்கான படமும் பெரிய அளவில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. அதை நாம் வாங்குவதாக சொல்லிவிட்டு வந்தோம்.

2017 பெப்ரவரி 26 அன்று ஒரு கடும் குளிர் வேளையில் வீடு தேடிவந்து அந்த ஓவியத்தை நாங்கள் வசித்த அப்பார்ட்மென்ற் வாசலில் வைத்து தந்துவிட்டுச் சென்று தனது முகநூலில் எனக்குக்கையளித்த படத்தையும் வெளியிட்டிருந்தார்.

என்னி இரண்டு வருடங்கள். இப்போது அவர் இல்லை. நான் மொன்றியல் போனால் கியுபெக் போனால் அல்லது வேறெங்கு போனாலும், அதைப்பாருங்கள், அங்கே இதைப்பாருங்கள் என்று சொல்வது மட்டுமல்ல, அவை பற்றிய விபரங்களை கூகிளிலிருந்து தேடி எடுத்து எனக்கு அனுப்பியும் வைப்பார். நான் நிற்குமிடத்துக்கு 'கோல்' பண்ணி அதைப் பார்த்தீங்களா? எப்பிடியிருக்கு? என்று அக்கறையோடு கேட்டு எனது சந்தோசத்தைப் பார்த்து தானும் சந்தோசமடையும் அந்தக் கருணா இன்று இல்லை. கருணா இல்லாத கனடாவை நினைக்க, கனடாவுக்கும் எனக்குமான உறவை வளப்படுத்துவதில் பெரும்பங்காற்றிய கருணா இல்லாத கனடாவை நினைக்க நினைக்க, இவ்வளவு அன்பும் மதிப்பும் வைத்திருந்த நாட்டைவிட்டு இவ்வளவாக விரைவாக ஏன் சென்றான் என்ற கேள்வி ஒரு மலையாக என் நெஞ்சில்.



vickneaswaran.sk@thaiveedu.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலையுலகின் நித்திய ஜீவிதம் கருணா



- ந. இரவீந்திரன் -

என்னில் இணைந்த நினைவாகத் தொடர்கின்ற பல நண்பர்களுடனான முதல் சந்திப்பு எதுவென எவ்வளவுதான் தேடிய போதிலும் கண்டுணர இயலாத ஆழம் பலர் தொடர்பில் உண்டு கருணா வின்சென்ற் உடனான தொடர்பு ஏற்பட்ட தருணம் மறக்கவியலாததாக அமைந்தது. தொழில் முறை புகைப்படக் கலைஞராக கனடாவில் 2013ம் ஆண்டு ஜுன் மாதம் சந்தித்து உரையாடிய முதல் அனுபவத்தில் அவருடைய சமூக அக்கறையை கண்டுணர இயலுமாகி இருந்ததே அல்லாமல் அவரது கலைத்திறன் பரிமாணங்கள் பற்றி தெரிந்து கொள்ள வாய்ப்பிருக்கவில்லை. தன்னை எடுத்த எடுப்பில் வெளிப்படுத்திக் கொள்கிற அவசரம் ஏதுமற்ற தேர்ந்த கலையுள்ளத்துடனே உரையாடிச் சென்றார்.

தொடர்ந்தும் நட்புணர்வோடு கனடாவைக் கண்டு தரிசிக்க அவசியமானவற்றைக்காட்டிச் செல்கிற சந்தர்ப்பங்களிலும் புகைப் படங்களாய் அந்த தருணங்களைப்பதிவதிலும் சமூக அரசியல் பண்பாட்டு தளங்கள் சார்ந்த உரையாடல்களிலும் ஈடுபட்டாரே அன்றித் தனது ஓவிய ஆற்றல் பற்றி எந்த அடையாளத்தையும் காட்சிப்படுத்தவில்லை எனது ஈடுபாடு அதன்கண் இல்லை என்பதால் வலிந்து அதனுள் நுழைப்பதற்கு அவசரப்படவேண்டாம் எனக் கருதியிருக்கக் கூடும். சேகர் வீட்டில் சுவரில் தொங்கிய ஓர் ஓவியத்தில் நான் லயித்திருந்தபோது சேகர்தான் கருணாவின் கைவண்ணம் அது எனக்கூறி அவருடைய ஆற்றல் குறித்து விரித்துரைத்தார். கடந்த வருடம் ஜுலை மாதம் சேகர் வீட்டில் இரவு உணவு முடித்து உரையாடிக்கொண்டிருந்தபோது, தீவிரமான ஒரு விவாதத் தொடரை இடைநிறுத்தி சேகரின் மகளுடைய ஓவிய முயற்சி ஒன்றைக் கண்டு அவருடனான கற்றல் - கற்பித்தல் நடவடிக்கையில் கருணா ஈடுபடத் தொடங்கிய போது அந்தக் கலையுள்ளம் பற்றிய நேரடி அனுபவம் எனக்கு கிட்டியிருந்தது.

அவருடைய அந்தக்கலையுணர்வின் பரிமாணங்களில் இங்கு நான் இறங்க முயலவில்லை. அதுவாக இயங்கிய அவருள்ளம் சமூக ஊடாட்டத்துடன் நட்புப் பாராட்டி எனக்கு காட்டி இருந்த புதிய தடங்கள் குறித்து ஓரிரு நினைவுகளை இங்கு மீட்பது அவசியம். சேகர், கருணா, தாய்வீடு டிலிப்குமார் ஆகியோர் ரொறன் ரோவில் உள்ள பூர்வகுடிமக்களது அருங்காட்சியகம் ஒன்றுக்கு அழைத்துச் சென்றிருந்தனர். ஒவ்வொரு நண்பரும் தத்தம் நோக்கில் அதனை கண்டுணர வழிப்படுத்தியது போல கருணா பூர்வகுடி மக்களின் கலை உணர்வூடாக அவர்களது வாழ்வை தரிசிக்க ஆற்றுப்படுத்தினார். மக்கள் கலையின் அழகியலைத் தனது நவீனத்துவக் கோட்பாட்டு விருத்தியோடு கையாளுகின்ற கலைப்பாணியை இதன் வாயிலாக அவர் வெளிப்படுத்துகிறார் என உணர முடிந்தது(அந்த அருங்காட்சியகம் அடுத்த வருடத்தில் மூடப்பட்டு விட்டது என சேகர் கூறியிருந்தார் இவர்கள் அக்கறையுடன் நண்பர்களை அழைத்துச் சென்று காட்டுவதை போலப் பலரும் ஆர்வம் காட்டாத காரணத்தால் நட்டத்துடன் கொண்டியக்க இயலாமல் மூடப்பட்டுவிட்டதான செய்தி துயர் மிகுந்தது).

அவர்கள் தெரிவுசெய்து காட்டுவது தவிர்ந்து பார்க்கவேண்டியதான என்னுடைய விருப்பம் ஏதும் உள்ளதா எனக் கேட்டபோது நோர்மன் பெத்யூன் நினைவில்லத்தைப் பற்றி கூறியிருந்தேன். ஒரு முழுநாளை அதற்காக சேகர் எங்களுக்கு ஒதுக்கிய போது கருணாவும் எங்களுடன் இணைந்து கொண்டார். வைத்தியத்துறையில் பல சாதனைகளைப் புரிந்து கண்டுபிடிப்புகளின் நாயகராகவும் துலங்கிய நோர்மன் பெத்யூன் பிறந்து வளர்ந்த இல்லம் ஒன்ராறியோ மாகாணத்திலேயே உள்ளது. ஜப்பானிய ஆக்கிரமிப்புக்கு எதிராக சீன மக்கள் முன்னெடுத்த போராட்டத்தில் செஞ்சேனை வீரர்களுடன் பயணித்து வைத்தியப் பணியாற்றித் தனது காயத்துக்கு உரிய மருத்துவம் பெற இயலாது மரணத்தை தழுவிய நோர்மன் பெத்யூன் மக்கள் சீனத்தால் பெரிதும் மதித்துக் கொண்டாடப்படுகிறவர். கனடாவில் அவரது இல்லம் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதிக்கான வாழ்வியலையும் அன்றைய வைத்திய நுட்பங்களையும் காட்டும் வகையில் அருங்காட்சியகமாகத் திகழ்கிறது. அன்றைய நாள் எமது குடும்பம் அந்த வீட்டில் 'வாழ்ந்த' கணங்களை கருணாவின் புகைப்படக் கருவி அற்புதமாகப் பதிவாக்கி நிரந்தரப்படுத்தித் தந்துள்ளது.



அந்தப் பயணிப்புக்குரிய அரசியல் - சமூக உணர்வலையுடன் இணைந்த சம கால எமது வாழ்நிலைச் செல்நெறிகள் குறித்த விவாதம் மிக ஆரோக்கியமாக அமைந்திருந்தது. அவையனைத்தும் விரிவாக மீட்டுப்பார்க்க உகந்தவை. இங்கு பதச்சோறாக ஒரு அம்சம் மட்டும். எழுபதாம் ஆண்டுகளின் முற்போக்கு இயக்க அரசியல் எழுச்சியில் இயக்கம் கொண்டிருந்த எனக்கு, எண்பதாம் ஆண்டுகளில் தமது பதின்ம வயதைக்கடந்து சமூக அக்கறையுடன் உலகைப் புரிந்துகொண்ட கருணா, சேகர் ஆகியோருடைய கருத்து நிலைகளுடன் ஏற்கனவே விவாதப் பரிச்சயம் உண்டு. முற்போக்கு இயக்கம் தேசிய இனப்பிரச்சினையைச் சரியாக அணுகவில்லை என்ற விமர்சனம் பலரிடம் உள்ளதைப் போன்று அவர்களிடமும் காணப்பட்டிருந்தது.

கூடவே, முற்போக்கு இயக்கம் களமாடிய சாதியத் தகர்ப்புப் போராட்ட எழுச்சியின் பதிவுகள் தொடர்பிலும் கருணா கேள்விகளை எழுப்பியிருந்தார். குறிப்பாக டானியலின் நாவல்கள் சார்ந்தவை அவை. பஞ்சமர், பஞ்ச கோணங்கள் போன்ற நாவல்களில் வெள்ளாளப் பாத்திரங்கள் ஒடுக்கப்பட்ட மக்கள் போராட்டத்திற்கு வழிகாட்டுவது போல டானியலால் சித்தரிக்கப்பட்டிருப்பது எவ்வகையில் சரியாகும் என்ற கேள்வி தொடர்பில் கருணாவின் தர்க்கங்கள் விரிந்திருந்தன. தமிழகத்தின் பல தலித்திய விமர்சகர்களுங்கூட இந்தக் கேள்வியை எழுப்பியுள்ளனர். அந்தப் பாத்திரங்கள் எவையும் டானியலின் கற்பனைகள் அல்ல. வாழ்ந்து செயற்பட்டவர்களையும் உண்மைச் சம்பவங்களையும் அவர் படைப்பாக்கி இருந்தார். இந்த விடயங்களை கருணாவுடன் விவாதித்த போது எமக்கான வெளிப்பாட்டு வடிவங்கள் குறித்த கற்றல் தெளிவை முற்போக்கு அணியினர் பெற்றாக வேண்டும் எனும் புரிதல் எட்டப்பட்டிருந்தது.

ஐரோப்பாவில் வாழும் நண்பர்கள் கூடக் கூறுகின்ற ஒரு விடயம், கனடாவில் உள்ளவர்கள் தங்களிடம் வருகின்ற நெருங்கிய உறவினர்களுக்காகவும் நேரம் ஒதுக்க இயலாமல் வாழ்வைத் தொலைத்து பகட்டாக வாழ்வதாகப் பிறருக்குக் காட்ட ஓடிக்கொண்டு இருக்கிறார்கள் என்பது. அத்தகைய சூழலில் பல வேலைப்பளுக்களின் மத்தியிலும் இந்த நண்பர்கள் தமது நேரத்தை ஒதுக்கி இருந்தனர் மக்கள் நல நாட்டத்துடன் சமூக மாற்றத்தை வேண்டி நிற்கும் மனப்பாங்கு சார்ந்தது இப்பண்பு. மக்களை நேசித்த, விடுதலைப் போராட்ட தடங்களை சரியாக வெளிப்படுத்த வேண்டும் என்ற அக்கறையைத் தனது உயிர் மூச்சாகக் கொண்டிருந்த, அதன் வெளிப்பாடாகத்தூரிகையால் பேசிச் சென்ற மனிதத்தின் ஒரு பதிவு கருணா வின்சென்ற் தொடர்ந்தும் மக்கள் உணர்வெழுச்சிகளில் உரையாடியபடி வாழ்வார்.



raveendran.n@thaiveedu.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை வாழ்வைத் துலங்கவைத்த கலைஞன்



- கந்தையா ஸ்ரீகணேசன் -

மொழிபெயர்ப்புக் கற்கைநெறியின் வழி நடத்துதலுக்காக பல்வேறு பல்கலைக் கழகங்களில் நடைமுறைகளுடாக பயிற்சி பெறும்முகமாக கனடாவுக்கு முதன்முதலில் சென்ற வேளை ஈழத்து இலக்கிய நண்பர்களின் தரிசனம் ரொறன்ரோவில் கிடைத்தது. மிகவும் அன்போடு பழகிய பழைய முகங்கள் இரண்டு. ஒருவர் ஈழத்தில் எங்கள் காலத்து இளங்கவிஞனாக பரிணமித்தவர், ஈழத்துப்போர்க்கால அவலங்களை, அரசியல் குரலை ஓங்கி ஒலித்தவர். தற்போது யோர்க் பல்கலைக் கழக சமூகவியல்துறைப் பேராசிரியர் உருத்திரமூர்த்தி சேரன். மற்றயவர் மாணவரும் முன்னைநாள் யாழ் பல்கலைக்கழக வவுனியா வளாக கலை கலாசார மன்றத்தின் தலைவரும் 'தடம்' சஞ்சிகையின் ஆசிரியர் குழு உறுப்பினரும், வவுனியா கலை இலக்கிய வட்ட செயற்பாட்டாளருமாகிய திரு. தம்பிராசா விஜயசேகர், இவர்களோடு 'காலம்' சஞ்சிகை ஆசிரியர் திரு.செல்வம் அருளானந்தம் மற்றும் எமது அன்புக்கு பாத்திரமாக தொடர்ந்த அன்பர் ஓவியர், புகைப்பட பிடிப்பாளர் திரு.கருணா வின்சென்ற்.



ஒரு புகைப்படப்பிடிப்பாளராகவே எனக்கு அந்த 2013 கனடாப் பயணத்தின் போது அறிமுகமாகி 'தாய்வீடு' பத்திரிகையில் எனது நேர்காணலின் படங்களை அழகுற எடுத்து பதிப்பு அழகியலுக்கு ஏற்ப இதழ் அமைப்பில் கவனம் செய்து பதிப்பித்து நேர்காணலின் கருத்துக்களுக்கு ஒரு கவர்ச்சியையும் ஏற்படுத்தியிருந்தார். அக்கவர்ச்சியின் மந்திரம் ஏது என ஆராய்ந்ததில் ஓவியர் கருணாவின் அழகியல் பார்வையின் பதிவுதான் அது என சேகர் மூலம் புரிந்துகொண்டேன்.

இந்த மேற்படி புரிதல் நேரிடையான அனுபவமாக 2017ம் ஆண்டு கனடா பயணத்தில் கிடைக்க வழிகோலியது. கருணாவுடன் சேகர் ஏற்படுத்திய சந்திப்புக்கள், 'தாய்வீடு' சமூகத்தின் அனுசரணையுடன் தமிழ் ஆய்வு மையத்தின் அழைப்பின் பேரில் கிடைத்த அடுத்த பயணத்தில் கருணா எனும் ஓவியரின் பிரமாண்டமான கலைப் பார்வையை தரிசிக்க முடிந்தது. இடைக் காலத்தில் அவ்வப்போது கனடாவில் இருந்து சேகர் மூலம் கிடைக்கும் 'தாய்வீடு' பத்திரிகை ஊடாக கருணா அவர்களது இதழியல் அமைப்புக்கலை பற்றி சற்று அறிய முடிந்தது. பின்னர் நேரடி சந்திப்புகளில் அதை அனுபவிக்கவும் நேர்ந்தது. 'தாய்வீடு' குழுமத்தின் நாடகவிழாவின் போதும், Art Gallery of Ontarioவில் ஓவியங்களைப் பார்வையிட்ட போதும் பின்னர் Alexander Graham Bellன் வீட்டைப் பார்க்கச் சென்ற வேளையிலும், இரண்டு பாலங்கள் இணைக்கப்பட்டும் திறக்கப்பட்டும் கப்பல்களில் இயக்கத்திற்கும் வழிவிடும் கனடாவின் நீர்ப்பாலம் ஒன்றை பார்வை இட்ட போதும் கருணா அவர்களின் தீட்சண்யமான கலைப்பார்வை, நுணுகி ஆராயும் திறன் ஆழமான மனித வாழ்வின் தரிசனம் என்பவற்றை அனுபவிக்க முடிந்தது.

அருகிருந்து வாகனத்தில் செல்லும் போதும் 'தாய்வீடு' பத்திரிகை இதழ்களைப் புரட்டிக்காட்டி எவ்வாறு எப்படிப் படங்கள் இதழ் அமைப்பில் வைக்கப்பட வேண்டும், தலைப்புக்களின் எழுத்து அளவுகள், குறுக்கு வெட்டில் வைக்கப்பட வேண்டிய செய்தியின் அளவுமட்டமும் அமைப்பும், படங்கள் வைக்கப்பட வேண்டிய கோணம், உருவ அமைப்பு உள்ளடக்கம் என்பவற்றின் இடங்களை துல்லியமாக எடுத்துரைத்தார்.



கலை இரசனைக்கு முக்கியமாக கலைப் பார்வை அவசியம் ஆகும். அத்தகைய காத்திரமான கலைப்பார்வை பெறுவதற்கு ஒரு படிப்பு அவசியம். ஒரு வழிகாட்டல் அவசியம். ஆரம்ப காலங்களில் சூழல் தரும் கலை இலக்கியப் பார்வை, கல்வி, வாசிப்பு, பார்வையிடல் வழிகாட்டுவோர் என்பன போன்ற காரணிகளால் வளப்படுத்தப்படுகின்றது. புடம் போடப்படுகின்றது. வீட்டுச்சூழலின் அழகியல், உறவுகளின் இரசனை, பின்னர் நட்பு வட்டத்தின் கலைப்பார்வை, ஆசிரிய உலகின் வழிகாட்டல் என்பவற்றால் மெருகூட்டப்பட்ட பார்வை என்னளவில் பேராசிரியர் மௌனகுருவினால் பெருமளவு வளர்க்கப்பட்டது. தொடர்ந்து குழந்தை சண்முகலிங்கம். அலை ஆசிரியர் யேசுராசா, கவிஞர் சேரன், நாடகக் கலைஞர் சிதம்பரநாதன், எழுத்தாளர் இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன், ஓவியர் ஆசை இராசையா எனப் பல கலை இலக்கிய கல்வி உள்ளங்களால் வழிகாட்டப்பட்டு வளர்க்கப் பட்டது. தொடர்ந்த இந்த 'கற்கும் போக்கில்' கருணா முக்கிய இடம் பெறுகிறார். ஆர்ட் கலரியில் (Art Gallery) ஒவ்வொரு காலகட்ட ஓவியர்களின் வார்ப்பு பாணி, வடிவம், செல்வாக்குச்செலுத்திய அம்சங்கள் எனப் பலவற்றை விளங்கப்படுத்தியிருந்தவை நினைவுக்கு வருகிறது. ஈழத்தில் மாற்கு மாஸ்ரரின் ஓவியங்களை இரசிக்க பழகி அவர் மாணவிகளின் ஓவிய கண்காட்சி பற்றியும் (வாசுகி, அருந்ததி...) கட்டுரை எழுதியிருந்தேன். பின்னர் ஆசை இராசையாவுடன் பழகி அவரது பார்வை பற்றியும் பரிச்சயம் கொண்டிருந்தேன்.

இடையில் நாடகக்கலைஞர் எஸ்.ரி.அரசு அவர்கள் கூறியிருந்த 'புகைப்பட எடுப்பு' பற்றிய விரிவுரையையும் மனதில் கொள்ள வேண்டும். எந்த முகத்துக்கு எந்தக் கோணத்தில் எடுத்தால் நல்லது என்று எனது முகத்துப் படங்களை எடுத்துக் காட்டி விளக்கியிருந்தார். அப்படியே ஓவியர் ரமணி வரையும் அட்டை ஓவியங்களின் சிறப்பையும் இரசனையாக எடுத்துரைத்திருந்தார். பல்கலைக்கழக மற்றும் திருமறைக் கலா மன்ற ஓவிய சிற்பக் கண்காட்சிகள் ஊடாகவும் கலாநிதி சனாதனனின் ஓவியம், கட்டுரைகள் ஊடாகவும் நவீன ஓவியங்கள் பற்றிய அறிவை சற்றுப் பழகி இருந்த நிலைமையில் கருணாவுடன் கனடாவில் பழகிய வேளைகளில் அவர் கொடுத்த விளக்கங்களும் வியாக்கியானங்களும் ஓவியங்கள், புகைப்படங்கள் அவற்றின் 'வைப்பு முறைமை' பற்றி எல்லாம் சரியாக அறிய முடிந்தது. மேலும் நாடக விழாக்களின் போதும், பயிற்சிகள் நடைபெறும் போதும், ஒளி அமைப்பு மேடை ஒழுங்கில் கவனம் கொள்ள வேண்டிய அம்சங்கள் பற்றி நண்பர்களுடன் விவாதிப்பார். பின்னர் விழா பற்றிய பதிவுகள் 'தாய்வீடு' மற்றும் சஞ்சிகைகளில் (காலம்) வெளிப்படுத்தும் போது அவற்றின் அமைப்புக்களில் சிறந்த கரிசனை கொள்வார்.

நிறைவாக, அவர் குறிப்பிட்டு வந்த ஒரு விடயம் இன்னும் மனத்தில் ஒலிக்கிறது. ஆமாம், அவர் எழுதிய ஓவியர்கள், மற்றும் ஓவிய இரசனை பற்றிய கட்டுரைகள் 'தாய்வீடு' மற்றும் சஞ்சிகைகளிலும் வெளிவந்த அவரது கலைசார்ந்த கட்டுரைகள் ஓவியங்கள் பற்றிய பரிச்சயத்துக்கு வழிகோலும் கட்டுரைகள்,இவைகளை தொகுத்து நூலாக்கினால் இளைய தலைமுறையினரும், தாயக தமிழ் வாசகர்களும் வாசித்து அறிய வழிகோலும் என நான் அங்கலாய்த்த போது அவர் அது பற்றி மிகவும் ஆசுவாசப்பட்டார். தனது கட்டுரைகளை மாணவர் விரும்பப் படிப்பார்களா எனக் கேள்வி எழுப்பினார். ஏற்கனவே ஓவியங்கள் பற்றி ஓரிரு கட்டுரைகள் எழுதிய அனுபவத்தில் கூறினேன். 'தங்கள் கட்டுரைகள் ஓவியத்துக்கான பொறிமுறையுடன் கூடிய விளங்கங்களாக உள்ளன. நாங்கள் எழுதும்போது அந்தளவு விபரங்களை கொடுக்க எம்மிடம் அறிவு, அனுபவம் இல்லை. ஆகவே தங்கள் கட்டுரைகளை தொகுத்து நூலாக்குதல் மிகவும் அவசியம். எப்படி சுப்புடுவின் பார்வை இசை நடனத்துக்கு பொருந்துமோ, அப்படியே கருணாவின் பதிவு ஓவிய, புகைப்பட உலகுக்கு ஒரு புதிய தரிசனமாகும். 'தாய்வீடு' குழுமத்தினரும் நண்பர் டிலிப் குமாரும் கவனம் கொள்ள வேண்டிய அஞ்சலிச் செயற்பாடு அமரர் கருணாவின் ஓவியம் சார்ந்த பதிவுகளை தொகுப்பாக வெளிக்கொணர்வதே. அதுவே அவரது ஆத்ம சாந்திக்கு வித்திடும்.

shriganeshan.k@thaiveedu.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருணா என்றொரு கலைஞன்: நினைத்துப் பார்க்கிறேன்



- ஞானம் லேம்பட் -

‘கருக்கல் வழியில் காத்திருந்த எமக்குக் களத்து மேட்டைக் காட்டிய உங்களுக்கு எனது வாழ்த்துகள்’ என்று தன்னை எனக்கு அறிமுகப்படுத்தினார், பாபு வீட்டில்.

அன்றிலிருந்து நேற்று விட்டுப்போகும் வரை என்னை உற்சாகப்படுத்தியவர்.

றோம் நகர் சென்று திரும்பிய பின் நீங்கள் கட்டாயம் போய் அங்குள்ள சிலைகளையும் சிற்பங்களையும் ஓவியங்களையும் பார்க்க வேண்டும் எனத் தூண்டியவர்.

கலையம்சம் நிறைந்த படங்களைப் பார்த்த உடனே சினிமாக் கொட்டகையிலிருந்தே தொலைபேசியில் அழைத்து அப்படங்களைப் பார்க்க வைத்தவர்.

மனித வாழ்வில் அவலங்களை விரசமின்றி, நெருடலின்றித் தூரிகையால் தூவி விட்டவர். அவரது ஓவியங்கள் கூறுபொருளுக் கேற்பக் குரலெழுப்பி, வலுவாக ஆடி ஓவியத்தின் உட்பொருளைக் கூறுவன. அவ்வோவியங்களின் நெளிவும், சுளிவும், கோடுகளும், வர்ணங்களும் பொருட்களும், அர்த்தங்களும் நிறைந்தவை.

கவனத்தை ஈர்த்து மனதை ஆக்கிரமிக்க வைக்கும் வலிமையானது அவரது ஓவியம். பல்வேறு உணர்வுகளைத் தந்து மனதைத் தத்தளிக்க வைக்கும் சில ஓவியங்களிலுள்ள ஒற்றை வரிகள் நிறைந்த அர்த்தங்களையும், நெருக்கத்தையும் தருவன.

ஓவியங்களை அர்த்தமுள்ளதாக்கி சமகாலப்பிரச்சினைகளை, உணர்வுகளை அதில் ஓடவிட்டு அவற்றை அர்த்தத்துடனும் தெளிவுடனும் வாழ்வியலோடு நெருக்கமாக அமைத்தவன். அவை மனித சமூகத்தின் அனுபவங்களை, மக்களின் துயர் நிறைந்த வாழ்வனுபவங்களைக் காட்டுவன.

முள்ளிவாய்க்கால் படுகொலை இரத்தமும் சதையுமாகக்காட்டப்பட்டது. உறவுகளை இழந்தவர்களின், உடலுறுப்புகளை இழந்தவர்களின் துயர் நிறைந்த அலறல்கள் அவரது ஓவியங்களிலிருந்து வந்தன.



குடம் ஒன்றைத் தலையில் தாங்கிய ஒரு பெண்ணின் ஓவியம். பெரும்பாலும் பெண் தெய்வங்களை வேண்டி ஆண்களால் ஆடப்பட்ட கரகாட்டம் (சக்திக் கரகாட்டம் அல்லது சாமிக்கரகாட்டம்) நாளடைவில் நாதஸ்வரம், தவில், உறுமி, சால்ரா, பம்பை ஆகியவற்றின் இசைக்கலவைக்கு பெண்கள் ஆடும் ஆடுகரகத்தை நினைவூட்டியது.

உலகியல் ரீதியாகவும், கலைரீதியாகவும் முரண்பாடுகளையும், பரிசோதனைகளையும் கண்டவராதலின் கலை பற்றிய தெளிவான கருத்தைக் கொண்டிருந்தார். இதனால்தான் என்னவோ ‘கருஞ்சுழி’ நாடக மேடையேற்றத்திற்கு ஒளியமைப்பின் இயக்குனராகக் கேட்ட போது அந்நாடகத்திற்கு ஒளியமைப்பே முதுகெலும்பு போன்றது. எனவே நீங்களே அதைச் செய்யுங்கள் என மறுத்தவர்.

கலைபற்றிய வாசிப்பும், அனுபவமும் நாடகங்களை விளங்கிக் கொள்ளவும், அதன் நுணுக்கமான கூறுகளை அடையாளங் கண்டு நாடக நிகழ்த்துகைக்கு நாடகத் தயாரிப்பாளர்கட்கு ஆலோசனை கூறுபவனாயும் காணப்பட்டான். நாடக நிகழ்த்துகையின் பின்னரும் பதட்டமில்லாத மனிதனாய் அந்நாடகம் பற்றிக்கலந்துரையாடியதையும் விவாதித்ததையும் கண்டிருக்கிறேன்.

சிறந்த ஓவியராக இருந்ததால் அவனது நாடகச் செயற்பாடுகள் மற்றவர்களால் அதிகம் அறியப் படாததாக இருந்தன. நாடகம் சமூக இரசனையில் தாக்கம் உண்டாக்கும் காலம் வருகையில், இவரது செயற்பாட்டால் ஊக்கம் பெற்றோரால் அவரது நாடகப் பயன்பாடுகள் வெளிவரும்.

கலையைக் காசாக்கவும், பெயராக்கவும் பலர் முயலும் இக்காலத்தில் கலையைக் கலையாகக் கண்ட கருணாவை நினைத்துப் பார்க்கிறேன்.



gnanam.lambert@thaiveedu.com

# ஓவியக் கலைஞர் கருணா

2014 செப்டம்பரில் நான் கனடா சென்றிருந்த போது கனடாவில் கல்விச் சபை அதிகாரியாகப் பணியாற்றும் பச்சையப்பன் கல்லூரியில் படித்த என் மாணவர் பொன்னையா விவேகானந்தன் மூலம் அறிமுகமானவர்கள் கருணா வின்சென்ற், கங்காதரன் கந்தசாமி என்னும் இருவர், என்றைக்கும் என்னால் மறக்க முடியாதவர்கள். கனடாவில் நான் கலந்து கொண்ட இலக்கிய நிகழ்ச்சிகள் அனைத்துக்கும் வருகை தந்தவர்கள்.

நயாகரா நீர்வீழ்ச்சிக்குக் சென்றபோதும் விஞ்ஞானி கிரகாம் பெல் இல்லத்தில் காலடி எடுத்து வைத்தபோதும் இன்னும் பல இடங்களைப் பார்வையிடப் பயணம் மேற்கொண்ட போதும் விவேகானந்தனுடன் கருணாவும் கங்காவும் வருகை தரத் தவறுவதில்லை. அப்போது கருணா 35 வயது இளமைத் தோற்றத்தோடு பொலிவோடு இருப்பார்.

கருணா ஸ்கார்பரோ பகுதியில் வாழ்ந்தவர். அன்றைய நாடாளுமன்ற உறுப்பினர் செல்வி இராதிகா சிற்சபை ஈசனின் நன்மதிப்பைப் பெற்றவர். அன்னாரின் உதவியோடுதான் 25.9.2014 அன்று கனடா நாடாளுமன்ற வளாகத்தைக் காணச்சென்றோம். நாடாளுமன்றம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதே உள்ளே சென்று வருகையாளரின் சிறப்பு இருக்கையில் அமர்ந்து, நாடாளுமன்ற நடவடிக்கைகளை நேரில் காணும் வாய்ப்பினைப் பெற்றேன்.

என் மாணவர் விவேகானந்தன் இல்லத்திலும் கருணா, கங்கா இருவருடனும் பேசிக் கொண்டிருப்பதில் மகிழ்ந்து போனவன் நான்.

இதயங்கவர்ந்த அந்த இளவல் கருணாதான் அண்மையில் இயற்கை எய்திய செய்தியை விவேகானந்தன் மூலம் அறிந்து துடித்துப்போனேன். தற்பொழுது அவருக்கு 50 அகவை இருக்கலாம். நான் சந்தித்த போது 35 அகவை இளைஞனாக மிகப் பொலிவோடு காணப்பட்டார். சிரிக்கச்சிரிக்கப் பேசுவார். பழகுதற்கு இனிய பண்பின் சிகரமாகத் திகழ்ந்து என்னை மிகவும் கவர்ந்தார்.



சிறந்த ஓவியராகவும் ஒளிப்படப்பிடிப்பாளராகவும் வரைகலைக் கலைஞராகவும் திகழ்ந்து ஒளிர்ந்தார். ‘முதல் ஈழத்தமிழ் டிஜிட்டல் ஓவியர்’ என்ற பெருமைக்கு உரியவர் கருணா. ஈழத்தில் ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவர். மாணவனாக இருக்கும்போதே சித்திரக் கதை கையெழுத்து ஏட்டிற்குப் படம் வரைந்திருக்கிறார் அவர். அவரது படம் மாணவரிடையே நல்ல வரவேற்பை அந்நாளிலேயே பெற்றது. நவீன ஓவியக் கலையின் நுட்பங்களை எல்லாம் அறிந்தவராகப் பீடுநடை போட்டவர் கருணா.

2017ம் ஆண்டு தமிழர் மரபியல் பண்பாட்டு மையம் முன்னின்று நடத்திய பொங்கல் விழாவில் கருணாவின் நாற்பதுக்கும் மேற்பட்ட ஓவியங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டன. அவ்விழாவில் சிறந்த ஓவியக் கலைஞராக விருது வழங்கிச் சிறப்பிக்கப்பட்டார்.

தாய்வீடு இதழ் நடத்தி வரும் அரங்கியல் விழாவில் அரங்க ஒளியமைப்பில் மிகப் பெரும் ஆளுமையைச்செலுத்தி வந்த அரிமா கருணா ஆவார்.

கருணாவின் பிரிவை என்னால் தாங்கிக் கொள்ளமுடியவில்லை. கனடாவில் நான் உலாவந்த நாட்களில் என் உள்ளத்தோடு ஒன்றி உலாவந்தவர் கருணா எனில் அது முற்றிலும் உண்மை. வெறும் புகழ்ச்சியில்லை.

கண்ணியமிக்க கருணாவின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து, கருணாவுக்கு என் கண்ணீரைக் காணிக்கையாக்கி வருந்துகின்றேன். அவர் நினைவிடம் நோக்கி வணங்குகின்றேன்.



- பேராசிரியர் மு.பி. பாலசுப்பிரமணியன் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீரைத் தவிர என்னிடம் இப்போது ஒன்றுமில்லை



**- ஓவியர் ஜீவா -**

தாய்வீடு இதழுக்கு ஓவியங்கள் வரைய ஆரம்பித்தபோது, கருணா அடிக்கடி தொலைபேசி வழியாக என்னுடன் பேசிக்கொண்டிருப்பார். பெரும்பாலும் ஓவியங்கள் குறித்த உரையாடல்கள்தான். தாய்வீடு வழியாக ஒரு wacom போர்டு நான் வரைவதற்காக வந்துசேர்ந்தது. கருணா தேர்ந்தெடுத்து டிலிப் அனுப்பி வைத்தார். 2013 பிப்ரவரி மாதம் நடைபெற இருந்த அவ்வாண்டின் தாய்வீடு எழுத்தாளர் சந்திப்புக்கு வரமுடியுமா என்று கேட்டனர். முன்னே பின்னே கடல் தாண்டாத எனக்கு அது ஓர் இன்ப அதிர்ச்சி. வரும்போது தனது தந்தையின் portrait ஐ வரைந்து கொண்டு வரமுடியுமா என்று கருணா கேட்டார். மகிழ்வுடன் சம்மதித்து, வரைந்து எடுத்து வந்தேன். இங்கு பயண ஏற்பாடுகள் நடக்கும்போது தினமும் கருணாவிடமிருந்து மெயில் வரும். கனடாவின் நகரங்கள் குறித்து, அருங்காட்சியகம் குறித்து, நான் வந்து இறங்கப்போகும் Pearson இன்டர் நேஷனல் ஏர்போர்ட் குறித்தும் நிறைய தகவல்கள். விமான நிலையத்தில் இறங்கியவுடன் அருமை நண்பர்கள் டிலிப், துஷி, கருணா, கங்கா, விவேகானந்தன், சேகர் அனைவரையும் முதன் முதலில் பார்த்த மகிழ்ச்சி தாங்கமுடியவில்லை.

கருணா தங்கியிருந்த அடுக்ககத்தின் விருந்தினர் அறையில் முதல் மூன்று நாட்கள் வாசம். கருணாவின் அலுவலகமும் வதிவிடமுமான வீட்டில் நானும் உடன் தங்கிக் கொள்கிறேன் என்றவுடன், வசதிகள் பற்றாது என்று சொல்லி டிலிப் அவர்களின் சகோதரர் இல்லத்தில் தங்க வைத்தனர். ஒரு குழந்தையின் ஆர்வமுடன் கருணா தனது போட்டோ ஆல்பங்களைக் காட்டுவார். அவருடைய ஓவிய ஆசிரியர் மாற்கு குறித்துப் பேச அவர் சலித்ததேயில்லை. ஆசிரியரின் ஓவியங்கள் அடங்கிய நூல்களைக்காட்டுவார். அவருடைய பிரம்மாண்டமான wacom போர்டில் வரைய என்னை அனுமதித்தார். முதன் முதலாக ஒரு போர்ட்ரைட்டை wacomல் வரைந்து அவர் அறையில்தான். மாடலாக நண்பர் விவேகானந்தன். என்னையும் அலங்கரித்து ஓர் அற்புதமான ஸ்டுடியோ போர்ட்ரைட் ஒன்



றும் எடுத்து தந்தார்.

என்னை ஓவிய அருங்காட்சியகங்களுக்குக் கூட்டி சென்று காண்பிப்பதை வெகு ஆர்வத்துடன் கருணா செய்வார். மாண்ட்ரியல், ஒட்டாவா, டொரோண்டோ என்று அலைந்து திரிந்தோம். கனடியப் பழங்குடிகளின் அருங்காட்சியகங்களையும் விட்டு வைக்கவில்லை. IMAX திரைப்படம் ஒன்றை கனடாவில் பார்த்தே தீரவேண்டும் என்ற ஆவலையும் நிறைவேற்றி வைத்தார்.

இதற்கு நடுவில் என்னுடைய வருகையை புகைப்பட பதிவுகளாகவும் செய்து வந்தார் புகைப்படக்காரர் கருணா. நான் நடத்திய மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான ஓவியப்பட்டறைகளை நெறிப்படுத்துவதில் அவர் பங்கு மகத்தானது.

நான் அங்கிருந்த ஒரு மாதமும் கருணாவுடன் செலவழித்த நிமிடங்களை பற்றி எழுதினால் நீண்டு கொண்டே போகும். அவருடைய அக்காள் குடும்பத்தையும் மாமன் மகள் குடும்பத்தையும் அறிமுகம் செய்து வைத்தார். கருணா சீரியசாக முகத்தை வைத்திருந்தாலும் நகைச்சுவை உணர்ச்சியில் தோய்ந்து கிடப்பவர். நான் தமிழக அரசியல்வாதி குறித்த ஜோக் கொன்றைச் சொல்லப்போக, எந்தப் புதிய நண்பரைப் பார்த்தாலும், “ஓவியர், அந்த நிகழ்ச்சியைக் கொஞ்சம் விளக்குங்கள்” என்பார். அப்புறம் என்ன.. வெடிச்சிரிப்பு தான்!

ஐம்பது என்பது மிகவும் இளவயதுதான். கம்பீரமான ஆகிருதி கொண்ட கருணா இவ்வளவு விரைவில் நம்மை விட்டுச் செல்வார் என்பது யாருமே எதிர்பார்க்க முடியாத கடும் அதிர்ச்சி. வெறும் மூன்று வாரங்களே அவருடன் கழித்த எனக்கே இப்படியிருக்கிறது என்றால், அவருடன் எப்போதும் இருந்து வந்த நண்பர்களை நினைத்துப் பார்க்கிறேன்.

கண்ணீரைத் தவிர என்னிடம் இப்போது ஒன்றுமில்லை.



jeeva@thaiveedu.com

# முதலில் வார்த்தைகளைத் தின்றுவிடுகிறது மரணம்

**- அனார் -**

வழியற்றவர்களின் பாதைகளிலும் பயணங்களிலும் விதிக்கப்பட்டிருக்கும் அனுபவங்களே வாழ்வாகும். மரணத்தின் பிறகும் இடமற்ற வெளியில் மிதக்கின்றது காலத்தின் அதிசயமாய்.

நிரந்தரமான ஏதோ பிணைப்பின் வழியாகவே ஓர் உறவு நம்மை இணைத்திருக்கின்றது.

மரணம் திடீரென நம்மை கையறு நிலையில் நிறுத்திவிடும்போது இந்த வாழ்வெனும் அபத்தங்களின் நோக்கத்தை விளங்கியும் விளாங்காமலும் ஏற்றுக்கொள்ள நிர்ப்பந்திக்கப்படுகின்றோம்.

இலக்கியம் தொடர்பான குறிப்பிடத்தக்க இந்த இருபது வருடங்களில் மிக முக்கியமான என் இலக்கியம் சார்ந்த நண்பர்களை மரணம் பிரித்துச் சென்றிருக்கிறது. அவர்கள் என் புலன்களுக்கு அப்பால் உள்ள ஒரு வெளியில் அமர்ந்திருக்கிறார்கள்.

ஓவியர் கருணாவுடனான தொடர்பை ஏற்படுத்தித் தந்தவர் கவிஞர் சேரன் அவர்கள்தான். என்னுடைய ‘எனக்குக் கவிதை முகம்’ கவிதைத்தொகுப்பிற்கு அட்டைப்பட ஓவியத்தை கருணா அவர்களே வரைந்து தந்திருந்தார். அப்போது மட்டுமல்ல எப்போதுமே அந்த அட்டைப்பட ஓவியம் மனதிற்கு நிறைவானதாகும். அந்த அழகான அட்டை ஓவியத்தை வரைந்ததற்காக கருணாவிடம் நன்றி தெரிவித்துப் பேசிய போது அவர் “நீங்கள் அதிர்ஷ்டக்காரப் பெண். பிற தொகுப்புகளுக்கு இத்தனை அழகாய் அமையவில்லை. உங்கள் கவிதைகளுக்கு அப்படியொரு பொருத்தமும் அழகுமாய் அமைந்துவிட்டதில் ஏதோவொரு



அதிர்ஷ்டமிருப்பதாய் நினைக்கிறேன்” என்றார். அவ்வார்த்தைகள் என்னை இன்னும் சந்தோசப்படுத்தின. அவர் கூறியது போலவே ‘எனக்குக் கவிதை முகம்’ தொகுப்பு ஒரு அதிர்ஷ்டமிக்க கவிதைத் தொகுப்பாகவே இருக்கிறது. அதன் பிறகு பல சந்தர்ப்பங்களில் கருணாவும் நானும் உரையாடியிருக்கிறோம்.

2015ல் நான் கனடா சென்றபோது, காலம் செல்வம் அவர்களுடன் தாய்வீடு ஆசிரியர் டிலிப்குமார் அவர்களையும் ஓவியர் கருணா அவர்களையும் சந்தித்தேன். பின்னர் ஓவியர் கருணாவும் டிலிப்குமார் அவர்களும் என்னையும் அஸீமையும் அழைத்துக்கொண்டு பல இடங்களைச் சுற்றிக் காட்டினார்கள். ஒவ்வொரு இடத்தையும் பற்றிய விளக்கங்களையும் மிக அர்த்த பூர்வமாக விளக்கிக்கொண்டே இருந்தார் கருணா. அழகான Toronto Music Garden முழுக்க கருணாவுடன் உரையாடியபடி நடந்தபடியேயிருந்தோம். எங்களை நிறையப் புகைப்படம் எடுத்தார். நான் கூறினேன் “எப்பவும் ஒரு புகைப்படத்திற்கான நேர்த்தியான முகவடிவம் எனதில்லை. இன்று உங்களுக்கு ஒரு சோதனையான நாள்தான் கருணா”. அவர் சிரித்தபடியே பொறுமையாக அன்று மாலை வரை புகைப்படங்களை எடுத்துக்கொண்டே இருந்தார். ஓவியம் போன்றமைந்த சில புகைப்படங்கள் இன்றும் என்னிடம் உள்ளன. கனடாப் பயணம் முடியும் தறுவாயில் காலம் செல்வத்தின் வீட்டில் இரவு உணவுடன் உரையாடல் இடம்பெற்றது. அப்போது கருணா மனம் நெகிழ்ந்தபடி அவருடைய வாழ்வின் சில தருணங்களை உருக்கமாகப் பகிர்ந்து கொண்டிருந்தார். ஒரு கட்டத்தில் அவரது அழுகை தீவிரமாக வெடித்தது. உணர்ச்சிகரமாக நீண்டு சென்ற அந்த நேரத்தில் அவருடைய சொற்கள் என்றுமே காயாத ஈரச் சுவர்போல பாசிபற்றிக் கொண்டிருக்கும் செங்கற்களைப்போல என்னுள் இருக்கின்றன.

சமீபமாக சென்ற வருடத்தில் (2018) மீண்டும் அவரே தொடர்பை ஏற்படுத்தினார். சில இளைய கலை ஆர்வமுள்ள நண்பர்களை இணைத்து இன நல்லுறவுக்கான கலை இலக்கிய விழிப்பூட்டல் நிகழ்வுகள் தொடர்பாக ஆலோசனைகளையும் திட்டங்களையும் பேசிக்கொண்டோம். கருணாவின் முயற்சியால் அவ்விதமான சில நிகழ்வுகள் நடந்தேறின. அதைத் தொடர்ந்து முன்னெடுப்பதற்கான விருப்பத்தினைக் கொண்டிருந்தார். அவருடைய நெருங்கிய நண்பர்களைப்போல் கருணாவை நான் ஆழமாக அறிந்திருக்கவில்லை. ஆனால் உண்மையான பரிவும் தோழமையும் பரஸ்பர மரியாதையையும் இருவரும் கொண்டிருந்தோம். சென்ற டிசம்பரில் அவர் இறுதியாகப் பேசும் பொழுது அந்த உரையாடல் வெவ்வேறு நிகழ்வுகளும் திட்டங்களும் நட்புவட்டம் தொடர்பாகவும் மிகுந்த சந்தோசமான உணர்வுகளோடுமிருந்தது. எங்கள் உரையாடலில் ‘ஆம்’ என்பதற்கும் ‘இல்லை’ என்பதற்கும் நடுவில் கருணாவின் மரணம் மறைந்திருந்ததா? என் பதை அன்று நான் அறிந்திருக்கவில்லை...



anar@thaiveedu.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருணா! ஒரு புரியாத புதிர்

- கருணா கோபாலபிள்ளை -

1998 மட்டில் ஏதாவது ஓர் வியாபாரம் செய்யலாம் என்ற எண்ணத்தில் விசிட்டிங் காட் வடிவமைப்பதற்காக சந்தித்த ஓர் விசித்திரமான மனிதர் தான் கருணா அண்ணா. இருபது வருட நெருக்கமான நட்பு என்றும் கூறமுடியாத துண்டிக்கப் பட்ட உறவு என்றும் கூறமுடியாத, பட்டும் படாத பழக்கம் என்றும் வர்ணிக்க முடி யாத தனக்கென ஓர் உலகத்தில் வாழ்ந் தவர் அவர்.

எனது கேள்விகளுக்கெல்லாம் பதில் அமை தியான புன்னகைதான். அவரைப்பொறுத் தவரை அவரது நுணுக்கமான கலையு ணர்வை புரிந்து கொள்ளத் தெரியாத அல்லது முடியாதவர்களின் வரிசையில் நானும் ஒருவன். இருப்பினும் எனது காரியம் ஆற்றுவதற்காக பல தருணங்க ளில் அவரது படங்களை, ஓவியங்களைப் பார்த்து புகழ்ந்து தள்ளியபோது என்னை அவர் ஏளனமாக பார்த்தது கூட உண்டு.

ஓவியர், படப்பிடிப்பாளர், அரங்க ஒருங் கமைப்பாளர், வடிவமைப்பாளர் என்பத னையெல்லாம் தவிர்த்து இறுதிவரை அவர் ஓர் புரியாத புதிராகவே எனக்குள் தோன் றினார். சாதாரணமான மனிதர்களின் தேவைகள், ஆசைகள், பேராசைகள், ஏக் கங்கள் யாவுமே அவரை பாதித்ததாக நான் ஒரு போதும் பார்த்ததில்லை. எளி மையான தோற்றம், ஆடைகள், மென் மையான பேச்சு, மிகவும் பதுமையான நடை என்று ஓர் வேற்றுலக வாசியாகவே நான் அவரைப்பார்த்ததுண்டு. நாங்களெல் லாம் எதையோ தேடி ஓடிக்கொண்டிருக்க இந்த மனிதன் மாத்திரம் தனக்குள் எத னையோ ஆழமாகத் தேடினார். பல சந் தர்ப்பங்களில் எனக்கும் அவருக்குமான பேச்சுக்கள் ஆன்மீகம் கலந்து காணப்ப டும். இதில் பல மதங்கள், பல அழகிய விளக்கங்கள், தேடல்கள், பதிவுகள் என்று ஓர் அறிவுப்பெட்டகம் போல் தோன்றுவார்.

எதிர்பார்ப்புகளையும் தேவைகளையும் குறைத்துக்கொண்டால், ஏமாற்றங்கள், ஏக்கங்கள் வராது என்பதனை அவரிடம் நான் என்றுமே பார்த்ததுண்டு.

அதிகூடிய மிக முக்கிய தேவைகளாக கருணா அண்ணா கருதியது உணவு,உடை, உறையுள்தான். இவ்வாறு மிகவும் எளி மையாக வாழ்ந்த அம்மாமனிதனுடன் பல முறை சேர்ந்து உணவருந்தியும் களியாட் டங்களில் கலந்து கொண்டும் நான் மீண் டும் பெறமுடியாத அழகிய தருணங்களை அனுபவித்ததுண்டு.

இறுதிக் காலங்களில் பலமுறை வேண்டு தல்களின் பின்னர் எனது அலுவலகத்தில் ஓர் In-House Designer ஆக பொறுப்பேற்ற பின்னர் தனக்குரிய பாணியில் பல அழ கிய வியாபார நுணுக்கங்கள் வடிவமைப் புகளையெல்லாம் தனது பதிவுகளாக விட் டுச் சென்றுள்ளார். அவை என்றென்றும் எம்முடன் வாழும் என்பதில் பெருமையே.

எம்முடன் வாழும் பெரும் கலைஞர்களிடம் காணப்படும் ஓர் பெரிய குறை அவரிட மும் இருந்தது. அதாவது அவரை அல் லது அவரது பெரும் கலைத் திறனை சுற்றியுள்ளவர்கள் அறிந்து கொள்கிறார்கள் இல்லையே என்பதுதான். அந்த வேத னையே அவரை மௌனியாக்கிவிட்டது. இந்த மௌனம் கருணா அண்ணாவின் மரணம் அல்ல - இது ஓர் அரிய பொக்கிசத்தின் மௌனிப்பு.



karunagopalapillai@thaiveedu.com



# கருணா என்றொரு மனிதன்



தன் வாழ்வில் சந்தித்த அத்தனை மனி தர்களையும், தன் எதிர்பார்ப்பில்லாத அன் பினால் வசீகரித்துப் போன கருணாவை நான் 96ம் ஆண்டு 'திண்ணை' எனும் சஞ்சிகை வெளியீட்டின்போது முதன் முத லில் சந்தித்தேன். புதுமையாகவும், அதி நேர்த்தி மிக்கதாகவும் கருணா வடிவமைத்த அந்த இதழ் நிறையவே எமைக் கவர்ந் திருந்தது.

பின்பு 'நுட்பம்' எனும் தொழில்நுட்ப இதழ் ஒன்றை, சில நண்பர்கள் இணைந்து வெளியிடத் தீர்மானித்த போது, கருணா விடம் தான் வடிவமைப்பு செய்ய வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தோம். கரு ணாவுடனான மிக நீண்ட கால நட்பு அங்கே தான் ஆரம்பமானது. பல நாட்கள் இதழின் வேலை பின்னிரவு வரை நீளும். சில வேளைகளில் அதிகாலை வரையும் கூட கருணாவின் அலுவலகத்தில் அரைத் தூக்கத்துடன் இருந்திருக்கிறோம். கிஞ்சித் தும் களைப்படையாமல், உடனிருப்பவர் களை உற்சாகப்படுத்திக்கொண்டு, தான் விரும்பும் தரம் இதழில் வரும் வரை சலிக்காமல் உழைக்கும் அலாதியான திறமை கருணாவுக்கு இருந்தது. இந்தக் காலங்களில் ஓவியங்கள், புகைப்படக் கலை, இசை, இலக்கியம், நாடகம், நடனம், இன்னும் பலவற்றை பற்றி உரையாடியி ருப்போம். இந்த சம்பாசனைகளில் கரு ணாவின் பங்கே அதிகமாக இருக்கும். ஒரு குழந்தையின் ஆர்வத்தோடு கருணா கதைக்கும் அழகில், ஆர்வத்தில் நாங்கள் லயித்துப் போவோம்.

நுட்பத்தைத் தாண்டியும் எங்கள் தோழமை அகலவே விரிந்தது. கருணாவின் நண்பர் கள் எமது நட்புகளாயினர். எங்கள் நண் பர்கள் கருணாவின் அன்பு வட்டத்திற்குள் வந்து சேர்ந்தனர். கருணாவுடனான ஒவ் வொரு சந்திப்பும் நிறையத் தரம் மீண்டும் வேண்டுவதான, வாழ்வின் இறுதிக் காலம் வரை நினைவில் நிற்கக் கூடிய அற்புதத் தருணங்கள்.

மனவெளி கலையாற்றுக் குழுவினரோடு கருணா இயங்கிய காலத்தில், இரண்டு நாடகங்களில் என்னை இழுத்துக் கொண்டு போய் நடிக்க வைத்தார். செழியன் எழுதிய 'என் தாத்தாவுக்கொரு குதிரை இருந்தது' எனும் நாடகத்தை கருணா இணை நெறி யாள்கை செய்த போது அவரின் ஆளு மையின் இன்னொரு பரிமாணத்தை நான் கண்டேன். நிறைய தேடல்களுடன், சின்ன விசயங்களுக்கு கூட அதிசிரத்தையாக கவனம் எடுத்துக் கொண்டார். எள்ளலாக சொல்லவேண்டிய வசனம் ஒன்று நாடகத் தில் அடிக்கடி வரும். அதை நான் உச் சரிக்கும் விதத்தில் கருணாவுக்கு திருப் தியில்லை. எனக்கோ அந்த எள்ளல் அடித் துப் போட்டாலும் வராது போலிருந்தது. கருணாவோ விடுவதாயில்லை. நாடகத் தையே விட்டு விடுகிறேன் என்று கூட சொல்லிப் பார்த்தேன். கருணா மசியவே யில்லை. அந்த ஒற்றை வசனத்திற்காக

- நிமால் நாகராஜா -

ஏகப்பட்ட ஒத்திகைகள் எனக்கு நடந்தன. மேடையில் இந்த ஒரு வசனமே என் மனதை ஆக்கிரமித்து மற்றவற்றை மறந் திடுவேனோ என்று கூட பயந்தேன். இறு தியில் மேடையில் சரியாக உச்சரித்திருக் கிறேன் போலிருக்கிறது. கருணா சிரிப்புடன் என்னை கட்டிப்பிடித்த நினைவு, இருபது வருடங்கள் கடந்தும் இன்னும் மனதில் உயிர்ப்போடிருக்கிறது.

வாழ்வில் நாம் எடுத்த அத்தனை முயற் சிகளிலும் கருணா துணையிருந்தார். கரு ணாவை நம்பியே நிறைய விடயங்களை நாம் முன்னெடுத்திருக்கிறோம். தெரியாத விடயங்களில் கூட அதீத தேடல்களுக் குள்ளால் அற்புத படைப்பைத்தரும் வல் லமை கொண்ட கருணா, தன் எண்ணற்ற திறமைகள் குறித்துச் சிறிதேனும் கர்வம் கொண்டவரில்லை. இவருடன் நட்பாய் இருக்கிறேன் என்ற எண்ணமே எனக்குக் கர்வம் தந்திருந்ததே உண்மை.

ஒப்பற்ற ஓர் ஓவியன். அதீத ஆளுமை நிறைந்த ஓர் அற்புதக் கலைஞன். எதிர் பார்ப்பில்லாத தனது இதயத்தின் மொழி யுடன் எமை ஆகர்சித்துப் போன உயர்ந்த மனிதன். எல்லைகளற்ற திறமைகளுடன் எம் சமூகத்திற்குக் கிடைத்த மிகப் பெரும் பொக்கிஷம். இவனுடன் நானும் வாழ்வில் பயணித்தேன் என்ற நினைவு மட்டும்தான் இப்போதைய ஒரே ஆறுதல்.

இவனது ஓவியக் கைகள் ஓய்வெடுக்க சரியாக ஒரு கிழமையின் முன் தொலை பேசியில் கதைக்கும் போது, எம் வீட் டிற்கு வந்து நாளாகி விட்டது, ஒரு நாள் விருந்துண்ண வருகிறேன் எனக் கேட்ட கருணா, வீட்டிற்கு வரமுதலே விடை பெற்ற கொடுந்துயரில் நான் இப்போது உழல்கி றேன்.

எம் வீட்டின் சுவர்களில் கருணா உயிர் கொடுத்த, எங்கள் மூன்று தலைமுறை யின் நினைவுகள் ஓவியங்களாயப் பேசு கின்றன. பார்க்கும் நேரமெல்லாம் கதைகள் பல சொல்லும் அந்த உயி ரோவியங்க ளுக்குப் பின்னே கருணா எனும் பெருங் கலைஞன் ஒளித்திருந்து சிரிக்கின்றான். அழகிய அந்தப் படங்களின் நடுவேயுள்ள மேசையில், அவனுக்கான மது ஊற்றாக் குவளையும், விருந்துண்ணாத்தட்டும் இன் னும் காலியாகவே கிடக்கின்றன. அவனது நினைவுகளின் நீட்சியில் எம் நெஞ்சமெல் லாம் எரிகின்றன.

கண்ணீர் கரைக்க இயலாப் பெரும் காலத் துயர் இது. கரையேற முடியாப் பெரும் சோகச் சுமை இது.

மலையாய் மேலெழும் அவன் நினைவு- களை எங்கே போய்ப் புதைத்து நான் அழுவேன்?



nimal.nagaraj@thaiveedu.com

# வாழ்வாய் என்றும் எம் உள்ளத்தில்!

*கருணா!*
*அடக்கமான இதயம்!*
*ஆடம்பரமில்லா மனிதம்!*
*தற்பெருமை கொள்ளா உள்ளம்!*
*அறிந்ததை விரிவாக விளக்கும் அற்புதம்!*
*கருணா, ஒரு புத்தகம் அல்ல,*
*ஓர் நூலகம்!*

*திறமைகள் பல இருந்தும்*
*பெருமை கொள்ளா மனமுடையான்!*
*அறிவால் சம்பாதித்தாயா நண்பரை,*
*அல்லது அன்பால் அணைத்தாயா?*
*உன் அடக்கம்! உன்அறிவு!*
*உன் திறமை! உன் பணிவு!*
*அத்தனையும் உன் பக்கம்!*

*உன் அநுபவங்களை*
*நீ வெளிப்படுத்தும் அழகு அற்புதம்!*
*உன் முகத்தில் குதூகலிக்கும் உற்சாகம்,*
*வார்த்தையில் வழிந்தோடும்!*

*நீ விளக்கிய வத்திக்கான் அநுபவம்*
*என் காதில் இன்றும் ஒலிக்கிறது!*
*மாதாவின் மடியில் இறை இயேசு!*
*உன் இதயத்தை இக்காட்சி*
*உலுக்கியதை நான் உணர்ந்தேன்.*
*இயேசு உயிர்த்த நாள்*
*கொண்டாட்ட நேரத்தில்,*
*என் வாய்பேசா மாணவியின் மகளுக்கு*
*வரைதலின் முறைமையை*
*அழகாகக் கற்பித்தாய்.*
*உன் கலையை முறையாய்ப்*
*பயிற்றுவிக்க நீ முயன்றாய்.*
*உன் ஆற்றல்,*
*உன் திறமை அத்தனையும்*
*மற்றவர்க்குக் கற்றுக்கொடுக்க*
*ஆர்வமாய் முன்வந்தாய்.*

*உன் இதய தாகம்!*
*தமிழ் மேல்! கவி மேல்!*
*ஓவியம் மேல்! இலக்கியத்தின் மேல்!*
*மொத்தமாய்ச் சொன்னால்,*
*மெய்யான இயற்கைக்கு மேல்!*
*கருணா!*
*உன் இறப்பின் பின் அறிந்து கொண்டேன்,*
*உன் பெருமை!*
*என் நெஞ்சம் விம்முகிறது*
*உன் இழப்பால்!*
*நீ வாழ்வாய்! என்றும் எம் உள்ளத்தில்!*



- பரமகுலராணி -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருணா மாமா எனும் ஓர் ஊக்கசக்தி

நிழற்படக்கருவியை (camera) எப்படிப் பயன்படுத்துவது என்று எனக்கு கற்பித் தீர்கள்.

அதில் இருந்து தான் எனக்கு தெரியும், உங்களுக்கு புகைப்படங்கள் எடுப்பது எவ்வளவு மகிழ்ச்சியை தருகின்றது என்று.

எனது பள்ளியில் ஒரு ஆவணப்படம் எடுக்க வேண்டியதாக இருந்தது. ஆனால் என்னிடம் ஒரு நிழற்படக்கருவியும் இல்லை. எனது தொலைபேசியாலும் அழகான நிழற்படங்களும் வீடியோவும் எடுக்கலாம் என்றும் சொல்லித்தந்தீர்கள். படங்களையும் வீடியோக்களையும் எப்படி எடுப்பது என்று எனக்குக் காண்பித்தீர்கள். மேலும் அந்த காட்சிகள் எப்படி இருக்கவேண்டும் என்று எனக்கு வரைந்து காட்டினீர்கள். ஒரு சின்ன மாற்றமே ஒரு பெரிய வித்தியாசத்தைக் காட்டும் என்று எனக்கு விளங்கப்படுத்தினீர்கள்.

ஒரு நிழற்படமோ வீடியோவோ எடுக்கும் போது அதை எடுப்பவரின் எண்ணமும் பார்வைக்கோணமும் இணைந்த photographers eye எவ்வளவு முக்கியம் என்று விளங்கப்படுத்தினீர்கள்.

இவை எல்லாவற்றையும் நீங்கள் எனக்கு விளங்கும்படி பொறுமையாகச் சொல்லித் தந்தீர்கள்.

நான் இப்போது எனது தொலைபேசியுடன் ஓரளவு சிறந்த படங்கள் எடுப்பதற்கு காரணம் நீங்கள் தான் கருணா மாமா.

என் ஆவணப்படத்துக்காக விருது கிடைத்து நான் மிகவும் பெருமைப்பட்டேன். உங்களின் உதவி இல்லாமல் இருந்திருந்தால் நான் அந்த பரிசை வென்றிருக்கமாட்டேன் மாமா.

மார்க்கம் நகரசபைக் கட்டடத்தில் நடந்த உங்களது ஓவியக் கண்காட்சியில் என்னைத் தொண்டராகப் பணியாற்றுமாறு கேட்டீர்கள். எவ்வளவு பெருமையாக உணர்ந்தேன் தெரியுமா?

அந்தக் கண்காட்சியில் உங்களது ஒவ்வொரு ஓவியத்தையும் எனக்கு விளக்கப் படுத்தினீர்கள். சில ஓவியங்களின் கருத்து எனக்கு விளங்காமல் இருந்தால், மீண்டும் பொறுமையாக, நான் விளங்கும்படி கூறினீர்கள்.

Art Gallery of Ontarioவுக்கு உங்களோடு வந்த நாள் ஓவியங்களைப் பற்றி நீங்கள் சொல்வதைக் கேட்கும் வாய்ப்புக் கிடைத்த இரண்டாவது நாள். முதல் தடவை மார்க்கம் நகரில் உங்கள் ஓவியங்களைப் பற்றி அறிந்தேன். இரண்டாவது தடவை Art Gallery யில் உலகப் புகழ் பெற்ற ஓவியர்களைப் பற்றியும் அவர்கள் வரைந்த ஓவியங்களைப் பற்றியும் அறிந்தேன்.

தாய்வீட்டில் என்னை எழுத ஊக்கப்படுத்தி, நான் எழுதிய கட்டுரையையும் திருத்தியுதவி, பலரும் என்னைப் பாராட்டச் செய்தீர்கள்.

ஆனால், திடீரென கருணா மாமா எனும் ஓர் ஊக்கசக்தி எம்மை விட்டுப் பிரிந்து விட்டது.

எல்லாவற்றையும் பொறுமையாகச் செய்தீர்கள்...

ஏன் எங்களைப் பிரிவதில் மட்டும் இவ்வளவு அவசரம் கருணா மாமா?



**- தாமரை -**

# அமைதியும் சாந்தமும் நிறைந்த கருணா மாமா



கருணா மாமா மிகவும் அன்பானவர். சாந்தமானவர். அவரை மிக சிறந்த கலைஞர் என்று என் அப்பா சொல்லுவார். ஒரு தடவை கருணா மாமா என்னை பென்சிலால் ஓவியமாக வரைந்து தந்தார்.

எனது நடனம் கருணா மாமாவுக்கு மிகவும் பிடிக்கும். எப்போதும் என்னைப் பாராட்டுவார். சின்னப் பிள்ளைகளுடன் பழகுவதற்கும் அவர்களுக்கு ஓவியம், நிழற்படம் எடுத்தல், தமிழில் தட்டச்சு செய்தல் போன்றவற்றைச் சொல்லிக் கொடுப்பதற்கும் கருணா மாமாவுக்கு மிகவும் விருப்பம்.

புலிமகள், ஈழமகள், அகரன், அருவி, ஆயணி, டிஷாலி அக்கா, தாமரை அக்கா, சின்னக்கா, பெரியக்கா ஆகியோரோடு என்னை Art Gallery of Ontario வுக்குக் கூட்டிக்கொண்டு போய்,. ஓவியங்களைப் பற்றியும் மிகவும் விளக்கமாக எங்களுக்கு சொல்லி தந்தவர். Vincent Van Gogh, Picasso, Leonardo Da Vinci, Michel Angelo போன்ற ஓவியர்களை பற்றி நிறைய விடயங்கள் எங்களுக்கு சொல்லித் தந்தார். கருணா மாமா.

தனக்கு தெரிந்தவற்றை எல்லோருக்கும் சொல்லித் தந்து ஊக்குவிப்பார். எனது சின்னக்காவுக்கு படம் கீறும்போது பென்சில் எப்படிப் பிடிக்க வேண்டும் என்று மிக நுனுக்கமாகச் சொல்லித் தந்தவர்.

எனக்கு மட்டும் அல்லாமல் எனது தங்கைகள், அக்காக்கள், நண்பர்கள் ஏன் உங்கள் எல்லாருக்கும் கருணா மாமா நீண்ட காலம் வாழ்ந்து சொல்லி தர வேண்டிய விடயங்கள் நிறைய இருந்தன.

கருணா மாமாவின் இழப்பு எங்கள் எல்லோருக்கும் பேரிழப்பாகும்.



**- தமிழருவி குலராஜசிங்கம் -**

# அன்பாகப் பழகும் கருணா மாமா

கருணா மாமாவை எனக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்தே தெரியும். எங்கள் வீட்டில் நடக்கும் எல்லா நிகழ்ச்சிக்கும் வருவார். என்னுடைய எல்லா பிறந்தநாள் நிகழ்ச்சியிலும் நான் அவரைக் கண்டிருக்கின்றேன்.

அவருடைய ஓவியங்களை நான் பார்த்திருக்கிறேன். கண்காட்சிலும் பார்த்தேன். அப்பா அவருடைய ஓவியங்களைப் பற்றிக் கூறியிருக்கின்றார். கருணா மாமா அழகாகப் படங்கள் எடுப்பார். என்னையும் அழகாகப் படங்கள் பிடித்திருக்கின்றார். வீட்டுக்கு வரும்போது எனக்கும் மற்ற பிள்ளைகளுக்கு ஓவியம் பற்றிக் கூறுவார். எப்படி பென்சில் பிடிப்பது? எவ்வாறு வரைவது என்றெல்லாம் சொல்லித் தந்திருக்கின்றார்.

எங்களை Art Gallery of Ontarioக்கு அழைத்துச் சென்று காட்டினார். புகழ்பெற்ற ஓவியர்களைப் பற்றியெல்லாம் கூறினார். அன்று ஓவியங்களைப் பற்றி நிறையத் தெரிந்து கொண்டோம்.

நான் நாடகம் நடித்தபோது, அடிக்கடி வந்து பார்ப்பார். அப்படிச் இப்படிச் செய் என்று எனக்குப் பல விடயங்களைக் கற்றுத் தந்தார்.

அவருக்கு இசையைப் பற்றியும் நிறையத் தெரியும். என்னுடைய கடந்த பிறந்தநாளில் அதைப் பற்றித்தான் நிறையக் கதைத்துக் கொண்டிருந்தார்.

எனக்கு you tube channel ஒன்று திறந்து பல நிகழ்ச்சிகளைச் செய்ய விருப்பம். அதை அப்பா அவருக்குச் சொன்னார். அவர் என்னை அழைத்தார். 'நான் உனக்கு எல்லா உதவியும் செய்யுறன். ஒலிப்பதிவு, ஒளிப்பதிவு எல்லாத்துக்கும் நான் உதவி செய்வன். உன்ர 13வது பிறந்தநாளுக்குப் பின் நாங்கள் தொடங்குவம்" என்றார்.

எனக்கு பெரிய மகிழ்ச்சி. என்ற you tube கனவு நிச்சயமாய் நிறைவேறும் என்று நம்பினேன்.

இப்படிச் சொன்ன கருணா மாமா இப்ப இல்லை. அன்பாகவும் இனிமையாகவும் பழகுகின்ற மாமா இப்ப இல்லை என்று நினைக்க பெரிய வேதனையாக இருக்கிறது.

என்னுடைய அடுத்த பிறந்தநாளுக்கு கருணா மாமா இருக்கமாட்டார் என்று நினைக்க அழுகைதான் வருகின்றது.



**- ஆயணி விவேகானந்தன் -**

# கருணா மாமா எங்கள் இரசிகர்

கருணா மாமாவை முதன்முதலில் பல ஆண்டுகளுக்கு முன்பு பார்த்தேன். எங்கே என்று நினைவில்லை. சில ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள், என்னையும் என் தம்பியையும் படம் பிடிக்க விரும்புவதாக என் பெற்றோரிடம் சொன்னது என் நினைவில் இருக்கிறது. ஒரு நாள் திடீரென விவேகானந்தன் மாமா வீட்டுக்கு எங்களை கூப்பிட்டு, எங்களை விதம் விதமாகப் படம் பிடித்தார். படங்களைப் பார்த்தவர்கள் எல்லாருமே பாராட்டும் வண்ணம் படங்கள்



இருந்தன. கருணா மாமா பிடிக்கும் படங்கள் எல்லாமே அப்படித்தான் இருக்கும் என்று பின்னர் அவர் பிடித்த பல படங்களைப் பார்த்து தெரிந்துகொண்டேன். என் தம்பியின் படத்தைப் பார்த்து நிறையப்பேர் தனது முகநூல் பக்கத்துக்கு Like செய்தனர் என்று மகிழ்ச்சியோடு சொன்னார்.

எங்கள் வீட்டில் நடக்கும் பிறந்தநாள் கொண்டாட்டங்களுக்கு அவரையும் அழைப்போம். அப்படி வந்தபோது என்னையும் தம்பியையும் அம்மாவையும் பார்த்துப் படம் வரைந்தார். அவை கோடுகளைக் கொண்ட படங்கள். கோட்டோவியம் என்றார்.

போன ஆண்டு ஜனவரியில் Niagara Fallsக்கு சில குடும்பங்கள் சுற்றுலாச் சென்றோம். கருணா மாமாவும் வந்திருந்தார். அங்கு வைத்து, ஒருவரின் கண்ணை எப்படி வரைவது என்று எனக்குப் பொறுமையாகச் சொல்லித்தந்தது நேற்று மாதிரி இருக்கிறது.

ஓவியர் Vincent Van Gogh, Claude Monet, Paul Gauguin போன்றோரின் ஓவியங்கள் 2017 பிப்ரவரியில் Art Gallery of Ontario வில் வைக்கப்பட்டிருந்தன. கருணா மாமாவும் கங்கா மாமாவும் என்னைப் போன்ற பலரை அழைத்துச்சென்றனர். Van Gogh வரைந்த *Starry Night over the Rhone at Arles* ஓவியத்தை எங்களுக்கு அறிமுகப் படுத்தியதே கருணா மாமாதான். ஓவியங்கள் பற்றி எவ்வளவு விடயங்களைச்சொல்லித் தந்திருப்பார்!

எங்கள் வீடுகளில் நடக்கும் பிறந்தநாள் விழாக்களிலும் வேறு மேடைகளிலும் நாங்கள் நடனம் ஆடினால், நாடகம் நடித்தால் கருணா மாமாதான் எங்கள் மிகப் பெரிய இரசிகர். வாய் ஓயாமல் பாராட்டுவார். தமிழை மறக்கக்கூடாது என்று அடிக்கடி சொல்லுவார்.

இப்படி எல்லாம் எங்களோடு பழகிய எங்கள் அன்புக் கருணா மாமா திடீரென எங்களை விட்டுப் போய்விட்டார்.

நீங்கள் எடுத்த படங்களிலும் ஓவியங்களிலும் எங்கள் நினைவுகளிலும் இருப்பீர்கள் கருணா மாமா.



**- அருவி இரவீந்திரன் -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாளைகளை நிறுத்தியவன்...






- கார்த்திகேசு விஜயசுகந்தன் -

'We have to cancel tomorrow' இது தான் கருணாவின் வெளியுலகக் கடைசித்தொடர்பு. இந்த SMSஐப் பார்த்தபோது, அடுத்த நாள் காலையில் என்னுடன் இருந்த சந்திப்பை மட்டுமல்ல, தனது வாழ்நாளில் இருந்து நாளைகள் எல்லாவற்றையுமே நிறுத்தப்போகிறார் என்று நான் எதிர்பார்த்திருக்கவில்லை. 'வெற்றிடங்களை இயற்கை விடுவதில்லை' என்கிறது சேரனின் ஒரு கவிதை. ஆனால், கருணாவின் இடத்தை நிரப்புவதென்பது இயற்கையாலும் இயலாதவொன்று.

கருணா எனது நெருங்கிய நண்பன். கருணாவுடனான தொடர்பு 96ம் ஆண்டு 'திண்ணை' சஞ்சிகை வெளியீட்டு விழாவில் தொடங்கி 'நுட்பம்' சஞ்சிகையினூடாக அது நெருங்கிய நட்பாக வேரூன்றியது.

1998ம் ஆண்டு நானும் எனது நண்பர்கள் சிலரும் 'நுட்பம்' என்ற தொழில்நுட்ப சஞ்சிகை ஒன்றை வெளியிடுவதற்கான வேலைகளை ஆரம்பித்திருந்தோம். நுட்பத்தின் வரைகலை வடிவமைப்பைச் செய்வதற்காகக் கருணாவை நாம் இணைத்துக் கொண்டோம். கருணா, ஒரு விடயத்தில் ஆர்வம் எடுத்து வேலைசெய்யத் தொடங்கினார் என்றால், அவர் அவ்விடயத்திற்காக முற்றாகவே தன்னை அர்ப்பணித்துவிடுவார். அது கவிதைக்கு ஓவியம், புத்தகத்திற்கு அட்டைப்படம், பத்திரிகை வடிவமைப்பு, நாடக ஒலி – ஒளி அமைப்பு, சஞ்சிகை வடிவமைப்பு, அல்லது ஒரு கட்டுரை, எதுவாக இருந்தாலும் தன்னை முற்றாக அர்ப்பணித்து வேலைசெய்வார். நுட்பம் சஞ்சிகையில் வடிவமைப்பு மட்டுமின்றி, தினமும் எம்மை ஊக்கப்படுத்தி, கட்டுரைகளை எழுதவைத்து, அவற்றை வடிவமைத்து நுட்பத்திற்கு உயிர்கொடுத்தவர் கருணா. நுட்பம் சஞ்சிகைக்காக எத்தனையோ நீண்ட இரவுகள், சில நாட்களில் விடியும் வரை எங்களோடு இருந்து சலிக்காது வேலைசெய்வார்.

'தரம்' (Quality)! இதுதான் கருணாவின் அடையாளம். தான் செய்யும் வேலை எதுவாக இருந்தாலும் அதனுடைய தரம் எப்போதுமே சிறந்ததாக இருக்கவேண்டும் என்பதற்காக அதிமுயற்சியெடுத்து வேலை செய்வார். எமது தமிழ்ச்சமூகத்தில், தரத்திற்கு ஒருவரும் முன்னுரிமை கொடுப்பதில்லை என்பதில் மிகவும் கோபமாக இருப்பார். சஞ்சிகை, பத்திரிகை, பிரசுரம், விளம்பரம் என்பவற்றின் வடிவமைப்புகளில் இருந்து, கலைவிழாக்கள், நாடகங்கள், கூட்டங்கள் என்பற்றின் தரத்தில் ஒருவருமே கவனம் செலுத்துவதில்லை என்பது கருணாவுக்கு மிகவும் ஆதங்கமான விடயம். இவற்றின் தரங்களைப் பற்றி விமர்சிப்பதற்கு அவர் ஒருநாளும் தயங்கியதில்லை. வரைகலை வடிவமைப்பிலும், நாடக அரங்கு, ஒளி, மற்றும் ஒலி அமைப்பிலும், தரமான படைப்புகளைப் படைத்து எமக்கு முன்னோடியாக இருந்தவர் கருணா.



என்னைக் கட்டாயப்படுத்தி நாடகங்களில் நடிக்கவைத்தவர் கருணா. அவர் ஒரு நாடகத்தில் ஈடுபட்டு வேலைசெய்தார் என்றால், இயக்குநர், நடிகர்களைத் தாண்டி அந்நாடகத்தின் வெற்றிக்காக மிகவும் பாடுபட்டு உழைப்பார். அனேகமான நாடகங்களில் ஒலி அல்லது ஒளி அமைப்பு கருணா என்றுதான் பொதுவாக அறிவித்திருப்பார்கள். ஆனால் அந்த நாடக இயக்குநருக்கும் நடிகர்களுக்கும்தான் தெரியும் அந்த நாடகத்தின் வெற்றிக்கு கருணாவின் பங்கு எவ்வளவு என்பது. எதுவித அங்கீகாரத்தையும் எதிர்பார்க்காமல், திரைக்குப் பின்னின்று தான் ஈடுபடும் விடயத்திற்கு முற்றாகத் தன்னை அர்ப்பணித்து வேலை செய்பவர் கருணா. நான் புராந்தகனின் 'விட்டு விடுதலையாகி...' என்ற நாடகத்தில் ஒரு பாத்திரமேற்று நடித்திருந்தேன். அப்போது, நான் வேலைவிடயமாக வன்கூவர் செல்லவேண்டி இருந்ததால், ஒரு நாடகப் பயிற்சிக்கு என்னால் வரமுடியாது என்று கருணாவுக்கு கூறினேன். என்னைக்கட்டாயப்படுத்தி, என் விமான ரிக்கெட்டை மாற்ற வைத்து, வன்கூவரில் இருந்து ரொறொன்ரோவிற்கு வந்து, நேராக நாடகப் பயிற்சிக்கு வரவைத்தவர் கருணா. ஒரு நாடகத்தின் வெற்றிக்கு பயிற்சிகள் தான் முக்கியம். ஒரு பயிற்சியைத்தானும் ஒருவரும் தவறவிடக்கூடாது என்பதில் கருணா மிகவும் கண்டிப்பாக இருப்பார். நாடகத்தில் நடிக்கும் அனைவருக்கும் மிகுந்த ஆரோக்கியமான முறையில் தனது கருத்துகளையும் அவதானங்களையும் விமர்சனங்களையும் சொல்லி அவர்களின் ஆற்றலை வெளிக்கொணர்வதில் மிகவும் அக்கறை காட்டுவார். செழியனின் 'என் தாத்தாவுக்கு ஒரு குதிரை இருந்தது' நாடகத்தை நான் இயக்கும்போது, எனக்குத் துணை இயக்குநராக இருந்து, அந்த நாடகத்தின் வெற்றிக்குத் தீவிரமாக உழைத்தவர்.

கருணாவுடன் நான் பழகத் தொடங்கிய நாளில் இருந்து, இன்றுவரை எனது வாழ்க்கையின் ஒவ்வொரு முக்கிய நிகழ்விலும் கருணா என்னோடு இருந்திருக்கிறார். நான் எழுதிய எல்லாக்கட்டுரைகளையும் முதலில் வாசித்து விமர்சித்துத் திருத்துவது கருணாதான். அவரைப் பற்றிய இந்தக் கட்டுரையை வாசித்து, விமர்சித்து, திருத்த கருணாவைத் தேடுகிறேன்.

கருணாவின் ஓவியங்களும் அவர் எடுத்த புகைப்படங்களும் எனது வீட்டுச்சுவர்களில் அவரை நினைவூட்டிக் கொண்டிருக்கின்றன. இப்படியொரு இனிய நண்பனை, ஒரு பெருங்கலைஞனை இழந்து எனது நெஞ்சம் அழுதுகொண்டிக்கின்றது. கருணாவுடன் பழகிய இனியநாட்களின் நினைவுகளுடனும், இப்படியொரு கலைஞனுடன் நண்பனாக பயணிக்கக் கிடைத்ததே என்ற பெருமையுடனும் எனது
நாளைகள்
தொடர்கின்றன.



suganthan@thaiveedu.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருணா தொடர்ந்தும் வாழ்வார்



**- ஹரி ஆனந்தசங்கரி -**
**கனடிய நாடாளுமன்ற உறுப்பினர்**

கருணா வின்சென்ற் கடந்தவாரம் எங்களை விட்டு அகாலமாகப் பிரிந்தார்.

அவரைப்பற்றி பல்வேறு வகைப்பட்டவர்களும் எழுதிய பல புகழுரைகளை நான் படித்தேன். அவர்கள் கருணாவுடன் கலை மூலமாக தொடர்புபட்டிருந்தார்கள். அவர்களுடைய நட்புறவுகள் கலையால், கலை மூலம் மலர்ந்தவை. கருணா ஒரு கலைஞனாக வாழ்ந்தார், சுவாசித்தார், தொழிலாற்றினார்.

தொழிற் பாதுகாப்பையோ பொருளாதார சுதந்திரத்தையோ பட்டங்களையோ வழங்கும் தொழிற்துறைகளையே பெரும்பாலும் நாடிச்செல்ல உந்தும் ஒரு உலகிலேயே நாம் வாழ்கிறோம்.

கருணா அதன் மறுதலையைத் தெரிவு-செய்தார். அவர் கலைத்தொழில் ஆற்றுவதைத் தெரிவுசெய்தார். தனது ஆன்மாவும் உயிரும் இரண்டறக்கலந்த ஒரு தொழிலை அவர் தெரிவுசெய்தார். அவர் ஒரு கலைஞனாகத் தன்வாழ்வை வாழ்ந்ததை நான் கண்கூடாகக் கண்டிருக்கிறேன்.

கருணாவை எனக்கு இருபத்தைந்து ஆண்டுகளாகத் தெரியும். அவரை முதலில் எப்போது சந்தித்தேன் எனச் சரியாகச் சொல்லத்தெரியவில்லை, ஆனால் 2008ல் துஷி ஞானப்பிரகாசத்துடன் இணைந்து அவர் பங்காற்றிய நாடகமொன்றின் மேடை-யேற்றத்தின் பின்னரே நான் அவரின் நண்பனானேன். குலை பற்றியும் நாடகங்கள் பற்றியும் வடிவமைப்புப் பற்றியும் சமூகம் பற்றியும் மக்கள் பற்றியும் அளவளாவுவதில் நாங்கள் எண்ணிலடங்காத மணித்தியாலங்களைச் செலவிட்டிருக்கிறோம். அவர் எப்போதுமே ஈடுபாட்டுடன் உற்றுக்கேட்பவராயும் தன்னைச் சூழ நடப்பவைகளைக் கூர்ந்து கவனிப்பவராயும் இருந்தார். ஆனால் அவர் பேசியபோது எப்போதும் அமைதியான கருத்துத்தெளிவுடனும் உலகம் பற்றிய அறிவுடனும் பேசினார்.

இந்த இடைப்பட்ட காலத்தில், பல்வேறு விடயங்கள் பற்றியும் நாங்கள் அடிக்கடி பேசிக்கொண்டோம். அவர் எப்போதுமே தன் நண்பர்கள் தாம் விரும்பியதை அடைவதற்காக உழைக்கும் ஒரு பகட்டற்ற போராளியாகவே விளங்கினார். ஒளியமைப்பு, நிழற்படப்பிடிப்பு, வரைகலை வடிவமைப்பு உள்ளிட்டு ஒரு நிகழ்வையோ செயற்திட்டத்தையோ வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்குத்தேவையான அனைத்தையும் அவர் செய்தார். அவர் குறைப்பட்டோ, மற்றவர்களை அவசரப்படுத்தியோ நான் கண்டதில்லை. அமைதியாகக் கவனித்து தனது நண்பர்களுக்குத் தேவையான ஆதரவை வழங்குவார்.

எமது சமூகத்தில் பலரும் பல மணித்தியாலங்களையும், ஏன் நாட்களையும், அவருடன் கணினியின் முன்னால் செலவிட்டிருக்கிறார்கள். அவர் தனது வாடிக்கையாளர்களுடன் உன்னிப்புடன் பணியாற்றி ஒரு திறமான வடிவமைப்புப்பூரணமாகும் வரை உழைப்பார். வாடிக்கையாளர்களுக்கு வெவ்வேறு தெரிவுகளை வழங்கி அவர்கள் திருப்தியடையும்வரை அயராது செயலாற்றுவார். அதன்பின்னும் குறையற்று முழுமையடைந்த அந்தப் படைப்பை மேலும் மெருகேற்ற உழைப்பார். அவரைப்பொறுத்தவரை அந்தப் படைப்பு அவருடைய வாடிக்கையாளர்களைப் பற்றியது மட்டுமல்ல. அது அவரது கலையையும் பற்றியது. அது வெறுமனே ஒரு நுகர்பொருளல்ல. அது அவரின் வாழ்வின் ஓர் உயிருள்ள எச்சம். அவரின் கலைப்படைப்புகளைத் தமிழ்ச் சமூகத்தில் எங்கெங்குமே காணலாம். முக்கிய நிறுவனங்களின் தொழில் முனைவோரினதும் சின்னங்களில் இருந்து, நூல்களினதும் சஞ்சிகைகளினதும் வடிவமைப்புகள், விளம்பரங்கள் என டிஜி வரை கலை மையத்தினதும், அதன் நீட்சியாக கருணாவினதும் தடங்கள் தமிழ் வணிக சமூகமெங்கும் ஆளப்பதிந்துள்ளன. பெரும்பாலும் எளிமையாக ஆரம்பித்து ரொறன்ரோ பெரும்பாகத்தின் முக்கிய தொழில்முனைவர்களாக வளர்ந்த தனது வாடிக்கையாளர்கள் பலருடனும் அவரும் வளர்ந்தார்.



சமகாலத்திலேயே ஓர் ஓவியராகவும் அவர் முதிர்ச்சியடைந்தார். ஒரு வரைகலைஞராக தனது வாழ்வாதாரத்தைத் தேடிக்கொண்டே தனது உண்மைக் காதலான ஓவியங்களிலும் கவனம் செலுத்தினார். நள்ளிரவும் தாண்டி நீளும் பொழுதுகளில் பல நாட்களாக உழைத்து வாழ்வின் உண்மையான பக்கங்களை எடுத்துக்காட்டும் ஒரு தொகுதி ஓவியங்களை உருவாக்கினார். அவர் ஓவியங்கள் பல்வேறு தடவைகள் காட்சிப்படுத்தப்பட்டன. தமிழியல் மாநாட்டிலும் வேறு பல ஓவியக்கண்காட்சிகளிலும் அவரது ஓவியங்கள் அறப்பணிகளுக்கு நிதிதிரட்டும் நோக்குடன் விற்பனை செய்யப்பட்டோ, பரிசாக வழங்கப்பட்டோ உள்ளன. அவர் ஓவியங்கள் பற்றி விளக்கவுரைகளை நிகழ்த்தியதோடு இளம் ஓவியர்களுக்கும் வழிகாட்டியாகச் செயலாற்றினார்.

கருணாவுக்கு நாங்கள் விடைகொடுக்கும் அதேவேளை அவரது ஓவியங்கள் ஊடாகவும் கலைப்படைப்புக்கள் ஊடாகவும் அவரது வாழ்வு தொடரும் என எமக்குத் தெரியும். எமது சுவர்களில் தொங்குகின்ற... எமது நூல்களை அலங்கரிக்கின்ற...எமது வாழ்வின் பல்வேறு நினைவுகளை இனிமையாக்குகின்ற அவரது ஓவியங்கள் ஊடாக அவர் வாழ்வார். ஒரு கலைஞன் ஒருபோதும் உண்மையாக மரணிப்பதில்லை. கருணா தனது கலையூடாக எம்முடன் தொடர்ந்தும் வாழ்வார்.



gary.a@thaiveedu.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Karuna's Memory will Always be for A blessing

It's a Jewish tradition when someone dies to say "may her or his memory be for a blessing". This can mean two things: that the memory of the person who has passed be a constant blessing in our lives… or it could also mean that we offer the person who has passed a blessing of our own. I am cercain both meanings are apt as I think about Karuna's recent passing and the gaping hole it is has left for our family. So to honour Karuna, I want to share a few of my memories - the personal ones.

I first met Karuna a very short while after meeting my partner Cheran and that was over twenty years ago now. In some interesting ways I immediately noticed that the two men shared many attributes - both intensely creative people who resisted convention, loved good conversation and fine red wine (we always kept a bottle of Chianti in the cupboard for Karuna).

Karuna was the one who our late dog Lhasa adored. Whenever Karuna visited, Lhasa would inevitably find his way onto Karuna's lap or be curled up alongside him. Karuna was with us for most occasions and all the important milestones - for every birthday party when our twins were small (and lots of photo shoots), for holidays and adventures as well as crises. Karuna travelled out to Banff to spend time with Cheran so that the two of them could explore the badlands of Alberta; Karuna was one of a small group of friends who travelled all the way to the cemetery in Belleville to accompany me when we buried my late Mother; he was there in the hospital when Cheran had a kidney transplant; and even when Karuna wasn't around, he would call. Many of Cheran's friends have been very warm and welcoming - but there are just a few that made the effort to develop an independent friendship with me. Karuna was one.

So many people have passed through our home over the years - but Karuna didn't pass through - his was a constant and fiercely loyal presence. I miss Karuna… and know that his memory will always be for a blessing.



- Sharry Aiken -
Queen's University

# I am still Amazed of Your creativity

Since I've known you for almost 3 years

I always wanted to learn from you

because I was and I am still amazed of your creativity

and talent.

It's the only thing I wish to spend my entire life doing… Art.

I'm sorry to the loved ones who will always miss you,

including myself.

And I'm proud for all those great things

you achieved in your life.

But remember that

you have touched us

and you will always stay

in our hearts forever.

May your soul rest in peace.



- Dishaly Ilamaran -

# Karuna Anna: An Irreplaceable Loss






- Neethan Shan -

Very shocked and saddened to hear of the passing of a very talented Tamil Canadian visual artist and a very supportive and community conscious human being. This is a huge irreplaceable loss for the Tamil community and for the world of arts. My heartfelt condolences to his family, friends and colleagues. Rest In Peace Karuna Anna.

After starting Tamil Heritage Month Initiative in late 2009, the first person I went to see to get the first ever Tamil Heritage Month poster was Karuna Anna.

I knew that his work always had creativity, innovation, progressive and futuristic thinking, respectful, broad appeal and high standard. He delivered this awesome poster for January of 2010 and this image on the poster became a widely used image for the past ten years.

He was a humble individual, yet always had a strong sense of pride in the work he did, rightly so. As we reflect today, a significant part of Tamil Canadian history is filled with his work and has his mark all over it (from music album designs, book covers, event photos, business and organizational logos, posters, advertisement designs for businesses, artwork depicting our journeys, relationships, histories and struggles, illustrations that supported many literary works and the list goes on).

Because he maintained a strong sense of independence as an artist, he continued to produce the highest quality work. Many people who valued that became his close friends and well-wishers. Those who seek to control and restrict artists couldn't find ways to co-opt his work. He is a very knowledgeable person with an articulate speaking style but he often didn't speak much as he wanted his work to speak, and we all know that his work speaks volumes.

In the unfortunate current reality where awards are being given on a weekly basis, (most not all, but significant portion of them) being given to friends, sponsors and family members, we sometimes end up not honouring and celebrating great talents to the level they deserve. But every social media post I see online about Karuna Anna in the last few hours comes with deep reflection of the kind of impact he has had. This is the testament of the work this incredible artist had done.

His legacy will live on through his work and through the artists he inspired. He will be remembered not just as a talented artist, but as a great human being who taught us a lot more, through the way he lived.



neethan.shan@thaiveedu.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாதாரண மக்களை வரைந்த ஓவியன்

# ஜொகனஸ் வெர்மீர்

## (Johannes Vermeer)

நீங்கள் வலது பக்கத்தில் பார்ப்பது உலகில் அதிகம் பேசப்படும் ஒரு ஓவியம். ஓவியத்திலிருக்கும் பெண்ணை வடக்கின் மொனாலிசா என்றும் அழைக்கிறார்கள். இந்த ஓவியத்தைப்பற்றி ஒரு நாவல் எழுதப்பட்டிருக்கிறது, ஒரு திரைப்படம் எடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இதை வரைந்த ஓவியர் வறுமையில் வாடி தனது 43வது வயதிலேயே இறந்துபோனார்.

ஜொகனஸ் வெர்மீர் (1632 - 1675) நெதர்லாந்தைச் சேர்ந்த ஓவியர். நெதர்லாந்தின் Delft நகரில் இவர் வாழ்ந்தார் எனினும் இவரைப்பற்றி அதிக தகவல்கள் கிடைக்கவில்லை. இவர் இறந்தபோது இவருக்கு 11 பிள்ளைகள் இருந்ததாகக் கூறப்படுகிறது. 19ம் நூற்றாண்டின் இறுதிவரை இவரைப் பற்றி உலகம் பெரிய அளவில் அறிந்திருக்கவில்லை.

வெர்மீருடைய சிறப்பு அவர் சாதாரண மனிதர்களையே வரைந்தார். அரச மாந்தர்களும், சமயக்காட்சிகளுமே வரையப்பட்ட ஒரு காலப்பகுதியில் இது வழமைக்குப் புறம்பானது. அவருடைய மிகச் சில ஓவியங்களே இன்று கிடைத்தாலும் அவை பெரும்பாலும் சாதாரண மனிதர்களின் வீடுகளின் உட்புறங்களையே காட்சிப்படுத்தியுள்ளன. சில ஓவிய வரலாற்றாளர்களின் கூற்றுப்படி பெரும்பாலான ஓவியங்களில் இரண்டு அறைகளின் உட்புறங்களே சிறு மாற்றங்களுடன் பின்னணியாக மீண்டும் மீண்டும் வரையப்பட்டுள்ளன. வெர்மீர் வறுமையிலிருந்தபோதும் தனது ஓவியங்களில் மிக விலையுயர்ந்த வர்ணங்களையே பயன்படுத்தியதாகக் கூறப்படுகிறது.

**- கருணா -**

வெர்மீருடைய ஓவியங்களில் மிகவும் புகழ்வாய்ந்ததாகக் கருதப்படுவது வலது புறமிருக்கும் 'Girl with a Pearl Earring' என்ற ஓவியமாகும் (படம் 1). இந்த ஓவியத்திலிருப்பது யாரென்று சரிவரத் தெரியவில்லை. இது அவருடைய பதின்ம வயதுள்ள மகளாக இருக்கலாம் எனப் பலரும் நம்புகின்றனர். படத்திலுள்ள பெண் தலையில் கட்டியிருக்கும் துண்டும் அப்பாவித்தனமான பார்வையும் காதிலுள்ள முத்தால் ஆன தோடும் பார்வையாளரை ஓவியத்தை நோக்கி இலகுவாக ஈர்த்துவிடுகின்றன. ஓவிய நுட்பங்களைப் பொறுத்தவரை வெர்மீர் எவ்வாறு சமாந்தரக்கோடுகளைப் பாவித்து இந்த ஓவியத்தைக் கட்டமைத்தார் (படம் 3) என்பதிலிருந்து அவரது திறமையைப் புரிந்து கொள்ளலாம்.

வெர்மீரின் இந்த ஓவியத்தைப் பின்னணியாகக் கொண்டு 1999இல் 'Girl with a Pearl Earring' என்ற பெயரிலேயே ஒரு நாவல் வெளியானது. பின்னர் 2003இல் இந்த நாவலை அடிப்படையாகக் கொண்டு இதே பெயரிலேயே ஒரு திரைப்படம் வெளியாகி பெரும் புகழையும், விருதுகளையும் வென்றது.

படம் 2இலிருக்கும் ஒரு பணிப்பெண் பாத்திரத்தில் பாலூற்றிக்கொண்டிருக்கும் வெர்மீரின் ஓவியமும் (The Milkmaid) மிகப் புகழ்பெற்றது. இந்த ஓவியத்திலிருக்கும் எளிமையும் மிகச் சாதாரண தளபாடங்களும் ஓவியத்தில் ஈர்ப்பை ஏற்படுத்துகின்றன. பால் ஊற்றிக்கொண்டிருப்பது ஒரு பணிப்பெண் என அவரது ஆடைகளிலிருந்து தெரிந்தாலும் மிக வறுமையான ஒரு அறையிலேயே இருக்கிறார். அது ஒரு சமையலறையாகவோ அல்லது பணிப்பெண்ணின் அறையாகவோ இருக்கலாம். சுவரில் அழுக்குப் படிந்திருப்பதையும் பெண்ணின் முகத்திலுள்ள உணர்வையும் கவனியுங்கள்.

இந்த ஓவியத்தைப் பார்த்தவுடன் பெண்ணின் கைகளை நோக்கியும் பாத்திரத்தை நோக்கியும் உங்கள் பார்வை செல்வதை அவதானித்திருப்பீர்கள். ஓவியரின் நோக்கமும் அதுவே. இதை எவ்வாறு ஓவியர் சாத்தியப்படுத்தினார்? தாய்வீட்டின் பெப்ரவரி, 2017 இதழில் வெளியான 'இறுதி இரவு உணவு' என்ற ஓவியத்தைப் பற்றிய ஆக்கத்தின் Vanishing point என்ற நுட்பத்தைப் பற்றிப் பார்த்தோம். இந்த ஓவியத்திலும் வெர்மீர் அதே நுட்பத்தையே பயன்படுத்தியுள்ளார். ஓவியத்திலுள்ள நேர் கோடுகளை இணைக்கும்போது அவை கைகளையும் பாத்திரத்தையும் நோக்கியே போவதை நீங்கள் அவதானிக்கலாம். (படம் 5)

இந்த இரண்டு ஓவியங்களிலும் கருப்பொருட்களில் எவ்வாறு ஒளி விழுகிறது என்பதை அவதானியுங்கள். வெர்மீர் எவ்வாறு ஒளியைத் தனது ஓவியங்களில் பாவித்தார் என இன்று பலரும் ஆச்சரியப்படுகின்றனர். கரவாஜ்ஜியோ, ரெம்பிரான்ற் போன்ற ஓவியர்களின் ஓவியங்களில் ஒளியும் இருளும் அதிக அளவில் வேறுபடுத்தப்பட்டிருக்கும். நிழல் மிகக் கடுமையானதாக (இருளானதாக) இருக்கும். வெர்மீரின் ஓவியங்களில் நிழல் மிக மென்மையானதாகவும், பல ஓவியங்களில் ஒளி வரும் யன்னல் ஓவியத்தின் ஒரு பகுதியாவும் காட்டப்பட்டிருக்கிறது.

தனது வாழ்நாளில் பெருமளவில் அறியப்படாவிட்டாலும் இன்று ஜொகனஸ் வெர்மீர் நெதர்லாந்துப் பொற்காலத்தின் மிகச்சிறந்த ஓவியர்களில் ஒருவர் என அறியப்படுகிறார்.

அடுத்த ஆக்கத்தில் ஐரோப்பாவுக்குக் காண்டாமிருகத்தை அறிமுகப்படுத்திய ஓவியரைப் பற்றி அறிந்து கொள்வோமா....

■ ■ ■


படம் : 1


படம் : 2


படம் : 3


படம் : 4


படம் : 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இமயம் இன்றில்லை!



**- அ. கந்தசாமி -**

நண்பன் கருணாவை முதலில் எப்போது எச்சூழலில் சந்திக்க நேர்ந்தது என்பதன் தரவு என் ஞாபக அடுக்குகளில் இன்று இல்லை.

அந்தநாள் நினைவுகள் யாவும் பசுமையாய்ப் பூத்திருக்க, கருணா எப்போது அறிமுகமானான் என்ற வினாவின் விடை மட்டும் ஏன் வழுக்கிச் செல்கிறது?

கருணா என்பவன் ஒற்றைப் பரிமாணம் கொண்டவனாக அறிய நேர்ந்திருந்தால் நினைவின் ஏதோ ஒரு படிமத்தில் பதிந்திருக்கக்கூடும்.

அவன் ஆயிரம் ஆற்றல்களின் ஒன்றியம் அல்லவா! எதனை இரை மீட்பது?

வண்ணச்சோலைகளுக்குள் என்னைத் தொலைய வைத்து, மீளும் வழி தெரியாது மிரண்டு நின்றபோது, "இப்போது நீங்கள் உணர்ந்தது ஒரு துளி, இன்னும் உள்ளே... உள்ளே பயணப்படுங்கள். பல வெளிச்சங்கள், பல பரிமாணங்கள்... இது தான் மாஸ்ரர் ஓவியம்" என்று ஓவியக்கலையின் அடிவாரத்திற்கு அழைத்துச்சென்ற 'மாற்கு' மாஸ்ரரின் மாணவன் கருணாவையா?

நாடகமேடைகளில் ஒளி ஓவியம் வரைந்த பிரமாண்டத்தின் மறுபெயராகத் திகழ்ந்த கருணாவையா?

எந்தக் கருத்தையும் எங்கள் உதடு கூட்டுவதற்கு முன்பே உச்சரித்து, பலநூறு தரவுகளையும், ஆதாரங்களையும் அடுக்கி விட்டுக்கொடுப்புக்குள் கசியும் புன்சிரிப்புடன் கடந்து செல்லும் கலை இலக்கியவாதிகளின் கடைசி நண்பன் கருணாவையா?

அற்புதமான திரைப்படங்களைப் பதிவிறக்கம் செய்து, "இதை நீங்கள் கட்டாயம் பாக்கவேணும் மாஸ்ரர்" என்று அப்படங்கள் ஏற்படுத்திய மனத்தாக்கத்தால் பல இரவுகளின் தூக்கத்தை தொலைக்க வைத்த கலை ஊக்கி கருணாவையா?

அவன் பல்வேறு ஆளுமைகளின் மொத்தத் தொகுப்பு.

தான் தேர்ந்த தடங்களில் முழுமையான தெளிவும் அறிவும் அதனை மேம்படுத்த முயல்வதும் தான் மனிதமேன்மை. கருணாவிடம் இத்தன்மை அள்ளக்குறையா 'நிலாவெளி நீர்ச்சுனை'யாய் நிரம்பி வழிந்தது.

கலைக்கிளைகளில் தோன்றும் முரண்களுக்கும் இயங்குநிலை இடர்ப்பாடுகளுக்கும் கருணாவிடம் தெளிவான தீர்வுகளும் நேரான வழிப்படுத்தலும் இருந்தன.

கலை இலக்கிய விழுமியங்களின் உயிர் நாளங்கள் மீது கருணாவின் பார்வையும் பங்களிப்பும் காத்திரமானது. எதிர்கொள்ளும் முரண்களுக்கான பின்னீடுகளைப் பற்றி அலட்டிக்கொள்ளாமல் தன் அறிவின் விசாலிப்பை இறுதி மணித்துளிவரை நிகழ்த்திக் கொண்டிருந்த மனிதன் அவன்.

'மாற்கு' மாஸ்ரர் என்ற மாபெரும் கலைஞனை அவர் மாணாக்கர்களும் கைவிரல் மடிப்புக்குள் தொலைந்து போகக்கூடிய சில யாழ்ப்பாணிகளும் அறிவர். 'பிக்காசோ'வை எழுத்துக்கூட்டத் தெரிந்த மிகப் பலரில் ஒரு சிலருக்காவது 'மாற்கு' மாஸ்டரின் வீச்சும் சாதனையும் தெரிந்திருக்கக் கூடும். குப்பையில் கிடந்த மரத்துண்டுகளிலும் வீசி எறியப்பட்ட சிலாகைகளிலும் ஒடிந்து தொங்கிய மரக் கொப்புகளிலும் ஒளிந்திருந்த மாயக் கலைவடிவங்களுக்கு உயிர் தந்த, கோட்டோவியக் கலையில் புதிய பரிமாணங்களை உருவாக்கிய மாமனிதர் 'மாற்கு' மாஸ்ரர். ஈழத்தமிழர்களுக்குப் பெருமை சேர்த்த அந்த மனிதரின் மகிமை உணரா நம் சமூகம் தலைதூக்க பல நூற்றாண்டுகள் செலவாகும்.

'மாற்கு' மாஸ்ரரின் கடைசிக் கந்தாயத்தில் அவருடைய மாணவனான கருணா, குறுகிய 50 ஆண்டு கால தனது உயிர்ப்பின் ஒவ்வொரு பின்னத்திலும் அவரைச் சுவாசித்து வாழ்ந்தவன்.

கருணா வரைந்த ஓவியங்களில் ஏதோ ஒரு புள்ளியில் 'மாற்கு' மாஸ்ரரின் வெண்பனிப் புன்னகை மறைந்திருக்கும். பனிக்கட்டிகள் மிதக்கும் கிண்ணங்களை ஏந்திய



கரங்களோடு கருணாவுடன் நடத்திய உரையாடல்களில் 'மாற்கு' மாஸ்ரரும் அருப வெளியில் எங்களோடு இருப்பதை உணர்வோம். தன் ஆசானை தனக்குள் ஒருவராக உருவகித்து முன் நிறுத்தியவன் கருணா! தனிமை கருணாவிற்கு மிக உவப்பானது. நீரிற்கு வெளியே சுவாசிக்க தலை நீட்டும் மீன்களைப் போல, அவ்வப்போது மனித அரவங்களைத்தன் வெளியில் அனுமதிப்பார். தன் அறிவில் சேகரமான 'கோகினூர்'களை எதிராளியின் கொள்ளளவின் பரிமாணம் தெரியாமலே விதைத்துச் செல்வது அவர் இயல்பு!

தான் புதிதாக தெரிந்து கொண்டவற்றை மற்றவர் மனதில் பதியம் வைக்கும் அங்கலாய்ப்பு எப்போதும் கருணாவிடம் நிறைந்திருக்கும்.

எம் முகரத்தின் எல்லா இதழ்களையும் கருணாவின் பிரதான பங்களிப்போடு வெளிக்கொணர்ந்தோம். அந்த நீண்ட பயணத்தின் எந்தக் கணத்திலும் அவரது ஆளுமை வரம்பினுள் அடிவைக்க, அபிப்பிராயம் சொல்ல எவர்க்கும் அனுமதி இல்லை.

முகப்புப் படத்தை கருணாவே தீர்மானிப்பார். எனக்கும் இணை ஆசிரியர்களுக்கும் அட்டைப்படம் பற்றிய புகைமூட்டமான முன் முடிவு இருக்கும். கருணா எங்கள் கருத்திற்கும் புலப்படாத ஒரு மாயப்புள்ளியில்... தன் கவனத்தைக் குவிப்பார்.

மீறிக்கசியும் மௌன அலைகளை உணரும் போது அவர் இப்படிச்சொன்ன நினைவு.

"மாஸ்ரர் ஓவியம் என்றது ஒரு சட்டகத்தின் நீள அகலத்துக்குள் சிக்குப்பட்ட சிறைக்கைதி இல்ல. கருந்துளையைப்போல உங்களை உள்ளிழுத்து தன்வசப்படுத்தி, காலா அநுபவங்களில் உழன்று வெளியே உமிழும்போது உண்மையை உணருவீங்கள்."

நண்பர் யேசுராசா கனடா வந்திருந்த நேரம். டிலிப்குமாரும் கருணாவும் நானும் பலமுறைகள் பார்த்துச் சலித்த பக்கத்து வீட்டுப்பெண்ணை மீண்டும் பார்க்கும் உணர்வுடன் அவரை நயகரா நீர்வீழ்ச்சிக்கு அழைத்துச் சென்றோம்.

கருணாதான் காட்சிகளின் விளக்கங்களைச் சொல்லிக்கொண்டு வந்தார். யேசுராசா என்றுமே ஒற்றைத்தரவில் திருப்தி அடைபவர் அல்லர். அவர் கேள்விகளும், கருணாவின் விரிவான விளக்கங்களும் அளவிறந்த தகவல்களை அள்ளி வீசிக்கொண்டிருந்தன.

நயகரா நீர்வீழ்ச்சியின் தொன்மம், இருப்பைத் தக்க வைத்துக்கொள்ள கனடா அமெரிக்காவுடன் நடத்திய போர்கள், எப்போதாவது மலரும் ராட்சசக் கணியமுள்ள துர்நாற்றம் வீசும் மலர்... என்னவெல்லாமோ காட்டினான், அனைத்துக்கும் விளக்கங்கள் சொன்னான். அதுவரை நான் அறிந்திராத நயகராவை எனக்கு அன்று அறிமுகப்படுத்தியவன் கருணா.

நான் பௌதிகம் பயின்றவன். இன்று வரை கற்பிப்பவன். பாடவிதானம் ஏறத்தாழ மனப்பாடம். நீர்வீழ்ச்சிக்கு நேர்எதிரான மேட்டின் சரிவில் நாங்கள் தொற்றிக் கொண்டிருந்தபோது கருணா 'மாஸ்ரர் உங்களுக்கு 'ரெஸ்லா' வைப்பற்றித் தெரியும்தானே" என்று தொடங்கினான்.

பௌதிகத்தில் மின்னியல் அரிச்சுவடி தெரிந்தவனுக்கே 'ரெஸ்லா'வைத் தெரியும். நேர்மின்னோட்டத்தை எதிர் மின்னாக்கி உலகத்தையே மின்சாரத்தால் ஒளிரச் செய்த மாமேதை.

"அவற்றை சிலை உதுதான் மாஸ்ரர், பரடேயும் மற்ற விஞ்ஞானியளும் இவரை இருட்டடிப்புச் செய்தபோது இங்கைதான் வந்திருந்தவர். கனடாதான் அவற்றை கண்டு பிடிப்புக்கு ஊக்கம் கொடுத்தது" கருணா கதைத்துக்கொண்டே போனார். நான் திகைப் பூண்டில் மிதித்தவன்போல் 'ரெஸ்லா'வின் நெடுத்த சிலையின்முன் நிலைகுலைந்து நின்றேன்.

எத்தனை தடவைகள் வந்துசென்றிருப்போம். 'ரெஸ்லா' நீர்வீழ்ச்சியை பார்த்துக்கொண்டு புன்னகைப்பது ஏன் கண்ணில் படவில்லை. ஏபிரகாம் லிங்கனைத்தெருவிளக்கின் மின்னொளியில் கற்க வைத்தவனல்லவா 'ரெஸ்லா'! கருணாவிற்கு பௌதிகப் புத்தகத்தின் ஓரங்களில் கிடக்கும் பல விஷயங்கள் எப்படித் தெரிந்தது?

கருணா அதிமானிடன்.. அதிசயன்.

கருணா ஓர் உணவுப் பிரியன். இசையை, நுண்கலைகளை நுகர்ந்து பரவசமடைவது போல் சுவையான உணவை ஆராதிப்பவன். பொரித்து, தாளித்து, நெய் மிதக்கும் உணவு வகைகளைத் தன் சாப்பாட்டு மேசையில் அனுமதிப்பதில்லை.

தெருவிற்குப் பலவாக கிளை பரப்பி இரத்த ஓட்டத்திற்கு அணை கட்ட அமுது படைக்கும் உணவகங்களை முடிந்த வரை தவிர்த்தே வந்திருக்கிறான். கருணாவுடன் உணவருந்தச் செல்வது சுவையான அநுபவம்.

உணவகத்திற்குப் போவதற்குமுன் அல்லது போகின்ற வழியில் அங்கு பரிமாறப்படும் உணவுவகைகளின் பட்டியல் பற்றிப் பேசுவான். அதில் ஒரு பெயரைக் கூட என்னால் உச்சரிக்கமுடியாது. பரிமாறுபவன் தானும் இத்தனை சுருதி சுத்தமாக ஒப்புவிப்பானோ தெரியாது. அவர் சொல்லும் போது பல்வேறு உணவுகளின் வெவ்வேறு சுவைகளை நாங்களை அநுபவிப்போம். உணவுச்சாலை பார்வை எல்லைக்குள் வந்ததும் அங்கு பரிமாறப்படப்போகும் 'பானங்'களைப் பற்றிய விவரணங்கள் ஆரம்பமாகும். அக்குடிவகைகளின் ஆதி மூலம் என்ன? எவ்வகை மூலகங்களால் தயாரிக்கிறார்கள், அந்த மூலப் பொருட்களை எங்கெல்லாம் பயிரிடுகிறார்கள், எந்தத் தேசத்தின் நதிநீரைப் பயன்படுத்துகிறார்கள், எவ்வாறான சீதோஸ்ணத்தில், எத்தனை அடி ஆழமுள்ள நிலவறைகளில் எத்தனை ஆண்டுகள் நொதிய வைத்து...

தொடரும் அவன் கதையில் தலை கிறுகிறுத்து....'செப்பேட்' தெருவில் அமைந்த அந்த யப்பான் உணவகத்தின் வாசற்படி தடக்கி நான் நெடுஞ்சாணையாய் விழ... ..

சத்தியமாய் இது உண்மை!

அவசர அந்தரத்திற்கு நேரம் மட்டுமட்டாக இருப்பின், கருணாவின் 'கொண்டோ' விலிருந்து நீளப் பாய்ச்சல் செய்தால் மார்க்கம் தெருவை குறுக்கால் கடந்து அதரப்பழசாக ஒப்பனை பூண்ட உணவுச்சாலையின் வரவேற்பு மண்டபத்தில் விழுவோம்.

ஆதியில் 'ஜோன் வெய்ன்' காலத்துக்குதிரைகள் பூட்டிய 'செரியற்' வண்டிகள் நீண்ட பயணத்தின்போது தரித்து உணவருந்திப் போன மரபு அந்த உணவத்திற்கு உண்டு.

கருணாவிற்கு இங்கு ராஜமரியாதை.

பல கோடி மனிதத் துளிகளின் சங்கமிப்பில் சிதறிக் கரைஒதுங்கிய ஒரு துகளாக கருணாவின் அகால மறைவை என்னால் கடந்து போக முடியவில்லை

இது ஒரு தனி மனிதனின் மரணமல்ல.
அட்சய பாத்திரம் போல்
அள்ள அள்ளக் குறையா
கலை ஆளுமையின் வீழ்ச்சி!
பன்முத் தன்மைகொண்ட ஒரு
சமூகக் குறியீட்டின் சரிவு!

கருணா ஓர் அற்புதன்

ஓவியக்கலையின் பல உயரங்களைத் தீர்மானித்தவன்
புகைப்படக் கலையில் பல திரைகளைத் திறந்து வைத்தவன்.
அரங்கமேடைகளில் ஒளிஓவியம் வரைந்தவன்.
சூரியக்கதிர்களைப் போல் முடிவிலித்திறமைகள் திகைத்தவன்.
பல்துறை ஆற்றல்களின் ஒன்றியம் அவன்

தன் கலை ஆளுமைகளின் கதவுகளைத் திறந்த
'மாற்கு' மாஸ்ரரை நித்தமும் சுவாசித்து வாழ்ந்தவன்
ஒப்புக்கொடுத்த எந்தப் பணியிலும்
தான் உயிரின் ஒரு பாகத்தை ஆகுதி ஆக்கியவன்.
கருணா!
கிழிக்கப்படாத
நாட்காட்டியின்
ஒரு தாளாக
உன்நினைவு
எங்களுள் என்றும்
நிலைத்திருக்கும்.

பிரிவுத்துயரால் வாடும் கருணாவின் குடும்பத்தினருக்கும் அத்தியந்த நண்பர்களுக்கும் எமது ஆதரவும்
அநுசரணையும்
எக்காலமும் உண்டு.



kandasamy.a@thaiveedu.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூங்கச் சென்ற சூரியன்



ஓர் ஓவியம் அழகானதாக இருக்கும், பார்வையாளனுக்கு அதிர்ச்சியைக் கொடுக்கலாம், பார்வையாளனை ஒரு சிறந்த பிரசையாக மாற்றலாம், வாழ்க்கையின் அர்த்தத்தை அல்லது நோக்கத்தைப் பார்வையாளனுக்குத் தெளிவுபடுத்தும், சிந்தனைகளை மாற்றும் இவற்றுடன் can make us smarter, art is a time travel machine, art can protect us , art can give us pleasure (‘What to read and why’ by Francine Prose).

ஓவியம் இவ்வளவு மாற்றங்களை மனிதனுக்கு ஏற்படுத்துமானால், ஓவியனே அவ்வாறான மாற்றங்களுக்கு காரணமாகவுள்ளான். அண்மையில் மறைந்த ஒளி ஓவியன் கருணாவின் ஓவியங்கள் என்னில் பல மாற்றங்களை ஏற்படுத்தின.

கருணாவை நான் சிறு வயது முதலே அறிவேன். ஆனாலும் நேரடிப் பழக்கம் இல்லை. கனடா வந்த பின்னரே, ரொறன்ரோ பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற கறுப்பு ஜுலை இன அழிப்பின் பத்தாண்டு நிறைவையொட்டிய ஓவியக்கண்காட்சியே முதல் அறிமுகத்தை ஏற்படுத்தியது. அப்பொழுதும் அவரது ஓவியங்களுக்கும் எனக்கும் ஏற்பட்ட உரையாடல்கள் அவருடன் ஏற்படவில்லை. சர்வதேச தமிழ்த் திரைப்பட விழா மலர் வடிவமைப்புச் செய்யக் கருணாவை அணுகிய போதே அவருடனான முதல் நேரடிச்சந்திப்பு ஏற்பட்டது. அதன் பின்னர் நடைபெற்ற அனைத்து விழாக்களுக்கும் கருணாவே மலர் தயாரிப்பினைச் செய்தார். இணையத் தளத்தையும் கருணாவே வடிவமைத்தார். இந்தியாவிலிருந்து அதிகளவு குறும் படங்கள் ரொறன்ரோ சர்வதேச திரைப்படவிழாவுக்கு அனுப்பப்படுவதற்கு கருணாவின் லே அவுட்டினாலான மலரும், இணையத்தளமுமே முக்கிய காரணமாகும். விழாவுக்கான அறிவித்தலில் இருந்து சுவரொட்டி வரை கருணா வின் கைவண்ணத்திலேயே உருவாகின. இவரது விளம்பரச் சுவரொட்டிகள் மிகவும் வித்தியாசமானவை. பிரதான ஊடகங்கள் சர்வதேச தமிழ்த் திரைப்பட விழாவினை திரும்பிப் பார்க்க காரணமாயிருந்தன. ரொறன்ரோ சர்வதேசத் தமிழ்த் திரைப்பட விழா தொடர்ச்சிக்கும், வெற்றிக்கும் கருணாவின் சிறப்பான பங்களிப்பு மிக முக்கிய காரணம்.

சர்வதேச தமிழ்த் திரைப்பட விழாவில் வெற்றி பெற்ற குறும்பட படைப்பாளிகள் பலர், தமிழ்நாட்டில் முழு நீளத் திரைப் படங்களில் இணைந்து பணியாற்ற, விழா மலரினையும், இணையத்தளத்தினையும் சான்றுகளாகக் காட்டியுள்ளனர். பலருக்கு இதனால் சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டுள்ளன. ரொறன்ரோவில் உள்ள திரைப்படப் படைப்பாளிகளுடன் கருணாவிற்கு நெருக்கமான உறவிருந்தது. அவர்கள் ஒவ்வொருவருடனும் தொடர்பு கொண்டு, மென்மையான குரலில் அவர்களை உற்சாகப் படுத்தி, அவர்களுக்கான தொழில்நுட்ப ஆலோசனைகளையும் வழங்கியுள்ளார். திரைப்படங்கள் எவ்வாறு திரையிடப்பட வேண்டும் என எங்களுக்கு ஆலோசனைகளையும் கூறியுள்ளார். ரொறன்ரோவில் தமிழ்த்திரைப்பட வளர்ச்சியில் கருணாவின் பங்கு மிக முக்கியமானது.

ரொறன்ரோ சர்வதேச திரைப்பட விழா கருணாவின் முக்கிய தேடல் களமாகவிருந்தது. ஒவ்வொரு வருடமும் கருணா விழாவில் திரையிடப்படும் முக்கிய படங்களைப் பற்றிக்கூறுவார். அவ்வாறு அவர் கூறி பல படங்களை நான் பார்த்துள்ளேன். Frida Kahloவின் சுயசரிதையை முன்வைத்து Frida என்ற படம் 2002ல் வெளியாகியிருந்தது. ஒரு நாள் அவரது வீட்டில் அப்படத்தை அவருடன் பார்த்தேன். அதில் வரும் ஓவியங்களை மிக விரிவாக விளங்கப்படுத்தினார். Van Gogh, The Adventures of Picasso, Renoir, Loving Vincent, Surviving Picasso போன்ற ஓவியங்கள் பற்றிய படங்களைப் பற்றி மிக விரிவாக உரையாடுவார்.

இவற்றுடன் ஒடுக்கப்பட்ட மக்கள் பற்றிய படங்களில் கருணாவின் தேடல் அதிகமாகவிருந்தது. கனடாவில் முதற்குடிகள், அவர்களது வாழ்வியல், அவர்கள் பட்ட அவலங்களை நன்கறிந்திருந்தார். அவர்கள் வாழும் பிரதேசங்கள் சிலவற்றுக்கும் சென்றுள்ளார். அவர்கள் வாழ்வியலைப் புகைப்படமெடுத்துள்ளார். முதற்குடிகள் பற்றி அவரளவிற்கு எவருக்கும் தெரியாது என்றால் மிகையாகாது. முதற்குடிகள் பற்றிய பெரும்பாலான திரைப்படங்கள் கருணா பார்த்துள்ளார். அவற்றை அறிமுகப்படுத்துமாறு என்னிடம் பல தடவைகள் கூறியிருந்தார்.

கடந்த வருடத்தின் பின்பனிக் காலத்தில் காணாமல் போனோரைப் பற்றிய ‘உரு’ குறும்படத்துடன் ஞானதாஸ் கனடா வந்திருந்தார். ‘உரு’வை மக்கள் மத்தியில் கொண்டு செல்லவேண்டும் என்ற முனைப்புடன் கருணா மிகத் தீவிரமாகச் செயற்பட்டார். பல முக்கிய விமர்சகர்களிடம் படத்தைக் காட்டி அவர்கள் கருத்தை ஒளிப்படமாக்கி சமூக வலைத்தளங்களில் பதிவேற்றினார். வீதிகளில் நின்று சுவரொட்டிகள் வழங்கினார். காணாமல் போனோரைப் பற்றிய அரசியல் விழிப்புணர்வு ரொறன்ரோவில் ஏற்பட்டமைக்கு கருணாவின் செயற்திறன் மிக்கசெயல்பாடுகள் முக்கிய பங்குவகிக்கின்றன.

எனது முதல் நூலுக்கு (ஒளி தேடும் நிழல்) கருணாவே அட்டைப் படம் கீறியிருந்தார். அதன் பின்னர் ‘எதிர் சினிமா’ நூலை காலச்சுவடு வெளியிட்ட போது, அதன் அட்டையை கருணாவிடம் வடிவமைக்குமாறு காலச்சுவடு கண்ணன் கூறியிருந்தார். காலச்சுவடு பதிப்பகத்தின் பல நூல்களின் அட்டைப்படங்களை கருணா வடிவமைத்திருந்தார். இவரது அட்டைப் பட

**- ரதன் -**

வடிவமைப்பைப் பல விமர்சகர்கள் புகழ்ந்துள்ளனர். நூலின் உள்ளடக்கத்தை இவர் வடிவமைக்கும் அட்டைப்படங்கள் மிகத் தெளிவாக வெளிப்படுத்தும்.

சிலகாலம் நாடகவெளியில் பங்காற்றியுள்ளேன். அங்கும் கருணா காணப்படுவார். நாடக மேடையேற்றத்தை கருணாவின் ஒளியமைப்புக்கள் இலகுவாக்கியுள்ளன. மார்க்கம் தியேட்டரில் உள்ள ஒளிக் கருவிகளை அதிகளவு கருணா பயன்படுத்தியுள்ளார். இதனை மனவெளியின் ஆரம்ப கால நாடகங்களில் காணலாம். கனடா நாடகவெளியில் கருணாவால் பல மாற்றங்கள் கொண்டுவரப்பட்டன.

கருணாவுடன் உரையாடும் ஒவ்வொரு பொழுதிலும், அவர் புதிய தொழில்நுட்பங்களைப் பற்றி குறிப்பிடத்தயங்கமாட்டார். லே அவுட், ஒளிப்பதிவு, ஓவியம், ஒலிப்பதிவு, எடிட்டிங், கமராக்கள் என அனைத்தின் புதிய வடிவங்களை நன்கறிந்து வைத்திருந்ததார். அச்சு வேலைக்கு மிக இலகுவாக கருணாவின் லே அவுட்டுகள் அமைந்திருக்கும். அதே போல் திரைப்பட சுவரொட்டிகள் பல இவரது கைவண்ணத்திலேயே உருவாகியிருந்தன. ஏ.ஆர் ரகுமானின் கனடிய இசை நிகழ்ச்சியின் சுவரொட்டியை கருணாவே வடிவமைத்திருந்தார். ரகுமானே மிகவும் ஆச்சரியத்துடன் அந்த சுவரொட்டியை பார்த்துப் பாராட்டியதாக, நிகழ்ச்சி அமைப்பாளர்கள் கூறினார்கள். விளம்பர வடிவமைப்பில் ஒரு புதிய பாணியை அதற்கு ஒரு சீரிய அந்தஸ்தை இவரது வடிவமைப்பு பெற்றுக் கொடுத்தது.

இவர் படைக்கும் ஒவ்வொரு படைப்பிலும் மிக நேர்த்தி இருக்கும். மிகவும் ஈடுபாட்டுடன் செயல்படுவார். ஒரு சிறு தவறும் அதில் வரக் கூடாது என்பதில் குறியாக இருப்பார். இரவு மூன்று மணிக்கும் தொலைபேசியில் இது தவறாக உள்ளது. திருத்தி அனுப்புங்கள் என்பார்.

ஒரு தடவை நான் இத்தாலிக்கு செல்ல விருப்பம் என அவருடன் உரையாடும் பொழுது குறிப்பிட்டிருந்தேன். சில நாட்களின் பின்னர் அவரை அவரது வீட்டில் சந்திக்கும் பொழுது, இத்தாலியில் என்ன பார்க்கவேண்டும் எங்கு நீங்கள் தொலைந்து போக வேண்டும், பயணத்தின் மிக முக்கிய பங்கெது. எங்கு தங்கலாம், எங்கு நல்ல சுகாதாரமான உணவை, மிகக் குறைந்த விலையில் பெறலாம் என அனைத்தையும் கூறினார். நான் வெனிசையும் வேறு சில இத்தாலிய நகரங்களையும் சுற்றிப்பார்ப்பதற்கு கருணா கூறியவை பேருதவியாக இருந்தன.

பல திறமைகள் கொண்ட மிகச் சிறந்த ஓவியன். நவ அரூப வெளிப்பாடுகளை தனது ஓவியத்தில் வெளிப்படுத்துவார். ஓவியப் பெருவெளியில் இவரது ஓவியங்கள் பல கருத்துக்களை பார்வையாளன் மனதில் ஏற்படுத்தும். கருணா தனது படைப்புக்கள் மூலம் ஒரு புதிய உலகையே நிர்மாணித்தார். அதற்குள் எம்மை அழைத்துச் சென்றார். இன்றும் நாம் அவருடன் பயணிக்கின்றோம்.
வெனிஸில் காணாமல் போனால் எவ்வாறு திரும்பலாம் எனத்தெளிவுபடுத்திய கருணா, தொடர்ந்து புதிய உலகை நிர்மாணிக்க அவருக்கான உதவியை செய்யாமல், அவரது இயக்கம் நிற்பதை தடுக்க முடியாமல் போன குற்ற உணர்வு என்னுடன் என்றும் பயணிக்கும்.





rathan@thaiveedu.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருணா: எம்மிடம் ஒப்படைக்கப்பட்ட ஒளி



**- பா.அ. ஜயகரன் -**

ஓவியர் என்பவர் வண்ணத்தோடு பிறந்து, வண்ணத்தோடு வாழ்ந்து, வண்ணத்தோடு மரித்துப்போகிறார். எம்மைச் சூழ்ந்த வண்ணங்களையும், எம் கண்களுக்குப் புலப்படாத வண்ணங்களையும் எமக்கு காண்



பிக்கக்கூடிய சக்தி அவர்களிடம்தான் உண்டு. ஒளியற்றுப் போனால் வண்ணங்களை நாம் அறிய முடியாது. ஒளியின் மாயையான வண்ணங்களை மனித மனத்தோடு பொருத்தக்கூடிய ஆற்றல் ஓவியருக்கே உரித்தானது. ஓவியம் என்பது வெறுமனே கோடுகளும் காட்சிகளுமல்ல. அது மனதுடனான உரையாடல் வெளி. ஒளியின் வெளி. அதைப் புரிந்துகொண்டவர்கள் தாம் ஒப்பற்ற ஓவியங்களை எங்களுக்கு தந்துவிட்டுப் போயிருக்கிறார்கள். அவை காலகாலமாக நம் வாழ்வைப் பேசிக்கொண்டிருக்கின்றன. நமது சமூகத்தில் ஓவியராய் வாழ்வதென்பது ஒரு துறவு. நல்ல ஓவியர்களை உருவாக்கி வளர்த்தெடுத்து அவரைத் தாங்கும் சமூகமாய் நாம் இருக்கவில்லை. இச்சூழலில் ஓவியராய் உருவாகும் எண்ணமென்பது தன்னார்வ உள உத்வேகமே. ஓவியரானவர் புறச் சூழலுடன் போராடியே ஒவ்வொரு கணத்தையும் கடக்கவேண்டியுள்ளது. அவர்களின் ஆத்மார்த்தமான ஓவியக் கவனம் சிதைக்கப்படுகிறது. வாழ்வைக் கடத்துவதற்காக வேறு துறைகளில் கவனம் செலுத்த வேண்டிய துயரம் நிகழ்ந்துவிடுகிறது. இவ்வகையான தன்மைகளுடனேயே கருணாவைப் பொருத்திப் பார்க்கவேண்டியிருக்கிறது. கருணாவின் ஓவியம் மீதான கவனத்தையும் தேர்வையும் நாம் முன்னிறுத்திப் பார்க்க வேண்டும். அவர் தன் வாழ்நாளில் ஓவியத்தைச் சமூகம் புரிந்துகொள்ள வேண்டும் என்று பாடுபட்டவர். அதற்காய் ஓவியப் பட்டறைகள், ஓவியக்கருத்துரைகள், ஓவியக்கண்காட்சிகள் என்பவற்றை நடத்தியவர். கவனிக்கத்தக்க ஓவியராய் வருவதற்கான ஆற்றலும் ஆத்மார்த்த தேடலும் அவருக்கு இருந்தது. ஆனாலும் சமூகமாய் ஒரு தலை சிறந்த ஓவியரை உருவாக்கத் தவறிவிட்டோம். ஆயினும் தான் ஈடுபட்ட முயற்சிகள் அனைத்திலும் தனக்கான அடையாளத்தை அவர் விட்டுச் சென்றிருக்கிறார். குறிப்பாக வரைகலை வடிவமைப்புத் துறை, புகைப்படத்துறை, ஒளியமைப்புத்துறையில் அவரது பங்களிப்பு மிக முக்கியமானது. கனடியத்தமிழ்ச் சூழலில் அவரது படைப்புகள் என்றும் எமது கவனத்தில் நிற்கும். அவர் முன்னேயிருந்த நீண்ட பயணமும் அதை எதிர்கொள்ள அவர் எடுத்துக்கொண்ட முயற்சிகளும் திடீர் மரணத்தால் நிறுத்தப்பட்டிருக்கின்றன. முக்கியமாக ஈழத்தில் முஸ்லிம் - தமிழ் மக்களுக்கிடையேயான புரிந்துணர்வு முயற்சி. அவரது மனத்தில் அணையாதிருந்த ஒளியை எம்மிடத்தில் ஒப்படைத்திருக்கிறார். அவ்வொளியில் வண்ணங்களைத் தேடவேண்டியவர்கள் நாங்களே. ஓவியருக்கு என் ஆத்மார்த்தமான அஞ்சலி.



jayakaran@thaiveedu.com

# நினைவில் நீங்காத ஓவியம்

**- மனவெளி கலையாற்றுக் குழு -**

மனவெளியின் ஆரம்ப காலங்களில் எம்மோடு உறுப்பினராக இணைந்து அதன் வளர்ச்சிக்கு பெரும் பங்களிப்பு வழங்கிய நண்பர் டிஜி கருணாவை இன்று நாம் இழந்து நிற்கிறோம். சிறந்த ஓவியராக, புகைப்படக்கலைஞராக, வரைகலை நிபுணராக, தகவல் தொழில்நுட்பம் கைவரப் பெற்றவராக, நாடகமேடைகளில் ஒலி,ஒளி சார் தொழில் நுட்பவியலாளராக, அண்மைக் காலங்களில் சிறந்த கட்டுரையாளராக, கவிஞராக என்று விளங்கிய பல்கலை ஆளுமை ஒன்றைக் கலை, இலக்கிய உலகம் இழந்திருக்கிறது.

அவர் மனவெளியில் இணைந்த காலங்களில் வரைகலை தெரிந்தவர்கள் மிகவும் அரிதாகவே இருந்தனர். நுணுக்கமான கலையுணர்வுடனும் தேர்ந்த செய் நேர்த்தியுடனும் எடுத்த பணியை மற்றவர்களின் தூண்டலின்றி செவ்வனே செய்து முடிக்கும் இவரது இயல்பு மனவெளிக்கு ஒரு பெரிய பலமாகவும் சொத்தாகவும் இருந்தது. அவர் மனவெளியில் இணையும் வரை அரங்காடல் மேடைகளில் ஒலி, ஒளி தொழில்நுட்பங்களைத் தனி ஒருவராகவே கவனித்து வந்த நண்பர் சிவத்தின் பணி கருணாவின் வருகையால் மிகவும் இலகுவாக்கப்பட்டது.

அவரோடு பழகிய காலங்களில் அவருடைய பல சிறப்பியல்புகளை எம்மால் அவதானிக்க முடிந்தது. ஒத்திகைகளின் போது ஒரு குழந்தையைப் போல குதூகலிப்பதும் அங்கதச் சுவை தோய விஷயங்களை பரிமாறிக் கொள்வதும் மிகுந்த தேடல் மூலம் தான் இரசித்தவற்றை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வதுவும் இன்றும் எமது கண்முன் நிழலாடுகின்றன. நாடகங்களில் தனக்குரிய பணிகளுக்கும் அப்பால் ஓர் உதவி இயக்குநருக்குரிய பொறுப்போடும் ஆர்வத்தோடும் எம்மோடு ஒத்துழைப்பார் அண்மைக் காலங்களில் அவர் எழுதிய கட்டுரைகளை வாசிக்கும் எவரும் அவருடைய தனித்துவமான எழுத்துப் பாணியை இனங்கண்டிருக்கக்கூடும்.

*சோம்பேறிகளும் முட்டாள்களும்கூட*
*சாளரங்களைத் திறந்து*
*மரணத்திற்காகக் காத்திருப்பதில்லை.*

*பெருவெளியில்*
*அலைந்து கொண்டிருந்த மரணம்*
*ஊஞ்சலில் வந்தமர்ந்தது...*

என்று தொடரும் அவர் எழுதிய கவிதை ஒன்றினை அண்மையில் வாசிக்க நேர்ந்தது. அது இவ்வாறு முடிகிறது .

*அது எமக்காகவும் காத்திருக்கிறது*
*பிம்பவெளிகளில் இருள் கனமாகி*
*நிழல்கள் விலகி நகர*
*நெளியும் அசைவில் நமக்கான*
*காத்திருப்புத் தெரிகிறது.*

அவரே கூறியிருப்பது போல நாம் எல்லோரும் மரணத்துக்காகக் காத்திருந்தாலும் மரணம் அவர் வாழ்வை இவ்வளவு சீக்கிரத்தில் அணுகுமென்று நாம் எவருமே எதிர் பார்த்திருக்கவில்லை.

அவர் வடிவமைத்த ‘அரங்காடல்’ என்ற எழுத்துருவைத்தான் நாம் இன்றும் உபயோகப்படுத்துகின்றோம். அவருடைய வாழ்வும், பணியும் மனவெளியில் என்றும் நீங்காத ஓவியமாக நிலைத்திருக்கும்.

- மனவெளி கலையாற்றுக் குழு.

■ ■ ■

# கருணா இல்லை என்பதை இதயம் மறுக்கின்றது

**- பார்வதி கந்தசாமி -**

கருணா எனக்கு ஒரு தம்பியாகவே பழகினார். வாஞ்சை ததும்பும் வார்த்தைகள்! அன்பினால் அனைத்து நட்புக்களையும் பேணிப் பாதுகாத்தவர். நான் கனடாவுக்கு வந்த புதிதில் தமிழ்ப்பெண்கள் சிறகொடிந்த பறவைகளாக அனுபவித்த துன்பங்கள் பலவற்றை அறிந்துகொண்டேன். அவர்களுக்கு ஆங்கில மொழி தெரியாததால் பல துன்பங்கள். மக்களும் வைத்தியத் தேவைகளை உணரவில்லை. மாரடைப்பால் பல ஆண்கள் இறந்தனர். பெண்களுக்குக் காப்பகம் பற்றிய அறிவு இருக்கவில்லை. பல பெண்கள் சிறகொடிந்த பறவைகளாகித் தற்கொலையை நாடினர். அப்பொழுது இலங்கைக் குடும்ப வேவைகள் சங்கம் என்ற நிறுவனம் ஜானகி பாலகிருஸ்ணன் தலைமையில் உருவாக்கப்பட்டிருந்தது. தமிழர் கனடாவில் அனுபவிக்கும் துயரம் பற்றி ரொறன்ரோ நகரசபையிடம் நாம் இருவரும், தமிழருக்கு அறிவூட்டல், விழிப்புணர்வு ஊட்டல் தேவைகளை எடுத்துக் கூறி நான்கு கைநூல்கள் தயாரிப்பதற்கான சிறு தொகை பணத்தைப் பெற்றுக்கொண்டோம். அவை தட்டச்சு மூலம்தான் தயாரிக்கப்பட்டன. இவற்றுக்கான படங்களை வரைவதற்காகத்தான் கருணாவை நாடினேன். அப்பொழுது டொன்மில்ஸை அண்டிய கிழக்கு யோர்க் பகுதியில் வாழ்ந்து கொண்டிருந்த ஓவியர் மாற்குவின் மாணவனின் திறமைகளை அறிந்து அவரிடம் இந்த நான்கு நூல்களான, ‘காப்பகம்’, ‘மனஉளைச்சல்’, ‘மாரடைப்பைத் தடுப்பது எவ்வாறு?’, ‘பற்களைப் பாதுகாப்பது எவ்வாறு?’ ஆகியவற்றை ஆக்கிக்கொண்டேன். அவற்றுக்கான வரைபடங்கள் ஓவியர் கருணா கைவண்ணத்தில் உருவாகின. அவை சமூகத்தால் பெரிதும் வரவேற்கப் பட்டன. காப்பகம் என்ற கையேடு பெண் பலவித துன்பங்களால் அமுங்குவதைப் பல கைகள் அவளை நோக்கிய எறிகணைகளாக இருக்கக் காட்டப்பட்டுள்ளது. அந்த நூல் ஆண்களிடையே அச்சத்தையும் ஏற் படுத்தியிருந்தது.

பின்னர் எயிட்ஸ் நோயால் சமூகத்தில் இழப்புகள் ஏற்படத் தொடங்கியபோது எங்கள் பேசாப்பொருளாகக் காலாகாலத்தில் வைத்திருந்த பாலியல் தொடர்பான சிக்கல்களை அவிழ்ப்பதற்கு அறிவூட்டலைச் செய்யவேண்டிய தேவை அவசியமாக இருந்தது. இதற்காகக் கருணா செய்த அட்டைப்படம், அவர் தேர்ந்து கொண்ட கையேட்டுக்கான தலைப்பான, ‘மன்மதக் கலை’ கருணாவின் ஆளுமையையும் காட்டின. பாலியல் பற்றிய பிரச்சனைகள் பற்றிய வரை படங்கள் இலகுவாக மக்கள் புரியும் வகையில் அமைந்திருந்தன. பல ஆண்கள் மதுவுக்கு அடிமையாகி இருந்தனர். மதுபோதையில் மனைவி, பிள்ளைகளை வைத்து வாகனம் ஓட்டுவார்கள். இன்றும்கூட அவ்வாறான குற்றம் புரிந்து சிறையில் இருப்பவர்களில் தமிழர் தொகை அதிகமாகக் காணப்படுகின்றது. மது அரக்கன் என்ற கையேடு ஒரு வயதுப்பிள்ளைக்கான பிறந்த நாள் விழாவுக்கு குழந்தையின் முன்பாக மெழுகுவர்த்தி கொழுத்தப் பட்ட கேக்கும் இருபுறமும் பெரிய சாம்பெயின் வைன் போத்தல்கள் நுரை கக்கிக்கொண்டு பிள்ளையை வாழ்த்துவதாகவும் இருந்த வரைபடம் சமூகப் பிரச்சனையைத் தெளிவாகக் காட்டியது. முதியோர் வன்முறை என்ற நூலுக்கும் அட்டைப்படம் வரைந்தார். வசந்தம் என்ற நிறுவனத்தின் இலச்சினை கருணாவால் உருவாக்கப்பட்டது.

கருணாவின் இதயம் சமூகக் கொடுமைகளுக்கு எதிராகவே என்றும் இயங்கியது.

அவர் எங்களை எடுத்த புகைப்படங்களும் உயிரோவியங்களாகவே இருக்கின்றன. கருணாவுக்கு நான் சுட்ட அப்பங்களில் அபாரப் பிரியம்.

கருணா இல்லை என்பதை ஏற்றுக்கொள்ள என் இதயம் மறுக்கின்றது. ஆனால் இதயம் கனக்கின்றது. கருணாவின் ஆத்மா மக்கள் உள்ளங்களுடன் ஒன்றித்து இருக்கும் என்பதற்குக் காலம் கடந்தும் வாழப் போகும் அவரது படைப்புகள் சான்றாகும்.



parvathy.k@thaiveedu.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது சமூகத்தின் பேரிழப்பு




**- குரு அரவிந்தன் -**

ஓவியர் இயூஜின் கருணாகரன் வின்சென்ற் அவர்களின் மறைவு அவரை அறிந்தவர்கள் எல்லோருக்கும் அதிர்ச்சி தரக்கூடியதாக இருந்தது. 'நேற்றிருந்தார் இன்றில்லை' என்ற வாக்கியம் எவ்வளவு உண்மை என்பதை இந்த மரணம் எல்லோருக்கும் நினைவூட்டியது. எந்தவொரு தற்பெருமையும் இல்லாது, மிகவும் அன்பாகவும் அமைதியாகவும் வார்த்தைகளை அளந்து பேசும் இவர் எங்கள் மத்தியில் இன்று இல்லாதது ஓவியக் கலைக்கு மட்டுமல்ல, எமது சமூகத்திற்கும் பெரும் இழப்பாகும்.



கனடாவில் தை மாதத்தை மரபுத்திங்களாகக் கனடிய அரசு பிரகடனப்படுத்தியதில் இருந்து தமிழர் கலாச்சார நிகழ்வுகள் பலவற்றிலும் இவருடைய ஓவியங்கள் இடம்பெறத் தொடங்கியதால் தமிழ் ஆர்வலர்கள் பலரின் பார்வையும் இவர் வரைந்த நவீன ஓவியங்கள் மீது திரும்பியிருந்தன. மிக அற்புதமாக ஓவியம் வரைவதில் மட்டுமல்ல, நவீன யுகத்திற்கு ஏற்ப கணினி மூலம் தனது ஓவியங்களுக்கு மெருகூட்டுவதிலும் வல்லவர். எனது நண்பர் பி. விக்னேஸ்வரனின் 'வாழ்ந்து பார்க்கலாம்' என்ற நூலுக்கான அட்டைப் படத்தை டிஜிட்டல் முறையில்தான் வடிவமைத்திருந்தார். இது போன்ற பல நூல்களுக்கு இவர் அட்டைப்படம் வரைந்திருக்கின்றார்.

மார்க்கம் நகரசபை மண்டபத்தில் இவரது ஓவியக் கண்காட்சி மிகவும் சிறப்பாக நடைபெற்ற போது அந்த ஓவியங்களைப் பார்த்து ரசிக்கச் சந்தர்ப்பம் கிடைத்தது. பெரிதும் சிறிதுமாகச் சுமார் 40 ஓவியங்கள் வரை அங்கே பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன.

தமிழ்ப் படைப்பிலக்கியத்தில் கொண்ட ஆர்வம் காரணமாக அவர் ஏதாவது நூல்களுக்கு அட்டைப் படம் வரைந்திருந்தால் அவரைச்சந்திக்கும் போதெல்லாம், அதைப் பற்றி நான் பாராட்டுவேன். நூலின் உள்ளடக்கம் என்ன என்பதை இவரது அட்டைப்படம் அப்படியே எடுத்துச் சொல்லும் வகையில் இவரது ஓவியங்கள் கதை சொல்லும்.

இரண்டு வாரங்களுக்கு முன் அவருடன் உரையாடியபோது, ஓவியக்கலை பற்றி, குறிப்பாக நூல்களுக்கு அட்டைப்படம் வரைவது பற்றி ஒரு குட்டிப் பிரசங்கமே செய்திருந்தார். ஒரு நூலின் நீளம், அகலம் மட்டுமல்ல எத்தனை பக்கங்கள் என்பதும், எத்தகைய தாளில் அச்சடிக்கப்படுகிறது என்பதும் அவசியம் என்பது போன்ற பல நுணுக்கமான விடயங்களைத் தனது அனுபவத்தின் மூலம் தெளிவு-படுத்தியிருந்தார். தாய்வீடு பத்திரிகையில் ஓவியம் பற்றிய தனது அனுபவங்களைக் கட்டுரைகளாக எழுதியிருக்கின்றார். ஓவியக்கலை அருகிவரும் இக்கால கட்டத்தில் அனுபவம் மிக்க இவரது இழப்பு எம்மினத்திற்குப் பெரும் இழப்பாகும்.

*நெருநல் உளனொருவன் இன்றில்லை*
*- எனும்*
*பெருமை உடைத்து இவ்வுலகு.*

- திருக்குறள்-336

குறள் சொல்லும் நிலையாமையைப் புரிந்து கொண்டு அமைதி காண்போம். இனிய நண்பரின் ஆத்மா சாந்தியடைய நாங்களும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பிரார்த்திப்போம்.



*kuruaravindan@thaiveedu.com*

# ஓவியர் கருணாவுடனான நினைவலைகள்...

1996ம் ஆண்டு 'முழக்கம்' ஏடு ஆரம்பிக்கப்பட்டாலும் அதற்குப் பல வடிவமைப்பாளர்கள் உருவாக்கியிருந்த தலைப்பு ஆசிரியர் குழுவுக்கு நிறைவு அளிக்கவில்லை.

வடிவமைப்பாளரும் ஓவியருமான கருணா அவர்களின் திறமையைக் கேள்வியுற்று 1997ம் ஆண்டின் இறுதியில் அவரை அணுகியிருந்தோம். நமது எதிர்பார்ப்பைக் கேட்டுவிட்டு இருநாள் கழித்து வரச் சொன்னார்.

இருநாளில் ஆறு தலைப்புகளை வரைந்து வடிவமைத்து வைத்திருந்தார். அவரது திறமை கண்டு மலைத்துப்போனோம். அவர் வரைந்த ஆறில் ஒன்றினையே அன்றிலிருந்து 'முழக்கம்', 2009 மே 17ல் நிறுத்தப்படும்வரை பதிப்பில் பயன்படுத்தி வந்தோம்.

பின்நாளில் சிறப்புப் பதிப்புக்கு ஓவியர் மருது அவர்கள் வரைந்த கோட்டு ஓவியத்தைத் முகப்பாகப் பயன்படுத்த வடிவமைத்துத் தந்தார் கருணா அண்ணா.

அவரது அறையில் பல ஓவியங்கள் இருந்தன. ஓவியங்கள் அருமை எனப் பாராட்டினேன். தன்னைச் செதுக்கிய ஓவியர் மாற்கு அவர்களுக்குத்தான் அந்தப்பாராட்டு முழுமையாகப்போகவேண்டும், தனக்கு அல்ல என்று மிகவும் தன்னடக்கமாகக் கூறினார்.

அந்தத் தொழில்முறை சந்திப்பு காலப்போக்கில் நமக்கும் அவருக்குமான பெரும் நட்புப் பிணைப்பாக மாறிவிட்டது.

தனித்துவம், புதுமை, படைப்பாற்றல் - இவை மூன்றுக்கும் கருணா அண்ணன் அவர்கள் கொடுக்கும் முக்கியத்துவம் அளப்பரியது. அது வார்த்தைகளால் வர்ணிக்க முடியாதது.

முழக்கம் ஏட்டுக்கு ஒரு தனித்துவம் வேண்டும், அதற்காகப் பல விடயங்கள் செய்ய வேண்டும். முக்கியமாக ஒரு தனி எழுத்துரு (font) செய்யுங்கள். பத்திரிகையின் ஒரு துண்டு கிழிந்து தெருவில் கிடந்தாலும் அது 'முழக்கம்' ஏட்டின் ஒரு பகுதி என மக்களுக்குத் தெரியவேண்டும். அந்த அளவுக்கு எழுத்துரு மற்ற ஏடுகளிலும் விடத் தனியானதாக இருக்கவேண்டும் என அவர் எமக்கு ஆலோசனை சொன்னார்.

அது பெரும் வேலை, செலவு என நாம் அதனை நிராகரித்தோம். ஆனால் ஒரு சில கிழமைகளில் 'முழக்கம்' என்ற பெயரில் அதற்கான தனி எழுத்துருவைத் தானே வடிவமைத்துக்கொடுத்தார். மூன்று, நான்கு தடவைகள் அச்சேறவிட்டு மக்களின் கருத்து அறிந்து அதிக நேரம் வாசிக்க ஏற்றாற் போல் அந்த எழுத்துருவைச் செய்து கொடுத்தார்.

இவ்வாறாகப் பதிப்பு ஊடகத்துறையில் அவருக்கு இருந்த திறமை அளவு கடந்தது.

நாங்கள் வடிவமைப்பை பேச்மேக்கர் எனப்படும் மென்பொருளில் செய்து வந்தோம். அதை மாற்றுங்கள் உலகின் முன்னணி பத்திரிகைகள் எல்லாம் பயன்படுத்துவது குவாக் எக்ஸ்பிரஸ் என்ற மென்பொருள். அது இலகுவானது. செயல் தொழில்நுட்பம் மிக்கது என அறிவுரை சொல்லி நம்மை மாற்றவைத்தார்.

முழக்கம் இணையத்தளம் வடிவமைத்துத் தந்தார். மக்கள் களம், நேர்காணல், வளரும் தமிழினத்தில் மிளிரும் தமிழர்கள், புகலிட நிகழ்வுகள், இளநீர், மன்னர் பொன்னர் என முழக்கம் ஏட்டில் வெளிவந்த அத்தனை பகுதிகளுக்கும் இலச்சனைகள் வரைந்து கொடுத்தார்.

தியாகி திலீபன் நினைவு நாள் சிறப்பிதழ் முதன் முதலாக வர்ணப் பதிப்பு கொண்டு வந்தோம். அதுதான் கனடாவில் முதன் முதலில் வெளிவந்த தமிழ் முழுவண்ணப் பத்திரிகை.

ஏன் ஒவ்வொரு பதிப்பையும் கலரில் கொண்டு வரமுடியாது? புதுமைசெய்யுங்கள். மாற்றங்களைக் கொண்டுவாருங்கள் என்று அடிக்கடி சொல்வார். செலவு அதிகமாகும் கனடியத் தமிழ் வணிகர்களின் பொருளாதார பலம் அதற்கு ஏற்றதாக இல்லை என மறுக்க தானே அதற்கான புதிய தொழில்நுட்பத்தையும் தேடித் தந்து தானே பல ஆண்டுகள் முழக்கத்தின் முகப்பையும் வடிவமைத்துக் கொடுத்தார்.

பொதுவாக ஒவ்வொரு வியாழக்கிழமையும் நான் இரவு 8 மணிக்கு அவர் பணிமனைக்குப் போவேன். அவருக்குப் பிடித்த சிற்றுண்டிகளும், கோப்பியும் கொண்டுபோ-வேன். பலவேளைகளில் இரவு 2, 3 மணி வரை வரைகலை, விளம்பர வடிவமைப்பு வேலைகள் நேரமெடுக்கும். "கடிக்கச் சிற்றுண்டிகள், குடிக்கக் குளம்பி (கோப்பி) கொண்டு வந்திருக்கிறீர்கள். கேட்க ஒன்றும் இல்லையா" என நக்கலாகக் கேட்பார். 'கேட்க' என்பது தன்னுடைய படைப்புகள் குறித்து மக்கள் என்ன விமர்சனம் வைக்கின்றார்கள் என்பதை அறிந்து கொள்வது. அவருக்குச் சாப்பாடு, பணம், செலவுகள் போன்றவற்றைவிட தனது படைப்புக்கள் பற்றிய மக்களின் விமர்சனம் முக்கியம். விடியவிடிய வேலைசெய்து அவரை அவரின் அக்கா வீட்டில் இறக்கிவிட்டு நான் திரும்புவதுண்டு.

முழக்கம் ஏட்டின் அரசியல் நிலைப்பாட்டில் அவருக்கு அதிக உடன்பாடு இருக்கவில்லை. ஆயினும் சாதிமத மறுப்பு தொடர்பான, அவற்றுக்கு எதிரான செய்திகள் வெளியிடுவது, வெளிப்படையாக இயங்குவது போன்றவற்றில் பெரும் ஆர்வமும் உடன்பாடும் இருந்தது. தனது சொந்தப் பெயரிலும், புனைபெயர்களிலும் கட்டுரைகள், விமர்சனங்கள், தொழில்நுட்பம் போன்றவை எழுதிய கருணா அண்ணனுடனான பிணைப்பு முழக்கம் 2009ல் நிறுத்தப்பட்டதும் குறைந்துவிட்டது. அதன் பின்னர் அவ்வப்போது தொலைபேசி உரையாடல். அல்லது எங்காவது புத்தக வெளியீட்டில் கண்டால் பேசுவது. கடைசியாக இயக்குநரும் அவருடைய பள்ளித்தோழருமான அண்ணன் ஞானதாஸ் காசிநாதர் கனடாவுக்கு வந்தபோது சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. அந்த சந்திப்புப் படங்களை அழகுற எடுத்துதந்த கருணா அண்ணன், நம்மை விட்டு இவ்வளவு சடுதியாக விண்ணோடி விடுவார் எனச் சற்றும் எதிர்பார்க்க முடியவில்லை. ஊரில் பார்த்த காட்சிகளை, அந்த முகங்களை இயல்பான ஓவியமாக்கும் திறன், இயல்பான படங்கள், இயல்பான வடிவவமைப்புச் செய்யும் திறமை - இவை அனைத்தையும் கொண்ட கருணா அண்ணனது மறைவு எம் அனைவருக்கும் பேரிழப்பு!

கண்ணீர் வணக்கம்
அண்ணாச்சி....!



**- திருமுருகவேந்தன் -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமகாலத்தில் நான் சந்தித்த உன்னதக் கலைஞன்!



சகலகலா வல்லவன் என்று கருணா அண்ணனைச் சொன்னால் அது மிகையல்ல, முற்றிலும் பொருத்தமே.

2017 இல் நடைபெற்ற தாய்வீடு அரங்கியல் விழாவுக்கான நடன நாடகம் ஒன்றைத் தயார்படுத்துவதற்கான சந்திப்பின்போது கருணா அண்ணனும் வந்திருந்தார். தாய்வீட்டின் ஆசிரியர் டிலிப்குமார் அவர்கள், அரங்கியல் விழாவின் நோக்கம், அதன் வரையறைகள் யாவற்றையும் சுருக்கமாகக் கூறிவிட்டு, கருணா அண்ணனைக் காட்டி, “இவர் உங்கட நாட்டியத்தை மேலும் மெருகூட்ட உதவுவார். எங்களிட்ட இருக்கிற ஒரு திறமைசாலி. அவரை வடிவாப் பயன்படுத்துங்கோ” என்றார்.

அதுவரை அமைதியாகக் கேட்டுக்கொண்டிருந்த கருணா அண்ணன், மெதுவாகப் பேச ஆரம்பித்தார். “எங்களிட்ட இருக்கிற நல்ல தொழில்நுட்ப வசதிகளை நாம் பயன்படுத்தவேணும்” என்று ஆரம்பித்து, “இன்றைய நவீன வசதி கொண்ட அரங்குகளில் நினைப்பதைச் செய்ய முடியும்” என்று நம்பிக்கையான வார்த்தைகளைக் கூறினார். டிலிப்குமார் அவர்களும் “உங்கட விருப்பத்துக்குச் செய்யுங்கோ” என்ற உறுதிபடக் கூற, எமது படைப்பிற்கான இயக்கம் தொடங்கியது.

ஒரு படைப்பாளிக்குச் ஒரு சுதந்திரமான வெளி தேவை. அப்போதுதான் படைப்பு முழுமையடையும்.

கருணா அண்ணனோடு 2 மாதங்கள் முழுமையாக இணைந்து அரங்கியல் விழாவிற்கான நடன நாடக உருவாக்கத்தில் ஈடுபட்டிருந்தேன். என்னுடைய விருப்பங்களை அவரிடம் முதலில் கூறினேன். ஏன் என்றால் ஓர் அரங்க நிகழ்வு என்பது (theatrical performance) நடன உருவாக்கம் செய்யும் போது அதன் கதையோட்டத்துக்கு ஏற்ப, இசைக்கேற்ப அமையப் பெற்றிருக்கும். ஓர் இயக்குநரின் நோக்கங்களின்படி அந்த நடனத்தினைப் பல தொழில்நுட்ப வசதிகளுடன் காட்சிப்படுத்துவதே ஒளியமைப்பாளர் பணியாகும். இந்த வகையில் நான் சொன்னவற்றை உள்வாங்கியபின் தனது விருப்பத்தை அவர் கூறினார்

அது என்னை வெகுவாய்க் கவர்ந்தது. சரி அண்ணன் உங்களின் விருப்பம் போல் செய்வோம் என்று அவர் மேல் தோன்றிய நம்பிக்கையுடன் அவருக்கு முழுச் சுதந்திரத்தினை வழங்கினேன்.

என்னுடைய நாட்டியப் படைப்புகளில் புதிதாக இணையும் ஒவ்வொருவரிடமும் நான் கேட்கும் ஒரு கேள்வியை அண்ணனிடமும் கேட்டேன். “அண்ணன், நீங்கள் இந்த அரங்கியல் விழாவில் கடந்த பல ஆண்டுகள் இணைந்து செயல்படுகிறீர்கள். என்ன நோக்கத்துக்காக இந்த அரங்கியல் விழாவை முன்னெடுக்கின்றீர்கள்?” என்று கேட்டேன்.

‘எமது கலைஞர்களின் திறமைகளை வெளிக்கொண்டுவர வேண்டும், அதுவும் சிறந்த அரங்கிலே சிறந்த தொழில்நுட்ப வசதிகள் அனைத்துமே நாம் வாழ்கின்ற இந்த நாட்டிலே கொட்டிக் கிடக்கிறது, அவற்றை சிறந்த முறையில் பயன்படுத்த வேண்டும். மேலும் எமது அடுத்த தலைமுறையினருக்குத் தலைமைத்துவப் பண்பையும் ஒன்றுகூடுகின்ற பண்பையும் அதேநேரம் எம்முடைய மரபுக்கலைகளையும் அவர்களிடம் எடுத்துச்செல்ல வேண்டும் என்ற இலக்குகளை மையமாகக் கொண்டே இந்த இந்த அரங்கியல் விழாவை நடத்தி வருகின்றோம்.” என்றார். அழகாகவும் ஆழமாகவும் இருந்தது அவருடைய நேர்த்தியான பதில்.

எமது பாரம்பரியக் கலையான கூத்து, நடனம், நாடகம் போன்றவற்றை இக்காலத்துக்குரிய தொழில்நுட்ப வசதிகளுடன் இணைத்து மெருகூட்டி அதை அடுத்த தளத்துக்கு எடுத்துச் செல்வது இவரது கனவு.

அந்தக் கனவை நனவாக்கும் முயற்சிகளின் உன்னத களமாக தாய்வீட்டின் அரங்கியல் விழாவைப் பயன்படுத்தினார் கருணா அண்ணன்.

‘ரோமியோ ஜூலியட்’ நாடகத்தை, பிரமாண்ட அரங்கிலே (mainstream performance theatre) பார்க்கக் கிடைத்தால் வாய் பிளப்போம். அந்தளவுக்கு நவீன உயர் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தியிருப்பார்கள்.



எமது கலைகளையும் இவ்வாறான தொழில்நுட்ப உத்திகளைப் பயன்படுத்தி, பார்வையாளர்களுக்கு அற்புத அனுபவத்தை வழங்க வேண்டும் என்பது அண்ணனின் பேராசை. இதுவே அவரது தொலைநோக்குப் பார்வையும் கூட.

கருணா அண்ணனுக்கு எமது மார்க்கம் கலையரங்கம் மிகவும் பிடித்தமான அரங்கம். அங்கு அவருக்கு எல்லாம் அத்துப்படியாக இருந்தது. அங்குள்ளள ஒளி, ஒலி அமைப்புகளின் நுட்பங்களை நன்கு அறிந்தவராக இருந்தார்.

நடனத்தில் பேசப்படுகின்ற ஒவ்வொரு வார்த்தைகளும் கூத்திலே பாடப்படுகின்ற ஒவ்வொரு வரிகளும் நடனப் பாடல்களும் வாசிக்கும் வாத்தியக்கருவிகளின் இசைகளும் எந்த பிசுறுகளும் இல்லாமல் துல்லியமாகப் பார்வையாளர்களிடம் போய்ச் சேர வேண்டும் என்பதில் எப்போதும் மிகக் கவனமாக இருப்பார்.

எங்களுடைய நடன நாடகத்தில், காட்சி அமைப்பில் கருணா அண்ணன் ஆற்றிய பங்கு மிகப்பெரியது.

கவிஞர் அறிவுமதியின் ‘ஆடல் கண்ணகி’ என்ற கவிதைக்கு முதன்முதலில் நான் நடன அமைப்புச் செய்திருந்தேன். அது கருணா அண்ணனுக்கு மிகவும் பிடித்திருந்தது. அதற்கு அவர் அமைத்த பின்னணிக் காட்சியும் அசையும் காட்சியும் அனைவரையும் கவர்ந்திருந்தது. இரண்டு காட்சிகளிலும் அது பெரும் வரவேற்பைப் பெற்றது.

அதை காணொளிக் காட்சியாகப் பார்த்த கவிஞர் அறிவுமதி, நேரடியாகத் தொடர்பு கொண்டு கருணா அண்ணனைப் பாராட்டியதுடன் அதன் காட்சியமைப்பு பற்றி பெரிதும் மகிழ்ந்திருந்தார்.

‘எங்கெங்கு காணினும் சக்தியடா’ நாட்டிய நாடகம் கிட்டத்தட்ட 45 நிமிடங்களைக் கொண்டிருந்தது. இயற்கையுடன் ஒன்றிய பழந்தமிழர் காலம், பக்திக்காலம், காப்பியகாலம், இடைக்காலம், நவீனகாலம் என்று தமிழ் அன்னை நடைபயின்ற காலகட்டங்கள் ஒவ்வொன்றிலும் பெண் தன்னை எப்படி வெளிப்படுத்தினாள் என்பதைப் பொன்னையா விவேகானந்தனின் வரிகளில் நடன வடிவில் கொண்டு வந்தோம்.

இந்த நடன நாடகத்தின் ஒவ்வொரு காட்சிகளையும் தன்னுடைய ஒளியமைப்புகளாலும் பயன்படுத்திய பல்வேறு பின்னணிக்காட்சிகளாலும் பேரழகாக்கினார். ஒவ்வொரு காட்சிக்கும் பொருத்தமான பின்னணிப் படங்களைத் தேர்ந்தெடுத்து, அவற்றுக்குப் பொருத்தமான ஒளியை அரங்கில் வீழ்த்துவது எளிதல்ல. அதியுயர்ந்த கற்பனை வளமும் படைப்புத் திறனும் வண்ணக் கலவைகள் பற்றிய அறிவும் இருக்க வேண்டும். கருணா அண்ணனிடம் அவை யாவும் இருந்தன. தன் ஆற்றலால் எங்களையும் அவையோரையும் பேரானந்தப்படுத்தினார்.

பார்வையாளர்கள் தங்களுடைய அனுபவத்தினைப் பகிரும்போது ஒரு திரைப்படத்தைப் பார்த்ததுபோல் இருந்தது என்று கூறினார்கள்.

இன்னொரு கட்டத்திலும் அவரின் தொழில்நுட்பம் பேசப்பட்டது.

‘ஏழிசையாய் இசைப்பயனாய்...’ எனும் சுந்தரரின் தேவாரத்துக்கு ஏழு இசைக் கருவிகளை நான் தொட, அவை உயிர் பெற்று இயங்குவது போன்றதொரு காட்சி வரும். அந்தக் காட்சிக்கு ஒளியால் உயிரும் உணர்வும் ஊட்டினார் கருணா அண்ணன். அக்காட்சியின் போது, ஏழு விதமான கோணங்களில் இருந்து ஏழு spotlight ஐப் பயன்படுத்தி அவர் செய்த ஒளிச்சேர்க்கை என் அனுபவத்துக்குப் புதிதாக இருந்தது.

இந்த நடனத்துக்காக இவர் செலவிட்ட நேரம், அதற்காக அவர் வெளிப்படுத்திய தேடல்கள் எம்மை ஆச்சரியப்படுத்தின. ஐந்து தடவையேனும் எமது ஒத்திகையைப் பார்த்திருப்பார். அந்தநேரத்தில் அதை மேம்படுத்தும் நோக்கில் தனது கருத்துக்களை மென்மையாகவே கூறுவார்.

இந்த நடன நிகழ்ச்சி மேடையில் தொடங்கும் நேரம். மாணவர்கள் அனைவரும் தயாராக நிற்க, திரை விலகுகின்றது. முதற்காட்சி விரிகின்றது. இயற்கையின் அதிகாலைப் பொழுது. திருப்பள்ளியெழுச்சி இசைக்கப்படுகின்றது. அவ்வேளை காலைப்பனியாக விலகாத புகாருக்கிடையே வண்ணநிற ஒளியைப் பாய்ச்சுகிறார் கருணா அண்ணன். என்னவொரு அற்புதமான தருணம். புலருமொரு அழகிய பொழுதில் திருப்பள்ளியெழுச்சி இசை செவிகளைத் தொட, அந்த அரங்கில் நான் தேவலோகக் காலைப்பொழுதையே கண்டேன்.

மெய்சிலிர்த்து ஆனந்தக் கண்ணீர் விட்ட அந்தத் தருணத்தை நான் என் வாழ்நாளில் மறக்க முடியாது. ஓர் ஆடல் நிகழ்ச்சிக்கு முழுமையான சுதந்திரத்துடன் ஒளியமைக்க வேண்டும் என்ற தன்னுடைய கனவை எங்கள் நிகழ்ச்சி வாயிலாக நிறைவேற்றியிருந்தார் கருணா அண்ணன். இதை நான் எனக்குக் கிடைத்த பாக்கியமாகவே கருதுகின்றேன்.

கருணா என்னும் படைப்பாளி விட்டுச் சென்ற சிந்தனைகளும் வழிகாட்டல்களும் எம் அனைவரிடமும் நிறைந்துள்ளன.

கருணா அண்ணனோடு பணியாற்றக் கிடைத்த தருணங்கள் அழகானவை. அறிவூட்டியவை. புதிய தேடல்களுக்கான கதவுகளைத் திறந்து விட்டவை. அவையே இனியும் எனக்கு வழிகாட்டவல்லனவாக அமைகின்றன.

குறுகிய காலமே பழகினாலும் அவர் என் ஆடல் துறையில் பகிர்ந்து கொண்ட அனுபவப் பரிமாற்றம் மிகப் பெரிது!



- கார்த்திகா பார்த்திபன் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் கண்ட கருணா



கலைகளில் அவள் ஓவியம் என்பது கவி யரசர் கண்ணதாசனின் திரைப்படப் பாடல் வரி.

கவிதையையும் இசையையும் தினமும் இரசித்துணர்ந்த அற்புதக்கலைஞர். அவ ருக்குள் ஓவியத்தின் மகிமை அப்படிப் புகுந்ததன் காரணம் என்ன?

கலைகள் யாவினதும் பரிமாணத்தை வெளிக்காட்டும் ஆற்றல் ஓவியத்திற்கு உள்ளதை அவர் அப்பவே உணர்ந்தி ருந்தார் போலும்.

பொதுவாகவே கலைகளுக்கு இதுதா-னென்று ஒரு வரலாற்றைத் தீர்மானிக்க முடியாது. மனித சமூகத்தின் ஆரம்ப கால வளர்ச்சியோடு அவை ஒவ்வொரு கட்ட டத்தில் ஒவ்வொரு ரூபத்தில் இணைந்தி ருக்கின்றன.

கூத்து, இசை, நாடகம் என்பன எப்போது ஆரம்பித்தன என்று சொல்லமுடியாது. ஓவியம் என்பது குழந்தைக்கு சந்திரனைக் காட்டி உணவு தீத்துவதிலிருந்து ஆரம் பிக்கின்றது. தூரத்தில் தெரியும் மாட்டைக் காட்டி ஆட்டைக் காட்டி உணவூட்டுவதி லிருந்து தொடங்குகிறது. சந்திரனைக் காட்டி “உம்மாண்டி” என்பதோ அல்லது அவ்வைப்பாட்டி என்பதோ எதுவானாலும் குழந்தைக்கு அங்கு நவீன ஓவியம் தொடக்கிவிடப்படுகிறது.

### நவீன ஓவியம்:

17ம் நூற்றாண்டில் வந்த காமராப்பெட்டி மரபு வழியாக வந்த ஓவியர்களின் வயிற் றில் நெருப்பைக் கொட்டத்தொடங்கியது.

மரபுவழி வந்த ஓவியர்கள் தமது ஓவி யங்களில் வரையறுக்கப்பட்ட பரிணாமம், இணக்கப்பாடு, சமநிலை, அமைவு , நிறச் சேர்க்கை போன்ற பல அம்சங்களை மரபு ரீதியான ஓவியர்கள் வரையறுத்த னர். வித்தியாசமான அபூர்வமான கலைத்தன்மை வாய்ந்தவர்களாக இருந்தனர்.

அரசர்களையும் இராணிகளையும் நிலச் சுவாந்தர்களையும் பண்ணையார்களையும் அவர்களின் பாரியார்களையும் நீண்ட நேரம் இருத்தி வைத்து படம் வரைந்து அதற்கான பண்டத்தைப் பெற்று வந்த மரபு வழி ஓவியர்களுக்கு நொடிப்பொழு-தில் விம்பத்தைப் பிரதிசெய்யும் ‘கமரா’ பெருஞ் சோதனையாயிற்று.

ஓவியம் பற்றிய முரணான கருத்தமைவு கள் தோன்றத்தொடங்கின. மரபு ஓவியத் திலிருந்து நவீன ஓவியம் ஆரம்பமாயிற்று. மனபதிவுவாதம் என்ற கொள்கை உரு வாயிற்று. நவீன ஓவியம் மரபு ஓவியத் திற்கு முன்னதாகவே மாந்திரீகம் போன்ற விடயங்களில் பயன்பாட்டில் இருந்தது. எனினும் நவீன ஓவியங்கள் என்பவை வி-வேகம் சார்ந்தவையாக அமைந்தமை எனவும் முன்பு இருந்தவை மாந்திரீகங்க ளுக்கு பயன்பட்டவை எனவும் கருதப்பட் டது.

### யாழ்ப்பாணமும் மேற்கு ஓவியமும்:

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் ஓவியத்திற்கு என்று ஒரு மரபு இருக்க வில்லை. மேற்கத்தைய பாணி ஓவியங் கள் பாடசாலைகள் மூலம் ஊட்டப்பட்டது. ஆங்கிலேயர் தமது விட்டோரிய தத்ருபப் பாணி ஓவியங்களை அறிமுகம் செய்த னர்.

யாழ் ஓவிய வரலாற்றில் எம்மாற் குறித்துச் சொல்லக் கூடிய ஒருவர் ஓவியப் பாடக் கல்வியதிகாரி எஸ் ஆர் கனகசபை அவர் கள். SRK அவர்கள் இரட்டுத்துணியில் “ஆயில் பெயிண்ட்” (எண்ணெய் வண்ண) ஓவியங்களை முதன்முதல் ஆரம்பித்த ஒருவர். இது மேற்கத்தையப் பணியாகும்.

மாற்கு மாஸ்டர், எஸ் ஆர் கனகசபை அவர்கள் தான் மேற்கத்தியப்பாணியை எம்மிடத்தில் அறிமுகம்செய்தவர் எனவும் அதனை அன்று பலர் பின்பற்றுவதாகவும் தனியே ஒரு ஓவிய “இன்ஸ்பெக்டராக” இருக்காமல் பல விடயங்களைத் தேடி அறிந்த ஒருவர் அவர் என்றும் SRK பற் றிச் சொல்வார். எஸ். ஆர். கனகசபையின் பணி இலங்கை ஓவிய வரலாற்றில் முக்கி யம்பெற்ற 43 குழுவினருடன் தொடர்பு டையது.



SRK ஆரம்பித்த வின்சர் ஓவியக் கழகத் தின் பணியும் எமது ஓவிய வரலாற்றில் முக்கியமானது.

1938 மார்ச்சில் கோப்பாயில் தொடக்கப் பட்ட வின்ஸர் ஆட் கிளப்பில், SRK.யின் வழிகாட்டலில் ஓவியப்பயிற்சிகளில் ஈடு பட்ட இராசையா, எம்.எஸ்.கந்தையா. கே.கனகசபாபதி, ஐ.நடராசா, க.இராசரத் தினம் என்போர் பின்னாளில் புகழ்பெற்ற ஓவியர்களாகப் பரிணமித்தனர். ஓவியரும் நாடகத் தயாரிப்பாளருமான சானாவும் வின்ஸர் ஆட்கிளப்புடன் தொடர்புடைய வராயிருந்தவராவார்.

நாம் இன்று காணும் நவாலியூர்ச் சோமசுந்த ரப் புலவரின் படம் அமரர் SRK யினால் வரையப்பட்ட படமாகும்.

### மாற்குவும் அவர் விழுதுகளும்:

SRK யின் மறைவின் பின்னர் ஓவியர் மாற்குவுடன் இணைந்து சிலரால் ஆரம் பிக்கப்பட்டது விடுமுறைக்கால ஓவியக் கழகமாகும். நியூசீலாந்தில் வதியும் ஓவியர் அற்புதசிங்கம் இங்கு ஒரு வர்த்தக ஓவி யராகவும் அரங்க அமைப்பு ஓவியராக வும் பணியாற்றுபவர்.

இந்த விடுமுறைக்கு கழகத்தில் பயின்ற இவருடன் ரமணி, செல்வநாதன், தங்கராஜா, புகழேந்தி, ஞானமலர், பேபி ஆகியோரும் வேறு சிலரும் பயின்றுள்ளனர். விசாகப் பெருமாள், சுவாம்பிள்ளை ஆகியோர் ஆசிரியர்களாக இங்கு பணிபுரிந்துள்ளார் கள்.

நவீன ஓவியத்தை எங்களுக்கு அறிமுகம் செய்ததில் மாற்கு மாஸ்டருக்கும் விடுமு றைக்கால ஓவியக் கழகத்திற்கும் பெரும் பங்கு உண்டு.

மாற்கு மாஸ்டர் ஹாட்லிக் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றிய காலத்தில் கரவெட்டி சயன்ஸ் சென்ரரிலும் ஓவிய வகுப்பினை நடாத்திவந்தார். நானும் அங்கு அவரது மாணவராகச் சேர்ந்து சுமார் ஒரு வருடத்துக்கும் மேலாக படிக்க முடிந்ததை இங்கு குறித்தல் பொருத்தமாகும்.

உயர்தரக்கல்வி, வேலைவாய்ப்புகள் என் பவற்றின் வாழ்வியல் சூழலின் வகிபா கங்களினால் இந்த வகுப்பும் முடிவுக்கு வந்தது. அவரது மாணவர்களின் ஓவியங் களை கண்காட்சிகளாக நடத்துவது அவ ரது ஊக்குவிப்பில் ஒன்று.

என்னைப் பொறுத்தவரையில் எனது தொலைக்காட்சி நெறியாள்கைக்கு அமைப் பிலிருந்து shots selection, காட்சித் தெரிவு, வண்ணச்சேர்க்கை என்பவற்றில் மாற்கு வின் பயிற்சி என் ஆளுமையில் பக்கத் துணையாக இருந்தது. ஓவியம் இங்கு காட்டும் வகிபாகத்தை நாம் உணரலாம்.

மாற்கு மாஸ்டரின் மாணவர்களில் குறிப் பிடத்தக்கவர்களாக அருந்ததி, வாசுகி, நிர்மலா, வைதேகி போன்றோர் தொடர்ந்தும் தமது ஆற்றலை வெளிப்படுத்தி நின்றவர் கள். பல்கலைக் கழகம் வரை அதனைத் தொடர்ந்தவர்களும் இவர்களில் அடங்கு வர்.

80களில் உச்சம் பெற்ற ஈழத்தமிழோவிய வரலாறு பின்னர் கோட்டு முறைச் சித்திர வகையில் இளையவர்களைக் கவர்ந்தது. 80களின் பின்னர் கைலாசநாதன், நிலாந் தன், சனாதனன் போன்றவர்கள் குறிக்கத் தகுந்தவர்களாகின்றனர். இவர்களது ஓவி யங்கள் மேற்குறித்த நவீன பாணிகளி னின்றும் வித்தியாசமானவையாகின.

### கணினியின் வருகை:

கணினியின் வருகை அதில் ஆர்வம்கொண்ட இளையவர்களின் ஓவிய ஆளுமை நவீன ஓவியத்தில் புதுமையையும் அறிவார்ந்த மட்டத்தையும் தோற்றுவித்தது. இணை யங்களின் வருகையினால் ஓவியங்கள் மீதான பார்வையாளர்களின் ரசனை மட் டத்தை மேவக்கூடிய வகையில் எம்மவர் கள் சிலர் இந்த ஓவிய முறையிலும் தங் கள் ஆற்றலை வெளிப்படுத்தினர்.

### ஊடகங்கள்:

நவீன ஓவியங்களை வெகுசன ஊடகங்கள் ஊக்குவிக்காமை எம்மத்தியில் அவை வீச்சான வளர்ச்சியை அடைய முடிய வில்லை. சில சஞ்சிகைகள் மட்டுமே முக் கியத்துவம் கொடுத்தன. யேசுராசாவின் அலை, உமா வரதராஜனின் வியூகம், மூன் றாவது கண் போன்றன குறிப்பிடத்தக்கவை. சரிநிகர், திசை ஆகிய பத்திரிகைகளைத் தவிர தேசிய வார இதழ்களில் தினக்குரல் 90களில் நவீன ஓவியங்களை உள்வாங் கியது. மக்களின் ரசனைக்கு முன்னர் ஊடகங்களின் பொறுப்பாளர்களுக்கும் ஆசிரிய பீடத்திலுள்ளவர்களின் நவீன ஓவியம் தொடர்பான ரசனையும் புரிதலும் ஈழத்து தமிழோவிய வளர்ச்சியில் முக்கிய மானதொன்றாயிற்று.

மேற்கின் பாணி இந்தியாவிலும் மட்டுமல்ல சீனாவிலும் ஓவியர்களிடத்தில் கலந்து கொண்டது. அதுபோலவே நவீன ஓவியங் களும் தென் இந்திய சஞ்சிகைகளில் பிர வேசிக்க எமது வாசகர்களின் புரிதலுடன் எங்களது வார இதழ்களிலும் அது படிப் படியாக அரங்கேறியது.

### வர்த்தக ஓவியம்:

இதே வேளை வர்த்தக ஓவியங்கள் என்று ஒரு புதிய கலைவடிவத்தின் தோற்றம் ஓவியத்தின் அடுத்த பரிமாணமாகியது.

சிங்கள ஓவியர்கள் பற்றியவிவரணமான ‘டெலிதுட’ (டெலி - தூரிகை) என்ற தொடர் தொலைக்காட்சி விவரண நிகழ்ச்சிக்கு நான் தயாரிப்பு உதவியாளனாக (ஓவி யத்தில் ஆர்வமுள்ளவனாக இருந்தமை யால் அதன் நெறியாளர் காமினி அபேய் கோன் (இவரும் இலங்கையின் சிறந்த ஓவியர்களில் ஒருவர்) எனது விருப்பத்தின் பேரில் என்னையும் தமது தயாரிப்புப் பணியில் இணைத்துக்கொண்டார். அதன் போது பல ஓவியர்களுடன் பழகும் வாய்ப் புக் கிடைத்தது.

சிலர் தாம் ரமணி மாஸ்டருடன் கற்றதாக வும் ரமணி ஒரு சிறந்த ஓவியர். ஆனால் அவர் வர்த்தக ஓவியத்துக்குள் தம்மை இணைத்துக்கொண்டுவிட்டார் என்று சொல் வார்கள். சிங்களத்தில் உள்ள சிலரின் பெயர்களை சொல்லி அவர்களை போல என்பார்கள்.

தொடர்தல் 29ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புள்ள கருணா!



எத்தனையோ மின்கடிதப் போக்குவரத்துக்கள் எங்களுக்குள் இருந்திருக்கும். இப்படி ஒரு கடிதத்தை உனக்கு எழுதுவேன் என நான் எப்பொழுதும் எண்ணிப் பார்த்ததில்லை. நீ இங்கு இல்லை என்ற செய்தியால் இதயம் இருண்டுபோய்க் கிடக்கிறது. வர்த்தக வாழ்க்கையில் நான் வழமைக்குத் திரும்பிவிட்டாலும் இனி நீ வரமாட்டாய் என நினைக்கும் போது நிஜம் வலியாய் நினைவுக்குள் வந்து இறங்குகிறது நண்பனே.

**என் வீட்டின் இன்னொரு சகோதரன்:**

1997ம் ஆண்டு பொன்னையா விவேகாநந்தன் உடன் டொன்மில்ஸில் உள்ள உன் வரைகலை அலுவலகத்துக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் 'கலையரசி' விழாவிற்கான வடிவமைப்பு வேலைகளுக்காக வந்தபோது நாங்கள் முதன் முதலில் சந்தித்துக்கொண்டோம். அன்று தொடங்கி 22 ஆண்டுகள் வளர்ந்த நட்பு மாசி 22 உடன் முடிந்து விடும் என்பதை நினைத்துக் கூடப்பார்த்ததில்லை. 'கருணா மாமா' என என் பிள்ளைகள் உரிமை கொண்டாடும் ஓர் உறவாக எங்களோடு உறவாடிய நீ நிரந்தரமாய் உறங்கிவிடுவாய் என என் உள்ளுணர்வுகள் எள் அளவும் சந்தேகித்ததில்லை.

**வரைகலைகளில் ரவிவர்மா:**

வரைதல் என்னும் வரத்துடன் நம்மிடையே வாழ்ந்த நல்ல நண்பனே! உன்னோடு பழகிய பின்புதான் ஓவியம் என்பதும் மனித கலாச்சாரத்தின் ஓர் அங்கம் என்பதையும் புரிந்து கொண்டேன். நினைப்பதை ஓவியமாக்கி அதற்கு உயிரூட்டும் பிரம்மாவே, உன் உயிர் நீக்கி உன்னை ஓவியமாக்கிய அந்த ஓரவஞ்சகனை எங்கு போய்த் தேடுவேன்?

கருணா என்னும் வரைகவியோடு கைகோர்க்காத அச்சகப் பதிப்புகள் இருக்க முடியாது, விளம்பரங்கள், புத்தக அட்டைகள், பெருந்திரை விளம்பரங்கள் என ஏராளம். 'ஸ்ரார் 67' என்னும் திரைப்படத்தின் உன் பெருந்திரை விளம்பரம் ஸ்காபரோ 'சினிப்பிளெக்ஸ்' திரையரங்கில் அத்திரை அரங்கின் சுவர் உயரத்துக்கு எழுந்து நின்றபோது பல்லினத்தவர்களும் அண்ணாந்து பார்த்துச் சென்ற பரபரப்பை எப்படி மறக்க முடியும் நண்பனே!

ஒளியைத் தூரிகையாக்கி நிறங்களை ஜாலங்களாக்கி நீ சுட்டுத் தள்ளிய நிழற் படங்கள் எத்தனை எத்தனை. பாடாவதி படப்பிடிப்புப் பெட்டியிலும் பரவசமூட்டும் புகைப்படங்களை கொடுக்கும் ஆளுமையின் சொந்தக்காரனே உன்னுடைய கண்ணிமைக்கும் நேரத்தில் காலன் உன்னைக் கவர்ந்துசென்றான்? அங்கேதும் விஷேடமோ? ஞாபகம் வருகிறது...கமெராவின் சொற்கேட்டுப் படம் போடும் தமிழர் காலத்தில் மெழுகுவர்த்தி ஒளி உபயோகித்து செல்பேசியால் கூட சிறப்பான படங்களை செதுக்க முடியும் எனச் செய்து காட்டிய செயல் வீரனே செத்து மடிந்ததன் செய்தி தான் என்ன?

**அரங்க ஒலி, ஒளியின் பிரமாண்டம்:**

மேலைத்தேயத்தவர்களாலும் பாரியகுழு முயற்சினாலும் மட்டுமே ஓர் அரங்க ஒலி, ஒளி அமைப்புச் சாத்தியம் என்ற நம்பிக்கையைத் தகர்த்து ஓர் அங்க நாயகனாக பல அரங்கங்களை அலங்கரித்தவன் நீ. தனி ஒருவன் திறமையினாலும் சாதிக்க முடியும் என நடத்திக் காட்டியவன் நீ. அரங்காடலும் அரங்கியல் விழாவும் அதற்குச் சாட்சியல்லவா. எத்தனையோ அரங்குகள் பார்க்க வேண்டிய நீ இவ்வாறு அமைதியுற்றது ஏன்?

**நீ, நான், தேசியம்:**

2004ம் ஆண்டு காலப்பகுதி அது. தமிழீழ விடுதலைப் புலிகளின் அச்சக வெளியீடுகள், அவர்களின் இலச்சினைகளை இலத்திரனியல் படுத்துதல், புதியன உருவாக்குவது என புலிகளது கர்மேசியல் (Commercial) வளர்ச்சியில் பாரிய இயக்கமாக இருந்தவன் நீ என்பது பலருக்கு தெரிந்திருக்க வாய்ப்பில்லை. அவர்களின் வேலைகள் செய்து கொண்டிருக்கும் நேரங்களில் எவரின் வருகையையும் தவிர்த்து விடுவாய். அதில் நானும் அடக்கம். அவர்களின் போராளி போல் இரகசியம் காத்த இலட்சியவாதி நீ.

என் நண்பர்கள் ஆரம்பித்த 'தேசியம்' பத்திரிகைக்கான ஆரம்ப வேலைகளைச் செய்து கொடுத்த நாட்களில் பத்திரிகைக்கான ஒழுங்கமைப்பு, வடிவமைப்பில் கையாளப்பட வேண்டிய நேர்த்தி என்பவற்றை சொல்லிக் கொடுத்து அப்பத்திரிகையின் தரத்தை பலரிடம் சிலாகித்தவன் நீ. உன் பேரிழப்பை என்னால் ஏற்க முடியுதில்லை.

**தமிழில் உயிரானவன்:**

தமிழர்களுக்குத் தமிழ் என்பது உயிர். புலம்பெயர் தேசத்தில் இந்த உயிர் மொழியை உயிர்ப்போடு பல உயரங்களுக்கு எடுத்துச் சென்ற மூத்த தளபதி அல்லவா நீ. இலக்கியம், சினிமா, கவிதை, உரையாடல்கள், பேச்சுகள் எனத் தமிழின் எல்லாத் திசைகளையும் தெரிந்து வைத்திருந்தவன் நீ. பண்டைத் தமிழைப் பல தடவைகள் மின்னியல் படுத்தியவன் நீ. 'கருணை கூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டே' என்னும் கந்த புராணம் போல் தமிழுக்காய்ப் பல்கிப் பெருகியவனே! மொழியிழந்த புலம்பெயர் வாளர்கள் போல் தமிழும் தவிக்கிறதே நண்பா?

பல மனித உரிமை மீறல்களைப் பார்த்த சமூகத்தைச்சாந்தவர்கள் நாங்கள். ஆனால் மரணம் கூட மரணஉரிமை மீறல் செய்யும் என என் மனதில் ஒருபோதும் எண்ணியதில்லை. உன்னைக் காவுகொண்ட பின் மரணம் கூட ஒரு கணம் வெட்கித் தலை குனிந்திருக்கும்.

**திருக்கயிலாயம்:**

*வானத்தார் போற்றும் மருந்தே போற்றி*
*வந்தென்றன் சிந்தை புகுந்தாய் போற்றி*
*ஊனத்தை நீக்கும் உடலே போற்றி*
*ஓங்கி அழலாய் நிமிர்ந்தாய் போற்றி*
*தேனத்தை வார்த்த தெளிவே போற்றி*
*தேவர்க்குந் தேவனாய் நின்றாய் போற்றி*
*கானத்தீ யாட லுகந்தாய் போற்றி*
*கயிலை மலையானே போற்றி போற்றி.*

**பொழிப்புரை:**

தேவர் போற்றும் அமுதமாய் வந்து என் உள்ளம் புகுந்தவனாய், உயிர்களின் குறையைப் போக்கும் அருள் உருவம் உடையவனாய், ஓங்கித் தீப்பிழம்பாய் உயர்ந்தவனாய், தேனை வடித்த தெளிவு போல் பவனாய், தேவர்களுக்கும் தேவனாய், சுடுகாட்டுத் தீயில் கூத்தாடுதலை விரும்பியவனாய் உள்ள கயிலை மலையானே! உனக்கு வணக்கங்கள் பல .

சிவனைப் போற்றும் திருநாவுக்கரசர் போல் இனி உன்னைப் போற்றுவதைத் தவிர என்னிடம் வேறு வழி உண்டா சொல்? எங்கு இருந்தாலும் இளமை மாறாத உன் சிரிப்போடு உன்னதமான இடத்தில் நீ இருக்க இறைவனைப் பிரார்த்திக்கிறேன். மரணமே மறுபிறவியிலும் அவனைக் கருணாவாகப் பிரசவித்துவிடு கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிக்கு,
நட்புடன்
க. சிவமணி



**- க. சிவமணி -**

# நான் கண்ட கருணா...

28ம் பக்கத் தொடர்ச்சி...

மரபு, நவீன ஓவியங்களின் அப்பால் - வர்த்தக ஓவியம் என்று ஒன்று இவற்றுக்குச் சமாந்தரமாக கோடு போடத்தொடங்கியது.

**கருணாவும் கரவெட்டியும்:**

மனித வரலாற்றுடன் இணைந்த ஓவியமும் சிற்பமும் மதங்களுடன் இணைந்தவை. சித்தன்னவாசல் குகை ஓவியங்களும் ஆசீவக இந்தியாவின் துறவிகளுடையது என்றும் சைன சமயத்தினருடையது என்றும் இருவேறுபட்ட கருத்துகள் கொண்டவை. அஜந்தா ஓவியங்களைப் போன்று தனிச் சிறப்பு மிக்க இந்த ஓவியங்கள் சுமார் 1000 - 1200 ஆண்டு பழமையானவை.

கத்தோலிக்க மதத்திலும் ஓவியங்களும் சிற்பங்களும் நன்கு பிணைந்தவை. விபரங்கள் இங்கு அவசியமில்லை. இங்கு ஆலயச் சுருபங்களும் ஆலயத்திலுள்ள படங்களும் கிறிஸ்துவின் திருப்பாட்டினைக் காட்டும் 14 தலங்களும் ஆலயப் பத்திருப்புகளும் சாளரக்கண்ணாடிகளின் வண்ணங்களும் ஓவியமாய் அவை சொல்லும் தகவலும் கத்தோலிக்க ஆலயங்களில் முக்கியமானவை.

என் அன்புக்குரிய கருணா எனது நெருங்கிய உறவினர். அயலவர். அதனால் (தான்) எனது ஊரவர். அவர் எமது தேவாலய விழாக்களில் அவற்றின் நிகழ்ச்சிகளான நாடகங்கள், வில்லுப்பாட்டுகள், இசை நிகழ்ச்சிகள் போன்றவற்றின் ஒத்திகைகள் நடைபெறும்போது சின்னஞ் சிறு பையனாக வந்திருந்து பார்ப்பார்.

இவரது தந்தையார் வின்சென்ற் மாஸ்டர் தான் பிரதானமான நாடகங்கள், வில்லுப்பாட்டு, உரையரங்கம் போன்றவற்றைப் பழக்குபவராவார். தந்தை பழக்கும்போது இவர் வந்திருந்து பார்ப்பார். சிலவற்றில் சிறு பாத்திரங்களில் நடித்துமுள்ளார்.

எனது தாயார் இசை நிகழ்ச்சிகளைப் பழக்குவார். ஆனால் கருணாவுக்கு இசை ஒத்துவராது என என் தாயார் அவரது தாயாருக்கு சொல்வது பற்றி கருணா எனக்குச் சொல்லிச் சிரித்துள்ளார். அதேவேளை அவருக்கு ஓவியத்தைப் பயிற்றுவிக்குமாறு அவர் ஊக்கப்படுத்தியதாகவும் சொன்னார். எனது தாயார் ஓவியங்களின் இரசிகை ஆவார்.

எமது கரவெட்டி அந்தோனியார் ஆலயத்தில் நடைபெற்ற திருப்பலிகளில் திருப்பலிப் பீட உதவிப்பையனாகவும் (Alter Boy)

திருச்சிலுவைப் பாதை என்ற நிகழ்வு கிறிஸ்துவின் திருப்பாட்டு நாட்களில் ஆலயத்தில் நடைபெறும்போது 14 தலங்களிலும் ஒவ்வொரு தலத்தை நோக்கி அசைகையில் சிலுவையை ஏந்திச் செல்லும் பையன்களில் ஒருவராகவும் இருந்த நாட்கள் நான் அவரை நினைக்கும்போது வண்ண அலைகளாய் வருவதுண்டு. ஒழுங்காக ஆலயப்பணிகளில் சிறுவயதில் ஈடுபடுவதில் ஆர்வம் மிக்க அவர் மிகவும் பக்தியான கத்தோலிக்கக் குடும்பத்தில் பிறந்தவர்.

அவருடைய தந்தையார் திரு வின்சென்ற், பருத்தித்துறை கலட்டி ரோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தின் அதிபராக பணியாற்றியவர். கத்தோலிக்க ஆசிரியர் சங்கத்தின் செயலாளராக (வாக்காளர்களின் அமோக ஆதரவுடன்) நீண்டகாலம் பணியாற்றியவர். கரவெட்டியில் பல கத்தோலிக்க நாடகங்களை மேடையேற்றியவர். கடந்த சில மாதங்களுக்கு முன், பருத்தித்துறையில் வட்டாரக் கல்வியாதிகாரியாகப் பணியாற்றிய திரு துரைசாமி அவர்களைச் சந்தித்தேன். அவுஸ்திரேலியாவிலிருந்து தமது சகோதரியின் மரணச்சடங்கில் கலந்துகொள்ள அவர் நியூசிலாந்து வந்திருந்தார். எனது தந்தையரின் நண்பர் அவர் என்ற வகையில் அவரிடம் என்னை அறிமுகம் செய்தபொழுது "அப்பா போய் விட்டாரா என்ற கேள்விக்கு அடுத்த கேள்வியாக "வின்சென்ற் மாஸ்டர் போய்விட்டாரா?" என்று கேட்டார். கல்விப்பணியிலும் கலைத்துறையிலும் நிருவாகத் திறமையிலும் முதன்மை பெற்ற ஒருவர் அமரர் வின்சென்ற்.

கருணாவின் ஓவியங்களின் நிருமாணங்களிலும் அப்பாத்திரங்களின் நெறிப்படுத்தலிலும் வின்சென்ற் மாஸ்டரின் நாடக இயக்குகையைக் காண்கிறேன். தாய் ரெஜினா ரீச்சர் பாடசாலையில் கதை சொல்வதற்கு மட்டுமன்றி எதனை விளக்குதற்கும் கரும்பலகையில் படபடவெனப் படம் வரைந்து விளக்கும் ஆளுமை மிக்கவர்.

கருணா எனது தங்கையுடன் படித்தவர். மிகவும் அமைதியானவர். சிறு வயதில் பாடசாலையில் அந்த நாட்களிலேயே ஓவியவேளைகளில் மட்டுமல்ல 'கைப்பணி' எனப்படும் hand work இலும் தாமாகவே புதுமையாகச் செய்து வருவார் என நாம் அறிந்துள்ளோம். அக்காலத்தில் வகுப்பு 1 இலிருந்து 5 வரை கைவேலை, ஓவியம், சங்கீதம் என்பன முக்கிய பாடங்கள். எனது சகோதரி என்னை உதவியாகக் கொண்டு கைவேலைப் பொருட்கள் செய்து கொண்டுபோவாள். "கருணா என்ன கொண்டு வருமோ தெரியாது" என்ற எதிர்பார்ப்பு அவளிடம் இருக்கும்.

எனது தாயார் கருணாவின் சங்கீத ஆசிரியர். கருணாவுக்கு சங்கீதத்திற்கு 10 (நூறுக்கு) புள்ளிகள் இட்டுவிட்டு வந்து "ரெஜினா (கருணாவின் அம்மா) என்ன நினைக்குமோ தெரியாது என்று கவலைப் படுவதை நான் கண்டுள்ளேன். ஆனால் எங்களது குடும்ப உறவில் என் தாயாரின் சிறந்த ஆலோசனைக்குரிய நண்பியாக கருணாவின் தாயார் இருந்துள்ளார்.

கருணாவின் தாய்மாமன் மரியநாயகம் ஈழத்தின் புகழ்மிக்க ஓவியர்களில் ஒருவர். நீர் வண்ணங்களில் அவர் வரைந்த "காகமும் வடையும்", நரியும் திராட்சைப் பழமும்", சிங்கமும் முயலும்" எனது வீட்டில் இருந்த ஓவியங்கள்.

கேட்ட தாலாட்டு இசைக்குப்பிறகு நான் பார்த்த ஓவியங்கள் அவை என்பேன். இன்றைக்கும் அவை என் மனதில் நினைவில் உள.



**- எஸ்.எம். வரதராஜன் -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருணா: அந்தந்தக் கணங்களில் வாழ்ந்த கலைஞன்



வழக்கமாக, தாய்வீட்டுக்காக கருணா என்னிடம் ஆக்கங்கள் கேட்பார், இன்று, முரண்துயராக கருணாவுக்காக டிலிப்குமார் என்னிடம் கட்டுரை கேட்டிருக்கிறார். நெருங்கிய நண்பர் ஒருவரைப் பற்றிய ஞாபகங்களை முழுவதுமாக எழுதி முடித்து விட முடியுமெனத் தோன்றவில்லை. எவ்வளவு நடந்தும் கடக்கமுடியாத இறந்த காலத்தின் சாலை அது. மேலும், ஒருவருடைய சடுதியான இழப்பினால் ஏற்படும் திகைப்பானது, அவரைக் குறித்த ஞாபகங்களின் ஒழுங்குவரிசையைக் குழப்பி விடுகிறது. செய்தியைக் கேள்விப்பட்ட அன்றிரவின் உறக்கம்போல, கருணாவைப் பற்றிய நினைவுகளும் என்னுள் துண்டு பட்டுக் கிடக்கின்றன.

விரும்பித் தேர்ந்த எனது நாடோடி வாழ்வில் ஏதோவோரிடத்தில் கால்கள் தரித்திருக்கும்வேளை, றொறன்ரோ நேரம் இரவு பன்னிரண்டுக்குப் பிறகு மெசஞ்சர் வழி கருணாவிடமிருந்து அழைப்பு வருகிறதெனில், அவர் நண்பர்களுடன் இருக்கிறாரென்று பொருள்.

“இஞ்சை ஒருத்தர் உங்களோடை கதைக்கோணுமாம்” நள்ளிரவின் களைப்பு துளியும் படியாத, உற்சாகம் பீறிடும் குரலில் சொல்வார். அலைபேசி கைமாறி மாறிப் போய்க்கொண்டிருக்கும். அன்று நண்பர்களுள் யாரோ ஒருவருடைய பிறந்தநாளாக இருக்கும். அல்லது ‘தாய்வீடு’ பத்திரிகையின் அரங்கியல் விழா போன்ற ஏதோவோர் நிகழ்ச்சி அன்று மாலை நடந்து முடிந்திருக்கும். நான் நீங்கிவந்த நிலத்திற்கும் எனக்குமிடையிலான இணைப்புக் கண்ணியாக இருந்தவர் அவர்தான். அறிமுகமான காலத்திலிருந்து இன்றுவரை ‘நீ எங்களில் ஒருத்தி’ என்ற, உரிமை கலந்த ஒட்டுதல் அவரிடம் குறைந்ததேயில்லை. கனடாவில் நான் இருந்தாலும் இல்லாமற்போனாலும் அந்த நட்புக்குடும்பத்தின் ஓரங்கமாக நானிருப்பதற்குக் காரணமானவர் கருணாவே.

எப்போதுமே நல்ல செய்திகளுடன் கருணா இணைப்பில் வருவதில்லை. கவிஞர் செழியன் மரணப்படுக்கையில் இருந்தபோதும், அவர் மறைந்தபோதும் அதை எனக்குத் தெரியப்படுத்தியவர் கருணாவே. பாபுவின் மரணச்செய்தியையும் அவரே என்னிடத்தில் கொணர்ந்து சேர்த்தார்.

எனது ஞாபகசக்தி சரியாக இருக்குமெனில், கருணாவும் நானும் முதன்முதலில் சந்தித்தது 1994ல் என்றெண்ணுகிறேன். அப்போது, அவருடைய அலுவலகம் டொன்மில்ஸில் இருந்தது. அப்போதுதான் எனக்குத் திருமணமாகியிருந்தது. பொறுப்புகள் எங்களை கழுத்தை நெருக்கிப் பிடித்திருக்கவில்லை. நானும் இராஜகுமாரனும் ரிம் ஹோட்டன்ஸ் கோப்பியும் கையுமாக கருணாவின் அலுவலகத்திற்குப் போவோம். மணிக்கணக்கில் உரையாடிக்கொண்டிருப்போம். அத்தனை சிறிய வயதில் தனக்கென தனியான ஓர் அலுவலகம், மனதுக்குப் பிடித்த வேலை என்றிருந்த அவர், என்னை ஆச்சரியப்படுத்தினார். புதிய நிலத்தில், இலக்கியமும் ஓவியமும் கணினி வரைகலையும் அறிந்த கருணாவைப் போன்ற ஒருவர் அந்நாட்களில் எனக்கு நண்பராக வாய்த்தது, பிறகான எனது எழுத்துப் பயணத்திற்குத் தூண்டுதலாக அமைந்திருக்கவேண்டும் என இப்போது உணர்கிறேன்.

அப்போது, கலை இந்த உலகத்தைப் புரட்டிப்போடும் என்று நாங்கள் சர்வநிச்சயமாக நம்பினோம். அதனோடு பின்னிணைப்பாக வரக்கூடிய இருண்ட பக்கங்களை அறியாதிருந்தோம். அதன் விளைவாக ‘ரோஜா’ என்ற சஞ்சிகைக்கு பங்களிப்பவர்களாக நாங்கள் மாறினோம். ஆனந்த் அதன் ஆசிரியராகப் பணியாற்றினார். கருணா படைப்புகளுக்கான ஓவியங்களை வரைந்தார். புகைப்படங்களை வழங்கினார். நானும் ராஜ்மோகனும் அதில் எழுதினோம். ஆக்கங்களைக்கேட்டு ஆட்களின் பின் அலைந்தோம். தனது இனிமையான குரல் மூலம் றொறன்ரோவில் பிரபலமாகத் தொடங்கியிருந்த அருட்செல்வியின் நேர்காணல் ‘ரோஜா’வில் வெளியானது. ஐரோப்பாவிலிருந்து றொறன்ரோவுக்கு வந்திருந்த ஓவியர் அருந்ததியை நேர்காணல் செய்து பிரசுரித்தோம். சரளமாகத் தமிழ் கதைத்த சீனப் பெண்மணியொருவரைச்சந்தித்து அதைப்பற்றி எழுதினோம். நாங்கள் உன்னதமானதொரு விடயத்தில் ஈடுபட்டிருப்பதாக மனப்பூர்வமாக நம்பினோம். கலை எங்களை இணைத்தது. அந்நாட்களில் செல்லிடப்பேசி பாவனையில் இல்லை. அல்லது, அது எங்களது கைகளுக்குக் கிட்டியிருக்கவில்லை. பெல் கனடாவின் ‘லான்ட் லைன்’ வழி மணிக்கணக்கில் உரையாடினோம்.

கனடியத் தமிழர்களிடையே இன்று பல கணினி விற்பன்னர்கள் இருக்கிறார்கள். தமிழ் எழுத்துரு, கணினி வரைகலை ஆகியன குறித்த பரீட்சார்த்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. சாதனைகளும் அடையப்பெறுகின்றன. அவற்றுக்கெல்லாம் கால்கோள் இட்ட முன்னோடிகளுள் க.ஞானபண்டிதன், சசி இவர்களைப்போல கருணாவுக்கும் மிகப்பெரிய இடமுண்டு. கருணா தொழிநுட்பரீதியான பல விடயங்களை புலம்பெயர் தமிழ்ச்சமூகத்திற்கு அறிமுகப்படுத்தினார். ஆனாலும், அவர் எங்குமே தன்னை முன்னிறுத்தியதில்லை. ஓவியர் மாற்குவின் மாணவர்களில் ஒருவர் எனத் தன்னைச் சொல்லிக்கொள்வதில் மட்டுமே அவர் பெருமைகொண்டிருந்தார்.



- தமிழ்நதி -

கருணா, ஓவியராக மட்டும் இருக்கவில்லை, அத்துறைசார் அறிவை தேடித் தேடி வளர்த்துக்கொண்டிருந்தார். அந்தத் தேடலானது பொருளாதார நோக்கத்தை இலக்காகக் கொள்ளாது, கலைமீது அவருக்கு இருந்த காதலை அடிப்படையாகக்கொண்டது. அவரது ஓவியங்களை வைத்து 2017 மே மாதம் நடத்தப்பட்ட கண்காட்சி பரந்தளவிலான கலாபிமானிகளைச் சென்றடைந்தபோது, அவர் பெருமகிழ்ச்சியடைந்தார்.

எப்போதும் நண்பர்களால் சூழப்பட்டிருப்பதை கருணா மிக விரும்பினார். கங்காதரன், ‘காலம்’ செல்வம், டிலிப்குமார், விவேகானந்தன் இவர்களில் ஒருவருடனோ அன்றேல் எல்லோருடனோதான் அவரைக் காணமுடியும். அவரிடம் நான் கண்டு வியந்த குணங்களுள் முக்கியமானதொன்று, அவர் அவ்வக்கணங்களில் வாழ்பவராக இருந்ததாகும். இறந்தகாலத்தின் விசனத்தையோ எதிர்காலத்தின் எதிர்பார்ப்புகளையோ அவரிடம் கண்டதில்லை.

கவிதைகள் மூலம் மட்டுமே நான் அறிந்திருந்த கவிஞர் சேரனை எனக்கு அறிமுகப்படுத்தியவரும் கருணாவே. சேரனிடம் கருணா மரியாதை கலந்த அன்பு வைத்திருந்தார். சேரன், இராஜகுமாரன், கருணா, நான் ஆகிய நால்வரும் அவ்வப்போது சந்தித்து உரையாடியிருக்கிறோம். எங்களது உரையாடல் விடிய விடிய நீண்டிருக்கிறது. கருணா நல்லதொரு உரையாடற்கலைஞனுங்கூட. உரையாடலின்போது தன் வார்த்தைகளைத் தானே மீறிச்செல்லும் வேகம் அவரிடம் மிகுந்திருக்கும். சிலசமயம், மற்றவர்கள் கதைத்து முடிப்பதற்கிடையில் அந்த வேகம் குறுக்கிட்டு விடுவதுமுண்டு. எந்தவொரு சந்திப்பிலும் நேரம் ஆக ஆக கதையாடலில் தொய்வு ஏற்படுவது வழக்கம். கருணா இருக்கும் போது அது நடக்காது. அவர் எடுத்துக் கொடுப்பின் இழைகளால் உரையாடலைத் தொடுத்துச் செல்லும் திறன்வாய்ந்தவர். இடையிடையே குட்டிக்கதைகளும் சொல்வார். அவர் தனக்கேயுரிய சிரிப்போடு “இப்பிடித்தானே…” என்று தொடங்கும் போதே நாங்கள் உசாராகிவிடவேண்டும். “நீங்கள் ஏன் இன்னும் கார் ஓடக் கற்றுக்கொள்ளவில்லை?” என்றால், “நான் ஒரு கார் வைத்திருந்தேன். அது எனது மாமி எனது ஏழாவது பிறந்தநாளுக்கு வாங்கித் தந்தது” என்று ‘கதை’ விடத் தொடங்கிவிடுவார். கடந்த சில ஆண்டுகளாக, கவிஞர் சேரனும் நானும் கருணாவும் சந்திக்க எடுத்த முயற்சிகள் கைகூடாமலே போயின. ஈற்றில் மரணம் எங்களது சந்திப்பில் தடாலடியாகக் குறுக்கிட்டு விட்டது.

மற்றவர்களுக்காக நேரத்தைச் செலவிடுவதற்குப் பலரும் தயங்கும் இந்தக் காலத்தில், தமிழகத்திலிருந்தோ ஈழத்திலிருந்தோ றொறன்ரோவுக்கு எவரேனும் வருகிறார்களென்றால் கருணாவை உற்சாகம் தொற்றிக்கொண்டுவிடும். தான் வாழும் நகரத்தின் ஆன்மாவை, வருகிறவர் இனங்காணாமற் போய்விடக்கூடாதென்பதற்காக அரும்பாடுபடுவார். எங்கெங்கு சுவையான உணவு கிடைக்கும், வந்திருக்கிறவரை எந்தெந்த இடங்களுக்கு அழைத்துச்செல்ல வேண்டும், எவரையெல்லாம் சந்திக்கவைக்கலாம் என தனது நண்பர்களோடு இணைந்து திட்டமிடுவார். நயாகரா நீர்வீழ்ச்சி கருணாவை எத்தனை முகங்களோடு கண்டிருக்கும்! நானறிந்த கருணா மனிதர்களின் அருகாமையை மிக விரும்பினார். அவர்களோடு நேசங் கொண்டாடினார். தனிப்பட்ட வாழ்வின் தனிமை அவருள் நொதித்துக் கொண்டிருந்திருக்கலாம். ஆனால், அதன் ஒரு துளியைத்தானும் அவர் வெளிப்படுத்தி நான் கண்டதில்லை. இறுதி நாட்களில், கருணா தன்னைத் தான் தனிமைப்படுத்திக்கொண்டதாக நண்பர்கள் சொல்லக் கேட்டபோது வேதனையாக இருந்தது.

இறுதியாக, (இப்படி எழுதவேண்டி ஏற்பட்டுவிட்டதே] கருணா என்னோடு கதைத்தது ஜனவரி (இவ்வாண்டு) 8ம் திகதியன்று. “ஏன் இப்பிடிச் செய்தனீங்கள்?” என வருத்தந் தொனிக்கும் குரலில் வினவினார். மனதறிய நான் ஒரு தவறும் செய்திருக்கவில்லை. “அப்பாவின்ரை விசயத்தைப் பற்றி நீங்கள் என்னட்டைச் சொல்லேல்லை”. எனக்குப் புரிந்தது. டிசம்பர் 19ம் திகதியன்று அப்பா காலமானார். அப்பாவின் மறைவை முகநூல் மூலம் அறிவித்ததல்லாமல் தனித்தனியாக ஒவ்வொருவருக்கும் சொல்லியிருக்கவில்லை. கருணா, தனக்கும் அப்பாவுக்கும் இடையில் நடந்த ஓவியம் குறித்த உரையாடலை நினைவுகூர்ந்தார். தான் அவரை மீண்டும் ஒருதடவை சந்தித்து நேர்காணலொன்றைச் செய்ய எண்ணியிருந்ததாக வருத்தந்தோய்ந்த குரலில் கூறினார்.

2013ம் ஆண்டு டிசம்பர் மாதம் றொறன்ரோ மாநகரம் கடும்பனிப்பொழிவை எதிர்கொண்டது. வீதிகள் உறைமழையால் இறுகிப் போயிருந்தன. கால்வைத்த மறுகணம் கரணம் என்ற நிலை. மரங்கள் பனிப்பாரம் தாங்காமல் முறிந்துவிழுந்தன. மின்சாரம் இல்லை. ‘லான்ட் லைன்’ தொலைபேசிகள் இயங்கவில்லை. பேரங்காடிகளும் திறக்கப்படவில்லை. றொறன்ரோவில் அப்பாவும் அம்மாவும் தனித்திருந்தார்

தொடர்தல் 31ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கருணா: படைப்புக்களில் உயிர்த்துக் கிடப்பான்

மனித வாழ்க்கை எங்காவது ஒரு புள்ளியில் நின்றுவிடுகிறது. சடுதியாய்ச் சற்றும் எதிர்பாராமல் அந்தத் துயர் நிகழ்கிற போது, கூட இருந்தவர்களுக்கு அந்த புள்ளியைக் கடப்பது பெரும் சிரமமாகிறது. கூடியிருந்த நினைவுகள் நின்று கொல்லும். சிலரது மரணம் மட்டும் அவர்கள் சஞ்சரித்த எல்லாத் தளங்களிலும், சந்தித்த எல்லா மனிதர்களிலும் அதிர்வை ஏற்படுத்தி போகும். ஓவியர் கருணாவின் இழப்பில் அந்த அதிர்வைப் பரவலாக உணர முடித்த எனக்கு கருணாவை எண்பதுகளின் ஆரம்பத்தில் ஹாட்லியில் பக்கத்து வகுப்பில் படித்த சகமாணவனாக தெரியும். அப்போதெல்லாம். கட்டைக் காற்சட்டையோடும் வியர்வை தெரிகிற வெள்ளைச் சேட்டோடும் கூடி விளையாடி இடைவேளைகளைக் கழித்திருப்போம்.

எந்தச் சண்டை சச்சரவுகளிலும் முகம் காட்டியவர்களுள் அவனிருந்ததாக ஞாபகமில்லை. எங்கள் காலத்தில் திரு சாமுவேல் அதிபராக இருந்தார். சித்திரம் ஒரு பாடமாக இருந்தது. கருணாவுக்கு ஓவியம் வரைவது இயல்பாகவே கைவந்தது. சின்னவயதிலேயே அவன் வரைந்த சித்திரங்கள் சுற்றியிருந்த எல்லா வகுப்புகளையும் திரும்பிப் பார்க்க வைத்தது.

வர்ணம் கலக்காத வெறும் கோடுகளில் ஆயிரம் கதைகள் பேசுகிற மந்திரக்காரன் போலவே என்னுள் அவன் பதித்திருந்தான். படிப்புக்கும் விளையாட்டுக்கும் பழக்க வழக்கங்களுக்கும் இருந்த முக்கியத்துவம் காலையில் அந்த காலத்தில் கலை இலக்கியத்துக்கு இருக்கவில்லை ஆயினும் படிப்புக்கு வெளியே அரசியல், கலை, இலக்கியம் குறித்த தேடலோடு நிறையப்பேர் எங்களில் இருந்தார்கள்.

கருணாவின் ஓவியம் சுமந்த கையெழுத்துச் சித்திரக்கதைப் புத்தகம் எல்லா வகுப்புகளிலும் வலம் வந்தது. பாட இடைவெளியில் வண்ணத்துப் பூச்சிகள் என்ற கதம்ப நிகழ்ச்சி வகுப்புக்குள்ளேயே




நடந்தேறும். 'மரணத்துள் வாழ்வோம்' கவிதைத் தொகுப்பு எங்கள் வகுப்புக்குள் உலவியது பற்றிய ஞாபகம் இப்போதும் இருக்கிறது.

சேரனும் செழியனதும் ஜெயபாலனதும் கவிதைகளோடு அறிமுகம் எங்களுக்கு சின்னவயதிலேயே வாய்த்துப் போனது. ஊருக்குள் எல்லா இயக்கங்களும் உலவித்திரிந்த காலம் அது. விரும்பிய இயக்கத்துக்குப் போவதுவும் வீண்பழி சுமத்தி யார்மீதும் குண்டுகள் பாயாத வாழ்வும் இருந்தது. அதுவெல்லாம் ஒரு நல்ல கனவு போல பின்னாளில் கலைந்து போனது. எண்பதுகளின் நடுக்கூற்றில் ஹாட்லியை இராணுவம் முழுவதுமாக ஆக்கிரமத்துக் கொள்ள, எங்கள் பள்ளி நாட்கள் சிதைந்துபோயின. சிலர் இயக்கங்களுக்குப் போனார்கள். இன்றும் சிலர் வெளிநாடுகளுக்குப் போனார்கள். எஞ்சியவர்கள் புற்றளை மகா வித்தியாலயத்துக்கு இடம் பெயர்ந்த புதிய ஹாட்லிக்குத் தொடர்ந்து படிக்கப் போனார்கள்.

அதற்குப்பின் ஹாட்லி நண்பர்களோடு முழுவதுமாக தொடர்பறுந்து போனேன். நீண்ட இடைவெளிக்குப் பின்னர் போன ஆண்டுத் தொடக்கத்தில் ஒரு குளிர்கால மாலையொன்றில் மீண்டும் பல பள்ளி நண்பர்களைச் சந்திக்க முடிந்தது. முப்பது ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் கருணாவைப் பார்க்க முடிந்தது.

சிரித்தபடி நிதானமாகப் பேசுகிற பக்குவப்பட்ட மனிதன்போலத் தெரிந்தான். சின்ன வயது நினைவுகளையும் படிப்பித்த ஆசிரியர்கள் பற்றியும் ஊர் நிலைவரங்களையும் பல இரவுகள் பேசியிருப்போம்.

ஈழத்தின் பெயர் சொல்கிற ஓவியன் என்கிற கர்வம் அவனிடமிருந்ததில்லை. ஆயினும் ஓவியங்களுக்கு எங்கள் தமிழ்ச் சமூகத்தில் சரியான இடமில்லாமல் இருப்பது பற்றிய கவலை அவனிடமிருந்தது நானறிவேன்.

எல்லா நெருக்குவாரங்களையும் தாண்டி, தனக்குப் பிடித்தது போலவே ஒரு கலைஞன் வாழ்ந்து மறைந்து போனான். இனி எஞ்சிக்கடக்கிற ஓவியங்கள், படைப்புக் களில் உயிர்த்துக் கிடப்பான்.



- பிரியதர்சன் -

# கருணா: அந்தந்தக்...

30ம் பக்கத் தொடர்ச்சி...

கள். நானோ சென்னையில் இருந்தேன். வழக்கமாக அவர்களது உதவிக்கு வரும் தோழியும் மோசமான காலநிலையால் சென்று பார்க்கமுடியாத சூழல். பதற்றமடைந்தேன் என்பதைச் சொல்லவேண்டியதில்லை. அப்போது கருணாவை அழைத்து விபரத்தைச் சொன்னேன். உடனடியாகப் போய்ப் பார்த்துவருவதாகச் சொன்னார். அவர் அங்கு செல்வதற்கு முன்னதாகவே மாமா போய் அப்பா-அம்மாவைப் பார்த்துவிட்டு அவர்களது சுகநலன் பற்றி என்னிடம் கூறினார். அன்று அந்த உறைமழையில் தமது வேலைகளின் நிமித்தம் கூட யாரும் வெளியில் செல்லத் துணியமாட்டார்கள். கருணா தன் நண்பர்களது குடும்பத்தினருக்கும் நண்பராயிருந்தார் என்பதற்கான சாட்சியம் இந்தச் சம்பவம்.

'தாய்வீடு' பத்திரிகையை அவர் தன்னுடையதெனவே கருதியிருந்தார். அதைத் தரம்படக் கொணரவேண்டுமென்பதில் அவருக்கிருந்த ஆர்வத்தை துடிப்பு என்று கூறினால் அஃது மிகைப்படுத்தலன்று. தன்னுடைய பிள்ளையை எதிர்பார்ப்புகளற்று நேசிக்கும் ஒரு தாயின் வாஞ்சையை தாய்வீட்டின்பால் அவர் கொண்டிருந்தார். ஆக்கங்கள் கேட்டோ எவரையேனும் நேர்காணல் செய்யவேண்டியிருந்தாலோ என்னை அழைப்பார். அலைச்சல்கள் நிறைந்த என் வாழ்வு, அவருடைய வேண்டுகோள்களை நிறைவேற்றுவதற்கு பெரும்பாலும் அனுமதிப்பதில்லை. அதையும் மீறித்தான் அம்பையையும் நாஞ்சில் நாடனையும் நேர்காணல் செய்தேன். சில கட்டுரைகளை எழுதினேன். வழக்கம்போல, மேற்குறித்த நேர்காணல்களின் புகைப்படங்களையும் கருணாவே எடுத்தார்.

“காமெராவைப் பாக்காதைங்க. நீங்கள் உங்கடை பாட்டிலை இருங்கோ” என்ற குரலை 1996ம் ஆண்டிலிருந்து கேட்டு வந்திருக்கிறேன். மிகச் சிறந்தவை என நான் கருதுகிற எனது புகைப்படங்களை கருணாவே எடுத்தார். எனது வாழ்வின் பல முக்கியமான தருணங்களை அவர் ஒளிப்படங்களாக்கியிருக்கிறார். நானே பார்த்திராத என்னுடைய புகைப்படங்களிற் சில வற்றை திடுதிப்பென்று அனுப்பி, 'இதுவா?' என்பார். அதிலொரு குழந்தைக் குதூகலம் இருக்கும். அந்நேரம் கருணா எப்படிச் சிரித்துக்கொண்டிருப்பார் என்பதை என்னால் உணரமுடியும். என்னை மட்டுமென்றில்லை, எத்தனையோ எழுத்தாளர்களை, கவிஞர்களை, ஓவியர்களை அவர்களே விரும்பத்தகு விதத்தில் ஒளி நிழல்களாக விழுத்தியிருக்கிறார் கருணா. அ.யேசுராசாவை, அனாரை, சேரனை, அம்பையை, அ.ராமசாமியை, க.வாசுதேவனை, நாஞ்சில் நாடனை இன்னும் பலரை கருணா எடுத்த புகைப்படங்களில் எடுக்கப்பட்டவர்கள் மட்டும் இருக்கமாட்டார்கள், அவற்றில் கருணாவின் தனித்துவம் தெரியும். தொலைபேசியைக் கண்டு பிடித்த கிரஹாம்பெல் அவர்கள் வாழ்ந்த வீட்டில் வைத்து அ.யேசுராசாவை எடுத்த புகைப்படம் ஒரு புராதன ஓவியத்திற்கு ஒப்பானது. தொலைபேசி தொடர்பான பழைய பொருட்கள்... அதைக் கூர்ந்து பார்த்தபடி நிற்கும் தலைநரைத்த ஒரு மனிதர்... அதைப் பார்த்தபோது, நிகழ் அழிந்து வேறொரு காலத்தினுள் புகுந்து விட்டதானதொரு உணர்வு. அந்தப் புகைப்படத்தைக் குறித்துப் பாராட்டிய போது, மகிழ்ச்சிபொங்க அப்புகைப்படம் எடுக்கப்பட்ட நாள் குறித்து விபரமாகப் பகிர்ந்து கொண்டார். எனது நாவலாகிய 'பார்த்தீனிய'த்தின் அறிமுகம் மற்றும் விமர்சனக் கூட்டம், 2016 ஒகஸ்டில் ரொறன்ரோவில் நடைபெற்றது. அதற்கான அழைப்பிதழை வடிவமைத்தவர் கருணாவே. நிகழ்வின் புகைப்படங்களையும் அவரே எடுத்தார். அந்நிகழ்ச்சியையடுத்து அன்றிரவும் நாங்கள் சந்தித்தோம். நான் கருணாவைக் காணும் கடைசி நாள் அதுவே என்பதை அறியாதிருந்தேன். அன்றைய சந்திப்பில் வழக்கமான நண்பர்களுடன் மிச்சிக்கன் பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் பேராசிரியர் ஸ்வர்ணவேல் ஈஸ்வரனும் கலந்து கொண்டார்.

ஒரு தோழியாக, அவருக்கு என்னுடைய அபிப்பிராயங்கள் முக்கியமாக இருந்தன. தான் வரைந்த ஓவியத்தை (கடைசியாக அனுப்பிய ஓவியம், தமயந்தி-பானுபாரதியின் மகள் ஓவியாவை வரைந்தது) எழுதிய கட்டுரையை, ஒளியமைப்புச் செய்த நாடகத்தைப் பற்றிய குறிப்புகளை, எடுத்த புகைப்படங்களை, வடிவமைத்த அட்டைப் படங்களை எல்லாவற்றையும் பகிர்ந்து கொள்வார். அவற்றைக் குறித்த அபிப்பிராயங்களைச் சொல்லத் தாமதித்தால், மறுபடியும் மறுபடியும் ஞாபகமூட்டுவார். அவரை நினைக்குந்தோறும், ஆவல் மினுங்கும் குழந்தையின் கண்களே ஞாபகத்தில் வருகின்றன.

“இன்று வேலைக்குப் போனபோது எனது மேசையில் இது இருந்தது” என ஒருநாள் ஒரு புகைப்படத்தை அனுப்பியிருந்தார். அதில் இரண்டு சிவப்பு ரோஜாக்கள் இருந்தன.

“இரகசியமாக உங்களை யாரோ காதலிக்கிறார்கள் போல” என்று பதிலளித்தேன். அதற்கு ஒரு சிரிப்பே பதிலாக வந்தது.

எல்லாவற்றையும் பகிர்ந்துகொண்ட கருணா தன்னுடைய உடல்நலமின்மையை, மனவுளைச்சலை என்னோடு பகிர்ந்துகொள்ள வில்லை. அவற்றைச் சொல்வதானது என்னைத் தொந்தரவு செய்வதாக அமைந்து விடுமோ என அவர் கருதியிருக்கக்கூடும். அல்லது, அப்படிச் சொல்வதற்கான நெருக்கத்தை, கரிசனையை நான் அவரிடம் காட்டத் தவறியிருக்கலாம். நெருங்கியவர்களுக்காக போதியளவு நேரத்தைச் செலவழிக்க இயலாத அமனிதர்களாகிப் போனோம் நாம்! கருணாவோடு இன்னும் அதிகமாகக் கதைத்திருக்கவேண்டும் என்று குற்றவுணர்வு இன்று என்னைச் சாடுகிறது.

கருணாவைப் பற்றி முகநூல் பதிவுகளைப் பார்க்கும்போது, அவர் எடுத்த ஒளிப்படங்களைக் காணும் போதில் அவரது இன்மை வருத்துகிறது. வாழ்வின் அநிச்சயம் இரக்கமில்லாமல் பாய்ந்து முகத்தில் அறைகிறது. 'எங்கே போய்விடப்போகிறார்?' என நாம் எண்ணியிருந்த ஒருவர் திடீரென மறைந்துபோகிறபோது அதை எப்படி எதிர்கொள்வதென்ற திக்பிரமை சூழ்கிறது. 'இவ்வளவு சடுதியாக ஒருவர் இல்லாமற் (தூலமாக) போய்விட முடியுமா?' என்ற கேள்வியோடு அலமலந்து நிற்கிறேன்.

எந்த நிகழ்ச்சியென்றாலும் அது ஆரம்பமாவதன் முன்னதாக என்னை வாசலிலே எதிர்கொள்கிற, நிகழ்வு முடிந்ததும் காத்திருந்து உரையாடாமல் விடைபெறாத, 'ஓர் ஓவியனால் எழுதப்பட்ட புகைப்படக் கவிதைகள்' என்றவாறாக ஏதும் பகிடி பண்ணினால், “பெரிய கரைச்சலப்பா உங்களோடை!” என்று தன் புழுகத்தை மறைத்துக்கொண்டு சிரிக்கிற கருணா என்கிற நண்பன் இல்லாத ரொறன்ரோ, இனி என்னளவில் நிச்சயம் வெறுமையாகத்தானிருக்கும்.

உங்களுக்கு எப்படி விடைதருவது கருணா?
நினைவுள்ளவரை நீங்கள் எங்களோடே
இருப்பீர்கள்,
என்றென்றைக்குமாக!



tamilnathy@thaiveedu.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதல் ஈழத்தமிழ் டிஜிட்டல் ஓவியர் கருணா வின்சென்ற்



**கனடா உலகத்தமிழர் பத்திரிகை**

சிறந்த ஓவியரும் ஒளிப்படப் பிடிப்பாளரும் வரைகலைக் கலைஞருமான திரு இயூஜின் கருணாகரன் வின்சென்ற் மறைந்த செய்தி எமக்குப் பெருந்துயரத்தைத் தந்திருக்கின்றது. வடிவமைப்பிலும் தலைப்புகளை உரு வாக்கித் தந்த வகையிலும் தேசியத்துக் கான பல சுவரொட்டிகளை வடிவமைப்புச் செய்த வகையிலும் கருணவின் பங்களிப்பு கனடா உலகத்தமிழர் பத்திரிகையிலும் இருந்திருக்கின்றது. தொடர்ந்தும் சில விளம் பரங்களை வடிவமைத்துத் தந்துகொண்டி ருந்தார்.

சிறந்தவொரு வரைகலை ஆளுமையாகத் திகழ்ந்த கருணா அவர்களைப்பற்றிய தக வல்கள் சிலவற்றை இங்கு பதிவு செய்வ தன் வாயிலாக அவருக்கான இறுதி வணக் கத்தைச் செலுத்துகின்றது கனடா உலகத் தமிழர் பத்திரிகை.

தாயகத்திலேயே ஓவியத்துறையில் நாட்டம் கொண்டு, ஆசிரியர் மாற்கு அவர்களிடம் ஓவியம் பயின்ற கருணா, மரபுவழிப்பட்ட ஓவிய மரபிலிருந்து மாறுபட்டவராக, நவீன ஓவிய நுட்பங்களில் ஈடுபாடும் திறமையும் பெற்றவராக இருந்தார்.

பல்வேறு கலைகளில் சிறந்து விளங்கிய குடும்பப்பாரம்பரியத்தில் தோன்றிய கருணா சிறுவயதிலிருந்தே ஓவியத்துறையில் ஆர் வம் காட்டிவராவார். இவருடைய தாய்மா மனாராகிய திரு மரியநாயகம் சிறந்தவொரு ஓவியராக அடையாளம் காணப்பட்டவர்.

ஓவியக்கலையில் பலபரிமாணங்கள் உண்டு என்பதைப் பலரும் அறிவர். தற்போது அதிகம் பேசப்படுகின்ற ஓவியங்களாக நவீன ஓவியங்களே திகழ்கின்றன. நவீன ஓவியக்கலையில் தனக்கென ஒரு தனி-மரபைக் கொண்டிருந்தவர் ஓவியக்கலைஞர் மாற்கு அவர்கள். எளிமையாக வாழ்ந்த மாற்கு தமிழ் ஓவிய உலகில் பெரிதும் மதிக்கப்பட்ட கலைஞராவர்.

ஓவியக் கலைஞர் மாற்குவிடம் மிகுந்த விருப்பத்தோடு கருணா ஓவியம் பயின்றார். நவீன ஓவியத்தின் நுட்பங்களை அவரிடம் அறிந்தார்.

மாற்கு அவர்களிடம் பயின்ற மாணவர்களுள் ஒருவரான வாசுகி தன்னுடைய ஓவியக் கண்காட்சியொன்றை 1989ல் யாழ்ப்பாணத் தில் நடத்தினார். அந்தக் கண்காட்சியில் மாற்கு அவர்களின் பிற மாணவர்களின் ஓவியங்கள் சிலவும் வைக்கப்பட்டன. அதில் கருணாவின் ஓவியங்கள் சிலவும் இடம்பெற் றிருந்தன. இதுவே இவருடைய ஓவியங் கள் காட்சிப்படுத்தப்பட்ட முதல் நிகழ்வா கும்.

22 வயதில் கனடாவில் கருணா காலடி எடுத்து வைத்த காலத்தில் கணினி எல் லாத்துறைகளையும் ஆட்கொள்ளத் தொடங் கியிருந்தது. தொடக்கத்தில் ஒளிப்படக் கலைஞராகப் பணியைத்தொடர்ந்த கருணா கணினியுடன் இணைந்து அச்சுத்துறைக் குள்ளும் கால் வைத்தார். அத்துறையில் கால் நூற்றாண்டு காலத்துக்கு மேலாகக் கோலோச்சியவர் கருணா.

யாழ்ப்பாணத்தைத் தளமாகக் கொண்ட 'முதுசம்' என்ற அமைப்பு 2004ல் பதின்மூன்று யாழ்ப்பாண ஓவியர்களின் ஓவியங்களைக் காட்சிப்படுத்தியது. கண்காட்சிக்காக அந்த அமைப்பு தேர்ந்தெடுத்த பதின்மூன்று ஓவியர்களுள் கருணாவும் ஒருவராக இடம் பெற்றமை பெருமைக்குரியதாகும்.

டிஜிட்டல் ஓவியக்கலை ஈழத்து ஓவியக் கலைஞர்களிடையே செல்ல நீண்டகாலம் பிடித்தது. 1992ல் முதற்றடவையாகக் கருணா டிஜிட்டல் முறையில் ஓவியங்களை வரைய ஆரம்பித்தார். கருணா டிஜிட்டல் முறை யில் ஓவியங்கள் வரைய ஆரம்பித்த முதல் ஈழத்து ஓவியராகக் கருதப்படுகின்றார்.

இதுவரை நூற்றுக்கணக்கான ஓவியங்களை வரைந்திருக்கும் கருணா ஓவியத்திறனோடு ஒட்டிய வரைகலையிலும் சிறந்து விளங் குகினார். 500க்கு மேற்பட்ட நூல்களுக்கு அட்டைப்படங்களை வரைந்து வடிவமைத் திருக்கின்றார். நூற்றுக்கணக்கான சுவ-ரொட்டிகள், பதாதைகளை உருவாக்கியி ருக்கின்றார். பல்வேறு அமைப்புகள், மன் றங்களின் இலச்சினைகளை வடிவமைத்துக் கொடுத்துள்ளார்.



சர்வதேசத்தரம் வாய்ந்த வரைகலை வடி வமைப்புகளைச் செய்து வரும் கருணாவின் ஆற்றலுக்குப் பலமாக இருப்பது அவரு-டைய ஓவியத்திறனே.

உலகளாவியவகையில் தமிழ் ஓவியர்கள் பலரோடும் தொடர்புகளைப் பேணி, ஓவி யக்கலை தொடர்பான தேடல்களை மேற் கொண்டவர் கருணா.

கனடாவில் குடியேறிய காலத்தில் ஒளிப் படத்துறை அவருடைய தொழில்சார் துறை யாகவும் இருந்தது. அதிவேகத் தொழில் நுட்ப வளர்ச்சி பெற்றுவரும் ஒளிப்படத்து றையோடு ஒட்டி வளர்ச்சிபெற்று, அதில் தேர்ச்சி பெற்றவராகவும் திகழ்ந்தார். ஒளிப் படச்சுருளைப் பயன்படுத்தி கருணா பிடித்த படங்கள் பல, இன்றும் பலராலும் புகழப் படுகின்றன.

ஓவியர்கள் எல்லோராலும் எழுதமுடிவதில்லை. கருணா ஓவியம் தொடர்பாக பல்வேறு கட் டுரைகளை கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாக எழுதி வந்தவர். மேற்குலக ஓவி யர்களின் வரலாற்றை தமிழில் எழுதி வந் தவர்.

தமிழகத்திருந்து ஓவியர் மருது, ஓவியர் ஜீவா நந்தன் போன்றோர் தாய்வீடு இதழ் சார்பில் கனடா வருவதற்கும் காரணமாக அமைந்தவர் இவரே. இவருடைய மறைவு குறித்து அவர்கள் வெளியிட்டிருக்கும் இரங் கல் செய்தி உருக்கமானது.

ஓவியம் தொடர்பாக பல நேர்காணல்களை வானொலியிலும் தொலைக்காட்சியிலும் வழங்கியுள்ளார். அவ்வப்போது ஓவியம் தொடர்பான கருத்தரங்குகளையும் நடத் தியிருக்கின்றார்.

ஓவியம் நவீன உத்திகளை அறிவதிலும் பரிசோதனை முயற்சிகளைச் செய்வதிலும் ஆர்வம் கொண்டிருக்கும் கருணா ஓவியத் துறை சார்ந்த கணினித் தொழில் நுட்பத் தில் நம்மவரிடையே உச்சம் பெற்றுத் திகழ்ந்தார். படைப்புத்திறனிலும் வண்ணத் தெரிவிலும் இவரது தனித்துவம் எப்போதும் பளிச்சிடும்.

2017ம் ஜனவரி மாதம் மார்க்கம் மாநகர-சபையோடு இணைந்து, தமிழர் மரபியல் பண்பாட்டு மையம் முன்னெடுத்த பொங் கல் விழாவில் கருணாவின் நாற்பதுக்கு மேற்பட்ட ஓவியங்கள் காட்சிக்கு வைக்கப் பட்டன. ரொறன்ரொவின் நடைபெற்ற பெரி யளவிலான கருணாவின் ஓவியக் கண் காட்சி இதுவெனலாம். இதே பொங்கல் விழாவில் கருணா சிறந்த கலைஞராக விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

தொடர்ந்து 2017 ஜனவரி இறுதியில் ரொறன்ரோ கல்விச்சபை நடத்திய தமிழர் மரபுரிமை நிகழ்ச்சியிலும் கருணாவின் ஓவியங்கள் காட்சிப்படுத்தப்பட்டன. அந்த நிகழ்விலும் கருணா விருது பெற்றார்.

கடந்த 2018ல் மொனிற்ரோபா மாகாணத்தில் மனிதவுரிமை அருங்காட்சியகம் நடத்திய முள்ளிவாய்க்கால் இனவழிப்பு நினைவு நிகழ்ச்சியிலும் இவருடைய ஓவியங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டன.

தான் மிகவும் நேசித்த ஓவித்துறையினூ டாக மற்றுமொரு பரிமாணத்தைத் தொட் டிருக்க வேண்டியவர் கருணா.

தமிழ்மொழியைக் கணினியில் பயன்படுத் துவது குறித்து ஆழ்ந்த அறிவு கொண்ட வர். 92ம் ஆண்டிலேயே கணினி வரை-கலை வல்லுனர் சசிகரன் பத்மநாதனுடன் இணைந்து வரைகலை அனுபவத்தையும் தமிழ் எழுத்துருக்கள் பற்றிய பயன்பாட் டையும் அறிந்து பயன்படுத்தியவர்.

கனடாவில் பிற வரைகலைக்கலைஞர்கள் உருவாவதற்குப் பத்து ஆண்டுகளுக்கு முன்பே தமிழ் வரைகலை முன்னோடிகள் எனக் கருதபடக் கூடிய சிலருள் கருணா வும் ஒருவர்.

பல அரங்கியல் ஆற்றுகைகளிலும் ஒளி யமைப்பு, ஒலியமைப்பு போன்றவற்றில் புதிய நுட்பங்களைப் புகுத்தியவர் கருணா.

நல்ல வாசகரான இவர், தரமான விமர்ச னங்களையும் எழுதி வந்துள்ளார்.

நீண்டகாலம் இந்த மண்ணிலே வாழ்ந்து, சமூகத்துக்கும் பலவகையிலும் பயன் நல் கியிருக்கவல்ல ஆற்றல் மிக்க படைப்பா ளனை, கலைஞனை நாம் இன்று இழந் துள்ளோம்.

கனடியத் தமிழரின் தொடக்ககால வரை-கலை வரலாற்றிலும் கனடாவில் தமிழர் ஓவியம் என்ற வகையிலும் கருணாவின் ஆற் றலும் ஆளுமையும் ஆழமாகவே பதிவு-செய்யப்பட்டுள்ளது.

கருணா அவர்களின் பிரிவு உறவினர்க ளுக்கும் நண்பர்களுக்கும் கொடுந்துய ரைக் கொடுத்திருக்கக் கூடியது. அவர்கள் துயரில் கனடா உலகத்தமிழர் பத்திரிகை யும் பங்குகொள்கின்றது.

■ ■ ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியக்க வைக்கும் விசரன்!



வியப்பு குழந்தைகளுக்குரிய அற்புதப் பண்பு. அந்த வியப்புத்தான் அவர்களை உயிர்ப்பாக வைத்திருக்கிறது. அந்த உயிர்ப்புத்தான் அனைத்துக் குழந்தைகளும் அழகாக இருக்கக் காரணமாக உள்ளது. பெரியவர்களில் வியக்கத் தெரிந்தவர்கள் பாக்கியவான்கள். அவ்வாறு வியக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பெரியவர்கள் புத்தெழுச்சி கொள்கிறார்கள். பெரியவர்களை வியக்க வைக்கக் கூடிய ஆற்றலைக் கைவரப்பெற்றவன் சாதாரணன் அல்லன். அவன் பிரபஞ்ச ஆற்றலைத் தன்னகத்தே கொண்ட ஒரு அசாதாரணன். அத்தகைய பிரபஞ்ச ஆற்றலைத் தன்னகத்தே கொண்ட அசாதாரணனாகவே ஓவியன் கருணா என்கின்ற என் பள்ளித் தோழன், கலையுலகச் சகா, உற்ற நண்பன் இயூஜின் எனக்குத் தெரிகின்றான். ஹாட்லிக் கல்லூரியில் ஆறாம் வகுப்புப் படித்துக் கொண்டிருக்கும் போது என்னை முதன் முதலாக வியக்க வைத்தான் இந்த இயூஜின். அவன் பென்சிலால் வரைந்து வடிவமைத்து வெளியிட்ட சித்திரக்கதைப் புத்தகத்தைப் பார்த்த போது ஆறாம் வகுப்பில் நான் அடைந்த வியப்பு அது.

நான் இருந்த C வகுப்பில் நான்தான் படம் கீறுவதில் விண்ணன் என்ற நினைப்பில் இருந்த நான் ஒருநாள் பக்கத்து B வகுப்பில் இருக்கிற இயூஜின் கீறின படங்களைக் கண்டு மலைத்துப் போய் நின்றேன். நல்லாப் படம் கீறினால் மட்டும் போதாது, டீச்சரிடம் 'வெறிக் குட்' வாங்கினால் மட்டும் போதாது, தவணைப் பரீட்சையில் சித்திரப் பாடத்துக்கு 80 புள்ளி வாங்கினால் மட்டும் போதாது. நாம் வரையும் படங்கள் பார்ப்போரை வியக்க வைக்கவேண்டும் என்பதை அப்போது நான் உணர்ந்து கொண்டேன். நான் கண்டு வியந்தது ஒன்று இரண்டு படங்களல்ல, அது ஒரு புத்தகக் கட்டு. ஏ வகுப்பில் இருந்த செல்வக்குமாரின் (கதி. செல்வக்குமார்) கதையைத் தன் ஓவியங்களால் தொடர் சித்திரக்கதையாக்கிக் கொண்டிருந்தான் இயூஜின். கையெழுத்துப் பிரதியாக நாலோ ஐந்து மாதங்கள் (சரியாக ஞாபகம் இல்லை) தொடர்ச்சியாக வெளிவந்தது அந்த சித்திரக்கதை மாத இதழ். கடற்கரைக் காட்சிகளையும் வயல்களையும் நதிகளையும் கலர் கலராகவும் மனிதர்களை உருவங்களாக-வும் கீறிக்கொண்டிருந்த நான் இயூஜின் பென்சில் கோடுகளாலும் ஷேட்டுகளாலும் (shade) கீறிய பல்வேறுபட்ட குணாதியசங்கள் கொண்ட கதாபாத்திரங்களையும் அவர்களின் பாவங்களையும் ஆக்ஷன்களையும் படத்துக்குப் படம் அவை சொல்லும் கதைகளையும் கண்டு வியந்து நின்றேன். உண்மையில் மனிதர்களை பாத்திரங்களாகப் பார்க்கவும் படைக்கவும் நான் தூண்டப்பட்டது இயூஜின் கீறிய மனிதர்களைப் பார்த்பின்னர்தான். டிஜிட்டல் ஓவியங்கள் உட்பட அவன் இறுதி வரை கீறிய படங்களில் வரும் மனிதர்கள் பாத்திரங்களாகவே இருந்தனர். அந்தப் படங்கள் பல கதைகளைக் கற்பனை செய்யத் தூண்டும் அதிசயங்களாகவுமே எனக்குத் தெரிந்தன.

எங்கள் சிறு வயதுக் காலத்தில் மனிதர்களின் அங்கங்களை தத்ரூபமாகக் கீறுவது என்பது எமக்கெல்லாம் பெரும் சவாலாக இருந்தது. முறைப்படி கீறுவதற்குச் சொல்லித் தரவோ கற்பிக்கவோ தெரியாத சித்திர வாத்தியார்களே எமக்கு வாய்க்கப்பெற்றிருந்தனர். ஆனாலும் வெறும் 12 வயதில் இந்த இயூஜினால் எப்படி மனிதர்களின் அங்கங்களையும் அசைவு-களையும் அவரவர் குணாதிசயங்களுக்கு ஏற்ப முகபாவங்களையும் உடல்மொழியையும் ஓவியமாகக் கீற முடிந்தது என்பது எனக்கு இன்னமும் வியப்பாகவே இருக்கின்றது. காட்சிமொழி பற்றி கொஞ்சமும் நாம் அறிந்திராத காலம் அது. ஆனால் இயூஜின் அந்த சித்திரக்கதையில் கீறியிருந்த குளோசப் காட்சிகளையும் தூரக் காட்சிகளையும் இன்று நினைத்துப் பார்க்க எனக்கு வியப்பாக உள்ளது. எந்த விடயத்தை எந்தக் கோணத்தில் கீற வேண்டும் என்பது அவனுக்கு அப்பவே தெரிந்திருந்தது.

ஒன்பதாம் வகுப்பில் நாங்கள் வர்த்தகம் அல்லது சித்திரம் இவற்றுள் ஏதாவது ஒன்றைத் தெரிவு செய்ய வேண்டும். எவ்வளவுதான் படம் கீறுவதில் கெட்டிக்காரனாக இருந்தாலும் ஓ.எல் இல் சித்திரத்துக்கு C பாஸ் எடுப்பதே கஸ்டம் என்பது எங்களுக்குள் பரவலாக இருந்த



பலமான நம்பிக்கை. ஆதனால் நாங்கள் எல்லாம் ஒன்பதாம் வகுப்பில் சித்திரத்தைக் கைவிட்டு வர்த்தகத்தைத் தழுவிக் கொண்டோம். ஆனால் வருங்கால டொக்டர், எஞ்சினியர் வகையறாவுக்குள் இருந்த இந்த இயூஜின், "வர்த்தகம் வேண்டாம் சித்திரம்தான் படிப்பேன்" என்று பிடிவாதமாக நின்றபோது சித்திர வாத்தியார், "உனக்கென்ன விசரே? சித்திரம் படிச்சு என்னத்தைக் கிழிக்கப் போறாய்?" என்று புத்திமதி கூறினார். சித்திர வாத்தியார் இவனைப் பார்த்து "உனக்கென்ன விசரே?" என்று மட்டுந்தான் கேட்டார். நாங்கள் "இவன் வெறும் விசரன்" என்றே முடிவு கட்டிவிட்டோம்.

ஓ எல் க்குப் பிறகு அதாவது 1985க்குப் பிறகு அந்த வெறும் விசரனோடு என்னைத் தொடர்புபடுத்தி விட்டவர் விக்கி அண்ணன். அதுக்குப் பிறகு திரும்பவும் என்னை அடிக்கடி வியப்பில் ஆழத்திக் கொண்டேயிருந்தான். இப்போது ஓவியங்களால் மட்டுமல்ல அன்பால், கருணையால், அக்கறையால், நட்பால், நாகரீகத்தால், நல்ல தமிழால், தன் குரலால், தன்னடக்கத்தால், தன் பண்பால், தொழில் நுட்பத் தேர்ச்சியால், பல்துறை அறிவால், தேடலால், தகவல் திரட்டுகளால், உணவுப் பழக்கவழக்கத்தால், தளராத ஆதரவால், ஓயாத ஊக்கமளிப்பால், எல்லயற்ற பொறுமையால், பட்டறிவால், பற்றற்ற போக்கால், சமாதான மனத்தால் அவன் என்னை அடிக்கடி வியப்பில் ஆழ்த்திக் கொண்டிருந்தான்.

முதன் முதலாக நான் அவனுக்கு அனுப்பி வைத்த என் படைப்பு 'புங்குடுதீவு' ஆவணப்படம். அதைப் பார்த்துவிட்டு அவன் சொன்ன வார்த்தை, "ஷொக்காயிட்டன் மச்சான்!". ஆனால் அவன் அந்த ஆவணப்படம் தொடர்பாக என்னுடன் பகிர்ந்து கொண்ட கருத்துகள் அவன் அடைந்த வியப்பை விட பன்மடங்கு வியப்பில் என்னை ஆழ்த்தின. அவ்வளவு நுட்பமான, ஆழமான அவதானிப்பும் ஆவணப்படம் பற்றிய அறிவும் அவனுடையது. அத்த-கைய ஒரு விமர்சகன் என் படைப்புகளுக்கு எதிர்வரும் காலத்தில் கிடைக்கப் பெறுவானா என்பது சந்தேகம்தான். விடயப் பொருள் பற்றி விலாவாரியாகப் பேசப் பலர் உண்டு. தொழில்நுட்பம் பற்றிப் பேசவும் சிலர் உண்டு. ஆனால் விடயப்பொருளையும், தொழில்நுட்பத்-தையும் பற்றி சேர்த்து அவ்வளவு துல்லியமாகக் கதைக்கவும் தட்டிக் கொடுக்கவும் தட்டிநிமிர்த்தவும் அவனால் மட்டுமே முடியும். உலக சினிமாவுடனான அவனுடைய பரிச்சயமும் இரசனையும் என்னை மேலும் வியப்பில் ஆழ்த்தின. 'த கேர்ல் வித் பேர்ல் இயறிங்' என்ற படம் எனது திரைப்பட உருவாக்கல் வகுப்புகளில் நான் படிப்பவர்களுக்குப் அடிக்கடி போட்டுக்காட்டும் படம். ஏதோ ஒரு கதையில் அந்தப்படம் பற்றி நான் இயூஜினிடம் வாய் உன்னிவிட்டேன் ஒருநாள். அடுத்த கணம் இயூஜின் அந்தப்படம் பற்றி எனக்கு எடுத்துவிட்ட விடயங்களும் தகவல்களும் அவனிடம் இருந்து எனக்குக் கிடைத்த இன்னொரு வகை வியப்பு. பின்னர் அவன் தாய்வீடு பத்திரிகையில் த கேர்ல் வித் பேர்ல் இயறிங் படம் பற்றி எழுதிய கட்டுரையை வாசித்தேன். இவன் எங்களுக்கொரு பொக்கிசம் என எண்ணினேன் நான்.

உரு குறுந்திரைப்படத்துக்கு ஒரு லோகோ வேண்டும் என்று கேட்டேன் அவனிடம். கேட்டு அரை மணி நேரத்தில் குறுஞ் செய்தியாக ஒரு சாம்பிள் வடிவமைத்து அனுப்பி வைத்தான். என் தாய் மேல் சத்தியமாகச் சொல்வேன், "நான் அசந்து போய் நின்றேன்!". உருவும் உடுக்கும் சேர்ந்து வந்தால் நல்லது என்று மட்டுமே அவனிடம் சொல்லியிருந்தேன். அவன் உரு என்ற சொல்லையே உடுக்காக உரு மாற்றி அனுப்பினான். உருவுக்குள் உடுக்கையும் உடுக்குக்குள் உருவையும் அரை மணி நேரத்துக்குள் உள்ளடக்கிவிட அவனால் மட்டுமே முடியும். ஏனெனில் அவனுக்கு ஓவியம் மட்டுமல்ல எமது வாழ்வியலும் பண்பாடும் கலைகளும் கதைகளும் கூட தண்ணி பட்டபாடு. அந்த உருவை நாம் இலண்டனில் காட்சியும் எழுச்சியுமாக வெளிட்டபோது அவன் அதை விளம்பரப்படுத்த எடுத்த முயற்சியும் உழைப்பும் என்னை வியப்புக்கு மேல் வியப்புக்குள்ளாக்கியது. மைனஸ் 40 டிகிறியில் கனடா தேசம் உறைந்திருந்த அந்த காலப்பகுதியில் அவன் உருவுக்காகவும் நட்புக்காகவும் நம் தேசத்துக்காகவும் செய்தனுப்பிய வீடியோக்கள் ஒவ்வொன்றும் உருவின் வெற்றியின் ஒவ்வொரு படிக்கற்கள். அதற்காக அவன் தேர்ந்தெடுத்த ஆட்கள் ஒவ்வொருவரும் மிகப் பொருத்தமான ஆளுமைகள். அதே போன்று கனடாவில் நாம் உருவை உருவேற்றிய போது விளம்பர வேலைகள் அனைத்தையும் பொறுப்பெடுத்துக் கொண்ட அவன் சொன்னான், "டிக்கட் விக்கிற வேலை மட்டும் செய்யமாட்டன்". ஆனால் அங்கும் என்னை வியக்க வைத்தான். படக்காட்சிக்கு முதலில் மிகவும் அதிக எண்ணிக்கையில் விற்கப்பட்ட டிக்கட்டுகள் அவன் எனக்கு அறிமுகம் செய்து வைத்த ஆட்கள் மூலமாக விற்கப்பட்டவையே. ஒரு படைப்பை எவருக்கு எந்த வழியில் எவர் மூலமாகக் கொண்டு போய்ச் சேர்க்கவேண்டும் என்பது பற்றிய அவனுடைய புரிதல் மிகத் துல்லியமானது. அவ்வளவு துல்லியமான மார்க்கெட்டிங் அறிவு கொண்ட இந்த 'வெறும் விசரன்' வர்த்தகத்தில் நாட்டம் கொள்ளாமற் போனது எனக்கு இன்னமும் வியப்பாகவே உள்ளது.

பள்ளிப்பருவம் முதல் இந்த ஐம்பது வயது வரை என்னை வியக்க வைத்துக் கொண்டிருந்த அவன் என்னை உறைய வைத்து இவ்வளவு அவசரமாகச் செல்வான் என கனவிலும் நினைக்கவில்லை. ஆயினும் அவன் தன் மரணத்தை முன் கூட்டியே அறிந்து வைத்திருந்தானோ என நான் இன்று வியக்கிறேன். அவனுடைய அண்மைக்காலச் செயல்களையும் நடத்-தைகளையும் அவன் அடிக்கடி பேசிய வார்த்தைகளையும் எண்ணிப் பார்க்க எனக்கு அப்படித்தான் தோன்றுகின்றது. அதற்கான பல உதாரணங்கள் உள்ளன. அவன் அடிக்கடி என்னிடம் சொன்ன வார்த்தை ஒன்றை மட்டும் சொல்லி முடிக்கிறேன், "டேய் இடைக்கிடை எடுத்துக் கதையுங்கடா. சும்மா இரண்டு வார்த்தை யாவது கதையுங்கடா".

இது அவன் தன் தனிமையைப் போக்கச் சொன்ன வார்த்தைகள் அல்ல. தனித்தனியாகப் போய்க் கொண்டிருக்கும் நம் எல்லோருக்கும் விட்டுச் சென்ற செய்தியாகவே நான் இதைப் பார்க்கிறேன். அடிக்கடி ஒன்று கூடுவதிலும் ஒன்று சேர்வதிலும் அவன் அதீத ஆர்வம் கொண்டிருந்தான். அதுவே நமக்கான பலம் என்று அவன் திடமாக நம்பினான். அவன் தன் மரணத்துக்குப் பின்னும் என்னை வியக்க வைத்துக்
கொண்டிருக்கிறான்.



- ஞானதாஸ் காசிநாதர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலையோடு கருத்தான அற்புத மனிதன்



நினைத்துப் பார்க்கிறேன். இயூஜினை நான் அறிந்து கொண்டது 1980ஆம் ஆண்டு. ஹாட்லிக் கல்லூரியில் ஆறாம் வகுப்பில்.

யாழ் மாவட்டம் - வடமராட்சியைச் சேர்ந்த சுமார் இரண்டாயிரம் மாணவர்கள் ஹாட்லி அனுமதிப் பரீட்சை எழுதி அதில் சித்தி பெற்ற நூற்று அறுபது மாணவர் தெரிவா யினர். தெரிவான நூற்று அறுபது மாண வர்களை நான்கு பிரிவுகளாகப் பிரித்து நான்கு வகுப்பறைக்குள் விடுமுன் பொது மண்டபத்தில் (assembly hall) நாலு மூலை களில் நான்கு வகுப்புகளும் அமர்த்தப் பட்டன. ஒரு வகுப்பிலுருந்து மற்ற வகுப் பினரைப் பார்க்கவும் கேட்கவும் முடிகின்ற சூழ்நிலையில் முதல் முதலில் நாங்கள் அறிமுகமானோம்.

பாடங்கள் சரியாக ஆரம்பிக்காத நிலை யில் நானும் எனது நண்பன் மதியழகனும் ஆறாம் வகுப்பு ஏ பிரிவு பின் வாங்கிலி ருந்து ஒரு சித்திரக் கதைப்புத்தகம் எழுத ஆவன செய்தோம். அதாவது கதையை எழுதி ஒரு அறுபது பக்கம் கொண்ட கொப்பியில் படங்களை வரைய ஆரம் பித்திருந்தோம்.

இரண்டு மூன்று நாட்கள் நான்கு ஐந்து படங்கள் வரைந்திருப்போம் என நினைக் கிறேன். அந்நிலையில் B பிரிவைச் சார்ந்த இயூஜின் எங்களை அணுகி "நான் கீறவா" எனக் கேட்டார். "நீர் கீறுவீரா" எனக்கேட்ட வண்ணம் கொப்பியைக் கொடுத்தோம்.

நாங்கள் பேசிக் கொண்டதற்கிணங்க நான் கதை சொல்லக் கடகட என வரைய ஆரம்பித்தான். அவனுடைய வரைகின்ற வேகம், தெளிவான, அழகான வரைதல் முறை. முதல் சித்திரக்கதைப் புத்தகத்தை மிக வேகமாக ஓரிரு நாட்களில் முடித்து விட்டோம். முடித்து அதனை எமது சக மாணவர்களுக்கு சுழற்சி முறையில் பகிர்ந்தோம். பலத்த வரவேற்பின் காரண மாக மூன்று நான்கு சித்திரக் கதைப் புத்தகங்கள் வெளியிட்டதாக நினைவு. அந்த சமயம் சித்திரக் கதைப் புத்தகம் சகமாணவர்கள் மத்தியில் மிகவும் வர வேற்பைப் பெற்றது. இன்று வரை எங்க ளின் சித்திரப் புத்தகம் ஹாட்லி நண்பர் களால் சிலாகித்துப் பேசப்படுகிறது.

சித்திர வகுப்புகளில் தலைப்பினைக் கொடுத்து வரையச் சொல்வது வழமை. நாங்கள் அனைவரும் இயூஜின் என்ன வரைந்திருப்பார் என ஆவலாக யோசித்து அனேகமாக அந்தக் கிழமைக்குள் அதனை பார்த்து விடுவோம். எங்கள் வகுப்பில் ஓவியன் என்றால் இயூஜின் கருணாகரன் தான். இவ்வாறே ஹாட்லியில் அவன் நினைவு எமக்கிருந்தது.

அதன் பின் 1991ஆம் ஆண்டு கனடா-வுக்குப் புலம் பெயர்ந்தேன். 1993லிருந்து கருணாவைப் பல சந்தர்ப்பங்களில் சந் தித்துள்ளேன். பல அரங்காடல், அரங் கியல் நிகழ்வுகளில் சந்தித்துள்ளேன். பல பத்திரிகைகள் வடிவமைப்பு செய்யும் பொழுது சந்தித்துள்ளேன். அக்கால கட் டத்தில் பத்திரிகை வடிவமைப்பவர்களில் முதன்மையானவனாக கருணா இருந்தான்.

இந்தக் காலகட்டத்தில் எங்களுக்குள் தகவல் பரிமாற்றங்கள் பரிவர்த்தனைகள் நிறைய நடந்தன.

2003 முதல் நாள் என்ற இறுவட்டு (CD) வெளியிட்டிருந்தேன். அதற்கான அட்டை வடிவமைப்பதற்காக கருணாவிடம் போ-னேன். அவன் வடிவமைக்கையில் இடை யில் பேச்சுக் கொடுத்தேன். நான்

கருணாவிடம், "உங்களுக்குச் சித்திரக் கதை (comics) செய்வதில் ஆர்வமிருக்கா, உடன் வருவீர்களா" என வினவ. அதற்கு அவற்றை விட்டுவிட்டதாக அவர் சொன்னார். அந்தச் சமயம் நான் சொன்னேன் "எனக்கு ஒரு நண்பன் இருந்தவன். அவன் இங்கி ருந்தால் அவனும் நானும் சில சித்திரக் கதைப்புத்தகங்கள் விடலாம்" என. அவர் எனது நண்பன் பெயரைக்கேட்க நான் அவன் ஹாட்லியில் படித்த நண்பன் என்றேன். அதற்கு அவன், "ஹாட்லியா? "உங்கள் நண்பன் பெயர் என்ன?" என வினவ 'இயூஜின்' எனப்பதிலளித்தேன். உடனே நாற்காலியைச் சுழற்றித் திரும்பி 'Meet Mr Eugine' எனக் கை கொடுத்தான். 1993 முதல் 2003 வரை பத்தாண்டுகள்



நாங்கள் பழைய நண்பர்கள் என அறி யாமல் பழகியிருந்தோம்.

அதன் பின் அவனிற்கும் எனக்குமான உறவு பன்மடங்கு அதிகமானது. பழைய நண்பன் தான் கருணா என அறிய முன் னரே எனது 'மனோரஞ்சிதம்' இறுவட்டு வடிவமைப்பு கருணாவே செய்தான். பழைய நண்பன் இயூஜின் தான் கருணா என அறிந்தபின் எனது அனைத்து முயற் சிகளிலும் கருணாவின் பங்களிப்பிருந்தது.

நாங்கள் எடுக்கும் வேலைத்திட்டங்களில் அதீத அக்கறை காட்டுவான். தினம் இரவு எடுத்து அதுபற்றி உரையாடுவான். ஏதே னும் சந்தேகம் கேட்டால் அடுத்த நாள் பல ஆய்வுகள் செய்து அதன் இணைப் புகளுடன் அனுப்பி வைப்பான். கணினி, கணினி வடிவமைப்பு, டிஜிட்டல் போன்ற வற்றில் எங்களை விட நான்கைந்து வரு டங்கள் முன்னோடியாகவே திகழ்ந்தான். அவன் ஓர் Apple, iPhone காதலன்.

நான் திரைப்படம் செய்யும் போது Apple கணினி வாங்கக் காரணமாக இருந்தவன் கருணா. அவனின் ஊக்குவிப்பு, அறிவு ரையிலேயே வாங்கினேன்.

தனிப்பட்ட உறவு, நட்பு, தொடர்புகளைக் கடந்து கருணா என்றால் கலை நயத்தோடு, மாசற்ற அன்போடு, கருத்தோடு, அக்க-றையோடு செயற்படும் உதவும் நல்ல நண்பன். இனிமேல் எமக்கு எல்லா விட யத்திலும் அவனைப் போல் துணைவரக் கூடிய நண்பன் கிடைக்கப் போவதில்லை. கருணாவிற்கு ஈடு இணை யாருமில்லை. அவன் வெற்றிடத்தை யாராலும் நிரப்ப முடியாது.

கருணாவைப் பற்றிக் கதைக்கும் போது கண்ணீரை அடக்கிக் கதைப்பதே கடின-மாக உள்ளது.

அவனைப் போல ஒரு நண்பனைக் காண் பது அரிது. அவன் எந்தச் சர்சைக்குள்ளும் உட்பட்டதில்லை. இன்னொரு நண்பனோடு மனஸ்தாபம் எனின் அவன் அதைப்பற்றிக் கதைக்க விரும்ப மாட்டான். அவனோ டையே எனக்குக் கருத்து வேறுபாடிருப் பின் அதனையும் அவன் எதிர்கொள்ள மாட்டான். நேரடியாக அதைப்பற்றிக் கதைக்க மாட்டான். நானாக அதைத் திரும்பக் கதைக்க வந்தாலும் "அதெல் லாம் முக்கியமில்லை மச்சான், விடு வேற வேலையைப் பார்ப்பம்" என்பான். அதாவது எந்தக் காலத்திலும் ஒருவர் மனம் புண்படும் படி கதைக்கவோ நடக் கவோ அவனால் முடியாது. எந்தக் காலத் திலும் அவன் ஒருவரைக் குறை கூறி அறியோம். எல்லாருடைய நல்ல விடயங் களையும் உயர்வாகக் கதைப்பான். தன் னைச் சுற்றியுள்ள அனைவரையும் புகழு வான். எனக்கெல்லாம் சொல்லுவான் "உனக்கு உன் பலம் தெரியாது" என. என் பலம் எனக்குத் தெரியாமலிருக்கலாம், ஆனால் உனக்கு உன் பலம் அறிந்தும் நீ அனுபவிப்பதில்லை என நான் கூறுவது வழமை. அவன் பலம் அவன் ஆற்றல். ஆனால் அந்த ஆற்றலுக்கு ஏற்ற வாழ்க் கையை அவன் வாழவில்லை. இது எங்களுடைய ஆதங்கம். ஆதங்கங்கள் எமக்கே ஆனால் அவன் ஒரு ஞானியா கவே நடந்து கொண்டான். தனக்கென எதுவும் வைத்திருக்கவில்லை, எதுவும் செய்யவில்லை. தனிப்பட்ட முறையில் சொத்துச் சேர்ப்பது, வாழ்வது போன்ற விடயங்களில் அவன் பொறுப்பில்லாது நடப்பதாக அவனிடமே கூறியுள்ளோம். தனிப்பட்ட எந்தக் கேள்விக்கும் பதில் தராது மழுப்பி பொது விடயத்திற்கு கொண்டுவருவான். நான், கங்கா எல்லாரும் அவனைப்பற்றி கவலைப்பட்டுக் கதைத் ததுண்டு. தன்னைப்பற்றிய அக்கறையற்ற வனாக இருக்கிறானே எனக் கவலைப் பட்டதுண்டு. இப்போது நினைக்கப் போனால் அவன் பெரிய ஞானியாகவே படுகிறான். தன்னாலான நன்மையை மட்டுமே அனைவருக்கும் செய்தான்.

அவன் எவ்வாறு என் வாழ்வைத் தொட் டானோ அதே அன்போடும் ஆழத்தோ டும் தான் இன்னும் பல நூறு பேரின் வாழ்க்கையையும் தொட்டிருக்கிறான் என் பதை அவனின் இறுதி நிகழ்வில் உணர்ந்து கொண்டேன்.

அவன் தன்னைத் தவிர உலகின் அழகான விஷயங்களை அளவற்ற காதலோடு ஆகர்சித்திருக்கிறான்.

ஒரு குறுகிய வாழ்நாளில் அத்தனை பேருக்குப் பிரயோசனமாக மட்டும் வாழ்ந் திருக்கிறானே என எண்ணும் போது மலைப்பாகப் பெருமையாக இருக்கிறது. இப்படிப்பட்ட நண்பனோடு நீண்ட நெடிய காலம், கள்ளம் கபடமற்ற அப்பழுக்கற்ற பாசத்தோடு வாழ்ந்தோம் என்பதை நினைக்கவே பெருமையாக உள்ளது. அவன் அனைத்து நண்பர்களுக்கும் நல்ல வனாக இருந்தான். அதேபோல் அனைத்து நண்பர்களும் அவனுக்கு நல்லவர்களா கவே இருந்தனர். அவன் ஓர் அழகான மனிதன். இருக்கும் காலம் வரை அனை வருக்கும் பிரயோசனமாக இருந்து போய் விட்டான்.



**- கதி. செல்வக்குமார் -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்றான இரண்டு கருணாக்கள்



வணக்கம் கருணா

வாழும் போது நாம் பேசிய சிலவற்றையும் பேச மறந்த பலவற்றையும் எடுத்து வரும் மடல் இது. அருகிருக்கும் போது உணராத எமக்கு, நீ மறைந்த பின்னே இன்னுமொரு பாரதியாகத் தெரிந்தாய். பெருஞ்சிறப்பு மிக்க படைப்புகள், தமிழுலகெங்கும் பெயர் சொல்லும் புகழ், அவையடக்கம், அழகான சிரிப்பு அனைத்தையும் அருகிருந்து பார்த்தும் அவ்வப்போது பாராட்டியதோடு அடங்கிவிட்டோம். பாவரசன் பாரதி போல் வரலாற்றில் வாழப்போகும் ஒருவரைக் கண்டுகொள்ளாது எம் வாழ்வை மட்டும் பார்த்துக் கொண்டு வாழ்ந்துவிட்டோம், சராசரி மனிதராக, எமக்கு உன் வலி புரியாது. எம்மைக் குற்றவாளி ஆக்கிவிட்டு, அமைதியாய்த் தூங்குகிறாய் ஆறடி நிலத்தடியில். உன் இறுதி நிகழ்வில் உனக்கான பிரார்த்தனையில், நீ உயிர்த்தெழுவாய் என்றார்கள். இப்போதே உயிர்த்தெழுந்து வா நண்பா! உன்னை தலையில் வைத்துக் கொண்டாடுவோம்.

ஒரு புறம் குற்ற உணர்வு மனதைக் குடைந்தாலும், கோலோச்சி நிற்கின்றன உன்னோடு பழகிய இனிமையான நினைவுகள். ஓவியனாக மட்டுமே பலரும் உன்னை அறிந்திருக்க, தமிழ் உணர்வாளனாய் தேசியத்தின் பணியூடு, தொலைபேசி வாயிலாக, Digi கருணாவாக அறிமுகம் ஆனாய். ‘கருணா’ என்ற கற்பனை உருவம், பெட்டி முகத்தோடு, நடுத்தர உடலமைப்பு, கருமை நிறம், அலை போன்ற கரிய முடியெனக் கடந்தன ஆண்டுகள் எட்டு. இக்காலம் வானொலிப் பணி கங்காவை அறிமுகம் செய்தது. கங்காவின் பள்ளித் தோழன் கருணா என, எம் வானொலி நிகழ்வுகளை ஆய்வு செய்து கூறும் இன்னொரு கற்பனைக் கருணாவாக என் நினைவுகளில் மீண்டும்



நீ. ஓரிரு மாதத்தில், எதேச்சையான பேச்சின் போது, கற்பனைக் கருணா - ஒன்றும், கற்பனைக் கருணா - இரண்டும் ஒன்றே என்ற புரிதலால், மீண்டும் தொலைபேசி நண்பரானோம். உன் நண்பன் என் நண்பனாக உறவுப்பாலம் அமைந்ததால் அன்று ஒரு நாள் என் ஊர்தியில் உன்னையும் அழைத்து வந்தேன். உன் பணிமனையில் இருந்து ஊர்தி நோக்கிச் செல்கையில், கற்பனைக் கருணாவும் கற்பனைக் கார்த்திகாவும் காணாமற் போக, உன் பெட்டி முகம் வட்டமானது, நடுத்தர உடலமைப்பு குண்டானது, கருமை நிறம் அப்படியே இருக்க கரிய அலை போன்ற முடி இருந்திருக்குமா என்று ஆய்வு செய்ய முடியாத அளவுக்கு தலையோடு ஒட்டிய அளவுக்கு ஆங்காங்கே முடி. இது என் கற்பனை கலைந்த கதை. குரலை வைத்து நீ கற்பனை செய்த என் உருவமும் high school பிள்ளை போல் இருக்கே என்றானது.

நாட்கள் நகர்ந்தன. சிறந்த ஓவியனாக அறிந்து கொண்டேன். அதையும் கடந்து தமிழ் மொழியின் தொன்மை, சிறப்பு, வரலாறு, கலை, தமிழர் உணவுகள் என பலவற்றைப் பலவேளைகள் பேசினாய், பேசினோம். தூய தமிழ்ப் பயன்பாடு, தமிழர் இசை, சிறு தானிய உணவகம் அமைத்தல் என உன் எண்ணம் ஊற்றெடுத்தது. இதுவே உன்னோடு அதிகம் பேச வேண்டும் என்ற ஆவலை அதிகரித்தது. இச்சிறிய உலகில் என் கணவரோடும் நண்பனாகி எம் குடும்ப நண்பனும் ஆன போது எமக்கான ஒளிப்படப் பிடிப்பாளன், எம் தொழில்சார் வரைகலைஞன் என நீண்டது நம் நட்பு.

காலங்கள் ஓடின. எம் நிறுவனத்திலும் ஒரு பணியாளனாக, தனித்துவமான உன் திறமையால் எம் வளர்ச்சிக்கான படிக்கட்டில் ஓர் ஏணியானாய். அதே வேளை அங்கு மிக அமைதியானாய். நண்பன் போல் அல்லாது ஓர் இடைவெளியை உணர வைத்தாய். ஏன் என்ற வினாவுக்கு விடை தெரிந்த போது நீ விண்ணுலகம் சென்றிருந்தாய். அருகில் இருந்தும் அடையாளம் கண்டு அக்கறை கொள்ளத் தவறிவிட்டு, உன் இறுதி ஊர்வலத்திலும், உன்னை ஆறடி நிலத்தடியில் விதைக் கையிலும் மலர் வைத்து மன்றாடி நின்றோம். எம்மைப் பொறுத்துக்கொள்க நண்பனே, பெரும் மதிப்புக்குரிய கலைஞனே. தனித்தமிழ்ப் பயன்பாட்டின் போதும் ஒவ்வொரு முறையும் சிறு தானிய உணவுகளை உட்கொள்ளும் போதும் எம் வீட்டில் தொங்கும் உன் ஓரே ஒரு ஓவியத்தின் ஊடாகவும்
என்றும் எம்
நினைவில் நீ!

- கார்த்திகா ஞானச்சந்திரன் -



karthiga.g@thaiveedu.com

# Karuna Mama never stopped learning

Karuna Mama was remarkable in so many ways. He lived his life to the fullest and touched all of us during his time here with us. We all have a scope of memories that we will always carry with us, memories that defined him and memories that we will always hold dear.

For those who knew Karuna Mama, you are lucky enough to have known of his art. He was an extremely talented individual who's passion could be seen in his art.

Karuna Mama continued to touch many others and as we look through the memories of his life, we see him as a respected colleague. He shared his expertise with all his colleagues. He never stopped learning.

His artwork added so much to our lives but even beyond that he added so much to the ones that surrounded him. If you were lucky enough to call him a friend or in my case an uncle he was always there supporting our endeavors. For the many theatre plays my dad held, or for the digital media he created to accompany magazines or whether it was just a listening ear he was always there assisting us, and it is not only a huge loss in our lives but to our community.

It is very hard to say goodbye and we don't want to, but I think it'll help to remember that he touched so many people's lives, so positively. He leaves an amazing legacy behind. Karuna Mama, we miss you and we will always remember you!



- Jennifer Dilipkumar -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஓவியங்களை உயிர்ப்பித்தவன்

ரஷ்மி

அவன் ஓவியங்களை
பச்சை நிறங்களால் குளிர்வித்தான்
சிவப்பின் கோபத்தினால் எரியூட்டினான்
மழையை நீலத்தினால் உறைவித்தான்
மஞ்சட் பேதங்களாலும் கறுப்பின் உறுதி கொண்டும்
அவற்றை உயிர்ப்பித்தான்

அவனுடைய இதழ் சிவந்திருந்த பெண்களிடம் கேட்டேன்
நீலக் கண்களையுடைய ஆண்களைக் கேட்டேன்
இவ்வளவு செழிப்புள்ள நிறங்களை எங்கு பெறுகிறான் என்று
இவ்வளவு கூர்மையான கோடுகளை எப்படி வரைகிறான்
என்று– 'அவனே ஆகுகிறான்' என்றார்கள் அவர்கள்

இந்த நிறங்களையெல்லாம் தீர்த்துவிட்ட நாளில்
என்ன செய்வாய் என்று
நான் அவனைக் கேட்டிருக்கவில்லை.

பிறகொருநாள் அவர்கள் அவனை அடக்கம் செய்தார்கள் –
பெட்டியை வெறுமையாக்கி நிறங்களாகத் தேங்கிக்
கொண்டான் அவன்.





# கனிந்தனன் இறைவன் தானே!

தீவகம் இராசலிங்கம்

உயிர்களும் உருவம் கொள்ளும்
இயற்கையும் ஒருகால் நிற்கும்
பயிர்களும் பருவம் கொள்ளும்
பார்வைகள் சிலைகள் சொல்லும்
தூரியினில் நெய்யுண் டாகும்
'சைக்கிளில்' ஆச்சி அப்பு
இயக்கியே பயணஞ் செய்வர்
இதுவொரு வரையா ஊற்றே!

காவியம் கதைகள் பேசும்
கற்பனை விதைகள் வீசும்
சாவினை வென்று வாழும்
சரித்திரம் கரத்தில் மீளும்
கோவிலின் தெய்வம் வந்து
திருமுகம் உருவே கொள்ளும்
ஓவியன் கருணா வென்றோர்
உத்தம புரத்தில் தானே!

திறமைகள் துருவி பார்க்கும்
திக்குகள் திசைகள் சேர்க்கும்
அருமெனக் கவிதை யாக்கும்
அற்புதம் மறைபோல் கேட்கும்
பறையென முரசம் கொட்டும்
பட்டறை படங்கள் காட்டும்
பறவையாய்ப் பார்த்து அந்த
பைங்கிளி பறந்த தாமோ?

அருமையாய்ப் பிழம்பு மாகி
அனலிலும் குழம்பு மாகி
கருமையும் நிறமும் ஊற்றுக்
காட்சியை வலைக்குட் போற்றி
உருவமும் உதிரம் கொட்டும்
உள்ளொளி நரம்பும் யாத்து
கருணாவென் றொருவன் போத்தான்
கனிந்தனன் இறைவன் தானே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைஞர் கருணா: வரையப்படுகிற நினைவுகள்

- ஓவியர் அமரதாஸ் -

ஓவிய நண்பர் கருணா அவர்களின் சடுதியான மறைவு, தமிழ்ச்சூழலில் கனத்த வெற்றிடத்தையும் துயரலைகளையும் தோற்றுவித்திருக்கிறது.

ஓவியக்கலையில் மட்டுமல்லாமல், ஒளிப்படக்கலையிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்த கலைஞர் கருணா, கனடாவில் நீண்டகாலமாக பல்வேறு கலைச்செயற்பாடுகளில் தனது காத்திரமான பங்களிப்பினை வழங்கிவந்தவர். உலகெங்கிலும், இனிய நண்பர்கள் பலரைப் பெற்றிருந்தவர்.

ஓவியம் சார்ந்த அவரது விரிந்த தேடல்களை, அவருடனான உரையாடல்களிலும் படைப்புகளிலும் புரிந்துகொள்ள முடிந்திருக்கிறது. ஓவியத்துறையில் அவர் வீச்சுடன் இயங்கிக்கொண்டிருந்த காலத்தில், அவரது இழப்பு சடுதியாக நிகழ்ந்துவிட்டது. உண்மையில், தமிழ்க் கலைச்சூழலில் அது ஒரு பேரிழப்பாகும். வயதில் மூத்தவராக இருந்தாலும், நிதானமாகவும் வெளிப்படையாகவும் மதிப்பார்ந்து என்னுடன் உரையாடக்கூடிய நல்ல நண்பராக இருந்தார்.

அவர் கனடாவிலும் நான் சுவிஸிலும் வசிக்கும் காலத்தில் பல்வேறு விடயங்கள் தொடர்பில் அவ்வப்போது உரையாடி வந்திருக்கிறோம். மிக அண்மையில், சில நாட்கள் முன்னதாக, என்னுடன் நீண்ட நேரம் உரையாடியிருந்தார். ஓவியம் மற்றும் ஒளிப்படம் போன்ற காட்சிக்கலைகள் மீது அவருக்கும் எனக்கும் இருந்த தீராக்காதல் தான், நம்மை நெருக்கமாக்கியிருந்தன.

வெவ்வேறு காலங்களில் ஓவியர் அ. மாற்கு அவர்களின் ஓவிய மாணவர்களாகப் பலர் இருந்திருக்கிறார்கள். அவர்களில் கருணா மிகவும் முக்கியமானவர், வித்தியாசமானவர். ஓவியர் மாற்குவுடன் கருணாவும் நானும் வெவ்வேறு காலங்களில் நெருங்கிப் பழகியிருக்கிறோம். எனது பதின்பருவ காலத்தில், ஓவியர் மாற்குவை அடிக்கடி அவரது வீட்டிலேயே சந்திக்கும் வாய்ப்பைப் பெற்றிருந்தேன். அவரது ஓவிய மற்றும் சிற்பக் கலைச்செயற்பாடுகளையெல்லாம் அருகிலேயே இருந்து அவதானிக்கவும், அவரிடமிருந்து கலை நுட்பங்கள் பலவற்றைக் கற்றுக்கொள்ளவும் முடிந்திருக்கிறது. மாபெரும் யாழ்ப்பாண இடப்பெயர்வின் பின்னர், வன்னியில் அலைக்கழிந்து பல்வேறு துன்பங்களை அவர் அனுபவிக்க நேர்ந்த காலப்பகுதியில், கனடாவிற்குப் புலம்பெயர்ந்திருந்த கருணாவுடன் கடிதத்தொடர்பில் இருந்திருக்கிறார். யாழ்ப்பாண இடப்பெயர்வுக்கு முன்னர், நீண்ட வெண்தாடியுடன் அவர் இருந்த முதுமைக்காலத்தில், அவருடன் நெருங்கியிருந்த நினைவுகள் மறக்க முடியாதவை. ஓவியர் மாற்குவின் மூலம் கருணாவும் நானும் பெற்றுக்கொண்ட அரிதான அனுபவங்களை, அவ்வப்போது பகிர்ந்துகொள்வதுண்டு.

தாயகத்திலிருந்து கருணா புலம்பெயர்ந்த பின்னர், ஓவியத்துறை சார்ந்த நவீன தொழில்நுட்ப மாற்றங்களை உள்வாங்கித் தனது ஓவிய ஆளுமையை விருத்திசெய்துகொண்டேயிருந்தார். மாற்குவின் மாணவர்களாக இருந்த திரு. க.கிருஸ்ணராஜா, திருமதி. அருந்ததி போன்றவர்கள், புலம்பெயர் சூழல்களில் தொடர்ந்து ஓவியர்களாக இயங்கி வருபவர்கள்.

ஓவிய நண்பரான மருது அவர்கள், டிஜிற்றல் ஓவிய நுட்பமுறைமைகள் தமிழ்ச் சூழலில் அதிகம் செல்வாக்குப் பெறக் காரணமாக இருந்தவர். அவரது தனித்துவம் மிக்க ஓவியங்கள் குறித்தும் அவருடன் நமக்கிருந்த நட்புக் குறித்தும், கருணா வும் நானும் பலமுறை உரையாடியிருக்கிறோம். ஓவியர் மாற்குவின் தாக்கமும் ஓவியர் மருதுவின் தாக்கமும் கருணாவின் ஓவியங்கள் சிலவற்றில் வெளிப்படுவதை அவதானிக்க முடிந்திருக்கிறது. பிற்காலத்தில், டிஜிற்றல் தொழில்நுட்பத்துடன் கூடிய, அசைவியக்கம் கொண்ட எளிய கோடுகளால், தமிழர் வாழ்வியலைத் தனித்துவமாகப் பதிவுசெய்ய முயன்றுகொண்டிருந்தார். மாற்குவின் ஓவியங்களில் மாற்குவின் பெயர் வரையப்பட்டிருக்கும் சாயலில், கருணாவின் ஓவியங்களில் கருணாவின் பெயர் வரையப்பட்டிருக்கும். (அதுபோலவே கிருஸ்ணராஜாவின் ஓவியங்களில் அவரது பெயர் வரையப்பட்டிருக்கும்.)




2017ம் ஆண்டில், கருணாவின் ஓவியங்கள் கனடாவில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. கருணாவின் கலைப்பயணத்தில் அது மிகவும் முக்கிய நிகழ்வாகும். தேர்ந்தெடுக்கப்பட்ட அவரது படைப்புகள், நூல் வடிவில் இனி வெளிக்கொண்டு வரப்பட வேண்டியது அவசியமாகும்.

பல்வேறு கலைஞர்களின் கூட்டு முயற்சியில், ‘இற்றைத் திங்கள் இந்நிலவில்…’ என்னும் அரங்க நிகழ்வு, கனடாவில் சாத்தியமாகியிருந்தது. பல்வேறு நிலைகளில் முக்கியத்துவம் கொண்ட ஒரு நிகழ்வு அது. அதன் வீடியோ இணைப்பினை, கருணா எனக்கு அனுப்பியிருந்தார். அந்த அரங்க நிகழ்வின் ஒளியமைப்பினை அவர் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. தனது ஒளியமைப்புப் பணி தொடர்பிலான எனது கருத்தை அறியும் ஆவலை வெளிப்படுத்தியிருந்தார். ஈடுபாடுள்ள துறைகள் சார்ந்து, மேலதிகமாகக் கற்றுக்கொள்வதில் மிகுந்த நாட்டம் கொண்டவர். பல்வேறு தளங்களில் அவரது அறிதலும் இயக்கமும் தொடர்ந்திருக்கின்றன.

தனது கலை சார் பணிகள் குறித்துத் தனது நண்பர்களுடன் கலந்துரையாடிக்கொண்டேயிருந்தார். தன்னைச் சுயமதிப்பீட்டுக்கு உள்ளாக்கிக்கொண்டே பயணித்துக்கொண்டிருந்தார் என்பது கவனிக்கப்பட வேண்டியது. 2018-05-18 அன்று மிக நீண்டநேரம் அவரும் நானும் உரையாடியிருக்கிறோம். முள்ளிவாய்க்கால் பற்றி, எனது போர்க்கால ஒளிப்படங்கள் பற்றி, கியூபெக் பற்றி, ஓவியர் மாற்கு பற்றி, ஓவியர் வாசுகியின் ஓவியக்காட்சி பற்றி, ஓவியரும் நண்பருமான மருது பற்றி, நண்பர் கங்காதரன் பற்றி, இன்னும் பல்வேறு விடயங்கள் பற்றியெல்லாம் அன்று உரையாடினோம். ஓவியர் மாற்கு, எழுதி அனுப்பியிருந்த ‘உருக்கமான’ இறுதிக் கடிதம் பற்றிய தகவல்களையும் அன்று பகிர்ந்துகொண்டார்.

கனடாவில் தொடர்ந்து வெளிவரும் ‘தாய்வீடு’ பத்திரிகையில் கருணாவின் பங்களிப்பு மிகவும் முக்கியமானது. மிக அண்மையில், அவருடன் விரிவாகப் பேசவேண்டியிருந்தது. தாய்வீட்டுக்காக, என்னுடன் ஒரு நேர்காணல் பதிவு செய்ய ஏற்பாடு செய்திருந்தார். சில கேள்விகளையும் என்னுடன் பகிர்ந்துகொண்டிருந்தார். 2019ம் ஆண்டில் வருகிற ‘முள்ளிவாய்க்கால் நினைவுக்காலத்தை’ முன்னிட்டு, எனது போர்க்கால ஒளிப்படங்களுடன் சிறப்பிதழாகத் தாய்வீடு வெளிவரவேண்டும் என்று விரும்பியிருந்தார். எனது போர்க்கால ஒளிப்படங்கள் பலவும், தாய்வீடு பத்திரிகையில் ஏற்கெனவே பயன்படுத்தப்பட்டுள்ளமையினை நன்றியுடன் நினைவுகூர்ந்தார். இவை குறித்து, தாய்வீடு சார்ந்த நெருங்கிய நண்பர்களான கங்காதரன், திரு. திலீப்குமார் ஆகியோரோடு உரையாடியிருக்கிறார். கருணாவின் மறைவுக்குப் பின்னர், இழப்புத்துயரையும் சில நினைவுகளையும் அந்த நண்பர்கள் என்னுடன் பகிர்ந்துகொண்டார்கள்.

கருணா என்னும் கலைஞனது இழப்பின் கனத்தை, சமூக வலைத்தளங்களிலெங்கும் சமநேரத்தில், காணக்கூடியதாக இருந்தது. கருணா என்னும் இனிய நண்பரை இழந்த பெருந்துயரைக் கடந்துசெல்வது, எனக்கு இலகுவானதாக இருக்காது.



amarathaas@thaiveedu.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதம் பற்றிச் சிந்தித்த மகத்தான மனிதன்!



எம் பாசம் நிறை தம்பி கருணா இன்று எம்முடன் இல்லையே என்று நினைக்கும் போது இதயம் கனக்கின்றது. நான் கனடா வரும் போதேல்லாம் அண்ணா என்று கனிவுடன் அழைத்து, விருந்தோம்பிய தம்பி இன்று இல்லையே என நினைக்கும் போது இதயம் மீண்டும் கனதியாகின்றது. உன் கலைத்திறமை, ஆற்றல், உன் பிறப்போடு பின்னிப் பிணைந்த உன்னை கலையுலகிற்கு அடையாளப்படுத்தியது உன் ஓவியம். அது என்றுமே அழியாதது தான். பெருமைப்படுகின்றேன். நீ இத்தமிழ் பேசும் உலகிற்கு ஆற்றிய அளப்பரிய பங்களிப்பை வார்த்தையினால் வடித்துவிட முடியாது. தமிழின விடுதலைப் பயணத்தில் மக்கள் சிந்திய குருதியை, இழப்புகளை, மரண ஓலங்களை உன் தூரிகையினால் துல்லியமாக, பேசா மொழியினூடாக, மொழிகடந்தும் எல்லோரும் புரிந்துகொள்ள வித்திட்டாயே! தலை வணங்குகிறேன். பல்துறைகளிலும் விரிந்திருக்கும் விடயப் பரப்புகளையும் அவற்றின் ஆழ்ந்த அறிவையும் தெளிவையும் நான் பார்த்து வியந்துள்ளேன். நீ பெற்ற அறிவை, அனுபவத்தை என்னோடு பகிர்ந்து கொள்வாய். அப்போதேல்லாம் நான் உன்னை நினைத்து பெருமை கொள்வேன்.



தம்பி கருணாவிற்கு இன்னொரு முகம்! எம் மண்ணில் இனங்கட்கிடையே உறவுப் பாலத்தை ஏற்படுத்த கருணா பல முனைகளில் முயற்சித்துள்ளார். மதம், மொழி, இனம், சாதி கடந்து 'மனிதம் மட்டுமே' என சிந்தித்து, உறவை வளர்க்க முற்பட்டான். இம்முயற்சியின் விளைவாக பல இஸ்லாமியச் சகோதரர்கள் என்னுடன் தொடர்புகளை ஏற்படுத்தி, சந்திப்புகளையும் மேற்கொண்டோம்.

'எல்லாவற்றையும் கடந்து மனிதம் பற்றி சிந்தித்த ஒரு மகத்தான மனிதன் என் தம்பி' என்று எண்ணும்போது உன் பிரிவின் வேதனையிலும் மனம் ஆறுதல் அடைகின்றது.

உலகிற்கு நீ மகத்தான கலைஞனாக, ஓவியனாக அடையாளப் படுத்தி நல்ல உறவுகளைச் சம்பாதித்துள்ளாய். உதிரத்தால் ஒன்றுபடாவிட்டாலும் உள்ளத்தால் ஒன்றுபட்ட நல்லுறவுள் இவ்வளவு உண்டு என்று காணும்போது பெருமைப்படுகின்றாம். ஆனால், நாம் உள்ளத்தால், உணர்வுகளால், உதிரத்தால் ஒன்றுபட்ட உன் உறவுகள். நீ எமக்கு எம் மாமா - மாமியின் மகன், அன்புத்தம்பி. அதனால் தான் உன் திடீர் மறைவு எம் இதயங்களை கனக்க வைக்கின்றது. எம் உணர்வுகள் வாழும் வரை உன் நினைவுகளோடு வாழுவோம்.

தங்கத்தம்பி எங்கு நீ சென்றாய்? ஆண்டவரின் இல்லத்தில் உறைகின்றாய் என்பது எமது கிறிஸ்தவ நம்பிக்கை! என்றோ ஒரு நாள் இறைவனின் இல்லத்தில் சந்திப்போம் என்ற நம்பிக்கையில் எம் இவ்வுலகப்பயணம் கலங்கிய விழிகளோடு தொடரட்டும்.

ஆண்டவனில் அமைதியுற உன் நித்திய தங்குமிடத்திற்குச் செல். அங்கு சந்திக்கும் வரை கனத்த இதயத்தோடு என்றும் உன் பாசம் மறவா...

ஜெயக்குமார்
அண்ணா



**அருட்தந்தை ஜெயக்குமார் அடிகளார்**

# தனது சமூகத்துக்கு ஒளியூட்டியவர்

கருணாவின் மறைவு பலரையும் போலவே என்னையும் திசையறியாது தடுமாற வைத்துள்ளது. நாங்கள் உரையாடிக் கொண்டிருக்கையில் இடைநடுவே எழுந்து சென்றுவிட்டார் போல் தோன்றுகிறது. அவரை இறுதியாக நான் கண்டது தமிழியல் மாநாட்டிலேதான். எனினும் ஒருங்கமைப்புப் பணிகளில் நான் மும்முரமாக இருந்ததால் அவருடன் அதிகம் பேசமுடியவில்லை.

சிலவேளைகளில் அவர் என்னை அழைத்து நான் அவசியம் பார்க்கவேண்டுமென்று அவர் விரும்பிய அரங்க நிகழ்வுகள் பற்றிச் சொல்வார். அப்போதெல்லாம் அவர் எப்போதும் தவறாமல், "உங்களுடன் இளையோர்கள் பலரையும் கூட்டிவாருங்கள்" என்று சொல்வார். அவ்வப்போது இணையத்தில் தான் கண்டெடுத்த ஓவியங்களை எனக்கு அனுப்பிவைப்பார். அவர் எனக்கு கடைசியாக அனுப்பிவைத்த ஓவியம் ஓர் இளம் ஓவியருடையது. அதிலே மிகவும் முறுக்கான உடற்கட்டையும் ஒளிபொருந்திய கண்களையும் உடைய திருவள்ளுவர் ஒரு குகைக்குள் இருந்து சூரிய ஒளிக்குள்ளே வருவதாக ஓவியர் வரைந்திருந்தார். "இந்தத் திருவள்ளுவரைப் பார்த்தால் ஹொலிவூட் நடிகர் ஜேசன் மொமோஆ போல் உள்ளதே" என நான் வேடிக்கை செய்தேன். அவரோ என்னிடம், முன்னரும் பலமுறை கூறியதுபோலவே, "ஓவியத்திலே உள்ள ஒளியைப் பாருங்கள்" என்றார். "ஓர் ஓவியத்தின் கருவையோ பொருளையோ ஓவியர் தெரிவுசெய்யலாம். ஆனால் ஓவியத்தை இயக்குவது ஒளிதான்" எனக் கூறுவார்.

நிகழ்வுகளுக்குப் பின்னான ஒன்றுகூடல்களிலோ, அல்லது கவிஞர் சேரன் வீட்டில் கூடும் பொழுதுகளிலோ, அவர் பெரியவர்களும் இளையவர்களும் பேசுவதை பெரும்பாலும் கண்ணில் ஒளிதெறிக்க உன்னிப்பாகக் கேட்டுக்கொண்டிருப்பார். எப்போதாவது இடையிட்டு சில வார்த்தைகள் கூறுவார், அல்லது ஒரு சான்றைச் சுட்டிக்காட்டுவார், அல்லது தனக்கேயுரிய பாணியில் ஏதாவது வேடிக்கையாகக்கூறுவார்.

அவர் ஓவியங்களை அணுகிய அதேவிதமாகவே வரலாற்றையும் அணுகினார் - அதன்மீது அவர் ஒளிபாய்ச்ச விரும்பினார். அந்த அடைவையெட்டும் முயற்சியின் ஓர் அங்கமாகவே அவர் தாய்வீடு இதழில் தனது பணியை நோக்கினார். போரினால் புலம்பெயர்க்கப்பட்ட தனது பட்டறிவால் உந்தப்பட்டாரோ என்னவோ, அவர் வரலாற்றின் வரைவிலிருந்து மக்கள்யாரும் விடுபடுவதை விரும்பவில்லை. வரலாறு பற்றிய அறிவு அவரிடம் தேங்கிக்கிடந்தது எனினும், என்னிடம் அவர் பெரும்பாலும் ஓவியங்கள் பற்றி மட்டுமே பேசினார். நகருக்குப் புதிதாக வந்திருக்கும் ஏதாவதொரு கண்காட்சியைப்பற்றிக்கூறி, நான் அதைப் பார்த்துவிட்டேனா என வினவி, அதற்கு யாரையாவது அழைத்துச் செல்வது பற்றிப் பேசுவார். நகருக்குப் புதிதாக வந்திருக்கும் பாவியல் ஓவியக் கண்காட்சி பற்றி அவருடன் பேசவேண்டுமென்று விரும்பியிருந்தேன் அந்த ஓவியங்களுக்கு உயிரூட்டும் ஒளியின் விளையாட்டு அவருக்கு நிச்சயம் களிப்பூட்டியிருக்கும்.

வேறோர் உலகில், கருணாவுக்கு நெய்வர்ண ஓவியங்கள் மீது தன் கவனத்தைச் செலுத்துவதற்கான காலமும் வெளியும் கிட்டியிருக்கும். புலம்பெயர்க்கப்பட்டு பங்குபோடப்பட்ட வெளிகளில் பல்லாண்டுகளாக வாழ்ந்துவந்த கருணா தனது கலைக்கான ஊடகத்தை நெய்வர்ணத்திலிருந்து எண்ணியலுக்கு மாற்ற நிர்ப்பந்திக்கப்பட்டார். எண்ணியல் ஓவியங்களில் அவரால் வெளிக்கொணரக்கூடிய படுகைபடுகையானதும் பல்லூடகம் போன்றதுமான படிமங்களின் சிறப்பை அவர் மதித்தபோதும், நெய்வர்ணங்களினோடும் நீர்வர்ணங்களினோடும் உறவாடவே ஏங்கினார்.

தமிழ்க் காண்பியல் கலைஞர்களுக்கு எமது சமூகம் இன்றுவரை போதிய ஆதரவு வழங்குவதில்லை என தனது மனக்குமுறலை எனக்கு சில வேளைகளில் வெளிப்படுத்தியிருக்கிறார். இருந்தபோதும் தனது சமூகத்தின்மீது அவர் பார்வை வீழ்ந்த போது, ஒவ்வொருமுறையும் அவர் மிகுந்த பரிவுடனேயே நோக்கினார். தமிழியல் மாநாட்டில் அவர் எடுத்த புகைப்படங்களே நான் பார்த்தவற்றிலேயே எமது கலையிலக்கிய சமூகத்தையும் அறிஞர்கள் சமூகத்தையும் மிகவும் அன்பொழுகப் பதிவு செய்தவை என்பேன். மார்க்கம் நகரிலே அவரின் ஓவியங்களின் கண்காட்சியொன்று நடந்தபோது, பார்வையாளர்கள் அவற்றைச் சுற்றிநின்று தமது குடும்பப் புகைப்படங்கள் பற்றிப்பேசுவதுபோல் தமது நினைவுகளை மீட்டுக்கொண்டார்கள். அது அவர்களுக்காக அவர் நிகழ்த்திய ஓர் அதிசயம். போரினால் இடம்பெயர்க்கப்பட்டு, தங்கள் வாழ்வின் நெகிழ்ச்சிக்குரிய தருணங்களை நினைவுகூரக் குறைந்தபட்சம் ஒரு புகைப்படந்தானும் இல்லாமல் வாடிய மக்கள், அவரின் வரைவுகளிலே தங்கள் வாழ்வின், தங்கள் மனிதத்தின் சான்றுகளைக் கண்டார்கள்.

ஒருவேளை கருணாவை நான் அப்படித்தான் நினைவில் வைத்திருப்பேனோ? தனது சமூகத்தை நோக்கிய பார்வையில் சொட்டிய அன்பால் தனது சமூகத்துக்கு ஒளியூட்டிய ஒருவராக...தனது அன்பால் தனது சமூகத்தை வீடு வந்தடையச் செய்த ஒருவராக...!



**நேத்ரா ரொட்ரிகோ**
**- York University**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லாமும் இருக்க; இல்லாது போயினையே...



சாவு மீது கடுஞ்சினத்தை தோற்றுவித்த நாளாகவும் அது இருந்தது.

முதல்நாள் இரவுவரை தடுமாற்றமே இல்லாமல் பேசிக்கொண்டிருந்தவன் மறுநாள் மண்ணுலகில் இல்லையென்றால், சாவைச் சபிக்காமல் என்ன செய்வது?

உயிரை உலுப்பிய இந்தத் துயரத்தை இதுவரை நான் அனுபவித்திருக்கவில்லை என்றே எண்ணுகின்றேன். உயிரை ஒடுக்கிய அந்தக் கொடூரச் செய்தியைச் சுமந்துவந்த கணங்களுக்குப் பின், என் வாராந்தச் சுழற்சி தலைகீழாய் மாறிப்போனது. இப்போதைக்கு மீண்டெழ முடியாது என்றே எண்ணத் தோன்றுகின்றது.

கருணாவின் இல்லாமையை இன்னமும் ஏற்றுக்கொள்ள மறுக்கின்றது மனம். நாள்தோறும் வரும் அவர் அழைப்பை எதிர்பார்த்து ஏங்குகின்றது இதயம். மற்றுமொரு தடைவ, "steeped tea milk and sweetener வாங்கிக்கொண்டு வாங்கோ" என்று கேட்க மாட்டாரா என்று வாடுகின்றன உணர்வுகள்.

"அண்ண, பின்னேரம் free யோ வீட்டுப்பக்கம் வரட்டே" என்று கேட்டுவிட்டு, சொந்தவீடு போல் என் வீட்டுக்கு வந்துபோகின்றவர் மீண்டும் வரமாட்டாரா என்று தவிக்கின்றது என் வீட்டு வாசல்.

ஒரு பெருநூலே எழுதுமளவுக்கு அளவிறந்த அனுபவங்களை எனக்குள் விதைத்தவரை மொழியின் ஆழத்துக்குள் அடக்கி விட முடியாது.

பன்முக ஆளுமைகளின் களமான கருணாவைச்சமூகம் பல கோணங்களில் போற்றி நிற்கின்றது. ஒவ்வொருவருக்கும் தேவைப்பட்ட கோணங்களில் விரிந்துநின்று வாரி வழங்கியவர் கருணா. கருணாவால் மட்டுமே அது முடியும்.

நானும் கருணாவும் சந்தித்துக்கொண்ட 1994மே மாதத்திலிருந்து கடந்த பெப்ரவரி 1ம் நாள் வரை இருவரும் நெருங்கிப் பணியாற்றிய நிகழ்வுகள் ஏராளம்.

நானும் கருணாவும் சந்தித்துக்கொண்ட நிகழ்வே மிகவும் சுவையானது. அதை அடிக்கடி கருணா கூறிக்கொண்டிருப்பார். அதே யாண்டில் நான் வானொலித்துறையில் காலடி வைக்க, கருணா என் பின்புலமாக இருந்தார். கனடியத் தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் நான் தயாரித்த சஞ்சிகை நிகழ்ச்சிகளுக்கு இசைப் பின்னணியாலும் நெறிப்படுத்தலாலும் உயிரூட்டியவர் கருணா என்பதைப் பலரும் அறிய மாட்டார்கள்.

ரோஜா என்ற சஞ்சிகையை ஆனந் என்பவர் வெளியிட்டுவந்த நேரம், ஒரு சிறப்பிதழைத் தயாரிக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அந்த இதழுக்கான வடிவமைப்பு கருணாவின் பொறுப்பு. இருவருமாகச் சேர்ந்தே அந்த இதழை உருவாக்கினோம்.

பின்னாளில் ஆசிரியர் அ.கந்தசாமி அவர்களின் முயற்சியால் முகரம் இதழ் தோற்றம் கொண்டது. அதன் இணையாசிரியர்களில் நானும் ஒருவன். அதுவும் கருணாவின் கைவண்ணத்தில் பேரழகு பெற்றது.

கனடியத் தமிழ் வானொலி தோன்றிய பின் அதன் வளர்ச்சிக்குக் கருணா வழங்கிய அறிவுரைகளும் பின்பலமாய் ஆற்றிய பணிகளும் மிகப்பெரியவை.

இப்படிப் பட்டியலிட்டால் எனக்கும் கருணாவுக்குமான நெருக்கம் பலவாறாக விரிந்து செல்லும்.

தாய்வீடு இதழ் கருணா போற்றிய பெருவீடு. தாய்வீட்டின் ஒவ்வொரு செங்கல்லிலும் கருணாவின் பெயர் பொறிக்கப்பட்டிருக்கும். அதன் வடிவத்தையும் உள்ளடக்கத்தையும் சிறுகச் சிறுக சிந்தித்துச் செதுக்கியதில் கருணாவின் பங்கு மிகப்பெரிது.

அரங்கியல் விழாவில் நான் நெறிப்படுத்திய நாடகங்கள் அனைத்துக்குப் பின்னாலும் கருணாவின் கைப்பக்குவம் இருக்கும்.



நாடகத்தை எழுதி முடித்தவுடன் டிலிப்குமாரையும் கருணாவையும் அழைத்து நாடகத்தை விபரிப்பேன். அவ்வேளைகளில் நாடகப்படியை உற்றுக் கவனிக்கும் கருணா, அதில் எங்கெங்கெல்லாம் அரங்க உத்திகளைப் பயன்படுத்தலாம், ஒளியை எவ்வாறு கையாளலாம் என்பதையெல்லாம் விரிவாகக்கூறுவார். அவருடைய கருத்துகளுக்கேற்ப, நான் என் நாடகத்தைச் செப்பனிட்டுக்கொள்வேன்.

இனி யாரிடம் செல்வேன்?

சில ஆண்டுகளுக்கு முன்பு எனது பேராசிரியர் மு.பி. பாலசுப்ரமணியம் அவர்கள்

- பொன்னையா விவேகானந்தன் -

கனடா வந்திருந்தபோது, அவருடைய முதன்மைச் சுற்றுலா வழிகாட்டிகள் கங்காவும் கருணாவும்தான். அமெரிக்க எல்லையான நயாகரா ஆற்றின் கரையில் நின்றபடி, அமெரிக்கா கனடா யுத்தத்தைப் பற்றி கருணா விபரிக்க, பேராசிரியர் வியப்போடு கேட்டுக்கொண்டிருந்தார்.

'இதுதான் நான் எதிர்பார்ப்பது. இந்த விடயங்களைத்தான் நான் அறிந்து கொள்ள வேண்டும்" என்று கருணாவைப் பாராட்டிய பேராசிரியர், தமிழகம் சென்று கனடாப் பயணக்கட்டுரையை ஒரு நூலாக எழுதினார். அதில் கருணாவைப்பற்றி குறிப்பிடுகின்றார்.

புதிதாக ஒரு வாழ்வியல் தளத்தின் கட்டுமானத்தைக் கனடாவில் தமிழ்ச் சமூகம் எழுப்பிக்கொண்டிருந்த காலத்தில், ஓவியம், ஒளிப்படம், வரைகலை போன்ற துறைகளில் புதிய வாசல்களை அறிமுகப்படுத்தியதில் கருணாவின் பங்கு முதன்மையானது.

கருணா ஒரு கற்பகதரு என்றே நான் கூறுவேன். எல்லாவகையாலும் சமூகத்துக்குப் பயன்மிக்கவராக இருந்தார். எம்மைப் போன்ற பலருக்குச் சிறந்தவொரு நட்பாகத் திகழ்ந்தார். எங்கள் வாழ்வில் என்றும் நின்று நிலைக்கவல்ல பேரத்தியாயம் கருணா.

கருணா குறித்து விரிவாக எழுதவும் பேசவும் வாய்ப்புகள் வரும். அவ்வேளை பகிர்ந்து கொள்வதற்காக நிறைவே உள்ளன நினைவுகள்.

இல்லாதது எதுவுமில்லை உன்னைச் சூழ..
இல்லாது போயினையே..
ஏன் நண்பா?



vivekanandan.p@thaiveedu.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

TD Canada Trust | ICICI Bank | Scotiabank
NATIONAL BANK | EQUITABLE BANK | B2B BANK



INSTANT AND EASY CASH FOR IMMEDIATE NEEDS

கடன் செய்து கொடுப்பது எமது கடமை

F.S.C.O.Brokerage # 10687
Mortgage Broker # M08004190

www.cashbankcanada.com

வங்கிகளில் MORTGAGE பெற்றுக்கொள்ள
அழையுங்கள் : தம்பி பிரபா
(416) 645 3027

1% வட்டி வீதத்தில் ஆரம்பித்து
$1 Million வரை பெற்றுக்கொள்ளலாம்

HomEquity Bank | BRIDGEWATER BANK | Manulife Bank




ஒவ்வொரு டொலரும் முக்கியமானது.
GST/HST கொடுப்பனவுகள், பலவிதமான ஆதாயங்கள், கனடா சிறுவர் கொடுப்பனவுகள் போன்றவை கஷ்டத்துக்கு உதவிசெய்ய முடியும்.
Canada.ca/MyBenefitsAndCredits

Canada Revenue Agency | Agence du revenu du Canada
Canada

TOMORROW MIGHT BE TOO LATE.
START NOW
உங்கள் வருங்கால உறவுகளை மில்லியனராக்க



BUILD AN INVESTMENT & PROTECTION FOR YOUR LOVED ONES

- முதல் மாதம் $0 கட்டணம். மருத்துவ பரிசோதனையற்ற ஆயுள் காப்புறுதி upto $500.00 (Non- Medical Insurance) tax free money.
- Critical Insurance - 25 கொடிய நோய்க்குரிய காப்புறுதி. நீங்கள் உயிருடன் இருக்கும் பொழுதே. நீங்கள் விண்ணப்பித்த தொகை மீளப் பெற்றுக்கொள்ள முடியும்.
- 20 வருடங்கள் கட்டியனால் போதும். உங்கள் வாழ்நாள் முழுவதும் காப்புறுதி இருக்கும். 20 Year Paid off Life Insurance Policy.
- கட்டணம் மாறாத 40 வருடங்களுக்கான ஆயுள் காப்புறுதி. எந்த நேரமும் நிலையான காப்புறுதிக்கு மாற்றலாம் Without Medical Examination (40 years term Policy).
- RESP உங்கள் பிள்ளைகளுக்கான கல்வி சேமிப்புத்திட்டம் $ 25 முதலீட்டுடனேயே ஆரம்பிக்கலாம். இதற்கு கனடிய அரசு மானியமாக $ 9200 சேமித்து கொள்ளலாம்.
- உங்கள் முதலீடுகள் 100% உத்தரவாதம் (for The Death) RRSP, RIFF, LIF, LIRA(Average Return 7 to 10%).
- Super Visa - உங்கள் Visa நிராகரிக்கப்பட்டால் 100% உங்கள் கட்டணம் திருப்பி பெறலாம்.

SUPER VISA | RRSP | RESP | CRITICAL ILLNESS | LIFE | NON - MEDICAL | DISABILITY | TRAVEL | 100 YEAR TERM | 40 YEAR TERM

$500,000
TAX FREE MONEY

| AGE | FEMALE | | | MALE | | |
|---|---|---|---|---|---|---|
| | Term 10 | Term 20 | Term 40 | Term 10 | Term 20 | Term 40 |
| 25 | $18.00 | $23.85 | $38.70 | $27.45 | $33.30 | $52.65 |
| 30 | $18.90 | $24.30 | $47.25 | $27.45 | $33.75 | $73.80 |
| 35 | $22.95 | $27.00 | $80.10 | $27.45 | $35.55 | $108.00 |
| 40 | $27.90 | $37.80 | $119.70 | $35.10 | $53.10 | $168.75 |

SIVA MAILVAGANAM
Insurance & Investment Broker
Dir : 416.230.2991
Fax : 416.298.4664 |
email : rajahsai9@gmail.com.
80 Nashdene Rd Unit B 25-26ON M1V 5E4



TERM PLAN - CONVERTIBLE/RENEWABLE WITHOUT ANY MEDICAL EXAMINATIONS UP TO AGE 70.

RBC Royal Bank | IA PACIFIC | BMO | Canada Life | Manulife Financial | Assumption Life | ROYAL BROKERS CORPORATION INSURANCE AND INVESTMENT SOLUTIONS

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமன்கோலைப் பார்த்துக் கொண்டேயிருக்கும் தமிழர்கள்

- அ. கணபதிப்பிள்ளை -

*சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல்*
*- அமைந்தொருபால்*
*கோடாமை சான்றோற்க் கணி.*

நடுவுநிலைமை என்ற அதிகாரத்தில் தமிழ் மறை எழுதிய திருவள்ளுவர் சான்றோர்க்கு அணியெனத் திகழ்வது பக்கச் சார்பின் மையாகக் குறிப்பிட்டுச் சென்றார். தமிழர்கள் எல்லாவற்றுக்கும் நீதிகேட்டு நிற்கும் நிலையில் இன்றைய அரசியலில் சான்றோர்கள் இல்லையா என்ற கேள்வி கேட்கவே தோன்றும்.

அரசியல் என்றால் என்ன என்பதும் அரசியலில் ஈடுபடுபவர்களுக்கு அது முழுநேரத் தொழிலா அல்லது பகுதி நேரத் தொழிலா என்பதுவும் அரசியல்பற்றித் தெரிந்து கொள்ளுவதற்கு அவசியமானது. அரசியல் செய்பவர்களது அரசியலார்வம்(Passion) அவர்களின் தூரநோக்கு (Perspective) ஆகியவை அரசியல் தவம் இயற்றுவதற்கான அடின்படைத் தகுதியாகிறது என மக்ஸ் வெபர்(Max Weber)குறிப்பிடுவார். அரசியல் என்பது வைரமான மரப்பலகையில் உறுதியாகவும் பொறுமையாகவும் துளையிடுவதனை ஒத்தது எனக் குறிப்பிடுகிறார். (‘Politics is a strong and slow Boring of hardboard’).

அரசியல் என்பது முழுநேரத்தொழில் என்பதற்குப் பதிலாகச் சொத்தைக் குவிக்கக் கூடிய முதலீடு என்பதாக எண்ணும் அரசியல்வாதிகளுக்கு மக்கள்சேவை, முன்நோக்கு என்பன சமூகம் சார்ந்ததாக இருக்க வாய்ப்பில்லாமற் போய்விடுகிறது. இலங்கை அரசியலில் தூரநோக்குடைய அரசியல்வாதிகள் இருக்கவில்லை என்று கூறிவிட முடியாது. இனஞ்சார்ந்து எண்ணுகின்ற போக்கு ஆரம்பித்து வைக்கப்பட்ட 20ம் நூற்றாண்டின் ஆரம்பம் முதல் இன்றுவரையில் இனச் சார்பு அல்லது இன அடக்குமுறை சார்ந்த அரசியல் தான் நடைபெற்று வருகிறது.

இலங்கை ஒருநாடு, இருமொழி பேசும் மக்கள், மூன்று இனமாகப் பிரிக்கப்பட்ட மக்கள், நான்கு மதங்களைத் தழுவியவர்கள் என்று வேற்றுமையின் இலக்கங்கள் கூடிக்கொண்டே போகின்றன. இந்நிலையில் நாடு, மக்கள் எனச் சிந்திக்கும் அரசியல்வாதிகள்தான் தூரநோக்குடையவர் களாக எண்ணப்படுவார்கள். மக்கள் நலன் சார்ந்த தூரநோக்கானது பொதுவானதும் இறுக்கமானதுமான சட்டவரையறையில் ஆட்சி செய்வதாகவிருக்கும். சட்டவாட்சி சனநாயகம் என்ற அரசியல் தத்துவம் ஒன்றுக்கான துணையுதவிக் காரணியாக உள்ளது. மக்களுக்காக ஆட்சி என்பதில் இனஞ்சார்ந்த முடிவுக்கு இடமில்லாமற் போய்விடுகிறது.

சமாதான காலத்தில் சனாதிபதிக்கான தேர்தல்களில் மாத்திரம் மக்களுக்காக என்ற குரல் வெளிவருகிறது. சிங்கள இனத்தின் முழு நம்பிக்கைக்கும் அல்லது போற்றுதலுக்குமான தனி ஒரு தானைத்தலைவனின் தேர்தலுக்கான வேண்டுகோளில் சிறுபான்மை மக்கள் தொடர்பான மக்களுக்காக என்ற சனநாயகக் கூறு புறக்கணிக்கப்படுகிறது. 2009 போரின் பின்பாக இடம்பெற்ற சனாதிபதி தேர்தலில் போரின் நாயகன் என்ற இனக்குறியீடு மாத்திரம் முன்வைக்கப்பட்டதுடன் போரெதிரியாக விளிக்கப்பட்ட மக்களது வேண்டுகோளும் கவனிப்பும் இல்லாமற் போய்விட்டது.

மக்கள் பழையன மறந்து அவற்றையெல்லாம் மன்னித்துக்காலங்கள் உருண்டோடி விட்டன. போரினால் மனிதப் பேரழிவினைச் சந்தித்த கடைசிக் காலப்பகுதியில் இடம்பெற்ற போர்வடுக்களின் சுமைகளுடன் நேரில் நடந்தவைகளுக்கான நியாயத்தினைக் கோரி நிற்பவர்களது ஆதங்கம் தான் பலவடிவில் இன்று முன்னிலைப்படுத்தப்பட்டதாக இருக்கின்றன. அதையும் மறப்போம் மன்னிப்போம் எனக் கேட்பவர்கள் மீண்டும் இராணுவம் தவறுசெய்வதற்கான அனுமதியினைக் கோருகிறார்களா என்ற ஐயம் ஏற்படுகிறது. மறுபுறமாக இராணுவம் தவறிழைத்ததாகக் குறிப்பிட்டதன் மூலம் ரணில் விக்கிரமசிங்கா தமிழ்த்தேசியக் கூட்டணியினரது பலத்தினைத் தமிழ் மக்களிடையே கூட்டுவதற்கான வாய்ப்பினை வழங்கியிருக்கிறார் என்றும் கூறமுடியும்.

> “அரசியல் என்பது முழுநேரத்தொழில் என்பதற்குப் பதிலாகச் சொத்தைக் குவிக்கக் கூடிய முதலீடு என்பதாக எண்ணும் அரசியல்வாதிகளுக்கு மக்கள்சேவை, முன்நோக்கு என்பன சமூகம் சார்ந்ததாக இருக்க வாய்ப்பில்லாமற் போய்விடுகிறது.”

மகிந்த அரசாங்கம் காலனித்துவப்பாங்கில் பிரச்சினைகளைக் கூட்டுவதன்மூலம் மக்களின் துன்பங்ளை மனதுள் பூட்டிவைக்கும் கட்டாய நிலைக்குத் தள்ளியிருந்தது. 2015 சனவரி வரையில் இனத்தின் மேலாண்மை தொடர்பான தோற்றப்பாட்டினை ஏற்படுத்திக்கொண்டே இலங்கையில் சர்வ வல்லமை பொருந்திய சனாதிபதியின் ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது. வாயளவில் பேசப்பட்ட 13 ஏ தீர்வுத்திட்டம் நல்லிணக்கச் செயற்பாடுகள் எல்லாம் தள்ளிப் போடப்பட்டுக் கொண்டே வந்தன. சமன் கோலின் முள்ளைக்கூடத் தமிழர்களால் பார்க்க முடியவில்லை.

மகிந்த ராஜபக்ச கூறியது போன்று சர்வதேசத்தின் சதிப்புரட்சியால் மைத்திரிபால சிறிசேன களமிறக்கப்பட்ட பொழுதுதான் தமிழர்களின் தேவை சர்வதேசத்துக்குத் தெரியத் தொடங்கியது. தமிழர்களுக்கான நீதிகிடைக்கும் காலம் இதுதான் என்ற நம்பிக்கையானது மறைபொருளாகக் கொடுக்கப்பட்டது. அப்பொழுதிலிருந்து தான் தெரிந்தோ தெரியாமலோ பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற தமிழ் மக்கள் சமக்கோலின் முள்ளினைப் பார்க்கத் தொடங்கியிருந்தார்கள். அதனை நேராக்கும் முயற்சியில் போராட்டங்களும் சமூக விளிப்புணர்வுக்கான முன்னெடுப்புகளும் முன்வைக்கப்பட்டன. முடிவு யார் கையிலிருக்கிறது என்பது ‘இலங்கை மீதான சர்வதேச நாடுகளின் தேவை’ என்ற அரசியலுடன் பின்னிப் பிணைந்துள்ளது.

வடக்குக் கிழக்கில் ஒற்றுமை வேண்டிய குரல்கள் ஒலித்துக்கொண்டிருக்கும் அதே வேளை முரண்பாடுகளுக்கான வாய்ப்புகள் அதிகமாகிக கொண்டேயிருக்கின்றன. வரலாற்றை நோக்கினால் இலங்கையின் இரு பிரதான கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் ஆட்சிக்கு வந்த வேளைகளிலெல்லாம் வடக்குக் கிழக்கில் தமது வாக்குப்பலத்தினைப் பேணுவதற்காகக் கட்சிக்கு ஆதரவாளர்களைத் திரட்டி அவர்களூடாக அபிவிருத்திக்கான பணம் வழங்கப்பட்டு வந்தது. அரசாங்கத் தொழில்கள் வழங்கப்பட்டு வந்தன. இந்நிலையில் வடக்குக் கிழக்கினைச்சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களால் இனஞ்சார்ந்த அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ள முடியாத நிலையிருந்தது. அபிவிருத்தி எங்கே எனப் பாராளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டோர் கேட்கப்படாத நிலையில் அதிகாரப்பகிர்வு, சமஸ்டி, சுயநிர்ணய உரிமை, தனிநாட்டுக் கோரிக்கை போன்றன தமிழர்களை இணைத்து வைத்துக் கொண்டிருக்கிறது.

மாகாணசபைக்கான நிதி ஒதுக்கீட்டிலும் சரி இதே நிலைதான் பின்பற்றப்பட்டு வந்தது. ஆளுனரூடாகச் செலவு செய்யும் முறையானது வடக்கிலும் கிழக்கிலும் தான் முன்னெடுக்கப்படுகிறது. யுத்தகாலங்களில் மகிந்த தரப்பினரின் முயற்சியின் விளைவாகத் தமிழர் கட்சிகளைப் பிரித்கெடுத்து தமிழர்களை இரண்டு பிரிவாக்கும் முயற்சியானது படையினரின் உதவியுடன் நடந்தது. ஈழமக்கள் சனநாயகக் கட்சி (ஈபிடிபி) என்ற அணியினூடாக அபிவிருத்திக்கான பணம் கொடுக்கும் முறை பின்பற்றப்பட்டது. மகிந்த யுகத்தின் மீளெழுச்சியாக இலங்கையில் மூன்றாம் கட்சியான பொது ஜன பெரமுனவின் உருவாக்கம் அமையப்பெற்றிருந்தது. போர்காலவெற்றியினைப் பேணும் தரப்பினரது முழு முயற்சியாக அது இருந்ததால் வடக்கிலும் கிழக்கிலும் மகிந்த பிரிவினர் சார்பான தமிழ் அமைப்புக்கள் தமது பணியினைத் தொடருகின்றன.

இந்நிலையில்தான் மகிந்த தரப்பினரால் கோத்தபாயவின் அரசியற் பிரவேசம் முன்னிறுத்தப்படுகிறது. உள்ளூராட்சி சபைத் தேர்தலூடாகச் சிங்கள மக்களின் பேராதரவைப்பெற்ற கட்சியான பொதுஜன பெரமுன வடக்கிலும் கிழக்கிலும் கணிசமான தமிழர்களினதும் படையினரதும் ஆதரவினைப் பெறவேண்டுமாகவிருந்தால் கோத்தபாயவின் வருகையின் தேவை உணரப்பட்டது. கோத்தபாயவுக்கத் தமிழர் இளையோர் அணியொன்று ஆதரவாகப் பின்னணியிலிருக்கிறது எனவும் சொல்லப்பட்டிருக்கிறது.

ஐக்கிய தேசிய முன்னணியினர் ரணில் விக்கிரமசிங்கவை நிறுத்துமிடத்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவு கிடைக்காத நிலை தோன்றுமாயின் வெற்றிக்கான வாய்ப்புக் குறைவாகவேயிருக்கும். சந்திரிகாவினூடாக இந்தியாவின் தலையீடும் அழுத்தமும் இந்தவிடயத்தில் இருந்த பொழுதிலும் இந்தியா தமிழர் தரப்புக்கு எவ்வாறு நம்பிக்கையூட்டப் போகிறதென்ற விடயம் மறைபொருளாகவேயிருக்கிறது. இந்தியத் தேர்தல் முதலில் நடைபெறவிருப்பதால் மெதுவாகவே உண்மை வெளிவரவிருக்கிறது.

ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்குப் ‘போர்க்குற்றம் மற்றும் பொறுப்புக் கூறலுக்காக காலநீடிப்பினை வழங்காது விடுதல்’ தமிழரைத் திருப்திப்படுத்தும் உபாயமாக அமையலாம். ஆனால் அது ரணிலின் வெறிறிக்குத் தடையாகுமாயின் இந்தியாதான் காலநீடிப்பினை வலியுறுத்தும் முதல் நாடாக இருக்கும். பிரித்தானியா உட்பட்ட மேற்குலக நாடுகள் இலங்கையில் மனித உரிமைகள் தொடர்பான நடவடிக்கைகளில் முன்னேற்றமிருப்பதால் காலநீடிப்பின் அவசியத்தினை வலியறுத்தி நிற்கின்றன.

மகிந்த அணியினரின் வெற்றிக்குத் தடைபோடவேண்டிய நிலையில் சர்வதேச விசாரணைக்கான காலநீடிப்பின் தேவையானது ரணில் சார்பான மேற்குலக நாடுகளுக்கு இருப்பதாக உணரப்படுமிடத்து, தமிழர் தரப்பின் எதிர்ப்பானது கணக்கில் எடுக்கப்படாமலே போகும். அதனைக்கூடத் தமிழர்கள் பெரிதாக எடுத்துக் கொள்ளாத நிலை தோற்றுவிக்கப்படலாம். இதனைத் தான் சர்வதேச நாடுகள் பலமுறை பரீட்சித்துப் பார்த்து வெற்றிபெற்றுள்ளன.

இந்த நிலையில் கோத்தபாயவின் தேர்தல் உபாயமானது ராஜபக்ச ஆட்சியின் புகழ் பாடுவதாகவே இருக்கும். ஏனெனில் இனி வரப் போகும் தேர்தல்களிலெல்லாம் பொது ஜன பெரமுனவின் வெற்றியினையே மகிந்த அணியினர் எதிர்பார்த்திருக்கின்றனர் அதற்காக எத்தகைய விலையினையும் கொடுக்கத் தயாராகி வருகின்றனர் என்பது மகிந்த அணியினரின் ஒக்டோபர் புரட்சி வெளிக்கொணர்ந்திருந்தமை அவதானிக்கத்தக்கதாகும்.

மகிந்த ஆட்சியின் இரண்டாவது தவணையின் பொழுது அவரது ஆட்சியின் கீழ் இலங்கை பாதுகாப்பானதும் ஆட்சிக்குளப்பமும் இல்லாத ஒழுக்கத்துடன் கூடிய சொர்க்கபுரியாக இருக்கிறது எனக் கோத்தபாயவினால் பேசப்பட்டாலும், அவர்களது கட்சிக்காரர்களாலும் கட்சியைச் சேர்ந்தோர் உதவியுடனும் பல குற்றங்கள் நடந்தேறியமை பல சிங்களப் புத்திஜீவிகளினால் எடுத்துக்காட்டப்பட்டிருந்தது.

2013களில் பொதுபல சேனா அமைப்பினரது அராஜகங்கள் சுட்டிக்காட்டப்பட்ட அதேவேளை ‘புத்தபிக்குக்கள் தேசியரீதில் முக்கியம்வாய்ந்த பணிகளில் தம்மை ஈடுபடுத்தியிருந்தார்கள்’ எனக் கூறிய கோத்தபாயவின் கூற்றானது சிறுபான்மையினரை வெறுப்பேற்றியிருந்ததாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

அரசியலுக்கான அர்ப்பணிப்பும் தூரநோக்கும் இல்லாத தலைவராக கோத்தபாயவினைப் பார்க்கும் சில சிங்களப் புத்தஜீவிகள் ரணிலுக்கும் அத்தகைய தகுதி இல்லையென்றே குறிப்பிடுகிறார்கள். அவ்வாறாயின் தூரநோக்குடைய மக்கள் தலைவர்கள் வெளிவருவதற்கு நடைமுறை அரசியற் கட்டமைப்பு உதவுமா என்றால் இல்லை என்ற விடைதான் கிடைக்கப்பெறும்.



kanapathipillai.a@thaiveedu.com



இணையத்தில் ஒரு நூல் உலகம்
www.noolaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்ச்சத்து B9: Folic Acid

- ரவிச்சந்திரிகா -

B உயிர்ச்சத்துக்களில் B9 உடலுக்கு இன்றியமையாதது. இது Folic acid, Folate என்னும் இரு வடிவங்களில் உள்ளது. Folate உணவுப் பொருட்களில் இயற்கையாகக் காணப்படுகிறது, Folic Acid ஆய்வு கூடங்களில் செயற்கையாகத் தயாரிக்கப்படக்கூடியது.

உடலின் பின்வரும் செயல்பாடுகளில் மிக முக்கியமானது.

- DNA, RNA ஆகிய மரபணுக்களின் உற்பத்தி, சீரமைப்பு.
- செங்குருதிக் கலங்களின் உற்பத்தி.
- கலங்கள் பிரிதல், வளர்ச்சி குறிப்பாக கருவில் உள்ள சிசு, பதின் பருவத்தினர், பெண்களின் கர்ப்ப காலம்.
- கருவில் உள்ள சிசுக்களின் மூளை, முண்ணான் வளர்ச்சி.
- முதியவர்களின் செவிப்புலன்.

கர்ப்பம் தரித்தவர்களுக்கும் குழந்தை பெறத் திட்டமிடும் பெண்களுக்கும் மிக அவசியமானது. குழந்தை பெற விரும்பும் பெண்கள் கர்ப்பம் தரிப்பதற்கு ஒரு வருடத்துக்கு முன்பாகவே Folic Acid எடுத்தல் நலம் என மருத்துவர்கள் அறிவுறுத்துகிறார்கள். கருப்பையில் வளரும் சிசுவின் நரம்பு மண்டலம் சீரான வளர்ச்சி அடைய Folic Acid தேவையானது. குறைபாடுள்ள சிசு அண்ணப்பிளவு, Spina Bifida, Anencephaly ஆகிய நரம்புச் சிக்கல்களுடன் பிறக்கலாம்.

குடல், மார்பு, சதையம், வயிறு, பெண்களின் பிறப்புறுப்பு ஆகிய பகுதிகளில் புற்று நோய் ஏற்படும் சாத்தியங்களைக் குறைக்கிறது. அது எவ்வாறு செயல்பட்டுப் புற்று நோயைக் குறைக்கிறது என்பது இன்னும் ஆய்வு நிலையிலேயே உள்ளது.

Folic Acid நிறைந்த உணவுப் பொருட்களைச் சேர்த்துக் கொள்பவர்களுக்கு மேற்குறிப்பிட்ட புற்றுநோய்கள் மிகக் குறைவாகவே ஏற்படுவது அவதானிக்கப்பட்டுள்ளது. ஆயினும் மாத்திரை வடிவில் அதிகப்படியாக எடுத்துக்கொள்வது புற்றுநோய்த் தடுப்பில் பயன்படுவது பற்றி இன்னும் நிரூபிக்கப்படவில்லை.




நாளொன்றுக்கு 1½ - 2 கோப்பை (கிளாஸ்) களுக்கு மேலான அளவு மது அருந்தும் பெண்களுக்கு மார்புப் புற்றுநோய் ஏற்படும் சாத்தியங்கள் அதிகமாகும். இவர்களின் உணவில் Folic Acid குறைவாக இருப்பின் அச்சாத்தியம் அதிகரிக்கிறது.

குருதிச்சோகை நோய் (அனீமியா), அதனால் ஏற்படும் சிக்கல்களைக் குணப்படுத்த இது உதவுகிறது.

Ulcerative colitis என்னும் பெருங்குடலைத் தாக்கும் நோய், மதுவுக்கு அடிமையாகும் alcoholism என்னும் நோய், சிறுநீர் பிரித்தெடுக்கும் dialysis என்னும் முறையைக் கையாள்பவர்கள் Folic Acid குறைபாடு கொண்டிருக்கலாம்.

நாக்கில் அழற்சி, முரசு கரைதல், வாயைச் சுற்றிப் புண்கள், சுவாசிப்பதில் சிரமம், களைப்பு, பலவீனம், மறதி, செயல் மறதி, எரிச்சல் படுதல், பசியற்ற நிலை, வயிற்றுப் போக்கு, உடல் எடை குறைதல், வயதுக்கு ஏற்ற வளர்ச்சி இல்லாதிருத்தல் ஆகியவை Folic Acid குறைபாட்டின் அறிகுறிகள் ஆகும்.

Folic Acid பின்வரும் நிலைகளில் சிகிச்சையாகப் பயன்படுத்தப்படுகிறது.

- ஞாபக மறதி
- அல்செய்மர் நோய்
- கேட்கும் திறன்
- முதியவர்களுக்கு ஏற்படும் macular degeneration எனப்படும் விழித்திறன் சிக்கல்
- பலவீனமான எலும்புகள்
- தசை, நரம்பு வலி
- மன அழுத்தம்
- Restless leg syndrome: காலில் ஏற்படும் அசாதாரண உணர்வுகள்
- Lomextrol, Methotrexate ஆகிய மருந்துகளின் பக்கவிளைவுகளைக் குறைத்தல்
- Vitiligo என்னும் தோல் நோய்

இயற்கையாக கீரை, புரோக்கோலி, லெட்டஸ். வெண்டைக்காய், அஸ்பரகஸ், வாழைப் பழம், வத்தகைப்பழம், எலுமிச்சை, மதுவம், காளான், இறைச்சி, அவரை வகைகள் ஆகியவற்றில் காணப்படுகிறது. கனடாவில் தானிய வகைகளில் செய்யப்படும் பல உணவுப்பொருட்களில் சேர்க்கப்படுகிறது.

உணவில் உள்ள Folatesஐ விட Folic acid உடலினால் இலகுவாக உறிஞ்சப்படுகிறது. மாத்திரைகள் Folic Acid, Folate, Folacin என்னும் பெயர்களில் கிடைக்கின்றன.

சமச்சீரான உணவு வகைகளை உண்பதன் மூலம் குறைபாடு ஏற்படுவதைத் தவிர்க்கலாம்.

**உசாத்துணை:**


- Folic Acid (2018) https://www.webmd.com/vitamins/ai/ingredientmono-1017/folic-acid
- What to know about folic acid (2019) https://www.medicalnewstoday.com/articles/219853.php
- Folic Acid (2019) https://www.rexall.ca/articles/view/3759/Folic-Acid
- Vitamin B9 (2019) https://www.mountsinai.org/health-library/supplement/vitamin-b9-folic-acid
- Image of Folate rich foods retrieved from (2019) https://www.momjunction.com/articles/amazing-benefits-of-folic-acid-for-pregnancy_0075542/#gref


*ravichandrika@thaiveedu.com*











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துளிர் காலமும் மிதிவண்டியும்

- செந்தூரன் புனிதவேல் -

துளிர் காலத்தின் ஆரம்பத்தில் மரங்கள் துளிர் விடுவது மட்டுமல்ல இன்னும் ஒரு விடயம் துளிர் விடத்தொடங்கும். அதுதான் கனடியர்களின் சைக்கிள் சவாரி எனப்படும் மிதிவண்டிப் பயணம். இவை வண்டிக் கொட்டில்களின்(garage) பரண்களிலிருந்து இறக்கப்பட்டு, சில்லுகளுக்கு காற்று ஏற்றப்பட்டுப் பாதைகளில் துளிர்விடத் தொடங்கும். கனடாவில் இன்று மிதிவண்டிக்கென பிரத்தியேக பாதைகள் இருந்தாலும் பல சந்தர்ப்பங்களில் மோட்டார் வாகனங்களுடன் பாதையைப் பங்குபோட வேண்டிய நிலை ஏற்படும். இச்சந்தர்ப்பங்களில் விபத்துகள் பெருமளவில் இடம் பெறுகின்றன. 1994ம் ஆண்டிலிருந்து 2012ம் ஆண்டு வரை உள்ள புள்ளி விபரங்களில் இருந்து பெறப்பட்டுள்ள Stastistics Canada கணிப்புப்படி வருடமொன்றிற்கு சராசரியாக 7,500 மிதிவண்டிச் சாரதிகள் பெரும் காயங்களுக்கு உள்ளாகின்றனர். வருடம் ஒன்றிற்கு 74 கனடியர்கள் இறக்கிறார்கள்.

மிதிவண்டி பாவிப்பது உடல் ஆரோக்கி



யத்திற்கு நலத்தைக் கொடுப்பதுடன் சுற்றாடல் மாசு படுவதையும் தவிர்க்கிறது. மக்கள் மிதிவண்டி பாவிப்பதில் ஆர்வம் காட்டினாலும் அதனுடைய விபத்துகளின் புள்ளிவிபரம் ஆர்வத்தில் ஈரத்துணி போட்டு இறுக மூடுவதாயுள்ளது. எனவே, இங்கு விபத்து தவிர்ப்பதற்கான சில வழிகளை பகிர்ந்து கொள்கிறேன்.

உங்கள் வாகனப் பயணத்தின்போது மிதிவண்டியை கடக்கும் வேளையில் போதிய இடம் விடுங்கள். மிதிவண்டி பயணிக்கும் தடத்திலிருந்து விலகி அடுத்த தடத்தில் உங்கள் பயணத்தை தொடருங்கள். வாகனத்திற்கும் மிதிவண்டிக்கும் இந்த இடைவெளி மிக அத்தியாவசியமானதாகும். காரணம் பாதையில் இருக்கும் குப்பைகள், கிடங்குகள், சாக்கடைகளைக் கடக்க மிதிவண்டியைத் திருப்ப வேண்டி இருக்கும். சுருங்கச் சொல்வதானால் வேறு ஒரு வாகனத்தைக் கடக்கும் வேளையில் அடுத்த பாதை அல்லது தடத்திற்கு செல்வது போல் மிதிவண்டியைக் கடக்கும் போது அடுத்த தடத்திற்கு மாறுவது அவசியம்.

**டச்சுக்காரரைப் பின்பற்றுங்கள்:** கார்க்கதவுகளில் மிதிவண்டிகள் மோதுவது சர்வ சாதாரணம். 2016ம் ஆண்டு புள்ளி விபரக்கணிப்புப்படி றொறன்ரோவில் இருநூறு மிதிவண்டிப் பயணிகள், வாகனத்தின் கதவு திறக்கும்போது அதில் மோதிக் காயமடைந்துள்ளார்கள். இதைத் தவிர்ப்பதற்கு டச்சுக்காரர்கள் ஒரு சிறந்த தந்திரோபாயத்தைக் கண்டுபிடித்துள்ளார்கள். ஒல்லாந்து நாட்டில் மிதிவண்டி பாவிப்பவர்கள் மிக அதிகம். காரணம் அந்நாடு சம தரையால் அமைந்தது.

டச்சுக்காரர் தமது வாகனக் கதவை வலது கையால் திறப்பார்கள். நாம் இடது பக்கத்துக் கதவை இடது கையால் திடீர் எனத் திறப்பதால் மிதிவண்டி கதவில் அடித்து விழும். வலது கையால் இடது பக்கக்கதவைத் திறக்கும் வேளையில் மெதுவாகத் திரும்பி திறப்பதால் இத்தகைய திடீர் விபத்துகள் தவிர்க்கப்படுகின்றன. எனவே நீங்களும் வலது கையால் கதவைத் திறக்கப் பழகிக் கொள்ளுங்கள்.

**மிதிவண்டி விளக்கை ஏற்றுங்கள்:** பொதுவாக மிதிவண்டிப் பயணம் ஆபத்தானது. ஆனால் அந்த ஆபத்துகள் சூரிய அஸ்தமனத்திற்குப் பின் பெருமளவு அதிகரிக்கும். மிதிவண்டி செலுத்துபவருக்கு மற்றைய வாகனங்கள், வீதிப்பாவனையாளர்கள் தெரிய வேண்டும் என்பது மட்டுமல்ல, மற்றவர்களுக்கு மிதிவண்டிப் பாவனையாளரைத் தெரிய வேண்டும் என்பதும் மிக மிக முக்கியமான ஒன்றாகும். இதற்காக மிதிவண்டியின் முற்பக்கத்தில் ஒரு வெள்ளைநிற ஒளிக்குமிழும் பின்புறத்தில் சிவப்பு நிற ஒளிக்குமிழும் இருப்பது அவசியம். பின்புற சிவப்புக்குமிழுக்குப் பதிலாக சிவப்பு எதிரொளி-பரப்பியைப் (reflector) பாவிக்கலாம். சூரியன் மறைவதற்கு முப்பது நிமிடங்களுக்கு முன்பாகவே விளக்குகளை ஏற்றி, சூரியன் உதித்த பின் முப்பது நிமிடங்களுக்கு தொடர்ந்து பாவிக்கவும். ஞாபகத்தில் வைத்திருங்கள். வெளிச்சம் நீங்கள் மற்றவர்களைக் காண்பதற்கு மட்டுமல்ல மற்றவர்களுக்கு உங்களை தெரிவதற்குமே.

**கொளுவுப்படுவதை தவிருங்கள்:** பல சந்தர்ப்பங்களில் நேராகச் செல்லும் மிதிவண்டியைக் கடந்து வலது பக்கம் திரும்பும் மோட்டார் வாகனத்தில் மிதிவண்டி கொளுவுப்படுவதுண்டு. இத்தகைய விபத்தை தவிரப்பதற்கு மோட்டார் வாகன சாரதியுடையதும் மிதிவண்டிச் சாரதியுடையதும் ஒருமித்த அவதானம் அவசியமாகும். ஒரு போதும் மிதிவண்டிக்காரர் மோட்டார் வாகனத்தை வலது பக்கத்தால் முந்தக் கூடாது. அதே வேளை மோட்டார் வாகனச் சாரதி மிதிவண்டிப் பாதையில் மிதிவண்டிகள் இருக்கின்றதா இல்லையா எனக் கவனித்த பின்பே வண்டியைத் திருப்ப வேண்டும். மோட்டார் சாரதிகள் பாதையில் மிதிவண்டிகள் இல்லை என்ற பின்பே திரும்பலாம். அது தான் சட்டம்.

மிதிவண்டிகளைப் பாவித்து ஆரோக்கியமாகவும் சுற்றாடல் மாசுபடுவதைத் தவிர்த்தும் வாழ்வதற்கு வாழ்த்துகள்.

(ஆங்கில மூலம் தமிழில்: குமார் புனிதவேல்)

*உசாத்துணை:*

- Statistics Canada https://globalnews.ca/news/4272816/several-reported-biking-fatalities-in-june-has-canadians-talking-bike-safety/
- On the Road https://www.caa.ca/bike/on-the-road-cyclists/

senthuran.p@thaiveedu.com




DEBT FREE CREDIT SOLUTION

Seeking freedom from DEBT?

We offer Total Debt FREE SOLUTIONS



Elankeeran .T

Certified Insolvency Counsellor

By Canadian Association of Insolvency and Restructuring Professionals (CAIRP)

- கடன் தொகையினை 80% வரை குறைத்து அதனை வட்டியின்றி ஒரு மாதத் தவணையில் கட்ட ஏற்பாடு செய்தல்.

We provide expert advice on how to consolidate and reduce debt payments safely without borrowing money.

- பாதுகாப்பான முறையில் கடனை அடைப்பது பற்றிய அறிவுரையும் ஆலோசனையும் தரப்படும்.

We shield you from your creditors and offer you a guranteed protection.

SETTLEMENT
CONSUMER PROPOSAL
BANKRUPTCY

Cell. 416.834.7227 Fax. 1.877.800.789
Tel. 416.434.1522 freedebt.toro@gmail.com

Head Office:
10 Milner Business Court, Suite 334
Toronto, ON. M1B 3C6

Branch Office:
101 Palstan Road
Mississauga, ON. L4Y 4E7

www.TotalDebtFree.ca


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகநூல் நட்பெல்லாம் நட்பல்ல

- க. நவம் -

'முன்னொரு நாள் யாரோ ஒருவர் என்னை அழைத்து, முகநூல் கணக்கு ஒன்றை ஆரம்பிக்குமாறு ஆலோசனை கூறும் வரை, எனக்கென்றொரு வாழ்க்கை இருந்தது.' 'உங்கள் முகநூலிலிருந்து பணம் பண்ண வேண்டுமா? அது மிகச் சுலபம்! கணக்கமைப்புக்குச் (account settings) செல்லுங்கள்; உங்கள் கணக்கைச்செயலிழக்கச்செய்யுங்கள்; உடனடியாக வேலைக்குப் போய்ச் சேருங்கள்.' 'முகநூலில் logout தான், அழுத்துவதற்கு மிகவும் கடினமான பொத்தான்.' இவையும், இவையொத்த இன்னும் எண்ணற்ற எதிர்மறையான கருத்துக்களும் முகநூல் பற்றித் தினந்தோறும் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

'நான் ஏராளமானோருடன் முகநூலூடாக இணைக்கப்பட்டிருப்பதால், என் வாழ்வு இப்போது புதிய அர்த்தம் பெற்றிருக்கிறது.' 'தொடர்பறுந்து போயிருந்த உறவுகளை என்னோடு இணைத்திருப்பதுடன், பல புதிய நண்பர்களையும் முகநூல் தேடித் தந்திருக்கிறது.' 'கடந்தகால-நிகழ்கால நினைவுகள், சம்பவங்களைப் பலருடன் பகிரவும், தனிமையைத் துரத்தவும், ஆதரவைப் பெறவும் முகநூல் எனக்கு வழிவகுத்திருக்கிறது.' 'என் எண்ணங்களையும், வெற்றி-தோல்விகளையும், இன்ப-துன்பங்களையும், இலகுவில் வெளியிட, முகநூல் உதவி வருகிறது.' முகநூல் குறித்த ஏராளம் நேரமறையான அபிப்பிராயங்களுக்கு இவை சில உதாரணங்கள்.

'ஆபிரிக்காவில் இறந்துகொண்டிருக்கும் மக்களைவிட, உங்கள் வீட்டுக்கு முன்னால் உயிரிழந்துகொண்டிருக்கும் ஓர் அற்ப பிராணியான அணில் உங்களுக்கு அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கலாம்' என ஒருமுறை கூறித் தமது மனோதர்மத்தை வெளிப்படுத்தியவர், மார்க் ஸக்கபேர்க் (Mark Zuckerberg) எனும் அமெரிக்கர். 2004ம் ஆண்டு அவர் தமது பத்தொன்பதாவது வயதில் முகநூல் என்ற சமூக ஊடகத்துக்கு அடிக்கல் நாட்டியவர். பணம் தேடும் எண்ணம் ஒருபுறமிருக்க, தமது கண்முன்னே உள்ளத்தை வருத்தியும் வருடியும் செல்லும் உணர்வுகளை ஊருலகுடன் பகிந்துகொள்ளவேண்டுமென விரும்பியவர். அனுபவங்கள், உணர்வுகள், எண்ணங்கள், தகவல்களைப் பகிர்ந்துகொள்ளும் சக்தியைச் சாதாரண மக்களுக்கும் வழங்க வேண்டும் என ஆவாவுற்றவர். அதன் வழியாக, வெளிப்படைத் தன்மைமிக்கதோர் உலகை உருவாக்கலாமென்று நம்பியவர். அவற்றைச் சாத்தியமாக்கவென அவர் உருவாக்கிய சாதனம்தான் இந்த முகநூல்.

நவீன உலகின் உரமாயும் ஊக்கியாயும் விளங்குவது தகவற் தொழில்நுட்பம். இதன் வாரிசான சமூக ஊடகத்தின் மூத்த பிள்ளையே முகநூல். பலரது வாழ்வில் ஒரு விருந்தினர் போல வந்து, பின்னர் ஒரு நண்பரைப் போலக் கூடியிருந்து, முடிவில் ஓர் ஏகபோக அதிகாரி போல அவர்களைக் கட்டியாண்டுவரும் இந்த முகநூல் பற்றிய, எதிரும் புதிருமான எண்ணங்களும் எதிர்பார்ப்புகளும் ஏராளமுள்ளன. உலகெலாம் பரவியிருக்கும் இந்த முகநூல், ஒரு களையா அல்லது பயன்மிகு பயிரா எனக் கண்டறிய முடியாதபடி, இன்று மனித இனத்தின் இன்றியமையாத அடிப்படை அடையாளமாக வேர்கொண்டுள்ளது. கூடப் பிறந்த தலையிடியுடன் வாழப் பழகிக் கொள்வது போல, அதன் அனுகூலங்களையும் பிரதிகூலங்களையும் அறிந்து, ஒட்டாமலும் வெட்டாமலும் நம்மில் பலரும் அதனுடன் வாழ்ந்து வருகிறோம். இந்நிலையில், நிலவுக்கும் ஓர் இருண்ட பக்கம் இருப்பதுபோல, முகநூலுக்கும் பாதகமான ஒரு பக்கம் உண்டென்ற உண்மையை உறுதிப்படுத்திக்கொள்வது நல்லதல்லவா?

அளவுகடந்த முகநூற் பாவனையால் விளையும் பாதகங்கள் பற்றி, துறைசார் வல்லுனர்கள் பலரும் அவ்வப்போது சில அபாய அறிவிப்புகளை விடுத்திருக்கின்றனர். குறிப்பாக, 'தொடர்ச்சியான முகநூல் பாவனை ஒருவரது நல்வாழ்வைச் சீரழிக்கிறது' என்று அது தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டுவரும் American Journal of Epidemiology தெரிவிக்கிறது. 'கவனத்தைக் கவரும் வகையிலான முகநூற் பதிவுகள், உண்மை வாழ்வின் நல்லனுபவங்களை அனுபவிக்கும் வாய்ப்பைப் பறித்துவிடுகின்றன' என 'When Likes Aren't Enough' எனும் நூலின் ஆசிரியர் டாக்டர் ரிம் ப்போனோ (Dr. Tim Bono) கூறுகிறார். 'பிறருடன் தொடர்பாடுதலும் பிணைப்பை ஏற்படுத்தலும் முக்கியம்தான். ஆனால் சதுரத் திரையில் நண்பர்களின் எண்ணிம முகங்களுடன் எப்போதுமே ஒட்டிக் கொண்டிருப்பதால் அவை சாத்தியப்படுவதில்லை. தகவல்கள் எமது கரங்களை இலகுவில் எட்டுவது என்னவோ உண்மையாயினும், முகநூலில் நாம் காணும் சில்லறைக் கவர்ச்சிகள் அத்தகவல்களிலிருந்து எமது கவனத்தைச் சுலபமாகக் களவாடிவிடுகின்றன. ஆவலை, பொறாமையைத்தூண்டி மகிழ்ச்சியின்மை மட்டுமன்றி, பதற்றம், தடுமாற்றம், கவலை, மனச்சோர்வு என்பவற்றைக் கையளித்துவிடுகின்றன. இவற்றால் மூளை சோர்ந்து, களைப்படைந்து விடுகிறது. மேலும், திரை உமிழும் ஒளியானது மெலரொனின் (Melatonin) எனும் ஓமோனின் சுரப்பைத் தடுக்கிறது. இது நித்திரையைக்குழப்புகிறது. இவை அனைத்தும் ஒன்றிணைந்து உடல்-உள ஆரோக்கியத்துக்குப் பங்கம் விளைவிக்கின்றன' என அவர் மேலும் விபரிக்கின்றார்.

> அளவுக்கதிகமாகத் தமது படங்களையும் பதிவுகளையும் முகநூலில் பகிர்ந்து, புளுகிச் சுயபுராணம் பாடுதல் உளநோயின் ஆரம்ப அறிகுறி என ஜேர்மன் பல்கலைக்கழக ஆய்வு ஒன்று கூறுகிறது.



முகநூலில் ஒருவர் பதிவிடும் அல்லது விரும்பும் செய்தி, கருத்து, கட்டுரை, படம், காணொளி என்பவற்றை வைத்து, அவரது இனம், மதம், மொழி, பாலினம், அரசியல் சார்புநிலை, புத்திசாலித்தனம், விருப்பு, வெறுப்பு, பலங்கள், பலவீனங்கள் என்பன உட்பட, அனைத்து குணாம்சங்களையும் ஆளுமையையும் கண்டறியலாம் என கேம்பிறிட்ஜ் பல்கலைக்கழக ஆய்வு ஒன்று கூறுகிறது. தனிமனிதர் ஒருவரின் முகநூற் செயற்பாடுகள் அனைத்தையும் அவரது சம்மதமின்றிப் பிறர் பார்க்கலாம் என்பதனால், தனிமனித சுதந்திரத்துக்கும் அந்தரங்கப் பாதுகாப்புக்கும் அது ஒரு பெருந்த சவாலாக அமையாலாம் எனவும் அந்த ஆய்வு அச்சம் தெரிவிக்கிறது. மேலும், அளவுக்கதிகமாகத் தமது படங்களையும் பதிவுகளையும் முகநூலில் பகிர்ந்து, புளுகிச் சுயபுராணம் பாடுதல் உளநோயின் ஆரம்ப அறிகுறி என ஜேர்மன் பல்கலைக்கழக ஆய்வு ஒன்று கூறுகிறது. இவற்றைப் பார்க்கும் ஏனையவர்களுக்கு இது வெறுப்பையும் பொறாமையையும் விரக்தியையும் ஏற்படுதுகின்றதென்று அந்த ஆய்வு மேலும் குறிப்பிடுகிறது.

உளநெருக்கடிகளால் துன்புற்றிருந்த நகைச்சுவையாளர் ஜூலியற் ப்பேர்ட்டன் (Juliette Burton) முகநூல் போன்ற சமூக ஊடகங்கள் தீங்கானவை என்கிறார். போலிமையும் போட்டித் தன்மையும் மிகுந்த பதிவுகளும் படங்களுமே அவற்றை ஆக்கிரமிக்கின்றன எனக் கூறும் அவர், உதவிகோரும் ஒருசில தருணங்கள் தவிர, வாழ்வின் உண்மையான துன்ப-துயரங்கள் கொண்ட தமது இருண்ட பக்கங்களை எவரும் அவற்றில் பதிவிடுவதில்லை என்றும் குறிப்பிடுகிறார். முகநூற் பாவனை என்பது fast food எனப்படும் துரித உணவை உட்கொள்ளும் உணர்வைத் தமக்கு ஏற்படுத்துவதாகவும், அது காரணம் தெரியாவகையில் தம்மை ஒரு குப்பைக் கூடையாக உணரத் தூண்டுவதாகவும் பிரித்தானிய முகநூலர் மைண்ட் சிம்று (Mind Cymru) கூறுகிறார்.

முகநூலின் முன்னாள் நிறைவேற்று அதிகாரி ஒருவர் அண்மையில் 'Slamming the Corporation' என்னும் தலைப்பில் ஆற்றிய சொற்பொழிவின் போது, 'சமூகம் செயற்படும் முறைமையை முகநூல் பாழடிக்கிறது' எனப் பகிரங்கமாகச் சாடினார். 'மக்களுக்கான கருத்தாடல் இல்லை, கூட்டுறவு இல்லை, உண்மைகள் இல்லை, உள்ளதெல்லாம் தவறான தகவல்கள்...' என இடித்துரைத்தார். இது போதாதென்று, முகநூல் பாவனையானது நிகற்ரீனுக்கு (nicotine) அடிமையாதாலுக்கு ஒப்பானதென்று Salesforce நிறுவனத்தின் முதன்மை நிறைவேற்று அதிகாரியான மார்க் ப்பெனியோஃப் (Mark Benioff) MSNBC செவ்வியில் குறிப்பிடுகிறார். குறிப்பாக, சிறுவர்கள் மீது முகநூல் ஏற்படுத்தும் பாதிப்புக் குறித்து வருத்தம் தெரிவித்திருக்கும் அவர், 'முகநூல் ஒருவகைச் சிகரெட். ஒரு கெட்ட பழக்கம். எமக்கு நல்லதல்ல. அதன் செயற்பாட்டை அரசாங்கம் கட்டுப்படுத்த வேண்டும்' என வலியுறுத்தி இருக்கிறார். இவை அனைத்திற்கும் மேலாக, பாவனையாளர்களின் உள ஆரோக்கியத்துக்குச் சமூக ஊடகம் நல்லதல்ல என்ற உண்மையை 2018 செப்டெம்பரில் முகநூல் நிறுவனமே ஒப்புக்கொண்டுள்ளது.

கட்டுப்பாடற்ற முகநூற் பாவனையால், பாரிய நேரவிரயத்துடன், சுயமதிப்பு, சக மனிதருடனான நேரடித்தொடர்பு, ஞாபக சக்தி, ஆழ்ந்த நித்திரை, கவனக்குவிப்பு, உளநலன் என்பன மோசமான பாதிப்புக்கு உள்ளாகின்றன என்பதற்கு இவர்களது வாக்குமூலங்கள் ஆதாரமளிக்கின்றன. கடந்த ஆண்டு 1000 சமூகவூடகப் பாவனையாளர்கள் மத்தியில் மேற்கொள்ளப்பட்ட கருத்துக்கணிப்பு ஒன்றில், 41 சதவீதமானோர் மேற்கூறப்பட்ட காரணங்களினால் உளவியல் பாதிப்புகளுக்கு உட்பட்டிருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது. இவற்றாலும், சில மனோவிகார முகநூலர்களின் மூர்க்கங்களாலும் மாரீச முகமூடித்தனங்களாலும் மனமுடைந்து 31 சதவீதத்தினர் இச்சமூகவூடகத்திலிருந்து வெளியேறத் தீர்மானித்திருப்பதாகவும் இதே கணிப்பிலிருந்து தெரியவந்துள்ளது.

இருப்பினும், மனித வரலாற்றில் முன்னரெப்போதும் இல்லாத வகையில் முகநூலால் உலக மக்கள் ஒருவரோடொருவர் பிணைக்கப்பட்டுள்ளனர் என்பது உண்மையே. ஆயினும் உண்மைச் செய்திகள், படங்கள், காட்சிகள் என அதில் அவர்கள் நம்புவன யாவுமே உண்மையானவையல்ல, நம்பிக்கைக்குரிய நட்புக்கள் போலக் காணப்படுபவை யாவுமே நல்ல நட்புக்களல்ல, அவற்றுள் பலவும் மனதைக் கவர்ந்திழுக்கும் காட்சி மாயைகள், தொல்லை தரும் தோற்ற மயக்கங்கள் எனும் யதார்த்தங்களை அவர்கள் அறிந்து வைத்திருக்கின்றார்களோ இல்லையோ முகநூலர்களின் எண்ணிக்கை மட்டும், 1.5 பில்லியனை எட்டியுள்ளதாக கடந்த ஆண்டு செப்ரெம்பரில் மேற்கொண்ட கணக்கெடுப்பு ஒன்று கூறுகிறது. முகநூலர்கள் குறித்த அந்தரங்கத் தகவற் பரிமாற்றம், உடல்-உள ஆரோக்கியப்பாதிப்பு, சில முகநூலர்களது தவறான பிரயோக முறைமை போன்றவற்றின் அடிப்படையில் அரசாங்கங்கள் கட்டுப்பாடுகளை விதித்தாலன்றி, முகநூலின் அபரிமிதமான பரம்பலைத் தடுப்பதற்கான சாத்தியங்கள் இல்லை என்பதையே இது சுட்டிக் காட்டுகிறது. இந்நிலையில், சட்டி சுட்டதடா, கைவிட்டதடா என எட்டி விலகி நிற்பதை விடுத்து, இதனை யார், எப்போது, எப்படிப் பயன்படுத்துவது என்பதில் கவனமாயிருந்தால் பயனடையவாய்ப்புண்டு. மதுவேயாயினும் அளவோடாயின், அதுவே மருந்தாகும் என்பதை முகநூலர்கள் மந்திரமாக மனதிற்கொண்டு பயனடைவரென நம்புவோமாக!

**உசாத்துணை:**

- *Sabrina Barr, Independent, 'Six ways social...'*
- *Robbie Savage, BBC, 'A whole new world'*
- *Laura Hensley, Global News, 'Unplugged: ...'*
- *Zara Morgan, BBC, 'Using Facebook...'*



navam.k@thaiveedu.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Mortgage **5 Year Rates:**

Fixed **3.44%**
Variable **2.95%**

**Private 1st Mortgage**
*6.99% - GTA*
*5.99% - Outside GTA*

**Lower Interest Rate**

**2nd Mortgage**
*Arranged in 3 Days*

**Lower Lender Fee**

***"Call me for a FREE Consult!"***

**PROFESSIONAL, RELIABLE & EXPERIENCED SERVICE**

LOKAN SUNDARAM AMP
Mortgage Broker
416-450-3984
www.lokanmortgage.com

MORTGAGE ALLIANCE



**Ceycan Transhipping Inc.**

**INTERNATIONAL FORWARDING & LOGISTICS**
**SOLE AGENTS FOR CEYLON SHIPPING LINES IN CANADA**



**PERSONAL EFFECTS**
SHIPMENTS BY SEA & AIR
**TO SRI LANKA**

**SRI LANKA'S**
Best Clearing Facilities in
**COLOMBO, KANDY & BATTICALOA**

**REGULAR**
AIR SHIPMENTS NOW
**AVAILABLE**

Vancouver:
Randy - 604-273-4911
Edmonton, Calgary:
Ryan – 778-231-2038
Montreal:
Gana - 514-573-0093
Ottawa:
Cash & Carry - 613-715-0588

For further information contact
**Kumar**
**905-673-9873**

**United Kingdom**
Atlas Shipping
430 High Rd, Willesden
London NW10 2HA
Tel:02084596633 / 02084596633
Mobile:07949143535

**Kandy**
Ceylon Shipping Lines
175 Parangantota Road,
Mawilmada, Kandy
Tel: (812) 234356/57/59

**Colombo**
Ceylon Shipping Lines Ltd
760, Dr. Danister De Silva Mawatha
Colombo - 09
Tel: (011) 2680301 - 308

**Batticaloa**
Ceylon Shipping Lines Ltd.
134 Main Street
Addalaichenai - 09
Tel: (067) 2277302

**1981 Boylen Road, Unit #5, Mississauga, Ontario L5S 1R9**
**Email: Ceycantrans@gmail.com web: ceycantranship.com**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துயர் பகிர்வு



**திருமதி மகேஸ்வரி பரமநாதன்**

அரியாலையை பிறப்பிடமாகக் கொண்ட திருமதி மகேஸ்வரி பரமநாதன் அவர்கள் பெப்பிரவரி 18, 2019 திங்கள்கிழமை அன்று கனடாவில் இயற்கை எய்தினார்.

அன்னார், காலம் சென்றவர்களான சதாசிவம் - பாக்கியம் இணையரின் புதல்வியும் காலம் சென்றவர்களான சின்னத்துரை - தங்கலட்சுமி இணையரின் மருமகளும் காலம் சென்ற சின்னத்துரை பரமநாதன் (தபால் இலாகா கணக்காய்வாளர்) அவர்களின் அன்பு மனைவியும் தயாளினி, ஸ்ரீஸ்கந்தன், ஸ்ரீரங்கன், ஸ்ரீதேவன், விமலினி, ஸ்ரீகணேசன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலம் சென்றவர்களான Dr. இராஜேஸ்வரி இராஜகாரியர், புவனேஸ்வரி துரைராஜா, சபாநடேசன், பரமேஸ்வரி ஆறுமுகம், Dr. சதானந்தன், பாக்கியநாதன், சரோஜினி துரைசிங்கம் மற்றும் திலகேஸ்வரி அருளம்பலம் ஆகியோரின் அன்பு சகோதரியும் ராஜேந்திரன், ரஞ்சனா, சிவமதி, தேவிகா, பாலகிருஷ்ணன், ஷாமினி ஆகியோரின் அன்பு மாமியாரும் திருக்குமரன், திருஷிகா, சிந்துஜா, தரிஷன், அபிராமி, பைரவி, பிரியன், கபிலன், ஸ்வரன், ஸ்வாதி, கவின், துகின், சைந்தவி மற்றும் நித்தியா, நிமல் ஆகியோரின் பாசமிகு பேத்தியும் ஏவா லக்ஸ்மியின் அன்பு பூட்டியும் ஆவர்.

அன்னாரின் இறுதி வணக்க நிகழ்வு பெப்பிரவரி 25 அன்று ரொறன்ரோவில் நடைபெற்றது.

| | |
|---|---|
| தயாளினி: | 1-416-792-8187 |
| ஸ்ரீஸ்கந்தன்: | 1-647-588-3179 |
| ஸ்ரீரங்கன்: | 1-416-319-2631 |
| ஸ்ரீதேவன்: | 1-905-799-7567 |
| விமலினி: | 1-647-933-7765 |
| ஸ்ரீகணேசன்: | 1-905-791-7958 |







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்போன்களின் மறுபக்கம்

- எஸ். பத்மநாதன் -

மனிதகுல வரலாற்றின் தகவல் தொடர்பு முறையில் மிகப் பெரிய சாதனையாகக் கருதப்படுவது செல்போன்களின் கண்டுபிடிப்பாகும். உலகின் எந்த மூலையில் இருந்தும் தகவல்களைப்பெறுவதற்கு மிகவும் எளிமையான கையடக்க சாதனமாக செல்போன் திகழ்கிறது. ஆனால் இத்தகைய சாதனையை நாம் கொண்டாடிக் கொண்டிருக்கும் வேளையில் செல்போன்களின் செயல்பாடுகளால் ஏற்படும் உடல்நல கேடுகள் பற்றி அச்சம் தரும் ஆய்வு முடிவுகள் வெளிவந்த வண்ணம் உள்ளன. பாதிப்பு ஏற்படுகிறது என்பதில் இருவேறு கருத்துக்கு இடமில்லை. ஆனால் பாதிப்பு எந்த அளவு என்பதிலேயே அபிப்பிராய பேதங்கள் நிலவுகின்றன.

செல்போன் பாவிக்காதவர்களையே காண முடியாத அளவுக்கு எல்லோர் கைகளிலும் இதனைப் பார்க்க முடிகிறது. நவீன தொழில்நுட்பம் என்றாலே கையடக்கத் தொலைபேசிதான் முன்னிற்கிறது. சந்தையில் நாளுக்கு நாள் புதுப்புது வசதிகளுடன் அவை உருவாக்கப்படுகின்றன. அவை நம் வாழ்வில் ஏறக்குறைய ஒரு அங்கமாகிவிட்டன. சுருங்கக் கூறின் நாம் இந்த செல்போன்களுக்கு அடிமையாகிப்போய் உள்ளோம். இதனால் உருவாகும் உளவியல் - உடலியல் பிரச்சினைகள் கணக்கற்றவை.

முக்கிய தொடர்புகளை ஏற்படுத்துவதற்கென்று ஆரம்பமான இத்தொலைபேசிகள் பல தேவைகளையும் பூர்த்தி செய்யும் smartphoneகளாக மாறியுள்ளன. உடனடித் தொடர்பாடல், நிதி சேகரிப்பு, பெற்றோர்களுடனான தொடர்பு, ஆபத்திலிருந்து தப்பித்தல், கல்வித்தேவை பூர்த்தி, படங்கள் அனுப்புதல் போன்ற பலவற்றிலும் இவையின் பங்களிப்பு அளவிடற்கரியவை. அவ்வப்போது பல விடயங்களைத் தெரிந்து கொள்வதற்கும் பேசுவதற்கும் இத்தொலைபேசிகளைப் பாவிப்பதில் தவறேதும் இல்லை. 'அளவுக்கு மீறினால் அமிர்தமும் நஞ்சு' என்பது போல அளவுக்கு அதிகமாக காலவரையறையின்றிப் பாவிப்பதில் தான் பிரச்சினையுள்ளது.

இருபத்திநான்கு மணிநேரமும் செல்போன்கள் எம்முடன் ஒட்டிக்கொண்டே வருகின்றன. காலையில் எம்மை விழிக்க செய்யும் அலாரத்தில் தொடங்கி, மணிக்கணக்கில் பேசுவது, வர்த்தகம், அரட்டை என நீண்டு, இரவில் தாலாட்டுப் பாடி எம்மை உறங்க செய்வது வரை செல்போன்கள் எம்முடன் உள்ளன.

இன்றைய உலகில் செல்போன் பாவனையாளர்களின் எண்ணிக்கை மிகவும் அதிகரித்தே வந்துள்ளது. ஒருவர் தினமும் 110 முறை செல்போன்களை சரி பார்க்கிறார். பாவனையாளர்களில் நான்கில் மூன்று பங்கினர் காலையில் எழுந்ததும் செல்போனைப் பார்வையிடுகிறார்கள். 61 சதவீத மானவர்கள் உறங்கும்போது செல்போன்களை அருகில் வைத்துக்கொண்டு உறங்குகிறார்கள். இந்தப் புள்ளி விபரங்களின் மூலம் உலகத்தில் எந்த அளவுக்கு செல்போன் பாவனை உள்ளது என்று தெரியவரலாம்.

அதீதமான செல்போன் பாவனையால் ஏற்படும் முக்கியமான உளவியல் பிரச்சினை பதற்றம் (anxiety) ஆகும். பொதுவாக 'செல்போன் அழைப்பு மணிக்காகவோ, WhatsApp போன்ற செயலிகளின் ஒலிகளுக்காகவோ பெரும்பாலானோரின் மனங்கள் ஏங்கிக் கிடக்கின்றன' என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. அழைப்பு ஒலிகள் குறிப்பிட்ட கால இடைவெளியில் வரவில்லையெனில் உடலுக்குள் பதற்றமான சூழ்நிலை உருவாகுவதாக ஆய்வுகள் கூறுகின்றன.

மதுபோதை போல இதுவும் ஒரு போதையாக உருமாறியுள்ளது. நித்திரையை குழப்புகின்றன. நாம் தூங்கினாலும் செல்போன்கள் விழித்திருக்கின்றன.

இரண்டாவது பிரச்சினை அடிமையாகிப் போதல்(addiction) ஆகும். காலை எழுந்ததும் எங்கே தொலைபேசி எனத் தேடுகிறோம். அதன் மீது எமக்கு ஒரு விபரீதமான காதல் ஏற்பட்டு விடுகிறது. ஒருவராலும் குறித்த அளவு நேரம் பேச முடிவதில்லை என்பதே உண்மையாகும். அதாவது பலர் இதில் பரவசமடைந்து போகிறார்கள். ஒரு சூதாட்டத்தில் பணம் போடுவது போலவே இதில் மனம் லயிக்கிறது.



செல்போனின் அதீத பாவனையின் காரணமாக மனஅழுத்தம் (stress) ஏற்பட வாய்ப்பு உள்ளதாகக் கருதப்படுகிறது. அதனைக் கையில் வைத்திருக்காது விட்டால் எதனையோ இழந்தது போலாகி விடுகிறது. தொலைந்து விட்டால் பொறுமையாக இருக்கமுடிவதில்லை. அந்த இடத்தில் பெரிய களேபரமே ஏற்பட்டு விடுகிறது. மனநிலை சமநிலையை இழந்துவிடுகிறது. மனஅழுத்தத்தின் தாக்கம், உளச்சோர்வு (depression) ஏற்பட வாய்ப்பளிக்கிறது.

ஒருவரது அதீத கைத்தொலைபேசி பாவனை அவரது ஆளுமை (personality) மாறுவதற்கு காரணமாகிறது. வேலைத்தளங்களிலும் வீடுகளிலும் இவர்களது செயற்பாடுகள் முற்றாக மாறி விடுகின்றன. மனநிலை மாறுதல்கள் (mood Dis-orders), நித்திரை குழப்பங்கள், அடிக்கடி இரவில் எழுந்து தொலைபேசியை சோதனையிடுவது, மாயக்காட்சிகளில் (hallucinations) சிக்குண்டு போவது, கழுத்து நோவினால் அவஸ்தைப்படுவது, கண்கள் வரண்டு கஷ்டப்படுவது, செல்போனின் கதிர் வீச்சு தாக்கத்திற்கு உட்படுவது, காதில் இரைச்சல் போன்ற பல்வேறு பிரச்சினைகள் எழ வாய்ப்புண்டு.

தற்போது டிஜிட்டல் உலகில் (digital world) நாம் வாழுகின்றோம். இதிலிருந்து விடுபடுவது மிகவும் கடினமே. செல்போன்கள் இல்லாது ஒரு நாளைக்கூட கழிக்க முடிவதில்லை. வீட்டில் வைத்து விட்டு வெளியேறினால் கவலை ஏற்படுகிறது. முக்கிய தகவலை பெறமுடியவில்லையே என்ற ஏக்கம் ஏற்படுகிறது. "ஏதாவது நடந்து விட்டதோ" என்ற எண்ணங்களில் அகப்படுகிறோம்.

செல்போன்களின் அதிகமான பாவனை எமது மூளையின் இரசாயன மாற்றங்களுக்குக் காரணமாகிறது. சில வேளைகளில் மூளைக்கலங்கள் பாதிப்புறலாம். இதனால் நாளடைவில் glioma என்னும் புற்றுநோய் ஏற்பட வாய்ப்புகள் உள்ளதாக மருத்துவர்கள் கருதுகின்றனர். இக்கருத்தினை International Journal of Oncology என்ற மருத்துவ இதழும் வலியுறுத்துகின்றது.

செல்போன்களால் ஏற்படும் இன்னொரு முக்கிய பாதிப்பு காதுகளுடன் தொடர்புள்ளது. அண்மைக்காலத்தில் காது கேளாதவர்கள் எண்ணிக்கை அதிகரிப்பதற்கும் செல்போன் பாவனைக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளதென அறிக்கைகள் கூறுகின்றன. செல்போன்களைக் கட்டுப்பாடு இல்லாமல் பயன்படுத்துவதனால் செவிப்புலன் நரம்புக்கழலை (acoustic neuroma) ஏற்படக்கூடும். தொடர்ந்து செல்போன் பாவிப்பதால். செவிப்பறை பாதிப்புற வாய்ப்புண்டு. காதுக்குள் பலவிதமான இரைச்சல்கள் எழலாம்.

காது மட்டுமல்ல கண்களும் பாதிப்புற வாய்ப்புண்டு. இரவில் இருட்டறைக்குள் செல்போன் வெளிச்சம் நேரடியாகக் கண்ணில் விழும்போது பார்வை சில நிமிடங்கள் மங்கிப் போகின்றது. செல்போன்களின் நீல வெளிச்சம் கண்களின் பல்வேறு பகுதிகளையும் ஒரேவேளையில் தாக்க வல்லது. செல்போன்களிலிருந்து வரும் கதிர் வீச்சு மறைமுகமாக கண்களை பாதிக்கலாம்.

செல்போன்களின் அதிகப்படியான பாவனை சிறவர்களின் அறிவுக்கூர்மையை மழுங்கடித்துவிடுகிறது. செல்போன்களை அதிகம் பாவித்த குழந்தைகளால் கடினமான கேள்விகளுக்கு விடையளிக்கமுடியவில்லை என்பது அவுஸ்திரேலியாவில் உள்ள Monash பல்கலைக்கழக ஆய்வின் முடிவாகும். 30 அரசுப் பள்ளிகளில் படிக்கும் 12 - 14 வயது பிள்ளைகளில் நடத்தப்பட்ட ஆய்வின் முடிவு இதுவாகும்.

செல்போன்கள் மூலம் தீமை தரும் நுண்ணுயிர்கள் சுமந்து செல்லப்படுகின்றன. வெளியே தெரியாமல் இந்த நுண்ணுயிர்கள் மூலம் பல நோய்கள் தொற்றலாம்.

செல்போன் பாவனையால் ஏற்படுகின்ற அழற்சி(inflammation) மூலம் பல தோல் நோய்கள் வருகின்றன என கருதப்படுகிறது. அண்மையில் மருத்துவ பிரிவில் mobile phone dermititis என்ற புதிய சொல் உருவாகியுள்ளது. செல்போனில் உள்ள நிக்கல் என்னும் உலோகம் தோலில் ஒவ்வாமைத் தாக்கங்களை ஏற்படுத்த வல்லதாகும்.

மருத்துவர்கள் பாவிக்கும் இன்னுமொரு சொல் 'செல்போன் முகம்' (cellphone face) என்பதாகும். எந்த பக்கம் செல்போன் வைத்து பாவிக்கிறோமோ அந்த பகுதிகளில் ஏற்படும் பிரச்சினைகளை இது குறிக்கிறது. கன்னம், காதுப் பகுதிகளில் சிவப்பு நிற அழற்சி ஏற்படலாம். குழந்தைகளும் செல்போனில் தமது பொழுதுகளை கழிப்பதால் அவர்களது மென்மையான மண்டையோடுகளும் பாதிப்புற வாய்ப்பு உள்ளதாக என்கின்றனர்.

செல்போன்களை வைத்திருக்கும் இடத்தாலும் பல பிரச்சினைகள் உள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது. குறிப்பாக ஆண்கள் தமது கால்சட்டைப் பொக்கெட்டுகளில் செல்போன்களை வைத்திருக்கும் வேளையில் அதிலிருந்து வெளிவரும் கதிர்வீச்சானது உயிரணுக்களின்(sperms) எண்ணிக்கையைக் குறைக்கிறது, உயிரணுக்களின் வடிவமைப்பு மாறி விடுகிறது, அதன் இயங்குதிறன் குறைந்து விடுகிறது எனப் பல ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

'செல்போன்களை அதிக நேரம் பாவிப்பதால் உடல்நலம் பதிக்கப்படும்' என்று குரல் கொடுத்தாலும் அதனைச் செவிமடுக்க இன்று எவரும் இல்லை. அவ்வாறு கூறுபவர் 'அறிவியலுக்கு எதிரானவர்' என்றே குற்றம் சாட்டப்படுவர். 'நான் 10 வருடங்களாக செல்போன் பாவிக்கிறேன் எனக்கு எதுவித பாதிப்பும் இல்லையே' என்று எதிர்வாதம் செய்பவர்களும் இருக்கிறார்கள். ஆனால் உடலில் ஏற்படும் மாறுதல்களை நாமே கவனித்திருப்போம். புற்றுநோய் மட்டும்தான் பாதிப்பு என்பதில்லை தலைவலி, எரிச்சல், சோர்வு, பதற்றம் எல்லாமே பாதிப்புகள் ஆகும்.

இத்தகைய பிரச்சினைகளிலிருந்து விடுபட சில செயல்பாடுகளை செய்ய வேண்டும். குறுகியகால முக்கிய செய்திகளைச் சொல்வதற்கு மட்டும் செல்போன்களைப் பயன்படுத்துதல், தரமான செல்போன்களைப் பாவித்தல், இடதுகாதுப் பக்கமாக போன்களை பாவித்தல், அடிக்கடி போன்களைத் துப்புரவுசெய்தல், வாகனம் ஓட்டும்போது போனில் பேசுவதைத் தவிர்த்தல், ஓய்வு நேரத்தில் போன்களுக்குப் பதிலாக நூல்களை படித்தல், கண்ட இடங்களில் போன்களை வைக்காது தவிர்த்தல், செல்போன்களை கொண்டு செல்லும் பொக்கெட்டுகளை கவனித்தல், இரவு வேளைகளில் பயன்பாட்டை தவிர்த்தல், படுக்கும்போது தலைமாட்டில் போன்களை வைக்காது விடுதல், வயது குறைந்த பிள்ளைகளின் செல்போன் பாவனையைக் கட்டுப்படுத்தல், தேவையற்ற facebook, WhatsApp தொடர்புகளைக்குறைத்தல், உணவு உண்ணும்போது செல்போன்களை தூரத்தில் வைத்திருத்தல்... போன்று, எதற்கு முக்கியத்துவம் வழங்க வேண்டும் என்பதனைத் தீர்மானித்தல் போன்ற பல நடவடிக்கைகள் உள்ளன.

செல்போன்கள் கொண்டு வந்துள்ள நன்மைகள் கணக்கற்றவை என்பதனை யாவரும் அறிவோம். அந்த நன்மைகள் நம்மை அழித்துக் கொள்ளாத சக்தி எம்மிடமே உள்ளது. செல்போன் பாவனையை முற்றாக நிறுத்தமுடியாது ஆனால் குறைக்க முடியும். எதிர்கால சந்ததியின் நன்மைக்காக இன்றே சில நல்ல நடவடிக்கைகளை எடுத்தல் சிறப்பாகும்.

***உசாத்துணை:***

- *Glioma https://en.wikipedia.org/wiki/Glioma*
- *Brain tumors on the rise in England, raising cell phone concerns*
- *https://www.cnn.com/2018/05/02/health/brain-tumors-cell-phones-study/index.html*
- *Acoustic neuroma https://microwavenews.com/uk-study-points-acoustic-neuroma*
- *Blue light and vision problems https://www.healthline.com/health-news/phone-may-be-damaging-your-eyes#1*
- *ACD https://www.medicaldaily.com/cell-phone-allergies-are-real-metals-found-handsets-can-lead-contact-dermatitis-face-and-ears-283726*
- *Cellphone face https://cocorubyskin.com.au/cell-phone-face-smartphone-face-phone-neck-ageing/*



*pathmanathan.s@thaiveedu.com*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வசந்தகால வீட்டுப் பராமரிப்பு
# (Spring - Home Maintenance)

**வீடும் விடியலும் - 153**

- வேலா சுப்ரமணியம் -

கடந்த காலக்கட்டுரைகளில் குறிப்பிட்டது போல் காலநிலைக்கேற்ற வகையில் வீட்டைப் பராமரித்து வந்தால் திடீரென ஏற்படும் பாரிய செலவுகளைத் தவிர்த்துக் கொள்ளலாம். அந்த வகையில் குளிர்காலம் முடிவடைந்து கோடை காலத்தை எதிர்பார்த்து நிற்கும் எங்களுக்கு வசந்த காலத்தில் எந்தவகையில் வீட்டைப் பராமரிக்கலாம் அல்லது கோடை காலத்திற்கு






தயார்ப்படுத்தலாம் என்பது பற்றி குறிப்பிடுவது பொருத்தமானது.

### மரத்தளம் - Deck

பொதுவாகக் குளிர்காலத்தில் தேங்கிக்கிடந்த பனிப்படிமானங்கள் கரையத் தொடங்கியதும் நீர், மரப்பலகைக்குள்ளேயோ அல்லது மரச் சட்டங்களுக்குள்ளேயோ உட்புகத் தொடங்கலாம். மரச்சட்டங்களில் உரிய எதிர்ப்புத் தன்மையற்றுப் போய்விட்டால் உட்புகும் நீரால் மரம் உரிய காலத்திற்கு முன்னர் உக்கிப் பழுதடைந்துவிடும். இக்காலத்தில் நீர்க்கறை, பொருமல் என்பவற்றை அவதானிப்பதன் ஊடாக கோடைகாலம் வரும்போது உரியமுறைப்படி நீர் எதிர்ப்புக்குரிய பூச்சுக்களை பூச (Water Resistent Paint) எம்மைத் தயார்ப்படுத்திக் கொள்ளலாம். அத்துடன் Mold, Moss போன்ற பங்கஸ் பிடிக்காமல் இருப்பதற்காக ஒருதடவை Power Washer உதவியுடன் கழுவியும்விடலாம்.

### குளிரூட்டி - Air conditoner

குளிரூட்டியைச் சுற்றி சருகுகள், குப்பை கூழங்கள் குவிந்திருக்க வாய்ப்பு உள்ளது. அவற்றைச் சுத்தப்படுத்துவதோடு குளிரூட்டியைச் சுற்றியுள்ள வலைப்பகுதியினை (Net) Garden hose மூலமோ அல்லது Vacum Cleaner இன் உதவியுடனோ, சுத்தம் செய்து காற்றோட்டம் தடைப்படாதவாறு குளிரூட்டி இயங்கக்கூடிய நிலையை உறுதி செய்தல் வேண்டும்.

### அத்திவாரம் - Foundation

பனிஉருகி கரைந்தோடும் காலப்பகுதியாக இக்காலம் விளங்குவதால் பொதுவாக நிலக்கீழ் அறையில் தண்ணீர் உட்புகும் இடர் இக்காலத்தில் தான் அதிகமாக இருக்கும் எனவே மயிரளவு (Hairline Crack) வெடிப்பினால் கூட தண்ணீர் உட்புகும் வாய்ப்பு இருப்பதால் நிலைமை மோசமாக முன்னர் சற்று கூர்ந்து அவதானித்தால் உரிய நடவடிக்கைகளை ஆரம்பத்திலேயே எடுத்துவிடமுடியும்.

### வாகனக் கொட்டகைக் கதவு

வாகனக் கொட்டகைக் கதவு திறப்பதற்குப் பொதுவாக மோட்டர்கள் பொருத்தப்பட்டிருக்கலாம். அதன் தொடர்பைத் துண்டித்து விட்டு கையால் கதவை ஒரு தடவை திறந்து பார்த்து கதவு தடைகளின்றி இலகுவாக திறந்து மூடுகிறதா என்பதை உறுதி செய்து கொள்ளுங்கள். தடைகள் இருந்தால் over head springஐ சரி செய்ய வேண்டிய தேவை இருக்கலாம். அத்துடன் உரிய முறையாக வேலை செய்கின்றனவா? என்பதையும் உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

### தண்ணீர் பீலிகள் - Gutters

அடைபட்டு இருக்கக்கூடிய பீலிகளை நன்கு சுத்தம் செய்து இலகுவில் நீர்வழிந்தோடும் தன்மையை உறுதி செய்தல் வேண்டும். அத்துடன் கீழ் நோக்கி விழும் குழாய்கள் (Downspout) உரிய முறையில் நீரை வெளியேற்றுகிறதா? என்பதையும் அவதானித்தல் நல்லது. முக்கியமாக அதன் அடியில் பொருத்தப்பட்டிருக்கும் Leader pipes அடைக்காதிருக்கின்றதா என்பதை உறுதி செய்வதோடு நீர் நேரடியாக அத்திவாரத்திற்கு அடியில் உட்புகாதவாறு பார்த்தக்கொள்ளல் வேண்டும். குறிப்பாக அத்திவாரத்தில் இருந்து 5 அடிக்கு வெளியே நீர் சென்றடையும் விதத்தில் அவை பொருத்தப்பட்டிருப்பது சாலவும் சிறந்தது.

### கூரை - Roof

Chimney, Skylightஐ அண்டிய பகுதிகளில் நீர்க்கசிவு ஏற்படலாம். இக்காலப்பகுதியில் Attic ஊடாக நீர்க்கசிவுக்கான அடையாளங்களை இலகுவாகக் கண்டுகொள்ளலாம். பொதுவாக 15-20 வருடங்களுக்கு கூரையில்



போடப்பட்டிருக்கும் Shingles நின்றுபிடிக்கும் என்றாலும் காற்று மற்றும் புறக்காரணிகளால் பழுதடைந்துள்ள அல்லது இடைவெளியாக உள்ளவற்றை பழுதுபார்ப்பது அவசியம்.

### மரங்கள்

வீட்டைச் சுற்றி மரங்கள் இருப்பது ஆரம்பத்தில் நன்றாகத்தான் இருக்கும். ஆனால் காலப்போக்கில் அதுவே பெரிய பிரச்சினை ஆகி விடும். வளர்ந்த மரங்கள் கூரையையோ, யன்னல்களையோ தாக்கி சேதங்களை உண்டு பண்ண வாய்ப்பு இருக்கின்றது. கொப்புக்கள் வளர்ந்து பாரம் ஏறமுதல் அவற்றை கத்தரிப்பதற்குரிய சிறந்த காலம் இதுவே. மரங்கள் அளவுக்கு அதிகமாக வளர்ந்திருந்தால் அதற்குரிய தொழில்சார் வல்லுனர்களை நாடுவதே சாலவும் சிறந்தது.

### வாகனப்பாதை - Driveway

வாகனப்பாதைக்கு குளிர்காலத்தில் உப்பால் குளிப்பாட்டி இருப்போம். இந்த வருடம் அவ்வளவாக இல்லாவிட்டாலும் போட்ட உப்பு தங்கி இருந்து அதற்குரிய பணியைச் (அரிப்பு) செய்து கொண்டே இருக்கும். Asphalt, Interlock, congrete என்று எந்தவகை வண்டிப் பாதையாக இருந்தாலும் இக்காலப் பகுதியில் Power washerஇன் உதவியுடன் முதலாவது வேலையாக வண்டிப்பாதையை நன்றாகக் கழுவி உப்பின் தன்மையை இல்லாது செய்தல் வேண்டும்.

குறிப்பாக Inter Lock உள்ளவர்கள் கல்லின் இடைவெளிகளில் பூண்டுகள் முளைப்பதை அவதானிக்கலாம். எனவே அவை முளைக்க முன்னர் அதனைத் தடுக்கக்கூடிய விதத்தில் உரிய மண்ணைப் போட்டு (Brush stone dust) பாதுகாக்கலாம். Congrete வாகனப்பாதையாக இருந்தால் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை யாவது அதனை Seal பண்ணத் தவறக்கூடாது. Asphalt வாகனப் பாதையாக இருந்தால் இருக்கக்கூடிய வெடிப்புகளை, அடைத்த பின்னர் நல்ல வெப்பமான காலநிலை வரும் போது இரண்டு வருடத்திற்கு ஒருமுறையாவது Seal பண்ணத் தயாராதல் வேண்டும்.

### கவனத்தில் கொள்ளவேண்டிய மேலும் சில...

- வெப்பமாக்கியுடன் பொருத்தப்பட்டிருக்கும் ஈரப்பதனாக்கியை (Cenral humidifier) முற்றாக நிறுத்தி விடுங்கள்.
- வெப்பமாக்கிக்கோ (Furnace), Fire placeக்கோ முதன்மை விளக்குகள் (Pilot Lamps) பொருத்தப்பட்டிருந்தால் அவற்றை நிறுத்தி விடலாம்.
- வெளிவளவிற்கோ அல்லது முன் வளவிற்கோ (Back Yard & Front Yard) போகும் குழாய்களின் நீரை நிறுத்தி இருந்தால் (Shut Off) அவற்றைத் திறந்துவிடலாம்.
- 3 மாத்திற்கு ஒருமுறை வெப்பமாக்கிக்குரிய வடிகட்டியை (Filters) மாற்றிவிடவேண்டும் என்ற அடிப்படையில் அதனையும் உறுதி செய்து கொள்ளுங்கள்.
- யன்னல்களுக்குரிய வலைகளை (Net)ச் சுத்தப்படுத்தி அல்லது அவசியம் ஏற்பட்டால் பிரதியீடு செய்து தயார்ப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.
- தண்ணீர் வெளியேற்றத்திற்குரிய வெளிப் புறப் பாதைகள் அடைபட்டிருந்தால் அவற்றை சுத்தம் செய்தல் வேண்டும்.
- பூக்கன்றுகள், காய்கறி வைப்பவர்கள் மண்ணைத் தயார் செய்து தேவை ஏற்பட்டால் பசளைகளைப் போட்டு தமது பணிகளை ஆரம்பிக்கலாம்.



velasubramaniam@thaiveedu.com

தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.

E-mail: info@thaiveedu.com
Fax: 416-849-0594
Tel: 416-646-3422




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# THANA INSURANCE INC

உங்கள் பிள்ளைகளின் பிரகாசமான எதிர்காலத்திற்கு இன்றே Thana Insurance Inc ல் முதலீடு செய்யுங்கள்.

உங்கள் குழந்தைகளின் எதிர்காலக் கல்விக்காக கனடிய அரசு இனாமாக வழங்கும் மானியத் தொகைகளை பெற்றிடுங்கள்

கனடிய அரசு முதலீட்டு தொகைக்கு 20 - 40% மானியமாகவும் ஊக்குவிப்பு தொகையாக ஆரம்பத்தில் 500 கனடியன் டொலர்களும் வருடாந்தம் 100 கனடியன் டொலர்களும் வழங்குகிறது.

இவற்றுடன் மேலதிகமாக எமது காப்புறுதி நிறுவனம் மட்டுமே 15 வீதத்தை வழங்குகிறது.
இந்த மானியங்களை 25 டொலர் முதலீட்டுடனேயே பெற ஆரம்பிக்கலாம்
உங்கள் பிள்ளை புலமைப்பரிசில் பெற்றாலோ மேற்படிப்பைத் தொடரா விட்டாலோ முதலீட்டுப் பணம் தாயிடம் கொடுக்கப்படும்.
திட்டம் முடிவடையும் போது உங்கள் முதலீட்டுக்கு 100 வீதம் உத்தரவாதம்.



Thana Manickavasagar
Insurance Broker
Cell : 416.728.5772
office : 416.519.3896
80 Nashdene Road #D218
Toronto ON M1V 5E4

THANA INSURANCE Inc.



வர்த்தக நிறுவனங்கள் வாங்க, விற்க

# Excellent plaza for Sale



**தரம் மிக்க நிறுவனங்கள் சிறந்த முதலீடு!**

முதன்மை வாய்ந்த இடம்,
பெருமளவு வாடிக்கையாளர்களை
உள்ளடக்கிய வணிகச் சுற்றாடல், அனைத்துப்
பொருட்களையும் கொண்ட உயர்வான
பராமரிப்பில் பேணப்பட்ட நிலையம்,
போதிய வாகனத் தரிப்பிட வசதி,
ரொறன்ரோவில் இருந்து
30 நிமிடத் தூரம் மட்டுமே.

RE/MAX ACE
REALTY INC. BROKERAGE
#3-1286 Kennedy Rd, Scarborough, ON M1P 2L5

**Cell: 416 880 8585**



416 270 1111

BASKARAN SINNADURAI
BROKER
Cell:416.880.8585
baskaran.toronto@hotmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலாவில் தரை இறங்கிய சாங் இ 4

- குரு அரவிந்தன் -

சீனா நாடு மிகவேகமாக விண்வெளி ஆய்வுகளில் முன்னேறிக் கொண்டு வருகின்றது என்பதற்கு சாங்-இ-4 என்ற விண்கலம் சந்திரனின் மறுபக்கத்தில் இறங்கி இருப்பதில் இருந்து அறிய முடிகின்றது. பூமியில் இருந்து பார்க்கும் போது நிலாவின் ஒரு பக்கம்தான் எங்களுக்கு எப்பொழுதும் தெரிகின்றது. இதுவரை அமெரிக்காவும் ரஷ்யாவும் பூமிக்குத் தெரியக்கூடிய பக்கத்திலேயே தமது ஆய்வுகளை மேற்கொண்டிருக்கின்றன. ஆனால் சீனா அதையும் கடந்து இருண்ட பகுதி என்று அழைக்கப்படும் மறுபக்கத்தில் வெற்றிகரமான ஜனவரி மாதம் 2ம் திகதி 2019 ஆண்டு தனது விண்கலத்தை இறக்கி இருக்கின்றது. சந்திரனின் இருண்ட பக்கம் என்று அந்தப் பக்கத்தைச் சொன்னாலும் அங்கேயும் சூரியனின் வெளிச்சம் பட்டுக்கொண்டுதான் இருக்கின்றது. இங்கிருந்து பார்க்கும் போது நிலாவின் மறுபக்கம் பூமிக்குத் தெரியாததால் அதை நாங்கள்தான் இருண்ட பக்கம் என்கிறோம்.

டிசம்பர் மாதம் 7ம் திகதி 2018ம் ஆண்டு சாங்-இ-4 என்ற இந்த விண்கலம் சீனாவில் இருந்து சந்திரனை நோக்கி அனுப்பப்பட்டது. இதற்கு முன்பாக சாங்-இ-1 என்ற விண்கலம் 2007ம் ஆண்டும், சாங்-இ-2 என்ற விண்கலம் 2010ம் ஆண்டும், சாங்-இ-3 என்ற வின்கலம் 2013ம் ஆண்டும் விண்வெளிக்குச் சீனாவால் அனுப்பப்பட்டன. அதன் தொடர்ச்சியாகவே தற்போது சாங்-இ-4 என்ற விண்கலம் அனுப்பப்பட்டதால், அந்த விண்கலம் சந்திரனின் மறுபக்கத் தரையைத்தொட்டிருக்கின்றது. இதற்கெல்லாம் முன்னோடியான விண்வெளிப் பயணத்தில் முதலாவது விண்கலம் முன்பு சோவியத்யூனியன் என்று அழைக்கப்பட்ட ரஷ்யா நாட்டால் 1957ம் ஆண்டு விண்வெளிக்கு அனுப்பப்பட்டு விண்வெளிப் பயணத்தை முதன்முதலாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. 1959ம் ஆண்டு சோவியத் ரஷ்யாவின் லூனா - 2 சந்திரனின் தரையைத்தொட்டது. அமெரிக்காவின் அப்பலோ 11ல் சென்ற நீல் ஆம்ஸ்ரோங் தான் 1969ம் ஆண்டு யூலை மாதம் 20ம் திகதி முதலில் நிலாவில் கால் பதித்தவர் என்ற பெயரைத் தட்டிக்கொண்டார். ஜோன் ஜங் என்பவரும் ஜெனி சேனன் என்பவரும் இரண்டு தடவைகள் சென்று சந்திரனில் காலடி பதித்தார்கள். லோவெல் என்பவரும் இரண்டு தடவைகள் சந்திரனுக்குச் சென்றாலும் அவர் சந்திரனின் தரையில் இறங்கவில்லை. 1957ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட விண்வெளிப் பயணத்தின் வரலாறு சுமார் அறுபது ஆண்டு காலத்தைக் கடந்திருக்கின்றது.

நிலாவின் மறுபக்கத்தில் இருந்து தொடர்பு கொள்வதற்கு இதுவரை சில தடைகள் இருந்ததால், விண்வெளிப் பயணத்தை மேற்கொண்ட எந்தவொரு நாடும் அதை நிவர்த்தி செய்ய முயற்சி செய்யவில்லை. அப்பலோ விண்கலத்தில் சென்ற ஆராய்ச்சியாளர்கள் இப்படித்தான் நிலாவின் மறுபக்கம் சென்றபோது அவர்களுடனான தொடர்பு சிறிது நேரம் துண்டிக்கப்பட்டிருந்தது. சில விண்கலங்கள் நிலாவின் மறுபகுதியில் தொடர்பு துண்டிக்கப்பட்டதால் மோதி உடைந்திருக்கின்றன. இதையெல்லாம் ஆராய்ந்த சீனா, இருண்ட பக்கத்தில் இருந்து பூமியோடு தொடர்பு கொள்ளக் கூடிய வழிமுறைகளை ஆராய்ந்து அதைத் தற்போது செயற்படுத்துகின்றது. சென்ற மே மாதம் 2018ம் ஆண்டு பூமிக்கும் நிலாவுக்கும் தொடர்புகளை ஏற்படுத்தக் கூடிய வகையில் Queqiao என்ற துணைக் கோள் ஒன்றைச் சீனா விண்வெளிக்கு அனுப்பி இருந்தது. அந்த துணைக்கோள் தான் சாங்-இ-4 பாதுகாப்பாகத் தரை இறங்குவதற்கு பெரிதும் உதவியாக இருந்தது. பூமிக்கும் நிலவின் மறுபக்கத்திற்கும் தொடர்பை ஏற்படுத்திக் கொடுத்தது ஏற்கனவே விண்வெளிக்கு அனுப்பப்பட்ட Queqiao என்ற துணைக்கோள்தான்!

காலாகாலமாய் எங்கள் கண்ணில் படும் சந்திரனை நாங்கள் பல பெயர்களைச் சொல்லி அழைத்திருக்கிறோம். முக்கியமாகச் சங்க இலக்கிய காலம் தொடக்கம் கவிஞர்கள் சந்திரனுக்குப் பல பெயர்களைச் சூடியிருக்கிறார்கள். வண்ணநிலா, வட்ட நிலா, முழுநிலா, வெண்ணிலா, வெண்மதி, வான்நிலா, வான்மதி, தேன்நிலா, பிரபாகரன், களங்கன், ஆத்திரேயன், இரவோன், திங்கள், அம்புலி, சசி, சீதபானு, மதி, நிலவு, வராளி, யாமபதி என்றெல்லாம் இதுபோன்ற பல்வேறு பெயர்களில் எங்கள் கவிஞர்களாலும், இலக்கிய ஆர்வலர்களாலும் இதுவரை காலமும் வர்ணிக்கப்பட்டிருக்கின்றது இந்த நிலா. வயதைச்சொல்லக்கூடாதுதான், ஆனாலும் இந்த இளைய நிலாவின் வயதை எடுத்துப் பார்த்தால் நீங்கள் நம்பமாட்டீர்கள். இளமை மாறாது 4.5 பில்லியன் வருடங்களுக்கு மேலாகத் தன் காதலனான பூமியைச் சுற்றி வருகின்றது.

நிலாவின் தென் துருவத்தில் உள்ள Von Kármán crater என்ற மிகப் பெரிய பள்ளத்தாக்கை ஆராயும் நோக்கமும் இந்த சாங்-இ-4ன் திட்டத்தில் ஒன்றாக இருந்ததால் இப்பகுதியிலேயே விண்கலம் தரை இறக்கப்பட்டது. இப்பகுதியில் இதுவரை பாதுகாப்பாக இறங்கிய விண்கலம் இது ஒன்றுதான். சுமார் 1500 மைல்கள் அகலமான இந்தப் பள்ளத்தாக்கை ஆராய்வதன் மூலம் சந்திரனின் உள்பகுதி எப்படி உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிந்து கொள்ள முடியும். சூரிய குடும்பத்தில் அதிகம் ஆழமான பள்ளத்தாக்கும் இது வாகத்தான் இருக்கும் என்று நம்புகின்றார்கள். இவற்றை எல்லாம் தெளிவாகப் படம் பிடிப்பதற்கு ஏற்கனவே சாங் - 3ல் பொருத்தப்பட்டிருந்த சில கருவிகளை எடுத்துத் திரும்பவும் சாங் - 4 க்கும் பாவித்திருக்கிறார்கள். சந்திரனில் தாழ்வான வானொலி அலைகளை பாவிக்கமுடியுமா என்பதையும் Queqiao என்ற ஏற்கனவே விண்வெளியில் இருக்கும் விண்கலம் மூலம் பரீட்சித்துப் பார்க்க இருக்கின்றார்கள். இதைப் பற்றிய குறிப்பை ஆங்கிலத்தில் தருகின்றேன்:

At 9:26 p.m. ET on January 2, 2019, the Chinese Chang'e-4 lander touched down on the far side of the moon, the first spacecraft ever to do so. Nearly ten hours later, Chang'e-4 deployed its Yutu 2 ('Jade Rabbit 2') rover into the Von Kármán crater, part of the lunar far side's vast South Pole-Aitken Basin. the South Pole-Aitken basin, the largest impact basin on the moon and one of the largest in the solar system. The distance from its depths to the tops of the highest surrounding peaks is nearly 10 miles.

இந்த சாங்-இ-4 தன்னுடன் உருளைக்கிழங்கு விதைகள், சில தாவர விதைகள், பட்டாம்பூச்சி முட்டைகள் போன்றவற்றையும் நிலவில் பரீட்சித்துப் பார்ப்பதற்காகக் கொண்டு சென்றிருக்கின்றது. சாங்-இ-4ன் தரை இறங்கியும் அதனுடன் இணைந்த யூரு-2 என்ற ரோபோவும் (Lander and Yutu - 2) சேர்ந்து மேலும் சில ஆக்க பூர்வமான நடவடிக்கைகளை நிலவில் மேற்கொள்ளத் தொடங்கியுள்ளன.

விண்கலத்தில் இருந்து 2,600 இறாத்தல் நிறையுள்ள பொருட்கள் ரோபோ அடங்கலாக நிலவின் மறுபக்கத்தில் இறக்கப்பட்டன. ஆறு சில்லுகள் பூட்டப்பட்ட 4.9 அடி நீளமும், 3.3அடி அகலமும், 3.3 அடி உயரமும் கொண்ட இந்த ரோபோவின் நிறை 310 இறாத்தலாகும். நிலவின் நீண்ட இரவின்போது யந்திரங்கள் உறைந்து போகாமல் இருக்கச் சோலார் சக்தியின் உதவியுடன் சூடாக்கும் கருவிகளும் இதில் இணைக்கப்பட்டுள்ளன. மூன்று மாதங்களுக்குப் பயன்படக்கூடிய வகையில் இந்த ரோபோ அமைக்கப்பட்டாலும், அதைவிடக் கூடிய காலம் பயன்படுத்தும் திட்டத்தைப் பொறியியலாளர்கள் நடைமுறைப்படுத்த இருக்கிறார்கள். சூரிய சக்தியான சோலார் சக்தியைச் சேமிக்கும் நோக்கத்தோடு யூரு-2 ரோபோ சில நாட்கள் உறங்கு நிலையில் வைக்கப்பட்டு இருந்தது. ஜனவரி 29ம் திகதி 2019ம் ஆண்டு மீண்டும் தனது செயற்பாடுகளை ரோபோ ஆரம்பித்து, சுமார் 390 அடி தூரத்தை ரோபோ கடந்திருந்தது. மீண்டும் நிலவின் நீண்ட இரவு காரணமாக பெப்ரவரி மாதம் 11ம் திகதி உறங்கு நிலைக்குச் சென்ற ரோபோ மீண்டும் பெப்ரவரி 28ம் திகதி இயங்கு நிலைக்கு வந்தது.



அடுத்து சாங்-இ-5 என்ற விண்கலனை அனுப்ப இருக்கிறார்கள். இதை அனுப்பும் போது நிலாவில் இருந்து ஆராய்ச்சிக்காக சில பொருட்களை ரோபோவின் துணையுடன் கொண்டுவரக் கூடியதாக செய்ய இருக்கிறார்கள். அது வெற்றி அளித்தால் ரோபோ மூலம் மாதிரி பொருட்களைச் சேகரித்துப் பூமிக்குக் கொண்டு வந்த இரண்டாவது நாடாக சீனா கணிக்கப்படும். ஏற்கனவே ரஷ்யா இதைச் சாதித்திருக்கின்றது. அமெரிக்கா நிலவுக்கு அனுப்பிய மனிதர்கள் மூலம் 1969ம் ஆண்டு மாதிரி பொருட்களைச் சேகரித்தது. 2020ம் ஆண்டு சந்திரனில் இறங்கி அங்கே மனிதர்கள் தங்கக் கூடியதாக முகாம்களை அமைக்கவும் சீனா தன்னைத் தயார்படுத்துகின்றது. சுருங்கச் சொன்னால் இடப்பெயர்வு, புலம்பெயர்வு எல்லாம் கடந்து அடுத்த கட்டமான கிரகப்பெயர்வு நடக்கப்போகின்றது. இவ்வளவு காலமும் சாத்திரத்தில் நடந்த கிரகங்களின் இடப்பெயர்ச்சி எல்லாம் இனி நிஜமாகவே நடக்கப்போகின்றது. எனவே காத்திருந்து பார்ப்போம்.

*உசாத்துணை:*

- *https://spacenews.com/change-4-spacecraft-enter-lunar-nighttime-china*



*kuruaravindan@thaiveedu.com*

*தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம்.*
*விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான*
*பாதையில் இட்டுச்செல்லும்.*

*E-mail: info@thaiveedu.com*
*Fax: 416-849-0594 Tel: 416-646-3422*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகலவிதமான மோட்கேஜ் தேவைகளுக்கும்...

## என்னை முதலில் அழையுங்கள்

வருமான உத்தரவாதம் இல்லாமலே பெற்றுக் கொடுக்கப்படும்

# 416.873.5780

## உங்கள் தேவை இவற்றில் ஒன்றா?

- வீட்டு விலை உயர்வை சாதகமாக்கி உங்களின் கடன்களில் இருந்து விடுபடவேண்டுமா?
- வீட்டின் Equity யைப் பயன்படுத்தி உயர் வட்டியில் உள்ள கடனில் இருந்து விடுபட வேண்டுமா?
- வீட்டுத்திருத்த வேலைக்கு தேவையான பணத்தை வீட்டில் இருந்து எடுக்க வேண்டுமா?
- சொந்த தேவைக்காக (Proposal Payment, பிள்ளைகளின் படிப்பு, அரங்கேற்றம், சுற்றுலா) பணத்தை வீட்டில் இருந்து எடுக்க வேண்டுமா?
- பிறிதொரு வீட்டை வாங்க தேவையான முற்பணத்தை வீட்டில் இருந்து எடுக்க வேண்டுமா?
- உயர் வட்டியில் உள்ள மோட்கேஜ்ஜை குறைந்தவட்டியிலுள்ள மோட்கேஜ்ஜாக மாற்ற வேண்டுமா?
- சொந்த தொழில் செய்பவர்கள் வீடுவாங்க மோட்கேஜ் எடுக்க வேண்டுமா?
- புதிதாக கனடாவுக்கு வந்தவர்கள் மோட்கேஜ் எடுக்க வேண்டுமா?
- வெளிநாட்டில் உள்ளவர்கள் கனடாவில் வீடுவாங்க மோட்கேஜ் எடுக்க வேண்டுமா?
- பெற்றோர் பிள்ளைகளுக்கு வீட்டை மாற்றி மோட்கேஜ் எடுக்க வேண்டுமா?
- கிறடிற் பிரச்சினை (Consumer Proposal, Late payments, previous bankruptcy) ஆனால் வீடு வாங்க மோட்கேஜ் எடுக்க வேண்டுமா?
- அவசர தேவைக்கு 2nd Mortgage எடுக்க வேண்டுமா?

* some conditions apply

KAPITAL CARE MORTGAGE INC. Lic-12623

**Kethes**

**Sivasubramaniyam AMP**

*Mortgage Agent - (Lic # M08006105)*



5200 Finch Ave. East, Unit 306, Toronto, ON. M1S 4Z5


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை

- முருகேசு பாக்கியநாதன் -

## அறிமுகம்:
## அமெரிக்க மிஷனரி வருகை:

1813ம் ஆண்டில் இலங்கை வந்த அமெரிக்கன் மிஷனரிமாரை 'புதிய தேவாலயங்கள் எதுவும் திறக்கக்கூடாது. டச்சுக்காரர் கைவிட்டுப்போன தேவாலயங்களையே பயன்படுத்தவேண்டும்' என்ற கட்டுப்பாட்டோடு, பிரித்தானிய அரசால் அவர்கள் யாழ் மாவட்டத்திற்கு மட்டும் அனுப்பப்பட்டார்கள். அவர்களும் ஆனால், அதே காலப்பகுதியில் வந்த வெஸ்லியன் மிஷனரியினரோ இலங்கையின் பல பாகங்களுக்கும் அனுப்பப்பட்டார்கள். அவர்கள் பிரித்தானிய ஆட்சியாளர்களது மதம் என்றபடியால் சுதந்திரமாக பரவலாக அனுமதிக்கப்பட்டார்கள்.

அமெரிக்கன் மிஷனரிமார், தெல்லிப்பளையில் ஏற்கவே டச்சுக்காரரால் கைவிடப்பட்ட தேவாலயம் ஒன்றைத் தெரிவுசெய்து அதனைப் புனரமைத்து, தமது சமய நடவடிக்கைகளை அங்கிருந்தே ஆரம்பித்தனர். அதேவேளை 1816ம் ஆண்டு தெல்லிப்பளையில் தமது முதலாவது பாடசாலையை தொடங்கினர். இதுவே காலப்போக்கில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி என்று அழைக்கப்பட்டது.

அமெரிக்கன் மிஷனரியினரால் தொடங்கப்பட்ட பாடசாலைகள்:

1816ல் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி
1820ல் உடுவில் மகளிர் கல்லூரி
1836ல் மானிப்பாய் மெமோறியல் கல்லூரி
1852ல் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி
1866ல் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி
1871ல் வட்டுக்கோட்டை யாழ்பாணக் கல்லூரி
1875ல் சாவகச்சேரி றிபேக் கல்லூரி
1892ல் அச்சுவேலி மத்திய கல்லூரி

அமெரிக்கன் மிஷனரியினர் பாரிய கல்வி நிறுவனங்களை நிறுவியதோடல்லாமல் நூற்றுக் கணக்கான 5ம் வகுப்பு மற்றும் 8ம் வகுப்புக்குட்பட்ட பாடசாலைகளை கிராமங்கள் தோறும் நிறுவினர். இவர்களால் யாழ் மாவட்டத்தில் மூன்றாவது பாடசாலையாக நிறுவப்பட்டதே மானிப்பாய் மிஷன் பாடசாலை அல்லது மானிப்பாய் ஸ்ராண்டட் பாடசாலை என்ற பெயருடன் மானிப்பாய் தேவாலயத்தின் வளவுக்குள் ஒரு பகுதியில் இயங்கிய பாடசாலையாகும். இதே வளாகத்தில் 1848ம் ஆண்டே 'கிறீன் மெமோறியல் வைத்தியசாலை'யும், 'வைத்தியக் கல்லூரி'யும் நிறுவப்பட்டது. பல ஆண்டுகளின் பின் 'மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை' - 'மானிப்பாய் மெமோறியல் கல்லூரி' என்று பாடசாலையின் பெயர் மாற்றப்பட்டது. அமெரிக்கர்கள் இங்கு ஞாபகார்த்தமாகவே மெமோறியல் என்ற பெயர் வைத்தியசாலைக்கும், பாடசாலைக்கும் சூட்டப்பட்டிருக்கவேண்டும். அத்தோடு கல்விச்சேவையின் ஞாபகார்த்தமாக இப்பாடசாலை நிறுவபட்டதனால் அதனை மானிபாய், ஞாபகார்த்த ஆங்கில பாடசாலை என அழைத்திருக்கலாம். இதற்கான விளக்கம் எமக்குக் கிடைத்த எந்த ஆவணங்களிலும் காணப்படவில்லை. ஆரம்ப காலங்களில் ஆங்கில மொழி மூலம் கல்வி போதிக்கப்பட்ட பாடசாலைகளில் இதுவும் முன்னோடியானது.

அமரர் வேலாயுதர் என்பவரே 1836ல் பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட போது மிஷனரி மாருக்கு உறுதுணையாக இருந்து ஆரம்பித்து வைத்தார். இதன் காரணமாகக அவரே தலைமை ஆசிரியராகவும் தனி ஒரு ஆசிரியராகவும் இருந்தார். அப்போது 7 பிள்ளைகள் பாடசாலையில் கல்வி கற்றார்கள். இப் பாடசாலையானது வேலாயுதர் பாடசாலை என மக்களால் அழைக்கப்பட்டது. இவர் 1847 வரை 11 வருடங்கள் பாடசாலையை வழிநடத்தினார். (இது பற்றிய மேலதிக தகவல்கள் 'கல்வி கண்திறந்த கோவில்கள்' பாகம் 1 நூலில் வாசித்தறிய முடியும்.) வேலாயுதர் காலத்திற்குப் பின்பு 1848ம் ஆண்டு திரு பீ. திருவிளங்கம் என்பவர் பாடசாலையைப் பொறுப்பெடுத்துத் தொடர்ந்து நடத்தலானார். அவரது காலத்தில் இது திருவிளங்கம் பாடசாலை என்று மக்களால் அழைக்கப்பட்டது. 1864 தொடக்கம் 1871 வரை அமரர் பொன்னையா ஸ்றோங் அவர்களால் பாடசாலை நிர்வகிக்கப்பட்டு வரவே, வழமைபோல் இப்பாடசாலை 'ஸ்றோங் பாடசாலை' என்று மக்களால் அழைக்கப்பட்டது. மேலே குறிப்பிட்ட மூவரது காலத்திலும் பாடசாலையில் பெருமளவில் முன்னேற்றம் காணப்படவில்லை.

### பேஜ் குடும்பமே நிறுவனராகக் கொள்ளப்பட்டது:

இதன் காரணமாக கிறீன் மெமோறியல் வைத்தியசாலை அமைந்துள்ள வளவின் ஒரு பகுதிக்கு பாடசாலை இடம் மாற்றப்பட்டது. அமரர் வைரவநாதர் பேஜ் அவர்கள் 1872 -1881 வரை தலைமை ஆசிரியராகவிருந்து பாடசாலையை நடத்தி வந்தார். இக்காலத்தில் இதனை 'மத்திய பாடசாலை' என்றும், 'பேஜ் பாடசாலை' என்றும் அழைத்தனர். இதேவேளை வைரவநாதர் பாடசாலையும் தொடர்ந்து நடைபெற்று வந்தது. வைத்தியசாலையின் இரு எல்லையிலும் இரண்டு பாடசாலைகளும் இயங்கியவந்தது. 1900ம் ஆண்டு அமரர் ஏ.எம்.நத்தானியல் அவர்களது தலைமையில் இரண்டு பாடசாலைகளும் 'மெமோறியல் ஆங்கில பாடசாலை' என்ற பெயரில் ஒன்றிணைக்கப்பட்டது. வட-இலங்கையில் ஆங்கிலம் போதித்த தொன்மையான கல்லூரிகளில் இதுவும் ஒன்றாகும். இதிலிருந்து மெமோறியலின் ஸ்தாபகராக வைரவநாதர் பேஜ் அவர்களே கொள்ளப்படுகிறார். பாடசாலை வளர்ச்சிக்கு அவரது குடும்பத்தினர் பல உதவிகளைச் செய்தார்கள். வைரவநாதர் பேஜ் அவர்களின் மகனே அமரர் ஏ. அதிசயரட்ணம் பேஜ் அவர்களாவர்.



அமரர் ஏ.அதிசயரட்ணம் பேஜ்



இவர் இலங்கையின் செல்வந்தர்களில் ஒருவராவர், ஆங்கிலேயர்களில் கொழும்பு கோட்டையில் உள்ள மாபெரும் வியாபார நிறுவனங்களான கார்கில்ஸ், மில்லர்ஸ் நிறுவனங்களை ஆங்கிலேயர்களிடமிருந்து வாங்கி அதன் உரிமையாளராகி நடத்தி வந்தார். அதன்போது 'சிலோன் தியேட்டர்ஸ்' சினிமா பட விநியோக நிறுவனத்தை உருவாக்கி நடத்தி இலங்கை முழுவதும் சினிமா தியேட்டர்களை நிறுவினார். அதனைத் தொடர்ந்து பம்பலப்பிட்டியில் மெஜெஸ்ரிக் தியேட்டர் இருந்த இடத்தில் மெஜெஸ்ரிக் சிற்றி என்னும் ஒரு பல்பொருள் அங்காடியை (300 கடைகளுக்கு மேல்) நிறுவினார். அவர்கள் பல கிளைகளையுடைய சொந்த வங்கியையும் நிறுவியுள்ளனர். இன்று அதியரட்ணம் பேஜ் அவர்கள் இறந்துவிட்டார். தற்போது அவரது பிள்ளைகள் நடத்தி வருகிறார்கள். இவர்கள் மானிப்பாய் மொறியலுக்கும், மானிப்பாய் இந்துக்கல்லூரிக்கும் பல உதவி செய்கிறார்கள்.

மெமோறியல் ஆங்கிலப் பாடசாலைக்கு முகாமையாளர்களாக அமெரிக்கர்களான அமரர் ஸ்கொட், அமரர் பிக்நெல் பாதிரியார், அமரர் பங்கர், அமரர் புக்வோல்டர் ஆகியோர் கடமையாற்றியுள்ளார்கள்.

வைரவநாதன் பேஜ் அவர்களைத்தொடர்ந்து 1882 - 1889 வரை அமரர் ரீ. அருணாசலம் அவர்களும், 1889 - 1900 வரை அமரர் ஏ.எம். நத்தானியல் தலைமையிலும் பாடசாலை இயங்கியது.

### பாடசாலையின் ஆரம்பத்தில் தலைமை வகித்த ஆசிரியர்கள்:

1836 - 1847 அமரர் ஈ.வேலாயுதர்
1848 - 1864 அமரர் பீ.திருவிளங் கம்.
1864-1871 அமரர் பொன்னையா ஸ்றோங்
1872 - 1881 அமரர் வைரவநாதர் பேஜ்
1882 - 1889 அமரர் ரீ.அருணாசலம்
1889 - 1900 அமரர் ஏ.எம். நத்தானியல்

1900 ஆண்டிலிருந்து பாடசாலை மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை என்ற பெயருடன் தரம் உயர்த்தப்பட்டு ஓர் அதிபரின் நிர்வாகத்தின்கீழ் வருகின்றது. முதலதவது அதிபராக அமரர் கறோல் விஸ்வநாதபிள்ளை அவர்கள் நியமிக்கப்படுகின்றார். இவர் பற்றிக்கோட்டா செமினரியில் இருந்து சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு மேல்படிப்பிற்காக அனுப்

தொடர்தல் 58ம் பக்கம்




நிலையான சொத்துக்களை வாங்க, விற்க அழைக்க வேண்டிய
உங்கள் வீடு விற்பனை முகவர் சுகுமாரன் சின்னையா (சுகு)
ROYAL DE MONTRÉAL 2010 INC
4372, Papineau, Montréal, Qc, H2H1T5
Sugumaran Sinniah
Chartered Real Estate Broker
திருப்தியான இல்லம்
ஆனந்தமான வாழ்க்கையின் அடிப்படை!
Direct : 514.299.3186
email: seranvib@hotmail.com Office : 514.529.0454 Fax : 514.525.4557


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

An Ontario Secondary Private School Registered Under the Ministry of Education

# Delta Academy Inc.

## Offers the Following OSSD Credit Courses

Our goal is not the quantity of students but quality of education. We ensure that the students are trained to work independently and be prepared to the next grade level with the help of our highly qualified and experienced teachers.



BSID # 667561

| Grade 10 | |
|---|---|
| English | ENG2D |
| Principle of mathematics | MPM2D |
| Science | SNC2D |
| **Grade 11** | |
| English | ENG3U |
| Functions | MCR3U |
| Biology | SBI3U |
| Chemistry | SCH3U |
| Physics | SPH3U |
| Accounting | BAF3M |
| Economics | CIA3U |
| **Grade12** | |
| English | ENG4U |
| Advanced Functions | MHF4U |
| Calculus and Vectors | MCV4U |
| Data Management | MDM4U |
| Biology | SBI4U |
| Chemistry | SCH4U |
| Physics | SPH4U |
| Accounting | BAT4M |
| Economics | CIA4U |

ART COURSES

| Grade 10 | |
|---|---|
| Tamil | LITBD1 |
| Vocal | |
| Violin | |
| Veena | AMU20 |
| Piano Keyboard | |
| Dance | ATI201 |
| Miruthangam | AMP20 |
| **Grade 11** | |
| Tamil | LITCU1 |
| Vocal | |
| Violin | |
| Veena | AMU3M |
| Piano Keyboard | |
| Dance | ATI3M1 |
| Miruthangam | AMP3M |
| **Grade 12** | |
| Tamil | LITDU1 |
| Vocal | |
| Violin | |
| Veena | AMU4M |
| Piano Keyboard | |
| Dance | ATI4M1 |
| Miruthangam | AMP4M |

**Classes begins on**
**February, July, September**
**Register with us early as the space is limited.**
**All courses are 110 hours.**
**Course fee is $500 (Including registration )**

KINDERGARTEN TO GRADE 12
# TUTORING & HOMEWORK HELP

Special Classes For:

- Functions
- Physics
- Advanced Function
- English
- Chemistry
- Calculus & Vectors

Evening and weekend classes available
Qualified and experienced teachers to help your children to do better

**416.751.2011**
**deltaacademyinc@hotmail.com**
**1160 Birchmount Road, Unit 1B, Scarborough ON M1P 2B8**

# மானிப்பாய்...

**57ம் பக்கத் தொடர்ச்சி...**

பப்பட்டு அப்பல்கலைக்கழகத்தில் சித்தியெய்திய மாணாக்கராவர். அக்காலத்தில் சென்னைப் பல்கலைக்கழகத்தில் சித்தியெய்திய முதலாமவர் சி.டபிள்யூ.தாமோதரம்பிள்ளை அவர்கள். இவர் அங்கே முதல் வகுப்பில் தேறிய முதல் மாணவராவர். அடுத்தவர் திரு.கறோல் விசுவநாதபிள்ளை பீ.ஏ அவர்களாகும் இவர் அதே காலத்தில் தேறிய இரண்டாமவர் ஆவர். இவர்கள் சென்னைப் பல்கலைக் கழகம் தொடங்கப்பட்டபோது இலங்கையில் இருந்து சென்று அங்குள்ள மாணவர்களைப் பின்தள்ளிச் சித்தியெய்திய முதலாமவர்களாகும். அதன் பின்பு கறோல் விஸ்வநாதபிள்ளை அவர்கள் வட்டுக்கோட்டைக்குத் திரும்பினார். யாழ்பாணக் கல்லூரியில் பட்டதாரி மாணவர்களுக்கு விரிவுரையாற்றினார். சி.டபிள்யு. தாமோதரம் பிள்ளை அவர்கள் இந்தியாவிலேயே தங்கி பல பதவிகளை வகித்தார். அத்தோடு செல்லரித்துப் போயிருந்த சங்ககால ஏட்டுச் சுவடிகளைத் தேடியெடுத்து, அதனை ஒழுங்காக்கி, ஒப்பு நோக்கி 'கலித் தொகை'யை பதிப்பிட்டு வெளியிட்டு, சங்ககால நூலை பொதுமக்கள் படிக்க வழிசெய்தார். இவரின் பின்பே டாக்டர் உ.வே. சாமிநாதையர் இவ்வழியைப் பின்பற்றி இவ்வாறாக சங்க நூல்களை எடுத்துப் பதிப்பித்திருக்கிறார். இவரது முதல் பதிப்பாகிய சீவகசிந்தாமணிக்கு தாமோதரம்பிள்ளை அவர்களே உதவி செய்ததாக சாமிநாதையரே தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

## அதிபர்கள்:

1900 - 1911 திரு கறோல் விஸ்வநாதபிள்ளை
1911 - 1919 திரு எட்மண்ட் பிட்ச்
1919 - 1926 திரு ஸ்காடர் மாணிக்கவாசக
1926 - 1931 திரு ரி.ஜி. தோமஸ்
1931 - 1936 திரு ஜே.எஸ். நவரட்ணம்
1937 - 1941 திரு எஸ்.பி. இராஜரட்ணம்
1941 - 1960 திரு எஸ்.வி.அழகரட்ணம்
1961 - 1964 திரு ஜே.வி.தம்பிநாயகம்
1964 - 1966 திரு ஜே.எம்.ஜி. சாமுவேல்
1966 - 1970 திரு வி.எச்.சம்பந்தர்
1971 - 1971 திரு டப்பிள்யு.ஜி.அன்னப்பா
1971 - 1975 திரு கே.கைலாயநாதன்
1975 - 1978 திரு கே.வைத்தியநாத சர்மா
1978 - 1980 திருமதி பி.சிவானந்தராஜன்
1980 - 1983 திரு வி.சுந்தரதாஸ்
1983 - 1989 திரு வி.பொன்னுத்துரை
1989 - 1996 திரு ஏ.எம்.அருணாசலம்
1996 - 1998 திருமதி சி.யோகேஸ்வரன்
1998 - 1999 திரு ஏ.எம்.அருணாசலம்
1999 - 2000 திருமதி சி.யோகேஸ்வரன்
2000 - 2004 திரு ஏ.எம்.அருணாசலம்
2004 - 2010 திருமதி வி.சண்முகரட்ணம்
2011 - 2011 திரு எஸ். ஜெயவீரசிங்கம்
2011 - 2013 திரு என். சிவகடாட்சம்
2013 - 2015 திரு ரி.மாதவன்
2015 - - திரு ஏ.பேரின்பநாயகம்

## பாடசாலையின் சில முக்கிய மைமிற்கற்கள்:

- 1836 - வேலாயுதர் பாடசாலை
- 1848 - திருவிளங்கம் பாடசாலை
- 1864 - ஸ்றோங் பாடசாலை
- 1872 - பேஜ் பாடசாலை
- 1900 - வேலாயுதர் பாடசாலையும் பேஜ் பாடசாலையும் ஒன்றாக்கப்பட்டு 'மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை' என்ற பெயரோடு ஆரம்பிக் கப்பட்டது.
- 1941 - திரு எஸ்.வி. அழகரட்ணம் அவர்கள் அதிபராகப் பொறுப்பேற்று 1960 வரை 19 வருடங்கள் தொடர்ச்சியாக இப்பாடசாலையில் மிக நீண்ட காலம் அதிபராகக் கடமையாற்றியவராவார். இவரது காலத்தைப் பாடசாலையின் பொற்காலம் என்பர்
- 1942 - பாடசாலையை புதிய இடத்தில் நிறுவுவதற்கு மானிப்பாயைச் சேர்ந்த ஒரு பரோபுகாரியான அரியம் அக்கா அல்லது அரியரட்ணம் குடும்பம் மன முவந்து இரண்டரை ஏக்கர் காணியை பாடசாலைக்கென நன்கொடையாக வழங்கினார்கள்.
- 1944 - சிரேஷ்ட பாடசாலை தராதரப் பத்திர வகுப்பு (S.S.C) தொடங்கப்பட்டது.
- 1946 - தற்போது பாடசாலை இருக்கும் வளாகத்திற்கு மாற்றப்பட்டது. அன்றைய நாளையே 'நிறுவனர் தினமாக' பாடசாலை கொண்டாடி வருகின்றது.
- 1947 - அழகரட்ணம் மண்டபம்: ஒரு நிரந்தர மண்டபம் எட்டு வகுப்பறைகளுடன் சேர்த்து கட்டிமுடிக்கப்பட்டது.
- 1948 - கீழ்ப் பிரிவு பாடசாலைக்கான கட்டடம் கட்டிமுடிக்கப்பட்டது.
- 1952 - தற்போது உள்ள விளையாட்டு மைதானம் திரு. நிச்சட் என்னும் அன்பரிடம் 100 வருடக் குத்தொகைக்குப் பெறப்பட்டது.
- 1954 - முதலாவது கல்லூரிச் சஞ்சிகை 'The Memorial Magazine' வெளியிடப்பட்டது. அதன் ஆசிரியர்களாக திரு ஆர். ஞானசம்பந்தன், திரு எஸ். சின்னத்தம்பி ஆகியோர் கடமையாற்றினர்.
- 1960 - 'Page Block' என்னும் கட்டடம் திரு. ஏ. அதிசயரட்ணம் பேஜ் குடும்பத்தினால் கட்டிக்கொடுக்கப்பட்டது.
- 1961 - பாடசாலைகளை அரசாங்கம் தேசிய உடமையாக்கியது. இதிலிருந்து அமெரிக்க மிஷனின் முகாமை நீங்கியது.
- 1964 - பாடசாலையில் இந்து மாணவர் மன்றம் அங்குரார்ப்பணம் செய்து வைக் கப்பட்டது.
- 1967 - இரண்டாவது பாடசாலை சஞ்சிகை வெளியிடப்பட்டது. ஆசிரியர்களாக திரு பி.ஆர்.அரியபூசணம் அவர்களும் திரு ஏ.ஆர். ஜெயநாயகம் அவர்களும் இருந்தனர்.
- 1961 - சங்கீத வித்வான் திரு ஞான சம்பந்தக் குருக்கள் ஐயாக்கண்ணு தேசிகர் அவர்களால் பாடசாலைக் கீதம் இயற்றப்பட்டு அவராலேயே இசையமைக்கப்பட்டது.
- 1968 - மானிப்பாய் மெமோறியல் கல்லூரி இந்துமன்றம் 1968ல் தொடங்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து 'நடேசர் கோவில்' கட்டப்பட்டது.
- 1978 - ஒன்பது மாணவர்களுடன் ஜி.சி.ஈ (உயாதரம்) வகுப்பு தொடங்கப்பட்டது.
- 1985 - திரு வீ. பொன்னுத்துரை அதிபர் அவர்கள் காலத்தில் அதிபர் சுந்தரதாஸ் நினைவுக் கட்டடம் கட்டப்பட்டது.
- 1986 - 150வது வருட பூர்த்தி நினைவாக 3வது மெமோறியல் சஞ்சிகை வெளியிடப்பட்டது.
- 1998 - பாடசாலை திரு. ஞானசிகாமணி அன்னப்பா ஞாபகார்த்த நூலகம் திறந்து வைக்கப்பட்டது.
- 1999 - பாடசாலை அபிவிருத்திச் சங்கமும், பழையமாணவர் சங்கமும் சேர்ந்து 4 பரப்புக்காணியை வாங்கிக் கொடுத்தார்கள்.
- 2001 - இரண்டு மாடிக் கட்டடத்திற்கான அத்திவாரம் போடப்பட்டது.
- 2016 - பாடசாலை 180 வருடத்தைப் பூர்த்தி செய்தது. நிறுவனர் தினமும் அன்றைய தினம் பாடசாலைப் பரிச ளிப்பு விழாவும் கொண்டாடப்பட்டது. புதியதாகக் கட்டப்பட்ட ஒரு கட்டடத்திற்கும் பேஜ் கட்டடம் எனப் பெயர் சூட்டப்பட்டது.

***உசாத்துணை:***
• மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை - வரலாற்றுப் பதிவுகள் - அக்டோபர் 2018



*packiyanathan.m@thaiveedu.com*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோட்கேஜ்

புதிய, முதல் தரம் வீடு வாங்குவோருக்கான மோட்கேஜ்,
1ஆம், 2ஆம், 3ஆம், Bridge, Private மோட்கேஜ்
சுய தொழில் புரிவோருக்கான மோட்கேஜ்
பழுதடைந்த கிரடிற் உள்ளவர்களுக்கான மோட்கேஜ்
குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கான மோட்கேஜ்



# MORTGAGE NESAN
## 416-908-5656

**Residential / Commercial / Industrial / Investment Properties**

- 1st, 2nd and 3rd Mortgages
- Refinance
- Secured Line of Credit
- New House Commitment, Pre-approval
- Home Equity Loan

## 1st Mortgage ('A' lender) Majaor, Under write Banks

| Mortgage Amount | Weekly | Bi Weekly | Semi Month | Month |
|---|---|---|---|---|
| 698,000 | 659.62 | 1319.25 | 1429.19 | 2858.37 |
| 546,000 | 515.98 | 1031.96 | 1117.96 | 2235.92 |

## 1st Mortgage ('B' lender) Under write Banks, Trust, Cridit Union

| Mortgage Amount | Weekly | Bi Weekly | Semi Month | Month |
|---|---|---|---|---|
| 698,000 | 765.04 | 1530.08 | 1657.59 | 3315.17 |
| 546,000 | 598.44 | 1196.88 | 1296.62 | 2593.24 |

## Private Mortgage ('C' lender) Private lender

| Mortgage Amount | Weekly | Bi Weekly | Semi Month | Month |
|---|---|---|---|---|
| 698,000 | 1059.81 | 2119.62 | 2296.26 | 4592.52 |

## 2nd Mortgage ('D' lender) Private lender

| Mortgage Amount | Weekly | Bi Weekly | Semi Month | Month |
|---|---|---|---|---|
| 98,000 | 179.15 | 358.29 | 388.15 | 776.30 |

## 3rd Mortgage ('E' lender) Private lender

| Mortgage Amount | Weekly | Bi Weekly | Semi Month | Month |
|---|---|---|---|---|
| 49,000 | 113.72 | 227.43 | 246.39 | 492.77 |

## Secure Line of Credit & Loan

| Mortgage Amount | Secure Line of Credit | Home Equity Loan |
|---|---|---|
| 225,000 | 1005.95 / per month | 1276.51 / per month |

MORTGAGE ALLIANCE
Thavanesan Subra
Independently Owned and Operated
Brokerage # 10530

1585 Markham Rd, Unit # 407,
Toronto, ON. M1B 2W1
www. nesan.ca
mortgage@nesan.ca

SUBRA MORTGAGE SOLUTIONS INC.
Office: 1-844-878-2721
Fax: 647-351-3099

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "பா. அ. ஜயகரன் கதைகள்"

## சிறுகதைத் தொகுப்பு வெளியீடும் உரைகளும்




March 16 2019 6:00 P.M

சனிக்கிழமை 16-03-2019
மாலை 6:00 மணி

Scarborough Village CRC
3600, Kingston Road (@ Markham)
Scarborough, ON.
M1M 1R9

## வாழும் தமிழ்

March 16 2019 4:00 P.M

புத்தகக் கண்காட்சியும்
நூல் விற்பனையும்

மாலை 4:00 மணி
தொடக்கம்
இரவு 8:00 மணி
வரை

காலம்

TAMIL RESOURCE CENTRE
தமிழ் வளத்துறைவள நிலையம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்!!



# Income Tax

## Augustine & Associates

25 Years Canadian Experience

" Rapid,Accurate & Affordable Service."

(Quebec, Ontario & Other Provinces)

Personal
Business
Corporate
GST,HST & QST
Bookkeeping
Payroll
T4 & T4A
Rental Releve 31

EFILE




**Wimal Augustine**
ON: 416 617 6735
QC: 514 279 7138
Toll: 1 800 668 9048



YOUR CHOICE IN
# REAL ESTATE

Jesmine J Wimalendran
647.871.1921

Wimal Augustine
416.617.6735

www.propertyrealtors.ca



HomeLife/Future
Realty Inc., Brokerage. Independently Owned And Operated
Office: 905.201.9977


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோழிப் பொரியல் மன்னன்

- குமார் புனிதவேல் -

இந்த மன்னனின் படங்களை உலகின் மூலை, முடுக்குகள் எங்கும் காணலாம். அவர் கென்டக்கி கோழிப் பொரியல் (Kentuky Fried Chicken) நிறுவனத்தின் முன்னைய உரிமையாளர் கேணல் ஹாலன்ட் டேவிட் சான்டர்ஸ் ஆவர். அவருடைய படத்தை கடை முகப்பில் மட்டுமல்ல ஒவ்வொரு கோழிப் பொரியல் பெட்டியிலும் காணலாம். இவருடைய வாழ்க்கை மனிதருக்கு ஒரு முன் மாதிரி ஆகும். அதனால் அதை உங்களுடன் பகிரலாம் என எண்ணுகிறேன்.

ஹாலன்ட் டேவிட் சான்டர்ஸ் 1890ம் ஆண்டு செப்டம்பர் 9ம் திகதி ஐக்கிய அமெரிக்காவின் இன்டியானா மாநிலத்தில் ஒரு சாதாரணமான குடும்பத்தில் பிறந்தார். சிறு தோட்டம் ஒன்றினை இன்டியானாவில் பராமரித்து வந்த இவரது தந்தை 1895ம் ஆண்டில் மகனுக்கு ஐந்து வயதாக இருக்கும் வேளை இறந்துபோனார். குடும்பத்தின் வறுமைக்கு ஈடுகொடுக்க தாய் தக்காளியைத் தகர டப்பாக்களில் அடைக்கும் தொழிற்சாலை ஒன்றில் வேலை செய்யத் தொடங்கினார். இந்த நிலையில் தன் இளைய சகோதரர்களைப் பராமரிக்கும் பொறுப்பு சான்டர்ஸிடம் வந்தது. அவர்களுக்கு உணவு சமைப்பதுகூட சான்டர்ஸின் கடமையாகியது.

வறுமை தொடர்ந்து உறுத்தவே தனது படிப்பை ஏழாம் வகுப்புடன் நிறுத்தி விட்டுத் தொழில் தேடிச் சென்றார் சான்டர்ஸ். தன் வாழ்க்கைப் போராட்டத்தில் பல தொழில்களில் முயன்று முன்னுக்கு வர முயன்றார். குதிரை வண்டிகளுக்கு வர்ணம் பூசுபவர், டிராம் வண்டி நடத்துனர், காப்புறுதி விற்பனையாளர், புகைவண்டிக்கு நிலக்கரி போடுபவர், இரும்புப் பட்டறை உதவியாளன், புகைவண்டிகளில் சிகரெட் சாம்பல் துப்பரவு செய்பவர், ஒகையோ ஆற்றில் கட்டுமரம்(ferry) செலுத்துபவர், கார் டயர் விற்பனையாளர், பெற்றோல் நிலைய நடத்துனர், பிள்ளைப்பேற்றிற்கு அனுசரணையாளர் (midwife) எனப் பல்வேறு தொழில்களைச் செய்தார். வாழ்க்கையில் பல தடைகளை எதிர்கொண்டவர் சான்டர்ஸ். இந்த வேலைதான் செய்வேன் எனக் கூறாது எந்தத் தொழிலையும் செய்யத் தயாராக இருந்தார்.

1902ம் ஆண்டில், சான்டர்ஸின் பன்னிரண்டாவது வயதில் அவர் தாயார் மறுமணம் செய்துகொண்டார். தாயை மணந்துகொண்ட சிறிய தந்தையுடன் சான்டர்சுக்கு நல்ல உறவு இருக்கவில்லை. தாயின் அனுமதியுடன் வீட்டை விட்டு வெளியேறி தனது மாமனாருடன் வாழத் தொடங்கினார்.

1906ம் ஆண்டு, சான்டர்ஸ் தனது பதினாறாவது வயதில், வயதை கூட்டிக் கூறி அமெரிக்க ராணுவத்தில் இணைந்து கொண்டார். அத்தருணத்தில் அவர் கியூபாவில் சேவை ஆற்றியுள்ளர். 1907ல் ராணுவத்திலிருந்து விலகினார். 1909ம் ஆண்டில் Norfolk and Western Railwayயில் சேவை செய்கையில் ஜோசஃபின் கிங் என்ற பெண்ணைக் காதலித்துத் திருமணம் செய்துகொண்டார்.

இளம் வயதில் வறுமை காரணமாகப் பொய் கூறி ராணுவத்தில் சேர்ந்த சான்டர்ஸ் ஒரு முன் கோபியும் கூட. சக தொழிலாளருடன் சண்டை பிடித்த காரணத்துக்காக ரயில்வே வேலையில் இருந்து நீக்கப்பட்டார்.

ஆனால் எப்போதும் தான் முன்னேற வேண்டும் எனும் குறிக்கோள் உடையவராய் இருந்தார். புகையிரத கம்பெனியில் வேலை செய்யும் வேளையில் சட்டக்கல்வியைப் பயின்றார். ஆனால் அவரது சட்ட வல்லுனர் தொழிலும் இடையினிலேயே நின்று விட்டது காரணம் அங்கும் அவர் சண்டை பிடித்தமையே.

பின்னடைவுக்குப் பின் பின்னடைவைச் சந்திக்க இவர் தனது குடும்பத்துடன் தன் தாய் வீட்டிற்கு குடி புகுந்தார். இக்காலத்தில் ஒரு காப்புறுதி விற்பனையாளராக தொழில் செய்யமுற்பட்டார். ஆனால் அந்த வேலையும் நின்று விட்டது. கீழ்ப்படிவின்மையால் அவர் காப்புறுதி விற்பனை தொழிலிருந்து விலக்கப்பட்டார்.






1920ம் ஆண்டில் பயணப் படகோட்டும் (ferry service) தொழில் ஆரம்பித்தார். இந்தத் தொழிலிலும் அவர் நெடுங்காலம் நிலைக்கவில்லை. படகையும் உரிமைகளையும் விற்று, பெற்ற பணத்தைக்கொண்டு விளக்கு தயாரிக்கும் நிறுவனத்தைத்தொடங்கினார். இக்காலத்தில் இன்னொரு நிறுவனம் விளக்குகளைத் தயாரித்துக் கடனுக்கு விற்க ஆரம்பித்தது. இதனால் சான்டர்ஸின் முயற்சி தோல்வி அடைந்தது.

சான்டர்ஸ் தனது நாற்பதாவது வயதில் ஒரு பெற்றோல் நிலையத்தில் கோழிப் பொரியல் வியாபாரத்தை ஆரம்பித்தார். தனது கோழிப் பொரியலை விளம்பரப் படுத்தும் வேளையில், தனது போட்டிப் பொரியல் வியாபாரியுடன் ஏற்பட்ட வாக்குவாதம் இறுதியில் துப்பாக்கி முனையில் தீர்க்கப்படும் துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது. இதனால் இந்த முயற்சியும் குறையில் முடிந்தது.

1935ம் ஆண்டில் கென்டக்கி மாநில ஆளுனர் ரூபி லஃபூன் இவருக்கு கென்டக்கி கேணல் எனும் பட்டத்தை வழங்கினார். இது ஒரு கௌரவபட்டமே அல்லாமல் யுத்த முனையில் வீரதீர சாகசம் புரிந்ததற்காக வழங்கப்படவில்லை.

யூலை 1939ல் சான்டர்ஸ் வட கரோலினாவில் ஒரு பயணியர் விடுதியையும் உணவகத்தையும் வாங்கினார். ஆனால் அது தீக்கிரையாகி முதலையும் இழந்தார். 1942ல் இவ்விடுதியை விற்றார். 1940ல் (pressure frying)அமுக்கமுறையில் கோழி பொரிக்கும் செயல்முறையைக் கண்டுபிடித்தார். 1947ம் ஆண்டு மனைவியிடம் இருந்து விவாகரத்து பெற்றுக்கொண்டார்.

1952ல் அவரது ஒரே வருமானமாக அரசாங்கப் 'படி'யான மாதம் 105 டொலர் மட்டுமே கிடைத்தது. இந்த நிலையில்தான் முதன்முதல் கென்டக்கி கோழிப் பொரியலின் செய்முறையை பீட் ஹார்மனுக்குக் கொடுத்தார். பீட் ஒரு உணவுச்சாலையை ஊட்டா மாநிலத்தில் நடத்தி வந்திருந்தார். அமுக்கநிலையில் பொரிக்கப்பட்ட கோழி பெரும் வரவேற்பைப் பெற்றது. ஆனால் அவர்கள் வியாபாரம் 75 வீதத்தினால் அதிகரித்தது. விளம்பரச் சுவரொட்டிகளுக்கு வர்ணம் தீட்ட டொன் அன்டர்சன் என்பவரை ஹாமன் வேலைக்கமர்த்தி இருந்தார். 'Kentucky Fried Chicken' எனும் பெயரைச்சூட்டிய பெருமை டொன் அன்டர்சனைச் சாரும்.

சான்டர்ஸ் தனது இரண்டாவது மனைவி க்ளோடியாவுடன் நாட்டின் பல பகுதிகளுக்கும் பயணித்து தனது இரகசிய கோழிப் பொரியல் செய்முறையை நல்ல விலைக்கு விற்க முற்பட்டார்.

1950ல் அவர் கென்டக்கி கேணலாக மீள் பிரகடனப்படுத்தப்பட்ட பின் அதற்கேற்றவாறு கறுப்பு நிறத்தில் ஆடை அணிய ஆரம்பித்தார். தாடி வளர்க்க ஆரம்பித்தார். பிற்காலத்தில் முழுமையாக வெண்ணிற ஆடைகளை மட்டுமே அணிந்தார். தன்னைக் கேணல் என்று அழைத்துக்கொண்டார். மற்றவர்களும் அவ்வாறே அழைக்க வேண்டும் என்று விரும்பினார். அவருடன் பணி புரிந்தவர்கள் முதலில் நகைத்தாலும் பிற்காலத்தில் மிகுந்த மதிப்புடன் அவரைக் கேணல் என்றே அழைத்தார்கள்.

1964வது வருடத்தில் தனது 73வது வயதில் Kentucky Fried Chicken ஸ்தாபனத்தை அவர் விற்கும்போது உலகில் 600 கிளைகள் இருந்தன. அறுபதாவது வயதில் அரசாங்கப் 'படி'யான 105 டொலரில் ஆரம்பித்த வியாபாரம் பதின்மூன்று வருடங்களின் பின் இரண்டு மில்லியன் டொலர்களுக்கு விற்கப்பட்டது.
யாராவது உங்களைப் பார்த்து, அறுபதாவது வயதில் முதுமை வந்துவிட்டது, ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள் என்றால்... திருப்பி அவர்களிடம் கூறுங்கள் எனக்கு அனுபவம் வந்து விட்டது. இனி ஆட்டத்தை ஆரம்பிப்போம் என்று.

சான்டர்ஸ் தனது வியாபாரத்தை விற்ற பின்பும் அதில் ஈடுபாட்டுடன் வாழ்ந்து வந்தார். தான் கற்பித்தபடி பொரிக்காத கோழிப் பொரியலை தனது பெயரில் விற்றதாக வழக்கு வேறு தொடுத்தார். முதியோர்களுக்கு மட்டுமல்ல இளையோருக்கும் அவர் ஒரு முன்மாதிரி என்பதால் அவர் பற்றி எழுத முன்வந்தேன்.

கேணல் சான்டர்ஸ் வள்ளுவரின் 619வது குறளுக்கு நல்ல முன் மாதிரி ஆவர்.

*தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன்*
*மெய்வருத்தக் கூலி தரும்*

எனவே நாமும் தளராது முயற்சி செய்வோம்.

கேணல் சான்டர்ஸ், கென்டக்கியில் 1980ம் ஆண்டு இறந்தார். அடுத்த முறை நீங்கள் கோழிப்பொரியல் சாப்பிடுகையில் கட்டாயமாக சான்டர்ஸ் ஞாபகம் உங்களுக்கு வரும் என நம்புகிறேன்.

***உசாத்துணை:***
- *https://en.wikipedia.org/wiki/Colonel_Sanders#1930%E2%80%931952:_Later_career*



kumar.punithavel@thaiveedu.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடகவியலாளர் படுகொலைகளும் நீதி விசாரணையும்

- அதிரன் -

ஊடகவியலாளர்களின் படுகொலைகளுக்கான நீதி கோரல்களும் காணாமல் ஆக்கப்பட்டுள்ள ஊடகவியலாளர்களின் விசாரணைகளை வலியுறுத்தும் போராட்டங்கள் 2019லும் தோற்றுத்தான் போகுமா?.

படுகொலை செய்யப்பட்ட தமிழ் ஊடகவியலாளர்களுக்கு மட்டுமல்ல சிங்கள, முஸ்லிம் ஊடகவியலாளர்களுக்காகவும் சர்வதேச விசாரணை கோரி ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்ட வண்ணமிருக்கின்றன. கொழும்பு, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு எனப் பலவிடங்களிலும் தொடரும் போராட்டங்களில் 'மனு சமர்ப்பித்தல்களுக்கு ஏதாவது பிரயோசனம் இருக்குமா?' என்ற கேள்வியை மாத்திரமே நாம் கேட்டுக் கொள்ள முடியும்.

ஜனவரி மாதத்தில் இரண்டு எதிர்ப்புப் போராட்டங்கள் கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் நடைபெற்றிருந்தன. இவற்றில் முதலில் நடைபெற்ற போராட்டம் சுதந்திர நீதிக்கான அரங்கத்தின் ஏற்பாட்டில் வடக்கு கிழக்கு தெற்கு ஊடக அமைப்புக்களின் ஒத்துழைப்புடன் தலைநகரில் நடைபெற்றது. அதே போன்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற போராட்டம், யாழ். ஊடக அமையத்தின் ஒருங்கிணைப்பில் கிழக்கு மாகாண ஊடகவியலாளர் ஒன்றியம், கிழக்கு ஊடக அமையம், இலங்கை ஊடக சுதந்திரத்துக்கான செயற்பாட்டுக்குழு, தொழில்சார் இணைய ஊடகவியலாளர் ஒன்றியம் என்பவற்றால் முன்னெடுக்கப்பட்டன. இதற்கு மன்னார், வவுனியா, முல்லைதீவு மற்றும் கிளிநொச்சி ஊடகவியலாளர் அமைப்புக்களும் ஆதரவு வழங்கியிருந்தன.

கொழும்பில் நடந்த போராட்டம் பொதுப் படையானதாக அமைந்தது. யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற போராட்டம் சுகிர்தராஜனின் 13வது ஆண்டு நினைவு நிகழ்வுடன் இணைந்ததாக நடைபெற்றது.

ஊடக தர்மத்தை காப்பாற்ற வேண்டும் என்பதற்காக உண்மையைச் சொல்ல முனைந்த பலருடைய உயிர் பறிக்கப்பட்ட பின்னர் அவர்களது உயிர்களைக்காப்பாற்ற முடியாமல் போனதே என்று நொந்து கொள்வதாகத்தான் இந்தப் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

ஊடகப்போராளி சுகிர்தராஜனின் இழப்புக் குறித்த செய்திகள் அப்போது ஏற்பட்ட கடுமையான யுத்த சூழ்நிலை காரணமாக பெரிதாக கவனம் செலுத்தப்படவில்லை என்பதோடு, பின்நாட்களிலும் அதுகுறித்து போதிய கவனத்துக்கு உள்ளாகாமல் போனமையானது வேதனையானதே.

அவர்கள் நாட்டைவிட்டு வெளியேறி பாதுகாப்பாக இருந்தபோதும், உள்நாட்டில் உள்ள ஊடகவியலாளர்கள் குறித்து பரவலாகவே கவனம் செலுத்தத் தவறிவிடுகின்றனர் என்ற குற்றச்சாட்டுக்களும் எழத்தான் செய்கின்றன.

ஊடகத்துறைக்காக தங்களது உயிரை அர்ப்பணித்த ஊடகவியலாளர்களின் குடும்பங்கள், அவர்களை இழந்தபின் பல இன்னல்களுக்கு உள்ளாகியுள்ளன. அவ்வாறான குடும்பங்கள் மீது சமூகச் செயற்பாட்டாளர்கள் கவனம் செலுத்துத் தவறியிருக்கின்றனர் என்ற குற்றச்சாட்டுகளும் உண்டு.

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களினது இழப்பு ஊடகசமூகத்திற்கு மட்டுமல்ல அவர்களின் குடும்பங்களுக்கும் பேரிழப்பு என்பதை நாம் உணர்ந்து கொள்ளவேண்டும். இந்த இழப்புகளை ஈடு செய்வதற்கான முன்னெடுப்புகளை ஊடக அமைப்புக்கள் தொடரவேண்டும்.

அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள், ஊடகவியலாளர்கள், பொதுமக்கள் கலந்துகொள்ளும் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் பல தடவைகள் நடத்தப்பட்டாலும் அரசாங்கமும் சர்வதேசமும் முழுமையான ஈடுபாட்டுடன் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதாயில்லை.

இராணுவ கெடுபிடிகளும் பெரும் அச்சுறுத்தலுக்கு நிறைந்திருந்த காலத்தில் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, வன்னிப்பிராந்தியம், கொழும்பு உள்ளிட்ட நாட்டின் பல பகுதிகளிலும் பல ஊடகவியலாளர்கள் பணியாற்றியிருக்கிறார்கள். நியாயபூர்வமாகவும்



ஊடக சுதந்திரத்துக்காகவும், பக்கச் சார்பில்லாத் தகவல்களை மக்களுக்கு வழங்குவதற்குத் துணிந்தவர்களாகவும் இருந்த ஊடகவியலாளர்களே படுகொலை செய்யப்பட்டனர்.

ஊடகக்காரர்களின் படுகொலைகள் நடைபெற்றுப்பல வருடங்கள் ஆகிவிட்டன. அவற்றுக்கான விசாரணைகள் நடத்தப்படவில்லை என்பதை விட, அக்கொலைகளுக்கான காரணங்கள் வேறுவிதமாக விதப்புரை செய்யப்படுவதும், அவை பற்றிய விசாரணை முன்னெடுப்புகள் கைகழுவிவிடப் பட்டதாக மாற்றப்படுவதும்தான் பெரும் துயரம்.

குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதற்கான விசாரணைகள் முறையாக முன்னெடுக்கப் பட்டால் உண்மை வெளிச்சத்துக்கு வரும் என்பது திண்ணம்.

யாழ்ப்பாணத்தில் கொல்லப்பட்ட நிமலராஜன், கொழும்பில் கடத்திச் செல்லப்பட்டு, பின்னர் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் சிவராம், மட்டக்களப்பில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் நடேசன், சுகிர்தராஜன் உள்ளிட்ட ஊடகவியலாளர்களின் கொலைகளுக்கும் நீதி வழங்கப்பட வேண்டும். இதில் மாற்றுக்கருத்து இருக்கக்கூடாது.

இதுவரையில் 41 ஊடகவியலாளர்கள் படுகொலைசெய்யப்பட்டும், காணாமல் போயுமுள்ளார்கள். ஆனால் இவர்களில் ஒருவர் சம்பந்தமாகவாவது முறையான நீதி விசாரணை நடத்தப்படவில்லை என்பது இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டியதொன்று.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தைக் கொண்டு வந்து பெருமை பேசிக்கொள்ளும் அரசாங்கம், ஊடகவியலாளர்கள், ஊடக நிறுவனங்கள் மீதான அடக்குமுறைகளை நிறுத்தவும் அவர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களுக்கு நீதி வழங்கவும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை தாமதமின்றி நடைமுறைப்படுத்தவும் வேண்டும் என்ற கோரிக்கை பல தடவைகளில் முன்வைக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அதற்கான முயற்சிகள் ஊடகம் சார்ந்தவர்களுக்கு மட்டுமானது என்ற பார்வையில் மாற்றம் ஏற்படுவதன் மூலமே அது நிறைவுக்கு வரக்கூடும்.

இதன்போது, 2017ம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் வெகுஜன ஊடக மற்றும் தகவல்துறை அமைச்சின் மீதான குழு நிலை விவாதத்தின்போது, "இலங்கை வரலாற்றில் முதலாவது ஊடகவியலாளர் படுகொலை 1981ம் ஆண்டு பதிவானது. இதன்படி 1981ம் ஆண்டு ஊடகவியலாளர் படுகொலையுடன் தொடர்புடைய பிரமுகர் தற்போதும் பாராளுமன்றத்தில் அங்கம் வகித்துவருகிறார்" என்று கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்த கருத்து ஞாபகப்படுத்தப்பட வேண்டும்.

அதன்போது முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச ஆட்சிக்காலத்தின் போது 13 ஊடகவியலாளர்கள் கொலை செய்யப்பட்டதாக ஊடகத்துறை அமைச்சர் கயந்த கருணாதிலக்க தெரிவித்த தகவலை 24 பேர் படுகொலை செய்யப்பட்டதாக ரம்புக்வெல்ல எம்.பி. திருத்தியும் வாசித்திருந்தார்.

அவரது ஆதாரங்களின் படி வடக்கில் யுத்தம் காரணமாகவே இந்த உயிரிழப்பு ஏற்பட்டது. ஐந்து ஊடகவியலாளர்கள் தெற்கில் கொலை செய்யப்பட்டனர். இது தொடர்பில் விசாரணை நடைபெறுகின்றது. இலங்கை வரலாற்றில் முதல் ஊடகவியலாளர் படுகொலை 1981ம் ஆண்டிலேயே பதிவாகியது. விமல எஸ் சுரேந்திரகுமார் கொலை செய்யப்பட்டார். அக்கொலையை அப்போதைய பிரபல அமைச்சரே செய்தார். எனினும் அது விபத்து என மூடி மறைக்கப்பட்டது. காரணம் இந்த கொலையுடன் தொடர்புடையவர் தற்போதும் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவம் செய்பவர். எனினும் தண்டனை இல்லை. இது போல முன்னைய ஆட்சிகளின் போது பல ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டனர். 1981 முதல் 1991 வரை 62 ஊடகவியலாளர்களும் 1994 முதல் 2005 வரை 37 ஊடகவியலாளர்களும் 2005 முதல் 2010 வரை 44 ஊடகவியலாளர்களும் படுகொலை செய்யப்பட்டனர். தகவல் அறியும் சட்ட மூலத்தில் விதிக்கப்பட்ட தடைகளை நீக்க வேண்டும். தகவல் பெறுவதற்காக அனைத்திற்கும் அனுமதி வழங்க வேண்டும்.

இதன்படி நாம் எல்லோரும் சொல்லும் 44 ஊடகவியலாளர்களும் படுகொலை செய்யப்பட்டனர் என்ற கணக்கானது 2005 முதல் 2010 வரையானது மாத்திரமே. ஒட்டு மொத்தத்தில் 1981லிருந்து 2010 வரை 143 ஊடகக்காரர்கள் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள் என்ற முடிவுக்கு நாம் வரமுடியும். இந்தப் பதிவுகள் பாராளுமன்றத்திலும் இருக்கின்றன. அப்படியானால் ஏன் விசாரணையில் தாமதம் இருக்கிறது? என்று மட்டுமே எம்மால் கேட்க முடியும்.

அந்த ஒழுங்கில்தான் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் தொடர்பாக நல்லாட்சி அரசு விசாரணை நடத்துமா? என்ற குரல்கள் 2015ம் ஆண்டிலிருந்து எழத் தொடங்கின. 4 வருடங்கள் கடந்தும் அவை முடிவு பெற்றுவிடவில்லை.

இலங்கையில் கடந்தகால யுத்தத்தின் போதுதான் ஊடகவியலாளர்கள் இறந்து போனனர்கள் என்று பொதுவில் சொல்லிக் கொள்ள முடியாது. இந்த கணக்கெடுப்புகளுக்குள் முஸ்லிம் ஊடகவியலாளர்கள் தொகையும் இணைத்துக் கொள்ளப்படுகிறது. உண்மையில் 143 ஊடகக்காரர்கள் மரணமாகியிருந்தாலும் மரணமான முறையை வைத்துக்கொண்டு வரையறைகள் உருவாக்கப்பட வேண்டும்.

அம்பாறை கொண்டைவெட்டுவான் இராணுவமுகாமில் 1985ம் ஆண்டு டிசம்பர் மாதம் 25ம் திகதி அக்கரைப்பற்றைச் சேர்ந்த கணவதிப்பிள்ளை தேவராசா என்கின்ற வீரகேசரி ஊடகவியலாளர் படுகொலை செய்யப்பட்டார்.

அதேவேளை ஓட்டமாவடியைச் சேர்ந்த இஸ்மாயில் எனும் ஊடகவியலாளர் 1987ம் ஆண்டு இந்திய இராணுவத்தின் காலத்தில் செய்தி சேகரிக்க சென்றபோது ஷெல் வீச்சில் உயிரிழந்தார். 2003 வீரகேரி பத்திரிகை நிருபர் படுகொலை செய்யப்பட்டார். சிவராம் கொழும்பில் வைத்து கடத்திச் செல்லப்பட்டு படுகொலை செய்யப்பட்டார். சுகிர்தராஜன் திருகோணமலையில் வைத்து படுகொலை செய்யப்பட்டார்.

இவ்வாறு 1985ம் ஆண்டு படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் க.தேவராசா தொடக்கம் தமிழ் ஊடகக்காரர்களது எண்ணிக்கை தொடங்கப்பட்டாலும் 2009ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 6ம் திகதி சசிமதன் என்கின்ற ஊடகவியலாளர்கள் வரை 36 தமிழர்கள் உட்பட 44 ஊடகவியலாளர்கள் கொலை செய்யப்பட்டுள்ளார்கள்.

இதில் 3 முஸ்லிம் ஊடகவியலாளர்கள், 5 சிங்கள ஊடகவியலாளர்கள், 35 தமிழ் ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டிருக்கின்றனர். இந்தக்கொலைகள் நிறைவேற்றுத்துறை ஆட்சிக்காலத்திலே தான் நடந்தேறியுள்ளன.

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன ஆட்சி காலத்தில் ஒருவரும் ரணசிங்க பிரேமதாசவின் ஆட்சிக்காலத்தில் இரு ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டனர். முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கவின் ஆட்சிக்காலத்திலே 13 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டார்கள். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸவின் ஆட்சிக்காலத்திலே 26 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளார்கள்.

இதனைவிட ஊடகவியலாளர் எச்சரிக்கப்பட்டார்கள், கடத்தப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டார்கள். இவற்றினைவிட பல ஊடக நிறுவனங்களும் தாக்கப்பட்டன. இவ்வகை உயிர் அச்சுறுத்தல் காரணமாகவே 50க்கும் மேற்பட்ட ஊடகவியலாளர்கள் புலம்பெயர்ந்து வாழ்ந்து வருகின்றனர்.

படுகொலை செய்யப்பட்ட ஊடகர்கள் என்ற பகுப்புக்குள் தமிழ், சிங்கள ஊடகவியலாளர்கள் வந்துவிடுவதே இதில் முக்கியமானது. இவர்கள் தொடர்பாக இது வரை எவரும் கைது செய்யப்படவில்லை. எனவே இந்தக் கொலைகள் தொடர்பில் விசாரணைகள் நடத்தி உரியவர்கள் நீதியின் முன்நிறுத்தப்பட வேண்டும் என்பதே நாடு தழுவிய ரீதியில் உள்ள ஊடக அமைபபுக்களின் கோரிக்கையாக இருக்கிறது.

இவ்வாறு பல்வேறு வியாக்கியானங்கள் காணப்பட்டாலும் இந்த நல்லாட்சி அரசின் முயற்சிகளில் முக்கியமானதாக அமைய வேண்டியவை, படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் தொடர்பாக உடன் விசாரணைகளை நடத்தவேண்டும், ஊடகவியலாளர்கள் குடும்பத்தினருக்கு நட்டஈடு வழங்கப்பட வேண்டும், எதிர்காலத்தில் ஊடகவியலாளர்களுக்குரிய பாதுகாப்பு தொடர்பாக அரசாங்கம் முக்கியமாகக் கவனம் செலுத்த வேண்டும் என்பதுமே.



athiran@thaiveedu.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏமாந்ததும் ஏமாற்றியதும்

- சோக்கல்லோ சண்முகநாதன் -

அச்சு இயந்திரங்களை விற்பது, எழுத்துக்களை வாங்கிக் கொடுப்பது என்று காலையிலிருந்து மாலை வரை மலிபான் வீதி ஓரத்தில்(பேவ்மென்டில்) கால்கடுக்க நின்று வாடிக்கையாளர்களைப் பார்த்துப்பார்த்து... எனது பொழுது போனது. தொழில் ரீதியான நண்பர்களாக சிங்களவர்களும் இஸ்லாமியர்களும் மலையகத்தைச் சேர்ந்தவர்களும் இருந்தார்கள். எமது வியாபார எல்லை, காலி, மாத்தறை, கண்டி, கம்பளை, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு என்று இருந்தது. எல்லாவிதமான பழக்கவழக்கங்களுடைய மக்களோடும் அவர்களது ஊர்களோடும் பழகுகிற வாய்ப்பு இருந்தது.

அச்சடிக்கும் மை, சையின் மெசின், பேப்பர் கட்டர், கைடில்பேர்க் என்ற பெரிய ஜேர்மன் மெசின், சிலிண்டர்... இப்படிப் பலவாறாகக் கேட்டுக் கேட்டு வருவார்கள். எம்மை அடையாளங்கண்டு கொண்டு எம்மிடம் கேட்பார்கள். வடபகுதியிலிருந்து வருபவர்கள் நிச்சயம் என்னோடு பேசுவார்கள். 'டீல்' சரியாக அமைந்தால் இரண்டு பக்கத்திலிருந்தும் (விற்பவர், வாங்குபவர்) தரகுப்பணம் கிடைக்கும். சம்பந்தப்பட்டவர்கள் இருவர் அல்லது மூவராக இருந்தால் அதன்படி பிரித்துக்கொள்வோம். இதில் வர்க்கபேதங்கள், அரசியல் பேதங்கள் எதுவுமே பார்க்கப்படுவதில்லை. தொழில் நேர்மை மட்டுமே கருத்தாகக் கொள்ளப்படும். சில முரண்பாடுகள் ஏற்படுவதும் தவிர்க்க முடியாதது.

தினபதி - சிந்தாமணியிலிருந்து விடுபட்டு முழுநேரமாக இந்தத்தொழிலில் ஈடுபட்டேன். வடபகுதி யுத்தநிலமை, எம்முடைய தொழிலையும் பாதித்தது. வடக்கிலிருந்து வரு

**ஒரு கலைஞனின் கதை**

பவர்கள் மெசின் கேட்டு வருவதைத் தவிர்த்து வெளிநாடுகளுக்குப் போக வருபவர்களாகவே இருந்தார்கள். என்னிடமும் சொன்னார்கள். மெசின் விக்கிற வேலையை விட்டிட்டு ஆராவது வெளிநாட்டுக்கு ஆட்களை அனுப்பிறவர்கள் இருந்தால் சொல்லுங்கள் என்று. இப்போதுதான் நான் 'தினபதி' வேலையைக் கைவிட்டதற்குக் கவலைப்பட்டேன்.

சிலநாட்கள் - தொடர்ந்து பதினைந்து நாட்கள் எந்தவிதமான வருவாயும் இல்லாமல் சிரமப்பட்டேன். வீட்டிற்கு அனுப்புவதற்கும் காசு இல்லை. எனக்குச் சாப்பாட்டிற்கும் காசு இல்லை. இப்படியான ஒரு சூழ்நிலையில் கொழும்புக்கு வரும் தமிழ்மக்களின் 'வழிகாட்டி'யாகச் செயல்பட்டேன். அவர்களுக்கு... பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் கச்சேரியில் எடுத்துக்கொடுப்பது, பாஸ்போட் எடுத்துக் கொடுப்பது, விசா எடுப்பதற்கு எம்பசிக்குக் கூட்டிப் போவது, எயாபோட் கூட்டிப்போவது, அவர்களுக்கு மொழிபெயர்ப்பாளராக இருப்பது என்று அவர்களின் வேலைகளைச்செய்து கொடுப்பவராகவும் செயற்பட்டேன். அவர்கள் வேலை முடிவிலே தருகின்ற பணத்தைப் பெற்றுக்கொள்வேன்.

வெளிநாட்டு ஏயன்சிகளோடு தொடர்பு படுத்துவது, அவர்கள் என்னை ஏமாற்ற நான் கூட்டிப்போனவர்களை ஏமாற்ற... என்றும் காலம் போனது.

வாசகர்களோடு எனது குடும்ப நிலைபற்றிப் பகிர்ந்துகொள்ள வேண்டும். எனது மனைவி பெயர் திலகவதி, ஒரு சாதாரண குடும்பத்தைச் சேர்ந்தவர். நடுத்தர கல்வியைப் பெற்றவர். இவரது தந்தையார் ஒரு சுருட்டுத் தொழிலாளி. இவருடைய இரு சகோதரங்கள் ஆசிரியர்கள். கிராமத்திலே நன்கு மதிக்கப்பட்ட குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். எனது கிராமமாகிய ஏழாலையைச் சேர்ந்தவர்கள். எங்கள் திருமணம் பெரியோர்களால் பேசி நிச்சயிக்கப்பட்டது.

எங்களுக்கு இரண்டு பெண் குழந்தைகள்.



ஒருவர் புனிதவதி, எனது மனைவியின் பெயர் தெரிவு, இளையவர் வலன்ரினா, எனது பெயர்த்தெரிவு. விண்ணிலே உலவிய பெண்ணின் ஞாபகார்த்தமாக வைக்கப்பட்டது. இவர் பத்து வயதிலே போசாக்கின்மை நோயினாலே பாதிக்கப்பட்டவர். இருபத்தொன்பது வயதில் கொழும்பு வைத்திய சாலையில் இயற்கையெய்தினார். பத்தொன்பது வருட போராட்டத்தின் பின் மகளை பறிகொடுத்தோம். மனைவி தனது அறுபதாவது வயதில் வத்தளையில் மாரடைப்பு நோயினால் இறந்தார். எனது மூத்த மகள் புனிதவதி கனடாவில் தனது நாற்பத்தி நான்கு வயதில் 'வைரஸ்' நோயினால் இயற்கை எய்தினார்.

நான் இவற்றையெல்லாம் மறந்திருப்பதால்தான் இன்றும் வாழ்கிறேன். என்னுடைய துன்பம் என்னவென்றால், எழுதுவதற்காக நான் இரண்டாவது முறையும் சோகத்திற்குள் நுழைய வேண்டியிருக்கிறது. இப்போது, என் வாழ்வின் ஆதாரமே எனது மூத்த மகள் வழி ஆணும் பெண்ணுமான எனது இரண்டு பேரப்பிள்ளைகள். வாழும் போது ஒருவர் சந்தோசமான வாழ்க்கை வாழ்ந்தால்தான் அதை அவர் மறுபடியும் திரும்பப் பார்க்கமுடியும்.

எனது கிராமமாகிய ஏழாலையிலேயே எங்களுக்கு சொந்தமாக ஒரு வீடு இருக்கவில்லை. கிராமத்தில் பல வீடுகளில் மாறி மாறி வாடகைக்கு இருந்தேன். இவ்வளவிற்கும் அப்போது வீட்டமைச்சராக இருந்த கௌரவ செல்லையா குமாரசூரியர் எனக்கு மிகவும் நெருக்கமானவர்.

எனது மூத்த மகளின் 15வது வயதில் எனது நண்பர் சின்னையா சிவஞானம் (சுசிதர்) தன்னுடைய பணத்தில், எனது மனைவியின் சீதனமாகிய இரண்டு பரப் புக்காணியில், இரண்டு அறையும் ஒரு சிறு குசினியும் கொண்ட அழகான வீட்டை எமக்கு அமைத்துத் தந்தார். திருமணத்தின் பின் எனது மனைவியின் முகத்தில் மீண்டுமொருமுறை புன்னகையைக் கண்டது இச்சந்தர்ப்பத்தில்தான். அது நீண்ட காலம் நீடிக்கவில்லை. இந்திய இராணுவத்தின் செல்வீச்சில் வீடு சேதமானது. நாங்கள் மட்டுமல்ல ஒட்டுமொத்த ஊரே இடம்பெயர்ந்தது.

இப்பொழுது அந்த செல் விழுந்த வீடும் காணியும் விற்கப்பட்டு, எனது கடன்

தொடர்தல் 78ம் பக்கம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏமாந்ததும்...

67ம் பக்கத் தொடர்ச்சி...

அடைக்கப்பட்டது. எனக்கு கிராமத்தில் எந்த அடையாளமும் இல்லை. என்னுடைய உடமை என்று எதுவுமில்லை. பயமில்லா மல் சொத்துக்கள் பிரகடனப்படுத்தக்கூடிய அரசியல்வாதி நான். அண்மையிலே கிரா மத்திலே நடந்த ஒரு கூட்டத்தில் ஒரு இளம் அரசியல்வாதி, அப்பழுக்கில்லாத, கை சுத்தமான ஓர் அரசியல்வாதியாக சோக்கல்லோ திகழ்ந்தார் என்று என்னைப் பாராட்டிப் பேசினார்கள். இது எனக்கான ஒரு அங்கீகரமாகும்.

மனிதர்களில் பல நிறுங்கள் உண்டு. சிலர், தாங்கள் வணங்கும் தெய்வங்களுக்குப் பயந்து, மனச்சாட்சிக்குப்பயந்து எங்களு டைய தரகுப் பணத்தை - கொமிசனை நேர்மையாகத் தந்துவிடுவார்கள். சிலர் ஏமாற்றப் பார்ப்பவர்கள். தரவேமாட்டார் கள். இவர்களில் இனம், மதம், மொழி என்று எந்த வேறுபாடுமில்லை.

ஒரு சம்பவத்தை மட்டும் சொல்லுகின் றேன். இங்கிலாந்திலிருந்து சகோதரன் இறக்குமதி செய்யும் பாவித்த கைடில் பேர்க் இயந்திரத்தை விற்பனை செய்பவர், பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர். அரசாங்க வங்கி ஒன்றில் பணிபுரிபவர். நானும் இன்னுமொரு பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவரும் சேர்ந்து விற் பனை செய்ததற்கான தரகுப்பணம் பத் தாயிரம் ரூபா தராது நீண்ட நாட்களாகத் தவணை சொல்லி ஏமாற்றினார்.

நாங்கள் இருவருமாக யோசித்து எனக்குத் தெரிந்த ஒரு தமிழ் சட்டத்தரணியை ஒழுங்கு செய்தோம். நானும் சட்டத்தரணியும் இவர் வேலைசெய்யும் வங்கிக்குப்போய், இவ ரைக் கண்டு சட்டத்தரணி சொன்னார்..., "உமது மேலதிகாரியை சந்திக்க வேண்டும். மெசின் விற்றது தொடர்பாக நீர் இவ ருக்குப் பத்தாயிரம் கொடுக்க வேண்டும். நீர் வங்கியில் வேலை செய்பவர், நீர் வியாபாரம் செய்யக்கூடாது என்பது உமக் குத் தெரியுமா?" என்று கேட்டார். இவரோ... "இப்பவே நான் செக் கொடுக்கிறேன் காலையில் வங்கியில் மாற்றலாம்" என்று, பத்தாயிரத்துக்கான காசோலையைத் தந் தார். அடுத்தநாள் காலையில் காசோலையை மாற்றி இரண்டாயிரம் சட்டத்தரணிக்கு, எனக்கு நான்காயிரம், விக்டர் என்ற அந் தப் பெரும்பான்மையின நண்பருக்கு நான்காயிரம். மனச்சாட்சி செய்யாத வேலை யைச் சட்டம் செய்தது.

நான் செய்கின்ற இந்த வேலைகூட அச் சுக்கலையோடு சம்பந்தப்பட்டதுதான். எப் படிப் பார்த்தாலும் என்னுடைய பத்தாவது வயதிலிருந்து நான் பட்ட அவமானங்க ளும், கொடுமைகளும், எதிர்நீச்சல்களும் சொல்லிமாளாது. நெருப்பாற்றைக் கடந்து வந்திருக்கின்றேன். போர்ச் சூழ்நிலையால் என்னுடைய தொழிலும் மாற்றம்பெற்றது. மெசினிலிருந்து 'பாஸ்போட்'டிற்கு மாறி னேன். ஒரு பிரபலமான சட்டத்தரணியின் மாமியார் வெளிநாட்டிலிருந்து திருமணத் திற்கு வந்த தன்னுடைய பிள்ளைகளை இந்தியாவில் சந்திக்க வேண்டும், திரும ணத்திலும் கலந்து கொள்ள வேண்டும். சட்டத்தரணி எல்லா முயற்சிகளும் செய்து பார்த்து முடியாமல் தனது நண்பர் விநோ தனை நாடியிருக்கிறார். அவர் சொல்லி யிருக்கிறார் என்னுடைய பக்கத்து அறை யில் ஒருவர் இருக்கிறார், அவரோடு முயன்று பாருங்கள் என்று என்னோடு தொடர்பை ஏற்படுத்திக்கொடுத்தார்.

திருமணத்திற்கு இன்னும் மூன்று தினங்கள் மட்டுமே இருந்தன. மாமியாருக்கு பிறப்புச் சாட்சிப்பத்திரம் கிடையாது. பதிவுமில்லை, அதனால் பாஸ்போட் பெறமுடியவில்லை. இப்படி இல்லாதவர்களுக்கு 'றெட் பாஸ் போட்' எடுக்கலாம். ஒருமுறை மட்டும் போய் வரலாம், அதை எடுத்தோம். இனி ரிக்கற் வேண்டும். விமானத்துக்கான ரிக்கற் இல்லை. விமானநிலையத்தில் முயற்சி செய்யும்படி சொன்னார்கள். அவரை தள்ளுவண்டியில் வைத்துத் தள்ளிச் சென்று ரிக்கற்றையும் பெற்று அனுப்பி வைத்தேன். திருமணத்திற்கும் சென்று மகிழ்வுடன் திரும்பி வந்தார். சிலநாட்களின் பின்பு நான் சட்டத்தரணியை அவரின் வீட்டில் சந்தித்தபோது 'The Great Man Is Coming' என்று வரவேற்றார்.

'கனடாவில் என்னைக் கண்டு உங்கள் புண்ணியத்தாலை நாங்கள் கனடாவில் இருக்கிறோம்' என்று சொன்னவர்கள் இருக் கின்றார்கள். நான் ஒன்றும் பெரிதாகச் செய்யவில்லை. 'பாஸ்போட்' கந்தோருக் குக் கூட்டிப்போவது, விசா போம் நிரப் புவது, எம்பசிக்கு கூட்டிப்போவது, எயா போட்டில் ஏற்றிவிடுவது அதற்குரிய கூலி யும் அவர்கள் தருவார்கள். போர்ச் சூழ்நி லையில் இதையெல்லாம் பாதுகாப்பாகச் செய்தது அவர்களுக்குப் பெரிதாகப் படு கின்றது.

ஒருமுறை கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் ஒருவரைப் பயணம் அனுப் பிவிட்டு திரும்பியபோது யாரோ 'சோக் கல்லோ அண்ணர்' என்று கூப்பிட்டார்கள். திரும்பினேன். நான்கு இளைஞர்கள். இரவு இரண்டு மணியும் கடந்த நிலையில்... அவர்கள் கொழும்புக்குப் போய் காலை யில் புறப்படும் யாழ்தேவியைப் பிடித்து யாழ்ப்பாணம் போகவேண்டும். கடுமையான இராணுவ சோதனை காலம். அகால நேரம். பயந்தபடி இருந்தார்கள். நான் போன காரிலேயே அவர்களைக்கூட்டிவந்து, ஒரு தமிழரது கோட்டலில் தங்கவைத்து, காலையில் நானே வந்து யாழ்தேவியில் ஏற்றிவிட்டேன். சிங்கப்பூரில் வேலை செய்து விட்டு வந்தவர்கள். அங்கே வாங்கிய இரா ணுவம் அணியும் ஒரு அங்கியும் அவர்க ளது சூட்கேசில் இருந்தது. அதைக் கொண்டுபோக வேண்டாம் 'செக்கிங்கில்' பிடிப்பார்கள், அதற்காகக் கைதும் செய் வார்கள் என்று சொன்னேன். என்னிடமே அதைத்தந்தார்கள். நான் அதை வைத்தி ருந்தால் என்னையும் பிடிப்பார்கள். அரு கிலே இருந்த ஒரு பத்தைக்குள் வீசினேன். அவர்களை பத்திரமாக யாழ்தேவியில் ஏற்றிவிட்டேன்.

அவர்கள் பத்திரமாகப் போய்விட்டார்கள். இவ்வளவும் செய்த எனக்கு அவர்கள் குறைந்தது ஒரு ஐம்பது ரூபாயாவது எனக் குத் தந்திருக்கலாம், ஆனால் தரவில்லை. எனக்குக் கவலை. இப்படி பலதையும் நாங்கள் சந்தித்திருக்கிறோம் என்று ஆறு தல் அடைந்தேன்.

சில தினங்கள் கழித்து வீட்டிலிருந்து ஒரு கடிதம் வந்தது. அதில் ஒரு இளைஞர் வந்து பார்சலில் துணிகளும், உணவுப் பொருட்களும் கொடுத்திருந்தார். சிங்கப் பூரிலிருந்து வந்தவர்கள் என்று சொல்லித் தந்தார்கள். நாங்கள் எங்களுக்கு சிங்கப் பூரில் ஒருவரும் இல்லை என்று சொல்லி யும், உங்களுக்குத்தான் என்று தந்துவிட் டுப் போனார்கள் என்று கடிதம் வந்தது.

அன்று, யாழ்தேவி உடன் புறப்பட்டு விட் டது. அவர்களால் எனக்கு எதுவும் செய்ய முடியவில்லை. மனைவிக்கு நான்கு இளை ஞர்களும் ஒவ்வொரு சாறியும், பிள்ளைக ளுக்கு சட்டைகளுக்கான துணிகளும், பிஸ் கற், சொக்கலேட் என்றும் கொடுத்து விட் டுப் போயிருக்கின்றார்கள்.

*காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினு*
*ஞாலத்தின் மாணப் பெரிது*

- குறள் 102

என்று அந்த நண்பர்கள் நினைத்திருக்கக் கூடும்.

*தொடரும்...*



sanmuganathan@thaiveedu.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ARE YOU TIRED OF DOING THE SAME JOB AND LOOKING FOR A CAREER CHANGE ?

**Beta College இல்** வாரம்தோறும் FOOD HANDLER CERTIFICATE க்கான வகுப்புகள்
ஒரே நாளில் CERTIFICATE வழங்கப்படுகிறது .
தமிழிலும் பரீட்சை எழுதலாம்

CNC / Electrical துறைகளில் வேலைவாய்ப்புக்கான வகுப்புக்கள்

OFFICE / ACCOUNTING வேலைகளுக்கான வகுப்புக்கள்

ELECTRICAL LICENCE PRE EXAM COURCES -309A /442A

RESTAURANT MANAGEMENT COURSES

EI, Maternity எடுத்தவர்கள் $28000 வரை பெற வாய்ப்பு

உங்கள் உறவினர் நண்பர்கள்
கனடாவில் மேல் படிப்பைத் தொடர்வதற்கான வாய்ப்புகள்
( Now Accepting International students )

**DIPLOMA COURSES**

CAD/CAM TECHNOLOGY
- Autocad / Solidworks/ Inventor/Mastercam/CNC Programming

AUTOMATION TECHNOLOGY
- PLC/HMI/VFD/ Industrial

COMPUTERIZED ACCOUNTING
FOOD SERVICE WORKER
OFFICE ADMINISTRATION
ACCOUNTING AND PAYROLL

**Certificate Courses**

Video Editing
Sound Editing
Photoshop
QUICK BOOK
SIMPLY ACCOUNTING
MS OFFICE - word /Excel / outlook
COMPUTER PROGRAMMING - C++ / JAVA/ PYTHON/SQL



**beta College**
of Business & Technology

2347 Kennedy Road, Suite 301, Toronto ON, M1T 3T8, Canada
www.betacollege.ca, info@betacollege.ca
**416 449 beta (2382)**
(Approved as a private career college under the Private Career College Act 2005)



# OUR FREE SERVICES / WHY? REALTOR KATHIR

## For Home Owners

- ✓ Home Staging
- ✓ Newspaper & Flyer Advertisement
- ✓ High Resolution Picture & Virtual Tour
- ✓ Four Page Colour Feature Sheets
- ✓ Weekends Open House
- ✓ Guaranteed Weekly Feedback
- ✓ Social Media Marketing
- ✓ Full MLS Listing Service
- ✓ Sale Sign & Direction Signs
- ✓ Market Evaluation
- ✓ Radio & Web Tool Advertisement
- ✓ Professional & Friendly Service

LOW Commission

- Over 10 yrs Experience Realtor
- Multi Award Winner Since 2006
- Excellent Negotiation Skill
- Quick Sale with Low Commission
- Professional & Friendly Services
- Home Sellers' Programme
- Home Buyers' Programme
- Mortgage Brokers, Lawyers, Inspector Team.
- Getting Low Rate Mortgage

**SELL WITH KATHIR & GET MAX. PRICE**

**Buy with Kathir & Get Dream Home**



**HomeLife/Future Realty Inc.,**
Brokerage *Independently Owned and Operated
O: (905)201-9977 F: (905)201-9229
205-7 Eastvale Dr., Markham,Ont, L3S 4N8

HOMELIFE HIGHER STANDARDS

**Kathir Kathirgamanathan B.A,**
Real Estate Broker
**Dir: 416-230-6462**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்ராரியோ முது தமிழர் மன்றமும் தமிழிசைக் கலாமன்றமும் இணைந்து நடத்திய

# தமிழ் மரபுத் திங்கள் விழா

ஒன்ராரியோ முது தமிழர் மன்றமும் தமிழிசைக் கலாமன்றமும் இணைந்து, தமிழ் இசைக்கலா மன்றத்தில் நடத்திய தமிழ் மரபுத் திங்கள் விழா சனவரி 19ம் நாள் தமிழ் இசைக்கலா மன்றத்தில் அரங்கேறியது.

தமிழரின் கலை, கலாச்சாரம், மொழியின் சிறப்பு, தொன்மை ஆகியவற்றை கனடியர்களுக்கும் உலகிற்கும் எடுத்துச் சொல்லும் குறிக்கோளுடன் நிகழ்வுகள் அரங்கேறின. இக்குறிக்கோளுடன் இரு மன்றங்களும் இணைந்து கன்காட்சியையும் கலை நிகழ்வையும் நடத்தின.

இந்நிகழ்வுக்கு மாகாண முதியவர்களுக்கான அமைச்சர் ரேமன்ட் சோவுடன் தேசிய பாரம்பரியம், பன்முகப் பண்பாடு ஆகியவற்றின் அமைச்சருக்கான உதவியாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கௌரவ கரி ஆனந்தசங்கரியும் வருகை தந்திருந்தார்.

இவர்களுடன் ஸ்காபரோ ரூஜ் பார்க்கிற்கான ஒன்ராறியோ சட்டமன்ற உறுப்பினர் திரு விஜய் தணிகாசலமும், கல்விச்சபை அறங்காவலர்கள் பார்த்தி கந்தவேள், அனு சிறீஸ்கந்தராஜா ஆகியோரும் வருகை தந்திருந்தார்கள்.

தமிழர் மரபுத்திங்கள் விழாவின் ஆரம்பகர்த்தாவான திரு நீதன் ஷான் அவர்களும் வருகை தந்திருந்தார்.

விழாவின் சிறப்புப் பேச்சாளராக பேராசிரியர் ஜோசெப் சந்திரகாந்தன் கலந்து கொண்டார்.















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய் மண் காப்போம் - அன்பு நெறி

- ந. அரியரெத்தினம் -

2009ம் ஆண்டு இடம்பெற்ற சோக நிகழ்வுகள் எமது தாய் மண்ணையும் மக்களையும் மட்டுமன்றி எமது மண் சார்ந்த கலாச்சாரம், வாழ்வியல் முறை, எமது தனித்துவமான சிறப்பு இயல்புகளையும் கூட சிதைத்து விடுவதாய் அமைந்துவிட்டது. இதனால் தான் தாய் மண்ணில் இன்றும் ஜீரணிக்க முடியாத அவலநிலைகள் தொடர்ந்துகொண்டிருக்கின்றன. அது விழுப்புண் அடைந்தவர்களின் அவல நிலைகளாக இருக்கலாம் அல்லது மீண்டும் மீளமுடியாது தத்தளிக்கும் பன்சேனை போன்ற ஒட்டுமொத்தமான ஒரு மக்களின் அவல நிலைகளாக இருக்கலாம் அல்லது எமது மூதாதையர்கள் கட்டிக்காத்துவந்த தாய் மண்ணின் தனித்துவமான வாழ்க்கைமுறைகளை தொலைத்து விட்டு எம்மை பார்த்து நாமே தலை குனிந்து நிற்கும் கலாச்சார சீர்கேடுகளாக இருக்கலாம்.

ஆனாலும் இனப்பற்றும் மனிதநேயமும் கொண்டு தாய் மண் மக்களுக்காக புலம்பெயர் நாடுகளில் இருந்து செயற்பட்டுக் கொண்டிருக்கும் ஏராளம் மண் பற்றாளர் களது மனிதநேயச் செயற்பாடுகள் தான் இந்தச் சூள்நிலையிலும் எமக்கு ஓரளவிற்கு ஆறுதலளிப்பவைகளாக உள்ளன. 2007ம் ஆண்டு கிழக்கு மாகாணத்தில் இறுதிச்சமர் ஆரம்பித்த காலகட்டத்தில், மட்டக்களப்பு மாவட்டத்தில் படுவான் கரையிலுள்ள மிக முக்கியமான எல்லைக்கிராமமான பன்சேனைக் கிராமம் முதலாவதாகவும், முற்றாகவும் அழிக்கப்பட்ட ஒரு கிராமம்.

2007ம் ஆண்டு யுத்த அழிவுகளிலிருந்து மீளமுடியாது பத்து வருடங்களுக்கு மேலாக ஒட்டுமொத்தமாக அவலப்பட்டுக்கொண்டிருந்த பன்சேனை கிராமத்திற்கு 2017ம் ஆண்டிலிருந்து தான் ஒளிக்கீற்று ஒற்று வெளிப்படத் தொடங்கியது. இவ்வாறு வெளிப்பட்ட ஒளிக்கீற்று இன்று அந்த கிராமத்தின் வீதிகளில் மட்டுமன்றி அந்த கிராமத்து மக்களின் உள்ளங்களிலும் பிரகாசமான ஒளியை பாச்சிக்கொண்டிருக்கிறது. நாமும் வாழப் பிறந்தவர்கள் என்ற பெரிய நம்பிக்கை இன்று அந்த கிராமத்தின் ஒட்டு மொத்த மக்களுக்கும் ஏற்பட்டுள்ளது. ஒரு கிராமத்தையே வாழவைக்கும் இதுபோன்ற செயற்பாடுகள், தாய் மண்ணில் அரிதாகவே இடம் பெறுகிறது. எனவே, இந்த சந்தர்ப்பத்தில் அன்பு நெறி என்ற அமைப்பு பன்சேனைக் கிராமத்தில் மேற்கொண்டு வருகின்ற மனிதநேயச் செயற்பாடுகளை ஒரே பார்வையில் நோக்குவது பயனுள்ளதாக அமையும். அதே நேரம் அன்பு நெறியால், மேற்கொள்ளப்பட்டுவரும் இத்தகைய செயற்பாடுகளினூடாக பன்சேனைக்கிராமத்தின் பிரச்சினைகள், தேவைகள் எவையாக இருந்துள்ளன என்பதையும் நாம் ஓரளவு விளங்கிக்கொள்ள முடியும்.

### அன்புநெறி மேற்கொண்டு வரும் உதவித் திட்டங்கள்

### தபால் சேவை:

176 குடும்பங்களையும் ஏறத்தாழ 800 மக்களையும், பதினொராம் வகுப்புவரை உடைய பாடசாலையையும் கொண்டமைந்துள்ள பன்சேனைக் கிராமத்திற்கு தபால் நிலையம் இல்லை என்பது வியப்பானதே. முக்கியமாக அரசாங்கத்தால் வழங்கப்படும் மாதாந்த உதவித்தொகை, மற்றும் தற்பொழுது 70 வயதை அடைந்த முதியவர்களுக்கு வழங்கப்படும் உதவித்தொகை ஆகியவற்றை பெறுவதற்கும் இக்கிராம மக்கள் இருபது கிலோ மீற்றர் தூரமுள்ள கொக்கட்டிச் சோலை தபால் நிலையத்திற்கு செல்ல வேண்டும். தற்பொழுது மாதத்தில் இரண்டு தடவைகள் நடமாடும் தபால் சேவை இக்கிராமத்தில் நடத்தப்படுகிறது.

### வைத்திய வசதி:

அரசாங்கம் இலங்கை மக்களுக்கு வழங்கிக்கொண்டிருக்கும் இலவச வைத்திய வசதிகூட 2007ம் ஆண்டு தொடக்கம் 2017ம் ஆண்டு வரை பன்சேனை கிராம மக்க



ளுக்கு கிடைக்கவில்லை. இதனை நிவர்த்தி செய்வதற்கு அன்பு நெறி யுத்தத்தால் சிதைவடைந்துபோன இக்கிராமத்திலுள்ள தீலிபன் மருத்துவமனையை முழுமையாக புனரைமைத்து வழங்கியுள்ளது. தற்பொழுது வாரத்தில் மூன்று தடவைகள் இக் கிராமத்திலுள்ள தீலிபன் மருத்துவமனை



யில் நடமாடும் வைத்திய சேவை வழங்கப்பட்டுவருகிறது.

### குடிநீர் வசதி:

இந்த கிராமத்து மக்களுக்காகவும் இந்த கிராமத்தினூடாக போக்குவரத்து செய்யும் பிரயாணிகளுக்காகவும் ஆழமான குடிநீர் குழாய்கிணறு இங்கே இருந்துள்ளது. வரண்ட பிரதேசத்திலுள்ள இக்கிராமத்து மக்கள் நீண்ட காலமாக சுத்தமான குடிநீர் வசதி இல்லமலே வாழ்ந்து வந்துள்ளனர். திருத்தமுடியதென கைவிடப்பட்ட ஆழ்குழாய் பம்பியை இவர்கள் திருத்தி வழங்கியுள்ளனர். தற்பொழுது தரமான நிறைவான குடிநீரை அக்கிராம மக்களும், பிரயாணிகளும் பெற்று பயனடைகின்றனர்.

### கல்வி:

போக்குவரத்து கஷ்டங்கள் நிறைந்த கிராமத்தில் கஷ்டப்பிரதேச பாடசாலையாக செயற்பட்டுக்கொண்டிருக்கும் பாரி என்ற பெயருடைய பாடசாலையே பன்சேனைக் கிராமத்திற்கான கல்வியை வழங்கிக் கொண்டிருக்கிறது. தரம் 11 வரை வகுப்புக்களை கொண்ட இப்பாடசாலையில் எல்லா கஷ்டப்பிரதேச பாடசாலைகளையும் போல ஆசிரியர் பற்றாக்குறை மோசமான பிரச்சினையாக இருந்துவருகிறது. அத்துடன் மிகவும் பின் தங்கிய தனிக்கிராமமாக இருக்கும் பன்சேனைக் கிராமத்தின் பல்வேறு சூழ்நிலைகளும் தரமான, நிறைவான கல்விக்கு தடைகளாக அல்லது பாதகமாகவே இருந்துவருகின்றன. இவ்வாறான காரணங்களால் கல்வியின் பெறுமதியையும் பயன்பாட்டையும் இதுவரை இந்த கிராமம் சிறிதளவேனும் அனுபவிக்காது இருப்பது கவலை தரும் விடயமாகவே உள்ளது. ஆம் கல்வி கற்று ஒருவர் கூட அரச ஊழியராக உருவாக முடியாத கிராமமாக பன்சேனை கிராமம் காணப்படுகிறது. இதனால் பாடசாலைக்கு தொண்டர் ஆசிரியர் நியமனம் தொடக்கம் கல்வியில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான தூரநோக்கு செயற்பாடுகள் உட்பட அனைத்து நடவடிக்கைகளையும் அன்பு நெறி அமைப்பு ஆரம்பித்துள்ளது. முக்கியமாக வலயக் கல்விப் பணிப்பாளரையும் இக்கிராமத்தின் கல்விமாற்றத்திற்கான ஒரு பங்காளராக இணைத்து செயற்பட்டுக் கொண்டிருக்கிறது.

அதேநேரம் பாடசாலை முடிவடைந்த பின்பு தரம் 9, 10, 11 ஆகிய வகுப்பு மாணவர்களுக்கு பாடசாலையில் மாலை நேர வகுப்புகள் நடத்தப்படுகின்றன. கிராமத்தின் கல்விக்காக மாதாமாதம் பெருந்தொகைப் பணத்தை இவர்கள் செலவு செய்துகொண்டிருக்கின்றனர். கல்விக்கான பாதை இங்கே தெளிவாக திறந்து விடப்பட்டுள்ளது. க.பொ.த(சா.த) பரிட்சையில் சித்தியடைந்து தற்பொழுது மாணவர்கள் உயர்கல்வியை கற்க ஆரம்பித்துள்ளனர்.

### விளையாட்டு:

பன்சேனை பாடசாலை மாணவர்களுக்கும் இக்கிராமத்திலுள்ள இளைஞர்களுக்கும் உள்ள ஒரே ஒரு ஆரோக்கியமான பொழுதுபோக்கு விளையாட்டு. பாடசாலைக்கும், கிராமத்திற்கும் பொதுவாக உள்ள விளையாட்டு மைதானம் புரைமைத்து வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் விளையாட்டுக்கு தேவையான உபகாரணங்கள், விளையாட்டு வீரர்கள் அணியும் அணிகலன்கள் தொடர்பான வசதிகளையும் வழங்கிவருகிறது. இதன் காரணமாக பின்தங்கிய இந்த கிராமத்து பிள்ளைகளிடம் மறைந்துகிடந்த வலுவான திறமைகள் வெளிப்பட்டு வருகிறது. குறுகிய காலத்திற்குள் பன்சேனை பாரி வித்தியாலய மகளிர் உதைபந்தாட்ட அணி இரண்டு சாதனைகளை புரிந்துள்ளது.

### யானை வேலி:

சகோதர இனமக்கள் வாழும் பல கிராமங்களையும் பன்சேனைக் கிராமத்தையும் உள்ளடக்கி அரசாங்கத்தால் அமைக்கப்பட்ட யானைவேலி ஒன்று இப்பகுதியில் காணப்படுகிறது. அதிலும் இனரீதியான ஓரவஞ்சனைகள் இடம்பெற்றிருப்பதை காணமுடிந்தது. ஆனாலும் பன்சேனை கிராம எல்லை ஓரமாக செல்லும் 15 மீற்றர் நீளமான யானை வேலியினை மேலும் பலப்படுத்தி யானைகள் வரவை கட்டுப்படுத்த அன்பு நெறி ஆரோக்கியமான செயற்பாடுகளை செய்து கொடுத்துள்ளது. 15 கிலோ மீற்றர் தூர யானைவேலியின் இரண்டு பக்கமும் 15 அடி நிலத்தை முழுமையாக திருத்தி வெட்டையாக்கி யானைகள் வரவை கட்டுப்படுத்தியுள்ளது. அதே நேரம் தோடைக்கன்றுகள், பனை விதைகள் அவ்விடங்களில் நாட்டப்பட்டுள் ளன இவை வளர்ந்து வரும் பொழுது யானைகள் ஊடுருவல் மேலும் தடுக்கப் படும். அதுமட்டுமல்ல யானைகள் ஊடுருவலை கட்டுப்படுத்த நிரந்தர காவலாளிகளை நியமித்து அவர்களுக்கான ஊக்குவிப்பு கொடுப்பனவுகளையும் வழங்கி வருகிறது.

### வனஜீவராசிகள் திணைக்களத்தின் அலுவலகம்:

அன்பு நெறி மேற்கொண்ட தொடர் முயற்சியினால் 2018ம் ஆண்டு மே மாதம் வன ஜீவராசிகள் திணைக்களத்தை சேர்ந்த 24 பேர் இக்கிராமத்திற்கு நேரடியாக வருகைதந்து யானைகள் ஊடுருவலால் இக் கிராமம் எதிர் நோக்கும் பிரச்சினைகளை பார்வையிட்டதுடன் கலந்துரையாடலிலும் ஈடுபட்டனர். நிறைவில் அன்பு நெறியால் புனரமைக்கப்பட்ட கட்டடத்தில் வனஜீவராசிகள் திணைக்கள ஊழியர்கள் தங்கிச் செயற்பட சம்மதித்தனர். தற்பொழுது அவர்கள் அங்கே தங்கி செயற்பட்டு வருவதற்குரிய முன் ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

### வீதி விளக்குகள்:

அடர்ந்த காடுகளுடன் இருண்டு கிடந்த பன்சேனைக் கிராமத்தின் எல்லை வீதிகளும், அதே நேரம் கிராமத்திற்குள் மக்கள் நடமாடும் முக்கிய வீதிகள், சந்திகள் எல்லாம் தற்பொழுது நவீன மின்விளக்குகளால் ஒளித்துக் கொண்டிருக்கின்றன. இதனால் நகர மக்களைப் போல பன்சேனை மக்களும் இரவு நேரங்களிலும் சுதந்திரமாக நடமாடும் அதே நேரம் கிராமத்திற்குள் யானைகள் ஊடுருவலும் கட்டுப்படுத்தப் படுகிறது. ஆம் மின்சார சபையினரின் அனுசரணையுடன் 70 நவீன மின்விளங்குகளை இங்கே அமைத்து வழங்கியுள்ளனர்.

### நீர்ப்பாசன வசதி:

பன்சேனை கிராமத்தில் நிலவளம் இருந்தாலும் விவசாயத்திற்குரிய நீர்வளம் பிரச்சினையாக உள்ளது. பன்சேனை கிராமத்தை சுற்றி குளங்கள் காணப்படுகின்ற போதும் அந்த நீர் வளங்களை பன்சேனை கிராம மக்களாகிய தாம் பயன்படுத்தமுடியாத துர்ப்பாக்கிய சூழ்நிலை காணப்படுவதாக கிராமமக்கள் கவலையுடன் எடுத்துக்கூறினர். அத்துடன் இந்த வளங்கள் சகோதர இனத்தவர்களிடம் பறிபோவதற்கான நிலமைகளையும் சுட்டிக்காட்டினர்.

இவற்றை எல்லாம் மாற்றி அமைக்கும் முயற்சியில் அன்பு நெறி அக்கறையாக ஈடுபட்டுவருகிறது. முக்கியமாக இக்கிராமத்திற்கு மிக அண்மையில் உள்ள காண்

தொடர்தல் 74ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org














Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய் மண் காப்போம்...

72ம் பக்கத் தொடர்ச்சி...

டிபன் குளம், நெல் கொத்தின சேனைக் குளம் ஆகிய குளங்களின் நீரை பயிர்ச் செய்கைக்கு பயன்படுத்தும் விதத்தில் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு செயற்ப டுத்தப்படுகின்றன. இக்கிராம மக்கள் அவற் றின் பயனையும் தற்போது பெற ஆரம் பித்துள்ளனர். இந்த வருட பெரும்போக செய்கையில் பெருமளவு நிலம் இவற்றி னூடாகப் பயிரிடப்படுகிறது. முக்கியமாக நெல் கொத்தின குளத்து நீர் இக்கிராமத் தின் ஒரு பகுதிக்கு வழங்கப்பட்டு விவசா யிகள் பயனடைய ஆரம்பித்துள்ளனர். இவை எல்லாம் அரசாங்கத்தின் நீர்ப்பாசன திணைக்களம் பிரதேச உதவித் திட்ட பணிப்பாளர் போன்றோரின் முழுமையான ஒத்துழைப்புகளுடன் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## மாதிரி விவசாயப் பண்ணை:

பெரும்போக நெற்செய்கை ஒன்றில் மட் டுமே பன்சேனைக்கிராமத்தின் உற்பத்தி, வேலை வாய்ப்பு, வருமானம், வாழ்க்கைத் தரம் எல்லாம் தங்கியுள்ளது. ஆனாலும், சிறுதானியப் பயிற்ச்செய்கை போன்ற ஏனைய முயற்சிகளிலும் மக்களை ஈடுப டுத்துவதற்கு முன்மாதிரியாக 9 ஏக்கர் நிலத்தில் மாதிரி விவசாய பண்ணை ஒன்று அன்பு நெறியால் உருவாக்கப்பட்டு வெற் றிகரமாக செயற்படுத்தப்பட்டுவருகிறது. அண்மையிலுள்ள குளத்திலிருந்து நீர் இறைக்கும் இயந்திரத்தின் மூலம் இந்த விவசாய பண்ணைக்குரிய நீர்ப்பாசன வசதி மேற்கொள்ளப்படுகிறது. இங்கே நிலக்கடலை, மரவெள்ளி மற்றும் பல வகையான பயன்தரு பழமரங்கள் நாட்டப் பட்டுள்ளன.

சில குடும்பங்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பும் பலபேருக்கு பருவகால வேலை வாய்ப்புகளும் வழங்கப்பட்டுள்ளன. 2018ம் ஆண்டு ஏப்ரல் மாதம் இக்கிராமத்தில் தங்கியிருக்கும்பொழுது மூன்று தடவை கள் இந்த பண்ணைக்குச் சென்னால் செல்ல முடிந்தது. பண்ணை பொறுப்பாளரின் கடினமான உழைப்பால் பண்ணை மிகவும் செழிப்பாகக் காணப்பட்டது. யூன் மாதம் இந்த பண்ணையில் நிலக்கடலை அறுவடை இடம்பெற்று 6 இலட்சம் ரூபாவிற்கு அதனை விற்பனை செய்துள்ளனர். இவ் வாறான இந்த பண்ணையின் வெற்றிகர மான முயற்சிகள் இந்த கிராமத்து மக்க ளுக்கு வழிகாட்டும் உயிரோட்டமான செயற்திட்டங்களாக உள்ளன.

## வீட்டுத்திட்டம்:

பன்சேனைக் கிராமத்திற்கென வீட்டுத்திட் டம் அனுமதிக்கப்பட்டு வீடு இல்லாத குடும் பங்களுக்கு வீடுகள் கட்டுவதற்குரிய கொடுப் பனவுகள் 2018ன் ஆரம்பத்திலிருந்து வழங் கப்பட்டு வருகின்றன. பிரதேச செயலரி னால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற இந்த வீட்டுத்திட்டத்திட்ட அனுமதிக்கும் அன்பு நெறியின் அனுசரணை இருந்துள்ளது. மிக மோசமான வறுமையினால் சில குடும்பங் கள் வீட்டுத்திட்டத்தை ஏற்றுக்கொள்ளாதது கவலைதரும் விடயமே. காரணம் பயனா ளிகள் என்ற வகையில் அவர்களும் சிறு நிதியை செலவு செய்ய வேண்டிய வழ மையான நிபந்தனை இதில் இடம் பெற் றுள்ளது. தற்பொழுது வீட்டுத்திட்ட வேலை கள் நிறைவடைந்து அங்கே மக்கள் குடி யிருக்க ஆரம்பித்துள்ளனர்.

## புதிய வேலை வாய்ப்புகள்:

தனிக்கிராமமாக உள்ள பன்சேனைக் கிரா மத்தில் வேலைவாய்ப்பு என்பது எட்டாத கனி. 40 - 50 கி.மிற்றருக்கு அப்பால் சென்று கிழமைக்கணக்கில் தங்கியிருந்து வேலை செய்யும் 'தங்குவேலை' ஒன்றுதான் இவர் களுக்கு உள்ள ஒரே வழி. சிலர் மட்டும் ஈடுபடும் இந்த தங்குவேலையும் பெருமளவு வெற்றியளிப்பதில்லை.

அன்பு நெறி இவற்றை எல்லாம் கருத்தில் கொண்டு இளைஞர்களை மையப்படுத்தி புதிய முயற்சி ஒன்றை ஆரம்பித்துள்ளது. 2018 ஒக்டோபர் மாதம் 20 இளைஞர்களுக்கு வாகனச்சாரதிகளுக்கான அனுமதிப்பத்தி ரத்தை பெற்றுக்கொடுத்துள்ளது. இவர்க ளுக்கான பயிற்சி, அனுமதிப்பத்திர செலவு



உட்பட அனைத்தையும் தாமே ஏற்றுக் கொண்டதுடன் எல்லா வகையிலும் பக்க துணையாக இருந்துள்ளது. தற்பொழுது அனைவரும் வேலை வாய்ப்பை எதிர் பார்த்துள்ளனர். சிலர் வேலை வாய்ப்பை யும் பெற்றுள்ளனர். ஏனைய இளைஞர்க ளைப்போல இந்த கிராமத்து இளைஞர் களும் வெவ்வேறு வகையான வேலை- களை மேற்கொள்ளவும் வருமானங்களை ஈட்டுவதற்குமான ஒரு புதிய பாதை இக் கிராமத்தில் இப்பொழுது அன்பு நெறி யின் பங்களிப்பால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதே போன்று ஏற்கனவே உள்ள விவசா யப் பண்ணைக்கு அருகாமையில் கால் நடைப்பண்ணை ஒன்றும் அன்பு நெறியால் ஆரம்பிக்கும் செயற்பாடுகள் நடைபெறு கின்றன. இதனால் இக்கிராமத்தின் பால் உற்பத்தி அதிகரிப்பதுடன், இக்கிராமத் திலுள்ள பலருக்கு வேலை வாய்ப்பும் கிடைக்கும் பயன்தரு திட்டமாக இது உள் ளது. இதேபோன்று இங்குள்ள குளங்க ளில் நன்னீர் மீன்பிடியை மேம்படுத்தி அத னூடாகவும் உற்பத்தியும் வேலை வாய்ப் பும் கிடைப்பதற்கு அன்பு நெறி செயற்பட ஆரம்பித்துள்ளது.

## அன்பு நெறியின் உருவாக்கம்:

தாய் மண்ணில் 2009ம் ஆண்டு ஏற்பட்ட வரலாற்றுத் துயர் நிறைந்த அந்த சோக நிகழ்வு முற்றுப்பெற்ற சூழல் என்னசெய் வது என்று தெரியாது நாம் அனைவரும் திகைத்துபோய் நின்று கொண்டிருந்தோம்.

அப்பொழுது விரல்விட்டு எண்ணக்கூடிய சில நண்பர்கள் ஓரிடத்தில் ஒன்றுகூடி இந்த சந்தர்ப்பத்தில் நாம் என்ன செய்யவேண்டும் என்ன செய்யலாம் என தமக்குள் நிதான- மாகக் கலந்துரையாடினர். நிறை வில் தாய் மண்ணில் பரிதவித்துக் கொண்டிருக்கும் ஆதரவற்ற பிள்ளைகள், காயப்பட்டு அல் லப்பட்டுக்கொண்டிருப்பவர்கள், விதவை கள் ஆதரவற்றவர்களாக உற்ற உறவு- களை தொலைத்து தவித்துக்கொண்டி ருப்போர் போன்றோருக்கு உடனடியாக என்னென்ன செய்ய வேண்டுமோ அவற்றை செய்வதற்கு உதவுவதென முடிவு எடுத்த னர். அதற்காக இயன்றளவு நிதியை தாமே வழங்குவதெனவும் தீர்மானித்தனர். அத்துடன் அன்று சமூகமளிக்காத தத்தம் நண்பர்களுக்கு அவற்றை தெரிவித்து அவர் களையும் இணைத்துக்கொள்வதற்கும் முடிவு செய்தனர். இவ்வாறு தாய் மண் ணில் இறுதியுத்தம் முடிவடைந்தகையுடன் கனடாவில் ஆரம்பமாகி இன்றுவரை ஓயாது தாய் மண்ணுக்காக செயற்பட்டுக் கொண்டிருக்கும் தொண்டுள்ளம் நிறைந்த ஓர் அமைப்புத்தான் அன்பு நெறி என்ற மனித நேய அமைப்பாகும்.

2009ம் ஆண்டிலிருந்து வடக்கு, கிழக்கில் மிகப் பரந்துபட்ட அளவில் செய்த மனித நேய உதவிகள் அதிகம். இதன் ஓர் அங்கமாகத்தான் கிழக்கு மாகாணத்தில் மண்மீட்பு போராட்ட காலத்தில் சிதைவ டைந்து போன பன்சேனை கிராமத்திற் கும் 2017ம் ஆண்டிலிருந்து தமது உத விக்கரங்களை நீட்டிவருகின்றனர். கதைப் பதற்கு மட்டுமே சாத்தியமான பல விட யங்களை அன்பு நெறியினர் களத்தில் மேலே விபரித்தவாறு வெற்றிகரமாகச்செயற் படுத்திக்கொண்டிருப்பதை காண முடிகி றது.

## அன்பு நெறியின் தனித்துவம்:

கனடாவிலிருந்து செயற்பட்டுக் கொண்டி ருக்கும் மனிதநேய அமைப்பான அன்பு நெறி தொடர்பாக எனது ஆழமான தேட லில் கண்டறிந்த விடயங்களை வாசகர்க ளுடன் பகிர்ந்து கொள்வது பயனுள்ளதாக அமையுமெனக் கருதுகின்றேன்.

## நெருக்கமான உறவு:

எமது வாழ்வியலில் நெருக்கமானது மட் டுமல்ல இறுக்கமானதும், ஆழமானதும், நீடித்து நிற்கக்கூடியதுமான உறவு பள்ளித் தோழர்களது உறவாகும். இவ்வாறு பாட சாலை மற்றும் பல்கலைக்கழகங்களில் சகபாடிகளாக இருந்தவர்களை பெருமள வுக்கு உள்ளடக்கி உருவான அமைப்புதான் அன்பு நெறியாகும். 2009ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த அமைப்பு பள் ளித்தோழமை என்ற அந்த நெருக்கமான உறவின் உண்மைத்தன்மையாக இருப் பதை காண முடிகிறது.

## மனிதநேயம்:

யாதும் ஊரே யாவரும் கேளீர் என்ற எமது தமிழர் பண்பாட்டிற்கு ஏற்ப மனித நேயம் என்ற இவர்களது நோக்கம் அமைப் பின் அச்சாணியாக உள்ளது. இதனால் தான் இவர்களது மனித நேய உதவிகள் வடக்கு கிழக்குக்கு வெளியே வெள்ள அனர்த்தம் ஏற்பட்டபொழுது களுத்துறை மாவட்ட மக்களுக்கும், தாய் மண்ணுக்கு வெளியே 2015, 2016ம் ஆண்டுகளில் தமிழ்நாடு, பாண்டிச்சேரி வெள்ள நிவாரண செயற்பாடுகளுக்கும் மனித நேய உதவி- களை வழங்கியுள்ளனர்.

## மனித வாழ்வின் மாட்சிமை:

தாய் மண் உதவிச் செயற்பாடுகளுக்கென அன்பு நெறியினால் சேர்க்கப்படும் நிதி முழுவதும் அதாவது நூறுவீத நிதியும் உதவிச்செயற்பாடுகள் நடைபெறும் களத் தில் அந்தந்த செயற்பாடுகளுக்கு பயன் படுத்துவதற்கு மட்டுமே இவர்களால் பயன் படுத்தப்பட்டு வருகிறது.

## செயற்பாட்டு குழு:

பன்சேனைக்கிராமத்தின் தேவைகளை தீர்மானிப்பது, தீர்மானித்தவற்றை நிறை வேற்றுவது தொடர்பாக அங்கே ஒரு அபிவிருத்தி செயற்பாட்டுக் குழு செயற் பட்டுக் கொண்டிருக்கிறது. இந்த பிரதே சத்தின் உதவித்திட்ட பணிப்பாளர் தலை மையில் இக்குழு இயங்குகிறது. அதில் பயனடையும் பன்சேனைக் கிராமத்தின் பிரதிநிதிகள், குறிப்பிட்ட திட்டங்களுடன் தொடர்புடைய அரச திணைக்களப் பிரதி நிதிகள் அல்லது அரச சார்பற்ற நிறுவ னங்கள் போன்றவற்றின் பிரதிகள் மற்றும் அன்பு நெறியால் நியமிக்கப்பட்ட பிரதி நிதிகளை உள்ளடக்கிய 15 பேர் கொண்ட குழுவாக அது செயற்படுகின்றது. இவர் கள் ஒன்று கூடித்தான் பன்சேனைக் கிரா மத்தின் தேவைகளை தீர்மானிப்பார்கள். அது மட்டுமன்றி அதனை செயற்படுத்தும் பொறுப்பும் அவர்களிடமே விடப்பட்டுள் ளது. நிதி, கண்காணிப்பு, ஆலோசனை, நெறிப்படுத்தல் போன்றவற்றை இங்கேயி ருந்து அன்புநெறி மேற்கொள்கிறது. காலத் திற்கு காலம் அன்பு நெறியின் உறுப்பி னர்கள் அங்கே நேரடியாகச் சென்றும் கண்காணித்து வருகின்றனர்.

அன்பு நெறியினர் கிழக்கு மாகாணத்தில் ஒரு எல்லைக்கிராமமான பன்சேனைக்கு உதவிக்கரம் நீட்டியது போல தற்பொழுது வடக்கு மாகாணத்தில் இன்னொரு எல் லைக்கிராமமான வவுனியா தெற்கில் செட்டிகுளம் கிராமத்திற்கும் உதவி கரம் நீட்ட ஆரம்பித்துள்ளார்கள்.

ariyaratnam.n@thaiveedu.com






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வீடு வாங்க விற்க...

10 வருட வீட்டுப்பரிசோதனை அனுபவத்துடன்

## வீட்டுப் பரிசோதகர் வீடு விற்பனை முகவரானால்...

**வாங்கப் போகிறீர்களா?**

- தரமான வீடு தவறிப்போகாது
- பிடித்த வீடு மலிவாய் கிடைக்கும்
- வாங்கியபின் ஏமாற்றங்கள் இல்லை
- பெருவருவாய் தரும் முதலீடு

**விற்கப் போகிறீர்களா?**

- இலவச வீட்டுப் பரிசோதனையும் ஆலோசனைகளும்
- விற்றபின் வரும் தடங்கல்கள் தவிர்ப்பு
- சந்தை விலைக்குக் குறையாத பெறுமதி
- உச்சப் பெறுமதிக்கான உபாயங்கள்

★ Cash incentive for referrals




**For Sellers**

Free Home Inspection!
Free Market Evaluation!
Free Home staging Cosultation!




**Please visit my new Website for Best tools**

**www.vela4homes.com**

**Detached**
3Br
3WR,
Fully upgraded
Best Value
**Ajax**




**Detached**
4BR
5WR
3 Garages
4100 sft
Best Value
**Pickering**

**Reduced**



**Detached**
4+3 BR
7 WR
3 Garages
7000 sft
Brand new
**Pickering**



Chairman's Club Award Winner 2015

Chairman's Club Award Winner 2017

Chairman's Club Award Winner 2016

HOMELIFE HIGHER STANDARDS

## Vela Subramaniam

Experienced Home Inspector
Sales Representative

Dir: 416-786-0760
info@vela4homes.com
www.vela4homes.com

**Homelife/Future Realty Inc.** Brokerage
Independently Owned and Operated
Bus: 416-264-0101 Fax: 905-201-9229
205-7 Eastvale Dr., Markham, ON L3S 4N8




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Brand New Never Lived In 1 Bm Condo In pickering for Sale

ASSIGNMENT SALE **$359900.00** ..... Occupancy closing May 2019

**EXCELLENT INVESTMENT ....Rental Guarantee!!!!!**

**Absolutely Stunning**Rarely Offered** In The Highly Anticipated San Francisco 3 Tower. Lavish , State Of The Art Recreation Facilities! Including Outdoor Pool, Hot Tub, Cabanas, Loungers And Fire Pits. Light Infused Lobby With 24 Hour Concierge. Fitness Area With Change Rooms And Sauna. <><>2 Mins To Pickering Go Station<><> And 401 Access, 4 Mins To Pickering Lake front-Marina, And Waterfront Trail, 5 Mins To Pickering Town Centre. VISIT patpush.com for more details..

Broker protected.....
PATPUSH 416-894-1187

*EASY TO RENT MINUTES AWAY FROM GO TRAIN... MINUTES TO DOWNTOWN TORONTO*




BRAND NEW CONDO APT IN PICKERING

Cottage. $488K



Lake Front ,2 Garage 100X200 ft

Scarborough




3 bm home with sep entry to Bsmnt excellent location, close to everything

INVESTMENT




Commercial Retail Unit/ Own or invest

**BUY OR SELL THROUGH PAT in 2019 & WIN 1WEEK TRIP FOR TWO in CARIBBEAN****

WIN WIN

HOME SWEET LOAN



Century 21 Affiliate Realty Inc.
Brokerage
80 Corporate Dr 208 Toronto On
416-290-1200

**Pat Pushpakanthan**
Broker
**416-894-1187**

MASTERS HALL OF FAME

** Ask for more detail and some condition apply. Or visit www.patpush.com.
Not intended to solicit existing listing. Each office individually owned & operated



5% Mortgage
TJT financial
Interest rate from
**2.79%**
416-894-1187

# RELAX INN

*Life's better while Relaxinn*



அன்பான உறவுகளே!
நீங்கள் - - -
தாயகம் செல்லும்போதும் சென்று திரும்பும் போதும் தங்கிச் செல்ல - - -
நீர்கொழும்பில் - ஓர் தரமான தங்கு விடுதி

***" Relax Inn Guest House "***
***52/25 St' Philipneris Mawatha***
***Negombo – Sri Lanka***
***( 9 km From Airport)***

**வசதிக்கேற்ப,சொகுசுக்கேற்ப, சுகாதாரத்திற்கு ஏற்ற அமைவிடம்.**

சேவைகள் :
[illegible]

வசதிகள் :
1 இலிருந்து 50 பேர் [illegible], kitchen, hot water, attached washrooms,
[illegible]

**மோகன் :(416) 436 0282, 94 71 214 2761 சிவா : (416) 277 9471**
**பதிவுகள்: *Air bnb | Info@relaxinngh.com | www.relaxinngh.com***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜாக்டோ ஜியோ

# ஆசிரியர்கள், அரச ஊழியர்களின் பணிப் புறக்கணிப்பு

- அ. றொனிராஜன் -

தமிழ்நாட்டில் கடந்த ஜனவரி மாதம் ஒன்பது நாட்களாக நடைபெற்ற ஆசிரியர்கள் மற்றும் அரச ஊழியர்களின் பணிநிறுத்தம் மாணவர்களின் நலனை முன்னிறுத்தி முடிவுக்கு வந்துள்ளது. இந்திய மாநிலங்களில் தமிழ்நாடு எப்பொழுதும் ஒரு கொதிநிலையிலேயே காணப்படுவது வழக்கம். காவிரிநீர் பங்கீடு, நெடுவாசல், நீட் தேர்வு, கோடநாட்டு கொலைகள், என்ற வரிசையில் ஜாக்டோ ஜியோ அமைப்பினரின் போராட்டமும் முழுக்கவனத்தையும் தமிழ்நாட்டுப் பக்கம் திருப்பியிருந்தது. ஜாக்டோ ஜியோ என்பது 'அரசஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் கூட்டமைப்பு' என்பதாகும். இதில் 51 ஆசிரியர் சங்கங்களும் 125 அரச ஊழியர்களின் சங்கங்களும் உள்ளன. ஒன்பது அம்சக்கோரிக்கைகளை முன்வைத்து 2018 ஆகஸ்ட் மாதம் இவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். உயர் நீதிமன்றம் தலையிட்டதால் போராட்டம் ஒத்தி வைக்கப்பட்டது. வாக்குறுதி அளித்தபடி தமிழக அரசு கோரிக்கைகளை நிறைவேற்றவில்லை. பின் 2018 டிசம்பர் மாதம் மேற்கொள்ளப்படவிருந்த இந்த போராட்டம் 'கஜா' புயலைக் காரணம் காட்டி பிற்போடப்பட்டது. இவர்கள் ஜனவரி 22ம் திகதி மு.ப 10.30 மணியில் இருந்து 8 இலட்சம் அரச பணியாளர்கள் ஒன்பது அம்சக் கோரிக்கையை முன்வைத்து காலவரையறையற்ற போராட்டத்தை தமிழகம் எங்கும் முன்னெடுத்தனர். முதல்நாள் 70 வீதமான ஊழியர்கள் பணிக்குச் செல்லவில்லை. இதனால் அத்தியாவசியப் பணிகள் உட்பட அரச சேவைகள் அனைத்தும் பாதிக்கப்பட்டன. 30 வீதமான ஆசிரியர்களே பள்ளிக்கு வந்தனர். அதிலும் கிராமப்புறப் பள்ளிகள் வெறிச்சோடிக் காணப்பட்டன. போராட்டம் வலுப்பெற வலுப்பெற இந்த எண்ணிக்கையிலும் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டது. 30 இடங்களில் சாலை மறியல்கள் நடைபெற்றன. இந்தபோராட்டம் ஒட்டுமொத்த அரசஊழியர்களின் போராட்டமாக அமைந்தாலும் அதில் ஆசிரியர்களின் உள்ளடக்கமே அதிகம் கவன ஈர்ப்பைப் பெற்றது. இதற்கு காரணம் +2 மாணவர்களுக்கு இறுதிப்பரீட்சை நெருங்குவதால் இந்த கவன ஈர்ப்பு அவர்கள் மீது அதிகம் குவிந்தது.

ஜாக்டோ ஜியோ அமைப்பினர், 01.01.2003ல் கொண்டுவரப்பட்ட புதிய ஓய்வூதியத்திட்டத்தை இரத்து செய்து, பழைய ஓய்வூதியத் திட்டத்தை மீண்டும் கொண்டு வர வேண்டும், 21 மாத ஓய்வூதிய நிலுவைத் தொகையை திருப்பிக் கொடுக்க வேண்டும், இடைநிலை ஆசிரியர்களுக்கு, மத்திய அரசின் ஆசிரியர்களுக்கு இணையான சம்பளத்தைக் கொடுத்தல், தொடக்கக் கல்வியை இடைநிலை மற்றும் மேல்நிலைப்பள்ளியுடன் இணைப்பதை தவிர்த்தல், தொடக்கக் கல்விச் செயலாளரை அந்த துறையில் இருந்து மாற்றுதல், மூன்றரை இலட்சம் பணியிடங்களை நிரப்புதல், சிறப்புக்கால முறை ஊதியம் பெறும் சத்துணவு, அங்கன்வாடி கிராம ஊழியர் உள்ளிட்ட அனைவருக்கும் வரையறுக்கப்பட்ட காலமுறை ஊதியம் வழங்குதல், இளைஞர்களின் வேலைவாய்ப்பை பறிக்கும் அரசாணையை ரத்து செய்தல், 3500 தொடக்கப்பள்ளிகளை உயர் நிலைப் பள்ளிகளுடன் இணைப்பதை நிறுத்துதல், 3500 சத்துணவு மையங்களை மூடும் திட்டத்தைக்கைவிடுதல், L.K.G, U.K.G போன்ற வகுப்புக்களில் இடைநிலை ஆசிரியர்களை பணிக்கு அமர்த்துவதை நிறுத்துதல் போன்ற பல அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து போராட்டத்தில் இறங்கினர். இதில் புதிய ஓய்வூதியத் திட்டத்தை இரத்துச் செய்து பழைய ஓய்வூதியத் திட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துதல் என்ற கோரிக்கையே இங்கு முக்கியம் பெறுகின்றது.




புதிய ஓய்வூதியத்திட்டத்தின் பிரகாரம் தமது சம்பளத்தில் 10 சதவீதத்தை அரச ஊழியர்கள் செலுத்த வேண்டும். 14 சதவீதத்தை அரசு செலுத்தும். இந்த புதிய பென்சன் திட்டத்தின் கீழ் ஐந்து இலட்சத்து நாநூறு பேர் பணிக்கு உள்ளீர்க்கப்பட்டனர். இன்று வரை 28 கோடி ரூபாய் பணத்தை அரசு பிடித்துள்ளது. இந்த பணத்திற்கான வட்டியும் சேர்த்து அதற்கான அறிக்கையை இதுவரை அரசு வெளியிடவில்லை என குற்றம் சாட்டுகின்றனர் ஆசிரியர்கள் மற்றும் அரச ஊழியர்கள்.

இந்த நிலையில் போராட்டக்காரருடன் பேசி தீர்வைக் காண விரும்பாத அரசு, அரச ஊழியர்களின் போராட்டத்தை முடித்து வைக்க பல்வேறுபட்ட உத்திகளைக் கையாண்டது. வேலை நிறுத்தத்தில் ஈடுபடும் ஆசிரியர்களின் விபரங்களை உடனடியாக மின்னஞ்சலில் அனுப்ப வலியுறுத்தப்பட்டது. இது பற்றி தமிழ் நாடு தொடக்கப்பள்ளி இயக்குநர் சார்பில் அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பப்பட்டது. வேலை நிறுத்தத்தில் ஈடுபடும் ஆசிரியர்களின் ஊதியத்தில் பிடித்தம் செய்யவும் பணிக்கப்பட்டது. இதனை மீறி ஊதியத்தை விடுவிக்கும் பணப்பட்டுவாடா அலுவலகர்கள் மீதும் சட்ட நடவடிக்கை பாயும் என்று எச்சரிக்கப்பட்டது. தமிழக அரசு 7,000 ரூபாய்க்கு தற்காலிக ஆசிரியர்களை பணிக்கமர்த்த நடவடிக்கை எடுத்தது. இந்த தொகையை ஏற்று பணி யாற்ற புதியவர்கள் தயக்கம் காட்டியதால் 10,000 ரூபாயாக சம்பளம் அதிகரிக்கப்பட்டது.

போராட்டத்திற்கு முன்னதாகவே வழக்கறிஞர் சேகரன் என்பவரால் நீதி மன்றத்தில் சமூகநல வழக்குத்தொடரப்பட்டது. ஜனவரி 7ம் திகதி நீதிபதிகள் போராட்டத்திற்கு இடைக்காலத் தடைவிதித்தனர். இந்த தடையையும் மீறி அவர்கள் 22.01.2019 அன்று போராட்டத்தில் குதித்தனர். வழக்கறிஞர் சேகரன் நீதிமன்றத்தில் அவமதிப்பு வழங்கத் தொடர்ந்தார். அதற்கமைய 'வேலை நிறுத்தப் போராட்டத்தை' அரச ஊழியர்கள் ஒரு ஆயுதமாக பயன்படுத்தக் கூடாது எனவும். போராட்டத்தில் ஈடுபடும் ஊழியர்களை ஒரு மணி நேரத்தில் பணியில் இருந்து நீக்கமுடியும் என உயர் நீதிமன்றம் எச்சரிக்கை விடுத்ததோடு ஜாக்டோ ஜியோ போராட்ட ஒழுங்கமைப்பாளர்களை நேரடியாக நீதிமன்றில் ஆஜராகும்படியும் கோரியிருந்தது. இதற்கமைய நீதிமன்றத்தில் ஆஜரான தொழிற்சங்கப் பிரதிநிதிகளிடம், போராட்டத்தை நிறுத்தி அரச ஊழியர்கள் பணிக்குத் திரும்பும் பட்சத்தில் தமிழ்நாடு தலைமைச் செயலரை நேரடியாக அழைத்து பேச்சுவார்த்தை நடத்தி உரிய தீர்வு காணப்படும் என நீதிபதி உறுதியளித்தார். இதற்கு போராட்டக்காரர்கள் தயக்கம் காட்டினர்.

இது தவிர, அரச ஊழியர்கள் பற்றி பல வேறு விமர்சனங்கள் மக்களாலும் ஊடகங்களாலும் அரசியல்வாதிகளாலும் முன் வைக்கப்பட்டன. இது ஒரு சுயநலமிக்க போராட்டம், அடிப்படையில் பணத்துக்கான போராட்டம், ஆசிரியர்கள் தனியார் பாடசாலை ஆசிரியர்களைக் காட்டிலும் அதிக சம்பளம் வாங்குகின்றனர், புதிய ஓய்வூதியத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு 16 ஆண்டுகளின் பின் போராடுகின்றனர். எதிர்க்கட்சிகளின் தூண்டுதலின் பெயரிலேயே இந்த போராட்டம் நடைபெறுகின்றது. அடிப்படையில் இது தேர்தலுக்கான போராட்டம், ஆசிரியர்களின் பிள்ளைகள் தனியார் பள்ளிகளில்தான் கற்கின்றனர்,

தொடர்தல் 78ம் பக்கம்

சொர்க்கமே என்றாலும் அது சொந்த வீடு போல வருமா...



**Uthayan Alex Sivasambu** B.Sc. (Hons), M.B.A
Broker

**Ottawa: 613.276.SALE (7253)**
**Toronto: 416.659.SELL (7355)**
alex-sivasambu@coldwellbanker.ca, www.sivasamburealty.com

COLDWELL BANKER

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

TBC Toronto Business College



You May Be Eligible For A
GOVERNMENT GRANT OF $28000
FOR STUDYING & LIVING
(unemployment or maternity)
திருப்பிச் செலுத்தத் தேவையில்லை

ACCOUNTING & PAYROLL ADMIN.
35 Weeks Diploma (Co-op available)
Immediate Job Opportunities

BUSINESS ADMINISTRATION
26 Weeks Diploma

COMPUTERIZED ACCOUNTING
26 Weeks Diploma (Co-op available)
Immediate Job Opportunities

EARLY CHILDCARE ASSISTANT (ECA)
Immediate Job Opportunities
40 Weeks Diploma
Accredited by the National Association of Career Colleges

FOOD SERVICE ASSISTANT
Week End Classes
Starts Jan. 26th, 2019

MEDICAL OFFICE ADMIN.(MOA)
32 Weeks Dipolma

PERSONAL SUPPORT WORKER (PSW)
Immediate Job Opportunities
28 Weeks Certificate
Accredited by the National Association of Career Colleges

PERSONAL SUPPORT WORKER (WEEK END)
38 Weeks Certificate
Immediate Job Opportunities

Second Career candidates &
International Students Welcome

PART TIME COURSES
Windows 2010, Word 2016, Excel 2016
Power Point 2016, Access 2016
Quick Books 2017
Sage 50 Accounting 2017
Sage 300 2017, Auto CAD
First Aid & CPR
Food Handler Certification

- 100% Instructor Led Training
- Student Friendly Environment
- Placement Assistance
- Small Class Sizes
- Ample Free Parking
- TTC Accessible

416-291-5155 / 416-500-5300
4465 Sheppard Ave. East #208
( Sheppard & Brimley ) Scarborough
www.tbcollege.com t.businesscollege@gmail.com
(Registered as a Private Career College under the Private Career Colleges Act 2005)

# ஜாக்டோ ஜியோ...

77ம் பக்கத் தொடர்ச்சி...

கல்வியை சேவையாக பார்க்கவேண்டுமே தவிர அதைத் தொழிலாக பார்க்கக்கூடாது. தமக்காக போராடும் ஆசிரியர்கள், மாண வர்களின் நலன்கருதி போராட்டம் நடத்தி யுள்ளார்களா? பொறியலாளர்கள் கூட ஆறாயிரம், ஏழாயிரம் ரூபாய்க்கு வேலை செய்யும்போது இவர்களுக்கு இந்த சம்ப ளம் போதாதா? போன்ற பல்வேறுபட்ட விமர்சனங்களின் மத்தியில் அரச ஊழி யர்கள் தமது பக்க நியாயத்தையும் முன் வைக்கின்றனர்.

2018ம் ஆண்டு புதிய வேலைவாய்ப்புகள் எதுவும் அரசு உருவாக்கவில்லை, மாறாக பணிக்குறைப்பு, சம்பளக்குறைப்பு போன்ற அரச ஊழியர்களைப் பாதிக்கும் செயற்பாடுகளே மேற்கொள்ளப்பட்டன, பணத்தைக் காரணம் காட்டி போராட் டத்தை திசை திருப்புகின்றனர் ஆனால் முக்கியமான பிரச்சினை பணம் அல்ல, ஓய்வூதியம் தொடர்பானதாகும் இந்த ஒன் பது அம்சக் கோரிக்கைகளில் நிதி சாராத கோரிக்கைகளும் அமைந்துள்ளன, 31/2 இலட்சம் பணியிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளன அவற்றுக்காகவும் சேர்த்தே நாம் போராடுகின்றோம். இன்னும் கால அவ காசம் தேவை என அரசு கேட்கின்றது ஆனால் இரண்டு வருடங்கள் ஓடிவிட்டன என்கின்றனர் போராட்டக்காரர்கள். புதிய பென்சனுக்கான போராட்டம் இளைய தலைமுறைக்கான போராட்டம், I.A.S, I.P.S அதிகாரிகளுக்கு பத்திரிகை வாங்க வும், e paper பயன்பாட்டிற்கும் நிதி கொடுக் கின்றது அரசு, ஆனால் ஆசிரியர்களுக்கு புத்தகங்களை வாங்க அரசு நிதி கொடுக் கின்றதா? I.A.S, I.P.S அதிகாரிகளுக்கு சம்பள நிலுவையைக் கொடுத்துள்ளனர். ஆனால் எமக்கு அந்த நிலுவையைக் கொடுக்க அரசு பின்நிற்கின்றது, தனியார் கல்லூரிகளில் திறமையான ஆசிரியர்கள் கிடையாது எனவே அவர்கள் பெறும் சம் பளத்தை எங்களின் சம்பளத்துடன் கொண்டு வந்து ஒப்பிடமுடியாது, அரசியல்வாதிக ளுக்கு மட்டும் சம்பளத்தை 105,000 ரூபா யாக உயர்தியுள்ளனரே! - என்றவாறாக அவர்கள் பக்க நியாயங்கள் அமைந்தி ருக்கின்றன.

ஆசிரியர்கள் மற்றும் அரச ஊழியர்களின் போராட்டம் தொடர்பாக, தமிழக அரசின் கல்வி அமைச்சர் செங்கோட்டையன், அமைச்சர் ஜெயக்குமார் போன்றோரின் எதிர்வினைகள் பின்வருமாறு அமைந்தி ருந்தன.

அரச ஊழியர்களின் கோரிக்கைகளை நிவர்த்தி செய்ய எம்மிடம் போதிய நிதி இல்லை, மக்களிடம் இருந்து அறவிடப்ப டும் வரிப்பணத்தில் 71 சதவிகிதத்தை சம் பளமாகவும் பென்சனாகவும் கொடுத்து மீதமுள்ள 29 சதவிகிதத்தில்தான் மக்களுக் கான நலத்திட்டங்களை மேற்கொள்கின் றோம், அவர்களின் கோரிக்கைகளை அரசு நிறைவேற்ற போதிய கால அவகாசத்தை அவர்கள் எமக்கு வழங்கவேண்டும். தி.மு.க, கம்யூனிசக்கட்சி போன்றன இந்தப் போராட் டத்தை தூண்டிவிடுகின்றன. அரசுக்கு 3 இலட்சம் கோடி ரூபா கடன் உள்ளது. அதற்காக அரசு வட்டி கட்டிக்கொண்டிருக் கின்றது. அரசின் நிதி நிலமை எவ்வாறு உள்ளது என்பது அவர்களுக்குத் தெரியும். தெரிந்துகொண்டும் போராடுகின்றனர். சட்டியில் இருந்தால்தானே அகப்பையில் வரும், பழைய பென்சன் திட்டத்தை புதி யவர்கள் கேட்கவில்லை பழையவர்கள் தான் கேட்கின்றனர். பழைய பென்சன் திட்டத்தை மீளவும் கொண்டு வந்தால் 20 கோடி கடன் பெறவேண்டி வரும். புதிய வரிகளை விதிக்கவேண்டி வரும், இவ் வாறுதான் போக்குவரத்து ஊழியர்கள் சம்பள உயர்வைக்கேட்டு போராடிய போது வேறுவழியின்றி போக்குவரத்து கட்டணத்தை உயர்த்தினோம், ஆசிரியர்கள் அரசை மிரட்டுகின்றனர் என்றவாறு அவர்களின் குற்றச்சாட்டுக்கள் அமைந்திருந்தன.

போராட்டக்காரர்கள் முதலமைச்சர் தம்மை அழைத்து நேரடியாகப் பேச வேண்டும் என எதிர்பார்த்த போதும் அந்த சந்திப்பு கைகூடவில்லை. மாறாக அரச ஊழியர்க ளின் போராட்டத்தை ஒடுக்குவதில் முனைப் பாக நின்ற அரசு, தனது அத்துமீறலை தொடர்ச்சியாக அரச ஊழியர்கள் மீது பிரயோகித்தது. 1815 பேர் மீது வழக்குத் தொடர்ந்தது. 3000 பேரை சிறையில் அடைத்தது. சிற்றுண்டிச்சாலையில் உணவு அருந்திக்கொண்டிருந்த பெண்கள் வலுக் கட்டாயமாக பொலிஸ் வாகனங்களில் ஏற் றப்பட்டனர். 3520 பேரின் பணி இடைநிறுத் தம் செய்யப்பட்டுள்ளனர். போராட்டம் இடை நிறுத்தப்பட்டதன்பின் தொழிற்சங்க செயற் பாட்டில் ஈடுபட்ட முன்னணி ஆசிரியர் கள் பலர் தூர இடங்களுக்கு இடமாற்றம் செய் யப்பட்டனர்.

இந்த ஒன்பது நாள் போராட்டத்தில் பெற் றோர், அரச ஊழியர்களுக்கு எதிரான கருத்தைக் கொண்டிருந்த போதும் ஈற்றில் ஆசிரியர்களுக்கு ஆதரவாக பெற்றோரும் மாணவர்களும் போராட்டத்தில் இணைந்து கொண்டதைக் காணமுடிந்தது. மாணவர் கள் தமக்கு புதிய ஆசிரியர்கள் வேண்டாம் பழைய ஆசிரியர்கள்தான் வேண்டும் என்ற கோசத்தை முன்வைத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இறுதி நாட்களில் மத்திய அரசு ஊழியர்கள், நீதித்துறை ஊழியர்க ளும் இவர்களுக்கு ஆதரவாக ஆர்ப்பாட் டத்தில் இறங்கினர்.

இந்த நிலையில் தமிழக அரசின் இயலாத் தன்மையை, தமிழ் நாட்டில் தலை விரித் தாடும் வேலையில்லாப் பிரச்சினையை, ஊடக அறம் தொழிற்பட்ட விதத்தை எனப் பல விடயங்கள் பற்றி ஆழமாக சிந்திக்கத் தூண்டிய இந்த போராட்டம், மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டும் நீதி மன் றத்தின் உறுதிமொழியை ஏற்றும் போராட் டத்தை தற்காலிகமாக முடிவுக்கு கொண்டு வந்துள்ளதாக ஜாக்டோ ஜியோ அமைப் பினர் அறிவித்துள்ளனர். போராட்டக்கார- ரில் பணி விலக்கப்பட்டுள்ள அனைத்து ஊழியர்களையும் பணிக்கு உள்ளீர்த்து, பிடித்தம் செய்யப்பட்டுள்ள அவர்களின் சம்பளத்தைக் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை அவர்கள் முன்வைத்துள் ரம் பேர் சேர்ந்து 39 நாட்கள் போராட்டம் நடத்தினோம். 2003ல் அம்மாவின் ஆட்சியில் வீடு புகுந்து கைது செய்யப்பட்டு சிறை யில் அடைக்கப்பட்டோம். 30 நாட்கள் சிறையில் இருந்தோம். 1 இலட்சத்து 70 ஆயிரம் பேர் பணி இடைநிறுத்தம் செய் யப்பட்டோம். ஆனால் அப்போதைய அரசு அனைவரையும் விடுதலை செய்து பணி இடைநீக்கப்பட்ட காலத்தை பணிக்கால மாக அறிவித்தது. அதே போன்று எடப்பாடி அரசும் அவ்வாறு நடந்துகொள்ள வேண்டு மென அவர்கள் கேட்கின்றனர்.’ இந்த அரசு தமக்கு முதுகில் குத்தியுள்ளதாக ஆதங் கப்படுகின்றனர் போராட்டக்காரர்கள். தற் போது இந்தியாவின் நாடாளுமன்றத்திற் கான தேர்தல் நெருங்கி வரும் நிலையிலும், இந்திய பாகிஸ்தானிய போர்ப் பதட்ட நிலையிலும் இவர்கள் ஓரளவு மறக்கப்ப டலாம். ஆனால் கோரிக்கைகள் நிறை வேற்றப்படாத நிலையில் மீண்டும் அவர் கள் தெருவுக்கு இறங்கி போராடலாம். அரசின் பக்கத்திலும் சில நியாயங்கள் இருந்தாலும் போராட்டக்காரர்கள் கேட் டதைப் போன்று முதலமைச்சர் இறங்கி வந்து பேச்சு நடத்துவது ஆக்கபூர்வமான விளைவுகளையும் பரஸ்பரம் நம்பிக்கை யையும் ஏற்படுத்தும். அரசியல்வாதிகள் அனைவரும் மக்களால் தெரிவு செய்யப் பட்ட, மக்களின் பிரதிநிதிகள் என்பதை உணர்ந்து அதை நடைமுறையில் காண்பிப் பது ஜனநாயகத்தின் அடிப்படை அம்சங் களில் ஒன்றல்லவா?



ronyrajan.a@thaiveedu.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தவறுகளால் உரம் பெறுதல்

எனது தொழில் வாழ்க்கையில் பாரதூரமான பின்னடைவுகள் ஏற்படவில்லையென்று சொல்லியிருந்தேன். அதன் கருத்து எவ்வித இடையூறுமின்றி மிக இலகுவாக முன்னேறி வந்தேன் என்பதல்ல. அந்த இடையூறுகள் ஏற்படுவதற்கு எனது கவனயீனம், எனது நிலைப்பாட்டை ஆணித்தரமாகச் சொல்வதற்குத் தயங்கியமை என்பன காரணங்களாக இருந்திருக்கின்றன. அவற்றை நான் சரியாகப் புரிந்துகொண்டமையாலும் மேலதிகாரிகள் என்னைப் புரிந்துகொண்டவர்களாகக் கடுமைகாட்டாததாலும் பாரதூரமான பாதிப்புகள் ஏதும் ஏற்படாது கௌரவத்துடன் எனது தொழிலில் முன்னேற முடிந்தது. அப்படி நிகழ்ந்த முதலாவது சம்பவம், நான் ஒலிச்சித்திரம் தயாரித்த நாட்களில் இடம்பெற்றது.

தயாரிப்பு உதவியாளர் வேலைக்கோ அல்லது அறிவிப்பாளர் பணிக்கோ நான் காலை 6.00மணி ஷிஃட்டுக்குச் செல்லும் நாட்களில் அறிப்புப்பணியாயின் கட்டாயமாகத் தமிழ்த் தேசியசேவை ஒலிபரப்பாகும் சீ-2 கலையகத்திலும் தயாரிப்பு உதவியாளர் பணியாயின் சில நாட்களில் சீ-2 கலையத்திலும் வேலைசெய்வேன். தயாரிப்பு உதவியாளனாக சீ-2 கலையகத்தில் பணிபுரியும் நாட்களில் ஒலிப்பதிவுக் கலையகங்களில் நிகழ்ச்சிகளை ஒலிப்பதிவுசெய்யும் வேலை இருக்காது. காலை 8.00 மணிக்குத்தேசிய சேவை முடிவடைந்தால் நண்பகல் 12.00 மணிக்கு மதிய ஒலிபரப்பு ஆரம்பிக்கப்படும் வரை சீ-2 கலையகத்தில் எவ்வித செயற்பாடுகளும் இருக்காது. பராமரிப்பு வேலைகள் நடைபெறும் நாட்களில் மட்டும் தொழில்நுட்பவியலாளர்கள் தமது பணிகளை மேற்கொள்வார்கள். காலை 8.00 மணி முதல் மதியம் 12.00 மணி வரையிலான அந்த இடைப்பட்ட நேரத்தில்தான் நான் சீ-2 கலையகத்திலிருந்து திரைப்படங்கள் ஒலிப்பதிவு செய்யப்பட்டிருக்கும் நாடாக்களைக் கேட்டு, ஒலிச்சித்திரத்தில் இடம் பெறுவதற்கான காட்சிகளைத்தெரிவு செய்வது வழக்கம். ஒலிநாடாக்காப்பகத்திலிருந்து (library) திரைப்படங்கள் ஒலிப்பதிவுசெய்யப்பட்டிருக்கும் நாடாக்களை வெளியே எடுத்தால் ஒலிச்சித்திர நிகழ்ச்சியைச் செய்து முடிக்கும்வரை அவற்றை நான் திருப்பிக் கொடுப்பதில்லை. அதற்கு இரண்டு கிழமைகளாவது எடுக்கும். சீ-2 கலையத்தில் அன்றாட ஒலிபரப்புக்கான இசைத்தட்டுகள், ஒலி நாடாக்கள் என்பவற்றை வைத்திருக்கும் அலமாரியில்தான் அவற்றை வைத்திருப்பேன். ஒரு திரைப்படம் அரை மணித்தியாலத்திற்கு ஓடக்கூடிய ஐந்து அல்லது ஆறு ஒலிநாடாக்களில் ஒலிப்பதிவு செய்யப்பட்டிருக்கும். என்னுடன் அப்போது எல்லோருமே மிக நட்பாகப் பழகுவார்கள். நான் மிக இளவயதானவன் என்பதால் மிக அன்பாக இருப்பார்கள். எனது சகல முயற்சிகளுக்கும் ஆதரவளித்து உற்சாகப்படுத்துவார்கள். எனவே நான் வேலைத்தலத்தில் பணிபுரிபவர்களால் எனக்குப் பிரச்சினைகள் ஏற்படுமென்று எதிர்பார்க்கவில்லை. எனது பணிகளை உற்சாகமாகச் செய்துகொண்டிருந்தேன். ஒருநாள் நான் சீ-2 கலையக அலமாரியில் வைத்திருந்த திரைப்படம் பதிவு செய்யப்பட்டிருந்த நாடாவொன்றைக் காணவில்லை. அந்த வயதில் எனக்கு அது அதிர்ச்சியாக இருந்தது. நாடா தொலைந்ததால் அந்தத் திரைப்படத்தை ஒலிச்சித்திரமாகச் செய்யமுடியாதேயென்ற கவலை ஒருபுறம், நாடாவைத் தொலைத்தமைக்காக என்மீது என்ன நடவடிக்கை எடுப்பார்கள் என்பதே எனக்குப் பயத்தை உண்டாக்கியது. ஏதோ மாபெரும் தவறிழைத்துவிட்டது போன்ற குற்றஉணர்வு. ஏனெனில், நடைமுறைப்படி நான் நாடாவைக் காப்பகத்திலிருந்து வெளியே எடுத்தால் அன்றே அவற்றைத் திருப்பி ஒப்படைத்துவிடவேண்டும். தயாரிப்பாளர்களென்றால் அவர்களது மேசை இலாச்சிகளுக்குள் நாடாக்களைப் பூட்டிவைத்துவிட்டு வசதியானநேரத்தில் திருப்பிக் கொடுப்பார்கள்.



கலாநிதி. கே.எஸ். நடராஜா

நான் அப்போது தயாரிப்பு உதவியாளன். எனக்கென்று மேசையோ இருக்கையோ கிடையாது. என்னசெய்வதென்று தெரியாமல் நான் குழப்பமான மனநிலையிலிருந்த போது, ஜோர்ஜ் சந்திரசேகரன், என்னிடம் “இனித்தான் ஒலிபரப்பு நிலையத்தில் பணியாற்றுபவர்களின் உண்மையான முகங்களைப் பார்க்கப்போகிறீர், இவ்வளவு நாட்களும் நீர் சின்னப்பையன்தானே, எமக்குப் போட்டியாக இருக்கமாட்டாரென்று பெரிதாக எதையும் எடுத்துக்கொள்ளாதவர்கள் இப்போது நீர் படிப்படியாக அறிவிப்பாளராகி நிகழ்ச்சிகளையும் செய்யத் தொடங்கியதும் உம்மைக் கவனிக்கத் தொடங்கிவிட்டார்கள்” என்று சொன்னார். அதிலிருந்த உண்மையைப் போகப்போக நான் உணர்ந்துகொண்டேன். நிச்சயமாக அந்த ஒலிநாடாவை சீ-2 கலையகத்திற்குள் வந்து செல்லக்கூடிய தமிழ்ச்சேவையில் பணிபுரியும் யாரோ ஒருவர்தான் எடுத்து மறைத்திருக்கவேண்டும். ஏனெனில், அந்த நாடாவை வெளியே கொண்டுசென்று எதுவும் செய்ய இயலாது. அத்தகைய பெரிய ஒலிப்பதிவு நாடாக்களைப் உபயோகித்து ஒலிப்பதிவுகளை மேற்கொள்ளும் வசதிகளைக்கொண்ட ஒலிப்பதிவுக் கூடங்கள் விரல்விட்டு எண்ணக்கூடியளவு குறைவாகவே இருந்தன. அதனால் அதை வெளியே விற்க முடியாது. மேலும் நிலையத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகள் அதிகமாக இருப்பதால் அவற்றைமீறி அந்த நாடாவை வெளியே கொண்டுசெல்ல முயற்சித்து, அகப்பட்டுத் தனது வேலையை இழக்கும் நிலைக்கு யாரும் போகமாட்டார்கள். எனவே இது முழுக்க முழுக்க எனக்கு இக்கட்டை உண்டாக்கும் நோக்கத்துடன் யாரோ ஒருவர் செய்த வேலையென்பதைப் புரிந்துகொண்டேன்.

நான் மிகவும் கவனக்குறைவான வேலையைச் செய்துவிட்டேன். இது எனது முன்னேற்றத்தைப் பாதிக்குமென்றெல்லாம் மனத்தைக் குழப்பிக்கொண்டேன். கல்லூரியிலிருந்து நேராக வேலைக்கு வந்த ஒருவனின் மனநிலை அனேகமாக அப்படித்தான் இருக்கும். சிறிய விடயங்களே பெரிதாகப் பயமுறுத்தும். காலம் செல்லச்செல்ல எனக்கே அந்தச் சம்பவத்தை நினைத்தால் சிரிப்பு வரும். எத்தனை பெரிய தவறான விடயங்களைச் செய்துவிட்டும் எந்தவித குற்ற உணர்வுமற்றவர்களாக, மேலும் குறுக்குவழிகளில் முன்னேற முயல்பவர்களைப் பார்க்கும்போது நான் ஒலிநாடாவைத் தொலைத்தபோது அடைந்த பதைபதைப்பு சிறுபிள்ளைத்தனமாக இருக்கும். பின்னர் நான் நாடா வைப்பகப் பொறுப்பாளருடன் பேசி, அவரது ஆலோசனைப்படி கொழும்பு கோட்டைக்குச்சென்று ஒலிப்பதிவு உபகரணங்கள் விற்கும் ஒரு கடையில் எழுபத்தைந்து ரூபாவிற்கு ஒலிநாடாவொன்றை வாங்கி வைப்பகத்தில் கொடுத்தேன். அந்த நேரத்தில் அது மிகப்பெரிய தொகை. தயாரிப்பு உதவியாளனாக எனது மாதச் சம்பளமே 240 ரூபா. நான் பகுதிநேர அறிவிப்பாளனாகப் பணியாற்றுவதன் மூலமும் மற்றும் உரைச்சித்திர நிகழ்ச்சிகளில் பங்குபற்றுவதன் மூலமும் மாதத்துக்கு நூறு ரூபா மட்டில் மேலதிகமாக உழைத்தேன். அப்போது எழுபத்தைந்து ரூபா வென்பது என்னைப்போன்ற ஒருவர் ஓர் அறையில் இன்னொருவருடன் தங்கி, கடைகளில் சாப்பிடுவதற்கான ஒருமாதத்துக்கான செலவு.

உண்மையில் நான் அப்படிப் பதட்டப்பட்டு ஒலிநாடாவை வாங்கிக் கொடுத்திருக்கத் தேவையில்லையென்பதைப் பின்னாட்களில் புரிந்துகொண்டேன். பல தயாரிப்பாளர்கள் எத்தனையோ ஒலிநாடாக்களைத் தொலைத்திருக்கிறார்கள். அவர்கள் யாருமே அதைப் பாரதூரமாக எடுக்கவில்லை. அவர்களுக்கு அதனால் எவ்விதமான பாதிப்பும் ஏற்பட்டதில்லை.

மற்றொரு சம்பவம். இது சற்றுப் பாரதூரமானது.

1970களின் முற்பகுதி. எந்த ஆண்டென்பதைக் குறிப்பாகச் சொல்லமுடியவில்லை. ஒரு புதுவருடப்பிறப்பிற்கு முதல்நாள் மாலை. நான் சீ-2 கலையகம் தேசியசேவையில் நிகழ்ச்சித் தயாரிப்பு உதவியாளனாகப் பணியாற்றிக்கொண்டிருந்தேன். அறிவிப்பாளராக சற்சொரூபவதி நாதன். இரவு 7.00 மணியென்று நினைக்கிறேன். பொலிசாரும் நாமும் என்னும் நிகழ்ச்சி. மிஸ். நாதன் அந்நிகழ்ச்சிக்கான அறிவிப்பைச் செய்ய, நான் அந்த நிகழ்ச்சி பதிவாகியிருந்த ஒலிநாடாவை இயக்க, பொலிசாரும் நாமும் நிகழ்ச்சி ஒலிபரப்பாகத் தொடங்கியது. தேசியசேவையில் ஒலிபரப்பாகும் பெரும்பாலான நிகழ்ச்சிகள் ஏற்கனவே ஒலிப்பதிவு செய்யப்பட்டவையாகவோ அல்லது வேறு கலையகங்களில் நடக்கும் போது அந்தக் கலையகங்களிலிருந்து சீ-2வினூடாக நேரடியாக ஒலிபரப்பப்படுவனவாகவோ இருக்கும். ஆகவே அறிவிப்பாளர்கள் ஆரம்ப அறிவிப்பைச் செய்து, நிகழ்ச்சி ஆரம்பமானதும் தமது அறையைவிட்டு வெளியே வந்து நிகழ்ச்சித் தயாரிப்பு உதவியாளர்களின் பகுதியிலிருந்து கவனித்துக் கொண்டிருப்பார்கள்.

அன்று வழக்கம்போல மிஸ். நாதன் நிகழ்ச்சித் தயாரிப்பு உதவியாளர்களின் அறைக்கு வந்தார். அன்றிரவின் இரண்டாவது அறிவிப்பாளரான ஜோர்ஜ் சந்திரசேகரனும் அப்போது அங்கிருந்தார். கலையகத்தில் பொருத்தியிருந்த ஸ்ப்பீக்கரின் ஒலியளவு மிகக் குறைவாக இருந்தது. நாம் பல விடயங்களைப் பேசிக்கொண்டிருந்தோம். அது ஒரு அரைமணித்தியால நிகழ்ச்சி. ஆனால் அன்று அது இருபத்தைந்து நிமிடங்களிலேயே முடிந்துவிட்டது. நாங்கள் கவனிக்கவில்லை. எனது காதில் யாரோ சிங்களத்தில் பேசிக்கொண்டிருப்பது கேட்டுக்கொண்டிருந்தது. சிங்களப்பொலிஸ்காரர் ஒருவர் பேசுகிறாரென்று நினைத்து அதைப் பெரிதாக எடுக்கவில்லை. திடீரென்று எனக்கருகிலிருந்த, நிலையத்திற்குள்ளே மாத்திரம் பேசுவதற்கான தொலைபேசியில் அழைப்பு வந்தது. எடுத்துப்பேசினேன். முன்னாலுள்ள வரவேற்பாளர், தமிழ்ச்சேவையில் சிங்களம் ஒலிபரப்படுவதாக யாரோ வெளியிலிருந்து தொலைபேசியில் கூறியதாகத்தெரிவித்தார். உடனே நாம் எமது கலையக ஒலிபெருக்கியின் சத்தத்தை அதிகரித்துக்கேட்டபோது அது ஒரு சிங்கள நிகழ்ச்சி. மிஸ். நாதன் உள்ளே ஓடிச்சென்று ஒலிபரப்பாகிக்கொண்டிருந்த நிகழ்ச்சியை நிறுத்திவிட்டு, (filler) ஃபில்லர் என்று அழைக்கப்படும் ஒலிபரப்பாகும் நிகழ்ச்சிகளுக்கிடையே ஏற்படும் வெற்றிடத்தை நிரப்புவதற்கான இசைத்தட்டை இயக்கினார். நேரம் 7.30. அன்றைய இரவின் மற்றைய அறிவிப்பாளரான ஜோர்ஜ் சந்திரசேகரன் அறிவிப்புச்செய்ய, அடுத்த நிகழ்ச்சிக்கான ஒலிநாடாவை ஆரம்பித்துவிட்டு, பொலிசாரும் நாமும் நிகழ்ச்சியின் ஒலிநாடாவை மற்றைய இயந்திரத்தில் ஓடவிட்டு என்ன நடந்ததென்று கண்டறிய முற்பட்டோம். அதேநேரத்தில் கலையகத்தில் நிகழ்ச்சி ஒலிப்பதிவொன்றை முடித்துக்கொண்டு சக நிகழ்ச்சித் தயாரிப்பு உதவியாளரான அருணா செல்லத்துரையும் சீ-2 கலையகத்திற்குள் வந்தார்.

பொலிசாரும் நாமும் நிகழ்ச்சியை ஏற்கனவே சிங்கள நிகழ்ச்சியொன்றை ஒலிப்பதிவுசெய்த ஒலிப்பதிவு நாடாவில் பதிவு செய்திருக்கிறார்கள். இது வழமையானதுதான். லைப்ரறியில் அப்போது அனைத்து மொழிகளின் இசைத்தட்டுகளும், ஒலிநாடாக்களும் ஒன்றாகவே வைக்கப்பட்டிருந்தன. ஒலிநாடாவில் பதியப்பட்டிருக்கும் ஒரு நிகழ்ச்சி மேலும் ஒலிபரப்பப்படமாட்டாது என்று தீர்மானிக்கப்பட்டவுடன் அந்த நாடாக்கள் மீள்உபயோகத்திற்காகக் கட்டுப்பாட்டறைக்கு அனுப்பப்படும். அப்படி வந்த சிங்கள நிகழ்ச்சியொன்று ஒலிப்பதிவு செய்யப்பட்ட நாடாவில்தான் பொலிசாரும் நாமும் நிகழ்ச்சியை ஒலிப்பதிவு செய்திருக்கிறார்கள்.

ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஒலிப்பதிவு விதிகளின்படி ஒரு நாடாவில் நிகழ்ச்சியொன்றை ஒலிப்பதிவு செய்யும்போது அந்நிகழ்ச்சி முடிவடைந்ததும் நிறுத்தாமல் இரண்டு நிமிடங்களுக்கு ஓடவிட்டு அதில் எந்தவித ஒலிப்பதிவுகளும் இல்லாதவாறு அழித்துவிடவேண்டும். ஆனால் பொலிசாரும் நாமும் என்ற நிகழ்ச்சி ஒலிப்பதிவை மேற்கொண்ட தொழில்நுட்பவியலாளர்

தொடர்தல் 84ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவறுகளால் உரம்...

93ம் பக்கத் தொடர்ச்சி...

அந்நிகழ்ச்சி முடிந்தவுடனேயே ஒலிப்பதிவு நாடாவை நிறுத்திவிட்டார். அதனால் பிற்பகுதியிலிருந்த சிங்கள நிகழ்ச்சி அழிக்கப்படவில்லை. நாம் அந்த நிகழ்ச்சியை ஒலிபரப்பும்போது நிகழ்ச்சி முடிந்தவுடனேயே நாடாவை நிறுத்தத் தவறியமையால் அதில் பதிவுசெய்யப்பட்டிருந்த சிங்கள நிழ்ச்சி ஒலிபரப்பாகிவிட்டது. இதை வெளியேயிருந்து கேட்டுக்கொண்டிருந்த மிஸ். நாதனுக்கு எதிரான ஒருவர் உடனேயே ஒலிபரப்புக் கூட்டுத்தாபன வரவேற்பாளரை அழைத்து விஷயத்தைக் கூறிவிட்டார். இது மிகவும் பாரதூரமான தவறு. எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. மிஸ். நாதன் மிகவும் பதற்றமடைந்திருந்தார். என்ன செய்யலமென்று தவித்துக்கொண்டிருந்தார். அவருக்கு இந்தத் தவறையிட்டு பணிப்பாளர் கே.எஸ்.நடராஜா அவர்கள் எடுக்கக்கூடிய நடிவடிக்கையை நினைத்து மிகுந்த பயமேற்பட்டது.

இதை மறைப்பது கடினம். இது நிச்சயம் கே.எஸ். நடராஜா அவர்களின் கவனத்திற்கு வரும். அப்படி வந்தால் சிங்களம் ஒலிபரப்பான விடயம் அவருக்கு இலகுவாகத் தெரிந்துவிடும். ஏனெனில், பிரதான கட்டுப்பாட்டறையில் நிலையத்திலிருந்து சகல சேவைகளிலும் ஒலிபரப்பாகும் அனைத்து நிகழ்ச்சிகளும் தொடர்ச்சியாக ஒலிப்பதிவு செய்யப்பட்டுக்கொண்டேயிருக்கும். இதை off air recording என்று சொல்வார்கள். ஒலிநாடாக்களை மிக மிகக் குறைந்தளவு வேகத்தில் இயங்க விட்டு ஒலிப்பதிவு செய்வதால் ஒரு நாடாவில் ஐந்து அல்லது ஆறு மணித்தியால நிகழ்ச்சிகள் ஒலிப்பதிவாகும். ஒவ்வொரு நாடா முடிவடையும்போதும் கட்டுப்பாட்டறையிலிருக்கும் தொழில்நுட்பவியலாளர் அதைக் கவனித்துப் புதிய நாடாவைப் பொருத்தி நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து ஒலிப்பதிவு செய்வார். சிலசமயங்களில் இந்த நாடாவை மாற்றுவதற்குத் தவறிவிட்டால் ஒலிப்பதிவு தடைப்படுவதுண்டு. மிஸ்.நாதன் உடனே பிரதான கட்டுப்பாட்டறைக்குச் சென்றார். அங்கே சகாதேவன் என்ற தமிழ்த் தொழில்நுட்பவியலாளர் பொறுப்பிலிருந்தார். அவரிடம் மிஸ். நாதன் விஷயத்தைக் கூற, அவர் ஒலிப்பதிவு இயந்திரங்கள் இருக்கும் அறைக்குள்சென்று பார்த்தபோது தமிழ்த்தேசியசேவை நிகழ்ச்சிகளை ஒலிப்பதிவுசெய்யும் ஒலி நாடா மாலை 6.00மணிக்கே முடிந்துவிட்டிருந்தது, அதை ஒருவரும் மாற்றவில்லை. அதனால் 7.00 மணி ஒலிபரப்பு ஒலிப்பதிவு செய்யப்படவில்லை. நிம்மதியாக சீ-2 கலையகத்திற்குள் வந்த மிஸ். நாதன் எங்களுடன் கலந்தாலோசித்தார். அவரின் வேண்டுகோளின்படி பொலிசாரும் நாமும் நிகழ்ச்சி ஒலிப்பதிவு நாடாவில் பிற்பகுதியிலிருந்த சிங்கள நிகழ்ச்சியை அழித்து விடுவதென்று தீர்மானமாயிற்று. அது எனக்கு மிகுந்த பயத்தை உண்டாக்கியது. அப்படியான வேலைகளைச்செய்து அகப்பட்டால் வேலையே பறிபோய்விடுமென்று பயந்தேன். ஆனால் மிஸ்.நாதன் பிடிவாதமாக இருந்தார். நான் அவ்வளவு முக்கியமில்லாத விஷயங்களிலும் விளையாட்டாகவும் நண்பர்களுக்கோ வீட்டிலோ பொய் சொல்லியிருக்கிறேன். என்றாலும் பாரதூரமான விஷயங்களில் பொய்சொல்வதற்கு மிகுந்த பயமாக இருக்கும். அனேகமாக அப்படிப் பொய் சொல்வதில்லை. சொன்னாலும் எனது முகம் காட்டிக்கொடுத்து விடும். இருந்தாலும் எல்லோரும் சேர்ந்து முடிவெடுக்கும்போது குறிப்பாக மிஸ். நாதன் தீவிரமாக இருந்ததால் அதற்கு நானும் உடன்படவேண்டியதாயிற்று. அதிர்ஷ்டவசமாகவோ துரதிர்ஷ்டவசமாகவோ சீ-2 கலையகத்திலிருந்த இயந்திரத்திலேயே ஒலிப்பதிவுகளை அழிக்கும் வசதியுமிருந்தது. பொதுவாக ஒலிபரப்பு நடைபெறும் தொடர்கலையகங்களில் இருக்கும் இத்தகைய இயந்திரங்களில் அழிக்கும் முனை (erasing head), ஒலிப்பதிவு செய்யும் முனை (recording head) என்பவை நீக்கப்பட்டு playback head என்று சொல்லப்படும் ஒலிப்பதிவைக் கேட்கவைக்கும் முனை மட்டுமே இயங்கக்கூடிய விதத்தில் பராமரிக்கப்படும். நிகழ்ச்சிகள் தவறுதலாக அழிந்துவிடக்கூடாதென்பதே இதற்குக் காரணம். ஆனால் அன்று சீ-2 கலையத்தினுள் இருந்த ஒரு இயந்திரத்தில் அழிக்கும் முனை அகற்றப்பட்டிருக்கவில்லை. நாடாவை அழிப்பதற்குச் சாதகமாகவே எல்லாம் அமைந்திருந்தன. அருணா செல்லத்துரை ஒலிநாடாவிலிருந்த சிங்களப்பகுதியை அந்த இயந்திரத்தின் மூலம் அழித்தார்.

எனக்குச் சரியான நடுக்கமாக இருந்தது. இரவு பணி முடித்து வீடுசென்ற எனக்கு நித்திரை வரவில்லை. தலை குழம்பிப் போயிருந்தது. வருடப்பிறப்பிற்கு ஊரெல்லாம் வெடிகள் கொழுத்தப்பட்டன. மிகுந்த பதற்றமாக இருந்தது.

பின்னர் இந்த சம்பவம் கே.எஸ். நடராஜா அவர்களால் விசாரிக்கப்பட்டது. மிஸ்.நாதன் சொன்னதுபோலவே நானும் சிங்களம் ஒலிபரப்பானது எனக்குத் தெரியாதென்று வாக்குமூலமளித்தேன். இரண்டு, மூன்று கிழமை சென்றது. எந்தவிதமான பிரதிபலிப்புகளும் தெரியவில்லை. ஒருநாள் கே.எஸ்.நடராஜா அவர்களின் அறைக்கு வருமாறு எனக்கு அழைப்பு வந்தது. எடுத்தவுடனேயே "அன்றைக்கு ஏன் பொய் சொன்னனீர்?" என்று கேட்டார். நான் அதிர்ந்து போய் எதுவும் பேசாமல் நின்றேன். "எனக்கு நீர் அண்டைக்கு சொல்லேக்கையே தெரியும், பொய் சொல்லுறீரெண்டு. இப்ப அந்த நாடாவ லாப்பில (lab) பரிசோதிச்சனாங்கள். அதில சிங்களம் இருந்ததைக் கேட்கக்கூடியதாக இருக்கிறது." என்று சொன்னார். அவர் உண்மை சொன்னாரா அல்லது என்னிடமிருந்து உண்மையை வரவழைப்பதற்காகப் பொய்சொன்னாரா என்று எனக்குத் தெரியாது. மேலும் அது சிங்கள நிகழ்ச்சி ஒலிப்பதிவு செய்யப்பட்டிருந்த நாடாவாகையால் லாப்பில் ஒலியை அதிகரித்துக் கேட்கும்போது முதலிருந்த சிங்கள ஒலிப்பதிவு கேட்டிருக்கலாம்தானேயென்று தர்க்கரீதியாகக் கூறியிருக்கலாமென்று இப்போது யோசிக்கிறேன். ஆனால் அப்போது பொய்சொல்லிவிட்ட குற்றஉணர்வும் அதனால் ஏற்பட்ட பயமும் மாத்திரமே இருந்ததால் நான் அவர் சொன்னவற்றை அப்படியே நம்பி நடந்தவற்றையெல்லாம் சொன்னேன். அதற்கு அவர், "எனக்குத்தெரியும், யார் உம்மை இப்படியெல்லாம் பொய்சொல்ல வைச்சிருப்பினமெண்டு, நீர் சின்னப் பையன், இப்பதான் இதுக்குள்ள வந்திருக்கிறீர், இன்னும் எவ்வளவோ காலம் வேலை செய்யவேண்டியிருக்கு. இப்பிடி அவை யிவையின்ர பேச்சைக்கேட்டு ஒண்டும் செய்யக்கூடாது. வேலையில பிழை விட்டது ஒரு குற்றம், பிழையை மறைக்கிறதுக்குச் செய்ததெல்லாம் பாரதூரமான குற்றம். இதுக்காக உம்மை வேலையைவிட்டு நீக்கலாம்" என்று சொல்லிவிட்டு, ஐந்து ரூபா அபராதம் விதித்து ஒரு கடிதத்தைத் தந்தார். அது எனது பிரத்தியேகக் கோப்புக்கும் (personal file) அனுப்பப்பட்டிருந்தது.

'தலை தப்பினது தம்பிரான் புண்ணியம்' என்று அவரது அறையைவிட்டு வெளியே வந்தேன். இனிமேல் வேலைத்தலத்தில் எந்தச் சந்தர்ப்பத்திலும் பொய் சொல்லி எனது கௌரவத்திற்கு இழுக்கு ஏற்படுத்தக்கூடாதென்று திடசங்கற்பம் பூண்டு கொண்டேன். அவர் மிஸ். நாதனுக்கும் அவ்வாறான ஒரு எச்சரிக்கைக் கடிதத்தையே கொடுத்ததாக நான் அறிந்தேன். ஆனால் தண்டப்பணம் அதிகமாக இருந்தது. கே.எஸ். நடராஜா அவர்களுக்கு மிஸ்.நாதன் மீது மிகத் திறமைமிக்க இளம் ஒலிபரப்பாளர் என்ற நன்மதிப்பிருந்தமை அதற்கான காரணமாக இருக்கலாம். ஒவ்வொருவரையும் சரியாகப் புரிந்துவைத்துக் கொண்டு வேலையில் காட்ட வேண்டிய கண்டிப்பையும் காட்டி, அதேவேளை அக்கறையுடனும் அன்புடனும் ஊழியர்களைக் கையாண்டவர் கே.எஸ். நடராஜா அவர்கள்.

ஏற்றுக்கொண்ட பணிகளை மிகக் கவனமாகவும் நேர்த்தியாகவும் செய்பவன் என்ற எனது நற்பெயருக்குக் களங்கமேற்படுத்திய மற்றொரு சம்பவம். இது நான் ஒலிபரப்பில் பல நிலைகளைக் கடந்து என்னை நிறுவி, தமிழ்ச்சேவையின் பிரதான நாடகத் தயாரிப்பாளனாகப் பணியாற்றிக் கொண்டிருந்தபோது நடந்தது.

1980ம் ஆண்டு. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தமிழ்நாடு கலாஷேத்திரா நடனப்பள்ளியை இலங்கைக்கு அழைத்து மூன்று நிகழ்ச்சிகளைச் செய்யும் திட்டமொன்றை மேற்கொண்டது. இரண்டு நிகழ்ச்சிகள் கொழும்பு இராமகிருஷ்ண மண்டபத்திலும் ஒரு நிகழ்ச்சி யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்திலும் செய்வதாகத் தீர்மானிக்கப்பட்டது. இந்தத்திட்டத்தை முன்னெடுத்து அதை வெற்றிகரமாக நடத்த உழைத்தவர் அப்போது இசைப்பிரிவின் கட்டுப்பாட்டாளராகவிருந்த திருமதி. நவராஜகுலம் முத்துக்குமாரசாமி. இந்தத் திட்டத்திற்குப் பொறுப்பாகவிருந்தவர் தமிழ்ச்சேவையின் மேலதிக பணிப்பாளராகப் பணியாற்றிய திருமதி. ஞானம் இரத்தினம். தமிழ்ச்சேவையின் நாடகத் தயாரிப்பாளராக இருந்த என்னையும் இந்த நிகழ்ச்சித் தயாரிப்புக் குழுவில் இணைத்துக்கொண்டார்கள்.

இந்தியா உட்பட உலகின் பல நகரங்களில் பெரிய நாட்டிய நாடகங்களை நடத்திய அனுபவம்மிக்க ஒரு கலை நிறுவனம் கலாஷேத்திரா. முதல்முதலாக இலங்கையில் ஒரு பெரிய நிகழ்ச்சியை நடத்துவதற்கு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தால் அழைக்கப்பட்டிருந்தது. அவர்கள் தமது நிகழ்ச்சி நடைபெறவிருக்கும் மண்டபங்களின் மேடையமைப்பு, நீள, அகல, உயரம், ஒலி-ஒளியமைப்பு, ஒப்பனை அறைகள் மற்றும் இதர வசதிகள் பற்றிய விபரங்கள் குறித்த நீண்ட கேள்விக்கொத்தொன்றை அனுப்பியிருந்தார்கள். திருமதி. நவராஜகுலம் முத்துக்குமாரசாமி, அவரது கணவர், நான் மூவருமாக மண்டபங்களுக்குச் சென்று இந்த விபரங்களைத் திரட்டி அனுப்பினோம்.

குழுவினர் தங்குமிடம், உணவு, பிரயாண ஏற்பாடுகள் மற்றும் நிகழ்ச்சிக்கு விசேட விருந்தினர்களை அழைத்தல், மண்டப ஒழுங்குகள் என்று சகலவற்றையும் நவராஜகுலம் முத்துக்குமாரசாமி பார்த்துக் கொண்டார். கொழும்பில் வசித்த கலாஷேத்திர மாணவிகளும் அவர்களது பெற்றோர்களும் உதவிபுரிந்தனர். அதில் திரு.செல்வராஜா என்பர் முக்கியமானவர். அவரது துணைவியார் சுந்தரலஷ்மி வீணைக் கலைஞர். மகள் கலாஷேத்திராவில் படித்தவர் என்று நினைக்கிறேன்.

கலாஷேத்திரக் குழுவினர் தலைமன்னாருக்குக் கப்பலில் வருவார்கள். காலையில் செல்வராஜா குடும்பத்தினர் யாழ்தேவியில் புறப்பட்டு மாகோசந்தி புகையிரத நிலையத்தில் இறங்க, நான் கலாஷேத்திரக்குழுவினர் பயணம் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பஸ்ஸில் கொழும்பிலிருந்து சென்று, செல்வராஜா குடும்பத்தினரையும் ஏற்றிக்கொண்டு, தலைமன்னாருக்குச் சென்று கலாஷேத்திரக் குழுவினரைக் கொழும்புக்கு அழைத்துவருவதாக ஏற்பாடு. முதல்நாள் இரவும் இறுதிநேர வேலைகள் பலவற்றை முடித்துக்கொண்டு மிகுந்த களைப்புடன் இராஜசிங்க வீதியில் நான் தங்கியிருந்த அறைக்குச்சென்று அயர்ந்து தூங்கி விட்டேன். காலையில் எழுந்தபோது நன்றாக விடிந்து விட்டிருந்தது. துடித்துப் பதைத்து எழுந்து அறையைவிட்டு வெளியேவர, வீட்டுச் சொந்தக்காரர், காலையில் ஒரு பஸ் வந்து ஹோர்ண் பண்ணிப் பார்த்துக்கொண்டு நின்றுவிட்டுச் சென்றதாக மிகவும் சாவதானமாகச் சொன்னார். பதறியடித்து என்ன செய்வதென்று புரியாத குழப்பத்துடன் புறப்பட்டு ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்குச்சென்றேன். அப்போது தொலைபேசி வசதிகள் அவ்வளவாக இல்லை. நிலையத்தில் திருமதி. ஞானம் இரத்தினமும் நவராஜகுலமும் இருந்தார்கள். அவர்கள் என்னைக் கண்டதும் முதலில் துணுக்குற்றாலும் நடந்தவற்றைக் கேட்டபின்னர் "பரவாயில்லை, பஸ் போகிறதுதானே, செல்வராஜா பார்த்துக்கொள்வார், ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திலிருந்து ஒரு பிரதிநிதி போகவில்லையே என்பதுதான் ஒரு குறை" என்றார்கள்.

மாலை கலாஷேத்திராவிலிருந்து பெரும் கலைஞர் கூட்டம் அவர்கள் தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இராமகிருஷ்ணமிஷன் விடுதிக்கு வந்துசேர்ந்தது. பெரும் ஆரவாரம். நிகழ்ச்சி நடைபெறுவதற்கு முதல்நாள் கலாஷேத்திராவின் தலைவி திருமதி. ருக்மணி அருண்டேல் கொழும்புக்கு வருகைதந்தார்.

கொழும்பில் நிகழ்ச்சிகள் திட்டமிடப்பட்டவாறு நடைபெற்றுப் பின்னர் அவர்களுடனேயே பஸ்ஸில் யாழ்ப்பாணம் சென்று நிகழ்ச்சி முடித்து, தலைமன்னார் வரை சென்று அவர்களை வழியனுப்பிவைத்து விட்டு வந்தேன். நான் நாட்டிய நாடக மேடையேற்றத்தை நேரடியாக அறிந்துகொண்ட மிக நல்ல அனுபவம். ஆனால் நான் அவர்களை வரவேற்பதற்குத் தலைமன்னாருக்குச் செல்லத் தவறிய குற்ற உணர்வு மனதை உறுத்திக் கொண்டேயிருந்தது. நான் பஸ்ஸில்சென்று அவர்களை மன்னாரில் வரவேற்கத் தவறிவிட்டேனென் பதையறிந்த ஒலிபரப்புக் கூட்டுத்தாபனப் பணிப்பாளர்சபை அங்கத்தவர் காலம் சென்ற இராஜேந்திரா அவர்கள் "இதைத்தான் சிறுபிள்ளை வேளாண்மை வீடு வந்து சேராது" என்று சொல்வார்கள் எனச்சொன்னதாக திருமதி.ஞானம் இரத்தினம் என்னிடம் சொன்னார்.

எனது கடமையைச் சரியாகச் செய்வதற்குத் தவறிவிட்ட இந்த நிகழ்வு பாரதூரமான விழைவுகளை ஏற்படுத்தாவிட்டாலும் அதை எனது தொழில்வாழ்க்கையில் ஒரு கரும்புள்ளியாகக் கருதுகிறேன். இந்தச் சம்பவத்தின்பின்னர் நான் ஒவ்வொரு விடயத்தையும் மிகக் கூர்மையாகவும் தீர்க்கமாகவும் கையாளத் தொடங்கினேன்.

தொடரும்...



wikneswaran.p@thaiveedu.com


# கோலங்கள்

அரங்கேற்றம், கலைநிகழ்ச்சி, திருமணம், பூப்புனித நீராட்டு

போன்ற வைபவங்களுக்கு கோலம் போட்டு அலங்கரிக்க, Floor

Decoration for Arangetram Wedding and other Cultural Functions.

**Bhamini:**

**647 294 0736, 416 491 6057.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஸ்ரீ பிரகதி
## சித்தா மூலிகைச் சிகிச்சை நிலையம்

**OVER 10,000 YEARS OLD TRADITIONAL SYSTEM OF TAMIL MEDICINE.**

**வர்ம முறையிலும், மருந்தில்லா மருத்துவ முறையிலும் சிகிச்சை அளிக்கப்படும்.**

அன்னையின் பிரகதி சித்தா மூலிகை சிகிச்சை நிலையம். இது ஒரு பாரம்பரிய பரம்பரை ராஜ வைத்தியசாலை. இந்தக் கால மருத்துவ விஞ்ஞானிகளைப் போல ஆதிகால மருத்துவ விஞ்ஞானிகளே நம் சித்தர் பெருமக்கள். தவம்,ஞானம் எனப் பல வழிகளைக் கண்டறிந்தார்கள். அதில் ஒரு பங்கு தான் வைத்தியம். வைத்தியமுறைகள் பலவகைகளாக இருந்தாலும், அவர்கள் மூலிகைகளைக் கொண்டு பல வியாதிகளைக் குணமாக்கியும், ஆராய்ச்சி செய்தும் சுவடிகளில் எழுதியும் வைத்திருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் சீடர்களுக்கும், சில நல்ல உள்ளம் கொண்டவர்களுக்கும் கற்றுத் தந்தும் இருக்கிறார்கள் மக்களின் நலன் கருதியே சித்தர்கள் இவ்வாறு செய்திருக்கிறார்கள். பல மருத்துவ முறையில் வந்திருக்கும் வியாதிக்கு மருந்தில்லை. ஆனால் சித்த மூலிகை வைத்தியத்தில் அப்படியில்லை. பல வியாதிகளுக்கு மருந்து இருக்கிறது. இன்னமும் மருந்திருக்கும் அளவுக்கு வியாதிகள் உலகத்தில் உருவாகவில்லை. எப்படிச் சொல்கிறேன் என்றால் ஒரே ஒரு மூலிகை 30 விதமான வியாதிகளைக் குணப்படுத்தும் அளவுக்கு உள்ள மூலிகைகளும் உண்டு. அதைப் பரம்பரையாக கையாண்டு வந்து கொண்டிருந்த பரம்பரையில் வந்ததே அன்னையின் பிரகதி சித்தா மூலிகை சிகிச்சை நிலையம். நரம்புத் தளர்ச்சி, முடக்கு வாதம்,பக்கவாதம், சிறுநீரகம், சொரியாஸிஸ், கர்ப்பப்பைக் கட்டி, ஆண் பெண் மலட்டுத் தன்மை, குழந்தையின்மை, அல்சர், மூட்டுவலி, இருதயம் சம்பந்தமான நோய்கள், மூளைக் கட்டி, ரத்தசோகை,சர்க்கரை வியாதி, தலைமுடி கொட்டுதல், மாலைக் கண்நோய், காது, ரத்த அழுத்தம், கொலஸ்ட்ரால்,வெண் குஷ்டம்,முள்ளந்தண்டு வட வலி, மூட்டு வலி, மூட்டுத்தேய்மானம், மஞ்சள் காமாலை, வெள்ளைப்படுதல், அனைத்து விதமான புற்று நோய்கள், வலிப்பு (Seizure), ஆட்டிசம் (Autism), முரசு கரைதல், தூக்கமின்மை, மூலம், பௌத்திரம், நரம்பு வாதம் (Varicose Vein) மாறாத படுக்கைப்புண், தீப்புண், ஒற்றைத் தலைவலி, முடி உதிர்தல், தைராய்டு, உடல் எடையை கூட்ட, அல்லது குறைக்க, உடலில் ஏற்படக் கூடிய அனைத்து வியாதிகளையும் அன்னையின் பிரகதி சித்தா மூலிகை சிகிச்சையில் பரிபூரணமாக குணப்படுத்திட முடியும். உணவே மருந்து, மருந்தே உணவாக கடைப்பிடிக்கப்படுகிறது.
வியாதிகளில்லாத உலகை உருவாக்க விரும்புகிறது

### புற்று நோய் மற்றும் மரபணு நோயாளர்களுக்கு ஓர் அறிவிப்பு:

எந்த வகையான புற்றுநோய் மற்றும் மரபணு நோயாக இருந்தாலும் நோயாளி வாயால் உணவு உட்கொள்ளக்கூடியதாக இருக்கும் போதும் உறுப்புகளை வெட்டி அகற்ற முன்னரும் நாம் உங்களுக்கு உதவ முடியும் உங்களுக்கு விதிக்கப்பட்ட வாழ்க்கையை முழுமையாக வாழ நாம் உங்களுக்கு உதவ முடியும்

### முக்கிய எச்சரிக்கை:

எந்த வைத்திய முறையானாலும், நோய்களை சரியாகக் கண்டறிந்து, அதற்கான மருந்தை கூறப்பட்ட பத்தியத்துடன் எடுக்கும் போது, குறிப்பிட்ட சில நாட்களுக்குள் அதன் முன்னேற்றத்தினை நீங்கள் உணர முடியாது போனால் உங்களுக்கு நோய் மாறாது இருக்கிறது என்பதை தயவு செய்து புரிந்து கொள்ளுங்கள். அதனைத் தொடர்வது பற்றி நீங்கள் நிச்சயம் சிந்திக்க வேண்டும்..
வியாபார விளம்பரங்கள் மட்டுமே உங்கள் முடிவுகளை தீர்மானிக்கக் கூடாது, மூலிகைகளின் தரம், செய் முறை, அதன் ஆயுட்காலம், வைத்தியரது திறமை, நம்பகத்தன்மையையும் ஆராய்ந்து தீர்மானியுங்கள்.
இதனால் உங்கள் பணமும்,கால விரயமும், மன உளைச்சலும் தவிர்க்கப்படும்.

## சித்தர்களின் பழங்கால முறையில் ரசமணி, ரசலிங்கம் செய்து தரப்படும்.

**PREMI.S**
**பாரம்பரிய சித்த வைத்தியர் (ராஜவைத்தியம்), இரசவாதி**
Hereditary Siddha Practitioner (Royal Physician Treatment),
Spagyric Alchemist (CAN)
Alchemist Siddha System of Medicine (IND),
Natural Medicine Practitioner© (CAN)



**Proudly Sponsored By:**
Yogic Health & Food Bank
www.sivarppanamfoundation.org

**நிவாரணம் பெற அழையுங்கள்**
கனடா மற்றும் இந்தியா தொடர்புகளுக்க
**TEL: +1416-624-7927 | +1647-278-3100**
**Email: pragatishc@gmail.com | Web: www.pragatisiddha.com**
**880 MARKHAM ROAD, SCARBOROUGH, ON, M1H 2Y2**
(Painted Post & Markham Rd)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்புலத் தமிழரின் எதிர்கால இருப்பில் கலைகளின் முதன்மைத்துவம்

- பொன்னையா விவேகானந்தன் -

## முன்னுரை

ஏறக்குறைய 1.5 மில்லியன் தமிழ்மக்கள் தாயகங்களைவிட்டு வெளியேறி, குடியேறிய நாடுகளில் வாழ்ந்து வருகின்றனர். இவர்களுள் பெரும்பாலானோர் குடியேறிய நாடுகளிலேயே நிரந்தரமாக வாழத் தலைப்பட்டுவிட்டனர். இப்போது கனடா போன்ற நாடுகளில் ஆளுமைமிக்க சமூக உறுப்பினர்களாக இரண்டாம் தலைமுறையினரே அடையாளம் காணப்பட்டு வருகின்றனர்.

கடந்த கால்நூற்றாண்டு வாழ்வில் தமிழர் தம்மை தனித்துவ இனமாக அடையாளப்படுத்தியதுடன், வலுவான இனமாகவும் தக்கவைத்துக் கொண்டுள்ளனர். தாயகத்திலிருந்து புலம்பெயர்ந்த தலைமுறையினரின் கடின உழைப்பும் இனம், மொழி, கலைசார்ந்த அடையாளங்கள் மீதான பற்றும் வெளிப்பாடுமே இதற்குக் காரணம் எனலாம். எனினும் தொடரும் தலைமுறையினர் இனம், மொழி, கலை சார்ந்த பண்பாட்டு அடையாளங்களை எவ்வாறு கொண்டு செல்லப்போகின்றனர்? என்ற வினா பரவலாகவே எங்கும் எழுந்துள்ளது.

இந்த வினா விலத்திவிட்டுச் செல்வதற்குரிய ஒன்றல்ல. இதற்கான விடைகளைக் கண்டறியும் பாரிய சமூகப்பொறுப்பு இப்போது வாழ்ந்து கொண்டிருக்கும் தலைமுறைக்குரியது.

மொழி, பண்பாட்டு மரபுகள் என்பவற்றை, வாழ்வியலுக்கேற்ற வகையில் கட்டுக்கோப்பாக ஒழுங்கமைத்துப் பேணிச்செல்வதன் மூலம் அடுத்துவரும் தலைமுறையினரும் தமது தமிழ்த் தனித்துவங்களைக் காத்துக்கொள்ள முடியும் என்று நாம் பொதுவாகக் கருதினாலும் அதற்கான வழிவகைகளைக் கண்டறியும் முயற்சி மிகவும் சவால்கள் நிறைந்தது.

இவ்வகையில், இனஞ்சார் அடையாளங்களைப்பேணுவதில் கலைகள் பெறும் வகிபாகம் என்ன என்பதை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இக்கட்டுரையின் உள்ளார்ந்த கருப்பொருளைத்தொடுவதற்கு முன், தமிழர் கலைகள் பற்றியும் தமிழ்ப்பண்பாட்டு மரபுகளுக்கும் கலைகளுக்கும் உள்ள நெருக்கம் பற்றியும் சுருக்கமாக நோக்குவோம்.

## கலை என்றால் என்ன?

உலகில் உயிர்கள் தோன்றியபோதே கலைகளும் தோன்றிவிட்டன எனலாம். மாந்த இனமானது, வாழ்வு, பண்பாட்டு வழிகளில் தன்னை மேம்படுத்திக்கொண்டபோதிலே கலைகளையும் வளர்த்துக் கொண்டது. மாந்தர் உடலின் தேவைகளை நிறைவேற்றியது போலவே, உணர்வின் தேவைகளையும் கலைகளைக் கொண்டு நிறைவேற்றினர்.

மனிதவாழ்க்கை உணவு, உடை, உறையுள் என்பவற்றோடு மட்டும் நிறைவு பெறுவதில்லை. வாழ்வியல் வளர்ச்சியில் மானுடவுணர்வு இவற்றுக்கு மேலாக வேறுவகைகளிலும் இன்பத்தை அடைய விரும்புகின்றது. இவ்விருப்பங்களை நிறைவேற்றி இன்பம் அளிக்கவல்லனவாக இருப்பனவற்றும் கலைகளே முதன்மையானவை.

ஓரினத்தின் வாழ்வை வடிவமைப்பதில் பேராதிக்கம் செலுத்துவது வாழும் சூழலே. நிலமும் அவை சார்ந்த இயற்கையும் காலநிலையுமே வாழும் உயிர்களுக்கு வாழ்வைக் கற்றுக்கொடுக்கின்றன. இந்த வாழ்விலிருந்தே கலைகளும் கலை சார்ந்த கருவிகளும் தோற்றம் கொள்கின்றன. குறித்ததொரு வாழ்வியற் தளத்தை அடிப்படையாகக் கொண்டு பண்பாட்டு மரபுகளை வகுத்துத் தன்னை வளர்த்துச்செல்லும் ஓரினம், கூடவே கலைகளையும் வளர்த்துச் செல்கின்றது. அக்கலைகளை தமக்கேயுரித்தான தனித்துவச் சிறப்புகளோடு மிளிர வைக்கின்றது. காலவோட்டத்தில், மாறிச்செல்லும் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும் வழிபாட்டுமுறைகளும் வாழ்விலும் கலைகளிலும் தாக்கம் செலுத்துகின்றன.

வரலாற்று ஓட்டத்தில் இனமானது, தன்னுடைய வாழ்வையும் பண்பாட்டு மரபுகளையும் கலைகளின் வழியே வெளிப்படுத்திச் செல்வதும் பதிவிடுவதும் தவிர்க்கமுடியாததாகி விடுகின்றது. இதன்வழியே ஓரினம் போற்றிச் செல்லும் கலைகள் யாவும் அவ்வினத்தின் வலிமையான பண்பாட்டு மரபியல் அடையாளங்களாகவும் தலைமுறைதோறும் பண்பாட்டை ஊட்டிச் செல்லும் பாடங்களாகவும் திகழ்கின்றன.



நீண்ட வரலாற்றைக் கொண்ட ஒவ்வோர் இனமும் தனக்கெனத் தனித்துவமான கலைவடிவங்களைக் கொண்டிருப்பதே இதற்குச் சான்றாகும்.

## எவை கலைகள்?

கலைகள் 72 என்று சமணம் சொல்கின்றது. 86 என்று பௌத்தம் பறைசாற்றுகின்றது. இந்துமதம் 64 என்கின்றது. உழவு, நெசவு, வணிகம், மருத்துவம் என்பனவும் கலைகளே. இவை புறநிலையில் அழகுணர்வை ஏற்படுத்தும் கலைகளே. மாந்தரின் உணர்வின் பேரழகாய் விரிந்து இன்பமூட்டி ஒருவகை பேரின்பநிலையை ஏற்படுத்தும் கலைகளை நுண்கலைகள் அல்லது கவின் கலைகள் என்பர். இசை, ஆடல், பாடல், ஓவியம், சிற்பம் போன்றன இவ்வகையுள் அடங்கும்.

கவின்கலைகளை அரங்காடற்கலை, எழுத்துக்கலை, கட்புலக்கலை என்று மூன்றாக வகுத்துள்ளனர். ஓவியம், சிற்பம், ஒளிப்படம் என்பன கண்ணுக்கு விருந்தளிக்கவல்ல கட்புலக்கலைகளாகும். இசை, நடனம், நாடகம், என்பன அரங்காடற் கலைகள் அல்லது நிகழ்த்துகலைகள் எனப்பட்டன. கதை, கவிதை, கட்டுரை, நாடகவியல் என்பன எழுத்துக்கலைகள் எனக் கருதப்பட்டன.

## தமிழரும் கலைகளும்:

மீண்டும் மீண்டும் வற்றாத இன்பத்தை அள்ளித் தரவல்ல அனுபவத்தை உண்டாக்கும் கலைகள் பல மலிந்த வாழ்வு தமிழருக்குரியது. பண்டைய தமிழ் இலக்கியங்கள் தமிழர் கலைகள் பற்றியும் இசைக்கருவிகள் குறித்தும் பல தகவல்களைத் தருகின்றன.

ஆடலும் பாடலும் கொண்ட கூத்தே தமிழர் மரபைப் போற்றும் பண்டைய கலைவடிவமாகத்திகழ்ந்திருக்கின்றது. 'கூத்து' என்னும் சொல்லையே நாட்டியம், நாடகம் ஆகிய இரு கலைவடிவங்களையும் குறிக்கப் பயன்படுத்தியுள்ளனர். தொல்காப்பியத்தில் கூத்து, கூத்தர் என்ற சொற்கள் உள்ளன. சங்க இலக்கியங்களும் 'கூத்து' என்னும் சொல்லை மிகுதியாகக்கையாண்டுள்ளன. 'கூத்தர் ஆடுகளம் கடுக்கும்' (புறம் 28)'இருவகைக் கூத்தின் இலக்கணம் அறிந்து' (சிலம்பு 3:12) 'நாட்டியம் நன்னூல் நன்கு கடைப்பிடித்து' (சிலம்பு 3:46) 'நாடகமேத்தும் நாடகக் கணிகை' (சிலம்பு, பதிகம் 15) 'கூத்தாட்டு அவைக் களம்'(திருக்.332)என்று சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன.

வேடம் புனைந்து இரவு தொடங்கி விடியும் வரை கதை தழுவி ஆடப்படும் நாடகமே கூத்து ஆகும். கூத்து எனும் சொல் முதலில் நடனத்தையும் பின்னர் கதை தழுவிவரும் நாடகத்தையும் குறித்தது. கூத்து நடத்தப்பட்ட களத்தை ஒட்டியே அது தெருக்கூத்து எனவும் பெயர்பெற்றது.

## இருவகைக் கலைக்களங்கள்:

ஏறக்குறைய சங்கமருவிய காலத்தின் (கி.பி 1ம் நூற்றாண்டு) தொடக்கம்வரை, தமிழர் கலைவெளிப்பாட்டுக்குள் பெருமளவில் மாறுபட்ட தளங்கள் உருவாகவில்லை. எனினும் கூத்து பொதுவியல்கூத்து, வேத்தியல்கூத்து என்ற வேறுபட்ட இரு நிகழ்த்து களங்களைக் கொண்டிருந்ததாக சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. பொதுவியல் கூத்து, பெரும்பாலான தமிழ்மக்களின் வாழ்வியல் கலைகளோடு கலந்திருக்க, வேத்தியல் கூத்து ஆளுமைச்சமூகப் பரப்புக்குள் வேறுதிசை நோக்கி வளர்ந்தது. அரச அவைகளில் கலைகளைப் பேணுவதற்கென்றே கலைஞர்கள் தனித்துவமாகப் பேணப்பட்டனர். அரசர் வாழ்வும் வரலாறும் பிற்காலத்தில் இறைவணக்கமும் இங்கே பேசுபொருளாயின. ஆளுமைச் சமூகத்தை மகிழ்விக்க புதிய உத்திகளும் நுட்பங்களும் அரசவைக் கலைகளுக்குள் புகுத்தப்பட்டன. வேத்தியல் கூத்தின் விரிவான வளர்ச்சி வடிவத்தை நாம் சிலப்பதிகார அரங்கேற்றுகாதையில் காணலாம்.

இதுவே பொதுவியல் கலைவெளிப்பாடுகளுக்கும் வேத்தியல் கலைவெளிப்பாடுகளுக்குமிடையே வேறுபாடுகளைத் தோற்றுவித்தது. பொதுவியல் கூத்து ஆளுமை - அறிவுடைமைச் சமூகப் பரப்புக்கு வெளியேயான வாழ்வியலைக் கொண்டிருந்த பாமர மக்களையே களமாகவும் தளமாகவும் கொண்டிருந்தது. இது மக்களின் வாழ்வியலையும் செவி வழி கேட்ட கதைகளையும் நாட்டுப்புற சிறு தெய்வ வழிபாடுகளையும் கருப்பொருளாகக் கொண்டிருந்தது.

## வைதீக இறைவழிபாடுகளும் வேத்தியல் கலைகளும்:

வைதீக இறைவழிபாடுகளின் வருகை தமிழர் வாழ்வியலுக்குள்ளும் கலைகள் மீதும் தாக்கங்களை ஏற்படுத்தியது.

சங்கமருவிய காலத்தில் தொடக்கத்தையடுத்த பகுதிகளில் சமணம், பௌத்தம் என்ற இறைநெறிகள் தோன்றின. இவை கலைகலையும் இல்லற வாழ்வையும் வெறுத்தன. எனினும் இந்த இறைநெறிகள் தமிழில் கோலோச்சிய காலத்தில் எழுந்த இலக்கியங்களால் கலைகளையும் இல்லறவாழ்வையும் விலக்கிவிட முடியாதிருந்தன. இச்செந்நெறி மதங்களின் வருகை வடமொழி தமிழில் கலப்புறுவதற்கு வழிசமைத்தது. பின்னர் தோன்றிய வைதீக வழிபாட்டு நெறிகளான சைவமும் வைணவமும் கலைகளுக்கும் குடும்பக் கட்டமைப்புக்கும் முக்கியத்துவம் கொடுத்தன. வைதீக இறைவழிபாட்டு நெறிகளின் வழியே நிறுவப்பட்ட கோயில்கள் வேத்தியல் கலைகளைத் தன்பக்கம் ஈர்த்துக் கொண்டன.

சங்ககாலத்தில் பொதுமக்களோடு நெருக்கம் கொண்டிருந்த ஆளுமைச் சமூகமும் அறிவுடைமைச் சமூகமும் மெய்யியல் இறைவழிபாட்டுநெறிகளின் வருகையை அடுத்து, மக்களிடமிருந்து விலகத் தொடங்கியிருந்தன. அதற்குக் காரணம், ஆட்சி மாற்றங்களும் வடநாட்டிலிருந்து வந்த சமயங்கள் ஆளுமைச்சமூகத்திலும் அறிவுடைமைச் சமூகத்திலும் ஏற்படுத்திய தாக்கங்களுமாகும். வர்ணப் பாகுபாட்டை எடுத்துக் கூறி, மேற்குறிப்பிட்ட இரு சமூகங்களுக்குள்ளும் இந்த மதங்கள் ஆளுமையைச் செலுத்தின.

இவையே ஆளுமைச் சமூகப்பரப்புக்குள் இயங்கிய, வேத்தியல் மரபைச் சார்ந்த ஆடலையும் பாடலையும் காலவோட்டத்தில் வடமொழிமயப்படுத்தின. ஆடற்கலை நடனமானது. இசைக்கலை சங்கீதமானது. பாடலின் கருப்பொருளையும் பெரிதும் இறைவழிபாட்டுக்குரியதாக்கினர். தமிழ் ஆளுமைச்சமூகமும் அதை ஏற்றுக்கொண்டது. பத்தொன்பதாம் நூற்றாண்டிலேதான் இந்த வேத்தியல் கலைகள் அரண்மனைகளையும் அந்தப்புரங்களையும் விட்டு வெளியே வந்தன. அடிப்படையில் தமிழ் மரபுகளைக் கொண்டிருந்த வேத்தியல் கலைகள் மொழியாலும் கருப்பொருளாலும் வடநாட்டு ஆதிக்கத்துக்குட்பட்டிருந்தன. ஆரியர் நடத்திய பண்பாட்டுப் படையெடுப்பில் சிக்குண்டு தன்னியல்பு அழிந்த கலை மரபுகளுக்குள் வேத்தியல் கலைகள் முதன்மை பெற்றிருந்தன. வைதீக இறைநெறிகளின் ஆதிக்கத்துக்குட்பட்ட ஆளுமைச் சமூகமும் அறிவுடைமைச் சமூகமும் ஏட்டிலக்கியங்களில் கூட நாட்டுப்புறக்கலைகளைப் பெரிதுபடுத்தவில்லை. தேவாரங்களிலும் பாசுரங்களிலும் பின்னர் தோன்றிய பல வழிபாட்டுப் பாடல்களிலும் நாட்டார் இசை மரபுகள் ஆங்காங்கே பயன்படுத்தப்பட்டிருந்தாலும் நாட்டுப்புற கலைகள் குறித்து ஏட்டிலங்கியங்கள் எதுவுமே குறிப்பிடத் தவறியமை வரலாற்றுத் தவறே. இதற்கு விதிவிலக்காக அமைந்தது குற்றாலக்குறவஞ்சி மட்டுமே.

வைதீக இறைநெறிகள் ஆளுமைச் சமூகத்துக்குள் வேரூன்றிய காலம் பல்லவர் காலமே. கடவுளர் மீது மானுடர் கொண்டிருந்த பக்தியுணர்வை வடிகாலாகக் கொண்டு அரசு என்ற ஆளுமைக் கட்டமைப்பை தன்வயப்படுத்தின வைதீக இறைநெறிகள். அதிகாரம் பொருளாதாரம் அறிவு என்ற நிலைகளில் உயர்திருந்த சமூக வழிபாட்டுக்காக வைதீக முறைப்படியான வழிபாட்டுத்தலங்கள் தமிழ்நாட்டில் கட்டப்பட்ட காலம் இதுவே. இந்த கோவில்களுக்குள் உள்நுழைய அனுமதிக்கப்பட்டவர்கள் பிராமணர் (அறிவு), சத்திரியர் (அதிகாரம்), வைசியர் (பொருளாதாரம்) என்ற மூவகைப் பிரிவினர் மட்டுமே. சூத்திரும் பஞ்சமர் என்று அழைக்கப்பட்ட தலித்துகளும் இக்கோவில்களுக்கு அருகே கூட அனுமதிக்கப்படவில்லை.

தொடர்ந்து தமிழர்கள் தம்மைத்தாமே ஆளத் தொடங்கிய காலமான சோழர்காலத்தில் வைதீக இறைவழிபாட்டு நெறிகள் தம்மை வலுப்படுத்திக் கொண்டன. வேத்தியல் வழி வளர்ந்த ஆடலையும் பாடலையும் ஆலயக்கலைகளாக்கின. ஆடல் நங்கையர் தேவரடியார் ஆகினர் இதுவே பின்னாளில் தேவடியாள் என்ற சொல்லாகத் திரிந்தது.

ஊர்கள் தோறும் சோழர்கள் நிறுவிய ஐம்பேராயம் என்ற கட்டுமானத்தை மொழிப் பயன்பாட்டுத்தொடர்பே இல்லாமல் பஞ்சாயத்து (பாஞ்ச் என்றால் வடமொழியில் ஐந்து)என்றும் முற்றிலும் தமிழர்கள் மட்டுமே வாழும் திருமறைக்காடு என்ற இடத்தை வேதாரணியம் என்றும் மாற்றியோர் தமி

தொடர்தல் 87ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்புலத் தமிழரின்...

86ம் பக்கத் தொடர்ச்சி...

முரசுக்குக்குள் ஆதிக்கம் செலுத்திய ஆரியரே. இவர்கள் வேத்தியல் கலைகளில் காணப்பட்ட தமிழியல் அடையாளங்களைத் திட்டமிட்டே அழித்திருப்பர் என்று எண்ணத் தோன்றுகின்றது.

எனினும் வைதீக இறைநெறிகளால் வர்ணப் பாகுபாட்டின் அடிப்படையில் புறக்கணிக் கப்பட்டிருந்த பெரும்பான்மையான நாட்டுப்புற மக்கள் வேத்தியல் கலைவெளிப் பாடுகளிலிருந்து பெரிதும் வேறுபட்டிருந் தனர். சங்ககாலத்தில் பொதுவியல் கூத்து எனக்கூறப்பட்ட பொதுமக்களுக்கான நிகழ்த் துகலைகளைக் காலத்துயர்களையும் பேரிடர்களையும் கடந்து சுமந்து வந்தவர்கள் நாட்டுப்புற மக்களே.

வேற்றினத்தார் நடத்திய பண்பாட்டுப் படையெடுப்புகளால் பெரிதும் பாதிப்புறாத வகையில் நாட்டுப்புறமக்கள் தமது கலைகளை போற்றினர். இப்போது இக்கலைகளின் வழியேதான் தமிழரின் தொன்மங்களும் மரபுகளும் கண்டெடுக்கப்பட்டு வருகின்றன.

இதுகாறும் கூறப்பட்டவை வாயிலாகத் தமிழருக்கும் தமிழர் இருப்பைப் அடையாளப்படுத்தும் கலைகளுக்குமிடையே யுள்ள தொடர்பையும் நெருக்கத்தையும் தெரிந்துகொள்ள வாய்ப்பேற்பட்டிருக்கும்.

## வாழ்புல தமிழ்க்கலைகள்:

தாயகத்தில் மேட்டுக்குடியினரிடையே பெருஞ் செல்வாக்குப்பெற்ற பரதநாட்டியமும் கர்நாடக சங்கீதமுமே புலம்பெயர்ந்தோரின் வாழ்புலங்களிலும் பேராதிக்கம் செலுத்தி வருகின்றன. தாயகங்களில் இல்லாதளவு வணிகக்கலைகளாகவும் அவை வளர்ச்சி பெற்றுவிட்டன. தமிழர் கலைகள் யாவை எனக் கேட்டால் இவ்விரண்டையுமே பலரும் குறிப்பிடுவர். அது தவறில்லை. இவை இரண்டுமே தமிழர் கலைமரபுகளை அடிப் படையாக்கொண்ட தென்னிந்தியக் கலைகள்தான். இவை வடமொழி பிறந்த வட நாட்டில் பயிற்றப்படுவதுமில்லை, பயன் படுத்தப்படுவதுமில்லை.

அதிகளவிலான வடமொழிப் பயன்பாட்டையும் வைதீக இறைநெறி சார்ந்த பன்மொழிக்கீர்த்தனைகளையும் பாடல்களையும் கொண்ட இவ்விரு கலைகளையும் மாற்றங்கள் ஏதுமின்றித் தொடர்ச்சியாகப் பேணிச் செல்வது தமிழரின் தனித்துவ அடையாளம் என்ற நோக்கில் சரியானதா?

தமிழரின் எதிர்கால அடையாள இருப்புக்கு இவை உயர்ந்த தமின அடையாளமாகப் பயன்படுமா?

இந்த வினாக்களுக்கான விடை சிக்கலானதே. கயானாவில் நடந்த ஒரு வரலாற்று உண்மையை இவ்விடத்தில் கூற வேண்டியது அவசியமாகின்றது.

பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் ஆயிரக் கணக்கான தமிழர் கூலித்தொழிலாளர்களாகக் கரீபியன் தீவுகளுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். பெரிதும் கல்வியறிவற்ற தமிழர்கள் காலவோட்டத்தில் அடையாளங்களைத்தொலைத்தனர். 70களின் பின்னர் இந்திய அரசு இவர்களுக்கு இந்தியைக் கற்பித்தது. அதன்வாயிலாகப் பலர் தமது தாய்மொழி இந்தியே எனக் கருதினர். வடமொழி வழிபாடுகளும் அவர்கள் எண்ணத்துக்கு வலுவூட்டியது. இன்று அவர்களில் பலர் இந்திப்பாடல்களைக்கேட்டவாறே வடஇந்திய வம்சாவளி எனத் தம்மைக் கருதி வாழ்கின்றனர்.

வழிபாடுகளிலும் கலை வெளிப்பாடுகளிலும் எதிர்காலத்தில் பயன்பாட்டு மொழியாகத் தமிழ் இல்லாதிருக்குமானால் எதிர் காலத் தலைமுறையினர் தம் இனம் எது வென்பதில் குழப்பமுற வாய்ப்புகள் உண்டு. இந்தியா தழுவிய இந்துமதத்தின் கூறுகளே வழிபாட்டிலும் கலை வெளிப்பாடுகளின் கருப்பொருளிலும் நிறைந்துள்ளன. தமிழ்த்தேசிய ஒருமைப்பாட்டுக்கு எதிரான இந்தியத் தேசியச் சிந்தனையின் வடிவமே இந்துமத ஒருமைப்பாடு. இதன்வழியே-தான் தென்னிந்தியா முழுவதும் வாழ்ந்த தமிழர், இன்று திராவிடர் என்ற பொதுப் பெயருடன் பிரிவுற்றிருக்கின்றனர்.

நாம் முன்வைக்கும் இக்கருத்து மதவழிபாட்டுக்கு எதிரானதல்ல. எதிர்கால வழிபாட்டுமுறைகளும் கலை வெளிப்பாடுகளும் தமிழாக்கம் பெற்றால் மட்டுமே பன்முக வாழ்புலச்சூழலில் அடையாளப்பேணல்



களைத் தக்கவைக்க இக்கலைகள் பயன்படும் என்ற நோக்கிலானது.

வாழ்புலங்களில் இக்கலைகளைப் பயில்வது, தகுதி மேலாண்மையை வெளிப்படும் நடத்தைகளில் ஒன்றாகவே மாறிவிட்டது. கீர்த்தனங்களையும் பாடல்களையும் ஆங்கிலத்தில் எழுதிப்பாடும் வழக்கமே பெருகி வருகின்றது. வணிகச் சிந்தனைத்தளத்தில் பல்கிப்பெருகிவரும் இக்கலை தொடர்பான சமகாலப் பயிற்றுகை, எதிர்கால இனவிருப்புக்குப் பெரும் பயன்தராது என்பதே எம் கருத்து. மொழி புரியாத பிறவினத்தோர் இக்கலைகளைக் கண்டு மகிழ்ந்து செல்வாக்குமிக்க பண்பாட்டின் வெளிப்பாடு (rich culture) எனக் கூறலாம். ஆனால் மரபையும் பண்பாட்டையும் தலைமுறைதோறும் காவிச்செல்லும் தகுதியை இழந்தனவாகவே அவை இயங்கும்.

இனவுணர்வும் மொழிப்பற்றும் மிக்க கலையாசிரியர்கள் வடமொழிப் பயன்பாட்டுப் பாரம்பரியத்தலிருந்து விலக வேண்டும். சிலப்பதிகாரம் கையாண்ட அழகிய தமிழ்ச் சொற்களால் ஆடற்கலைக்கும் இசைக்கலைக்கும் முழுமையான தமிழுரு கொடுக்க வேண்டும். தமிழர் வாழ்வியலையும் பண்பாட்டையும் காலம் போற்றும் விழுமியங்களையும் கருப்பொருளாகக் கொள்ள வேண்டும். வாழும் சூழலுக்கேற்ப, தேவையான மாற்றங்களைச் செய்வது காலத்தின் கட்டாயம் என்பதை உணர வேண்டும்.

## நாட்டார் கலைகள்:

இவ்விரு கலைகலையும் தவிர்த்துவிட்டு, பண்பாட்டு மரபுகளைக் காவிச்செல்லவல்ல பிற கலைகள் எம்மிடம் இருக்கிறதா?

'ஆம், நிறையவே இருக்கின்றது' என இந்த வினாவுக்கான விடையைப்பெருமையோடு கூறிக்கொள்ளமுடியும். ஏற்கனவே குறிப்பிட்டதைப் போல, பண்டைக்காலந் தொட்டே பொதுவியல் கலைகளை நாட்டுப்புறக்கலைகளாகப் பாமரமக்கள் போற்றிப் பாதுகாத்து வந்துள்ளனர். 'ஏடறியேன் எழுத்தறியேன் எழுத்துவகை நானறியேன்' என்றவாறு இவர்களால் பேணப்பட்டு வந்த தமிழ்க்கலைகள் ஏராளம்.

கண்ணி, சிந்து, தெம்மாங்கு என்ற இசை மரபுகளும் உடுக்கு, உறுமி, பறை, தப்பட்டை போன்ற இசைக்கருவிகளும் கரகாட்டம், கோலாட்டம், ஒயிலாட்டம், புலியாட்டம் சிலம்பாட்டம் போன்ற ஆடல்களும் பல்வகைக் கூத்துகளும் வில்லிசையும் முற்றிலும் தமிழ் மரபைச் சார்ந்த கிராமியக்கலை வடிவங்களே. இவை பயன்பாட்டு மொழியாலும் வெளிப்படுத்தும் கருப்பொருளாலும் பெரிதும் தமிழையே தழுவி நிற்கின்றன.

பண்டைக்காலத்தில் பொதுவியல் கூத்தென நாட்டுமக்களுக்காக ஒதுக்கப்பட்ட கலை வடிவங்களையும் கலை மரபுகளையும் காலத்துயர்களையும் வரலாற்றுப் பேரிடர்களையும் கடந்து இன்றவும் சுமந்து வந்ததோர் நாட்டுப்புறமக்களே. வைதீக இறை நெறிகள் தீண்டாத தூரத்தில் இவர்கள் தமது அடையாளங்களைப் பேணிவந்துள்ளனர். இவ்வாறான நாட்டுப்புறக்கலைகளே இன்று நம் கண்முன் இருக்கின்ற தமிழர் பண்பாட்டுப்புதையல்களாகும். இக்கலைகளைக் கண்டறிந்து காலத்துக்கும் தேவைக்கும் ஏற்ப நாம் மீளுருவாக்கம் செய்து பயன்படுத்துதல் வேண்டும்.

தமிழறிஞர் பலர் தற்போது நாட்டுப்புற பாடல்களைப் போற்றி வருகின்றனர். தமிழரின் தனித்துவமான இசை மரபுகளை அவைகளே இன்றளவும் சுமந்து நிற்கின்றன எனக்கருதுகின்றனர். உணர்வுகளை நுட்பமாகவும் ஆழமாகவும் வெளிப்படுத்தவல்ல பெருமளவிலான ஆடல்வகைகளை நாட்டுப்புற ஆடல்கள் கொண்டிருப்பதாக நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம் தெரிவிக்கின்றது.

நாட்டார் கலைகள் குறித்து விரிவாக எழுதுவது இக்கட்டுரையின் நோக்கம் அல்ல. எனினும் வாழ்புலத் தமிழ்தலைமுறைகள் எதிர்கால இருப்புக்கும் தனித்துவ அடையாள வெளிப்பாட்டுக்கும் இப்போது பொருந்திவரக்கூடியவை நாட்டுப்புறக் கலைவடிவங்களே என இக்கட்டுரை வலுவாகப் பரிந்துரை செய்கின்றது.

## கலைகளின் எதிர்காலப் பயன்பாடுகள்:

நீண்ட வரலாற்றைக்கொண்ட ஓரினத்தின் பெறுமானத்தை அளவீடு செய்யும் கருவிகளில் கலைகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. ஓரினமானது தன்னுடைய செவ்வியல் தன்மையையும் அழகியலையும் கலைக-ளினூடாகவே சிறப்பாக வெளிப்படுத்த முடியும். சீனர்களுடைய ட்ரகன் ஆடல் இத்தகையதே. பிறவினத்தோர் மற்றுமொரு இனத்தோருடைய வாழ்வியலை எளிதில் புரிந்துகொள்ளக் கூடிய வடிவங்களும் அவ்வினஞ் சார்ந்த கலைகளே.

நாம் வாழும் பல்லினப்பண்பாட்டுச்சூழலில், கலைவளம் மிக்க பலவினங்கள் வாழ்கின்றன. தமது வாழ்வியல் செம்மை களை கலைவடிவங்களின் வழியே வெளிப்படுத்தி வருகின்றன. சில நூற்றாண்டுகளாக அழிவுகளுக்குள்ளாகி வரும் கனடாவின் முதற் குடிகள் ஆண்டுதோறும் பிரமாண்டாக ஒன்றுகூடுவதற்கு தமது பாரம்பரியக் கலை-களையே தளமாக்கி வைத்திருக்கின்றனர். ஆண்டுதோறும் நடைபெறுகின்ற Pow Wows என்ற நிகழ்வே இதற்குச் சான்று.

எமது இளையோர் பலர் கலையுணர்வு கொண்டவர்களாகவே இருப்பர். அவர்களுக்குள் இயல்பாகவே ஏற்படும் கலைத்தாகத்தைத் தணிப்பதற்குச் சிறப்பான கலைவடிவங்கள் எம்மிடையே பேணப்பட வேண்டும். நலிவடைந்தவையாக எமது கலைகள் இருப்பின், பிறவினத்தோரின் கலைகளையே எமது இளையோர் நாடிச்செல்லும் வாய்ப்பு ஏற்படும். ஆடல்கலையில் ஆற்றல் கொண்ட சிலர், வைதீக வழிக் கட்டுப்பாடுகளைக் கொண்ட பரதக்கலையைக் கற்கப் பிடிக்காமல், திரையிசை ஆடலையும், பஞ்சாபியர் கலையான பங்காராவையும் மேற்கத்தைய கலையாக பலே ஆடலையும் பழகி, அரங்கேறியிருக்கும் தவகல்கள் பலவுள்ளன.

எமது இனத்தின் முகவரிகளை அறிய விரும்பும் பிறவினத்தோர் முதலில் தெரிந்துகொள்ள விரும்புவது அவ்வினம் கைக் கொண்டுவரும் கலைகளின் ஆழஅகலங்களைத்தான். (இவ்வாறானோர் பலரின் ஆய்வுகளில் பரதமும் கர்நாடக சங்கீதமும் இந்தியக்கலைகளாகவே கணிக்கப் படுகின்றன, தமிழ்க்கலைகளாக அல்ல. காரணம் அவை பயன்படுத்தும் மொழியும் வெளிப்படுத்தும் கருப்பொருளுமே).

நாம் எமது பழைய வரலாறுகள் பலவற்றை இலக்கியப்பாடல்கள் வாயிலாகவே தெரிந்து கொள்கின்றோம். குமரிக்கண்டம் கடலில் அமிழ்ந்த செய்தியைக் கலித்தொகையும் சிலப்பதிகாரமும் கூறுகின்றன. மாந்தை துறைமுகமாக இருந்ததாகச் சம்பந்தர் தேவாரம் கூறுகின்றது. சங்கர் பொன்னர் என்ற வீர உடன்பிறப்புகளின் கதை, நாட்டுக்கூத்து வாயிலாகவே எமக்குத் தெரிய வருகின்றது. செம்பாத்தா என்றொரு வீர வன்னிச்சி இருந்தாள் என்ற வரலாற்றை ஒரு தென்மோடிக்கூத்தே வெளிக்கொண்டு வருகின்றது. ஒரு இனம் சார்ந்த கலைவடிவங்கள் காலந்தோறும் வரலாற்றையும் சுமந்துசெல்கின்றன. பின்னாட்களில் வாழ்புலங்களில் தோன்றும் தலைமுறையினர் வரலாற்றை அறிந்துகொள்ளும் வகையிலும் எமது கலைகள் படைக்கப்பட வேண்டும்.

வேர்களைத் தொலைத்தவர் பலர், தம்மினம் சார்ந்த கலைவடிவங்களினூடாகவே வேர்களையும் தேடிச் சென்றிருக்கின்றனர். தமிழரின் பொதுவியல் கலைகளும் வேத்தியல் கலைகளும் தமிழர்களின் வேர்களில் இருந்தே கிளைவிட்டெழுந்தவை.

ஓரினத்தினுடைய நடை, உடை, பாவனை, வாழ்க்கைமுறை போன்றவை பெரும்பாலும் கலைவடிவங்களில் மாறுவதில்லை. கதை நடைபெறும் காலத்தையே அவை வெளிப்படுத்துவனவாக இருக்கும். 'ஒரு பொம்மையின் வீடு' என்ற கடந்த நூற்றாண்டு நாடகத்தை இந்த நூற்றாண்டில் அவ்வாறே காணும்போது அக்காலத்தை நாம் அறிகின்றோம். எமது தலைமுறையினருக்கு கடந்தகால வாழ்வியலை அழகியலோடு அறிவிக்கவல்லவை கலைகளே.

## நிறைவுரை:

எதிர்காலத்தில் எமது கலைகளைச் சிறப்புறப் பேணுவதானது, தோன்றும் தலைமுறையினரின் வலுவான இருப்புக்கு எவ்வாறும் உதவும் என்பதை மேற்கூறிய கருத்துகள் சில விளக்குகின்றன.

நாம் வாழும் புலம், தாயக வாழ்வியலில் இருந்து வேறுபட்டது. அடையாளப் பேணல் தொடர்பில் பெரும் சவால்களைக்கொண்டது. இதுவரைகாலம் நாம் போற்றிவரும் பரதம் சங்கீதம் போன்ற கலைகளையும் நாட்டார்கலைகளையும் இப்போது இருப்பதைப் போலவே எதிர்காலத்துக்கு எடுத்துச் செல்லமுடியாது. பண்முகப் பண்பாட்டு வாழ்வியல் நீரோட்டத்தில் நின்று நிலைக் கவல்லவையாக எமது கலைகள் மீளுருவாக்கம் செய்யப்பட வேண்டும்.

மீளுருவாக்கம் தமிழுக்குப் புதியதல்ல, காலத்துக்கும் வாழும் களங்களுக்குமேற்ப எமது கலைகள் மீளுருவாக்கம் செய்யப்பட்டே வந்திருக்கின்றன. எமது வாழ்புலங்களுக்கேற்பக் கலைகளை மீளுருப்பெறச் செய்தல்வேண்டும். அதன்வழியே இளையோரை நெறிப்படுத்திச்செல்லவும் வேண்டும்.

கலைகளே ஓரினத்தின் வாழ்வைப் பிரதி-பலித்துக் செல்லும் காலக் கண்ணாடி. அவற்றைச் செம்மையுறப் பேணிச்செல்லும் வரலாற்றுப் பொறுப்பு எமக்குண்டு.

**உசாத்துணை:**
• http://old.thinnai.com/?p=51104031
• திராவிட மானுடவியல் - பக்தவத்சல பாரதி
• பண்பாட்டு வேர்களைத் தேடி - நாட்டார் வழக்காற்றியல் மையம்
• நாட்டுப்புறவியல் - முனைவர் சு. சண்முகசுந்தரம்
• சங்க இலக்கியங்கள்
• பண்பாட்டு அசைவுகள் - தொ.பரமசிவன்
• இலக்கியக்கலை - அ.ச. ஞானசம்பந்தன்
• சிலப்பதிகாரம்



vivekanandan.p@thaiveedu.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்திலிருந்து வெளிவரும்

# புதிய சொல்

கலை இலக்கியச் செயற்பாடுகளும் பதிப்பு முயற்சிகளும் வெறும் பண்பாட்டுச் செயற்பாடு மட்டுமல்ல.
அவை ஓர் இனத்தின் ஆன்மாவை உயிர்ப்புடன் வைத்திருப்பதுடன் இருப்பையும் உறுதிப்படுத்துவன
என்கிற நம்பிக்கையுடன் ஈழத்தவருக்கான தனித்துவமான கலை இலக்கிய வடிவங்களையும்
செல்நெறிகளையும் கண்டடையவேண்டும் என்றும்
அதற்கான தளங்களை உருவாக்கவேண்டும் என்ற முனைப்புடனும்
ஈழத்திலிருந்து புதிய சொல் இதழ் வெளிவருகின்றது.

## புதிய சொல் இதழ்களை கனடாவிலும் பெற்றுக்கொள்ளலாம்

தொடர்புகளுக்கு

தொலைபேசி 416-854-6768
மின்னஞ்சல்: **puthiyasol@gmail.com**
முகநூல்: **www.facebook.com/puthiyasol**






# JM ACCOUNTING AND FINANCIAL SOLUTION INC.

*"We provide reliable year around Tax and Accounting services."*

**Our Services included:**

Starting from $24.90 Plus tax

* E- file
* Personal Tax Returns (T1)
* Self-Employed Tax Returns
* Business, HST and Payroll Registrations & Bookkeeping
* Corporate Tax Returns (T2)
* Canada Revenue Agency's Audit assistance

Phone: (647)- 351- 5622 / (416)- 722-5338 Fax: (647)- 351- 5620
1193A, Brimley Road, Suite 5, Scarborough, ON, M1P 3G5
jmaccfinancial@gmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் தொழிற்சங்க எழுச்சி

செல்லப்பா தம்பிராசா அவர்கள் 91வது வயதில் தனது செயற்பாடுகளை நிறுத்திக்கொண்டு மீளாத்துயிலில் ஆழ்ந்துள்ளார். அவரது இயங்கு களங்களை அவதானிக்கும்போது எமக்கான சமூக எழுச்சி செல்நெறி வரலாறு வெளிப்பட்டு நிற்பதைக் கண்டுகொள்ள இயலும். குறிப்பாக, இவர் இளமைத் துடிப்புடன் இயங்கிய காலம் தொழிற்சங்க இயக்கம் எமது வரலாற்றின் காத்திரமான பங்களிப்பை நல்கிய அடையாளங்களைக் கொண்டி-ருப்பது எனும் வகையில் தொழிற்சங்க இயக்கம் என்பதனை மையப்பொருளாக இங்கு பேச முயல்வோம். அமைப்பு ஒழுங்கு கருதி அதன் எழுச்சிக்குக் களம் அமைத்த சூழலையும் அது தனது தீவிர செயற்பாட்டுத்திறனை இழந்த காரணிகளையும் கவனத்தில் எடுப்போம். முழு வரலாறாக அன்றி அடிப்படைப் பண்பே முன்வைக்கப்படும் வகையில் விடுபடும் விவகாரங்கள் பல; இதனை ஒரு முன்னுரைக்குறிப்பாக மட்டுப்படுத்துவோம்.

- ந. இரவீந்திரன் -

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்கூறில் தொழிற்சங்க இயக்கம் இலங்கையில் தொடக்கம் பெற்ற போதிலும் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியே வீறுபெற்றெழுந்த காலமாக அமைந்தது. இந்த வரலாறு குமாரி ஜெயவர்த்தனாவினால் விரிவாக வெளிப்படுத்தப்பட்டிருந்தது. அந்தப் பங்களிப்பின் பேறாகவே மலையக வரலாற்றின் மிகப்பெரும் ஆளுமையான கோ.நடேசய்யர் மறு கண்டுபிடிப்புச் செய்யப்பட்டார். இந்த அம்சம் தொழிற்சங்க இயக்க வரலாற்றில் மிகுந்த முக்கியத்துவம் உடையதாகும். தொழிற்சங்க இயக்கத்தின் மிகப்பெரும் தலைவராக வீறுபெற்றெழுந்து பல போராட்டங்களை முன்னெடுத்து வந்தவரான ஏ.இ. குணசிங்காவுடன் இணைந்து செயற்பட்டு மலையகப் பெருந்தோட்டத் துறை மக்களை முதன்முதலில் தொழிற்சங்க அமைப்பில் ஒன்றிணைத்தவர் கோ.நடேசய்யர். ஆயினும் மலையகச் சமூகத்தாலேயே பின்னர் கண்டுகொள்ளப்படாத ஒரு ஆளுமையாக அவர் காணாமல் போயிருந்தார்.

தொழிற்சங்க இயக்கத்தில் இனவாதத்துக்கு ஏ.இ. குணசிங்கா இடமளித்ததன் காரணமாக அவரிலிருந்து வெளியேறி தனித்து இயங்கத் தொடங்கியவர் கோ. நடேசய்யர். முப்பதாம் ஆண்டுகளில் மலையக மக்களைத் தொழிற்சங்கத்தில் ஒன்றிணைத்து அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு சட்ட மன்றத்துக்கு அனுப்பப்படும் தலைவராக அவர் திகழ்ந்தார். இலங்கை வரலாற்றில் பேரினவாத அச்சுறுத்தல் வலுவாகத்தோற்றம்பெற்று வளரத்தொடங்குவதனைச் சட்டமன்றத்தில் மட்டுமன்றி 'தேசாபிமானி' எனும் வெகுஜனப்பத்திரிகையைத் தொடங்கி அதன் வாயிலாகவும் அம்பலப்படுத்தியவர். ஆயினும், குறுந் தேசியவாதத் தப்பெண்ணங்களுக்கு ஆட்படாமலும் இந்திய விஸ்தரிப்புவாத நோக்குகளை அப்போதே கொண்டிருந்த இந்தியத் தேசியவாத சக்திகளுக்கு விட்டுக்கொடுக்காமலும் கோ. நடேசய்யர் இயங்கினார். அதன் காரணமாக மலையக வரலாற்றிலிருந்து காணாமலாக் கப்பட்டார்.

கடந்த இருபதாம் நூற்றாண்டின் நாற்பதாம் ஆண்டுகளில் கடைக்கூறில் இவ்வாறு மலையக அரசியலிலிருந்து ஒதுக்கப்பட்ட நடேசய்யர் ஒரு அரசியல் பத்திரிகையின் ஆசிரியராகத் தனது பணியைத் தொடர வாய்ப்பபேற்பட்டது. இலங்கை தமிழ் தேசியத்தை புதிய தளத்துக்கு வளர்த்தவரான எஸ்.ஜே.வி. செல்வநாயகம் உருவாக்கி இருந்த 'சுதந்திரன்' பத்திரிகையின் ஆசிரியராகப் பொறுப்பேற்றவர், மறைவுவரை அப்பணியை முன்னெடுத்தார். உருவாகி வளர்ந்து வந்த சிங்கள பேரினவாத அச்சுறுத்தலுக்கு எதிராக இனத்தேசியக்கோரிக்கையான சமஷ்டி அரசியல் களத்தை நடேசய்யர் ஏற்புடையதாக்கிய போது தொழிற்சங்க இயக்கத்தைத் தொடர்ந்தும் மலையகத்தில் முன்னெடுத்த இடதுசாரி சக்திகள் அவரால் ஏற்படுத்தித் தரப்பட்ட வாய்ப்பைப்பற்றி பேச இயலாமலாக்கப் பட நேர்ந்தது. இனவாத உணர்வைப் பயன்படுத்தி வலதுசாரி தொழிற்சங்கம் ஒன்று தொண்டமான் தலைமையில் பிரமாண்டமாக வளர்ந்தபோது அத்தகைய பிறபோக்கு சக்திகளால் திட்டமிட்டே நடேசய்யர் காணாமலாக்கப்பட்டார் எனில், இடதுசாரிகள் தமக்கான தவறான புரிதல் காரணமாக அவரைக் கண்டு கொள்ளாத தவறுக்கு ஆட்பட்டனர்.

முப்பதாம் ஆண்டுகளிலிருந்து தொழிற்சங்க இயக்கத்தில் இனவாதம் தலைதூக்கத் தொடங்கியிருந்தது. அன்றைய இலங்கை பொருளாதாரத்தின் முதன்மை சக்தி பெருந்



தோட்டத்துறை. அதன் தொழிலாளர்கள் அனைவரும் இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்டவர்கள். அவர்களை அணிதிரட்டிய முதல் நடவடிக்கை இலங்கை தேசியத்துக்கு உரியவர்களாக உணரவைத்து வளர்க்க முற்பட்டபோதிலும் அதை முறியடித்து இனவாத உணர்வை ஊட்டும் முயற்சி தொடங்கப்பட்டிருந்தது. இதற்கு முன்னதாகவே சிங்கள தொழிலாளர்களை இந்திய எதிர்ப்புணர்வோடு அணிதிரட்டும் முயற்சி ஏ.இ.குணசிங்கவினால் ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. பெருந்தோட்டத்துறை உற்பத்திகளை ஏற்றுமதி செய்வது மற்றும் இலங்கைக்கான இறக்குமதி ஆகியன சார்ந்து துறைமுகத் தொழிலாளர் படையொன்றின் அவசியமும் வலுவாக இருந்தது. இத்துறையில் இந்திய மலையாளிகள் பெரும்பான்மையினர் ஈடுபட்டிருந்தனர். சிங்களத்தொழிலாளர்களுக்கான வேலை வாய்ப்பைப் பறிப்பவர்களாகக் காட்டப்பட்ட மலையாள எதிர்ப்புணர்வு பொதுவான இந்திய எதிர்ப்பின் பகுதியாகத் தொடர்ந்து வளர்க்கப்பட்டு வந்தது.

இத்தகைய இனவாத உணர்வுக்கு எதிராக அனைத்து இன மக்களையும் ஒன்றிணைத்த தொழிற்சங்க இயக்கத்தை இலங்கையில் முதல் அரசியல் கட்சியான சமசமாஜக் கட்சி இதே சமகாலத்தில் (முப்பதாம் ஆண்டுகளில்) முன்னெடுக்கத் தொடங்கி விட்டது. அந்தக் கட்சியில் நாற்பதாம் ஆண்டுகளில் ஏற்பட்ட பிளவையடுத்து இலங்கை கொம்யூனிஸ்ட் கட்சி உதயமாகி இருந்தது. இருப்பினும் தொழிலாளர் போராட்டங்களை ஒன்றிணைத்து முன்னெடுக்கும் வகையில் வலுவான தொழிற்சங்க அமைப்பை இந்த இடதுசாரி அணி தொடர்ந்து முன்னெடுப்பதில் தடை இருக்கவில்லை. இனவாதத்துக்கு எதிரான மிக வலுவான தொழிலாளர் போராட்ட அணியாக இது வளர்ந்ததன் ஒரு அடையாளம், ஏகாதிபத்திய அரசுக்கெதிரான போராட்டத்தில் பொலிசாரின் துப்பாக்கிக் குண்டை நெஞ்சில் ஏந்தி மரணித்த முதல் தியாகியாக தமிழர் ஒருவர் அமைத்தார்.

ஆயினும், இலங்கை தொழிற்சங்க இயக்கத்திலேயே முளைவிட்டு பின்னர் அரசியல் களத்திலும் விஸ்தீரணமடைந்து வளர்ந்து வந்த சிங்களப் பேரினவாத அச்சுறுத்தலை இடதுசாரி அணி போதியளவு கவனத்தில் கொள்ளவில்லை. தம்மளவில் இனவாதத்துக்கு இடமளிக்காது அனைவரையும் ஒன்றிணைத்தார்கள் என்பது போதுமான வரலாற்றுப் பங்களிப்பாக அமையவில்லை. இவ்வகையில் பேரினவாத புற்றுநோயின் தாக்கத்தை உணர்த்த முற்படுவதையே குறுந்தேசிய உணர்வுக்குரிய இனவாதமாகக் கணிக்க முற்பட்டனர். இதன் காரணமாகவே மலையகத்தில் வலுவான தொழிற்சங்க அமைப்பைத் தொடங்கி வைத்த நடேசய்யருக்கு உரிய மதிப்புணர்வை இடதுசாரிகள் வழங்கத் தவறினர். உண்மையில் தொழிலாளர் உரிமைப் போராட்டத்தோடு இணைந்த வகையில் பேரினவாத வளர்ச்சிக்கு எதிரான போராட்டங்களையும் இடதுசாரிகள் கவனத்தில் எடுத்திருப்பின் மகத்தான வரலாற்றுப்பங்களிப்பை நல்கிய ஒரு ஆளுமை உரிய கணிப்பை பெற்றிருப்பார் என்பது மட்டுமன்றி, இலங்கை வரலாறும் ஆரோக்கியமான திசையில் வளர்த்தெடுக் கப்பட்டிருக்கும்.

இது இலங்கை இடதுசாரிகளிடம் மட்டுமே ஏற்பட்டு விட்ட தவறல்ல. வர்க்கப் போராட்டத்தை முன்னெடுப்பதே தமது பணி, தேசிய இனப் பிரச்சினை முதலாளிவர்க்க நலன் சார்ந்தது எனும் வகையில் அதனை சரியாக கையாள்வது எவ்வாறு என்பதே தமக்கு விதிக்கப்பட்டுள்ள வரலாற்றுக் கடமை என்ற புரிதல் மார்க்சியர்களிடம் அன்றிருந்த ஒரு நிலைப்பாடாகும். இந்தியா முழுமையிலும் கொம்யூனிஸ்ட் கட்சியை உருவாக்கிய முன்னோடிகளில் சிங்காரவேலர் மட்டுமே வர்க்கப் போராட்டத்துடன் இணைந்து தேசிய இனப் பிரச்சினையையும் சாதி ஒடுக்குமுறைக்கு எதிரான சிந்தனைமுறையையும் கவனத்தில் எடுத்திருந்தார். மார்க்சியராக இல்லாத போதிலும் கோ. நடேசய்யர் இதே போன்ற கருத்தியல் நிலைப்பாட்டைக் கொண்டிருந்தார். அன்றைய நிலையில் ஏகாதிபத்திய எதிர்ப்பையும் வர்க்கப் போராட்டத்தையும் முனைப்புக் குரியதாகக் கணித்துச் செயற்பட்ட இடதுசாரிகளால் கூர்மையடையவுள்ள தேசிய இனப் பிரச்சினை குறித்த தெளிவின்மை காரணமாக நடேசய்யரின் வகிபாகத்தைச் சரியான மதிப்பீட்டில் கணிக்க இயலாமல் போயிருந்தது.

இத்தகைய தவறுக்கு அப்பால் தொழிற்சங்க இயக்கத்தைக் கனதி மிக்கதாகக் கட்டியெழுப்பிக் காத்திரமான தொழிற்சங்கப் போராட்டங்களை இடையீடின்றி முன்னெடுத்து வரும் மகத்தான பங்களிப்பை இலங்கை இடது சாரிகள் முன்னெடுத்து வந்தனர். ஏகாதிபத்தியத்துக்கு எதிரான தீவிரமான போராட்டங்களை முதலாளித்துவ அணி மேற்கொண்டதில்லை. இந்தியாவின் விட்டுக்கொடுப்பற்ற மக்கள் போராட்டங்கள் காரணமாக இந்தியாவுக்கு சுதந்திரத்தை வழங்கியபோது இலங்கையின் ஏகாதிபத்திய சார்பினரான ஐக்கிய தேசிய கட்சியிடம் நாட்டை பிரித்தானியா ஏகாதிபத்தியம் (1948ல்)கையளித்திருந்தது. அந்நிய மூலதனத்தின் பிடிக்குள் உழன்ற நிலை காரணமாக சுதந்திரத்தின் பின்னரான இலங்கைச்சமூகம் முன்னரைக் காட்டிலும் தீவிரமான முரண்பாடுகளை முகங்கொள்ள நேர்ந்தது. அவற்றின் தீர்வுக்கான போராட்டங்களை இடதுசாரித் தொழிற்சங்கங்கள் காத்திரமான முறையில் முன்னெடுத்து வந்தன.

நாற்பதாம் ஆண்டுகளில் பதின்மவயதைக் கடந்து ஐம்பதுகளில் சமூக அக்கறையுடன் இயங்கத் தொடங்கியவர்களுக்கு தொழிற்சங்க இயக்கத்தின் இத்தகைய தீவிர முன்னெடுப்பு ஈர்ப்புமிக்க களமாக அமைந்திருந்தது. சுதந்திரத்தின் பின்னர் யு.என்.பி. அரசு ஏகாதிபத்திய பிடியை தளர்த்தும் எத்தனங்கள் எதையும் முன்னெடுக்காத போதிலும் அவர்களால் கவனிக்கப்படாமல் இருந்த விவசாய- கைத்தொழில் விருத்திக்கு சிலவற்றையேனும் செயலாக்க முன் வந்தனர். இலங்கைத் தமிழினத் தேசியத்தை அரசியல் அரங்கில் பேசுபொருளாக்கி

தொடர்தல் 90ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின்...

89ம் பக்கத் தொடர்ச்சி...

இருந்த ஜி.ஜி. பொன்னம்பலம் யு.என்.பி. அரசில் கைத்தொழில் அமைச்சராக இருந்த காரணத்தினால் வடக்கில் காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை, பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை, கிழக்கில் வாழைச்சேனை காகிதத் தொழிற்சாலை என்பன உருவாக இயலுமாக இருந்தது. முன்னதாக முப்பதாம் ஆண்டுகளில் மரவரிச் சட்டம் காரணமாக கள்ளிறக்கும் தொழிலாளர் சங்கமும் வடக்கில் வலுவானதாக இயங்கத் தொடங்கி இருந்தது. இவை தவிர கண்ணாடி, வாளி, ஓடு, சவர்க்காரம் என்பவற்றின் உற்பத்தி தொழிற்சாலைகளும் சுருட்டு தொழிலும் விருத்தி பெற்று வந்த காரணத்தால் தொழிலாளி வர்க்க அணி சேர்க்கைக்கான களம் தொடர்ந்து விரிவடைந்து வரலாயிற்று.

இத்தகைய வளர்ச்சி நிலைகளைப் புதிய தளம் நோக்கி பரிணமிக்க வைக்கும் கொள்கைப் பிடிப்பும் செயலாற்றலும் அற்றதாக இருந்த யு.என்.பி. அரசு முன்னேற்றத்தை விரிவுபடுத்தாதது மட்டுமன்றி மக்கள் விரோத நிலைப்பாடுகளையும் தொடர முனைந்தது. அவற்றுக்கு தொடர்ச்சியான போராட்டங்களை வீறுகொண்டெழச் செய்து வந்த இடதுசாரிக்கட்சிகள் 1953ம் ஆண்டு ஓகஸ்ட் மாதத்தில் ‘மகத்தான ஓகஸ்ட் ஹர்த்தால் போராட்டம்’ என இலங்கை வரலாற்றில் அழியாத் தடம் பதித்துவிட்ட போராட்டத்தின் வாயிலாக யூ.என்.பி. அரசை நிலைகுலையச் செய்திருந்தது. இடதுசாரித் தொழிற்சங்கங்கள் அனைத்தும் ஒன்றிணைந்து விடுத்த அறைகூவலை ஏற்று நாடுபூராவும் தொழிலாளர் - விவசாயிகள் முன்னெடுத்த போராட்டத்தின் விளைவாக அனைத்தும் நிலைகுலைவுக்குள்ளாயின் பாராளுமன்றத்தைக் கூட்ட இயலாதது மட்டுமன்றி நடுக்கடலில் கப்பலில் மந்திரிசபையைக் கூட்டி மக்கள் குரலுக்குப் பணிந்து சில கோரிக்கைகளை நிறைவேற்றும் நிர்ப்பந்தம் பற்றி விவாதிக்க வேண்டிய கட்டத்தை யு.என்.பி. அரசு அடைந்திருந்தது.

மாபெரும் ஓகஸ்ட் ஹர்த்தால் போராட்டத்தில் வடக்கு-கிழக்கு பிரதேசங்களும் இணையும் வகையில் அங்கு தொழிற்சங்க இயக்கம் ஏற்கெனவே வலுப்பெற்றிருந்தது மட்டுமன்றி, தமிழ்த் தேசியத்தை இரண்டாம் கட்ட வளர்ச்சிக்கு எடுத்துச்செல்ல ஏற்றதாக ஜி.ஜி. பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியிலிருந்து நான்கு வருடங்களின் முன்னர் வெளியேறியிருந்த செல்வநாயகம் - வன்னியசிங்கம் தலைமையிலான தமிழரசுக்கட்சி அந்தப்போராட்டத்தில் பங்கேற்றிருந்தமையும் தேசம் பூராவுமான போராட்ட வெற்றியை உறுதிப்படுத்தியிருந்தது. மேட்டுக்குடித் தமிழர் நலன் பேணி வந்த அதேவேளை ‘தமிழனென்று சொல்லடா, தலைநிமிர்ந்து நில்லடா’ என்ற மேடைப் பிரசங்கங்கள் வாயிலாகவே வாக்குப் பெற்றுவிட இயலும் என்ற நிலையிலிருந்த காங்கிரஸ் கட்சி வலுவான சண்டியர் கூட்டத்தையும் பெற்றிருந்தது. அவர்களை மீறித் தமிழரசுக்கட்சி வளர்வதற்கு கொம்யூனிஸ்ட் கட்சி வழங்கிய ஆதரவு வலுவான அடித்தளமாக இருந்தது. அதற்கு அமைவாக அன்றைய தமிழரசுக் கட்சி தமிழ்தேசியத்தின் விடுதலைக் குரலாக அமைந்ததுடன் இடதுசாரி அணியை நட்பு சக்தியாகவும் அரவணைத்திருந்தது.

ஆரோக்கியமான இந்தத்தொடக்கம் நீடித்து வளர இயலவில்லை. மக்கள் ஆதரவு முழுமையாக பெற்றுவிட்ட தமிழரசுக் கட்சியை மேட்டுக்குடித் தமிழர் தரப்பு தமக்குரியதாக மடைமாற்றம் செய்து கொண்டனர். அவ்வாறானதும் தமிழ் தேசியத்தின் விடுதலை நலன்கள் முன்னிறுத்தப்படுவதற்கு மாறாக மேட்டுக்குடிகளது அபிலாசையின் பாற்பட்டதானா ‘ஆண்ட பரம்பரை மீண்டுமொருமுறை ஆள நினைப்பு’ கொள்ளும் வகையில் இரண்டாம் கட்ட தமிழ் தேசிய தலைமையின் மேடை முழக்கங்கள் அமையலாயின. தொழிலாளர் நலனும் ஒடுக்கப்படும் தேசிய இன விடுதலை மார்க்கமும் இணைந்து செல்வதாக தேசிய இனத்தின் போராட்ட வரலாறு தொடர்வதற்கு இடந்தராவண்ணம் அந்தத் தலைமை இழைத்த தவறு மூன்று தசாப்தங்கள் நீடித்த வீரஞ்செறிந்த போராடத்தையுங் கூட ‘வீடுவந்து சேர இயலாத விளைச்சல்களை’ தருவனவாக ஆக்கி இருந்தது.

இவ்வகையிலான இரண்டக நிலை ஐம்பதாம் ஆண்டுகளின் இளந்தலைமுறையினரிடம் எந்தப் பாதையை தேர்ந்தெடுப்பது எனும் தடுமாற்றங்களைத் தந்தது. தொழிலாளி வர்க்க ஆட்சியை வென்றெடுப்பது எனும் குறிக்கோளுடன் இயங்கிய இடதுசாரிகள் விவசாயிகள் சங்கத்தையும் கட்டியெழுப்பிய போதிலும் தொழிற்சங்க வேலைகளில் அதிக கரிசனை கொண்டவர்களாயே இருந்தனர். விவசாயப் பிரச்சினை சார்ந்த தேசிய நலன்களில் நாட்டங்கொள்ளாதிருந்தனர். தேசியம் எனும் போது இலங்கைத் தேசியத்தைக் கருத்திற்கொண்டனரே அன்றி இனத் தேசியங்களைக் கவனங்கொள்ளாதிருந்தனர். மார்க்சிய அணி தொழிலாளர் விடுதலையோடு இணைந்ததாக தேசிய இன விடுதலை நாட்டத்தையும் கொண்டிருப்பது அவசியம் எனும் புரிதல் அப்போது இருந்ததில்லை என்பது குறித்து ஏற்கனேவே பேசியிருந்தோம்.

தொழிலாளர் பிரச்சினையை முகம் கொண்ட பலரும் வலுவுடன் போராட்டங்களை முன்னெடுத்து வந்த தொழிற்சங்க அணிகளில் இணைந்தனர். பாட்டாளி வர்க்கப் புரட்சி வாயிலாக வென்றெடுக்கப்படும் சோசலிச சமூகத்தில் இனப் பிரச்சினை உட்பட அனைத்து கெடுதிகளும் களையப்பட்டு இறுதியில் பொதுவுடைமை சாத்தியமாகி விடும் என்ற அரசியல் போதம் அவர்களுக்கு ஊக்க சக்தியாக இருந்தது. சோசலிச அமைப்பு வென்றெடுக்கப்பட்டிருக்கவில்லை என்ற போதிலும் அன்றைய உலகில் மக்கள் நல அரசாக முதலாளித்துவ அமைப்பைச் செயற்பட வைத்தமையானது விட்டுக் கொடுக்காத தொழிற்சங்க இயக்கப் போராட்டகங்களினாலேயே சாத்தியமானது. போக்குவரத்து, கல்வி, சுகாதாரம், வைத்தியம் என்பன தேசவுடைமை ஆக்கப்பட்டு மக்கள் இலகுவில் பெறும் ஜனநாயகத் தன்மையை எட்ட இயலுமாக இருந்தது தொழிற்சங்கப் போராட்டங்களின் பெரும் அறுவடையாகும்.

குறிப்பாக, 1953 மகத்தான ஓகஸ்ட் ஹர்த்தால் போராட்டத்தின் விளைவாக 1956ல் தரகு முதலாளி வர்க்க ஆட்சி வீழ்த்தப்பட்டு எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க தலைமையிலான சுதந்திரக் கட்சி (எஸ்.எல்.எஃப்.பி) ஏற்படுத்திக் கொண்ட ஐக்கிய முன்னணியரசாங்கம் பதவியேற்றுக்கொண்டது. சில இடதுசாரி அமைப்புகளும் அந்த அரசில் அங்கம் வகித்தன. தொழிற்சங்கங்களது பல கோரிக்கைகளை அந்த அரசாங்கம் நிறைவேற்றி வைத்திருந்தது. அதேவேளை விவசாயிகளை அணிதிரட்டியிருந்த சுதந்திரக் கட்சி அவர்களுக்கான - அவர்களது மண் சார்ந்த - சிங்களத் தேசிய உணர்வுக்குத் தீனிபோடும் வேலையிலும் முனைப்பு காட்டியிருந்தது. அதுவரை ஆங்கில மொழி வாயிலாக உயர்கல்வி கற்ற மேட்டுக்குடியினர் பெற்றுவந்த உயர் உத்தியோகங்களை, சாதாரண விவசாயியின் பிள்ளை தனது தாய்மொழி வாயிலாகப்பெறும் உயர்கல்வித் தகைமை ஊடாகவே பெறுவதற்கு - ஆட்சிக்கு வந்த 24 மணி நேரத்தில் தனிச் சிங்களச் சட்டத்தை உருவாக்குவோம் என்ற தேர்தல் காலப் பிரகடனத்தை நடைமுறைப்படுத்தியிருந்தது சுதந்திரக் கட்சி தலைமையிலான ஐக்கிய முன்னனி அரசு.

தனிச் சிங்களச் சட்டத்தை இடதுசாரிகள் வன்மையாகக் கண்டித்தன. சிங்களமும் தமிழும் ஆட்சி மொழிகளாக வேண்டுமென அவர்களால் வலியுறுத்தப்பட்டது. ‘இரு மொழிகள் ஒரு நாடு ஒரு மொழி இருநாடுகள்’ எனப்பிரிவினைவாதத்துக்குத் தூபமிடும் சட்டமெனக் கூறி கொல்வின் ஆர்.டி. சில்வா ஆற்றிய உரை பிரபல்யம் மிக்கது. பருத்தித்துறை பாராளுமன்ற உறுப்பினரான கொம்யூனிஸ்ட் பொன். கந்தையா ஆற்றிய உரையும் விவாதமும் தனிப் பிரசுரமாகவும் வெளிவந்தது. அதன் போது தென்னிலங்கை கொம்யூனிஸ்ட் உறுப்பினர்களும் இரு மொழிகளும் ஆட்சி மொழியாக வேண்டும் என வலியுறுத்தினர். மேட்டுக்குடித் தமிழ் தேசியத்தை வரிப்பதற்கான பண்பையும் தன்னுள் கொண்டிருந்த தமிழரசுக் கட்சியோ தாய்மொழிக் கல்வியையே நிராகரித்து ஆங்கில மேலாண்மை தொடர்ந்தும் நீடிப்பதற்கே குரல்கொடுத்து.

ஆயினும் 53ன் ஆகஸ்ட் எழுச்சியுடனான சிங்களத் தேசிய விழிப்புணர்வை சுதந்திரக் கட்சி அறுவடை செய்தது போன்றே தமிழ்த் தேசிய உணர்வை தமிழரசுக் கட்சி ஏற்கனவே தனக்கானதாகக் கையகப்படுத்தியிருந்த சூழலில், மொழிப் பிரச்சினையையும் வாக்குகளை அள்ளுவதற்கு ஏற்றவகையில் இனவாதமாக வளர்த்தெடுக்கும் வாய்ப்பைத் தவறவிடாமல் பயன்படுத்திக் கொண்டது. ஆக, தொழிற்சங்க இயக்க போராட்டத்தின் பேறான இனத் தேசிய எழுச்சிகளைக் கையேற்றுத் தலைமை தாங்கி சரியான மார்க்கத்தில் அவற்றை வழி நடத்த இடதுசாரிக் கட்சிகள் தவறவிட்ட சூழல் காரணமாக எதிர்நிலைப்பட்ட இரு தரப்பு இனவாதங்களாக வளரும் வரலாறு ஒன்று தொடர்வதாயிற்று.

இந்த இனத் தேசிய எழுச்சி விவசாயிகளைக் கல்வி மயப்படுத்தும் வாய்ப்பின் விளைவாக கிராமிய விழிப்புணர்வு ஐம்பதாம் ஆண்டுகளின் வரலாற்று உத்வேகமாய் அமைந்தது. பண்டாரநாயக்க அரசு கிராம முன்னேற்றச்சங்கங்களை உருவாக்கி கிராமிய எழுச்சிக்கு வடிவங்கொடுக்க வாய்ப்பளித்திருந்தது. இதன் உடன் போக்காக சன சமூக நிலையங்கள்(வாசிகசாலைகள்) ஒவ்வோர் கிராமங்களிலும் உருவாகும் வகையில் இளைஞர்களது செயற்பாடுகள் அமைந்தன. தொழிற்சங்க இயக்கங்களில் பணியாற்றுவதன் வாயிலாக சமூகச் செயற்பாடுகளில் நாட்டம் கொள்ளும் வாய்ப்பு பலருக்கு எட்டாமல் போயிருப்பினும் அன்றைய இளைஞர்களுக்கு சன சமூக நிலையங்களை உருவாக்கிக் கிராமத்தின் கல்வி விருத்திக்குப் பங்களிப்பு செய்வதற்கான சந்தர்ப்பம் கிட்டாமற் போயிருக்காது எனும் நிலை ஐம்பதாம் ஆண்டுகளில் ஒரு சாதனை எனலாம். (அமரர் அ.செ.தம்பிராசா அவர்கள் 1945ல் தனது முன்னெடுப்பில் ஊரவர்களின் ஒத்துழைப்புடனும் ‘பாரதி வாசிகசாலை’ எனும் படிப்பகத்தை உருவாக்க முன்னின்று உழைத்தவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது)

இனக்குரோத உள்நாட்டு யுத்தத்தின் வளர்ச்சி தொழிற்சங்க இயக்கத்தை நிர்மூலமாக்குவதற்குப் பேரினவாத அரசால் பயன்படுத்தப்பட்டது. எண்பதுகளின் தொடக்கத்தில் முன்னெடுக்கப்பட்ட வேலை நிறுத்தப் போராட்டத்தில் பங்கேற்ற தொழிலாளர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டு பலரும் தற்கொலை செய்யும் நிலை ஏற்பட்ட நிலை காரணமாக மேற்கொண்டு எந்தவொரு போராட்டத்தையும் முன்னெடுக்க ஒட்டாத வகையில் தொழிற்சங்கங்களை முடக்கி விட்டிருந்தது. அதேவேளை உலகமயமாதலின் உத்வேகமும் 1991ல் சோவியத் யூனியனின் தகர்வும் ஏற்பட்டு உலக நாடுகள் அனைத்திலும் சமூக மாற்றப் போராட்டங்களோ தொழிற்சங்க இயக்கங்களோ முன்னெடுக்கப்பட இடந்தரா வகையிலான நடைமுறையை உலக மூலதனச் சக்தி செயற்படுத்தி வரலாயிற்று.

இப்பின்னடைவை படிப்பினையாக்கி விடுதலை மார்க்கத்தைப் புதிய உத்வேகத்துடன் மார்க்சிய அணிகள் முன்னெடுப்பதாக எதிர்காலம் அமையும் என்பது நிச்சயம். அதற்கான புதிய ஒளி எமக்கான வரலாற்றின் ஊடாகவே எட்டப்பட்டும் உள்ளது. முப்பதாம் ஆண்டுகளின் மரவரிச்சட்டம் வாயிலாக கள்ளிறக்கும் தொழிலாளர் அணி உருவாகி தொழிற்சங்கப் போராட்டங்களில் பங்கேற்றமை பற்றி பார்த்திருந்தோம் அதே சமகாலத்தில் சி.டபிள்யூ.டபிள்யூ. கன்னங்கரா அறிமுகப்படுத்திய இலவசக் கல்வித்திட்டமும் கல்வியைக் கிராமங்களுக்கும் எட்டச் செய்ய ஏற்றதாக முன்னெடுத்த நடைமுறைகளும் காரணமாக ஒடுக்கப்பட்ட மக்கள் கல்வியைப் பெற்றுப் பல்வேறு தொழில் வாய்ப்புக்களைப் பெறுவதற்கு வகை செய்திருந்தது. தொடர்ந்தும் சாதியத்தின் பேரால் ஒடுக்கப்படுவதற்கு எதிரான விழிப்புணர்வைப் பெற்று முன்னேறுவதற்கு ஏற்றதாக நாற்பதாம் ஆண்டுகளில் சிறுபான்மைத் தமிழர் மகாசபை தோற்றம் பெற்றிருந்தது. அதன் செயற்பாடுகளிலும் அறுபதுகளில் உருவாகிய தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கப் போராட்டங்களிலும் மார்க்சியர்கள் பங்கேற்றுப் பெற்ற படிப்பினைகள் செழுமை மிக்கன. இந்த நேரடி அனுபவமும் தேசிய இனப்பிரச்சினையைக் கையேற்றுத் தலைமை தாங்கத் தவறியதன் எதிர்நிலைப் படிப்பினைகளும் இணைந்த திணை அரசியல் இன்று இலங்கை மண்ணில் பேசுபொருளாகி உள்ளது.

தமிழர் வரலாற்றுத் தொடக்கத்தின் திணை வாழ்முறை அடிப்படையிலான அரசுருவாக்கம் சார்ந்ததான திணை அரசியல் பற்றிய உரையாடல் தமிழகத்தில் இன்று பேசுபொருளாகியுள்ளது. இன்றைய இயங்குதளத்தின் இனத்தேசிய, சாதி, மத முரன்பாடுகளை முன்னெடுக்கும் இனவாத, சாதிவாத, மதவாத அடிப்படையிலான அடையாள அரசியலைத் திணை அரசியல் என இனங்காட்ட முயல்வதையும் காணக்கூடியதாக உள்ளது. அடையாள அரசியலிலிருந்து வேடுபட்டதாக திணை அரசியலை அணுக அவசியமுள்ளதை இலங்கை அனுபவம் உணர்த்துகின்றது. இந்த நோக்கு நிலையானது சாதி, மத, தேசிய இனச்சக்திகளிடையேயான போராட்டங்களையே வர்க்கப் போராட்ட வடிவமாக எப்படிக் காணலாம் என வலிந்து கோடலுக்கு ஆட்படுகிறதே அன்றி அந்த அடியாளாச் சக்திகளினுள் இடம்பெறும் வர்க்கப் போராட்டத்தைக் கவனங்கொள்வதில்லை. சாதி, மத, இனத்தேசிய சக்திகளின் இயங்குதளம் வர்க்க அரசியலுக்கு மாறான வேறொரு வரலாற்றுச் செல்நெறி என்பதை எமக்கான திணை வாழ்முறையிலிருந்து பரிணமித்த சாதி வாழ்வின் செல்நெறி காட்டி நிற்கிறது. முப்பதாம் ஆண்டுகளிலிருந்து முனைப்புடன் வளர்ந்த தொழிற்சங்க இயக்கத்தோடு கைகோர்த்து செயற்பட்டு வர்க்கச் சிந்தனை அடிப்படையில் முன்னெடுக்கப்பட்ட எமது சாதியத்துக்கு எதிரான போராட்ட அனுபவங்கள் திணை அரசியலை வேறொரு வடிவில் இன்று பேசுபொருளாக்கியுள்ளது. சாதி - மத - தேசிய இன ஒடுக்குமுறைகளின் தகர்ப்புக்கான வேறுபட்ட வடிவில் உள்ள வர்க்கப் போராட்ட முறையாக உள்ள திணை அரசியல் குறித்து விரிவாக பேச இடமுள்ளது.



raveendran.n@thaiveedu.com

**தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம்.**
**விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான**
**பாதையில் இட்டுச்செல்லும்.**

**E-mail: info@thaiveedu.com**
**Fax: 416-849-0594 Tel: 416-646-3422**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# DEVADAS LAW
PROFESSIONAL CORPORATION



Real Estate
HST
Tax Law
Family law
Immigration
Business law
Employment Law
Estate Planning and Last Wills



**Vasuki Devadas**
***Barrister, Solicitor & Notary Public***
vasuki@vdlaw.ca

**Vinayagamoorthy Devadas CPA, CMA, MBA**
***Barrister & Solicitor***
devadas@vdlaw.ca

**1415 Kennedy Road, Unit 3 | Toronto, Ontario | M1P 2L6**
Next to RBC @ Kennedy & Ellesmere

**Tel: (416) 266-1234 | Fax: (416) 266-2000 | www.vdlaw.ca**
**Contacting us should be easy as 1,2,3,4 Just remember "266"**



**People don't plan to fail, but they do fail to plan**

You don't have to take life the way it comes to you...
You can design your life to come to you the way you want!

**நாளை நம் கையில்**
**இன்றே செயற்படுங்கள்**

Super Visa Insurance
Disability Income Insurance
Critical illness Insurance
Mortgage Insurance
No medical exam Life Insurance
Permanent Life Insurances
Term Life Insurance
Travel & Visitor Insurance
RRSP Loan / Investment
RESP



*As an Independent Insurance Broker,*
*I will shop around for you and get you the best rate...*

**Guna Thuraisingham** M.A.Sc (Eng.), P.Eng.
*Independent Insurance Advisor*
**Dir: 416 528 1407**
Tel: 905 230 4986 | guna@gtbrokers.ca
www.gtbrokers.ca

Super Visa Insurance
100% Refund

Industrial Alliance · RBC Royal Bank · Assumption Life · Desjardins · Manulife · Canada Protection Plan · Foresters


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரியாரின் பெண் ஏன் அடிமையானாள்?

இக்கட்டுரையின் நோக்கம் பெரியாரின் 'பெண் ஏன் அடிமையானாள்?' எனும் நூல் குறித்த எனது கருத்துகளைச் சுருக்கமாகப் பதிவு செய்வதாகும்.

- மைதிலி தயாநிதி -

நவம்பர் 13, 1938ல் நடைபெற்ற பெண்கள் மகா நாட்டில் பெரியார் எனப் பெண்களால் அன்போடு பெயர் சூட்டப்பட்ட ஈ.வே.இராமசாமி நாயக்கர் எழுதிய 'பெண் ஏன் அடிமையானாள்?' எனும் நூல் (1942) தமிழ்ச்சமூகவியல் வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்தது. பெண் விடுதலையைப் பொறுத்தவரையில் புரட்சிகரமான கருத்துகள் கொண்ட அத்தகையதொரு நூல் தமிழில் அதுவரைகாலமும் எழுதப்படவில்லை எனலாம். பெரியார் ஒரு பகுத்தறிவுவாதியும், சமூக சீர்திருத்தவாதியுமாவர். பிராமணிய இந்து சமயத்தினால் முன்னெடுக்கப்பட்ட சனாதனக்கோட்பாடுகளும், பெண்ணடிமைக் கருத்துகளும் தமிழ்மக்களிடையே சாதியமும், பெண்ணடிமைத்தனமும் வேரூன்றக் காரணிகளாய் அமைந்தன எனும் முடிவுக்கு வந்த அவர், 'நம்பிக்கை' (faith) என்பதற்குப் பதிலாக பகுத்தறிவினை(reason) பிரயோகித்து சமூக அடித்தளத்தில் மாற்றங்களை ஏற்படுத்த முனைந்தார். இந்திய தேசிய காங்கிரசிலிருந்து வெளியேறி 1925ல் சாதியத்திற்கு எதிரான சுயமரியாதை இயக்கத்தினை ஆரம்பித்தார். பிறப்பினால் ஏற்றத்தாழ்வுகள் நிர்ணயிக்கப்படாத சமூக உதயத்தை நோக்கியதாக அவர் வழி நடத்திச் சென்ற பாதை அமைந்தது.

காலனித்துவ ஆட்சிக்கால இந்தியாவில், சமூகத்தில் பெண் வகிக்கும் நிலை, அந்தஸ்து குறித்த வாதப்பிரதிவாதங்கள் நிகழ்ந்து கொண்டிருந்த காலகட்டத்தில், இந்து மதத்திலேயே இந்தியப் பண்பாடு நிலைபெற்றுள்ளது எனக்கருதும் இந்திய தேசியவாதியர் பெண் சீர்திருத்தங்கள் பற்றிப் பேசிய கருத்துகளினும் பார்க்கத் தீவிரமான கருத்துகளைப் பெரியார் முன்வைத்தார். இந்திய தேசியவாதியரின் பெண் தொடர்பான சீர்திருத்தங்களும், கருத்துகளும் மீள் அர்த்தப்படுத்தப்பட்ட மத வரையறைகளுக்குள்ளேயே நின்றுகொண்டன. இந்துமதத்தை மறுதலித்த பெரியார் சமய, கலாசார வரம்புகளுக்கு அப்பால் நின்று சிந்தித்தமை அவரின் கருத்துகளுக்குத் தீவிரத்துவத்தை அளித்தது. இவர் கருத்துகள் மேனாட்டுப் பெண்ணியக் கருத்துகளுடன் பொதுவாக இயைந்து செல்பவை. இதனாலேயே, 'வர்க்கம் பேசாத பெரியாரை மாக்சிசம் ஏற்றுக் கொள்ள மறுத்தாலும், தேசியம் பேசுவோர் பெரியாரை காலனித்துவ கருத்தியலை ஆதரித்தவர் என்று இகழ்ந்தாலும் அவற்றில் உண்மை இல்லாமலில்லை. ஆனால், பெண்நிலைவாதிகள் கோட்பாட்டுரீதியில் அவரில் பிழை காண முடியாது' என்று செல்வி திருச்சந்திரன் கூறுகின்றார் (வர்க்கம் சாதி பெண்நிலை பண்பாடு: பெரியாரின் சிந்தனைகள் பற்றிய ஒரு சமூகநோக்கு. பக்கம்: vii). எனினும், பெரியாரின் பெண் ஏன் அடிமையானாள் எனும் நூல், எல்லாக் கோட்பாட்டு நூல்கள் போன்றும், வாசிப்பிற்கு மட்டுமன்றி, விமர்சனத்திற்கும், விவாதத்திற்கும் உட்படுத்தப்பட வேண்டியதொன்று.

பெரியாரின் இந்நூல், பெண்ணின் அடிமை நிலைமையானது இந்து மதம், ஆண்மை, பெண்களினால் உள்ளகப்படுத்தப்பட்ட ஒடுக்குமுறை எனும் மூன்று காரணிகளில் தங்கியுள்ளதாக இனங்காண்கிறது. பெண்கள் அடிமைகளாய் இருப்பதற்கு முதற் காரணம் இந்துமதமே என்பது பெரியாரின் கருத்து. 'இந்து மதமென்பதில் பெண்களுக்கு என்றென்றும் விடுதலையோ, சுதந்திரமோ எத்துறையிலும் அளிக்கப்படவே இல்லை என்பதைப் பெண்மக்கள் நன்றாய் உணரவேண்டும்' என்று கூறும் அவர், 'பெண்ணானவள் குழந்தைப்பருவத்திலும், இளமையிலும், முதுமையிலும் முறையே தந்தை, கணவன், மகன் எனும் ஆண்மக்களின் கட்டுப்பாட்டில் இருக்கவேண்டும். பெண்கள் ஒருபோதும் சுதந்திரமாக இருப்பதற்கு உரியரல்லர்' எனும் மனுஸ்மிருதியின் கருத்தை எடுத்துக் காட்டுகிறார். அதனால், 'வடமொழி இந்துமத சாஸ்திரங்களையும், புராணங்களையும் கொண்டாடும் பார்ப்பனர்கள் சமூகசீர்திருத்தத்தில் ஈடுபடுவதால் சமூகக்கொடுமைகளும், உயர்வு தாழ்வுகளும் சட்டத்தினாலும், மதத்தினாலும் நிலைபெற்றுப் பலப்பட்டு வருகின்றன' என்கிறார்(பக்கம்: 45). எனவே, இந்துமதவாதிகள் கொண்டுவரும் பெண் சீர்திருத்த நடவடிக்கைகள் பயனளிக்கா என்று சமகால இந்திய தேசியவாதியரின் பெண் தொடர்பான சீர்திருத்த முயற்சிகளை விமர்சிக்கின்றார்.

அடுத்து, சுதந்திரம் வீரம் முதலிய குணங்கள் 'ஆண்மை'க்குத் தான் உண்டென்று ஆண்கள் எண்ணுவதால், அத்தகைய




'ஆண்மை' அழியும் வரை பெண்ணுக்கு விடுதலை இல்லை என்று உறுதிபடக் கூறுகின்றார். ஆண்மையும், சுதந்திரமும் ஒன்றோடொன்று தொடர்புபடுத்தப்பட்டுள்ள காரணத்தால் ஆண்கள் மூலமாகப் பெண்கள் ஒருபோதும் விடுதலை பெறமுடியாது என அவர் கூறுகின்றார். 'ஆண்கள் முயற்சியால் செய்யப்படும் எவ்வித விடுதலை இயக்கமும் எவ்வழியிலும் பெண்களுக்கு உண்மையான விடுதலையை அளிக்க முடியாது;... அன்றியும் ஆண்கள் பெண்கள் விடுதலைக்குப் பாடுபடுவதால் பெண்களின் அடிமைத்தனம் வளருவதுடன், பெண்கள் என்றும் விடுதலை பெறமுடியாத கட்டுப்பாடுகள் பலப்பட்டுக்கொண்டு வருகின்றன. பெண்களுக்கு மதிப்புக் கொடுப்பதாகவும், பெண்கள் விடுதலைக்காகப் பாடுபடுவதாகவும் ஆண்கள் கொள்வதெல்லாம் பெண்களை ஏமாற்றுவதற்குச் செய்யும் சூழ்ச்சியே ஒழிய வேறல்ல. எங்காவது பூனைகளால் எலிகளுக்கு விடுதலை உண்டாகுமா? எங்காவது நரிகளால் ஆடு, கோழிகளுக்கு விடுதலை உண்டாகுமா? எங்காவது வெள்ளைக்காரர்களால் இந்தியர்களுக்கு செல்வம் பெருகுமா? எங்காவது பார்ப்பனர்களால் பார்ப்பனரல்லாதவர்களுக்குச்சமத்துவம் கிடைக்குமா? என்பதை யோசித்தால் இதன் உண்மை விளங்கும்' என்கிறார் (பக்கம் 75).

இதன் மூலமாக அவர் வலியுறுத்த முயல்வது பெண்கள் தமது விடுதலைக்குத் தாமே உழைக்க முன்வரல் வேண்டும் என்பதையே ஆகும். ஆனால் உள்ளகப்படுத்திய ஒடுக்குமுறை (internalised oppression) இதற்குக் குந்தகமாக அமைகின்றது. உள்ளகப்படுத்திய ஒடுக்குமுறையை சித்திரலேகா மௌனகுரு 'தாழ்த்தப்பட்ட மக்கள், தமக்கும் உயர்த்தப்பட்ட சாதியினருக்குமிடையே காணப்படும் ஏற்றத்தாழ்வான உறவுநிலையையும், தம்மீது சுமத்தப்படும் ஒடுக்குமுறையையும் இயற்கையெனவே ஏற்றுக் கொள்கின்றனர். இது காலங் காலமாகத் தொடர்ந்து வருகிறது. இது அவர்களின் உளவியலில் பதிந்து இருக்கிறது. இவ்வாறு ஒடுக்கப்பட்ட மக்களின் உணர்வின்மைக்கு இது காரணமாய் அமைகிறது. அதனையே உள்ளகப்படுத்திய ஒடுக்குமுறை என்று கூறுவர்' என விளக்குகின்றார் ('பெரியாரின் பெண் விடுதலைக் கருத்துகள்' செல்வி திருச்சந்திரனால் பதிப்பிக்கப்பட்ட வர்க்கம் சாதி பெண்நிலை பண்பாடு, பக்கம் 20-21). தாழ்த்தப்பட்ட சாதியினர்க்கு மட்டுமன்றிப் பெண்களுக்கும் இக் கருத்தாக்கம் பொருந்துவதாகும். தம்மைச்சிறுமைப்படுத்தும் மத தத்துவங்கள், பண்பாட்டு விழுமியங்களை உள்வாங்கி, மனதில் காலங்காலமாகப் பதித்து வைத்திருக்கின்ற காரணத்தால் அவற்றுக்கெதிராகக் கலகம் செய்யத் பெண்கள் தயங்குகின்றார்கள். 'பெண்கள் விடுதலை பெறுவதற்கு இப்போது ஆண்களை விடப் பெண்களே பெரிதும் தடையாய் இருக்கின்றார்கள். ஏனெனில் இன்னமும்பெண்களுக்குத் தாங்கள் முழுவிடுதலைக்குரியவர்கள் என்ற எண்ணமே தோன்றவில்லை. தங்களுடைய இயற்கைத் தத்துவங்களின் தன்மையே தாங்கள் ஆண் அடிமையாகக் கடவுள் படைத்திருப்பதாக அறிவிலிகளாய்க் கருதிக்கொண்டிருக்கின்றார்கள்' என்று பெரியார் கூறுவது கவனிக்கத்தக்கது. (பக்கம் 77).

அவர் தனது நூலில் பெண்களின் விடுதலைக்குத் தடையாக அமையும் கருத்தாக்கங்கள், வாழ்க்கை நெறிகள், பழக்கவழக்கங்கள் குறித்து விரிவாகப் பேசுகின்றார். பெண்ணடிமைத்தனத்திற்கு வடமொழிக் கருத்துகளைத் தமிழ் உள்வாங்கி வந்தமை பிரதான காரணங்களிலொன்றாக இருப்பதைக் கற்பு எனும் கருத்தாக்க விளக்கம் மூலம் உணர்த்துகின்றார். கற்பு என்பதன் சொற்பிறப்பியலை முதலில் ஆராயும் அவர், 'பதியைக் கடவுளாகக் கொண்டவள், பதிக்கு அடிமையாய் இருப்பதையே விரதமாகக் கொண்டவள், பதியைத் தவிர வேறுயாரையும் கருதாதவள்' என வடமொழிக் கருத்தானது கற்பின் பால் ஏற்றப்பட்டமை பெண்ணின் அடிமைத்தளைகளுளொன்றாய் அது அமையக் காரணம் என வாதிடுகின்றார். மேலும், நூல்கள் அவ்வத் தேச, காலநிலைகளுக்கேற்பவே எழுதப்பட்டன. ஆதலால் அவற்றைப் பிராமணியம் கருதுவதுபோன்று எக்காலத்திற்கு மேற்றவை எனக்கொள்ள முடியாது என்பதை வலியுறுத்துகின்றார். நீதிநூல்களிற் சிறந்ததான திருக்குறள் ஆரிய ஆதிக்கம் பரவியுள்ள காலத்தில் எழுந்தமையால் பெண்ணடிமைக் கருத்துகள் அந்நூலில் இருப்பதைச் சுட்டிக் காட்டுகின்றார்.

காதல், திருமணம் என்பவற்றுக்குப் புனிதமும், தெய்வத்தன்மையும் கற்பித்தல் மூலமாக ஆண், பெண் இருபாலாரினதும் வாழ்க்கை நரகமாகுவதை மூன்றாம், நான்காமத்தியாயங்களில் விளக்குகின்றார். மணவிலக்கின் (விவாகரத்தின்) அவசியத்தினை வற்புறுத்துகின்றார். திருப்தியும், இன்பமும் கிட்டாது போகுமாயின் கல்யாணத்திலிருந்து இருபாலாருக்கும் விடுதலை அவசியம் என்கிறார்.

மேலும், விபசாரம் எனும் வசவுக்கும், பழிக்கும் பெண்ணே உட்படுத்தப்படுவதையும், ஆண்களை விபச்சாரர்களென வகைப்படுத்தி வைக்கும் வழக்கம் இல்லை என்பதை ஆறாம் அத்தியாயத்தில் சுட்டிக் காட்டுகின்றார். அதேபோன்று வாழ்க்கைத் துணையை இழக்கும்போது ஆணுக்கிருக்கும் மறுமண சுதந்திரம் பெண்களுக்கு மறுக்கப்பட்டு வந்ததை 'விதவைகள் நிலைமை' எனும் கட்டுரையில் விவரிக்கின்றார். எட்டாம் அத்தியாயத்தில் பெண்கள் வாரிசுச் சொத்துரிமை இல்லாதிருப்பது பெண் அடிமைக்கான காரணங்களுள் பிரதானமானது எனக்கூறுகின்றார். இறுதியாகத் தாய்மையும் பெண்ணைப் பிணித்துள்ள விலங்குகளில் முக்கியமானது எனக் குறிப்பிடுகின்றார். விடுதலை வேண்டுமெனில் பெண் தாய்மையைப் புறக்கணிக்க வேண்டும். பெண்கள் பிள்ளைப் பேற்றினை நிறுத்துவது என்பது அவர்கள் சுதந்திரத்திற்கும், சுயேச்சைக்கும் அவசியம் என்பது அவர் கருத்து. 'பெண்கள் பிள்ளை பெறுவதை நிறுத்திவிட்டால், 'உலகம் விருத்தியாகாது, மானிட வர்க்கம் விருத்தியாகாது' என்று தர்ம நியாயம்பேசச் சிலர் வருவார்கள். உலகம் விருத்தியாகாவிட்டால் பெண்களுக்கு என்ன கஷ்டம் வரும்? மானிட வர்க்கம் பெருகாவிட்டால் பெண்களுக்கு என்ன ஆபத்து ஏற்பட்டு விடக்கூடும்? அல்லது இந்த 'தர்மநியாயம்' (அதாவது மக்கள் பெருக்கமடையாவிட்டால்) பேசுபவர்களுக்குத்தான் என்ன கஷ்டம் உண்டாகி விடும் என்பது நமக்குப் புரியவில்லை. இதுவரையில் பெருகிக்கொண்டு வந்த மானிட வர்க்கத்தால் ஏற்பட்ட நன்மைதான் என்ன என்பதும் நமக்குத் தெரியவில்லை.' என்கிறார் (பக்கம்78).

இறுதியாக, இந்நூலை வாசித்தபோது என் மனதில் உண்டான எதிர்மறைக் கருத்துகளைக் குறிப்பிட விரும்புகின்றேன். பெண் ஏன் அடிமையானாள் என்பதுதான் நூலின் தலைப்பாக இருந்தாலும், 'காதல்', 'கல்யாண விடுதலை', 'மறுமணம் தவறா?' போன்ற அத்தியாயங்களில் ஆணின் சமூக அதிகாரம் காதல், திருமண உறவுகளிற் பிரதிபலிக்கின்றது என்பதையோ, இக் கருத்தாக்கங்களிற்கு தெய்வீகம் கற்பித்தலினால் பெரிதும் இடர்ப்படுவது பெண்களே என்பதையோ, இவ் உறவுகளுக்குள் ஆணின் உடல், சொல், உள வன்முறைகளுக்குப் பெரும்பாலும் ஆளாகுபவள் பெண்ணே என்பதையோ அவர் குறிப்பிடத் தவறிவிட்டார். அதிகாரமற்ற அடிமையாக இருக்கும் பெண்ணிற்கும், அதிகாரமிக்க எசமானனான ஆணிற்கும் இடையிலுள்ள உறவினை சம அதிகாரமுள்ள இருவருக்கிடையில் உள்ள உறவு போன்றதெனக் கருதி இவ் அத்தியாயங்களில் அவர் கருத்துக் கூறிச்செல்வது ஏற்புடையதாக எனக்குத் தெரியவில்லை. அதிலும், அவர் ஒரு மனைவியிருக்கத் தக்கதாக இன்னொருத்தியை மணம்புரியலாம் என்று கூறும் 'மறுமணம் தவறல்ல' என்ற அத்தியாயத்தில் சமூகத்தில் நிலவும் பெண்ணைப் பற்றிய தவறான புரிதல்களும், கருத்துகளும் எடுத்தாளப்பட்டுள்ளன. அவ் அத்தியாயம் பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தைச் சேர்ந்த ஆண் ஏற்கனவே திருமணமானவராக இருப்பினும் தமது கொள்கையை ஆதரிக்கும் பெண்ணை, முதல் மனைவி உயிரோடிருக்கும் பொழுதே, சீர்திருத்தத் திருமணம் செய்து கொள்ளலாம் என்ற அவர் கொள்கையை வலியுறுத்த எழுதப்பட்டது போல் தோன்றுகின்றது (பார்க்க: சி.எஸ். லக்ஷ்மியின் Mother, Mother Community and Mother Politics in Tamil Nadu Economic and Political Weekly, Vol. 25, No. 42/43(Oct.20-27, 1990), pp. WS72). பெண்ணிற்கும் இத்தகைய சுதந்திரம் வேண்டும் என அவர் அவ் அத்தியாயத்தின் இறுதியில் மேலோட்டமாகக் கூறி நிறைவுசெய்கிறார். இவற்றுக்குச் சமாதானமாகப் பெரியாரின் கருத்துகளையே நாமும் கூறலாம்: எந்தவொரு நூலும் எக்காலத்திற்கும் பொருத்தமானது என்று கொண்டாடமுடியாது. ஆண்களினால் பெண்களுக்குச் சுதந்திரம் வந்துவிட முடியாது. பெண்கள் தமது சுதந்திரத்திற்குத் தாமே தான் உழைக்க வேண்டும்.



maithilithayanithy@thaiveedu.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்குறளிற் பெண்கள் பற்றிய கருத்துநிலை நோக்கு

- விமலா பாலசுந்தரம் -

திருக்குறளிற் பெண்கள் பற்றிய கருத்து நிலையை அறிவதற்குத் துணையாகத் திருக்குறள் ஆக்கம்பெற்ற சமூக, சமயச் சூழல்களை அறிந்துகொள்ளுதல் பொருத்தமாகும். வீர யுகம் எனப் போற்றப்பட்ட சங்ககாலத்தில் நடைபெற்ற தொடர்ச்சியான போர்களினாலும், பொருளாதாரச் சிதைவுகளாலும் மக்கள் தம் வாழ்க்கையில் பல இன்னல்களுக்கு ஆளாயினர். அதனைத் தொடர்ந்து வந்த சங்கமம்மருவிய காலத்தில் தமிழ் நாட்டைக் கைப்பற்றிய களப்பிரர்களின் ஆட்சியிலும் மக்கள் ஆதரவற்ற நிலையில் வாழ்ந்தனர். இந்நிலையில் தமிழகத்தில் சமணமும் பௌத்தமும் மக்கள் வாழ்க்கைக்கு வேண்டிய மருத்துவம், கல்வி முதலான தேவைகளுக்கு ஆதரவாக அமையலாயின. அக்கால மக்களின் வாழ்க்கையில் காணப்பட்ட குறைபாடுகளையும் சீர்கேடுகளையும் போக்கி, அவர்களை நன்னெறிப்படுத்தும் கடப்பாடு இலக்கியக்காரருக்கு உரியதாயிற்று. சமண, பௌத்தப் பள்ளிகளைச் சார்ந்த புலவர்களால் இயற்றப்பட்ட இலக்கியங்கள் தத்தம் மதக் கருத்துக்களைப் போதிப்பனவாகவே அமைந்தன. அவ்வகையில் சீரழிந்த சமுதாயத்தையும், அரசியலையும் நெறிப்படுத்தும் வகையில் ஆக்கம்பெற்ற நூலே திருக்குறள் ஆகும்.

திருக்குறளில் மக்களின் சமூக வாழ்க்கைக்குத் தேவையான அறம், பொருள், இன்பம் ஆகிய விடயங்களுடன், மானுடம் உய்வதற்கு இன்றியமையாத அறங்களும், அரசியலைச் செம்மையாக நடத்துவதற்குத் தேவையான அரசியல் அறநெறிகளும் கூறப்பட்டுள்ளன. இப்பின்னணிகளில் வள்ளுவர், சமூக நோக்கிற் பெண்கள் பற்றிய தனது அவதானிப்புக்களையும், கருத்துக்களையும் திருக்குறளில் எவ்வாறு பதிவுசெய்துள்ளார் என்பதை இக்கட்டுரை ஆராய்கிறது.

திருவள்ளுவர் பெண்களின் சமூக முக்கியத்துவம் கருதித் திருக்குறளின் முப்பாலிலும் பல்வேறு நிலைகளில் பெண்களுக்குரிய வாழ்வியல் நெறிமுறைகளை, சமூக இயக்கத்தின் அச்சாணியாகப் பெண்கள் எவ்வாறு திகழ்கிறார்கள் என்பவற்றைச் சமூகக் கண்ணோட்டத்துடன் கூறியுள்ளார். திருக்குறளில் பெண்கள் பற்றிய வள்ளுவரின் கருத்துக்களையும் அவதானிப்புக்களையும் மூன்று பிரிவுகளாக நோக்கலாம்:

- பெண்ணைக் காதலியாகவும் தலைவியாகவும் படைத்து, அகவாழ்க்கை சார்ந்த அவர்களது உணர்வுகளைக் காமத்துப் பாலில் விரிவாகப் பதிவு செய்கின்றார்.
- பெண்ணைக் குடும்பத் தலைவியாகப் படைத்த வள்ளுவர், இல்லறவியலில் பெண்ணின் சிறப்புக்கள், கடமைகள் ஆகியனவற்றை விளக்குகிறார். ஆணும் பெண்ணும் இணைந்து ஆற்ற வேண்டிய கடமைகளைத் தனது கருத்துநிலையில் வைத்து அறத்துப்பாலில் இல்லறவியலிலுள்ள 'இல்வாழ்க்கை', 'வாழ்க்கைத் துணைநலம்', 'மக்கட்பேறு', 'விருந்தோம்பல்' ஆகிய அதிகாரங்களில் விளக்கமாகக் கூறுகின்றார்.
- சமூக நிலையிலும், குடும்ப நிலையிலும் ஆண் - பெண் உறவுநிலைகளில், அவர் அவதானித்த சீர்கேடுகளையும், குறைபாடுகளையும் சுட்டிக்காட்டிச் சமுதாயத்தை நன்னெறிப்படுத்துவதற்காக அறத்துப்பாலில் 'பிறனில்விழையாமை', என்ற அதிகாரத்தையும், பொருட்பாலில் நட்பியலிலுள்ள 'பெண்வழிச்சேறல்', 'வரைவின் மகளிர்' ஆகிய அதிகாரங்களையும் அமைத்துள்ளார்.

ஆண் பெண் இருபாலருக்குமுரிய ஒழுக்கம், நட்புறவு முதலான விடயங்கள் சார்ந்த அறிவுரைகள் இவ்வதிகாரங்களில் விளக்கமாகக் கூறப்படுகின்றன. சமூகத்தைச் சீர்திருத்தும் வகையில், வள்ளுவர் நடுநிலை நின்று தவறிழைக்கும் ஆண்களையும், பெண்களையும் மிகக் கடுஞ்சொற்களாற் சாடும் உத்தியையும் கையாண்டுள்ளார். சங்க இலக்கியங்களான எட்டுத்தொகை பத்துப்பாட்டு ஆகிய தொகுப்பு நூல்களை ஆராயும்போது சங்ககாலச் சமூகத்தில் குடும்பவாழ்விலும், சமூகவாழ்விலும் பெண்கள் உயர்நிலையில் இருந்தமை மிகத்தெளிவாகப் புலப்படுகின்றது. ஒரு சமுதாயம் பெண்களுக்குக் கொடுத்திருக்கும் உரிமையினின்றும் அதனுடைய நாகரிகத்தின் தன்மையும் பண்பாட்டின் மேன்மையும் அளவிடப்படும் என்று கூறுவர். அது போன்றே புறநானூற்றுக் கால முன்னையோர் பெண்களை மிகக் கௌரவத்தோடு நடத்தி வந்திருக்கின்றார்கள் என்பதும் அறியப்படுகின்றது. இதற்குக் குடும்பத் தலைவனை அறிமுகம் செய்யும்போது அவனது மனைவியின் சிறப்பைக் கூறி அவனை அறிமுகப்படுத்துதல் மரபாக இருந்தமையை 'மனைக்கு விளக்காகிய வாணுதல் கணவன்' என்ற புறநானூற்றுச் செய்யுள் வரி (314:1) சான்றாகும். எனவே அக்காலத்தில் குடும்ப வாழ்க்கையில் பெண்கள் முதன்மை பெற்றிருந்தமை அறியப்படுகிறது.



## காதலி நிலையில் பெண்கள்:

குடும்ப வாழ்வில் காதலும், திருமணமும், குழந்தைப்பேறும் மிகவும் முக்கியமானவை. சங்க அகஇலக்கியங்களும் இதனையே பாடுகின்றன. திருவள்ளுவர் அவ்வழியில் அறம் பிறழாத குடும்ப வாழ்வு அமைய வேண்டும் என்ற நோக்கில் காமத்துப்பாலில் விளக்கம் தருகின்றார். மேலும் காமத்துப் பாலில் அகவாழ்க்கை சார்ந்து காதல் → திருமணம் → குடும்பம் என்ற வாழ்க்கை நிலைகளைத் தொடர்ச்சியாகப் பதிவுசெய்கின்றார். இளவயதினரான ஆணும் பெண்ணும் சந்தித்து இருமனங்களும் ஒருமனதாகி, மனங்கலந்து, காதல் வயப்பட்டு வாழும் வாழ்வு 'களவியல்' என்று கூறப்படுகிறது. காதலியைச் சந்திக்கும் காதலன் அவளது அழகில் மயங்கி, அவளது கண் அழகை வர்ணிப்பதும், அவளது பார்வையில் காதலனுக்கு ஏற்படும் வருத்தமும் பல குறட்பாக்களிற் சித்தரிக்கப்படுகின்றன. சான்றாகப் பின்வரும் குறளை நோக்கலாம்:

*'கூற்றமோ கண்ணோ பிணையோ*
*- மடவரல்*
*நோக்கம் இம்மூன்றும் உடைத்து*

- குறள்: 1085

இக்குறளில் காதலியின் பார்வையால் அவளை, எமன் என்பதா?. அன்பைப் புலப்படுத்தவதால் கண் என்பதா? இடையிடையே அச்சத்தோடு மருண்டு பார்ப்பதால் மான் என்பதா? இப்பெண்ணின் பார்வை அந்த மூன்று பண்பினையும் கொண்டுள் ளதே என வியப்பதாக வள்ளுவரது கற்பனை அமைகிறது. குறிப்பறிதல் (110), புணர்ச்சி மகிழ்தல் (111), நலம்புனைந்துரைத்தல் (112), காதற்சிறப்புரைத்தல் (113), நாணுத்துறவுரைத்தல் (114) ஆகிய அதிகாரங்களிற் காதல் வயப்படும் பெண்ணிடம் இயல்பாகவேயுள்ள நாற்குணங்களின் செயற்பாடுகளையும், அவளது அழகின் சிறப்பையும் வள்ளுவர் இலக்கிய நயத்துடன் புனைந்துள்ளார். சங்க அகத்திணை இலக்கியங்களிலும்விடப் பெண்களைப் பெரிதும் வருணித்து, அவர்களது உணர்வுகளுக்குத் திருக்குறள் சிறப்பாக முக்கியத்துவம் கொடுத்துள்ளமை காண்க.

நலம் புனைந்துரைத்தல் என்ற அதிகாரத்தில் காதலன் தனது காதலியின் உறுப்புக்களின் மென்மையையும், அவற்றின் அழகையும், அவை தரும் உணர்வினையும் இயற்கையில் காணும் பொருட்களுடன் ஒப்பிட்டுக் கூறும் தன்மையை நோக்கலாம். சான்றாகக் காதலன் ஒருவன் தனது காதலியின் மெல்லிடையின் மென்மையை அனிச்சம் பூவுடன் ஒப்பிட்டுப் புகழ்ந்துரைப்பதை பின்வரும் குறளிற் காணலாம்:

*அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தாள்*
*- நுசுப்பிற்கு*
*நல்ல படாஅ பறை*

- குறள்: 1115

காதலன் காதலி இருவரும் தமது உணர்வுகளை வெளிப்படுத்தும் வகையில் காதற்சிறப்புரைத்தல் என்ற அதிகாரம் அமைந்துள்ளது. சான்றாக, 'என் காதலன் எப்போதும் என் கண்ணினுள்ளேயே உள்ளதால், கண்களை மூடி, அஞ்சனம் எழுதிலேன். ஏனெனில் அக்கணத்திற்கூட அவர் என் கண்களைவிட்டு மறைந்து விடுவாரே' என ஏங்கும் காதலியின் மன உணர்வினைச் சித்திரித்துக் காட்டும்வகை சிறப்பாகக் காணப்படுகிறது.

## மனைவி நிலையில் பெண்கள்:

சமூகத்தில் காதலன், காதலி ஆகிய இருவரையும் சமநிலையில் வைத்து அவர்களது உணர்வுகளைப் பாடிய வள்ளுவர், காதலின் அடுத்த கட்டமாகிய திருமண வாழ்க்கையில் மனைவி அல்லது தலைவி என்ற நிலையில் பெண்களின் உணர்வுகளைக்கற்பியலில் எவ்வாறு பதிவு செய்துள்ளார் என்பதை அடுத்து நோக்கலாம்.

சங்க அகத்திணை இலக்கியங்கள், காதலர் பிரிவுத் துன்பங்களைப் பாலைத்திணைச் செய்யுள்களில் மிக நயம்படக் காட்சிப்படுத்தியுள்ளன. கணவன் பொருள்தேடிச் செல்லுதல், அவன் வரும்வரையும் காத்திருத்தல், அவன் வரவு தாமதித்தால் அடையும் பிரிவுத்துயர், அவற்றால் அவளுக்கு ஏற்படும் மனவுணர்வுகள், உடலுறுப்புக்களிலே தோன்றும் மாற்றங்கள் என்பன பற்றியும் சங்க அகத்திணை இலக்கியங்களிற் காணலாம். போர், தூது, கல்வி, தொழில் முதலான காரணங்களுக்காகப் பிரிந்து சென்ற கணவன் மீண்டும் வரும்வரையும் இல்லத்திருந்து மனைவி ஆற்ற வேண்டிய கடமைகள், ஒழுக வேண்டிய முறைகள் என்பனவும் அகத்திணை இலக்கியங்களிற் கூறப்பட்டுள்ளன. இத்தகு மனையறத்தைக் கூறுவதற்கு வள்ளுவர் கற்பியலில் பன்னிரண்டு அதிகாரங்களை ஒதுக்கியுள்ளார். தலைவனைப் பிரிந்து வாழும் தலைவியின் பிரிவுத்துன்பத்தைப் பிரிவாற்றாமை(116), படர்மெலிந்திரங்கல்(117), கண்விதுப் பழிதல்(118) முதலான அதிகாரங்களிற் குறிப்பிடுவர். 'பிரிவாற்றாமை' என்ற அதிகாரத்தில் தலைவன் பிரிந்து செல்வதை விரும்பாத தலைவி, தலைவன் திரும்பி வரும்போது தான் உயிருடன் இருக்கமாட்டேன்

தொடர்தல் 95ம் பக்கம்

www.inayam.net
த மி ழ் நி க ழ் வு க ளி ன் ச ங் க ம ம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்குறளிற்...

94ம் பக்கத் தொடர்ச்சி...

எனக் கூறி வருந்துவதும், தலைவி அப் பிரிவுத் துயரைத் தாங்காது படர்மெலிந்து இரங்குதுலும், அவளது துன்ப உணர்வினைப் புலப்படுத்தும் வகையில் அவளது வார்த்தைகள் அமைந்திருப்பதும் திருக்குறளில் சித்தரிக்கப்பட்டுள்ளன. சான்றாகப் பொழுது கண்டிருங்கல் (123) என்ற அதிகாரத்தில்,

*காலை அரும்பிப் பகலெல்லாம் போதாகி*
*மாலை மலரும்இந் நோய்*

- குறள்: 1227

என்ற குறளில் காலை முதல் மாலை வரை தலைவனைப் பிரிந்து நாள் முழுவதும் அல்லற்படும் பெண்ணின் மனநிலையைச் சித்திரிப்பது நோக்கத்தக்கது. கணவனும் மனைவியும் சேர்ந்து இல்லறம் நல்லறமாக நடத்தும்போது, இருவரும் கூடி மகிழ்தலும், இடையிடையே ஊடல் கொள்வதும் இயல்பாகும். வள்ளுவர் குறிப்பறிவுறுத்தல், புணர்ச்சி விதும்பல், நெஞ்சொடு புலத்தல் முதலாகவுள்ள (128 - 133) ஆறு அதிகாரங்களிலும் கணவன் மனைவி ஆகியோரின் உள்ளுணர்வுகளைப் பாடியுள்ளமை சிறப்பாக உள்ளது.

இல்லறவியலில் இல்லற வாழ்க்கையின் சிறப்பினை முதலில் 'இல்வாழ்க்கை' (5) என்ற அதிகாரத்தில் குறிப்பிட்டு, கணவன் மனைவி இருவரும் இணைந்து வாழ்வதே இல்வாழ்க்கை என்பதை அழுத்தமாகக் குறிப்பிடுகிறார். இந்த அதிகாரத்தில் 'இல்வாழ்வான்' என்ற சொல்லாட்சி மட்டுமே கையாளப்பட்டுள்ளமை கருத்திற் கொள்ளத்தக்கது. 'அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை ...' என்ற குறளை இருவருக்கும் பொதுவாகவே அமைத்துள்ளார். குடும்ப வாழ்வில் கணவனும் மனைவியும் சமநிலை உடையோராகக் கருதப்படுதலே பொதுவழக்கம். ஆனால், இல்லறம் பற்றிக்கூறும் வள்ளுவர், பெண்ணைக் குடும்பத் தலைவி என்ற நிலையில் வைத்துப் பெண்ணின் சிறப்புக்களையும், கடமைகளையும் 'வாழ்க்கைத் துணைநலம்' என்ற அதிகாரத்தில் தெளிவாகக் கூறுவதும், குடும்பப் பெண்ணை வாழ்க்கைத் துணைநலமாகக் காட்டும்போது, மனையறத்திற்கு மங்கலமாகத்திகழ்பவள் பெண்ணே (குறள் - 60) என உயர்நிலைப்படுத்துவதும் உன்னிப்பாக நோக்கத் தக்கவையாகும். அதேவேளை, மனையறத்திற்கு வேண்டிய நற்பண்புகள் மனைவியிடம் இல்லாவிடில் எத்துணைச் செல்வச் சிறப்பிருந்தாலும் அந்த வாழ்க்கை பயனற்றதாகிவிடும் என்பதன் மூலம் இல்லறத்திற்கு வேண்டிய நற்பண்புகள் உடையவளாகக் குடும்பத்தலைவி இருக்கவேண்டியதன் அவசியத்தை வற்புறுத்திக் கூறுவதையும் பின்வரும் குறிளில் காண்க:

*மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின்*
*- வாழ்க்கை*
*எனைமாட்சித் தாயினும் இல்*

- குறள்: 52

இல்வாழ்க்கையில் மேற்கொள்ள வேண்டிய கடமைகளிற் கணவன், மனைவி இருவரும் இணைந்து செயற்படும்போதே வாழ்க்கை சிறப்பாகிறது. விருந்தோம்பல்((9) என்ற அதிகாரத்தில் கணவனும் மனைவியும் விருந்தோம்பலில் பின்பற்றவேண்டிய நெறியினை வள்ளுவர் வரையறை செய்துள்ளமை நோக்கத்தக்கது. விருந்தினரை இருவரும் தம் அக விருப்பை முகமலர்ச்சியால் காட்டி வரவேற்றால் அவர்களின் வீட்டில் திருமகள் நிலைத்து வாழ்வாள் என 84ம் குறளிற் குறிப்பிடுகிறார். விருந்தோம்பலிலும் இருவருக்கும் பொதுவாகவே கருத்துக்களை முன்வைத்துள்ள போதிலும், மனைவி இல்லறவாழ்வில் விருந்தினரை உபசரிப்பதை மிகவும் சிறப்பான கடமைகளில் ஒன்றாக மேற்கொள்ள வேண்டும் என்ற யதார்த்தத்தையும் உணர வைக்கின்றார்.

## தாய் நிலையில் பெண்கள்:

இல்லற வாழ்க்கையில் குழந்தைகளைப் பெற்று அவர்களை நல்லவர்களாக வளர்ப்பது பெற்றோரது கடமையாகும். வள்ளுவர் வாழ்க்கைத் துணைநலம் என்ற அதிகாரத்தின் இறுதியில் 'மனைவியின் நற்பண்பே இல்வாழ்க்கைக்கு மங்கலம்' என்றும், 'நல்ல மக்களைப் பெறுதலே அதற்கு நல்ல அணிகலம் என்றும் கூறியிருப்பதை நோக்கும்போது, நல்ல குழந்தைகளைப் பெறும் சிறப்புக்குரியவளாகப் பெண் குறிப்பிடப்படுகிறாள். மக்கட்பேறு (7) என்ற அதிகாரத்தில் மக்கட்பேற்றின் மகத்துவம் பற்றி எடுத்தியம்புகின்றார். உலகியலில் அறியவேண்டியவற்றை அறிந்து கொள்ளும் நன்மக்களைப் பெறுதலைத்த விர, மற்றப்பேறுகளை யாம் மதிப்பதில்லை என வள்ளுவர் மக்கட்பேற்றின் சிறப்பினை அழுத்தமாகக் குறிப்பிடுகிறார்.

வள்ளுவர், பெண்ணைத் தாயாகப் பாடும் போது, சங்ககால இலக்கியநெறியில், 'ஈன்று புறந்தருதல் என்தலைக்கடனே – சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே' (புறம்:312: 1-2) எனப் பொன்முடியார் என்ற பெண் புலவரின் புறநானூற்றுப் பாடல் வரிகளின் அடிப்படையிலேயே 'தந்தை மகற்கு ஆற்றும் நன்றி'(67) என்ற குறளை வள்ளுவர் அமைத்துள்ளார். அதுபோன்றே சங்ககால வீரத்தாய் தன் மகனின் வீரச் சாதனைகளை அறிந்து புளகாங்கிதமும் வீரமும் பேசும் பாடலின் செய்தியை 'ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும்...' (69) என்ற குறளும் ஒத்திருத்தல் நோக்கத்தக்கது. தன் பிள்ளை நற்பண்பு மிக்கவன் எனப் பிறர் பெரிதுவந்து கூறும்போது தாய் அப்பிள்ளையைப் பெற்றெடுத்தபோது அடைந்த மகிழ்ச்சியைவிடப் பன்மடங்கு மகிழ்ச்சி அடைவாள் எனத் தாய்மையின் உணர்வினை வள்ளுவர் வருமாறு எடுத்துரைக்கின்றார்.

*ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும்*
*- தன்மகனைச்*
*சான்றோன் எனக்கேட்ட தாய்*

- குறள்: 69

எனவே பெண்ணை, நற்பண்புகள் நிறைந்தவளாகத், தன்னையும் கணவனையும் காப்பாற்றிக் கொள்பவளாக, குடும்பத் தகுதியையும் புகழையும் காப்பவளாக, மனஉறுதி தளராமல் வாழ்பவளாக, நன்மக்களைப் பெற்று வளர்க்கவேண்டிய பொறுப்புள்ளவளாகப் பல கடமைகளுடன் இணைந்தவளாக வள்ளுவர் படைத்துள்ளமை பெண்கள்மீது அவர் கொண்டிருந்த சமூக அக்கறையைக் காட்டுவதாகும்.

## பெண்கள் - சமூகநிலை ஒப்பீடு:

பெண்கள் பற்றிய வள்ளுவரின் சிந்தனையையும், சமூக மதிப்பீட்டையும் நோக்க முன்னர் அவர் மனிதம் குறித்து எழுதிய குறட்பாவை நோக்க வேண்டும்:

*பிறப்பொக்கும் எல்லா உயர்க்கும்*
*- சிறப்பொவ்வா*
*செய்தொழில் வேற்றுமை யான்*

- குறள்: 972

இவ்வாறு, பிறப்பால் எல்லா உயிரும் சமம் என்ற மனிதம் நோக்கிய கோட்பாடுடைய வள்ளுவர், காமத்துப்பாலிலும், இல்வாழ்க்கை, விருந்தோம்பல் ஆகிய அதிகாரங்களிலும் ஆண்களையும் பெண்களையும் சமமாகவே காட்டுகின்றார். ஆணின் பெருமையைக் கூறும்போது கற்புடைய பெண்ணைப்போன்று மனத்தை ஒருமைப் படுத்தி வாழும் ஆண்மகனுக்கே பெருமை உண்டு (குறள்:974) எனக் கூறுவதில் பெண்ணின் பெருமையை உயர்வாக மதிப்பிடும் அளவுக்குப் பெண்ணை மேல்நிலையில் வள்ளுவர் வைத்திருத்தலும் தெளிவாகிறது. கற்புடைய மகளிரைப் பெருமை (98) என்ற அதிகாரத்தில் உயர்த்திக் காட்டுவதற்குப் பின்வரும் குறள் சான்று:

*ஒருமை மகளிரே போலப் பெருமையும்*
*தன்னைத்தான் கொண்டொழுகின் உண்டு.*

- குறள்: 974

வாழ்க்கைத்துணை நலத்தில் பெண்களின் பெருமையை வானுயரப் பேசிய வள்ளுவர், ஆணாதிக்க சமூகச் சிக்கலுக்குள்ளும், தான் சார்ந்த சமணக் கோட்பாட்டுக்கும் உட்பட்டுத் தனது கோட்பாட்டையே மாற்றிக்கொள்வதைப் பெண்வழிச் சேறல் (91)என்ற அதிகாரம் காட்டுகிறது. அதில் மனைவியின் சொற்படி நடக்கும் ஆணின் ஒழுக்கம் இழிவானது; மனைவியை மதித்து அவர் சொற்படி நடப்பவர் சிறந்த பயனை அடையமாட்டார் என்பன முதலாகக் கூறப்படும் கருத்துக்களை நோக்கும்போது, மனையாளைச் சமூகத்தில் தாழ்த்திக் காட்டுவதோடு, ஆணாதிக்க சமுதாயத்தை வள்ளுவர் உயர்த்திக் காட்டுகின்றார் என்பதும் புலப்படுகின்றது. ஆயினும் அதே அதிகாரத்தில்,

*பெண்ஏவல் செய்தொழுகும் ஆண்மையின்*
*- நாணுடைப்*
*பெண்ணே பெருமை உடைத்து*

- குறள்: 907

என்ற குறளில் பெண்ணுக்கு அடிபணிந்து வாழும் ஆணைவிட இயல்பாகவே நற்பண்புடைய பெண்ணே பெருமையுடையவள் எனக்கூறியிருப்பதையும் கருத்திற் கொள்ள வேண்டும்.

கற்பைப் பெரிதும் பாராட்டிய சமணம் பரத்தை ஒழுக்கத்தை மிகவும் கடுமையாகக் கண்டித்திருப்பது இயல்பாகும். சங்க இலக்கியங்கள் கூறும் பரத்தையர் (வரைவின் மகளிர்) வாழ்க்கையினை நினைவூட்டுவதாக வரைவின் மகளிர்(92) என்ற அதிகாரம் அமைகிறது. இப்பொதுமகளிர் தமது உடல்நலன்களைப் பொருள் தரும் யாருக்கும் வரையின்றிக் கொடுப்பவர்களாவர். வள்ளுவர் பொதுமகளிரை 'பண்பில் மகளிர்', 'பொருள்விழையும் ஆய்தொடியர்' எனக் குறிப்பிடுகிறார். வள்ளுவர் பரத்தமை ஒழுக்கத்தை மிகவும் இழிவாகச் சித்தரிக்கிறார். அப்பெண்களை, ஆண்கள் அடிமைகளாக நடத்துவதைச் சாடுகிறார். பெண்கள் தம்மைத் தாமே காத்துக் கொள்ளும் திறன் உடையவர்களாக வாழ வேண்டும் என்பதையே இவ்வதிகாரம் குறிப்பதாகக் கொள்ளுதல் தவறாகாது. அக்காலச் சமுதாய நிலைப்பாடே பெண்களின் இத்தகைய நிலைக்குக் காரணம் என்பது பண்பாட்டு வரலாறு தரும் செய்தியாகும். இதுபோலவே கூடா நட்பு(83) என்ற அதிகாரத்தில் போலி நட்பு உடையவரின், நட்புப்பொதுமகளிரின் மனம் போல உள்ளொன்று புறமொன்றாக வேறுபட்டு நிற்கும் (822) என உண்மையான நட்பு இல்லாதவர்களை பொதுமகளிருடன் ஒப்பிட்டுக் காட்டப்படுதலும் காண்க.

பிறனில் விழையாமை (15) என்ற அதிகாரத்திலே, பிறரது மனையாளை நாடும் ஆண்களை வள்ளுவர் கண்டித்திருக்கின்றார். பிறர் மனைவியை நாடாதவனே அற நெறிப்படி குடும்பம் நடத்துபவனாகப் பாராட்டப்படுவான் என்பதும், பகை, பாவம் அச்சம், பழி ஆகிய தீமைகள் பிறர் மனை நாடும் ஆண்களை விட்டு நீங்காமல் நிலை பெற்றிருக்கும் எனவும் கூறி, அத்தகு ஆண்களை வள்ளுவர் குற்றக்கூண்டில் நிறுத்தியுமுள்ளார்.

## நிறைவுரை:

வள்ளுவர் தான் வாழ்ந்த காலத்துச் சமுகத்திற் காணப்பட்ட தவறுகளைப் போக்கி, மக்களை அறநெறிப்படுத்தும் நோக்குடன் எழுதிய நூலே திருக்குறள். அறத்துப்பாலில் ஆண், பெண் இருபாலரது கடமைகளையும், குடும்பநிலையில் பெண்களின் சிறப்பினையும், காமத்துப்பாலில் அகவாழ்க்கைப் பண்புகளையும் சிறப்பாகச் சித்தரித்துள்ளார்.

நெறிதவறிவாழும் ஆண்-பெண் இருபாலரையும் நன்னெறிப்படுத்தும் நோக்குடனேயே பெண்வழிச் சேறல், வரைவின் மகளிர், பிறனில் விழையாமை ஆகிய அதிகாரங்கள் எழுதப்பட்டுள்ளன எனக் கொள்ளுதல் பொருத்தமாகும்.

வள்ளுவர் பெண்களுக்குரியனவாகக் கூறும் அறிவுரைகளை இன்றைய காலக்கட்டத்தில் பெண்கள் சிறப்பாக நிறைவேற்றி வருகின்றனர் என்றே கொள்ளலாம். 'பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்' எனப் பாரதி பாடியதையும் இவ்விடத்தில் நினைவுபடுத்துதல் பொருத்தமாகும். பெண்கள் ஆண்களுக்குச் சரிநிகராகக் கல்வி கற்று, சகல துறைகளிலும் முன்னேறிச் சிறப்பாக வாழ்கின்றனர். அத்தகைய நிலையிலும் அவர்கள் தங்கள் குடும்ப வாழ்க்கையில் ஆற்ற வேண்டிய கடமைகளையும் செவ்வனே செய்துவருகின்றமையும் சிறப்பாகக் குறிப்பிடப்படவேண்டும். மனையறத்திற்கு வேண்டிய பண்புகள் மனைவியிடம் இல்லாவிடில் எத்துணைச் செல்வமிருந்தாலும் அந்த வாழ்க்கை பயனற்றதாகிவிடும் என்ற வள்ளுவர் வாக்கிற்கமைய இல்லறம் நடத்தும் குடும்பங்கள் சிறப்பாக வாழ்கின்றன. வாழ்க்கையில் விட்டுக்கொடுப்பு, புரிந்துணர்வு, சகிப்புத்தன்மை என்பவற்றைக் கடைப்பிடித்துத், தமது குடும்ப வருவாய்க்குத் தகுந்த வாழ்க்கையை மேற்கொள்ளும்போது வாழ்க்கை அமைதியானதாகவும், மகிழ்ச்சியானதாகவும் அமைகின்றது.

தமது வேலைப்பளுவிற்கு மத்தியிலும் பிள்ளைகளை ஒழுக்கமானவர்களாகவும். நற்பண்புடையவர்களாகவும் வளர்ப்பதோடு, அவர்கள் சிறந்த முறையில் கல்வி கற்று முன்னேற வேண்டிய உதவிகளைப்பொறுப் போடு செய்பவர்களாகவும் இருக்கவேண்டிய கடமை பெற்றோருக்குண்டு. பிள்ளை தவறான பாதையில் சென்று சீரழிந்து விட்டால் சமூகம் முதலில் தாயைத்தான் குற்றம் சொல்வது வழக்கம்.

தமது பிள்ளைகளைப் பாடசாலைக்கு மட்டுமல்லாது, அவர்கள் தமிழ்மொழி, நுண்கலைகள் முதலானவற்றைக் கற்றுக் கூடுதல் திறன்களை வளர்த்துக்கொள்வதற்கு அழைத்துச்செல்லும் பொறுப்பையும் அனேகமாகப் பெண்களே மேற்கொள்கின்றனர். எமது பண்பாட்டு விழுமியங்களைத் தாம் பின்பற்றுவதோடு, பிள்ளைகளுக்கும் எடுத்துரைத்து அவர்களை நெறிப்படுத்த வேண்டிய தலையாய பெறுப்பும் பெண்களுக்குண்டு. வள்ளுவர் பெண்களுக்குரியனவாகக் குறிப்பிட்ட பண்புகளை இன்றும் எமது பெண்கள் கடைப்பிடிப்பதோடு, தாம் வாழ்கின்ற நாட்டுச்சூழலோடும் இணைந்து சிறந்த முறையில் வாழ்கின்றனர் என்பதையும் குறிப்பிடுதல் பொருத்தமாகும்.



vimalabalasundaram@thaiveedu.com

**SP Electronics**

TV, VCR, DVD, Players, Telephone-Computers அனைத்துத் தமிழ் வானொலிகளுக்கும், திருத்த வேலைகளுக்கும்...

**416 264 6400**

**2641 Eglinton Avenue East**
**( Brimley & Eglinton)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டு நண்பர்கள்

## - கீ டி மாப்பாசான்

## தமிழில்: என்.கே. மகாலிங்கம்



கீ டி மாப்பாசான் 1850-1893. பிரெஞ்சு எழுத்தாளர். சிறுகதை எழுத்தின் ஆசான் என்று அறியப்படுபவர். இயல்புவாத எழுத்துகள் அவருடையது. மனித வாழ்வையும் விதியையும் சமூக சக்தியையும் பின்னணியாகக் கொண்டு எழுதியவர். விரக்தியும் நம்பியக்கையற்ற தொனியும் அவரின் எழுத்தில் காணலாம். புதுமைப்பித்தனின் எழுத்தைப் போல. புதுமைப்பித்தனுக்கு மிகப் பிடித்த எழுத்தாளரும் இவரே. புதுமைப்பித்தனைப் போல இளம் வயதில் இறந்தவரும் கூட. ஃப்ளோபியரின் சீடர். சிக்கனமாக எழுத்துப் பாணிக்குப் பெயர் போனவர். இவரின் கதைகள் திறனும் இயல்பான முயற்சியற்ற முடிவும் கொண்டவை. பெருமளவிலான கதைகளுக்குப் பின்னணியில் 1870 களில் நடைபெற்ற பிராங்கோ பிரஸ்ஸிய போர் இருந்திருக்கின்றது. போரின் பயினின்மையும் போரினால் பாதிக்கப்பட்ட அப்பாவி மக்களின் வாழ்க்கையையும் அவர் எழுத்துக்கள் காட்டி நிற்கின்றன.

அப்போது முற்றுகையிடப்பட்ட பரிஸ் நகரம் பஞ்சத்தின் துன்பப்பிடியில் இருந்தது. கூரைகளிலிருந்த சிட்டுக்குருவிகள், சாக்கடைகளிலிருந்த எலிகள் கூட அழிந்து வந்தன. சனங்கள் தங்களுக்குக் கிடைப்பது எதுவோ அதையே சாப்பிட்டார்கள்.

மெசிய மொரிசோ தொழில்ரீதியாகக் கடிகாரஞ் செய்பவன். ஆனால் தற்சமயம் ஒன்றும் செய்யாமல் இருக்கிறான். ஒரு ஜனவரி மாதம் பிரகாசமான காலை நேரம். நெடுஞ்சாலை ஒன்றில் காற்சட்டைப் பைகளுக்குள் கைகளை ஓட்டிக்கொண்டு, வெறும் வயிற்றுடன் நடந்துகொண்டிருந்தான். அப்போது அவனைத்தெரிந்த ஒருத்தனை எதிரில் கண்டான். அவன் பெயர் மெசியர் சோவேஜ். அவனும் இவனும் மீன் பிடிக்கும் தோழர்கள்.

யுத்தம் வெடிப்பதற்கு முன்னர் மொரிசோ ஒவ்வொரு ஞாயிறு காலையிலும் கையில் மூங்கில் தடியுடனும் தோளில் தகர பெட்டியுடனும் கிளம்பி விடுவான். ஆர்ஜென்-ரோஜ் புகைவண்டியைப் பிடித்துகெலோம்பில் இறங்கி அங்கிருந்து மாகோன்ருக்கு நடப்பான். தன் கனவு இடமான அந்த இடத்திற்கு வந்தவுடன் மீன்பிடிக்கத் துவங்கி விடுவான். இரவாகும் வரை மீன்பிடிப்பான்.

ஒவ்வொரு ஞாயிறும் அதே இடத்தில் மெசிய சாவாஜை அவன் சந்திப்பான். சாவாஜ் மொத்தமான, சந்தோசமான, சிறிய மனிதன். அவன் நொற்றிடாம் வீதியில் புடவை வியாபாரம் செய்பவன். அத்துடன் ஆர்வமான மீன்பிடிகாரன். அவர்கள் இருவரும் ஒவ்வொரு நாளும் அடிக்கடி பக்கம் பக்கத்தில் இருந்து நாளில் அரைப்பொழுதைக் கழித்திருக்கிறார்கள். அவர்களின் கைகளில் கழியுடன், கால்கள் நீருக்கு மேலாக ஆடிக்கொண்டிருக்கும். அப்போதுதான் அவர்கள் இருவருக்குமிடையே நட்பு வளர்ந்தது.

சில நாட்கள் அவர்கள் பேசிக்கொள்வதே இல்லை. மற்ற நேரங்களில் அவர்கள் நன்றாக அளவளாவிக்கொள்வார்கள். வார்த்தைகள் இல்லாமலே ஒருவரை ஒருவர் நன்றாகப் புரிந்தும் வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கிடையே ஒத்த ருசிகளும் உணர்ச்சிகளும் இருந்தன.

அதுவொரு வசந்த காலம். காலை பத்து மணி இருக்கும். காலைச் சூரியன் இலேசான பனி முட்டத்தை நீரில் மிதக்க வைத்திருந்தான். அத்துடன் தூண்டில்போடும் இருவரின் முதுகுகளையும் மெலிதாக சூடேற்றியும் இருந்தான். மொரிசொ தன் அயலவனிடம் அவ்வப்போது இப்படிச்சொல்லிக் கொண்டிருந்தான்:

'நண்பனே, இவ்விடம் மனதிற்கு மகிழ்ச்சியாக இருக்கிறது.'

அதற்கு மற்றவன் இப்படிப் பதிலளித்தான்:

'இதிலும் பார்க்க என்னால் வேறு மகிழ்ச்சியான எதையும் கற்பனைச் செய்ய முடியவில்லை.'

அவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ளவும் மெச்சிக்கொள்ளவும் அச்சொற்களே போதுமானவையாக இருந்தன.

இலையுதிர் காலம் வந்தது. பகல் மறைந்துகொண்டிருந்தது. அஸ்தமிக்கும் சூரியன் மேற்குப்பக்கத்தின் ஆகாயத்தை இரத்தச் சிவப்பாக்கி ஒளி பெருக்கிக்கொண்டிருந்தான். சிகப்பு நிற மேகங்களில் தெறிக்கும் எதிரொளிகள் மொத்த ஆற்றையுமே சிகப்பு நிறத்தால் பூசிக்கொண்டிருந்தன. இரண்டு நண்பர்களின் முகங்களையும் பிரகாசிக்கச் செய்திருந்தன. மரங்களில் தங்க முலாம் பூசிக்கொண்டிருந்தன. இலைகள் ஏற்கெனவே குளிர் காலத்தின் முதல் குளிரால் விறைக்கத் தொடங்கியிருந்தன. மெசிய சாவாஜ் சிலவேளைகளில் மொரிசோவைப் பார்த்து புன்னகைத்துச் சொல்லுவான்:

'என்ன, மகத்தான விந்தையிது!'

மொரிசோவும் தன் மிதவையிலிருந்து கண்களை எடுக்காமல் பதில் சொல்லுவான்:

'இது நெடுஞ்சாலையிலும் பார்க்க அழகானது, இல்லையா?'

இப்போது வேற்றொரு சூழலில் ஒருவரை ஒருவர் கண்டதால் இருவரும் நட்புடன் கைகுலுக்கிக்கொண்டார்கள்.

மொரிசோ தன் தலையை கவலையுடன் ஆட்டிக்கொண்டான்.

'என்ன நல்ல காலநிலை! இந்த ஆண்டில் நல்ல காலநிலையின் முதல் நாள் இது!'

ஆகாயம் பிரகாசமாக, மேகங்கள் இல்லாமல் நீல நிறமாகக்காட்சியளித்தது.

மெசிய சாவாஜ் பெருமூச்செறிந்து முணுமுணுத்துக் கொண்டு, 'இவை துக்கமான நாட்கள்!' என்றான்.

இருவரும் ஆழ்ந்த சிந்தனையிலும் கவலையிலும் அருகருகாக நடந்து கொண்டிருந்தார்கள்.

'தூண்டில்போட்ட அந்த நாட்களை நினைத்தால்! எத்தனை மகிழ்ச்சியாக அந்த நாட்களைக் கழித்தோம்!'

'எப்போ நாங்கள் திரும்பவும் தூண்டில் போடுவோம்!' என்று கேட்டான் மெசிய சாசாஜ்.

இருவரும் ஒரு சிறிய மதுக்கடைக்குள் நுழைந்து அப்சிந்குடித்து விட்டு நடைபாதையால் நடந்துகொண்டிருந்தார்கள்.

மொரிசோ திடீரென நின்றான்.

தொடர்தல் 97ம் பக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

JRS College
of Business and Health Care Inc.

"Committed to providing quality training"

**Food Handling Training**
(Starting on March 17, 2019)

**Food Service Worker**
(Starting in May 2019)

**Personal Support Worker**
(Starting on April 01, 2019)

**Personal Support Worker Bridging**
(Coming soon)

**Early Childcare Assistant**
(Starting on March 18, 2019)

**Accounting and Payroll Administration**
(Starting on March 25, 2019)

**Health Office Administrator**
(Starting on March 04, 2019)

**STUDENT TESTIMONIALS**

"I have chosen Early Childcare Assistant diploma program which is 36 weeks in length at JRS College of Business and Health Care Inc. To do this diploma program at JRS College, I received over $34, 000 from government."

**Mathu**

"I have chosen 40 weeks of Health Office Administrator diploma program at JRS College of Business and Health Care Inc. Due to long duration program I received $44, 000 through Second Career to cover my studies, day care, living allowance and transportation."

**Thiny**

"With the help of JRS College of Business and Health Care Inc., I am able to take Accounting and Payroll Administration diploma program with the government funding of $36, 000. The main reason for me to get high amount is since the program duration is 45 weeks."

**Suba**

**15 Programs**

**Business**
-Accounting & Payroll Admin-PT (50 Weeks)
-Accounting & Payroll Admin 2017 (44 Weeks)
-Computerized Accounting (30 Weeks)
-Office Assistant (16 Weeks)

**Health Care**
-Community Service Worker (52 Weeks)
-Early Childcare Assistant (36 Weeks)
-Health Office Administrator 2017 (39 Weeks)
-NACC PSW 2015-PT (Certificate) (35 Weeks)
-NACC PSW 2015 (Certificate) (35 Weeks)
-Pharmacy Assistant (46 Weeks)

**Technology**
-3D Animation for Video Games (72 Weeks)
-Graphic Design (34 Weeks)
-Web Development (43 Weeks)
-Computer Network & Security (40 Weeks)
-Engineering Design and Drafting Technologist (28 Weeks)

**Contact info**

**330-4168 Finch Ave East (Midland & Finch)**
**Scarborough, ON M1S 5H6**
**416-292-2455**

(Registered as a Private Career College under the Private Career Colleges Act 2005.)

# இரண்டு நண்பர்கள்...

**96ம் பக்கத் தொடர்ச்சி...**

'இன்னொரு அப்சிந்குடிப்போமா? என்றான்.

'நீ விரும்பினால்,' என்றான் மெசிய சாவாஜ், அதற்கு ஒப்புக்கொண்டு.

இன்னொரு வைன் கடைக்குள் இருவரும் நுழைந்தார்கள்.

அதை விட்டு வெளியே வரும்போது இரு வருமே தள்ளாடிக் கொண்டிருந்தார்கள். வெறும் வயிற்றில் மது அருந்தியதால் ஏற்பட்ட விளைவு அது. பிரகாசமான மித மான நாள். மெல்லிய காற்று அவர்களின் முகங்களில் வீசிக்கொண்டிருந்தது.

புத்தம் புதிய காற்று மெசிய சாவாஜ் அருந்திய மதுவின் விளைவை முழுமுற்றாக அதிகரித்திருந்தது. திடீரென நின்று சொன் னான்:

'அங்கே நாங்கள் சென்றால்..?'

'எங்கே?'

'தூண்டில் போட.'
'ஆனால் எங்கே?'

'ஏன், பழைய இடத்திற்குத்தான். ஃபிரெஞ்சின் புறக் காவல்நிலையம் கொலும்பசிற்கு அருகா மையில் உள்ளது. கேணல்டு மோலினை எனக்குத்தெரியும். அவனிடமிருந்து நாங்கள் இலகுவாக அனுமதிபெற்றுவிடலாம்.'

மோரிசோ பேராசையால் நடு நடுங்கினான்.

'மிகவும் சரி. நானும் ஒப்புக்கொள்கிறேன்.'

தமது தூண்டில் கயிற்றையும் தடியையும் எடுப்பதற்காக பிரிந்து சென்றார்கள்.

ஒரு மணி நேரத்தின் பின் மேட்டு நிலப் பகுதியில் இருவரும் பக்கம் பக்கமாக நடந்து கொண்டிருந்தார்கள். விரைவில் கேணல் தங்கியிருந்த மாளிகைக்கு வந்து சேர்ந்தார்கள். அவர் இவர்களின் கோரிக் கையைக்கேட்டு புன்னகைத்துவிட்டு அனு மதி வழங்கினார். திரும்பவும் தங்கள் வழியே சென்றார்கள். இப்பொழுது அவர்கள் கையில் கடவுச்சொல் இருந்தது.

விரைவாகவே புறக் காவல்நிலையைக் கடந்து கைவிடப்பட்ட கொலம்ப் ஊடாகச் சென்று சென் ஆற்றின் புற எல்லையில் இருந்த சிறிய திராட்சைத் தோட்டத்தை அடைந்தார்கள். அப்போது மணி காலை பதினொன்று இருக்கும்.

அவர்களுக்கு முன்னால் ஆர்ஷென்ரே கிரா மம் உயிர்ப்பற்றுக் கிடந்தது. ஒக்மென், சானொ குன்றுகள் அவ்விடத்தில் உயர்ந்து தெரிந்தன. நான்ரெயர் வரை பெரும் சம வெளி விரிந்து மிக வெறுமையாகக் கிடந் தது. சாம்பல் நிற மண்ணும் செர்ரி மரங் களும் வெறிதாய்க்கிடந்தன.

மெசிய சாவாஜ் மேலே உயரத்தைக்காட்டி முணுமுணுத்தான்:

பிரஷ்ஷியர்கள் அங்கே நிற்கிறார்கள்!'

கைவிடப்பட்ட நாட்டுப்புறக்காட்சி இரண்டு நண்பர்களுக்கும் தெளிவற்ற அவநம்பிக் கையை ஏற்படுத்தியது.

பிரஷ்ஷியர்கள்! அவர்களை இவர்கள் இதுவரை காணவில்லை. ஆனால் பரிசின் அயலில் கடந்த பல மாதங்களாக அவர் களின் இருப்பை எல்லோரும் உணர்ந்தி ருந்தார்கள். அவர்கள் ஃபிரான்சை பாழாக்கி, கொள்ளையடித்து, கொன்றுகுவித்து, பட்டினி போட்டுக்கொண்டிருந்தார்கள். மூடத்தன மான, முன்பின் தெரிந்திராத பயம் அவர் களின் வெறுப்புடன் கலந்திருந்தன. வெற்றி பெற்றுக்கொண்டிருக்கும் அந்தத் தேசத் தில் வெறுப்புடன் கலந்த மூடத்தனமான ஒருவகைப் பயங்கரம் பரிசியர்களுக்கு ஏற்கெனவே ஏற்பட்டிருந்தது.

'அவர்களில் எவரையாவது நாம் சந்தித்தால்?' என்றான் மொரிசோ.

'அவர்களுக்குச் சில மீன்களைக்கொடுப் போம்,' என்றான் மெசிய சாவாஜ். பரிசி யர்களின் கவலையற்ற இயல்புடன அதைச் சொன்னான். அந்த இயல்பை எதுவுமே முழுவதாக தணித்துவிடாது.

அவர்களைச் சுற்றிவர அவ்விடம் முழுவ தும் முற்றுமுழுதாக அமைதி நிலவியது. அதனால் அவர்கள் பயந்து வெளியே வரவிரும்பவில்லை.

கடைசியில் மெசிய சாவாஜ் தைரியமாகச் சொன்னான்:

'வா வெளியே போவோம். ஆனால் கொஞ் சம் கவனமாக இருப்போம்.'

இரண்டாக வளைந்து, திராட்சைகளின் மறை வில், கண்களையும் காதுகளையும் கூர்மை யாக வைத்துக்கொண்டு, ஒரு திராட்சைத் தோட்டத்தின ஊடாக நடந்தார்கள்.

ஆற்றின் கரைக்கு வருவதற்கு முன் சிறிய தொரு மரங்களற்ற வெளியை மட்டும் கடக்க வேண்டியிருந்தது. அதைக்கடந்து ஓடி, நீர்க்கரையை அடைந்து அங்கிருந்த நாணல் பற்றைக்குள் ஒளிந்துகொண்டார்கள்.

அவர்களை நோக்கிக்காலடிச் சத்தங்கள் வருகிறதா என்று கேட்பதற்காக மொரிசோ நிலத்துடன் காதைவைத்துக் கூர்ந்து கேட் டான். எதுவும் கேட்கவில்லை. அவர்கள் மட்டுமே தனியாக அங்கிருப்பது போலத் தெரிந்தது.

அவர்களின் தன்னம்பிக்கை திரும்பியது. மீன்பிடிக்கத்துவங்கினார்கள்.

மெசிய சாவாஜ் முதலாவது கட்ஜன் சிறிய மீன் ஒன்றைப்பிடித்தான். மெசிய மொரிசொ இன்னொன்றைப் பிடித்தான். தொடர்ந்து ஒவ்வொரு கணமும் சிறிய வெள்ளி போன்ற மீன் ஒன்று தூண்டில் தொங்கிக்கொண்டு துடித்து மினுங்க, தடியைத்தூக்கிக்கொண்டே இருந்தார்கள். இருவரும் பெரும் வேட்டை யில் திளைத்தனர்.

பிடித்த மீன்களை தங்கள் காலடியில் கிடந்த நெருக்கமாகப்பின்னிய பையில் மெதுவாக வழுவிச்செல்ல விட்டனர். மகிழ்ச்சியால் மனம் நிரம்பி வழிந்தது. பல காலமாகப்பறிக்கப் பட்ட களியாட்டத்தில் மீண்டும் திளைத்துக் களித்தனர்.

சூரியன் தன் கதிர்களை அவர்களின் முது குகளில் பாய்ச்சினான். இப்போது அவர்க ளுக்கு வேறொன்றும் காதில் விழவில்லை. எதைப்பற்றியும் நினைக்கவுமில்லை. தங்க ளைத் தவிர்ந்த மீதி உலகத்தை மறந்து போனார்கள். மீன்பிடி பிடிப்பதில் மூழ்கி இருந்தார்கள்.

சடுதியாக எங்கோ இடிஇடிக்கும் சத்தம் கேட்டது. பூமியின் வயிற்றுள்ளிருந்து வருவது போல. அது அவர்களின் பக்கத்திலிருந்த நிலத்தைக் குலுக்கியது. பீரங்கிச் சத்தம் மீண்டும் முழங்கத் துவங்கியது.

மொரிசோ இடது பக்கம் திரும்பி ஆற்றின் கரையின் மேலாகப் பார்த்தான். அங்கே கம்பீரமான வலெரின் மலை தெரிந்தது. அதன் உச்சியிலிருந்து வெண்ணிறப் புகை வெளியேறிக் கொண்டிருந்தது.

அடுத்த கணம் இன்னொரு புகைமண்டலம் அதைத்தொடர்ந்து வந்தது. சில கணங்க ளின் பின் புதிய வெடிச்சத்தம் பூமியை அதிரவைத்தது.

இன்னும் பல சத்தங்கள் தொடர்ந்தன.

**தொடர்தல் 98ம் பக்கம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டு நண்பர்கள்...

97ம் பக்கத் தொடர்ச்சி...

நிமிஷம் நிமிஷமாக மலை மரண மூச்சையும் வெண்ணிற புகையையும் கக்கியது. மெதுவாக எழுந்து அமைதியான சொர்க்கத்தில் இருந்த மலை உச்சியின் மேலே மிதந்தது.

மெசிய சாவேஜ் அலட்சியத்துடன் தோள்களைக்குலுக்கினான்.

'அவர்கள் திரும்பவும் அதையே செய்து கொண்டிருக்கிறார்கள்!'

மிதவை மேலும் கீழும் அசைந்து கொண்டிருந்ததைப் பார்த்துக்கொண்டிருந்த மொரிசோவுக்கு, சுட்டுக்கொண்டிருக்கும் பைத்தியக்காரர்களின் மேல் சடுதியாகக்கோபம் வந்தது. கோபத்தினால் பொறுமை இழந்தான். ஆத்திரத்தில்,

'அப்படி ஒருவரை ஒருவர் கொல்பவர்கள் எப்படிப்பட்ட மடையர்களாக இருக்கவேணும்,' என்றான்.

'மிருகங்களிலும் மோசமானவர்கள்,' என்று மெசிய சாவாஜ் பதிலளித்தான்.

பிளீக் மீன் ஒன்றைப் பிடித்துக் கொண்டிருந்த மொரிசோ,

'அரசாங்கம் என்று ஒன்று இருந்தால் இப்படி நடக்குமா!' என்றான்.

'குடியரசு இப்படியான ஒரு போரை பிரகடனப்படுத்தி இருக்காது,' என்றான் பேச்சின் இடையில் புகுந்து.

மொரிசோ அதைச்சொன்னபோது சாவாஜ் குறுக்கிட்டு:

'அரசனின் கீழ் வெளிநாட்டுப்போர் நிகழும். குடியரசின் கீழ் உள்நாட்டுப்போர் நிகழும்,' என்றான்.

இருவரும் அரசியல் பிரச்சினைகளைப் பற்றி ஆறுதலாகப் பேச ஆரம்பித்தார்கள். அவர்கள் உண்மையான நிலவரம் அறிந்தவர்கள். நல்ல பகுத்தறிவுள்ளவர்கள். இருவரும் ஒரு புள்ளியில் உடன்பட்டார்கள்: அவர்களால் இனிமேல் சுதந்தரமாக வாழ முடியாது. வலேறியன் மலையில் இடைவிடாது இடிஇடித்துக் கொண்டிருந்தது. ஃபிரென்சுக்காரரின் வீடுகளை பீரங்கிக் குண்டுகள் இடித்துக்கொண்டிருந்தன. மனிதர்களின் வாழ்க்கையை மாவாக அரைத்துக்கொண்டு, கனவுகளையும், நன்னம்பிக்கைகளையும், எதிர்கால மகிழ்ச்சியையும் அழித்துக் கொண்டிருந்தன. மனைவிமார், பெண் குழந்தைகள், தாய்மார் ஆகியோருக்கு முடிவில்லாத துயரங்களை இரக்கமின்றி ஏற்படுத்திக் கொண்டிருந்தன.

'இதுதான் வாழ்க்கை! என்று பிரகடனப்படுத்தினான், மெசிய சாவேஜ்.

'இல்லை, இதுதான் மரணம் என்று சொல்,' என்றான் மொரிசோ சிரித்துக் கொண்டே.

அப்போது அவர்களுக்குப் பின்னால் வந்த காலடிச் சத்தங்கள் கேட்டு எச்சரிக்கை அடைந்து நடுங்கிப்போனார்கள். திரும்பிப் பார்த்தபோது அவர்களுக்கு அருகே, தாடி வைத்த உயரமான நாலு பேர் நின்றார்கள். பணியாளர்களின் உடை போல சீருடை அணிந்து, தலையில் தட்டையான தொப்பியும் அணிந்திருந்தார்கள். இரு மீன்பிடிகாரர்களையும் துப்பாக்கிகளைக் காட்டி தம் கண்காணிப்பு வலையத்துக்குள் வைத்துக்கொண்டார்கள்.

தூண்டில் தடிகள் மீன்பிடிகாரர்களின் கையிலிருந்து நழுவி ஆற்றின் நீளம் மிதந்து போயின.

சில நிமிஷங்களுக்குள் அவர்களைப்பிடித்துக்கட்டினார்கள். ஒரு படகுக்குள் எறிந்து இல்மாகோன்றுக்குக் கொண்டுசென்றார்கள்.

கைவிடப்பட்டிருந்தது என்று அவர்கள் நினைத்த ஒரு வீட்டுக்குப்பின்புறம் ஜேர்மன் இராணுவ வீரர்கள் இருபது பேர்வரை நின்றார்கள்.

முரட்டுத்தோற்றமுடைய அரக்கன் போன்ற ஒருத்தன் கால்களை நாற்காலியில் இருபக்கமும் போட்டுக்கொண்டிருந்தான். நீளமான களிமண் குழாயில் புகைபிடித்துக் கொண்டு, நல்ல ஃபிரெஞ் மொழியில் கதைத்தான்:

'நல்லது, கனவான்களே, நீங்கள் நல்லாக மீன்பிடித்தீர்களா? அந்த அதிர்ஷ்டம் உங்களுக்குக்கிடைத்ததா?'

அப்போது ஓர் இராணுவ வீரன், கவனமாக எடுத்து வந்த கூடை நிறைந்த மீனை அந்த அதிகாரியின் காலடியில் வைத்தான். பிரஷ்ஷிய அதிகாரி புன்னகைத்தான்.

'பரவாயில்லையே. சரி. ஆனால் எங்களுக்கு வேறொன்று கதைக்க இருக்கிறது. நான் சொல்லுவதைக் கேளுங்கள். பயப்படாதீர்கள்.'

'என் பார்வையில் நீங்கள் இருவரும் எங்கள் நிலையை உளவு பார்க்க, என் நகர்வுகளைக்கண்காணிக்க அனுப்பப்பட்ட ஒற்றர்கள் என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். உண்மையில் நான் உங்களைப் பிடித்து சுட்டுத் தள்ள வேண்டும். நீங்கள் வந்த உண்மையான காரணத்தை மறைத்துக்கொண்டு, மீன்பிடிப்பவர்கள் போல நடித்தீர்கள். ஆனால் என்னுடைய கையில் அகப்பட்டுக் கொண்டீர்கள். அதற்கான விளைவை நீங்கள் கொடுக்க வேண்டும். அதுதான் போர் என்பது.'

'நீங்கள் புறக்காவல் இடத்தைக் கடந்து வந்தபடியால் அதைத் தாண்டி திரும்பப் போவதற்குரிய கடவைச்சொல் உங்களிடம் இருக்க வேண்டும். அந்தக் கடவைச் சொல்லை எனக்குச் சொல்லுங்கள், நான் உங்களைத்திரும்ப அனுப்பிவிடுகிறேன்.'

அப்போது அந்த இரண்டு நண்பர்களுக்கும் மரண பயம் பிடித்து விட்டது. வெளிறிப் போய் மௌனமாக ஒருவர் பக்கம் ஒருவராக பய உணர்ச்சியால் கைகள் நடுங்க நடுங்க நின்றார்கள்.

'ஒருவருக்கும் அது தெரியப்போவதில்லை. நீங்கள் இருவரும் உங்கள் வீடுகளுக்கு அமைதியாகத் திரும்பிப்போகலாம். உங்களுடனே அந்த இரகசியம் மறைந்து விடும். அதைத் தர மறுத்தால் மரணம் தான். உடனடி மரணம். ஒன்றைத் தெரிவு செய்யுங்கள்!' என்றான் தொடர்ந்து.

இருவரும் அசையாமல், வாயைத்திறக்காமல் நின்றார்கள்.

பிரஷ்ஷிய அதிகாரி மிக அமைதியாக கைகளை ஆற்றின் பக்கம் நீட்டிக் கொண்டு தொடர்ந்து சொன்னான்:

'இன்னும் ஐந்து நிமிஷங்களில் நீங்கள் அந்த ஆற்றின் அடியில் கிடக்கப்போகிறீர்கள். அதை எண்ணிப் பாருங்கள். ஐந்து நிமிஷங்களில்! உங்களுக்கு உறவினர்கள் இருக்கிறார்கள் என்று நினைக்கிறேன்?'

மொன்ற் வலெறி மலையில் இன்னும் இடிச்சத்தம் தொடர்ந்து கேட்டுக்கொண்டிருந்தது.

இரண்டு மீனவர்களும் அமைதியாக நின்றார்கள். ஜேர்மன்காரன் தன் மொழியில் ஆணை இட்டான். தான் இருந்த நாற்காலியைச் சிறை பிடிக்கப்பட்டவர்களிருந்து சற்றுத் தள்ளிப்போட்டான். ஒரு டசின் வீரர்கள் கைகளில் துப்பாக்கியுடன் முன்னால் ஒரு அடி எடுத்து வைத்து இருபது அடிக்குப் பின்னால் நிலை எடுத்தார்கள்.

'உங்களுக்கு ஒரு நிமிஷம் தருகிறேன். ஒரு செகன்ட் கூட கூடுதலாக இல்லை,' என்றான் அதிகாரி.

பின் அவசரமாக எழும்பி இரண்டு ஃபிரெஞ் சுக்காரிடமும் சென்றான். மொரிசோவின் கையைப் பற்றி அவனைச் சற்றுத் தூரம் கூட்டிச்சென்று, தணிந்த குரலில் சொன்னான்:

'கடவுச் சீட்டை விரைவாகச் சொல். உன்னுடைய நண்பனுக்கு எதுவுமே தெரியப் போவதில்லை. நான் உங்களுக்கு விட்டுக் கொடுப்பவன் போல நடிக்கிறேன்.'

மொரிசொ ஒரு வார்த்தை கூடச் சொல்லவில்லை.

அதன் பின் பிரஷ்ஷியன் மெசிய சாவாஜ்ஜையும் அப்படியே கூட்டிச் சென்று அதே போன்ற திட்டத்தைச் சொன்னான்.

மெசிய சாவாஜ்ஜும் ஒரு பதிலும் சொல்லவில்லை.

திரும்பவும் அவர்கள் இருவரும் ஒருவருக்கு அருகில் வந்து நின்றார்கள்.

அதிகாரி தன் கட்டளைகளை இட்டான். வீரர்கள் தங்கள் துப்பாக்கிகளை உயர்த்தினார்கள்.

மொரிசோவின் கண்கள் ஒரு சில அடிகள் தூரத்தில் பை நிறைந்த மீன்கள் புல்லில் கிடப்பதை எதேச்சையாகக்கண்டன.

இன்னும் துடித்துக்கொண்டிருந்த மீன்களை சூரியக்கதிர் ஒன்று வெள்ளியைப் போல மினுக்கிக்கொண்டிருந்தது. அவன் இதயம் வேதனையால் புதைந்து போனது. சுயகட்டுப்பாட்டையும் மீறி கண்கள் கண்ணீரால் நிரம்பின.

'போய்வருகிறேன், மெசிய சாவாஜ்,' என்றான் தடுமாறிக்கொண்டே.

'போய்வருகிறேன், மெசிய மொரிசோ,' என்றான், சாவாஜ்.

இருவரும் கைகுலுக்கிக்கொண்டார்கள். எவ்வளவுதான் அச்சத்தை அடக்க முயன்ற போதும் தலை தொடக்கம் கால்வரை அவர்களின் உடம்பு நடுங்கிக்கொண்டிருந்தது.

அதிகாரி கத்தினான்:

'சுடு!'

பன்னிரண்டு சூடுகள் ஒன்று போலக்கேட்டன.

மெசிய சாவாஜ் முன்னோக்கி விழுந்தான். மொரிசோ உயரமானவன். ஒருபக்கமாக சற்றுச்சாய்ந்து தன் நண்பனின் மேல் குறுக்காக விழுந்தான். முகம் ஆகாயத்தை நோக்கி இருந்தது. மார்புப்பக்கத்தில் மேலங்கியின் துவாரத்தால் இரத்தம் கசிய விழுந்து கிடந்தான்.

ஜேர்மனியன் புதிய கட்டளைகளைப்பிறப்பித்தான்.



mahalingam.k@thaiveedu.com

'கற்க கணிதம் கசடற'
மாணவர்களின்
வீட்டுக்கு வருகைதந்து
தனித்தனி வகுப்புகள் எடுக்கப்படும்.

Math Tutoring
A. Puranthagan (Puran) BSc. Eng.
Specializing in tutoring Math from Gr. 10 - 12.
Available for home visits and one-on-one sessions.
H: 905-428-1928
C: 416-819-7923
1629 Winville Rd.,
Pickering, ON L1X 0C8




MATRIX LEGAL SERVICES
PROFESSIONAL CORPORATION
வாகன விபத்தில் காயமடைந்து விட்டீர்களா?
அனுபவசாலிகளின் ஆலோசனை
பெற்றபின் உங்கள் முடிவை எடுங்கள்
Employed • Unemployed • Passenger • Pedestrian • Public transit • Cyclist
இலவச ஆலோசனைகளுக்கு:
24 Hours Direct Line
தீபன் (416) 831-4444 (416) 505-9804

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடன் பிரச்சனைகளா?

- கடன் அட்டை சிக்கல்கள்
- வங்கிக்கடன் சிக்கல்கள்
- கலக்சன் கம்பனி போன் தொல்லை
- ஊதிய கையகப்படுத்தும் சிக்கல்கள்
- இது போன்ற கடன் பிரச்சனைகளால் தினந்தோறும் வீட்டில் சண்டை

## நல்ல செய்தி

**எம்மிடம் தீர்வு உண்டு**

நம்மால் 80% வரை உங்கள் கடன்களை குறைக்க முடியும், உங்களால் முடிந்த குறைந்த மாதக்கட்டணம் மட்டும் செலுத்தலாம். இது ஒரு கடன் ஒருங்கிணைப்பு பெறுவது போல.

**இலவச ஆலோசனை பெற**

**JANNET FINANCIAL SERVICES INC.**

Ms. Jennet Sam & Mr. Stalin Dominic

Tel: 647-894-3876

FaX: 905-471-8080

Email: jennet_renni@hotmail.com

உடன் அழையுங்கள் உடனடியாக உங்கள் புதிய வாழ்க்கையை தொடங்க





# கலைநெறிக் கல்விக் கழகத்தின் தமிழ் மரபுத் திங்கள் விழா

மொன்றியால் முருகன் கோவில் நடத்திவரும் கலைநெறிக் கல்விக் கழகத்தின் தமிழ் மரபுத் திங்கள் விழா அண்மையில் கழக மாணவர், ஆசிரியரின் பங்கேற்போடு நடைபெற்றது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடன் தொல்லையா?




பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

**Trustee in bankruptcy இணைந்து ஒரே கூரையின் கீழ் இயங்கும் ஒரு தமிழர் நிறுவனம்**

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

## Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive
Scarborough, ON M1H 3G5
Tel: **416.439.0224**
Cell: **416.450.5011**
Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com
contact@creditsolutioncanada.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் என்ன செய்கிறேன்?

- அ. முத்துலிங்கம் -

வருடம் ஞாபகமில்லை. நான் சிறுவனாக இருந்தபோது நடந்த சம்பவம். என்னுடைய இரண்டாவது அண்ணர் கே.பி. சுந்தராம்பாள் நடித்த படம் ஒன்றை வீட்டுக்குத் தெரியாமல் போய் பார்த்துவிட்டுத் திரும்பினார். 'பக்த நந்தனார்' என்று நினைக்கிறேன். அதிலே கே.பி.எஸ் 30 பாடல்கள் பாடியிருக்கிறார். அண்ணர் 15 வயது துணிச்சலில் ஏதாவது செய்வாரே ஒழிய அவருக்கு கள்ளம் செய்யத் தெரியாது. கறுப்புத் தலைமயிர் சரிந்து நெற்றியோடு ஒட்டிக் கிடக்க, கைகளை நெஞ்சுக்கு கிட்ட தூக்கிப்பிடித்தபடி நடப்பார். முதல் இரண்டு நிமிடத்தில் பிடிபட்டுப் போவார்.

அன்று நல்ல அடி கிடைத்தது. அழும் போது மூச்சை உள்ளே இழுத்துவிடுவார். அதை மீட்டு எடுக்கும்போது இன்னொரு அடி விழும். அன்று இரவு அழுதபடி, கைவிளக்கைக் கொளுத்தி வைத்து நெடு நேரம் ஏதோ எழுதினார். அடுத்த நாள் காலை அவர் கே.பி. சுந்தராம்பாளுக்கு நீண்ட கடிதம் ஒன்று எழுதியிருக்கிறார் என்பது கண்டுபிடிக்கப்பட்டது. வீட்டிலே போட்டி போட்டுக்கொண்டு அந்தக் கடிதத்தைப் படித்து கேலி செய்தார்கள். அவர் கே.பி.எஸ் உடைய நடிப்பையும் பாடல்களையும் அப்படித் தலைகால் தெரியாமல் பாராட்டினார். இசைராணி, இசைக்குயில், இசை சக்கரவர்த்தினி என்று பலவிதமான பட்டங்களை சூட்டியிருந்தார். 'உங்கள் இசை என் உடம்பினுள் புகுந்து என் ஆத்மாவுடன் கலந்து என்னை பரவசத்தின் உச்சிக்கே கொண்டு போனது' என்பது போல எழுதி முடித்திருந்தார். பரிதாபம் என்னவென்றால் அடி வாங்கி, இரண்டு மணி நேரம் செலவழித்து எழுதிய கடிதம் தபால் பெட்டியினுள் போடப்படவே இல்லை.

அண்ணர் சமீபத்தில் இறந்துபோனார். எத்தனை புதிய பாடகர்கள் வந்தாலும், போனாலும் சுந்தராம்பாள் மேல் அவர் வைத்த பற்று மாறவில்லை. சில நாட்களுக்கு முன்னர் கே.பி. சுந்தராம்பாளுடைய வரலாறு புத்தகமாக வந்திருக்கிறது என அறிந்து, ஒரு நல்ல நண்பர் மூலம் அதை தருவித்துப் படித்தேன். புத்தகத்தை வாசித்தபோது பல இடங்களில் என் அண்ணரை நினைத்துக்கொண்டேன். அவருக்காகவே இது.

கே.பி.எஸ் ஏழைக்குடும்பத்தில் பிறந்தார். சாப்பாட்டுக்கே வழியில்லை, ஆனால் இசையில் அளவு கடந்த ஆர்வம். யாராவது பாடினால் அதை எளிதில் வாங்கி அப்படியே திருப்பிப் பாடும் திறமை அவருக்கு சிறு வயதிலேயே வந்துவிட்டது. தாயாருக்கு மூன்று பிள்ளைகள். அதில் இவர்தான் மூத்தவர். வீட்டிலே சாப்பிட உணவில்லை. ஒருநாள் தாயார் மூன்று குழந்தைகளையும் கூட்டிக்கொண்டு ஆற்றுக்குப் போனார். குழந்தை கேட்டாள். 'ஏன் அம்மா போகிறோம். ஆற்றில் குளிக்கவா?' தயார் உடைந்துபோய் உண்மையை சொன்னார். 'உங்களை ஆற்றிலே தள்ளி நானும் குதித்து சாகப் போகிறேன்.' அம்மாவை தடுத்து நிறுத்தி வீட்டுக்கு கூட்டி வந்துவிட்டார் சிறுமி சுந்தராம்பாள்.

சிறுமியின் பாடும் திறமையை கேள்விப்பட்ட ஜமீன்தார் அவரை அழைத்து ஒரு நாள் பாடச் சொன்னார். கந்தல் பாவாடை, வாரிச் சொருகிய கூந்தலுடன் சிறுமி ஜமீன்தார் முன் நின்று பாடினாள். அவருக்கு அளவில்லாத மகிழ்ச்சி. ஒன்பது சவரன்களை சபையோர் முன்னிலையில் வழங்கியதுடன் புதுப்பாவாடை, நகைகளையும் பரிசாக அளித்தார். ஜமீன்தாரிடம் பரிசு பெற்றதால் கிராமத்தில் அவருடைய மதிப்பு உயர்ந்தது. நாடகத்தில் நடிக்க அழைப்பு வந்தது. 'நல்லதங்காள்' நாடகத்தில் மூத்த பிள்ளையான ஞானசேகரன் வேடத்தில் நடித்தார். 'பசிக்குதே, வயிறு பசிக்குதே' என்ற பாட்டை பாடியவுடன் ரசிகர்களின் கைதட்டல் கிளம்பும். உற்சாகமடைவார். அதைத் தொடர்ந்து 'கண்டி ராஜா' நாடகத்தில் உரலில் இடிபடும் குழந்தையின் பாத்திரத்தை ஏற்று நடித்து பிரபல்யம் அடைந்தார். நாடகத்தில் கிடைத்த புகழால் அவரிடம் நாடக ஆசை ஒட்டிக்கொண்டு விட்டது.

நாயுடு என்பவர் ஐந்து ரூபாய் பணத்தை அவர் கையிலே ரகஸ்யமாகக் கொடுத்து நாடகத்தில் நடிக்க சென்னைக்கு வந்து விடும்படி ஆசை காட்டினார். சிறுமிக்கு எட்டு வயதுகூட ஆகவில்லை. ஆனால் அசாத்திய துணிச்சல்காரி. ஒருவருக்கும் சொல்லாமல் தனியாக ரயில் ஏறிவிட்டார். நாயுடு வீட்டில் சம்பளம் இல்லாத வேலைக்காரியாக சிறுமியின் வாழ்க்கை மாறியது.



நாயுடு வேடம்கட்டும் நாடகங்களில் நடிக்கும் வாய்ப்பும் கிட்டி, அதனால் புகழ் கிடைத்தது. நாயுடுவுக்கு பணமும் சேர்ந்தது. ஒரு வருடம் இப்படி ஓடிவிட்டது. மகள் இறந்துபோய்விட்டார் எனவே தாயார் எண்ணியிருந்தார். அவர் உயிருடன் இருக்கும் செய்தி கிடைத்ததும் தாயார் வந்து அவரை அழைத்துப் போனார்.

சிறுமி சுந்தராம்பாளுக்கு 9 வயது நடந்த போது அவர் கொழும்புக்கு பயணப்பட்டார். சம்பளம் மாதம் 40 ரூபா. கொழும்பு, யாழ்ப்பாணம், திரிகோணமலை, மட்டக்களப்பு, கண்டி என்று பல இடங்களிலும் நாடகம் நடந்தது. இவர் ஓர் ஊருக்கு போகமுன்னரே இவர் புகழ் அங்கே போய் விடும். பல நாடகங்களில் நடித்தார். அதே சமயம் சிறுவன் கிட்டப்பாவும் இலங்கையில் நாடகங்களில் நடித்துக்கொண்டிருந்தான். ஆனால் இருவரும் சந்தித்ததே கிடையாது. நல்ல அனுபவம் பெற்ற நாடக நடிகையாக கே.பி.எஸ் இந்தியா திரும்பினார்.

சுந்தராம்பாள் அதுமுதல் தமிழகத்தின் முன்னணி நாடகக் குழுக்கள் பலவற்றிலும் நடிக்கத் தொடங்கினார். வள்ளித் திருமணம், நந்தனார், கோவலன், பவளக்கொடி என்று பல நாடகங்கள். பதினைந்து வயதுக்குள்ளாகவே ஸ்திரீ பார்ட்டுக்கு வந்து விட்டார். அதாவது கதாநாயகி அந்தஸ்து. அந்தக் காலங்களில் ஸ்பெஷல் நாடகங்கள் போடுவார்கள். வெவ்வேறு நடிகர்கள் ஒரு நாடகத்துக்காக ஒன்று சேர்ந்து நடிப்பது. நாடகம் முடிந்தவுடன் கலைந்துவிடுவது. எல்லா நடிகர்களுக்கும் அருணாசலக் கவிராயர், கோபால கிருஷ்ண பாரதியார், சங்கரதாஸ் சுவாமிகள், உடுமலை நாராயணகவி, பம்மல் சம்பந்தனார் போன்றவர்களின் நாடக வசனங்கள் பாடம் என்பதால் ஒத்திக்கை கிடையாது. கூத்து ஆடுபவர்கள் பொது இடங்களில் சில காட்சிகளை நடித்துக்காட்டி நாடகத்தை பார்க்க வரும்படி விளம்பரம் செய்வார்கள்.

இரண்டாம் தடவையாக கே.பி.எஸ், கொழும்பு நாடகத்தில் நடிப்பதற்காக ஒப்பந்தம் செய்யப்பட்டார். மாதச் சம்பளம் 1,200 ரூபாய். நாலரை கட்டை சுருதியில் இவர் அனாயாசமாகப் பாட சபையோர் மெய்மறந்து கேட்பர். இவருக்கு சமமாகப் பாடக்கூடிய ராஜபார்ட் கிடைக்கவில்லை. எங்கேயோ தேடி ராஜபார்ட்டை கொண்டு வந்தால் சபையோர் 'உள்ளே போ' என்று கத்துவார்கள். பல ராஜபார்ட்டுகள் வருவதும், பாதியில் ஓடுவதும் வழக்கமாகி விட்டது. இந்தச் சமயத்தில்தான் கிட்டப்பாவை ஒப்பந்தம் செய்தார்கள். கிட்டப்பாவிடம் கொழும்பு போய் சுந்தராம்பாளிடம் மாட்டிக்கொள்ளவேண்டாம், அவமானமாகிவிடும் என சிலர் ஆலோசனை கூறினார்கள். 'சுந்தராம்பாளின் ராச்சியம் முடிந்தது' எனச் சிலர் சுந்தராம்பாள் காதுபடவே பேசிக்கொண்டார்கள்.

நாடகம் நடக்கு முன்னரே கிட்டப்பா, சுந்தராம்பாளை சந்திக்க விரும்பினார். சுந்தராம்பாள் கட்டிலில் படுத்திருந்தார். அவருடைய தாயார் வந்து 'ராஜாமாதிரி ஒருத்தர் உன்னைப் பார்க்க வந்திருக்கிறார்' என்று சொன்னார். நல்ல முதல் அபிப்பிராயத்தை, இரண்டாவது தடவை சந்திக்கும் போது உண்டாக்க முடியாது. அவசர அவசரமாக சுந்தராம்பாள் தயாராகும் முன்னரே கிட்டப்பா உள்ளே நுழைந்து விட்டார். அவர் கம்பீரமாக ஒரு கந்தர்வன் போலவே இருந்தார். நாடகத்துக்கு ஒத்திக்கை வேண்டும் என்றார் கிட்டப்பா. சுந்தராம்பாள் மறுத்துவிட்டார். 'நீ ஏமாந்து போவாய்' என்றார் அவர். 'பின்னாலே பார்ப்போம்' என்று சுந்தராம்பாளும் ராங்கியாய் பதில் கூறினார். எல்லோருக்குமே நாடக வசனங்கள் மனப்பாடம் என்பதால் அதில் ஒருவித பிரச்சினையும் சுந்தராம்பாளுக்கு தெரியவில்லை. ஆனால் கிட்டப்பாவின் முகத்தை அந்தச் சந்திப்பில் தான் விழுங்கிக்கொண்டிருந்ததாக பின்னாள் பேட்டியில் அவர் கூறியிருக்கிறார்.

கிடப்பாவும் சுந்தராம்பாளும் நடித்த 'வள்ளித் திருமணம்' முதன்முதல் கொழும்பு மேடையில் அரங்கேறியது. ஒருவருக்கு ஒருவர் விட்டுக் கொடுக்கவில்லை. குரல் இணைந்தது. ரசிகர்கள் பாராட்டினார்கள். அப்படி ஒரு சோடி அமைந்தது அதிர்ஷ்டம் எனப் புகழ்ந்தார்கள். இருவரும் இந்தியா திரும்பிய பின்னரும் நாடகங்களில் சோடியாக நடிக்கத் தொடங்கினர். அந்தக் காலத்தில் ஆண், பெண் வேடம் போடுவதும், பெண், ஆண் வேடம் இடுவதும் சர்வசாதாரணம். காரைக்குடியில் 'வள்ளித் திருமணம்' நாடகம் போட்டார்கள். முதல் வாரம் கிட்டப்பா வேலனாகவும், சுந்தராம்பாள் வள்ளியாகவும் நடித்தனர். அடுத்த வாரம் சுந்தராம்பாள் வேலனாகவும், கிட்டப்பா வள்ளியாகவும் நடித்தார்கள். ரசிகர்கள் பாடு எத்தனை கொண்டாட்டமாயிருந்திருக்கும்.

சுந்தராம்பாள் நாவல் பழம் போன்ற கரிய நிறம். அந்த நிறத்துக்கே உரிய தனிப்பட்ட அழகு. கிட்டப்பாவோ சிகப்பு. நந்தனார் நாடகத்தில் இருவரும் நடிக்கவேண்டிய சந்தர்ப்பம் அமைந்தது. முதன்முதலாக வேதியராக நடிப்பதற்கு சுந்தராம்பாளை அணுகினார்கள். அவரும் சம்மதித்தார். அந்தப்பாத்திரத்துக்குரிய பாடலை சொல்லிக்கொடுப்பதற்கு கிட்டப்பா அடிக்கடி சுந்தராம்பாள் வீட்டுக்கு வந்து போவார். ஒரு நாள் பாடம் நடந்தபோது கிட்டப்பா முகத்தில் கள்ளம் இருந்ததை சுந்தராம்பாள் கவனித்துவிட்டார். அவர் ஒன்றுமே பேசாவிட்டாலும் சுந்தராம்பாளுக்கு புரிந்து விட்டது. காதல் வயப்பட்டார்கள். கடைசி வரை கைவிடமாட்டார் எனஉறுதிமொழி பெற்றபின்னர் திருமணம் எளியமுறையில் நடந்தது. கிட்டப்பா ஏற்கனவே மணமானவர். ஜன்மாந்திரத் தொடர்பு என்று தங்கள் திருமணத்தை சுந்தராம்பாள் வர்ணிப்பார்.

40,000 ரூபாய் ஒப்பந்தத்தில் பர்மாவில் நாடகம் போட அழைத்தார்கள். சுந்தராம்பாள் தன்னுடன் துணை நடிகையான ராதாவையும் அழைத்துச் சென்றார். கப்பலை விட்டு இறங்கியதும் சிவப்பு நிறமான ராதாவுக்கு மாலை அணிவித்து அவரை தடபுடலாக வரவேற்றார்கள். கறுப்பு நிறப் பெண்தான் சுந்தராம்பாள் எனத் தெரிந்ததும் ஒப்பந்தக்காரர் இடிவிழுந்ததுபோல உடைந்துபோய் விட்டார். ஆனால் நாடகம் பெரும் வெற்றி பெற்றது. சுந்தராம்பாளையும், கிட்டப்பாவையும் சாரட் வண்டியில் உட்கார்த்தி ரங்கூன் தெருக்களில் ஊர்வலமாக அழைத்துச் சென்று தங்கள் பேராதரவை ரங்கூன் மக்கள் காட்டினார்கள்.

அந்தக் காலத்து நாடக நடிகர்களுக்கு சகல பாத்திர வசனங்களும், பாடல்களும் பாடம். யாராவது வராவிட்டால் இன்னொருவரை உடனேயே தயாராகி நடிக்கும்

தொடர்தல் 104ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யோகசாலை

ஒரு வளமான சமுதாயத்தை நோக்கி

உடல், மனம் மற்றும் ஆத்ம நலம் பேண
ஆசனப்பயிற்சி
மூச்சுப்பயிற்சி
தியானம்

- சிறுவர்கள் ஆர்வமாக கற்றுக் கொள்ளும் முறையில் அமைந்த யோகா வகுப்புக்கள்
- இளையோருக்கான சிறப்பு குறுகிய கால அறிமுகப்பயிற்சி வகுப்புக்கள்
- ஆரம்ப மற்றும் ஆழ்நிலை வகுப்புக்கள்
- முதியோர் நலம் பேணும் சலுகைக்கட்டண வகுப்புக்கள்

பதினைந்து வருட பயிற்சி அனுபவம் பெற்று
உலகப் பிரசித்தி பெற்ற சிவானந்தா அமைப்பில்
பயிற்றுவிற்கும் ஆசிரியர்கள்

யோகசாலையை ஒரு யோகசமூக சாலையாக
உருவாக்க நீங்களும் இணையவும்

தொடர்புகளுக்கு

Tel: 647 760 8156
Email: yogasalai108@gmail.com
Address: 210 Silver Star Blvd, Unit 850, Scarborough, ON
(Midland Ave/ Finch Ave E)


# நான் என்ன...

103ம் பக்கத் தொடர்ச்சி...

படி செய்ய முடியும். அவரவர் தங்கள் திறமையை மக்களுக்கு காட்டுவதிலே குறியாக இருப்பார்கள். போட்டா போட்டியில் மற்ற நடிகரை மட்டம் தட்ட சமயம் பார்ப்பதும் நடக்கும். ராஜாபார்ட்டும் ஸ்திரீ பார்ட்டும் போட்டிபோடும். ஆர்மோனியக் காரருக்கும், நாடக நடிகருக்குமிடையிலும் சிலசமயம் போட்டி வந்துவிடும். சபையோரும் உற்சாகப்படுத்துவார்கள். யாராவது ஒன்ஸ்மோர் கேட்டால் அதே பாடலை இன்னொருமுறை பாடவேண்டும். ஒரு சமயம் சுந்தராம்பாள் 'தூக்குத்தூக்கி' நாடகத்தில் சேட் வேடத்தில் வந்த கிட்டப்பாவைப்பார்த்து 'என்ன சேட், நீங்கள் தமிழில் இவ்வளவு சுத்தமாகப் பேசுகிறீர்களே? என்றார். இதை எதிர்பார்க்காத கிட்டப்பா உடனே பதில் கூறி சமாளித்தார். 'உன்னோடு இவ்வளவு நெருங்கி சம்பந்தம் வைத்துக் கொண்டதால் ஏற்பட்ட பலன் இது. என் பாஷையைக்கூட மறக்கும் படியாகப் போய்விட்டது.'

சுந்தராம்பாளுக்கு காங்கிரஸ் கொள்கையில் பிடிப்பு ஏற்பட்டு நூல் நூற்பதை வழக்கமாக வைத்திருந்தார். வெளிநாட்டுத் துணிகளை தீயிட்டுக் கொளுத்திவிட்டு கதர் உடுக்க ஆரம்பித்தார். உப்பு சத்தியாக்கிரகத்தில் காந்திஜி கைதானபோது 'காந்தியோ பரம ஏழை' என்ற பாடலை மதுரகவி பாஸ்கரதாஸ் இயற்றினார். சுந்தராம்பாள் குரலில் அது இசைத்தட்டாக வெளிவந்து நாடெங்கும் பரவியது. மோதிலால் நேரு இறந்தபோது அதற்கும் ஓர் அனுதாபப் பாடலை சுந்தராம்பாள் பாடினார். 'பண்டித மோதிலால் நேருவை பறிகொடுத்தோமே' என்ற இசைத்தட்டு என்றுமில்லாத அளவு விற்பனை கண்டது. இலங்கையில் நான் வசித்த கிராமத்து தேநீர்க்கடையில் திருப்பித்திருப்பி போடப்பட்டது. என்னுடைய அண்ணர் அங்கேயே பழியாகக் கிடந்து கேட்டார். தமிழ்நாட்டில் அதிக அளவில் விற்ற முதல் இசைத்தட்டு என்று இதைச் சொல்வார்கள். இந்த துக்கப்பாட்டை எங்களூர் கல்யாண வீடுகளில் கூட அந்தக் காலத்தில் போட்டு கேட்டார்கள்.

கிட்டப்பா ஏற்கனவே மணமானவர். மெல்ல மெல்ல தம்பதிகளுக்கிடையில் விரிசல் ஏற்படத் தொடங்கியது. சுந்தராம்பாள் கர்ப்பமாக இருந்தபோது கிட்டப்பா தன் வளைகாப்புக்கு வரவேண்டும் என அவர் பெரிதும் எதிர்பார்த்தார். கிட்டப்பா வரவே இல்லை. கடிதத்தில் 'வளைகாப்பு இட வேண்டும் என்றுசொன்னேன். தங்கள் அண்ணாவிடமும் சொன்னேன். ஒருவரும் கவனிக்கவில்லை. என்னைப்பற்றிக் கவனிக்க நான் ஏதாவது கொடுத்து வைத்திருக்கிறேனா?' என்று சுந்தராம்பாள் உருக்கமாக எழுதுகிறார். இன்னோர் இடத்தில் 'நீங்கள் இல்லாததால் ஒவ்வொருவரும் நீ என்ன இருந்தாலும் நாடகக்காரிதானே. அவர் உன்னை விட்டுப் போய்விட்டாரே. நீயேன் அவரையே நினைத்திருக்க வேண்டும்,' இப்படியெல்லாம் கேட்கிறார்கள் என்று எழுதினார்.

வளைகாப்புக்கு கிட்டப்பா வராத துயரத்தை சுந்தராம்பாளினால் ஆற்றவே முடியவில்லை. ஆனால் அவருக்கு ஆண் குழந்தை பிறந்ததும் கிட்டப்பா ஓடோடி வந்து பார்த்தார். குழந்தை சில மாதங்களில் இறந்துபோனது. ஆறு மாதங்கள் நடிக்காமல் இருந்துவிட்டு மறுபடியும் சுந்தராம்பாள் நடிக்கத் தொடங்கினார். கிட்டப்பா, சுந்தராம்பாள் இல்லாமல் வேறு நடிகைகளை அமர்த்தி நாடகம் நடக்க ஆரம்பித்தார். சுந்தராம்பாளும் போட்டியாக வேறு நடிகர்களுடன் இணைந்து நடித்தார். கிட்டப்பா குடிப்பழக்கத்துக்கு ஆளாகி, தீராத வயிற்று வலிக்கு சிகிச்சை பெற்றார். ஒரு துணியால் முகத்தை மூடிக்கொண்டு கிட்டப்பா இறந்துபோனபோது அந்த துணியை அகற்றாமல் அவரை அப்படியே தகனம் செய்தார்கள்.

திருமணம் செய்து ஏழே ஆண்டுகளில் விதவையானபோது சுந்தராம்பாளுக்கு வயது 25 தான். அந்த இளம் வயதிலேயே வெள்ளை சேலையுடுத்தி விதவை கோலம் பூண்டார். நகை அணிவதில்லை. பிற ஆடவருடன் நடிப்பதில்லை என முடிவெடுத்தார். சுந்தராம்பாளின் தேசபக்தியை அறிந்த காந்திஜி அவரை சுதந்திரத்துக்காகப் பாடும்படி சொன்னபோது 'கணவரைப் பிரிந்த சோகத்தில் இருக்கிறேன். நான் வெளியே போவதில்லை' என்றார். காந்தி சொன்னார். 'நீங்கள் வீட்டிலேயே இருப்பதால் சாவித்திரி போல உங்கள் கணவர் உயிரை மீட்டுவிடுவீர்களா?' அந்த வார்த்தைகளால் மாற்றமடைந்து தேசத்துக்காக உழைக்க ஆரம்பித்தார். ஒருமுறை சத்தியமூர்த்தியும் காந்தியும் இவர் வீட்டுக்கு வந்தபோது காந்திக்கு தங்கத் தட்டில் உணவு பரிமாறினார். காந்தி 'உணவு மட்டுமா? தட்டும் எனக்கா?' என்று கேட்க தங்கத்தட்டை அவரிடம் கொடுத்து விட்டார். காந்தி உடனே அதை ஏலம் வீட்டு காசாக்கினார்.

அவருடைய 27வது வயதில் 'நந்தனார்' படத்தில் நந்தனாராக ஒரு லட்சம் ரூபாய் சம்பளத்தில் நடித்தார். வேதியராக நடித்த விஸ்வநாதய்யருக்கு ரூ 3,000 சம்பளம். அந்தப் படத்தில் கே.பி.எஸ் 19 பாடல்கள் பாடினார். நந்தனார் படம் பணத்தை அள்ளிக்கொட்டியது. அதைத் தொடர்ந்து ஔவையார் படம் அவருக்கு உலகளாவிய புகழைத்தந்தது. அவருடைய இசைத்தட்டுகள் விற்றுத்தள்ளின. 'ஆடிக்கொண்டார் அந்த வேடிக்கை' என்ற பாடலை இசைத்தட்டுக்காக பாடிய போது வயலின் சிறிது சுருதி விலகியசமயம் இவர் 'இம்' என மிரட்டுவது அப்படியே கேட்கிறது என அவர் சரிதையை எழுதிய ஆசிரியர் பதிவு செய்திருக்கிறார். இறந்து போன என் அண்ணர் பல தடவை இந்தப் பாட்டைக் கேட்டு மதிமயங்கியது நினைவுக்கு வருகிறது. இளம் வயதில் அவர் சுந்தராம்பாளுக்கு எழுதிய கடிதத்தை அனுப்பியிருக்கலாமே என இப்போது எனக்கு தோன்றுகிறது.

அண்ணர் எழுதிய கடிதம் ஒருவிதம் என்றால், கொடுமுடி கோகிலம் சுந்தராம்பாள் எழுதிய கடிதங்கள் இன்னொரு வகை. அவர் கிட்டப்பாவுக்கு எழுதிய கடிதங்களை இப்படித்தான் முடிப்பார்.

'தங்கள் அன்பை என்றும் மறவாத காதலி.'

'தங்கள் அன்பை ஆயுள் பரியந்தமும் மறவாத'

'தங்கள் அன்பையே ஆபரணமாகக்கொண்ட அடியாள்.'

மணமுடித்த ஆரம்ப நாட்களில் ஓரளவு பித்துப் பிடித்தது போலவே அவர் கடிதங்கள் இருக்கும். ஒரு கடிதத்தை இப்படி முடித்திருப்பார்.

'அடிக்கடி வெளியில் சுத்தவேண்டாம். தூக்கம் முழிக்க வேண்டாம். காலா காலத்தில் சாப்பிடவும். அனாவஸ்ய விஷயங்களில் புத்தியை செலவு செய்ய வேண்டாம். நானும் அப்படியே நடக்கிறேன். மாதமும் ஆய்விட்டது. தங்களுக்கு தெரியாத விஷயமல்ல. அவ்வளவுதான் நான் எழுதலாம். நேரில் வாருங்கள். உங்களை என்ன செய்கிறேன் பாருங்கள்.'

என்ன செய்திருப்பார்?

*நன்றி:*
*கொடுமுடி கோகிலம் கே.பி. சுந்தராம்பாள் வரலாறு - ப. சோழநாடன்*



muththulingam.a@thaiveedu.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Rent or Lease?

உடன் தொடர்பு கொள்ளுங்கள்

இரவீந்திரன் விநாயகமூர்த்தி

SALES REPRESENTATIVE

**RAVEENDRAN**
VINAYAKAMOORTHY

raveenvi@gmail.com

Direct: 416.556.4881

HOMELIFE
HIGHER STANDARDS

HomeLife/Champions Realty Inc. Brokerage
416-281-8090
*Independently owned & operated







Mortgage?
Call Mahesan
416-816-0141

Home Equity
Refinance
Call Mahesan
416-816-0141

Residential Mortgages
2nd Mortgages upto $500,000
Private Funds Available
Debt Consolidation
Home Equity - Refinance
No Income Qualifier - No Credit
Call me for more details...

5200 Finch Ave. E. Unit 306,
Scarborough, ON. M1S 4Z5

KAPITAL CARE
MORTGAGE INC. Lic#12623

**Mahesan Subramaniam AMP**
Principal Broker Lic #12623

**Office : 416-335-5264 / Direct : 416-816-0141**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோழர்கால இலக்கியம்: சமய மரபுசார் இலக்கிய ஆக்கங்கள்

- நா. சுப்பிரமணியன் -

சோழர்காலத்தின் சைவப் பேரிலக்கியங்களின் வரிசையில் முதலாவது ஆக்கமான பெரியபுராணம் பற்றி நோக்கிவருகிறோம். இவ்வகையில் அவ்வாக்கத்தின் தோற்றப் பின்புலம், கட்டமைப்புநிலை மற்றும் தமிழகப் பண்பாட்டு வரலாற்றில் இவ்வாக் கத்துக்குரிய முக்கியத்துவம் ஆகியன பற்றிக் கடந்த இரு கட்டுரைகளில் நோக்கி வந்துள்ளோம். இவ்வாக்கம் பற்றிய பார்வையை நிறைவு செய்யவுள்ள நிலையில் இது தொடர்பாக நாம் கவனத்துட்கொள்ளவேண்டிய மேலும் இரு முக்கிய விடயங்கள் இங்கு முன்வைக்கப்படவுள்ளன.

அவற்றுளொன்று, இலக்கிய ஆக்கம் என்ற நிலையில் இதன் தகைமை பற்றியதாகும். இன்னொரு விடயம், இவ்வாக்கத்தைச் சார்ந்து எழுந்தவையும் இதில் இடம்பெறுள்ள நாயன்மார் கதைகளை எடுத்துரைக்கும் நோக்கில் உருவானவையுமான ஏனைய ஆக்கங்கள் பற்றியதாகும். இவ்வகையில், தமிழ், வடமொழி மற்றும் கன்னட மொழி சார் முக்கிய ஆக்கங்கள் சிலவற்றைப்பற்றிய தகவற்குறிப்புகள் இங்கு கவனத்துக்கு இட்டுவரப்படவுள்ளன. மேற்சுட்டியவற்றுள்

**இலக்கியத் திறனாய்வியலின் இயங்குநிலை: 62**

இவ்வாக்கத்தின் இலக்கியத் தகைமை பற்றிய விடயத்தை முதலில் நோக்கலாம்.

### பெரியபுராணத்தின் இலக்கியத் தகைமை - சில சிறப்பு விளக்கங்கள்:

பெரியபுராணமானது புராணமரபு மற்றும் காவியமரபு ஆகிய இரண்டினது இணைப்பில் உருவானது என்பதை முன்னைய கட்டுரையில் நோக்கியுள்ளோம். இவ்வகையிலான அதன் கட்டமைப்பின் இலக்கியத் தகைமையே இங்கு நமது கவனத்துக்குரியதாகிறது.

இத்தொடர்பிலே, முதலிலே இவ்வாக்கமானது புராணமரபுசார் ஆக்கமாகக் கொள்ளப்படுவது தொடர்பான சில சிறப்பு விளக்கங்களை இங்கு முன்வைப்பது அவசியமாகிறது. இவ்வகையில் முதலிலே 'இலக்கியம்' என்ற பொதுவான ஆக்க முறைமைக்கும் 'புராணமரபுசார் இலக்கியம்' என்ற வகையிலான குறிப்பிட்ட ஆக்க முறைமைக்குமிடையிலான முக்கிய வேறுபாட்டம்சமொன்று இங்கு நமது கவனத்துக்குரியதாகிறது.

இலக்கிய ஆக்கமொன்றின் அடிப்படையான குணாம்சங்களிலொன்றாகக் கொள்ளப்படுவது அதன் 'அநுபவநிலை'யாகும். மனித மனங்களின் இயல்பான உணர்வுந்துதல்கள், அவை எதிர்கொள்ளும் பிரச்சினைகள், அவற்றின் விளைபொருள்களான இன்பதுன்பங்கள் என்பனவாக இந்த அநுபவ நிலைகள் பல பரிமாணங்கள் கொண்டவையாகும். இவ்வநுபவநிலைகள் இயல்பான அதாவது நேரடியான வாழ்வியலின் தளத்தில் ஊற்றெடுப்பனவாக வெளிப்படும் பொழுதே குறித்த இலக்கிய ஆக்கமானது உயிர்த்துடிப்புடையதாக அமையும். இவ்வாறான அநுபவ நிலைகளுக்கு வடிவம் தரும் குறிக்கோள்களுடனேயே இலக்கியங்களின் - குறிப்பாகக் கதைகள், காவியங்கள் மற்றும் நாடகங்கள் ஆகியவற்றின் - வகைமாதிரிக் கதைமாந்தர்கள் நடைமுறை வாழ்வியற்சூழல்களிலிருந்து உருவாக்கிக் கொள்ளப்படுகின்றனர். இலக்கியங்களின் -குறிப்பாக, பொதுவான கதைபொதி இலக்கியங்களின் உருவாக்க முறைமை இதுதான்.

ஆனால் புராணமரபு சார்ந்த இலக்கிய உருவாக்கத்தில் குறித்த சமூகங்களின் சமய மரபுகள்சார் நம்பிக்கைகள், சிந்தனை முறைமைகள் மற்றும் சடங்காசாரங்கள் ஆகியன சார்ந்த திட்டப்பாங்கான கருத்தாக்கங்களே கதையம்சங்களைத் தீர்மானிப்பன. அவ்வாறான கருத்தாக்கங்களுக்கு ஏற்றவகையிலேயே இவ்வகை ஆக்கங்களின் கதைமாந்தர் சித்திரிக்கப்படுவர். இங்கு, நமது பார்வைக்குரியதான பெரியபுராணமானது நாம் மேலே நோக்கிய இரண்டாவது வகைமை சார்ந்ததாகவே - அதாவது புராணமரபு சார்ந்து கட்டமைப்பாகவே நமது காட்சிக்கு வந்துளது என்பதே நாம் தெளிந்துகொள்ளவேண்டிய செய்தியாகும். இதன் கதைமாந்தர்களான நாயன்மார்கள் 'இரத்தமும் சதையுமாக மண்ணில் வாழ்ந்தவர்கள்' என்பதை முன்னரே நோக்கியுள்ளோம். அவ்வகையில் அவர்கள் சராசரி சமூக மனிதர்கள் என்பது வெளிப்படை. அவர்களுட் பலரும் சராசரி சமூக மாந்தர் என்ற நிலையில் இயல்பான

கள அவ்வுயிர்களுக்கு அருள்செய்து ஆட்கொள்ளும் நோக்கில் தத்தம் உயர் நிலைகளிலிருந்து கீழிறங்கிவருவர்' என்பது இந்தியப் புராண மரபுசார்ந்த ஆழமான நம்பிக்கையாகும். இவ்வாறு இறைவர்கள் மேற்கொள்ளும் செயற்பாடுகளைச் சுட்டும் அவதாரம் என்ற புராணமரபுசார் கலைச்சொல்லை இந்நாயன்மார்களுக்கும் சேக்கிழார் பயன்படுத்தியுள்ளார்.

சேக்கிழாரின் இவ்வாறு, அவதாரம் என்ற சொல்லைச் பயன்படுத்தியுள்ள நிலைகளை தற்செயல் நிகழ்வுகளாக நாம் கருதுவதற்கில்லை. சைவ சமய உணர்வுசார்ந்த புராணநிலைப்பட்ட கருத்தாக்கங்களின் திட்டப்பாங்கான வெளிப்பாடுகளாகவே கொள்ளத்தக்கன. அதாவது இவர்களது பிறப்புகளை, 'கடவுளரின் அவதாரங்கள் போன்றனவாகவே அக்காலச் சைவமரபினர் பலரும் கருதிவந்தனர்' என்பதையும் அதனையே

> **"நாயன்மார் வாழ்ந்த காலம்முதல் பெரியபுராணம் எழுந்த காலம்வரை சைவ சமூகம் உருவாக்கித் தந்திருந்த நாயன்மார் பற்றிய படிமங்களையே சேக்கிழார் தமது சொற்களின் ஊடாக நம்முன் காட்சிப்படுத்தியுள்ளார் என்பதே இத்தொடர்பில் நாம் புரிந்துகொள்ளவேண்டிய செய்தியாகும்."**

குணாம்சங்களுடன் பெரியபுராணத்தில் நமக்குக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளனர் என்பதையுங்கூட மறுப்பதற்கில்லை.

ஆயினும் 'அவர்களில் ஒருசாரார் சராசரி மனிதர்கள் என்ற நிலைக்கு மேலாக புராண மரபுசார் குணாம்சங்கள் கொண்டவர்களாவர்' என்பதே அவ்வாக்கத்தைப் புராணப் பண்புசார் ஆக்கமாகக் கணிப்பதற்கான முக்கிய காரணியாகின்றது. குறிப்பாக நாவுக்கரசர், சம்பந்தர், சுந்தரர் ஆகியோர் இத்தகு குணாம்சங்களுடனேயே நமது காட்சிக்கு வருகின்றனர்.

சம்பந்தரும் சுந்தரரும் 'இறந்தவர்களை எழுப்புதல்' என்ற அற்புதச் செயலைச்செய்தவர்களாவர். சம்பந்தர் வேறுபல அற்பு தச் செயல்களையும் செய்தவராவார். நாவுக்கரசர், 'நஞ்சூட்டப்பட்ட நிலையிலும் சுண்ணாம்புக் காளவாயில் இடப்பட்ட சூழலிலும்கூட' இறவாதிருந்தவர். அதுமட்டுமன்றி ஓரிடத்து நீரில் மூழ்கி மற்றோரிடத்து நீரிலிருந்து வெளிவந்தவர்.

இம்மூவரையும் புராணமரபு சார்ந்தவர்களாகக் காட்டும் வகையான சித்திரிப்பு முறைகளில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்க ஒன்று சேக்கிழார் இவர்களை 'அவதாரபுருடர்களாக' அடையாளப்படுத்தியுள்ளமையாகும். நாவுக்கரசரின் பிறப்பைக் குறிப்பிடும் போது, 'மருணீக்கியார் வந்தவதாரஞ் செய்தார்' (பாடல்: 1288) எனவும், சம்பந்தர் பிறப்பைச் சுட்டும்போது, 'சிவம்பெருக்கும் பிள்ளையார் திருவவதாரம் செய்தார்' எனவும், சுந்தரரின் பிறப்பைக் குறிப்பிடுமிடத்து, 'தீதகன்று உலகமுய்யத் திருவவதாரம் செய்தார்'(பாடல்:149) எனவும் அவர் குறிப்பிட்டுள்ளமை இத்தொடர்பில் நமது கவனத்துக்குரியனவாகும். (மருணீக்கியார் என்பது நாவுக்கரசரின் இளம்பருவப்பெயராகும்.)

'அவதாரம்' என்ற வடசொல்லானது கீழிறங்கிவருதல் என்ற பொருளைத் தருவது. 'உயிர்களின் புலன்களால் அறியமுடியாத உயர் நிலையிலுள்ளவர்களான கடவுளர்

சேக்கிழார் உறுதிபட எடுத்து ரைக்கமுற்பட்டுள்ளார் என்பதையுமே அவருடைய மேற்படி அவதாரம்செய்தார் என்ற சொற்பிரயோகங்கள் உணர்த்திநிற்கின்றன என்பது உய்த்துணரக்கூடியதேயாகும்.

பெரியபுராணத்தைப் புராணமரபு சார்ந்தது என அடையாளப்படுத்தி நிற்கும் அம்சங்களில் குறிப்பிடத்தக்க இன்னொன்று, 'நாயன்மார்களுட்பலர் குறித்த ஒரு சந்தர்ப்பத்தில் அல்லது சில சந்தர்ப்பங்களில் இறைவனது காட்சிகளையும் அருள்சார் உதவிகளையும் பெற்றுக்கொண்டார்கள்' என்ற வகையில் கதைகூறும் முறைமையாகும். பொதுவாக எல்லா நாயன்மார்களின் கதைகளிலும் மேற்குறித்தவாறான எடுத்துரைப்புகளை நோக்கமுடியும். குறிப்பாகச் சுந்தரமூர்த்தி நாயனார் கதையில் இவ்வகை எடுத்துரைப்பை விரிவாகவே நோக்கமுடியும். இறைவன் அவரைத் தடுத்தாட் கொண்டதோடு அமையாமல் அவருக்கு அவரது துணைவியாரான பரவையாருக்குமிடையில் தூதுசென்றார் என்பது உட்பட்ட பல நிகழ்வுகள் 'புராணப் பண்பு கொண்ட காட்சிக'ளாகவே சேக்கிழாரால் சித்திரிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறாக இவ்வாக்கம் புராணமரபு சார்ந்ததாக அமைந்தமைக்கான முக்கிய காரணி தமிழகத்தில் பலநூற்றாண்டுகளாக நிலவிவந்த சைவசமய நம்பிக்கைகளின் தளத்தில் ஆழமாகக்காலூன்றி நின்ற புலமை மரபொன்றின் திட்டப்பாங்கான வெளிப்பாடாக அது அமைந்தமையேயாகும். நாயன்மார் வாழ்ந்த காலம்முதல் பெரியபுராணம் எழுந்த காலம்வரை சைவ சமூகம் உருவாக்கித் தந்திருந்த நாயன்மார் பற்றிய படிமங்களையேசேக்கிழார் தமது சொற்களின் ஊடாக நம்முன் காட்சிப்படுத்தியுள்ளார் என்பதே இத்தொடர்பில் நாம் புரிந்து கொள்ளவேண்டிய செய்தியாகும்.

அடுத்து பெரியபுராணத்தின் காவியப்பண்பு தொடர்பான ஒரு குறிப்பு வருமாறு:

சேக்கிழார் மேற்கொண்ட காவிய மரபுசார் உத்திகள் என்றவகையில் இயற்கை வருணனைகள், கதைமாந்தர் சித்திரிப்பு முதலிய சில பொது அம்சங்களை முன்னைய கட்டுரையில் நோக்கியிருந்தோம். அத்தொடர்பில் இங்கே சிறப்பாகக் குறிப்பிடப்படவேண்டிய செய்தியொன்றுளது. அது, 'ஞானசம்பந்தரை ஒரு காவியநாயகனுக்குரிய வகையில் சேக்கிழார் காட்சிப்படுத்தியுள்ள முறைமை' ஆகும்.

4286 பாடல்கள் கொண்ட பெரியபுராணத்திலே சம்பந்தரின் கதையை நேரடியாகக் கூறும் பகுதியானது 1256 பாடல்களைக் கொண்டதென்பதும் இப்பாடல்கள் தவிர, அவரோடு தொடர்புகொண்டிருந்த ஏனைய நாயன்மார்களின் கதைகள் கூறப்படும் பாடற் பகுதிகளிலும் அவரைப் பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ளன என்பதுமான செய்திகள் முன்னரே நோக்கப்பட்டன. இவ்வாறான பெருந்தொகையான பாடல்கள் கொண்டதான சம்பந்தர் பற்றிய கதைப் பகுதியானது அவரைப்பற்றிய காவியம் - அதாவது 'ஞானசம்பந்தர் காவியம்' - எனக் கணிக்கத்தக்கவகையில் கட்டமைதி பெற்றுளது என்பதே இங்கு நமது கவனத்துக்குரியதாகும்.

வடமொழிமரபிலிருந்து தமிழுக்கு அறிமுகமானதாகிய காவியம் என்ற இப்பேரிலக்கியவகையானது 'தன்னிகரில்லாத் தலைவன் ஒருவனின் ஆளுமையம்சங்களையும் அநுபவநிலைகளையும் அவ்வவற்றுக்குரிய வருணனை மரபுகள்சார்ந்து எடுத்துரைக்கும் புலமைச்செயற்பாடு' என்பதை முன்னரே பலசந்தர்ப்பங்களில் நோக்கியுள்ளோம். அவ்வகையில் உலகியல் சார்ந்த நிலைகளில் வீரம், அதிகார பலம் ஆகிய வற்றைக் கொண்ட மன்னர்களையே காவியத்தலைவர்களாகக் கொள்ளும் இலக்கிய ஆக்க மரபே பொதுவாக நிலவிவந்துள்ளது. பெரியபுராணத்துக்கு முன்னர் எழுந்தவையாக முன்னைய கட்டுரைகளில் நாம் நோக்கியுள்ள சீவக சிந்தாமணி, சூளாமணி ஆகியன மேற்படி உலகியல் சார் தலைமைப்பண்பு கொண்டோரையே காவியத் தலைவர்களாகச் சித்திரித்தவையாகும். இவ்வாறான உலகியல்சார் தலைமைப்பண்பைச் சித்திரிக்கும் முறைமையிலிருந்து வேறுபட்ட நிலையில் சமய மரபு சார்ந்த தன்னிகரில்லாத் தலைமைப் பண்பைச் சேக்கிழார் அடையாளங்காட்ட முற்பட்டுள்ளார் என்பதையே பெரியபுராணத்தின் ஞானசம்பந்தர் பற்றிய கதைப்பகுதி நமக்கு உணர்த்திநிற்கிறது.

சம்பந்தரின் பிறப்புமுதல் அவரது வளர்ச்சிக்கட்டங்கள்வரை எடுத்துப்பேசும் முறையிலும் அவரது ஆளுமைகள் மற்றும் சாதனைகள் ஆகியவற்றை விரிவாக எடுத்துப் பேசிய சந்தர்ப்பங்களிலும் அவரை ஒரு தன்னிகரில்லாத் தலைவராகவே சேக்கிழார் காட்ட முற்பட்டுள்ளார். இவ்வாறான சேக்கிழாரின் 'காவியப்பண்புசார் சித்திரிப்பு முறைமை'க்கு ஒரு சான்றாக பின்வரும் பாடலை இங்கு பதிவுசெய்ய விழைகிறேன்.

*ஞானத்தின் திருவுருவை*
*நான்மறையின் தனித்துணையை*
*வானத்தின் மிசையன்றி*
*மண்ணில்வளர் மதிக்கொழுந்தை*
*தேன்நக்க வார்கொன்றைச்*
*செஞ்சடையார் சீர்தொடுக்கும்*
*கானத்தின் எழுபிறப்பைக்*
*கண்களிப்பக் கண்டார்கள்*

- பாடல்: 2631

பாண்டியநாட்டிற்குச் சைவப்பிரசார நோக்கிலே வருகைதந்த சம்பந்தர் பாண்டிய மன்னனுக்கு ஏற்பட்ட வெப்புநோயை நீக்குவதற்காக அம்மன்னனின் முன் வருகை

தொடர்தல் 109ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோழர்கால இலக்கியம்...

107ம் பக்கத் தொடர்ச்சி...

தரும் சந்தர்ப்பத்தில் கவிக்கூற்றாக அமைந்த பாடல், இது. இப்பாடலின் பொருள் வெளிப்படை. ஞானமே ஒரு வடிவெடுத்து வந்தது போல சம்பந்தருடைய வருகை அமைந்தது என்பது இப்பாடலூடாகச் சேக்கிழார் தந்துள்ள செய்தியாகும். இதனை நோக்கும்போது சேக்கிழார் சம்பந்தரை ஒரு காவியநாயகனுக்குரிய உயர் தளத்தில் - அதாவது 'ஞானகாவிய நாயகன் அல்லது 'பக்திக்காவிய நாயகன்' என்ற உயர்பீடத்தில் அமர்த்தியுள்ளார் என்பதை உய்த்துணர்ந்துகொள்ள முடியம்.

இவ்வாறு கூறுவதன் மூலம் சேக்கிழார் ஞானசம்பந்தரை முன்னிறுத்தி ஒரு காவியம்பாடினார் என்றோ அல்லது பெரிய புராணம் ஒருகாவியம் என்றோ நான் இங்கு கூறமுற்படுவதாகக் கருதவேண்டியதில்லை. பெரியபுராணத்தை ஒரு காவியமாகக்காணும் முயற்சிகள் 1940-50களில் நிகழ்ந்துள்ளன. அம்முயற்சியில் சுந்தரரைக் காவியநாயகனாகக் காட்டும் வகையிலான சிந்தனைகளும் வெளிப்படுத்தப்பட்டு வந்துள்ளன. ஆனால் எனது நோக்கம் அவ்வாறு பெரியபுராணத்தை ஒரு காவியமாகக்காணும் முயற்சியன்று. 'சேக்கிழார் புராண வகைசார் படைப்பையே தந்துள்ளார்' என்பதும் அதில் இலக்கியச் சுவை கருதி, 'காவியம்சார் எடுத்துரைப்பு முறைகளையும் இணைத்துக்கொண்டார்' என்பதுமே அவ்வாக்கம் பற்றிய எனது கணிப்புகளாகும். ஆனால் அப்புராணத்தை வாசிக்கும் ஒருவருக்கு அதிலுள்ள, 'ஞானசம்பந்தர் கதைப்பகுதியானது ஒரு காவியப் பண்பு கொண்ட தனிக் கட்டமைப்பாகவே தோற்றம் தருகிறது' என்பதே இங்கு நான் சுட்டவிழைந்த அவதானிப்பு ஆகும்.

பெரியபுராணத்தைச் சார்ந்தும் நாயன்மார் கதைகளை எடுத்துரைக்கும் நோக்கிலும் உருவானவையுமான ஏனைய ஆக்கங்கள்.

பெரியபுராணத்தைப் பற்றிய பார்வையை நிறைவுசெய்யவுள்ள நிலையில் அதன் பொருண்மை சார்ந்து அடுத்து உருவான சில ஆக்கங்கள் பற்றிய செய்திகளே இங்கு முன்வைக்கப்படவுள்ளன. இவ்வாறு உருவானவற்றுள் ஒருவகையின தமிழில் எழுந்தவை. இன்னொரு வகையின வடமொழி மற்றும் கன்னட மொழி ஆகியவற்றில் உருவானவையாகும்.

தமிழில் எழுந்த ஆக்கங்கள் என்ற வகையில் உமாபதி சிவாசாரியாரின் திருத்தொண்டர்புராண சாரம், துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளால் இயற்றப்பெற்ற நால்வர் நான்மணிமாலை, கோபலகிருஷ்ண பாரதியாரின் நந்தன சரித்திரக் கீர்த்தனை முதலிய பலவற்றைக் குறிப்பிடலாம். இவற்றுள் முதலாவதான உமாபதியாரின் ஆக்கம் பெரியபுராணத்தின் சுருக்கமாக அமைந்ததாகும். சிவப்பிரகாச சுவாமிகளின் ஆக்கம் நால்வர் எனப்படும் நாவுக்கரசர், சம்பந்தர், சுந்தரர் மற்றும் மாணிக்கவாசகர் ஆகியோரை மட்டும் பாடுவதாக அமைந்தது. கோபாலகிருஷ்ண பாரதியார், சேக்கிழாரால் 'திருநாளைப்போவார்' எனச்சுட்டப்பட்ட நந்தன் என்ற நாயனாரின் கதையை நாடகக்கீர்த்தனை வடிவில் எடுத்துரைப்பது. இவையாவும் பெரியபுராணத்தின் கதைகளை வாசித்த அருட்டுணர்வில் உருவானவை என்றவகையில் 'பெரியபுராணத்தின் மரபுத்தொடர்ச்சிகள்' என்பதான கணிப்புக் குரியவையாகும்.

பெரியபுராணத்தை அடியொற்றி வடமொழியிலே உருவான முக்கிய நூல் உபமன்யு பக்த விலாசம் என வழங்கப்படும் சிவபக்த விலாசம் ஆகும். ஸ்ரீநிவாசகவி என்பவர் இதனை இயற்றியுள்ளார். இது, பெரிய புராணத்தை அப்படியே செய்யுளுக்குச் செய்யுள் மொழிபெயர்த்தது போலவே அமைந்ததாகும். இது எழுதப்பட்ட காலம் 1532. இது பற்றிய சான்று தமிழகத்தின் காஞ்சிபுரத்திலுள்ள, ஏகாம்பரநாதர் கல்வெட்டொன்றில் உளது. இக்கல்வெட்டானது விஜயநகரப் பேரரசராகத்திகழ்ந்த கிருஷ்ணதேவராயர்(1509-1530) என்பாருக்குப் பின்னர் ஆட்சிபுரிந்த அச்சுதராயர் என்பவரது காலத்ததாகும். இத்தகவல்களைத் தருபவர் கல்வெட்டறிஞரும் தொல்லியல் ஆய்வாளருமான டாக்டர் இரா. நாகசாமி அவர்களாவர். (கட்டுரை: 'வடமொழியில் பெரியபுராணம்' நூல்: தவம் செய்த தவம். 1994)

இத்தகவல் தொடர்பிலே இங்குநாம் இலக்கிய வரலாற்று நோக்கில் கவனத்துள் கொள்ளவேண்டிய முக்கிய செய்தியொன்றுளது. அதாவது தமிழ் பேரிலக்கியமொன்று வடமொழிக்கு மொழிபெயர்க்கப்பட்டதாகக் கிடைக்கும் முதலாவது ஆக்கம் இது என்பதே அச்செய்தியாகும். வடமொழி, பிராகிருதம் முதலியவற்றின் ஆக்கங்களைத் தழுவித் தமிழில் பல இலக்கிய ஆக்கங்கள் உருவாயின என்பதை நாமறிவோம். குறிப்பாக தமிழில் அறிமுகமான இராமாயணம், மகாபாரதம் ஆகிய இதிஹாஸக் கதைகளும், கொங்குவேளின் பெருங்கதை மற்றும் சீவக சிந்தாமணி, சூளாமணி முதலியனவும் இவ்வகை வரவுகளேயாகும். ஆனால் தமிழிலிருந்து வடமொழிக்குப் போனதாக அறியப்படும் முக்கிய பேரிலக்கிய ஆக்கம் பெரியபுராணமேயாகும் என்பதே இற்றைவரையான வரலாறு உணர்த்தும் செய்தியாகும்.

> **பெரியபுராணத்தை அடியொற்றி வடமொழியிலே உருவான முக்கிய நூல் 'உபமன்யு பக்த விலாசம்' என வழங்கப்படும் 'சிவ பக்தவிலாசம்' ஆகும். ஸ்ரீநிவாசகவி என்பவர் இதனை இயற்றியுள்ளார். இது, பெரியபுராணத்தை அப்படியே செய்யுளுக்குச் செய்யுள் மொழிபெயர்த்தது போலவே அமைந்ததாகும். இது எழுதப்பட்ட காலம் 1532. இது பற்றிய சான்று தமிழகத்தின் காஞ்சிபுரத்திலுள்ள, ஏகாம்பரநாதர் ஆலயக் கல்வெட்டொன்றில் உளது.**

வடமொழியின் உபமன்யு பக்தவிலாசமானது தமிழ்ப் பெரியபுராணத்தின் மொழி-பெயர்ப்பே என்பதை டாகடர் நாகசாமியவர்களுக்கு முன்பே எடுத்துரைத்தவர் தமிழின் முதுபெரும் பேராசிரியராகத் திகழ்ந்தவரான டாக்டர் தெ.பொ. மீனாட்சிசுந்தரனார் ஆவார்(கி.பி.1901-80). அவர் 1935ல் எழுதிய அன்புமுடி என்ற நூலில்(ப.3) இக்கருத்தைப் பதிவுசெய்துள்ளார். 'பெரியபுராணமானது உபமன்யு பக்தவிலாசத்தின் மொழிபெயர்பு' எனச்சிலர் தவறாகக் கருதிவந்த ஒரு காலகட்டத்தில் அதனை ஆய்வுபூர்வமாக மறுக்கும் வகையிலேயே தெ.பொ.மீ அவர்கள் மேற்படி கருத்தை ஒப்பியல் நோக்கிலே முன்வைத்தார். அவ்வாறு தெ.பொ.மீ. கொண்டிருந்த கருத்தை மேலும் உறுதிப்படுத்தக் கூடிய வகையிலும் உபமன்யு பக்தவிலாசத்தின் காலத்தைக் கல்வெட்டாதரங்களுடன் நிறுவியவகையிலும் டாக்டர் நாகசாமி அவர்களின் மேற்சுடடிய தகவற்குறிப்பு முக்கியமானதாகிறது.

நாயன்மார் கதைகளைக் கூறுவதாக வடமொழியிலே எழுந்த மற்றொரு புராண ஆக்கம் அகஸ்திய பக்தவிலாசம் ஆகும். இதனை இயற்றியவர் ஹரசர்மன் என அறியப்படுகிறார். இவ்வாக்கம் உபமன்யு பக்த விலாசத்தைப் போல மொழிபெயர்ப்பு வகை சார்ந்ததன்று என்பதே மேற்குறித்த டாக்டர் நாகசாமி அவர்களின் மேற்படி அவதானிப்பு ஆகும். (மேற்படி 'வடமொழியிற் பெரியபுராணம்' என்ற கட்டுரை) எனவே அவ்வாக்கம் சுயமாக எழுந்திருக்கக்கூடிய தனிநூலாகவே கொள்ளப்பட வேண்டியதாகிறது.

பெரியபுராணம் குறிப்பிடும் நாயன்மார்களின் கதைகளைக் கூறுவனவாகக் கன்னட மொழியிலே 16 நூல்கள் எழுந்துள்ளன. ஹரிஹரா என்பாரின் புராதன ரகளெகளு, சுரங்ககவி என்பாரின் திரிஷஷ்டி புராதன சாரிதத்திரம், லக்கண்ண தண்டேசா என்பாரின் சிவதத்வ சிந்தாமணி என்பனவாக இந்நூல்களின் பெயர்வரிசை நீள்கிறது. (காலம்) இவையனைத்தும் நாயன்மார்கள் அறுபத்து மூவரின் கதைகளையும் முழு நிலையில் கூறுவனவல்ல. பல ஆக்கங்கள் நாயன்மாருட் சிலரின் கதைகளை மட்டும் கூறுவனவாகும். இவ்வாக்கங்களுள் முதலிரண்டுமே பல நாயன்மார்களின் கதைகளைக் கூறுவன.

இவ்வாறு கன்னடமொழியிலும் நாயன்மார் கதைகள் கூறும் நூல்கள் எழுந்துள்ளன என்ற செய்தியைத் தமிழில் முதலில் அறியத்தந்தவர் மேலே நாம் குறிப்பிட்ட, டாக்டர் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் அவர்களே யாவார். அரைநூற்றாண்டுக்கு முன்பே அவரால் இச்செய்தி எடுத்துரைக்கப்பட்டு விட்டதாயினும் அண்மைக் காலம் வரை அவ்வாக்கங்கள் பற்றி தமிழியல் ஆய்வுச் சூழல் கவனம் செலுத்தியதாகத் தெரியவில்லை. கடந்த சில ஆண்டுகளிலேயே அவ்வாக்கங்கள் தமிழ் ஆய்வுலகின் கவனத்துக்கு வரத்தொடங்கியுள்ளன.

இவ்வகையில் மேற்படி ஆக்கங்கள் பற்றி - குறிப்பாக மேற்சுட்டிய முதலிரு கன்னட மொழி நூல்கள் பற்றி நடைபெற்றுள்ள ஆய்வொன்று இங்கு குறிப்பிடவேண்டிய முக்கியத்துவமுடையதாகும். 'நாயன்மார் கதைகள் - பெரியபுராணமும் ஹரிஹரன ரகளைகளும்' என்ற தலைப்பில் முனைவர் அ.சங்கரி அவர்களால் 2010ம் ஆண்டில் எழுதி வெளியிடப்பட்டுள்ள ஆய்வு நூலே, அது. இவ்வாக்கம் மேற்படி முதலிரு நூல்களையும் பெரியபுராணத்துடன் ஒப்பிடும் முறைமையில் அமைந்ததாகும். இது தனது முன்னுரைப்பகுதியில் மேற்படி நாயன்மார் கதைகளைக் கூறும் கன்னடநூல்களைக் கன்னட மண்ணில் கி.பி. 12ம் நூற்றாண்டில் நிகழ்ந்த 'வீரசைவ இயக்க எழுச்சி'யின் விளைபொருள்களாகக் குறிப்பிடுகின்றது(ப.2). அவ்வகையில் இக்கன்னட மொழிக் கதைகள் அந்நூற்றாண்டிலும் அடுத்து வந்த சில நூற்றாண்டுகளிலும் எழுந்தனவாகவே கொள்ளப்படவேண்டியன. மேற்படி கன்னட மண்ணின் வீரசைவ இயக்கமானது சமணம், பௌத்தம் மற்றும் வைணவம் ஆகிய சமயங்களுடன் வாதிடும் சூழல் அக்காலப்பகுதியில் நிலவியது. அம்முயற்சிக்குத் தமிழக நாயன்மார் பற்றிக் கன்னட சூழலில் வழங்கிவந்த கதைகள் துணைபுரியும் வகையில் அமைந்திருந்தன. நாயன்மார்கள் தமிழகத்தில் சமணம் பௌத்தம் ஆகியவற்றுக்கு எதிராகத் தீவிரமாகச் செயற்பட்டு நின்றவர்கள் என்பதறிவோம். அவர்களின் இந்த ஆளுமையம்சங்கள், இயங்குநிலைகள் ஆகியன கன்னடத்தின் வீரசைவ எழுச்சிச்சூழலில் இலட்சியப்பாங்கான முன்னுதாரணங்களாகக் கருதப்பட்டிருக்கவேண்டும். அதனால் அவ்வியக்கம் சார்ந்தோர் அக்கதைகளை மையப்படுத்தி இலக்கியம் படைக்க முற்பட்டிருப்பர். இதுவே மேற்படி நூல்கள் உருவான பின்புலமாகும் என்பதை ஊகித்துணர முடிகின்றது.

அ.சங்கரியவர்களின் மேற்படி ஆய்வு நூல் தரும் ஒப்பியல் நோக்கிலான செய்திகளினூடாக பெரியபுராணத்திலும் மேற்படி கன்னடநூல்களிலும் சித்திரிக்கப்படும் நாயன்மார்களின் ஆளுமையம்சங்கள், இயங்குநிலைகள் மற்றும் வாழ்வியல் முறைகள் முதலியன பலவும் பெரிதும் ஒத்த பண்பு கொண்டவையாகவே திகழ்வதைத் தெரிந்து கொள்ளமுடிகிறது. ஆயினும், கதையம்சங்கள், பாத்திர குணாம்சச் சித்திரிப்புகள் மற்றும் நிகழ்ச்சி விவரணங்கள் முதலியவற்றில் பெரியபுராணத்திலிருந்து மேற்படி நூல்கள் சிற்சில இடங்களில் வேறுபாடுகளைக் கொண்டுள்ளன என்பதையும் இங்கு சுட்டுவது அவசியமாகிறது. இவ்வேறுபாடுகள் அவை எழுந்த சூழல்களில் வழங்கிவந்த கதைமரபுகள் சார்ந்தனவாகலாம் என்பதே நாம் ஊகித்துணரக்கூடிய செய்தியாகும்.

இவ்வகை வேறுபாடுகள் தொடர்பாக மேற்படி ஆய்வுநூலுக்கு அணிந்துரை வழங்கிய பேராசிரியர் டாக்டர் நாச்சிமுத்து அவர்கள் முன்வைத்துள்ள அவதானிப்பொன்றை இங்கு பதிவுசெய்வது பொருத்தமாக இருக்கும் எனக் கருதுகிறேன். அந்த அவதானிப்பு வருமாறு:

*சேக்கிழார் திருத்தொண்டர் புராணத்தில் வைணவக் கதைமாந்தர் சைவ எதிர்ப்பாளர்களாகக் காட்டப்படவில்லை. ஹரிஹரர் கன்னடத்தில் வைணவக் கதைமாந்தர் ஒருவரைச் சைவ எதிப்பாளராகக் காட்டுகிறார். தமிழில் வேள்வி பற்றிய செய்திகளுக்கு மாற்றாக எரிவலம் வருதல் கன்னடத்தில் இடம்பெறுவது வீரசைவச் செல்வாக்கால் விளைந்தது. திருநீலகண்டக்குயவனார் கதையில் அவர் பரத்தையை நாடியதால் மனைவி பிணங்கியதாக இயல்பட மொழியக் கன்னட ஆசிரியர்கள் குயவனார் தெருவழியே வந்த போது பரத்தை ஒருத்தி வீசிய அழுக்கு நீரால் துணிகள் மாசடைய அவள் மாற்றுடை அணிவித்து அனுப்பியமையால் ஏற்பட்ட ஐயத்தால் மனைவி ஊடியதாக அமைக்கிறார்கள் இது ஆசிரியர்களின் சமய ஈடுபாட்டால் விளைந்த மாற்றமா அல்லது நாடக உணர்ச்சியை மிகுவிக்கும் என்பதாலா?*

- மேற்படி நூல்: அணிந்துரை. பக்கம்: 3

அ.சங்கரி அவர்களின் மேற்படி ஆய்வு நூலும் பேராசிரியர் நாச்சிமுத்து அவர்கள் தமது அணிந்துரையில் முன்வைத்த மேற்கண்டவாறான அவதானிப்புகளும் பெரிய புராணம் தொடர்பான திறனாய்வில் மேலும் நாம் தீவிரமாக ஈடுபடுவதற்கான ஊக்கத்தை அளித்துள்ளன. இக்குறிப்புடன் பெரியபுராணம் பற்றிய பார்வை இங்கு நிறைவுக்கு வருகின்றது. அடுத்து சோழர் காலத்தின் சைவ மரபுசார் ஆக்கங்களின் ஏனையநூல்கள் நமது கவனத்துக்கு வருகின்றன.

*(தொடரும்...)*



subramanian.n@thaiveedu.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கார்ட்டூன் மொழியும், குறியீடுகளும்

ஓவியத்தின் ஒரு வடிவமாகக் காட்டூன் சித்திரம் காணப் படுகிறது. ஓவியக்கலை என்பது கண்ணுக்கு விருந்தளிப்பதுடன் தனது கடமையை முடித்துக்கொள்வதல்ல. பார்வையாளரது மனதை ஊடுருவி, நெருடி அவனது சிந்தனையில் புதியதொரு உத்வேகத்தினைக் கொடுக்க வேண்டும். இந்தப் பாணியில் மிகக் கூர்மையானதும், சக்தி வாய்ந்ததுமாக இருப்பது காட்டூன் ஓவியமாகும்.

காட்டூன் என்பது கருத்துப்படங்கள் வாயிலாகத் தான் சொல்லவந்த கருத்துக்களை வெளிப்படுத்தலாகும். இங்கு பேசும் மொழிகளைவிடப் பேசா மொழிகளே இதில் அதிகம் செல்வாக்குச் செலுத்துகின்றன. நான்கு பக்கங்களில் எழுதிப் புரியவைக்க வேண்டிய ஒரு விடயத்தைப் படத்துடன் நான்கே வரிகளில் புரியவைத்துவிடக்கூடியது காட்டூன். அதுமட்டுமல்ல, நக்கலும் நையாண்டியும் கலந்து நாட்டு நடப்புகளை விமர்சிக்கும் அரசியல் மற்றும் சமூகக் காட்டூன்கள் சிடுமுஞ்சிகளையும் சிரிக்க வைத்துவிடும். சில சமயங்களில் சம்பந்தப் பட்டவர்களை முகம் சிவக்கவும் செய்துவிடும்.

கருத்துக்களை வெளிப்படுத்துவதில் காட்டூன் படங்களின் முகபாவங்களே மிகவும் முக்கியமான ஓர் அம்சமாகும். அதிலும் நேரிடையாக விளம்ப முடியாதவற்றை சில கோட்டு வரைபுகள் மூலம் தனக்கேயான சில குறியீட்டு மொழி மூலம் வெளிக்கொணர்வது காட்டூனின் பண்பு. காட்டூன் ஒரு குறித்த சம்பவத்தினைப் புராணக் கதைகளுடனோ அல்லது பழமொழிகளுடனோ அல்லது வேறு உத்தி முறைகளூடோ அபிப்பிராயத்தினை சில கோடுகள் மூலம் வெளிப்படுத்தும். இதுவே காட்டூன் மொழியாகிறது. சுருங்கவும், சுவைபடவும் நகைத்தலுடன் ஒரு கருத்தினைப் புலப்படுத்துவது காட்டூனுக்கே உரித்தானது.

ஒவ்வொரு உணர்ச்சியின் போதும் கண்களும், புருவங்களும், வாயும் உணர்வுகளை வெளிப்படுத்தும். காட்டூன் வரையும் போது, கண்கள், வாய், புருவங்களை முழு விபரத்துடன் வரையவேண்டிய அவசியமில்லை. தனியே புள்ளிகள் அல்லது சிறு கோடுகளைப் போட்டுக் காட்டமுடியும். இதுவே காட்டூன் மொழியாக விளங்குவதனை நாம் பின்வரும் முகபாவங்கள் மூலம் அறியலாம்.

### சிரிப்பு:
வாய்விட்டுச் சிரிக்கும்போது கண்கள் மூடப்



படும், வாய் அதிகமாக நீண்டு ஓரங்கள் மேல்நோக்கி இருக்கும். மூக்கின் நீளம் குறைந்து அகன்றிருக்கும், கண்களின் ஓரங்களில் சுருக்கங்கள் விழுந்திருக்கும்.

### மகிழ்ச்சி:



வாயின் ஓரங்கள் மேல் நோக்கி வளைந் திருக்கும். புருவங்கள் மேலிருந்து கீழாக அமைந்திருக்கும்.

### கோபம்:
புருவம் வளைந்து நெளிந்து ஒன்றுடனொன்று



நெருங்கியிருக்கும். கண்கள் அகல விளித்து கருவிழி சிறிய புள்ளிகளாக இரண்டு புள்ளிகளும் நெருக்கமாக இருக்கும். மூக்கின் மீது மடிப்புக்கள் இருக்கும். வாயின் ஓரங்கள் கீழ் நோக்கி வளைந்திருக்கும்.

### பயம்:
புருவங்கள் அதிகமாக உயர்த்தி மேலி



ருந்து கீழாகவும், கண்களை அகல விரித்து கருவிழிகள் மிகச் சிறிய புள்ளிகளாகவும், பயத்தால் வாய் திறந்திருப்பது போலவும், வாயின் ஓரங்கள் கீழ் நோக்கியும், தலை முடி சிலிர்த்தபடியும், மூக்கிலிருந்து வரும் இருகோடுகள் வாய்க்கருகிலும், கண்களின் ஓரத்தில் மடிப்புக்களும், பயத்தினால் வியர்வைத் துளிகள் கொட்டுவதுபோலவும் காட்டி வரையவேண்டும்.

### துயரம், சோகம்:
புருவம் மேலிருந்து கீழாகவும், கண்ணின் கருவிழி பாதி இமைக்குள் மறைக்கப்பட்



டுப் பாதி விழி தெரிவது போலவும், வாயின் மேலுதடு கீழிறங்கியும், நெற்றி குறுகியது போலவும், மூக்கிலிருந்து வரும் இரு கோடுகள் கீழிறங்கியும் வரையவேண்டும்.

### அழுகை:
புருவம் மேலிருந்து கீழ் நோக்கி இருக்க



வேண்டும், கண்களை மூடியபடி இருக்க வேண்டும். வாய் கீழ்நோக்கியிருக்க வேண்டும், இரண்டொரு கண்ணீர்த் துளிகளைக் காட்டலாம்.

### வெறுப்பு:
நெற்றியில் இரண்டொரு சுருக்கங்களும், புருவங்களும் கீழிருந்து மேலாக வளைந்



தும், வாய்க்கோடு கீழ்நோக்கி நெளிந்தபடி வளைந்தும் இருக்க வேண்டும்.

### கர்வம்:
புருவங்கள் மேலிருந்து கீழாகவும், கருவி



ழிகள் கண்ணின் ஓரங்களிலும், வாய் நெளிந்த படியும், நெற்றியில் இரண்டொரு சுருக்கங்களும் காட்டியபடி வரையவேண்டும்.

### குறியீடுகள்:
'Symbolon' எனும் கிரேக்கச் சொல்லில் இருந்தே 'Symbol' எனும் சொல் பிறந்தது. ஏதாவது ஒன்றைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு வடிவம், அல்லது அடையாளம், அல்லது ஒரு பொருள் குறியீடு எனப்படுகிறது. 'Symbol' எனும் சொல் முதன் முதலில் 1590ம் ஆண்டில் 'Edmund Spenser' என்பவர் கையாண்டார். அனைத்து மனிதர்களாலும் உணர்ந்து கொள்ளக்கூடிய தன்மையே குறியீட்டின் அடிப்படை ஆகும் இதன் காரணமாகத் தற்காலத்தில் எல்லாத் தகவல் தொடர்புகளும் குறியீடுகளின் பயன்பாட்டின் மூலம் அடையப்படுகின்றன.

குறியீடுகள் எனும்போது ஒன்றிற்கான பிரதியீடாகக் கொள்ளலாம். சில பிரத்தியேகமான குறியீடுகளை உபயோகித்துக் காட்டூன் தன் செய்திப் பரிமாற்றங்களை வெளியிடும். இச்சில பிரத்தியேகக் குறியீடுகளினூடு காட்டூன் படங்களைப் பேச, பாட, ஓட, படிக்க வைக்கமுடியும்.

### பேச்சுக்கள், வார்த்தைகள், வசனங்கள்:
இவைகளை எழுதி அதனைச் சுற்றி ஒரு வட்டமோ, சதுரமோ போட்டுவிட்டால் காட்



டூன்களில் வரையப்படும் உருவமானது அந்த வசனங்களைப் பேசுகின்றது என அர்த்தம் கொள்ளப்படுகின்றது.

காட்டூன் மொழியில் இத்தகைய வட்டங்கள் அல்லது குறியீடுகளுக்கு பலூன் (Balloon) எனக் குறிப்பிடப்படும்.

### நினைத்துப் பார்த்தல், கற்பனைகள், கனவு:
Balloon களை அமைத்து அதற்குள் வசனங்களை எழுதாமல் விட்டால், உருவம் பேசாமல் எதையோ நினைத்துப்பார்க்கின்றது



அல்லது கற்பனையில் இருக்கின்றது அல்



லது கனவு காண்கின்றது எனப் பொருள் படும்.

### ரேடியோ, ரீ.வி, ரெலிபோன்:
இவ்வாறு பலூன்களை வரைந்து வார்த்தைகளை அதனுள் எழுதிவிட்டால் ரேடியோ



அல்லது ரெலிபோன் அல்லது ரீவியிலிருந்து வரும் சத்தம் அல்லது செய்தியைக் குறிக்கும்.

### நடுக்கம், பயம்:
உருவங்கள் வரைந்து பக்கத்தில் இத்தகைய குறியீடுகளை வரைவதால் உருவ



மானது நடுங்கவோ அல்லது பயப்படவோ செய்வதன் பொருள் தரும்.

### அடி, மயக்கம், தலைசுற்றுதல்:
இக்குறியீடு காட்டூன் பாத்திரம் அடி வாங்



குதல் அல்லது மயக்கமடைதல் அல்லது தலை சுற்றுதல் என்பவற்றைக் காட்டக் குறியீட்டுச் சித்திரமாகக் காட்டப்படும்.

### வியர்வை, நீர்த் துளிகள்:
காட்டூன் பாத்திரத்திற்கு வியர்த்தல் அல்

தொடர்தல் 110ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கார்ட்டூன் மொழியும்...

109ம் பக்கத் தொடர்ச்சி...

லது நீர் வடிதல் போன்றவற்றிற்குக் குறி



யீடாகப் பயன்படுத்தப்படும்.

### வியப்பு, ஆச்சரியம், அதிசயம்:

இக்குறியீடுகள் மூலம் இவ்வுருவமானது வியப்படைதல் அல்லது ஆச்சரியப்படல்



அல்லது அதிசயப்படல் போன்ற உணர்வு வெளிப்பாடுகளைக் காட்டப் பயன்படும்
.

### சுழற்றியடித்தல், சுற்றிமோதுதல்:

இக்குறியீடு மூலம் காட்டூன் உருவமானது



சுழற்றியடித்தல் அல்லது அவ்வுருவம் மோது தல் போன்றவற்றைக் காட்ட காட்டூனில் பயன்படுத்தப்படும்.

### உடைதல், நொருங்குதல்:

இத்தகைய குறியீடானது ஒரு பொருள்



உடைதலை அல்லது கண்ணாடியில் கல் பட்டுக் கண்ணாடி நொருங்குதல் போன்ற வற்றைக் காட்டப் பயன்படுத்தப்படும்.

### ஓட்டம், வேகம்:

மனிதர்களோ, மிருகங்களோ, வாகனங்களோ



வேகமாக ஓடுவதனை காட்டுவதற்கு இக் குறியீடுகள் பயன்படுத்தலாம்.

### திடீர் யோசனை, ஐடியா:

காட்டூன் உருவங்களிற்கு ஐடியாவோ அல்



லது திடீர் யோசனையோ காட்டுவதாயின் இக் குறியீடுகளைப் பயன்படுத்தலாம்.

### குழப்பம், விடைதெரியாமல் முழித்தல்:

காட்டூன் உருவங்களின் அருகில் இவ்வா



றான குறியீடுகளை இடுவதால் குழப்பம் அல்லது விடைதெரியாமல் விழித்தல் எனப் பொருள் தரும்.

### கவலை, வருத்தம், சோகம்:

இக்குறியீடுகள் மூலம் காட்டூன் உருவம்



கவலை அல்லது ஏதோ வருத்தம் அல் லது சோகத்தில் இருக்கிறது என்பதனைக் காட்டமுடியும்.

### ஒளிரும் பொருள், வெளிச்சம்:

இக்குறியீடுகளின் மூலம் ஒரு பொருள்



வெளிச்சம் பீறிடும் அல்லது ஒளிரும் பொரு ளைக் காட்டப் பயன்படுத்தப்படும்.

### காதல், பாசம், அன்பு:

இக்குறியீடு காட்டூன் பாத்திரத்தின் காதல்,



அன்பு, பாசம் என்பவற்றைக் காட்டப் பயன்படுத்தப்படும். காட்சிகளுக்கு ஏற்பப் பொருள் கொள்ளப்படும்.

### பாட்டு, சங்கீதம், இராகம்:

இத்தகைய குறியீடானது காட்டூன் உருவம்



பாட்டுப் பாடுதல் அல்லது இராகங்களைக் குறிப்பதற்குக் காட்டூனில் பயன்படுத்தப் படும்.

### துப்பாக்கி சுடுதல், டுமீல் சத்தம்:

இத்தகைய குறியீடானது காட்டும் உருவம்



துப்பாக்கியால் சுடும்போது குழல் முனை யிலிருந்து வெளிப்படுவதுபோல் காட்டப் படுகின்றது.

### காட்டூனும் கரிக்கேச்சரும்:

கரிக்கேச்சர் என்ற ஆங்கிலச் சொல் அதன் இத்தாலிய வேர்ச்சொல்லான 'Caricature' என்பதிலிருந்து பிறந்தது. இத்தாலியில் Caricature என்பது to land அல்லது to surcharge அதாவது சுமையேற்று அல் லது குற்றம் சாட்டு என்று பொருள்படும். ஒரு நபரை அல்லது ஒரு செயலை அல்லது ஒரு வகைமாதிரிப் பாத்திரத்தை அதன் மூல இயல்பு கெடாமல் திரித்து வரைந் தால் அல்லது மிகைப்படுத்தி வரைந்தால் அது கரிக்கேச்சர் எனப்படுகின்றது. அனே கமாகக் கராசி குடும்பத்தினரால் உருவாக் கப்பட்டிருக்கக்கூடும்.

கரிக்கேச்சர் என்பதற்குப் பல வகைகளில் பொருள் கூறுகின்றார்கள். அவ்வகையில்,
இத்தாலி மொழியில் - Caricature
லத்தீன் மொழியில் - Carricare
பிரெஞ் மொழியில் - La Caricature

உண்மையைக் கொஞ்சம் அதிகமாகவே மிகைப்படுத்தி உண்மையாகக் காட்டுவது. அதாவது உண்மையைச் சற்றே அழுத் தம் திருத்தமாகச் சொல்வது கரிக்கேச்சரா கும்.

கரிக்கேச்சர் வரையும் ஓவியர் தாம் எடுத் துக்கொண்டுள்ள பாத்திரத்தின் சிறந்த குணாதிசயங்களை எடுத்த எடுப்பிலேயே வெளிப்படும்படி வரைவார். ஆனால் காட் டூன்களுக்கு இது சற்று அப்பாற்பட்டது. இதில் வரையப்படும் பாத்திரங்களின் உறுப்பு, அமைப்பு, பொருத்தம் என்பவற் றைப் பார்க்கமுடியாது. பொருத்தமற்ற உறுப்பமைப்பைக் கொண்டு காட்டூன்கள் வரையப்படுகின்றது. இங்கு வரையப்படும் சித்திரங்களின் குணாதிசயங்களே மேலோங்கி நிற்கும்.

அனேகமாகக் கரிக்கேச்சர் விகடச்சுவையை நோக்காகக் கொண்டது. அங்கு விமர்சனப் பண்பு அதிகம் அழுத்தப்படுவதில்லை. ஆனால் காட்டூன்கள் விகடச்சுவையைக் கொண்ட விமர்சனம் தான். இந்நிலையில் கரிக்கேச்சர் காட்டூன்களுக்கு ஓரளவிற்கு நெருக்கமானதாகவுள்ளது. எனினும் இன்று எம்மில் பலர் காட்டூன் - கரிக்கேச்சர் ஆகிய இரு சொற்களையும் குழப்பம் தரும் விதத் தில் உபயோகிக்கின்றனர். பலர் காட்டூன் களையே கரிக்கேச்சர் என அழைப்பதை யும் காணலாம். எனினும் காட்டூன் - கரிக் கேச்சர் படங்களில் வேறுபாடுகளைப் புரி தல் வேண்டும். பார்த்தமாத்திரத்திலேயே இரண்டும் ஒன்றாகவே தோன்றும். காட்டூன் படங்களும் கரிக்கேச்சர் படங்களும் நகைச் சுவையுடன் சிந்தனையைத் தூண்டி புதிய எண்ணங்களை வெளிப்படுத்துகின்றன.

காட்டூன் படங்கள் கருத்துக்களுக்கு முக் கிய இடம் தரும் அதேவேளை கரிக்கேச் சர் படங்கள் தனி நபர்களுக்கு முக்கிய இடம் தருகின்றது. அவர்களை மற்றைய மனிதர்களிடமிருந்து வேறுபடுத்திக் காட்டி அவர்களின் ஒரு குறிப்பிட்ட அங்கத்தினை மிகைப்படுத்தி அவர்களின் குணங்களை யும், கொள்கைகளையும் சிரிக்க வைத்துச் சிந்திக்கச் செய்கின்றன.

### காட்டூன்களின் பொதுப் பண்புகள்:

நடப்பு நிகழ்ச்சிகளைப் படங்களாக்கி மிகக் குறைந்த சொற்களில் கருத்தை விளக்கி மக்களைச் சிரிக்கவும், சிந்திக்கவும் தூண் டுபவை காட்டூன் படங்களாகும். அரசிய லையே சார்ந்து அடிக்குறிப்புக்கள் இல் லாமலேயே கருத்தைத் தெளிவுபடுத்தும் வல்லமை காட்டூன் படங்களுக்குண்டு. தமிழ்ப் பத்திரிகைத் துறையில் முதன் முதலில் அரசியல் காட்டூன்களை வெளி யிட்ட பெருமை பாரதியாருக்கே உண்டு.

காட்டூன் படங்கள் பத்திரிகையில் ஆசிரியர் தலையங்கத்திற்கு நிகரான முக்கியத்துவத் தினைப் பெறுகின்றது. இது பத்திரிகை யின் இரண்டாவது ஆசிரியர் தலையங்க மாகத் தனது பணிகளை ஆற்றுகின்றது. ஒரு நாட்டின் முக்கிய நடப்புப் பற்றி பத் திரிகையின் ஆசிரியர் அல்லது நிர்வாகம் என்ன நிலைப்பாட்டைக் கொண்டிருக்கின் றது என்பதனை எழுத்தில் வடிப்பது ஆசி ரியர் தலையங்கமாகும். அதனைப்படத்தில் வரைவது காட்டூன் படங்களாகும். ஆசிரி யர் தலையங்கம் எந்தளவிற்கு முக்கியத் துவம் கொண்டதோ அந்தளவிற்கான முக் கியத்துவத்தினைக் காட்டூன்களும் பெறு கின்றன. இக்காட்டூன்கள் எல்லாப் பத்தி ரிகையிலும் இடம்பெறுவதுமில்லை, அவை இலகுவான காரியமுமில்லை.

காட்டூன்கள் அநீதிகளுக்கு எதிராகக் குரல் கொடுக்கும் சமுதாயத்தின் குரலாகவும், சூழலை அவதானிப்பதாகவும், பார்ப்பவரை ஈர்க்கக்கூடியதாகவும், விமர்சனத்தை விக டச் சுவையுடன் வெளிப்படுத்துகின்றது. நாம் வாழும் காலத்தைப் பிரதிபலிக்கும் கோலங்கள், கலைத்துவம் மிக்க ஓர் உள் ளத்தின் பிரசவங்கள் காட்டூன்களாகும்.

### கரிக்கேச்சரின் பொதுப் பண்புகள்:

தனி மனிதர்களையும், அவர்களது கொள் கைகளையும் கேலி செய்வதற்காக வரை யப்படும் படங்கள் கரிக்கேச்சர் எனப்படும். அவை எப்போதும் ஒரு நிகழ்ச்சியோடு தொடர்புடைய ஒரு பிரமுகரின் தோற் றத்தை அல்லது ஒரு இயல்பை மற்றவரி டமிருந்து தெளிவாக வேறுபடுத்திக் காட் டும்.

கரிக்கேச்சர் படங்கள் உட்பொருளை நகைச் சுவையோடு வெளிப்படுத்துவதுடன் சிரிக் கவும் வைக்கின்றது. கரிக்கேச்சர் ஓவியங் கள் மத்தியதரைக்கடல் பிரதேச நாடுகளை உரோமர் கைப்பற்றி ஆண்ட, கிறிஸ்துவிற்கு முன்னும், பின்னுமான காலப்பகுதிகளி- லேயே உரோம், எதேன்ஸ் போன்ற நக ரங்களில் பிரபலமாக இருந்ததாகவும், உரோ மர் ஆட்சியின் நடவடிக்கைகளை விமர்சிக் கும் வகையில் மக்கள் உரோமர் நகர்க- ளின் வீதிச் சுவர்களில் கிறுக்கல் ஓவியங் களை வரைந்ததாகவும் வரலாறு கூறுகின் றது.

### காட்டூன் - கரிக்கேச்சர் தொடர்பான சில நியமங்கள்:

- இறைவனையும், புனிதப்பொருட்களை யும் இழிவுபடுத்திக் காட்டூன்களில் வரை யக்கூடாது.
- தேசியக்கொடி, தேசிய சின்னங்கள் என் பனவற்றின் மதிப்புக்கெடாமல் பார்த் துக் கொள்ள வேண்டும்.
- தனி மனிதர்களையும், அவர்களை அச் சுறுத்தும் வகையிலும் படங்களை வரை யக்கூடாது.
- படங்களை ஒரு சிலரின் எண்ணங்களோடு போதிய சான்றுகள் இன்றி வெளியி டக்கூடாது.
- மனிதர்களுக்கு விலங்குருவங்களை பயன்படுத்தலைத் தவிர்த்தல் வேண்டும்.
- காட்டூன் படங்களின் அறிவுறுத்தல்கள் மக்களைச் சிந்திக்கவும், செயற்படவும் தூண்ட வேண்டும்.
- மனிதர்களை மிருகங்கள் போலவோ, ஆண்களைப் பெண்களின் உருவத்திலோ வரைதல் கூடாது.

எனவே, காட்டூன்கள் - கரிக்கேச்சர்கள் என் பவை இரண்டும் வேறுவேறு திசைகளில் பயணிப்பவை ஆயினும் அது ஒரு மையப் புள்ளியில் இருந்தே வெளிக்கிளம்புவதை நோக்கலாம்.



tharmathas.s@thaiveedu.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்வலை - 40

'தாய்வீடு' சமூகத்துள் தாய்மொழியின் சொல்வளத்தை வலியுறுத்தும் நோக்குடன் முன்வைக்கப்படும் 'தமிழ்வலை'யை முற்றிலும் சரிவர நிரப்பி அனுப்புவோருள் தேர்ந்தெடுக்கப்படும் ஒருவருக்கு தமிழ் நூல்களும் சஞ்சிகைகளும் பரிசாக வழங்கப்படும்.

பெயர்:

முகவரி:

தொலைபேசி எண்:

மின்னஞ்சல்வரி:



## தமிழ்வலை-40 வினா

**இடமிருந்து வலம்**

1 யாழ்ப்பாணத்தில் வற்றாக் கிணறு
3 நீதிமன்றில் வழங்கும் வாக்குமூலம்
5 வெலி ஓயா
9 வசை
11 கிரேக்கம்
12 குளிர்மை வெம்மை
15 கூட்டாளி
16 நோய்
17 ஆன்மா
19 சிவன்
20 வெளிப்பக்கம்
21 சந்ததி
22 கப்பம்
23 மூதாதையர்

**மேலிருந்து கீழ்**

1 தராதரம்
2 சரித்திரம்
3 போலிக்காரணம்
4 செந்நிற மேனியர்
6 ஒரு பிராணி
7 மகப்பேற்றுக்குப் பிறகு
8 ஒரு வீட்டு விளையாட்டு
9 காட்டுக்குரிய
10 வேந்தரை விளிக்கும் சொல்
13 கலாச்சாரம்
14 கீழ்ப்படி
17 வழிப்பறி
18 தேம்பியழு
20 பற்றை

தமிழ்வலை போட்டிக்கான விடையை
இம்மாதம் 23-ம் தேதிக்கு முன்னர் அஞ்சல் அல்லது மின்னஞ்சல்
அல்லது தொலைநகல் வாயிலாக அனுப்பிவைக்கவும்.
அதற்கு தமிழ்வலையைப் பிரதிசெய்து அல்லது படப்பிரதியெடுத்து
அல்லது கதிர்ப்பிரதியெடுத்து பயன்படுத்தவும்.

பெறுபேறுகள் நடுவர்களின் முடிபுக்கமைய
அடுத்த மாத தாய்வீட்டில் வெளிவரும்.

**விடைகளை அனுப்பவேண்டிய மினன்னஞ்சல் முகவரி**
**thamilvalai@thaiveedu.com**
**தொலைநகல்: 416 849 0594**

**விடைகளை அனுப்பவேண்டிய அஞ்சல் முகவரி**

**Thaiveedu**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**

## தமிழ்வலை - 39க்கான விடைகள்



## தமிழ்வலை-39 பெறுபேறுகள்

### முன்னணிப் போட்டியாளர்

திரு. அனலைமணி, பிரம்ரன்
திருமதி. தவமணி முத்து, பிரம்ரன்
திருமதி. குயின் ஜெயரட்னம் ஏஜக்ஸ்
திருமதி. சசி இரவீந்திரன், மார்க்கம்
திரு. புண்ணியமூர்த்தி நாகநாதன், ஸ்கார்பரே.

### பரிசுபெறும் போட்டியாளர்

**திரு. சுந்தரம் திருச்செல்வம்,** ஸ்கார்பரோ.

thamilvalai@thaiveedu.com

**தமிழ்வலை போட்டியில் பரிசுபெறும் ஒருவருக்கு 25 டொலர் பெறுமதியான நூல்கள் வாங்குவதற்கான கொள்வனவு அட்டை வழங்கப்படும்.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரொறன்ரோ தமிழ்ச்சங்கம்

## பங்குனி மாத இலக்கியக் கலந்துரையாடல்

## "காட்சி ஊடகமும் சமூகமும்"

**பிரதம பேச்சாளர் உரை:**

"காட்சி ஊடகமும் தமிழர் சமூகமும்" - திரு.P.விக்னேஸ்வரன்

**சிறப்புப் பேச்சாளர்கள் உரை:**

"காட்சி ஊடகம் - வரலாற்றுப் பார்வை" - கலாநிதி கௌசல்யா சுப்பிரமணியன்

"காட்சி ஊடகங்கள் மீதான இளைஞர்களின் பார்வை" - திரு.A.T.P.ரஞ்சித் குமார்

**ஜயந்தெளிதல் அரங்கு**

**நாள்: 30-03-2019**

**நேரம்: மாலை 3:00 முதல் 7:00 வரை**

இடம்: ரொறன்ரோ தமிழ்ச்சங்க மண்டபம்
Unit 7, 5633, Finch Avenue East
Scarborough, M1B 5K9
(Dr. Lambotharan's Clinic - Basement)

தொடர்புகளுக்கு: அகில் – 416-822-6316

**அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.**

அனுமதி இலவசம்!

## ரொறன்ரோ தமிழ் சங்கத்தின் மாதாந்த இலக்கியக் கலந்துரையாடல் நிகழ்வு 23.02.2019 அன்று ரொறன்ரோ தமிழ்ச்சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் "தமிழர் மனநல பிரச்சினைகள்" என்ற தலைப்பில் கலந்துரையாடல் இடம்பெற்றது. அந்நிகழ்வில் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் சில...



கலாநிதி. பார்வதி கந்தசாமி



வைத்திய கலாநிதி
இ.லம்போதரன்



சதா விவேகானந்தன்





இனித்தா சுப்பிரமணியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இம்மனுவேல்

- செல்வம் அருளானந்தம் -

## சொல்வது எழுதல்: 9



எவ்வளவுதான் அடக்கி வாசிக்க வேணும் எண்டு நினைச்சாலும் அந்த நேரம் எப்படியும் வந்திடும். அந்த நேரத்திலை மௌனமாய் இருக்கிறவன்தான் பாக்கியவான்.

வெள்ளிக்கிழமை இரவுநேரத் தண்ணியாய் இருக்கலாம், ஒரு பூப்பு நீராட்டுக் கொண்டாட்டமாய் இருக்கலாம், அல்லது கலியாண வீடோ பிறந்த நாள் விழாவாகவோ இருக்கலாம். எப்பிடி இருந்தாலும் வாய் தண்ணியில நனையத் தொடங்கினவுடன வாய்க்கும் மூளைக்கும் இருக்கிற தொடர்புகொஞ்சங்கொஞ்சமாக் குறையத் தொடங்கிடும்.

ஆறு மாசத்துக்கு முதல்ல நடந்த ஒரு வீடு குடிபுகல் கொண்டாட்டத்துக்குப் பிறகு ஒரு முடிவுக்கு வந்திருந்தன். எந்தக்கொண்டாட்டத்துக்குப் போனாலும் ஓர் அளவான நேரத்தில எழும்பி வீட்டுக்குப் போயிட்டால் உடலுக்கும் நல்லது மனசுக்கும் நல்லது என்டு.

நல்ல தண்ணியிலதான் இருந்தன் எண்டாலும் அண்டைக்கு நடந்த சம்பவம் அப்பிடியே என்ர கண்ணுக்கு முன்னால நிக்குது.

ஆனைக்கோட்டை பொலிஸ் நிலையம் எந்த ஆண்டு, எந்த மாதம் அடிச்சது? என்ற விவாதத்தில உருத்திரா எழும்பி வேந்தனுக்கு அடிக்கப்போக, அதைத் தடுக்க குறுக்கை வந்த பாலு அண்ணனுக்கு முகத்திலை அடிபட, அவர் சுழண்டு போய் கொதிச்சுக் கொண்டிருந்த சொதியிக்கை கையை வைக்க...கதை கந்தலாப்போச்சு. பாலு அண்ணர் மூன்று கிழமையாய் மருந்து கட்டிக்கொண்டு திரிஞ்சவர்.

சினிமாவில தொடங்கி...,பத்திரிகைச் செய்திகள், பத்திக்கதை என்டு வளர்ந்து, சாடையாய் இலக்கியமும் கலந்து கலந்து.. கதை பேச்சு எப்படியும் நடைமுறை அரசியலுக்கு வந்துவிடும். அரசியல் வேண்டாம், வேண்டாம் என்று சொல்லிச் செல்லியே அந்தச் சகதிக்குள்ள புதைஞ்சு, மாறி மாறி சேறு வீசவும் பூசவும் தொடங்கிவிடுவாங்கள்.

கிட்டடியில ஊருக்க போய்வந்த ரமேஸ் தான் இண்டைக்கு மெல்லக் கதையைத் தொடங்கினான், "முன்னாள் பெடி பெட்டையளைச் சந்திச்சனான். ஐயோ! சரியாய் கஸ்ரப்படுகுதுகள்" எண்டான். கூட இருந்த கண்ணன், "கள்ள நாய்கள் போருக்கும் ஊருக்கும் என இஞ்சை சேர்ந்த காசு எல்லாத்தையும் களவெடுத்து கட்டடங்களும் வீடுகளுமாய் பினாமி பெயர்களிலை வாங்கிப்போட்டு இப்போ கள்ள மௌனம் கொள்ளுறாங்கள்." எண்டு உரத்த குரலில கத்த, லிங்கன் கோபத்தோட இடை மறிச்சான், "ஏடேய் நீ எப்பவாவது போராட்டத்துக்கு காசு கொடுத்தனியோ? ஐந்து சதக் காசு கொடுத்திருக்க மாட்டாய். நீ நியாயம் கதைக்கிறாய்." எண்டு சொல்ல, கண்ணனுக்கு ஏறிட்டுது. "டேய் நான் குடுத்தாலென்ன குடுக்காட்டி என்ன? மக்களிட்டைச் சேர்த்த பணத்துக்கு மக்களுக்குக் கணக்குக்காட்ட வேணும்." எண்டான்.

கண்ணனுக்கு உரத்துக் கதைக்கிறது கொஞ்சம் கஸ்ரம். வாழ்க்கையில் முன்னுக்கு வர வேணும் என்று 'ட்றக்' ஓட வெளிக்கிட்டு, வயிறுதான் முன்னுக்கு வந்து நிண்டது. கொஞ்சம் உரத்துக் கதைத்தால் இளைக் கும். கோபம் ஏறினாலும் மெல்லமாய்த்தான் சொன்னான்.

மதி சிரிச்சுக்கொண்டு சொன்னான், "போராட்டத்துக்குப் பணம் குடுத்தவங்கள் அந்தக் கணக்கைக் கேக்கட்டும். மற்றப் போத் தலை உடையுங்கோடா" எண்டு. எல்லாம் கொஞ்சம் அமைதியாயிட்டுது.

கொஞ்சநேர மௌனத்துக்குப் பின் மதியனே கதைச்சான். "ஒரு போர் நடத்த உதவி செய்த அமைப்பு இதுக்கெல்லாம் கணக்கு வச்சிருக்காது. வச்சிருக்க முடியாது. எந்த ஒரு அமைப்பிலும் நாலு கள்ளர் இருக்கத்தான் செய்வார்கள், அதுக்காக முன்னுக்கு நிண்டு உதவி செய்த முழு அமைப்புக்காறரையும் கள்ளர் என்று சொல்ல இயலாது" என்று சொல்லிக்கொண்டு ஒரு மிடறை உள்ள விட்டான்.

"அப்ப நாட்டு விடுதலைக்கு எண்டு கொடுத்த காசை தனிப்பட்ட ஆட்கள் அனுபவிக்கிறதோ? ஊரிலை இந்தப் போருக்குப் போய் எஞ்சின குஞ்சுகள் பிச்சை எடுக்குதுகள்" ரமேஸ் தலையைக்குனிஞ்சபடியே சொன்னான்.

மதியனுக்குக் கொஞ்சம் வெறி. எண்டாலும் நிதானமாய்த்தான் தொடங்கினான். "நாங்கள் தப்பியோடி வந்தாலும் இந்தப் போரிலை எங்களுக்குப் பெரிய பங்கு இருக்குது. இயக்கங்களாய்ப் பிரிஞ்சதுக் குப்பின்னாலை. எல்லோருமாய்ச் சேர்ந்து தான் இந்த யுத்தத்திலை பங்குபற்றினம். அண்டைக்கு இல்லை, இண்டைக்கும் சொல்லுறன், யுத்தம் எங்கள் மேல் திணிக்

தொடர்தல் 114ம் பக்கம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இம்மனுவேல்...

113ம் பக்கத் தொடர்ச்சி...

கப்பட்டதால ஒரு தர்மத்துக்காகத்தான் எங்கடை பெடியள் உயிர் கொடுத்துப் போராடினாங்கள். அதில் சிலவேளை அவங்கள் தர்மம் இல்லாமலும் நடந்திருக்கலாம்... அது வேறை. அந்தப் போருக்கு வெளிநாட்டிலை இருக்கும் தங்கட சகோதரங்களிடம் உதவி கேட்டாங்கள். இவங்களும் பணம் சேகரிச்சுக் குடுத்தாங்கள். ஆனா போர் தோல்வியில முடிஞ்சிது. மிஞ்சின காசை என்ன செய்யிறது? கொடுக்கிறது எண்டால் யாரட்டைக் குடுக்கிறது?" எண்டு சொல்ல, அதுவரைக்கும் சத்தமில்லாம ரெண்டு மூண்டு பெக் அடிச்சிட்டிருந்த அத்தார் ஆத்திரத்தோட கத்தினார்.

"டேய் என்ரை சொந்த மச்சான் தன்ரை தங்கச்சியின்ரை கலியாணத்துக்குக் கூட ஒரு சதக் காசு குடுக்கேல்லை - இறுதி யுத்தம் எண்டு சொல்லித் தான் குடியிருந்த வீட்டை நீமோட்கேஜ் பண்ணி உவங்க ளுக்கு பெருங்காசு குடுத்தவன். அந்தக் காசு எல்லாத்தையும் ஊருக்கு அனுப்பியிருப் பாங்களெண்டு சொல்லுறியோ? கள்ளப் பயலுகள்" என்று சொல்லி முடிக்குறத்துக் குள்ள, சுரேன் "ஏடேய் பிரசங்கத்தை நிப்பாட்டடா, சுயநலம் இல்லாம நாட்டுக்காக வேலை செய்த சிலபேரையும் எனக்கும் தெரியும்" எண்டான்.

அத்தார் விடேல்ல, "அது ஒரு கொஞ்சப் பேர், அவங்களை விடு. எரியிற வீட்டிலை புடுங்கினது லாபம் எண்டு ஏப்பம் விட்ட வங்கள எனக்குத் தெரியும். வீடு கட்டாயம் எரியும் அப்ப பிடுங்குவம் எண்டு தெரிஞ்சு காத்திருந்து பிடுங்கினவங்களையும் தெரியும்."

மதியன் எண்ணெய ஊத்தினான். "இரத்தக் காசடா! எரிஞ்சவங்கள் போக எஞ்சினவங்கள் மறியலிலையும் ஊரிலையும் பிச்சை எடுக்கிறாங்கள். இந்தப் பழி இவங்களைச் சும்மா விடாது, உவங்கடை பிள்ளைகுட்டிகளையும் இது விடாது."

"நீ யாரையடா சொல்லுறாய்? பெயர்களைத் துணிஞ்சு சொல்லன்" எண்டு கண்ணன் கோபமாகச் சொல்ல, மதியன் "உன்ரை சில நண்பர்மாற்ரை பெயரும் இதில வருமடா. எடேய் வெளிநாட்டுகாறராலை தான் இந்தப் போர் தோத்துப்போனது" எண்டான்.

சபை ஒரு இறுக்கமான நிலைக்கு போனது.

எனக்குச் சொதியில அவிஞ்ச பாலு அண்ணனின்ர கைதான் ஞாபகத்திற்கு வந்தது.

இதை இப்பிடியே விடுவம் எண்டில்லாம, மதியன் கடுமையாக் கதைக்கத் தொடங்கினான். வெறியும் கணிசமாய் ஏறிட்டுது. வாயும் குளறத் தொடங்கிட்டுது. அவனுக்கு வாய் குளறினால் கை, கால் வேலை செய்யத் தொடங்கிடும்.

குடிச்சோமா கொறிச்சோமா எண்டு இல்லாமல் தண்ணியைப் போட்டிட்டு, நல்லாய் நியாயம் கதைப்பம். நாளைக்கு வெள்ளென எழும்பி எங்கடை நாளாந்த யாழ்ப்பாண வாழ்க்கைக்குத் திரும்பிருவம். இனி இன்னொரு தண்ணிப் பாட்டியிலைதான் ஊர் ஞாபகம் வருமென்றான் கண்ணன்.

யாரோ ஒருவர் "பொத்தடா வாய்" எண்டார்.

இதுதான் அந்த அளவான நேரம் எண்டுறது எனக்குத் தெரிஞ்சுபோச்சுது. விடிய ஐந்து மணிக்கு வேலை எண்டு சொல்லிக்கொண்டு நான் நைசா மாற வெளிக்கிட்டன்.

வழக்கம்போல சிலபேர் மறிச்சுப் பாத்தாங்கள். என்ர கார் வெளிக்கிட்டிட்டுது.

கார் ஓட ஓட அந்த அந்த கதை பேச்சுக்குள்ளதான் என்ர மனம் இருந்திச்சுது. நண்பர் ஒருவர் அடிக்கடி சொல்லுறவர், 'கனகாலமாய் ஈழத்தமிழர் உலகம் மனநோயாளியாகி மனநோய் விடுதியிலைதான் வாழுது. இப்ப அந்த மனநோய் விடுதி மனநோயாளரின் கட்டுப்பாட்டிலேயே போட்டுது.' ஏனோ இது இப்ப ஞாபகத்திற்கு வந்தது.

ஊருக்குப் போனாலும் உறவினர்களுக்கு உதவி செய்தாலும் அவங்களும் வெளிநாட்டில இருந்து வந்தவங்கள் எண்டால் கொஞ்சம் நக்கலாய்த்தான் பார்க்கினம். நாங்களும் போராலை துன்பப்பட்டுத்தானே புலம்பெயர்ந்தேம். இன்றைய தோல்விக்கும் துயரங்களுக்கும் புலம்பெயர்ந்தவர்கள் மட்டுந்தான்தான் பொறுப்பா?

இதுவரை நான் வெளியில் சொல்லாத, எனக்குத் தெரிஞ்ச ஒரு புலம் பெயர்ந்தவனின்ர கதை ஞாபகத்திற்கு வந்தது.

எங்கடை ஊரிலை பண்டிதர் ஆரோக்கிய நாதர் என்ற ஒருவர் இருக்கிறார். நல்ல நேர்மையான ஆள். சோலி சுரட்டு இல்லாதவர். ஆளுக்கு சாடையான வாக்குக் கண். அதற்காக தேரைப் பார்க்கிறன் எண்டுட்டுச் சப்பறத்தைப் பாக்கிற வாக்கு இல்ல.

ஊரிலை ஏதாவது கூட்டங்கள் என்றால் அவர்தான் பேச்சாளர். குறிப்பாக தமிழர சுக்கட்சிக் கூட்டங்களில பேசுவார். 'எட்டாகொலை வாளினை...', 'கண்ணீர் விட்டோ வளர்த்தோம்...'இப்படியான பாடல்களை முழுசாப் பாடுவார்.

எங்களுக்குப் பெரிசா ஆளைப் பிடிக்காது. நாங்கள் பெடியளாய்த் திரியேக்கை அவரைக் கண்டால், மணி எண்டிற என்ரை நண்பன் ஒருத்தன் 'வாக்கு வரும், செல்வாக்கு வரும்' எண்டு பாடத்தொடங்குவான். நான் மற்றப்பக்கமாய்ப் பார்த்துக் கொண்டு நிப்பன். ஏனென்றால் அவற்ரை இரண்டாவது மகன் என்னோடை படிக்கிறவன். பண்டிதர், மணியைப் பார்த்து "வாறன்ரா உன்ரை கொப்பரிட்டை, பிள்ளையை வளர்த்து வச்சிருக்கிறான்" எனத் திட்டுவார். அதுக்கு மணியன், "பண்டிதர், நான் சீர் காழி பாடிய பாட்டைத்தான் பாடினனான். உங்களைப் பற்றி ஒண்டும் சொல்லேல்ல" எண்டு சமாளிப்பான். பண்டிதர் கூட்டமாயப் பெடியள் நின்றால் விலத்தித்தான் போவார்.

நான் அவற்ர இரண்டாவது பெடியனிட்ட அடிக்கடி போவேன். நல்ல கெட்டிக்காறன். வீட்டுப் பாடம் செய்வதற்கு உதவி செய்வான்.

நான் போய்வாற காலத்திலைதான் பண்டிதருக்கு கடைசிப் பெடியன் பிறந்திருந்தான். இம்மனுவேல் எண்டு பெயர். தகப்பனைப் போல செல்ல வாக்கு, சுருள்முடி, மாநிறம். நல்ல அழகான குழந்தை.

பண்டிதற்ரை மூத்தவனுக்கு பல்கலைக்கழகம் முடிச்ச கையோடு வேலையும் கிடைச்சிட்டுது. ஏதோ ஒரு அசம்பாவிதத்தில பூவரசங்குளத்தில வைச்சு ஆமிக்காறர் பஸ்சாலை இறக்கி அவனைச் சுட்டுப் போட்டாங்கள். அந்தச்செத்தவீட்டைப்போல ஒரு சோகமான செத்தவீடு என்ர ஊரில இதுவரை நடந்ததா ஞாபகம் இல்ல.

இந்த சம்பவத்திற்குப் பிறகு பண்டிதற்ரை இரண்டாவது பெடியனோட நான் நெருக்கமாய் பழகி, அவன்ரை துன்பத்துக்கு ஆறுதலாய் இருந்தன். அப்ப நான் அட்வான்ஸ் லெவல் பெயில் பண்ணியிருந்தன். அவன் பாஸ் பண்ணிப்போட்டு பல்கலைக் கழக அழைப்புக்காகக் காத்திருந்தான்.

இதுக்கிடையில ஒருநாள் என்னோடை கதைக்கவேணும் எண்டு சொல்லி மதவடிக்குக் கூட்டிக் கொண்டுபோனான்.

"நான் ஒரு இயக்கத்துக்குப் போகப்போறன். நீயும் வாறியோ?" எண்டு கேட்டான்.

நான் திகைச்சுப்போனன். "நீ உப்படிப் போ நான் இப்பபடிப் போறேன்" எண்டு சொல்லிப் போட்டு நான் வந்திட்டன். பிறகு அவன் இயக்கத்திற்காக இந்தியா போய்விட்டான். இரண்டு மூன்று மாதத்தில நானும் வேலைக்காகக் கப்பல் ஏறிட்டன்.

நான் இப்படியே ஊர் ஊராய் அலைஞ்சு கடைசிய இஞ்சை வந்து செட்டிலாயிட்டன். பண்டிதர் குடும்பமும் ஊரைவிட்டு வேறை எங்கையோ போயிட்டினம் எண்டு கேள்விப் பட்டன். நான் மெல்ல மெல்ல அவையள மறந்தும் போனன்.

வேறை ஒரு வேலையா நான் ஐரோப்பாவுக்குப்போயிருந்தன். அங்க தற்செயலாய்த் தான் இமானுவேலைக் கண்டன். அவனும் என்னை நல்லா ஞாபகம் வைச்சிருந்தான்.

அவன் இப்ப ஒரு பொறியியலாளர். கடலுக்கு நடுவில பிளாட்போம் போட்டு எண்ணெய் எடுக்கிற ஒரு கொம்பனியில முக்கிய பதவியில இருந்தான். தன்ர அப்பா, அம்மா சுகமாக இருக்கினம் எண்டும் இரண்டாவது அண்ணன் இயக்கத்தில் முக்கிய பொறுப்பில இருக்கிறான் எண்டும் சொன்னான். மூண்டாவது அண்ணன் ஒரு சிங்களப்பெண்ணைக் கல்யாணம் முடிச்சு கொழும்பில இருக்கிறதாகவும் சொன்னான்.

அவன்ர போன் நம்பரை வாங்கிக்கொண்டு நான் வந்திட்டன்.

ஒருநாள் போன் எடுத்தான். தன்ரை சின்னண்ணன் சண்டையில இறந்த விசயத்தைச் சொன்னான். இதை எதிர்பார்த்ததுதான் எண்டாலும் இமானுவேலுக்கு ஆறுதல் சொல்லுறது கஸ்ரமாய்க் கிடந்தது. தான் ஊருக்குப் போய் இயக்கத்தில சேரப் போறதாய்ச் சொன்னான். நான் என்ர பங்குக்குத் தடுத்துப் பாத்தன். ஆனால் இமானுவேல் உறுதியாக இருந்தான்.

இது நடந்து நாலைஞ்சு மாசம் போயிருக்கும். இமானுவேலின்ரை போன் வந்தது. தான் ஊருக்குப் போய் இயக்கத்திலை சேர வெளிக்கிட்ட கதையைச் சொன்னான்.

தான் ஊருக்குப் போய் இயக்கத் தலைமைகளைச் சந்திச்சு தன்னை இயக்கத்தில் சேர்க்கும்படி மன்றாடிக் கேக்கேக்கை அவர்கள் தன்ர குடும்ப நிலைமையைக் காரணம் காட்டி திரும்பவும் போய் வெளி நாட்டில வேலை செய்துகொண்டு வேறு வகைகளில தங்களுக்கு உதவி செய் எண்டு சொன்னதாகவும் தங்களுக்கு இக்கட்டான நிலைமை வந்தா தாங்கள் வேறு பொறுப்புக்குக் கூப்பிடுறதாகவும் சொலித் தன்னை திரும்பி அனுப்பிப் போட்டார்கள் எண்டான். தனக்கு இப்ப எப்பவும் ஊர் நினைப்பும் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு உதவி செய்யவேணும் எண்ட முனைப்பும்தான் இருக்குது எண்டும் சொன்னான்.

நானும் பெரிசா ஒண்டும் கதைக்கேல்ல. உன்ர வாழ்க்கைய முதல்ல கவனி எண்டு சொல்லிப்போட்டு போனை வைச்சிட்டன்.

அதுக்குப் பிறகு கனகாலம் கதையில்லை. சில ஆண்டுகளும் கடந்துபோச்சுது. போரும் தோல்வியில முடிஞ்சு போயிட்டுது. இடைக்கிடை இமானுவேலப் பத்தி யோசிப்பன்.



selvam.a@thaiveedu.com

**TUTORING**

**Kindergarten to grade 8**

**English & Math**

**Evening & Weekend Classes**

**416-289-3641**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மகாஜனாக் கல்லூரி அதிபர்
# திரு. ம. மணிசேகரம் அவர்களுக்கு மதிப்பளிப்பு

மொன்றியாலில் வாழும் மகாஜனாக் கல்லூரியின் பழைய மாணவர்களால் அக்கல்லூரியின்
பழைய மாணவரும் பாடசாலையின் இன்றைய அதிபருமாகிய திரு. ம.மணிசேகரம் அவர்களுக்கு அளிக்கப்பட்ட மதிப்பளிப்பு இனிதே நிகழ்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒரு கிராமம் நகரமாகிறது

- நெடுந்தீவு மகேஷ்

'தொம்' என்ற பேரொலியோடு விழுந்து உருண்டோடும் பனம்பழத்தைப் பார்த்திருந்த பற்குணத்தாரின் மூக்கின் வழியாக உள்ளீர்க்கப்பட்ட பனம்பழத்தின் வாசம் அவரது வாயில் உமிழ்நீரைச்சுரக்கச்செய்தது.

'தொம்மென்று விழுந்தான் தொப்பி கழன்றான்' என்பதாக, அந்தநாள், சிறுவயதில் கேட்டுச்சலித்த விடுகதையொன்றின் விடையாகத் தோன்றிய பனம்பழத்தை அவர் ஆவலோடு பார்த்துக்கொண்டிருந்தார்.

பனம்பழம் வீழ்ந்த சத்தத்தை எங்கிருந்தோ கேட்டிருந்த பசுமாடு ஒன்று உருண்டோடும் பனம்பழத்தின் விசை அடங்கும் முன்னரே அதனைக்கடித்துச் சுவைப்பதைக் கண்டார்.

"அங்கபார் பனம்பழத்தை மாடு சூப்பித் தின்னுது" என்றார்.

அவரது வார்த்தைகளைக் கேட்க அங்கே ஒருவருமே இருக்கவில்லை. அவரது பேரப்பிள்ளையான லினோசன் அவரது பேச்சுக்களை அலட்சியம் செய்வதாக அவருக்குத் தெரிந்தது.

முற்றத்தில் நின்ற பனைமரத்தின் அடியில் மாடு சூப்பிய பனம் பழத்தின் விதைகள் சில பரவிக்கிடந்தன.

தனது மூத்த மகனின் வீட்டு விறாந்தையில் போடப்பட்டிருந்த சாய்மனைக் கதிரையில் இன்றைய ஓய்வு நிலையில் பற்குணத்தார் சாய்ந்திருந்தார். மாடு தின்னும் பனம் பழத்தின் மீதில் விழுந்த கண்ணை வேறு திசைக் குத்திருப்ப அவருக்கு மனம்வரவில்லை.

'பனம் பழத்தைக்காடியில் தோய்த்துச் சாப்பிடும்போது ஏற்படும் சுவையே அலாதி தான்!' எண்ணிக்கொண்டார்.

மாட்டைத் துரத்திவிட்டுப் பனம்பழத்தைக் கையிலெடுக்கும் ஆசையை அவரது வயோதிப இயலாமை தடுத்தது.

இப்பொழுது சிலநாட்களாகப் பனம்பழம் சாப்பிட வேண்டும் என்ற ஆசை நிராசையாகவே போய்க்கொண்டிருந்தது.

அவரது ஒரேயொரு மகன் சரவணன், படிப்புக்கும் பட்டத்திற்கும் ஏற்ற மதிப்பான தொழிலைப் பற்குணத்தார் தனது ஓய்வுக்கு முன்னரே அவனாகத் தேடிக்கொள்ள ஊக்குவித்திருந்தார்.

இப்பொழுது அவரது மகன் ஓர் அரசாங்க உயர் அலுவலர், பிரதேச செயலர். அவனது தொழிலுக்கு ஏற்றாற்போல் படிப்பும் பணமும் சேர்ந்த இடமாகத்தேடி அந்தக்கிராமத்திலேயே மருமகளையும் சேர்த்துக்கொண்டார்.

ஒரேயொரு மகள் கனடாவில் திருமணமாகி கணவன் பிள்ளைகளோடு அங்கேயே வசிக்கிறார்கள்.

அன்போடிணைந்திருந்த துணையைப் போர்க்காலத்தில் இழந்தார். இப்பொழுது ஊரோடு உத்தியோகம் பார்க்கும் மகனின் வீட்டிலேயே அவரது காலம் ஓடிக்கொண்டிருக்கிறது.

மகனுக்குச் சீதனமாகக்கிடைத்த வீடு அது. அந்தக்கிராமத்தின் பிரதான வீதியில் உயர்ந்திருந்த மாளிகையாக அது தோன்றியது. அதே கிராமத்தில் மாஸ்ரர் பற்குணத்தார் வாழ்ந்த அந்த ஓலைக்குடிசைவீடு இன்று சிறு மண்மேடாக எஞ்சிக்கிடக்கிறது.

நாகரிகம் உள்நுழையாத முன்னைய நாட்களில் இந்தக் கிராமம் அமைதியாகக் கிடந்தது. இந்தக் கிராமத்தில் போக்குவரத்து வசதிகள் பெரிதாக எதுவுமே இருக்கவில்லை. இப்பொழுது இந்தக்கிராமம் விரைவாகவே நகரமயமானதாக எல்லோருமே பெருமை பேசுவது பற்குணத்தாரின் காதுகளுக்குச்செய்திகளாக வந்தன.

அன்று கொட்டில் வீட்டில் குப்பி விளக்கின் வெளிச்சத்தில் பாயில் விழுந்து குப்புறப் படுத்துக்கிடந்து படித்து, ஓர் ஆசிரியராக உயர்ந்தவர் அவர்.

படிக்கும் காலத்தில் ஒவ்வொரு காலையிலும் சூரிய வெளிச்சத்தால் நிலத்தில் விழும் நிழலைப்பாதத்தால் அளந்து நேரம் பார்த்துப் பள்ளிக்கூடத்தை நோக்கி ஓடிய ஞாபகம்.

பள்ளிக்கு ஓடுவதற்கு முன்னர் பனம் பழத்தையும் பழங்கஞ்சியையும் காலை உணவாகக் கொண்ட வேளைகளில் இருந்த உற்சாகம் எல்லாமே இன்றைய கிராமத்தவர்களிடத்தில் இருப்பதாக அவருக்குத் தோன்றவில்லை.

இது நகரமாக மாறிவிட்டதாகப் பலரும் இன்று பிதற்றிக் கொள்வதாகவே மாஸ்ரர் எண்ணமிட்டார்.

தாரிட்ட பாதைகளில் ஓடிவிரையும் பேருந்து, கார், லொறி என்பவற்றின் ஊர்வலம். இரவு பகலாக மின்னி வெளிச்சமிடும் மின்சாரம் என்பன எல்லாமே நகரத்தின் கோலத்தை மெல்ல மெல்லக் கிராமத்தின் உள்ளே நுழையவிட்டிருந்தன.

குசினியின் உள்ளே அடுப்பமைத்து விறகு வைத்து நெருப்பு மூட்டி உணவு சமைத்த காலம் தொலைந்து எரிவாயுவும் மின்சாரமும் சமையலறைகளை ஆக்கிரமித்திருந்தன. இவைகளெல்லாம் நாகரிகத்தின் தோற்றங்களாகத்துலங்கின.

பனை மரங்களிலிருந்தும் தென்னை மரங்களிலிருந்தும் வீழும் ஓலை, பாளை, கொக்கரை, பன்னாடை என்பவற்றைச்சேகரித்து அடுப்பெரிப்பவர் எவரையும் இன்று காணவே முடியவில்லை. அந்த விறகுப்பொருட்கள் எல்லாமே ஆங்காங்கே வீழ்ந்து சிதறிக் குப்பைகளாகிக் கிடக்கின்றன. பற்குணத்தாருக்கு இவைபற்றிச்சிந்திக்கும் தோறும்

தொடர்தல் 118ம் பக்கம்

STAY ONE STEP AHEAD OF CRA
X-CRA Officers are on staff.
SARVAA CPA PROFESSIONAL CORPORATION CHARTERED PROFESSIONAL ACCOUNTANTS
Our passion is to solve all your CRA tax problems:
- Unfiled Tax Returns - Last ten years (2009-2018)
- Adjustments, Audits and Appeals
- Voluntary Disclosure Program (VDP)
- GST/HST New Housing/Rental Rebates (NHR/NRRPR)
- Negotiate Collection, Garnishment and Payment Plan
- Estate and Trust Returns
- Non-Resident, US (1040) IRS & State Taxes
CPA CHARTERED PROFESSIONAL ACCOUNTANTS
Shawn Y. Sarvaa, CPA, CGA
2750 14th Ave., Suite 206
Markham ON L3R 0B6
ideas@sarvaacpa.ca
INTEGRITY | TECHNICAL EXCELLENCE | PROFESSIONALISM
CONTACT US TODAY... C. 647 219 3110

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு கிராமம்...

117ம் பக்கத் தொடர்ச்சி...

துயரம் மேலெழும். சொல்லியழ ஆட்களின்றி அங்கலாய்ப்பார்

கிராமத்தை அலங்கரித்த மாட்டு வண்டிகளும் மிதிவண்டிகளும் தொலைய மோட்டார் வண்டிகளின் இரைச்சல் அவரது காதுகளில் நாராசமாக விழுந்தன. அவைதாம் கிராமத்தை நகரமயமாக்கும் காரணிகள் எனக்கூறும் அறியாமையை நினைக்க, பற்குணத்தாருக்குக் கொதிக்கும் மனத்தில் கோபமும் பொங்கிவரும்.

ஓலை வீடுகளைக்காண்பது இன்று அரிதாகிப்போனது. கல்வீடுகளும் மின்சாரமும் உள்நுழைய விட்ட தொலைக்காட்சிப் பெட்டிகளின் முன்னே கிராமத்தவர்கள் சூழ்ந்திருக்க அருமையான பொழுதுகள் அர்த்தமின்றிப்போயின. அரசின் நிவாரணமாகப் புதிது புதிதாகக்கட்டிய பல வீடுகள் வசிப்போர் எவருமின்றிக் காய்ந்துகிடந்தன.

பற்குணத்தார் முன்னர் பாவித்த அட்டாளைக் குடில் இப்பொழுது மகன்வீட்டுக்கு வந்த கையோடு தூக்கிவரப்பட்டு மகனின் மாளிகை வீட்டருகே வைக்கப்பட்டிருக்கிறது அட்டாளையில் இருந்து பேப்பர் பார்ப்பதும் படுத்துறங்குவதும் எத்தனை இன்பமானவை. குளிர்மையையும் இதமான தூக்கத்தையும் மீண்டும் அனுபவிக்க ஆசைப்பட்டார்.

அட்டாளையை வேய்ந்திருந்த ஓலைக் கூரை இற்றுப்போய்விட்டது. அதனை வேய்ந்து புதுப்பிக்க இன்று அவர் ஒரு தொழிலாளியைத்தேடினார்.

தென்னோலையில் கிடுகு பின்னும் தொழிற் திறமையுள்ளவர்கள் எவரையும் கிராமத்தில் இன்று காணமுடியவில்லை. கிடுகு பின்னும் தொழிலின் தேவை இல்லையென்றாகி விட்டதோ!

கல்வீடுகளின் தோற்றத்தால் கூரைகளெல்லாம் கல்நார் ஓடுகளால் வேயப்பட்ட காட்சி, கிடுகுகளின் தேவையைக்குறைத்து விட்டன.

கல்நார் ஓடுகளின் பாவனையால் புற்றுநோய் தோன்றும் அபாயம் அதிகரித்திருப்பதான செய்திகளைப் பலரும் சொல்லப் பற்குணத்தார் கேட்டிருக்கிறார்.

மகனின் மாளிகை வீட்டுக் கூரையைப் பற்குணத்தார் அண்ணாந்து பார்த்தார்.

அது அந்தக்காலத்தில் கிராமத்துக்குக் கொண்டுவரப்பட்ட செம்மண் நிற ஓடுகளால் வேயப்பட்டிருந்தன. மனத்தில் ஓர் ஆறுதல்.

இன்று ஊரவர்கள் ஒருவரையேனும் ஒரு வேலைக்கென்று கூப்பிட்டுச் செய்விக்க முடியவில்லை. வேலையென்றும் கூலியென்றும் எவரும் கிராமத்தில் உழைப்பதற்கென்று அலைந்து திரிவதையும் காணவேயில்லை.

எல்லோருமே இப்பொழுது எவ்வாறு பணம் படைத்தவர்கள் ஆனார்கள்?. அரசு நிவாரணம் வழங்குகிறது. கிராமத்தில் இருந்தவர் பலரின் உறவினர்கள், அண்ணன், தங்கை, மாமன், மச்சான் என்று அநேகர் வெளிநாட்டுக்குப் போய்விட்டார்கள்.

மாடு தின்ற பனம்பழத்தின் எஞ்சிய விதைகள் பற்குணத்தாரின் பார்வையில் விழுந்தன.

பாத்தி போட்டுக், கிழங்கெடுத்து, ஒடியலாக்கி, புழுக்கொடியலாக்கி உண்ட ஞாபகம் வந்து... அவரைப்பழைய வாழ்க்கையின் மகத்துவத்துக்கு இழுத்துச் சென்றது. கூழ் என்றும் பிட்டென்றும் சுவைத்துக் களித்த நாட்கள் எங்கே? ஒருமுறை பெருமூச்சு விட்டார்.

பசுமாடு பனம்பழம் சாப்பிட்ட உற்சாகத்தில் அங்கிருந்து நகர்ந்து கொண்டிருந்தது.

முந்தாநாள் "நாளைக்கு வாறன் ஐயா" என்று சொல்லிப்போன சுப்பர் மகன் சொக்கன் இப்பொழுது பாதையோரத்து இரும்புப்படலையைத் திறந்துகொண்டு உள் நுழைவது தெரிகிறது.

இற்றுப்போன அட்டாளைக் கூரையைத் திருத்தி வேயச் சொக்கனை வரச்சொன்ன நினைவில் "வாடாப்பா நேற்று வாறதெண்டு சொன்னாய்" என்றபோது அவன் இன்றாவது வந்தானே என்ற சந்தோசம் பற்குணத்தாரது முகத்திலே தெரியச் சிறிது புன்னகைத்துக்கொண்டார்.

"இல்லைச் சேர் என்னிட காணியில நான் புதுசாக்கட்டின கல்வீட்டுக்குக்கடைசிக் காசாகக் கொஞ்சக் காசு தாறதெண்டு வரச் சொன்னவங்கள். அதுதான்...! அதுக்குப் போனனான்." என்றான் சொக்கன்.

'எப்பிடி நீ கட்டின வீடு நல்லதோ?'

'சும்மா காசைத் தந்தவங்கள் எல்லோரும் கட்டிறாங்கள் எண்டு சொல்லி நானும் கட்டினனான். ஆனால், எங்கட குடிசை வீட்டில இருக்கிற குளிர்மையும் காத்தோட்டமும் மகிழ்ச்சியும் இந்தக் கல்வீட்டில காணக் கிடைக்காது. அது அவங்கள் தந்த காசுக்கும் பொருளுக்கும் அவங்கட சொற்படி கட்டின வீடுதானே! வசிக்கிறதுக்கு எங்கட இந்தக் குடிசை வீட்டைப் போல சுவாத்தியமான வீடு எங்கையும் கிடைக்காது.'

சொக்கன் சொன்ன குடிசைவீட்டுப் பெருமை பற்குணத்தாருக்கு மகிழ்ச்சியைத்தந்தது.

வீட்டின் வடக்கே கூரை சிதைந்து கிடந்த அட்டாளைக் கொட்டிலைத் திரும்பிப் பார்த்தார். சொக்கன் வந்துவிட்டான் அட்டாளையின் கூரையைச் சரிசெய்துவிடலாம் என்ற ஆர்வத்தோடு "இன்றைக்கு வேலையைத் தொடங்கலாமா?" என்றார் பற்குணம்.

"இப்பவே தொடங்கலாம் எல்லாத்துக்கும் இந்தத் தென்னோலைக் கிடுகுகள் இருந்தால் இப்பவே தொடங்கலாம்" என்ற சொக்கனின் சொற்களில் இந்தத்தென்னோலைக் கிடுகுகளை இன்று எங்கிருந்து கொண்டு வரப்போகிறீர்கள்? என்ற கேள்வியும் தொக்கி நின்றது.

"கிடுகுகளை எங்கே வாங்கலாம்?" பற்குணத்தார் சொக்கனிடமே கேட்டார்.

"அதுதானே சேர் பெருங்கஸ்டம். இப்ப ஒருத்தரும் இங்க கிடுகு பின்னிறதில்லை. கிடுகு வேணுமெண்டால் சொல்லித்தான் பின்னுவிக்க வேணும். அதுவும் தென்னந்தோட்டக்காணிக்காரரிட்ட சொன்னாத்தான் கிடைக்கும். முந்தியெண்டால் கலியாணவீடு, சாமத்தியவீடு, செத்தவீடு, கொண்டாட்டங்களுக்கெல்லாம் பந்தல் போட்டு அலங்கரிக்கிறதெல்லாம் கிடுகுப்பந்தல் போட்டுத்தான் செய்யிறவை. இப்பயெல்லாம் ஓடர் பண்ணித் தகரக் கொட்டகையெல்லோ போடுகினம்." சொக்கன் ஒரு பிரசங்கமே செய்தான்.

பற்குணத்தாருக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை.

மருமகள் கார்த்திகா அறையின் கதவோரமாக வந்து பற்குணத்தாரை எட்டிப்பார்த்தாள்.

அவளது பார்வையில் தெரிந்த தேவையை உணர்ந்துகொண்ட சொக்கன் "சேர் இன்னமும் சாப்பிடயில்லைப் போல..." என்று வார்த்தையை இழுத்தான்.

பற்குணத்தார் பதில் சொல்லு முன்னரே "நான் போயிட்டுவாறன்" என்றவன் அங்கிருந்து புறப்பட ஆயத்தமானான்.

"இரு இரு சாப்பிட்டிட்டுப் போகலாம்" என்று தடுத்த பற்குணத்தார். எதிர்பார்த்ததைப் போலவே திரும்பி வந்த மருமகள் சொக்கனுக்கும் சேர்த்து இரண்டு கோப்பைகளில் சோறு கறியோடு வந்திருப்பதைக் கண்டு மகிழ்ந்துபோனார்.

சொக்கனோ, வீட்டிலிருந்து புறப்படுமுன்னரே ஒடியற்பிட்டும் திருக்கை வறையும் சாப்பிட்டு வந்த சங்கதியைச் சொல்லியவாறு அங்கிருந்து போக ஆயத்தமானான்.

ஒடியற்பிட்டும் திருக்கை வறையும் என்றதும் பற்குணத்தாருக்கு வாயூறியது.

"அப்ப நான் போயிட்டு வாறன் சேர் கிடுகுகளை வாங்கிப்போட்டு எனக்குச் சொல்லி அனுப்புங்கோ நான் வந்து அட்டாளைக் கொட்டிலை மேய்ஞ்சு தாறன்". சொல்லிக் கொண்டே சொக்கன் புறப்பட்டுப் போனான்.

கைக்கு வந்த சோற்றுக் கோப்பையைப் பார்த்த பற்குணத்தாருக்கு கோப்பையில் குவிந்திருந்த சோறும் கறியும் விசம் போல தோன்றியது.

இந்தக் கிராமத்தில் அந்தக் காலத்திலே தும்பை, தூதுவளை, முசுட்டை, குறிஞ்சா, வீணாலை போன்ற இலைக்கறி வகைகளும் கடல்வாழ் நல்ல மீன் வகை மச்சங்களும் சமைத்துண்ட நிலை இன்று இல்லையென்றாகிவிட்டன.

இரசாயனப்பசளைகளும் மருந்தும் விசிறி விளைவித்த கீரை, காய்கறி, கிழங்குகளும் குளிர்சாதனப்பெட்டிக்குள் வைத்துப் பாதுகாத்த அந்தியேட்டியும் ஆண்டுத் திவசமும் கண்ட கோழி, ஆடு, மாடு என்பவற்றின் இறைச்சிகளும் தகர டப்பாவில் அடைக்கப்பட்ட உணவுப்பொருட்களுமே இன்று உணவாகப் பரிமாறப்படுகின்றன.

கோப்பையில் இருந்த பாசுமதி அரிசிச் சோறும் புறொயிலர் கோழி இறைச்சிக் கறியும் மருந்தடித்து வளர்த்த செடிகளிலிருந்து பிடுங்கிச் சந்தைக்கு வந்த காய்கறி வகைகளும் சாப்பாடாகி இருந்தது. நேரமும் பசியும் தூண்டிய வேகத்தில் பற்குணத்தார் சோற்றில் சிறிதளவு சாப்பிட்டார்.

கிராமம் தனது இயற்கையை அழித்துக் கொண்டு செயற்கையின் பூச்சில் அழகும் ஆனந்தமும் பெறுவதாக அவர் எண்ணினார். உள்ளம் கனத்தது.

கிராமத்தின் மேற்கே அவரது சகோதரியின் மகள் வீட்டுக்கு இன்னமும் மின்சாரம் இணைக்கப்படவில்லை. அங்கே வசிக்கும் பற்குணத்தாரின் சகோதரியின் மகள் பார்வதி.. சாதாரண தோட்டத்தொழிலாளியான அவளது கணவன்... கிராமத்து வாழ்க்கை முறையில் ஊறிப்போன குடும்பம். தம்முடன் வந்து தங்கள் குடிசையில் தங்கிப்போகலாம் என்று அவர்கள் அழைத்த அன்பு வேண்டுகோளை இப்பொழுதே பற்குணத்தார் நிறைவேற்ற எண்ணினார்.

மகனிடமும் மருமகளிடமும் சொல்லிக் கொண்டே மறுநாள் மிதிவண்டியில் புறப்பட்டவர், ஐந்து கிலோமீற்றர் தூரத்தைக் கற்பனைக் கடலில் மிதக்கவிட்டார்.

பார்வதியின் குடிசைவீடு குளிர்ச்சியானது. அவர்கள் சமைக்கும் உணவில் கிராமத்தில் கிடைக்கும் இலைக்கறியும் மீன்வகைகளும் இருக்கும். ஒடியற்கூழும் பிட்டும் உண்ணலாம். பனாட்டும் புழுக்கொடியலும் சுவைக்கலாம். அவர்கள் வளர்க்கும் பசுவிலிருந்து பாலும் மோரும் குடிக்கலாம். கோழி முட்டைக்கும் குறைவிருக்காது. மனம் மகிழ்ச்சிப்பெருக்கில் நீந்தியது.

பார்வதி வீட்டுக்குப் பற்குணத்தார் சைக்கிளில் பறந்து போய்க்கொண்டிருக்கிறார்...!



mahesu@thaiveedu.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



BRING YOUR PARENTS AND GRANDPARENTS WORRY FREE

Visit your one stop solution center
for all your super visa insurance needs...

SuperVisa.Today

www.supervisa.today #416 321 6000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



COLLINGWOOD PLACE

By

Bluesky Properties (Pvt.) Ltd. (Sri Lanka)

Div. of Engenius Group of Companies (Canada)







- 10 Stories
- 28 Apartments
- December 2018 Completion

*A stylish collection of 28 Modern two & three bedroom Hotel Style Apartments in COLOMBO 6*

Starting at 19.9 Million SLK
(Apx. $175,000)
Only 14 left

GUARANTEED RENTAL INCOME

For More Information Call
Sameem Mohamed 416 559 1880
Riyaz Rauf 647 283 1966

Be a part of the fastest growing Century 21 Brokerage...

Century 21 Innovative Realty Inc.
INDEPENDENTLY OWNED AND OPERATED Brokerage

Serve more... Earn more... and Keep more...

Many reasons to join Century 21 Innovative Realty?

- Experienced and dedicated Broker of Record
- Six Friendly Managers with many years of experience
- Grand Centurion Office, 4 years in a row
- Top 10 Office in Canada / Chairman's Circle Office
- Three Locations (Scarborough, Ajax and Mississauga)
- Over 250+ Agents and growing...
- Supportive Staff & Multi cultural Environment
- One on One and group training (3 times weekly)
- VIP access to pre-construction condos & new homes
- Land Development & custom home construction advice
- Investment Opportunities to agents
- and More and More...

*within Century21 system

#7 Office in Canada*

#9 Company in Canada*

#15 Office in the World*

3 Locations to Serve you

2250 Markham Road, Unit 3,
Toronto ON M1B 2W4
Tel: 416 298 8383

350 Burnhamthorpe Dr. W. Unit 127
Mississauga, ON L5B 3J1
Tel: 905 270 8100

1995 Salem Road, Unit 11 & 12
Ajax, ON L1T 0J9
Tel: 905 239 8383

REAL ESTATE CLASSES
STARTING FROM FEB 1ST WEEK
CALL 416 298 8383 TO REGISTER

Hiring New & Experienced Agents

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# Lower rates. Exceptional service.

Connect with an insurance company that puts clients first. Discover why The Co-operators is the right choice for your Auto and Home insurance.

Ask us about our significant discounts, 24-hour Emergency Claims Service, free Identity Theft coverage with our Home policies, and Accident Forgiveness Endorsement option. All backed by our Claims Guarantee.

**Senthooran Punithavel**

Phone: **416-396-0707**
Fax: 416-396-1221
Email: Senthooran_Punithavel@cooperators.ca

797 Milner Avenue, Unit 200
Scarborough, ON M1B 3C3

## குறைந்த கட்டணங்கள் பெரும்பயன் நல்கும் சேவைகள்

வாடிக்கையாளர் நலனை முன்னிலைப்படுத்தும் எம் காப்புறுதி அமைப்போடு தொடர்பு கொள்ளுங்கள்

வீடு, வாகன காப்புறுதி சேவைகளுக்கு உகந்த தெரிவு The Co-operators நிறுவனமே என்பதைக் கண்டுகொள்ளுங்கள்

உங்களுக்கான கட்டணக் கழிவுகளை பெற்றுக் கொள்ளுங்கள்

24 மணிநேர அவசர கேட்பனவுச் சேவை வழங்கப்படும்

Home Auto Life Investments
Group Business Farm Travel

the co-operators®
A Better Place For You®


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்கள் பிறைவேட்டாக மோட்கேஜ் கொடுக்க விரும்புறீர்களா?

**10% - 15% வரை முதலீட்டில் வருமானம் பெற முடியும்**

எங்கே ஆரம்பிப்பது என்று ஒரு நல்ல ஆலோசனை தேவையா?

பிறைவேட் மோட்கேஜ் முதலீட்டில் அனுபவமுள்ள ஒரு வழக்கறிஞரின் ஆலோசனை தேவையா?

# நீங்கள் ஒரு பிறைவேட் மோட்கேஜ் கொடுப்பவரா? உங்கள் முதலீட்டை மீள பெற சிக்கலாக உள்ளதா?

அப்படியானால் இப்படிப்பட்ட சில சிக்கல்களை எதிர்கொள்கிறீர்களா?

- அடமானம் எடுத்தவர்கள் மாதாந்த கட்டுப்பணம் செலுத்த தவறுதல்
- மற்றைய மோட்கேஜ்களுக்கு ஒழுங்காக பணம் செலுத்த தவறுதல்
- வீட்டுக் காப்புறுதி கட்டணம் ஒழுங்காக செலுத்த தவறுதல்
- கொண்டோ காசு, புறப்பட்டி ரக்ஸ் செலுத்த தவறுதல்
- வேறு மோட்கேஜ் கொடுத்தவர்கள் பவர் ஒப் சேல் நோட்டீஸ் அனுப்பி இருப்பது
- அடமானம் பெற்றவர்கள் மீளத்தர முடியாமல் மறுக்கும் நிலைமை

# வருமுன் காப்பதே சிறந்தது.

**தயா PK கந்தையா**

**வழக்கறிஞர்**

**மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்**

**416-333-1001**



KANDIAH LAW

PROFESSIONAL CORPORATION

T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002

**Thaya PK Kandiah** BAS, LLB

Barrister, Solicitor & Notary Public


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# NO MEDICAL UP TO $500,000

- ✓ $0 first month's premium
- ✓ No medical exams
- ✓ Simple and straightforward
- ✓ 18-80 years can apply

MEDICAL INUSRANCE FOR
## SUPER VISA

**100%**
REFUND IF VISA DENIED






## Sritharan Thurairajah

Chartered Life Underwriter, Certified Health Insurance Specialist

Direct: **416.918.9771**
Business: **416.321.2500**

MDRT
Member of Million Dollar Round Table

Life100
INSURANCE & INVESTMENTS INC.

10 Milner Business Court, Suite 208, Scarborough, ON M1B 3C6
Web: www.life100.ca, E-mail: info@life100.ca

La Capitale   iA Financial Group   Canada Protection Plan

Are you getting Million Dollar advice

---

Residential Mortgages | Commercial Business Loans | 1st and 2nd Mortgages | Private Funds Available
Debt Consolidation - Refinance | No Income Confirmation | No Down Payment Confirmation
Call me more details...




வீட்டுக்கடன்
வியாபாரக்கடன்
முதலீட்டுக்கடன்

வருமான உத்தரவாதம்
இல்லாமலே
பெற்றுக் கொடுக்கப்படும்

கடன் தேவையா?
என்னை அழையுங்கள்
ரம்போ தர்மலிங்கம்



KAPITAL CARE
MORTGAGE INC.

## Rambo Tharmalingam

Mortgage Agent

5200 Finch Ave. E. Unit 306, Scarborough, ON. M1S 4Z5

# 647-290-3416 / 416-543-1111

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

LIFEPLAN INVESTMENTS
Ahilan Balachandran, CFP, CLU, CHS, EPC
Founder and CEO
905-294-PLAN (7526)
www.lifeplaninvestments.ca
416-894-2009
How can we help you plan your future?
. Tax and Estate Planning
. Wealth Management
. Financial Planning
. Retirement Planning
. Personal Insurance
. Business Insurance
Download Free MyLifePlan APP

VICTOR S. LEGAL SERVICES
PROFESSIONAL CORPORATION
உங்கள் சட்ட தேவைகளுக்கும், ஆலோசனைகளுக்கும் அழையுங்கள்!
- Small Claims
- Provincial Offences/ Traffic Tickets
- Summary Conviction
- Immigration Law
- Administrative Tribunal & Board
- Commissioner Service
THIRU SIVAPATHAM, B.A, M.A
Paralegal & Commissioner of Oaths
647.308.7571

Mega Financial Group
உங்கள் அனைத்து விதமான காப்புறுதித் தேவைகளுக்கும்.
Call Now
Raj Nadarajah
President & C.E.O.
416-666-1120

நீங்கள் வீடு வாங்கும்போது
$8475.00
வரை அரச வரிச்சலுகை பெற்றுக்கொள்ள தகுதியானவரா?
விபரங்களுக்கு 416-888-9492
Swapna Chari, Broker HomeLife Galaxy Realestate Brokerage, Ltd.
301-111 Grangeway Ave, Toronto, Ontario, M1H 3E9 tel: 416-284-5555

வீடு வாங்க, விற்க...
Ramanan Ramachandran
Broker of Record
Direct: 416-670-6467 Office: 416-298-3200
I ♥ Referrals
HomeLife Higher Standards
HomeLife Today

Supen Subramaniam
Manager, Residential Mortgage
Real Estate Secured Lending
Your Mobile Mortgage Specialist
சகல மோட்கேஜ் தேவைகளுக்கும் அழையுங்கள்.
TD Canada Trust
C: 416.844.8692
supenthiran.subramaniam@td.com
www.tdcanadatrust.com/mst/subensubramaniam

இணையம்
inayam.com

உலகின் முன்னணி காணி, வீடு விற்பனை நிறுவனமான RE/MAX முதல் தடவையாக யாழ் மண்ணில்
RE/MAX NORTH REALTY
077 566 0000
www.remaxnorth.lk
info@remaxnorth.lk
83 Kannathiddy Road, Jaffna
LATHAN VARATHARAJAN
Broker Owner
+94 76 493 3331
+1 416 230 7007

Rathiga Thillaivannan BCom
Sales Representative
Buying / Selling/ Leasing/ Investing
Dir: 647.839.0079
rathiga24@hotmail.com
Homelife/Future Realty Inc.,Brokerage*
Bus: 905.201.9977 Fax: 905.201.9229
205-7 Eastvale Dr, Markham ON. L3S 4N8
*Independently owned And Operated

Kugaraj Ratnasabapathy
Sales Representative
Dir: 416-786-3332
RE/MAX ACE
BROKERAGE
Independently owned and operated
416-270-1111
3-1286 Kennedy Road, Toronto, ON M1P 2L5

Sri Vallipuranathar
Certified Insolvency & Bankruptcy Counsellor
CSC Credit Solution Centre
309-80 Corporate Drive
Scarborough, ON M1H 3G5
Tel: 416.439.0224
Cell: 416.450.5011
Fax: 416.439.0226
www.creditsolutioncanada.com
contact@creditsolutioncanada.com

Vaheesan Jeyaveerasingam
Sales Representative
Re/Max Ace Realty Inc. Brokerage
3-1286 Kennedy Road, Scarborough, Ontario. M1P2L5
Dir:416-276-9999
Bus:416-270-1111 | Fax:416-270-7000
www.vaheesanrealtor.com.
Email:gvaheesan@hotmail.com

BUY / SELL / INVEST
Please Contact
RAVI PARAMU
Broker
Dir : 416-262-4176
Bus : 416-298-3200
rparamu1558@gmail.com
HomeLife Today Realty Ltd.,
Brokerage* 31 Progress Ave, Suite 210,Toronto ON, M1P 4S6

NOW HIRING
JOIN OUR DYNAMIC TEAM
CHANDRAN RASALINGAM CHS
President & CEO
iNFORCE LIFe Financial Services Inc.
10 Milner Business Court, Suite 707
Scarborough, ON M1B 3C6
Dir: 416-909-0400 Bus: 416-321-6000 x400
career@inforcelife.com www.inforcelife.com
QUALITY ADVICE YOU CAN TRUST

Tharma Iyathurai
Sales Representative
HomeLife/GTA Realty Inc., Brokerage*
5215 Finch Ave. E., Suite: 203
Toronto, Ontario
Cell: 416 505 8532
Office: 416 321 6969
Fax: 416 321 6963
tharma11@yahoo.com
5215 Finch Ave. E., Suite: 203, Toronto, Ontario

COURTYARDS
Vaughan நகரில் புதியதோர் பல் வைத்திய நிலையம்
Dr. Annahvathany Sivakumaran, DMD
Dr. வதனி சிவகுமாரன்
Tel: 905-553-5266 | courtyardsdental@gmail.com
அனைத்து காப்புறுதிகளும் ஏற்றுக்கொள்ளப்படும்.
All Procedures including:
• Braces • Cosmetic Dentistry • Root Canal Treatment
• Implants • Wisdom Tooth Extraction • Oral Diseases
2396 Major Mackenzie Dr. W., Unit #6, Vaughan,
(Keele & Major Mackenzie) Parking available

Maliny Bridal
Bridal makeup, Arangetram makeup
And for all your makeup needs
for auspicious ceremonies
Maliny Bridal
H 416 497 0052 | C 416 670 6942
malinyb@hotmail.com
Specialized in saree pleating
Professional makeup expert with 25 years

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org